தமிழாக்கம்

Character Development

Berean Scripture Lessonson

- விசுவாசம்
- அறிவு
- பொறுமை
- தூஷணமான பேச்சுக்கள்

தமிழாக்கம்

Character Development

Berean Scripture Lessonson

விசவாசம் அறிவு பொறுமை தூஷணமான பேச்சுக்கள்

பொருளடக்கம்

விசுவாசம்	4
அறிவு	61
பொறுமை	104
தூஷணமான பேச்சுக்கள்	131

விசுவாசம்

1. விசுவாசம் என்றால் என்ன?

எபி11 :1 ➔"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." 1யோவ 5:4 ➔"தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்."

E112 (P1):

சுய சித்தத்தை வெறுத்து, இடுக்கமான பாதையில் செல்பவர்கள், தங்களுடைய முழு விருப்பத்தையும், சித்தத்தையும் பரலோகப்பிதாவின் முழு சித்தத்திற்கு ஒப்புவித்து, பூரண மனித இயல்பான விருப்பங்களையும், எதிர்நோக்குகளையும் நசுக்கி, முழுமையாக தேவனுடைய சித்தம் தங்களை ஆண்டுக்கொள்ளும்படி, அவருடைய பணிக்காக இந்தப் பூமிக்குரிய அனைத்து ஆசைகளையும் அடக்கி, தங்களையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு இவர்கள் மேற்கொள்ளும் போராட்டமே - தலைமையான போராட்டமாகும். இப்படிப்பட்ட சோதனைகளில் நம்முடைய தலைமை குரு வெற்றி பெற்றார். இதைபோலவே, அவருடைய சகோதரர்களும் இந்தப் போராட்டங்களில் ஜெயிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். "தன்னுடைய ஆவியை அடக்குகிறவன் (தேவனுடைய சித்தத்திற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து) மதில் சூழ்ந்த பட்டணம் போலிருக்கிறான்" அதே நேரத்தில், தவறான விசுவாசத்தின் அடிப்படையில், உருவாகும் சிந்தனைகள் (ஆலயத்தின் உச்சியிலிருந்து குதிப்பது) மதியீனமான காரியங்களைத் தோற்றுவிக்கும். ஆகவே, சோதித்தறிந்து சரியான விசுவாசத்தோடு செயல்படுகிறவன் பாக்கியவான். தேவன் மேல் வைக்கும் விசுவாசம் குருட்டாட்டமான எதையும் எளிதில் நம்பக்கூடிய அல்லது கட்டுக்கடங்காத அனுமானங்களை அடிப்படையாகக் கொண்டிராமல், தேவன் கொடுத்த அற்புதமான வாக்குத்தத்தங்கள் மேல் வைக்கும் உறுதியான நம்பிக்கையாகும். இப்படிப்பட்ட நம்பிக்கை இந்த உலகத்தின் பல்வேறு முயற்சிகளையும், மாம்சத்தையும், சாத்தானையும், எதிர்த்து ஜெயிக்கவும் அவன் கவனத்தை திசை திருப்பவும் அதிகமாக நம்மை ஸ்திரப்படுத்தவும் உதவிசெய்கிறது. மேலும் விசுவாசத்தின் சரியான பாதையில் நடத்தி, தெய்வீக வார்த்தைகளுக்கு தேவனுடைய விருப்பத்தின்படி கீழ்ப்படிய நமக்கு உதவி செய்கிறது.

F689 (முதல் வரி) - நம்முடைய சிந்தையில் தேவனையும் அவருடைய வாக்குறுதிகளையும் செயல் முறைப்படுத்தி, அதை பயிற்சி செய்வதே விசுவாசமாகும்.

2. விசுவாசத்தின் அடிப்படையான இரண்டு உட்பொருட்கள் என்ன?

R1822(col. 1 P 6,7):

அறிவாற்றல் சார்ந்த உறுதி மற்றும் நம்பிக்கைக்குரிய இருதயம் ஆகிய இரண்டு முக்கியமான உட்பொருட்களை விசுவாசம் கொண்டிருக்கிறது. முதலில் சொல்லப்பட்ட விசுவாசம் தனித்து பிரிக்கப்பட்ட ஒரு நிலையையும், இரண்டாவது, உறுதிப்பட்ட விசுவாசத்தைப்பற்றி சொல்லப்படுகிறது. "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்." (ரோமர் 10 :10) இவ்வாறாக நம்முடைய விசவாசத்திற்கு இருதயத்தின் சிந்தையும், தலையில் உள்ள அறிவும் முழுமையாகத் தேவைப்படுகிறது. ஏனெனில் "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்" (எபி 11:6) என்று வாசிக்கிறோம். அநேகருக்கு விசுவாசம் இருந்தாலும், அது ஒரே ஒரு உட்பொருளை உடையதாகவே இருக்கிறது. சிலரிடத்தில் உணர்ச்சிவசத்தால் செயல்படும் விசுவாசமும், சிலரிடத்தில் அறிவினால் ஏற்படும் விசுவாசமும் காணப்படுகிறது. ஆனால் இவைகளினால் பொறி பறக்கும் கடுஞ்சோதனைகளைத் தாக்குப்பிடிக்க முடியாது. ஒருவேளை இவைகள் இணைந்து செயல்பட்டால், இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது அவருக்கு மகிமையாக அவரை புகழக்கூடியவர்களாகக் காணப்படுவார்கள்.

திவ்விய சத்தியத்தில் அடிப்படைக் கொள்கையை ஒரு சுருக்கமாகப் பார்த்தால் - தனிப்பட்ட முறையில் தனித்து வாழ்ந்துவரும் ஞானமுள்ள தேவன், சகல காரியங்களின் சிருஷ்டிகரும், சகலத்தையும் தாங்குபவராக, தன்னுடைய இரட்சிப்பின் திட்டத்தை தன்னுடைய ஒரே பேறான குமாரன் - இயேசு கிறிஸ்துவின் மூலம் செயல்படுத்தினார். இதுவே விசுவாசத்தின் அடித்தளமாக இருக்கிறது. அதே நேரத்தில் நம்முடைய தந்தையாக, நம்மை உண்டாக்கினவரும், நம்மிடமிருந்து எந்த பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் அன்பை செலுத்தினவரும்,

நம்மை அழைத்தவருமாகிய அவருடைய வாக்குத்தத்தங்கள் மேல் வைக்கப்படும் உறுதியான நம்பிக்கையே இந்த விசுவாசத்தின் அடிப்படையின்மேல் கட்டப்படும் கட்டுமானமாகும். **3. எதையும் போதுமான அளவு ஆதாரங்கள் இன்றி எளிதில் நம்பக்கூடிய பாரம்பரியங்கள் மற்றும் விசுவாசம் எவ்வகையில் வேறுபடுகிறது?**

F689 (P 1) :-

இந்த இரண்டு காரியங்களுக்கு இடையில் உள்ள மிகப்பெரிய வித்தியாசத்தை நிச்சயமாக நாம் அறிந்துகொள்ள வேண்டும். மில்லியன்கணக்கான ஜனங்கள் நம்பக்கூடியவைகளுக்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல், ஆயிரக்கணக்கான காரியங்களை நம்பி, அநேக பாரம்பரிய மூட நம்பிக்கைகளில் மூழ்கியிருக்கிறார்கள். மேலும், இந்த மண்ணுலகில், இவர்கள் நம்பத் தகுதியில்லாத காரியங்களையும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இதில் மில்லியன்கணக்கான ஜனங்கள் கிறிஸ்தவர்கள் என்ற பெயரை தரித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நம்பிக்கையற்ற மூட நம்பிக்கைள் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டு, தவிர்க்கப்பட்டு மேற்கொள்ளப்படவேண்டும். உண்மையான விசுவாசம் ஊக்குவிக்கப்பட்டு, வளர்ந்து, பலப்படுத்தப்பட்டு விருத்தியடையவேண்டும். தேவன் மேல் வைக்கும் விசுவாசமே - மெய்யான விசுவாசமும், நம்பிக்கையாகவும் இருக்கிறது. இதன் அடிப்படையில் மட்டுமே தெய்வீக வாக்குத்தத்தங்கள் கட்டப்பட முடியும். மாறாக, மனித பழக்கவழக்கத்தின் அடிப்படையிலோ, தத்துவ ஞானத்திலோ, கற்பனையிலோ இவைகள் கட்டப்படமுடியாது.

4. உண்மையான விசுவாசத்தின் முக்கியத்துவம் என்ன?

எபிரெயர் 11:6 "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம், ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். "

F315 (P1):-

முதல் கூற்றின் அடிப்படையில் - பொதுவாக நல்ல போதனைகள் அனைத்தும் இழிவாய் எண்ணப்படும் நாட்களில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். மேலும், இக்காலத்தில் அநேகர் கிரியைகள் மற்றும் நல்லொழுக்கமும், விசுவாசம் மற்றும் உபதேசத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கையில் எந்த விதமான மதிப்பையும் பெறுவதில்லை என்று கருதுகிறார்கள். இது தெய்வீக வார்த்தைக்கு அப்பாற்பட்டிருப்பதால், நாம் எவ்விதத்திலும் இதை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஏனெனில், இதில் முதலாவது விசுவாசமும், அடுத்து கிரியைகளும் இடம் பெறுகிறது. நம்முடைய விசுவாசமே தேவனால் ஏற்றுகொள்ளப்படுகிறது. இந்தப் பலவீனமான மாம்சத்தின் அனுமதியில், நன்மையான விசுவாசம், நற்கிரியைகளை நம்மிடத்தில் பிறப்பிக்கும் என்று தேவன் எதிர்பார்த்து, அந்த விசுவாசத்தின்படியே அவர் நமக்கு பலனளிப்பார். சகல வசனங்களிலும், இதுவே விசுவாசத்தின் கோட்பாடாக எழுதப்பட்டிருக்கிறது. " விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்", "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோ5 :4) ஆகவே, ஒருவர் தேவன் மேல் உள்ள விசுவாசத்தையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் தன்னுடைய வாழ்க்கையில், கடைபிடிக்காமல் சரியான முறையில் மேற்கொள்ள (ஜெயிக்க) முடியாது. இதை செயல்படுத்தவேண்டுமானால், அவைகளை முதலில் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்ட வாய்ப்புகள் மற்றும் விசுவாசத்தில் உறுதியான வளர்ச்சியானது, யுகங்களைப் பற்றிய தெய்வீகத் திட்டங்களையும், மகத்தான விலைமதிப்பற்ற வாக்குத்தத்தங்களையும் புரிந்துகொள்ள வழி வகுக்கும். இப்படியாக, போதனைகள் மற்றும் கட்டளைகளை அறிந்து கொள்வதினால் தேவனுடைய ஜனங்கள், உலக ஜனங்களைக் காட்டிலும், தேவனோடு தொடர்பு கொள்வதற்கான அறிவில் விருத்தியடைந்து மகிழ்வதற்காக மட்டுமல்ல இந்த அறிவின் நிமித்தம் அவர்களில் விசுவாசமும், நம்பிக்கையும், நடத்தையும் தேவனுக்குள்ளாக வளர உதவி செய்கிறது. "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிற எவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்." (1யோவான் 3:3) நாம் பார்த்த அனைத்து வாக்கியங்களுக்கும் இந்த வசனம் நேர்த்தியாகப் பொருந்துகிறது. ஒருவர் தன்னைத்தான் சுத்திகரித்து, தன் நடத்தையையும் சுத்திகரிக்க விரும்புகிறவர், அதில் வெற்றியடைய வேண்டும். வசனங்கள் குறிப்பிடுவதுப்போல அது இருதயத்தில் துவங்கி, வளர்ச்சியடைந்து, சுத்திகரிப்புக்காக பயன்பட்டு, வாக்குறுதிகளை நினைப்பூட்டவேண்டும். இதற்கு "கிறிஸ்தவ போதனைகளில் அறிவு" என்று பொருள்படுகிறது.

F693(1): -

விசுவாசத்தின் கண்கள் மற்றும் செவிகள், தெய்வீக வார்த்தைகளைக் காண்பதற்கும், கேட்பதற்கும் பயிற்சி பெற்றிருந்தால் மட்டுமே புதியசிருஷ்டிகள் , வரக்கூடிய அளவற்ற மகிமையான பொக்கிஷத்தை ருசிக்க முடியும். ஒரு சராசரி மனிதனால் கூடாததும், ஒருவர் தன்னை உடன்படிக்கைக்குள் முழுமையாக அர்ப்பணிக்கும் வரையிலும்கூட இவைகள் புரிந்துகொள்ளப்படுவதில்லை. சிலர் விசுவாசத்தினால், தேவனோடு தொடர்பு வைத்து, நீதிமான்களாக்கப்படுகிறார்கள். ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்யும் லேவியர்களின், ஆராதனை அங்கீகரிக்கப்பட்டாலும், பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் செல்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பரிசுத்த ஸ்தலத்தின் மகிமையும், அதில் இருக்கும் விளக்குகள், அவைகளிலிருந்து பிரகாசிக்கும் வெளிச்சம், மேஜையின் மேல் உள்ள சமூகத்து அப்பங்கள், பொன்னான பலிபீடம் போன்றவைகளைப்பற்றிய அறிவு பெற்றிருந்தாலும், இவைகளைப் பயன்படுத்துவதற்கு ஆசாரியன் மட்டுமே அனுமதிக்கப்பட்டார்.

R1719 (col. 2: 4-6) : - நாம் பெற்றிருக்கும் விசுவாசம் சரியானதா ? என்று ஆராய்ந்து அறிந்துகொள்வது மிக அவசியம். ஏனெனில், ஒருவேளை நம்முடைய விசுவாசம் தவறாக இருந்தால், மணல் மேல் கட்டிய கட்டிடம் போலவும், சரியான பாதையில் செல்லாமல், பாறைகளின் மேல் மோதும் கப்பலைப் போலவும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை அஸ்தமிக்கும். விசுவாசம், ரயில் இன்ஜினிலுள்ள நீராவியைப் போலிருக்கிறது. அதை நன்மை மற்றும் தீமைக்கென்றும் பயன்படுத்தலாம். இதற்காகவே நாம் சரியான விசுவாசம் கொண்டிருக்கவேண்டும்.

விசுவாசத்தின் இந்த முக்கியத்துவத்தினாலும், நன்மைக்காக அல்லது தீமைக்காக இயக்கும் வல்லமையாக இது செயல்படுவதினால், அப்போஸ்தலனாகிய பவுல் - தான் மனந்திரும்பியபின், சகோதரர் சரியான விசுவாசத்தில் நிலைத்திருக்க மிகவும் பிரயாசப்பட்டார். (1தெசலோ 3:2,5,6,7,10) ஒவ்வொன்றையும் ஆராய்ந்து, இதுவே உண்மை என்று நிரூபித்து, அசையாத நம்பிக்கையோடு சுவிசேஷத்தைப் பற்றிக்கொண்டு, கிறிஸ்துவில் வேரூன்றி, வளர்ச்சியடைந்து விசுவாசத்தை ஸ்தாபிக்க அவர் ஒவ்வொருவரையும் வேண்டிக்கொண்டார். "லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல." (கொலோ 2:8, 1:23, 2:7) சபையின் விசுவாசம் மனித அறிவினால் நிலைத்திருக்கக்கூடாது என்றும் அது தேவனுடைய வல்லமையினால் உறுதி படவேண்டும் என்பதில் பவுல் மிகவும் கவனமுள்ளவராக இருந்தார். ஆகவே அவருடைய பிரசங்கங்களில் மதியீனமான கற்பனைகளையும் அல்லது தன்னைப் பின்பற்றவோ, அல்லது வேறெந்த மனிதனையோ அல்லது வேறெந்த புதிய கருத்துக்களையோ அவர்களுக்குப் போதியாமல், ஒரு தீர்க்கதரிசியாகவும், ஒரு அப்போஸ்தலனாகவும், அவருக்கு வெளிப்படுத்தப்பட்டக் காரியங்களை, பரிசுத்தமான வேதவசனங்களிலிருந்து மாத்திரம் பிரசங்கித்து, அதன் மூலமாக அனைவரையும் ஊக்குவித்து, கேட்ப்போரின் விசுவாசத்தைப் பலப்படுத்தினார் - 1கொரி 2:4, 13, 11கொரி12:1-7, கலா1:11,12, 11பேது 3:15-16.

நாம் கிறிஸ்துவின் மேல் விசுவாசமுள்ளவர்களாக இருக்கவேண்டும் - அதாவது தேவனுடைய வார்த்தைகளின் அடித்தளத்தின் மேல் கட்டப்பட்டதாகவும், ஆராய்ந்து நிரூபிக்கப்பட்டதும், இருதயத்திலும், சிந்தையிலும் ஆழமாகப் பதிந்திருப்பதினால் ஜீவனுக்குரிய வல்லமையை ஊக்குவிக்க இந்த விசுவாசம் ஸ்தாபிக்கவேண்டும். இப்படிப்பட்ட விசுவாசம், தேவனுடைய வல்லமை செயல்படவும், இந்த உலகம், மாமிசம் மற்றும் எதிராளியான பிசாசை எதிர்க்க தங்களுக்குள்ளே போதுமான விசுவாசம் இல்லை என்பதை வெளியரங்கமாக காட்டிக் கொள்பவர்கள் தேடும் வண்ணமாக இது இருப்பதில்லை. மேலும், மெய்யான விசுவாசம், புதிதான காரியங்களைத் தேடிச் செல்வதில்லை. மேலும், மனிதனுடைய தத்துவ ஞானத்தின் அடிப்படையில், தேவனுடைய வார்த்தைகளை எவ்வளவு திறமையாக சமாளிக்கிறார்கள் என்று எதிர்ப்பார்ப்பதும் இல்லை மற்றவர்கள் முன் அது பயப்படுவதுமில்லை.

5. விசுவாசத்திற்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பு என்ன?

ரோமர் 10:17 "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்."

A13(P 1) : -

தேவனுடைய நோக்கங்கள் வெளிப்படுத்திய காரியங்களை ஆராய்ந்து கற்றுக்கொள்வதைக் காட்டிலும் மேன்மையான பணி வேறொன்றுமில்லை - "இவைகளை உற்றுப்பார்க்க தேவ தூதர்களும் ஆசையாயிருக்கிறார்கள். " (1பேது 1:12) உண்மையில் தேவனுடைய ஞானம் வருங்கால தீர்க்கதரிசனங்களைக் குறித்தும், கடந்த காலத்தில் தேவனுடைய வார்த்தைகளை நிராகரித்து நிர்விசாரமாக வாழ்ந்த, "எந்த மனுஷனையும் இரட்சிக்க மத்தேயு 5 ஆம் அதிகாரம் இருக்கிறதே" என்று சொல்லும் மதியீனமான சில தேவ ஜனங்களைக் கண்டித்தக் காரியங்கள் மற்றும் நிகழ்காலத்தைப் பற்றியவைகளை அறிவிக்கக்கூடியதாக இருக்கிறது. மேலும், வருங்காலத்தில் சம்பவிக்கும் காரியங்களை அறிந்துகொள்வதிலுள்ள ஆர்வத்தைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்படுவதில்லை. உடன்படிக்கை செய்த பிள்ளைகள் காலப்போக்கில் தேவனுடைய திட்டத்தை ஆழமாக அறிந்து கொள்வதற்காகவும், அதன் மூலமாக அந்தத் திட்டங்களை இம்மையிலும், மறுமையிலும் செயலாற்ற ஊக்கமளிப்பதற்காகவும் இந்தத் தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்படுகிறது. இப்படியாக, அவர்கள் தேவனுடைய வேலைகளில் ஆர்வத்தோடு செயல்படும்பொது, ஒரு ஊழியக்காரரைப் போல் மாத்திரம் இல்லாமல், தேவனுடைய புத்திரராகவும், சுதந்திரவாளியாகவும், புரிந்துகொள்ளக்கூடிய ஆவியின் வல்லமையினால் நிரப்பப்படுவார்கள். இப்படிப்பட்ட அறிவின் வெளிப்பாட்டை பெற்றுக்கொள்ளும்பொது, அவைகள் இன்றைய சூழ்நிலைகளுக்குப் பாதகமாகவோ அல்லது எதிராகவோ இருக்கிறது. இதில் ஜாக்கிரதையாக செயல்பட்டு, விசுவாசத்தை உறுதிபடுத்திக்கொண்டு, பரிசுத்தப்படுவதற்கு நாம் சுத்திகரிக்கப்படவேண்டும்.

சாதாரணமாக மனிதர்களுடைய வெறும் கற்பனைகளை விட்டு திரும்பி, "வழக்காடுவோம் வாருங்கள்" (ஏசா1:18) என்று தேவனுடைய அழைப்புக்கு இணங்கி வசனங்களைக் கவனமாக ஆராய்ச்சி செய்பவர்கள், பரலோக ஆசீர்வாதங்களைக் கண்டறிவார்கள். விசுவாசம் மற்றும் நீதிமானாக்கப்பட்ட நிலைமையிலிருந்து படிப்படியாக வளர்ச்சியடையாமல், தெளிவான சத்தியத்தைப் புரிந்துகொள்வது இயலாத காரியம் என்று நாம் மறுத்துவிடக்கூடாது. "நீதிமானுக்காக வெளிச்சமும் (சத்தியம்)..... விதைக்கப்பட்டிருக்கிறது." (சங் 97:11) என்று சங்கீதக்காரர் கூறுகிறார். ஏனெனில், தேவனுடைய பிள்ளைகளுக்கு, அவர்களுடைய பாதையிலிருந்து இருளை அகற்ற, பிரகாசிக்கும் வெளிச்சம் வீசும் விளக்கு கொடுக்கப்படுகிறது.

"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது." (சங் 119:105) ஆனால் "நீதியின் பாதைக்கு" இந்த வெளிச்சம் கொடுக்கப்படுகிறது. "நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்." (நீதி 4:18) உண்மையில் ஒருவரும் நீதிமான் இல்லை, ஒருவராகிலும் இல்லை. (ரோ 3:10) ஆகவே இங்கு விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட நிலைமையில் இருப்போரைக் குறித்துப் பேசப்படுகிறது. இந்த ஒரு வாய்ப்பு பெற்றால் மட்டுமே அதிகமதிகமாகப் பிரகாசிக்கும் இந்தப் பாதையில் நடக்க சிறபுரிமைப் பெறமுடியும். இந்தப் பாதையில் நடப்பதற்காகவும், இன்று வெளிப்படும் தேவனுடைய திட்டங்களை அறிந்துகொள்வதற்காக மட்டும் அல்லாமல், வரவிருக்கும் அனைத்துக் காரியங்களையும் அறிந்துகொள்வதற்காகவும் இது வாய்ப்பளிக்கிறது. ஒவ்வொரு விசுவாசிகளுடைய பாதைகளும் உண்மையில் பிரகாசமாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்த வாக்கியம் விசேஷமாக, நீதிமானாக்கப்பட்ட நிலைமையில் இருப்போருக்கு மிகச்சரியாகப் பொருந்துகிறது. கடந்த காலத்தில் வாழ்ந்த முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மற்றும் பரிசுத்தவான்கள் அனைவரும் படிப்படியாக வெளிச்சம் அதிகரித்துக்கொண்டிருக்கும் இந்நாள்வரைக்கும் இந்தப் பாதையில் வெளிச்சம் அதிகரித்துக்கொண்டிருக்கிறது. வருங்காலத்தில் - அனைவரும் பரிபூரண நிலையை அடையும் அந்த முடிவு நாள் வரைக்கும் - இந்த வெளிச்சம் இன்னும் அதிகமதிகமாகப் பிரகாசித்து கொண்டே இருக்கும். இது ஒரே தொடர் பாதையும் (வழி), காலப்போக்கில் வெளிச்சம் அதிகரித்துக் கொண்டே போகக்கூடியதாகவும் இருக்கிறது என்று பதிவுகள் எடுத்துக்காட்டுகிறது.

ஆகவே, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேற காத்திருக்கும் நாம் (நீதிமான்கள்) - "கர்த்தருக்குள் களிக்கூறுவோம்." அநேகரிடம் இந்த விசுவாசம் குறைவாகக் காணப்படுகிறதினால் அவர்கள் அதிகமதிகமான வெளிச்சத்தைத்தேட பிரயாசப்படுவதில்லை. இவர்களின் அவிசுவாசத்தினாலும், நிர்விசாரத்தினாலும் அதிக பிரகாசமுள்ள வெளிச்சத்தைத் தேடாமல், இருளில் அமர்ந்திருப்பதை விரும்புகிறார்கள். தேவனும் இவர்கள் விரும்பியதை அனுமதிக்கிறார்.

R1719 (col. 1P 8) :- நாம் முடிவு பரியந்தம், எல்லா பாடுகளிலும், உபத்திரவங்களிலும் நீடிய பொறுமையோடிருப்பதற்கு, தேவையான வல்லமையைப்பற்றி யோவான் வலியுறுத்துகிறார் - 1யோவ 5:4. அதாவது வெற்றியடைய தேவையான வல்லமை - விசுவாசமே என்கிறார். "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசம் என்பது நம்பிக்கையோ, அறிவோ மட்டும் அல்ல, மாறாக, நாம் பெற்ற அறிவை ஏற்றவாறு, ஏற்றசமயத்தில் பயன்படுத்தவேண்டும் - இப்படிப்பட்ட விசுவாசம், நம்முடைய பழக்கத்தில் ஒரு பகுதியாகவும், நம்முடைய கிரியைகளுக்கு அடித்தளமாகவும், நம்மை ஆவிக்குரிய வளர்ச்சியில் ஊக்குவிக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இதன்மூலமாக பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்கள் இதில் சோர்வின்றி ஓடி, அனைத்தையும் மேற்கொண்டு வெற்றிகரமாக முடிவு பரியந்தம் நிலைத்து நிற்க நமக்கு உதவிசெய்யும்.

R2411(col. 1P5) : - நம்முடைய இந்தப் பள்ளிப்படிப்பில் "விசுவாசம்" ஒரு முக்கியமானப் பாடமாக இருக்கிறது. இந்த விசுவாசத்தின் வழியாக நாம் தேவனுடையவர்களாகி அவருடைய பள்ளியில் சேர்ந்து வளர்ச்சியடைய வேண்டும். மேலும், நம்முடைய விசுவாசம் தேவனை அறியும் அறிவினால் மட்டுமே வளர்ச்சியடைய முடியும். (இங்கு உலகத்தின் அறிவைப்பற்றி பேசப்படவில்லை) அவருடைய திட்டங்கள், செயல்முறைகள், அவருடைய குணநலன்களைப்பற்றி நாம் அறிந்துகொள்ளும்போது அவருடைய அறிவைப் பெற்றுக்கொள்ளலாம். ஆகவே அவருடைய வார்த்தைகளை கூர்ந்து கவனித்து, அவருடைய கட்டளைகளை தனிநபர்களாகக் கடைபிடிக்கவேண்டும். நாம் முதன்முதலில் அவரை விசுவாசிக்கும் பொழுது இவைகளை நாம் ஒப்புக்கொண்டோம். இந்தக் காரியங்கள் நம்மை தேவனுடைய அறிவில் விருத்தியடையச்செய்யும். நம்முடைய ஆண்டவர் நம்மேல் வைத்த அன்பின் ஆழமும், உயரமும், அகலமும், நீளமும் எவ்வாறாக அளவற்று இருக்கிறதோ, அப்படியே நாம் கொண்டுள்ள விசுவாசமும் விருத்தியடையும்.

6. விசுவாசம் "தேவனுடைய பரிசாக" எவ்வாறு கருதப்படுகிறது?

எபே 2:8 "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.."

R2286 (col. 2 P2) : - வேதப்பகுதியில் கிருபை என்று இங்கு சொல்லப்பட்டக் காரியம், அநேகரால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. அதாவது நம்முடைய விசுவாசம் நம்முடையது அல்ல என்றும், அதாவது நம்முடைய சுய விருப்பத்தின்படியல்ல, அது தேவனுடைய விருப்பத்தின்படி அவர் நமக்கு கொடுப்பது என்றும் தவறான கருத்துக்கள் அநேகரால் போதிக்கப்படுகிறது. உண்மையாக, ஒரு வகையில், நாம் சுதந்தரிக்கக்கூடிய அனைத்து ஆசீர்வாதங்களும், பரிசுகளும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தேவனிடத்திலிருந்தே பெறுகிறோம். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது..."(யாக்1:17) அப்போஸ்தலரின் வார்த்தைகளை நாம் சரியாகப் புரிந்துகொண்டோம் என்றால் - "எவ்விதத்திலும் எந்த விதமான நன்மையும் செய்யாத நம்மேல் தேவன் கிருபையாக இரங்கி நமக்கு இரட்சிப்பை அளிக்கிறார். இதை நாம் கொண்ட விசுவாசத்திற்கு (கீழ்படிதலுள்ள விசுவாசம்) பரிசளிக்கிறார்." என்று பொருள் தருகிறது என்று நம்பலாம். ஆகவே நாம் கொண்ட விசுவாசத்திற்காக நாம் மேட்டிமை சிந்தையாகவும் இருக்க வாய்ப்பில்லை, ஏனெனில் இது தேவனிடத்திலிருந்து நமக்கு மறைமுகமாக வந்த தெய்வீக ஈவாகும். தேவன் நமக்கு அளித்த கிருபையைப்போல் மற்ற ஜனங்களுக்கு அளித்திருந்தால், இந்த உலகத்தில் அநேக மில்லியன் கணக்கான ஜனங்கள், நம்மைக் காட்டிலும், அதிகமாக நீதியை நடைமுறைப்படுத்துவதில், விசுவாசத்தில் வளர்ந்து தேவன் கிருபையாகக் கொடுத்த வெளிச்சத்திலும், ஞானத்திலும், அறிவிலும் வளர்ச்சியடைந்திருப்பார்கள். ஆகவே நாம் கொண்ட விசுவாசத்தினால் எந்தச் சூழ்நிலையிலும் மேட்டிமையான சிந்தையை உருவாக்கிவிடக்கூடாது. மாறாக, தேவனிடத்திலிருந்து நாம் பெற்ற கிருபையினால், அவருக்கு

நன்றியுள்ளவர்களாக வாழ்ந்து, எல்லா சந்தர்ப்பங்களிலும், நாம் கொண்ட விசுவாசத்தை நடைமுறைப்படுத்த முயற்சிக்கவேண்டும்.

R2811 (col. 1 P2-4) : -

கேள்வி - ஒவ்வொருவருக்குள்ளும் தனிப்பட்டவகையில், பயிற்சி செய்து, வளர்ச்சியடைவதே விசுவாசம் என்று நான் கருதினாலும், ரோ 12:3ம் வசனத்தின்படி - "அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்." என்று வாசிக்கிறோம். விசுவாசம் என்பது தேவனிடத்திலிருந்து நமக்கு அளந்து அல்லது பகிர்ந்து கொடுக்கப்படக்கூடிய ஒன்றாக தோன்றுகிறது. தேவன் தன்னிடம் இல்லாத ஒன்றை கொடுக்கமுடியுமா ? அல்லது எந்த வழியில் தேவன் நமக்கு விசுவாசத்தை அளந்து கொடுக்கிறார் ? தேவன், அவருடைய வார்த்தைகளில் சத்தியத்தைச் சொல்லியிருக்க, நாம் இந்தக் காரியங்களை முழுவதுமாக, நம்பிக்கொண்டிருக்கிறோமா, இல்லையா என்பது கேள்வி அல்ல. மாறாக அவைகளின் மேல் விசுவாசம் வைத்திருக்கிறோமா ? இல்லையா என்பதே காரியம். ஏனெனில், "விசுவாசம் கேட்கக்கூடிய வார்த்தையினாலே வரும்."

பதில் - (ரோமர் 12 :3) ம் வசனத்தில் "விசுவாசம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கும் வார்த்தை "பிஸ்ட்டிஸ்" என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இதை மெய்ப்பற்று அல்லது உறுதிப்படுத்து என்றும் மொழிபெயர்க்கலாம். நாம் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படும் முன், நமக்குள் இருக்கும் விசுவாசத்தையும், உறுதியையும், அன்றாடம் பயிற்சி செய்யவேண்டும், அப்பொழுது நாம் விசுவாசத்தினால் நீதிமானின் நிலையை அடையமுடியும். அதற்குபின் மனப்பூர்வமாக விரும்பி நம்மையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கும்பொழுது, நாம் பரிசுத்த ஆவியால் ஜெனிப்பிக்கப்படுவதற்கு தகுதிபெறுவோம். இதுவரைக்கும் நமக்குள் இருக்கும் விசுவாசம் போதும், ஆனால் மேற்கொண்டு அதில் வளர நாம் தேவனிடத்திலிருந்து ஆவியைப் பெறவேண்டும். அந்த ஆவியைப் பெற்றபின் தடுமாறாமல் விசுவாசப் பாதையில் நடக்கமுடியும். அப்பொழுது நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய காரியங்களைத் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்போம். - காணக்கூடிய காரியங்களுக்காக பலிசெலுத்துவது தற்காலிகமானது. தேவனுடைய கிருபையான செய்திகளைக் கேட்டு நீதிமானாக்கப்படுவது தேவன் நமக்கு அனுமதித்ததொன்றாகும். சொல்வதென்றால், சகல ஆசீர்வாதங்களும் தேவனிடத்திலிருந்தே வருகிறது. ஆனால், விசேஷமாக ஆவிக்குரிய காரியங்களின் மேலுள்ள விசுவாசம் தேவனிடத்திலிருந்து பெற்ற ஆவியினால் நமக்கு கிடைக்கும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதினால் வளர்ச்சியடையும். ஏனெனில், "அவர்கள் தேவனால் போதிக்கப்படுவார்கள்" என்று எழுதியிருக்கிறது. நாம் கொண்ட அடிப்படையான விசுவாசத்தினால் மட்டும் அல்ல, உடன்படிக்கை செய்தபின் தேவனுடைய ஆவியினால் வளர்ச்சியடையும் விசுவாசத்தினால், நீதிமானாக்கப்பட்டு, தேவனுடைய வார்த்தைகளினாலும், பராமரிப்பினாலும், ஆழமான விசுவாசத்தில் உறுதிப்படுகிறோம்.

அடுத்து, தேவனுடைய போதனைகளுக்கு எவ்வளவு காலம் கீழ்ப்படியவேண்டும் என்பதையும், நம்முடைய விசுவாசம் அதிகமாக வளர்ச்சியடைய அவருடைய கற்பனைகளுக்கு எவ்விதத்தில் கவனம் செலுத்தவேண்டும் என்றும் பார்க்கலாம். இப்படிப்பட்ட வளர்ச்சியை "பரிசு" அல்லது நமக்குள் இருக்கும் தேவ ஆவியின் "நற்கனி" என்றும் குறிப்பிடுகிறது. இதற்கு தேவனே சிற்பாசிரியராக இருக்கிறார். ஏனெனில், சகல கிருபையினாலும் அவருடைய சத்தியங்களைக் கொண்டு அவருடைய பிள்ளைகளுக்குள் - விசுவாசம், நம்பிக்கை, மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் அன்பை வளரச் செய்கிறார். நாம் அவருடைய கற்பனைகளுக்கும், உபதேசங்களுக்கும் கீழ்ப்படிந்தோமானால் காலப்போக்கில் அவர் சித்தம் கொண்ட கிரியைகளை முற்றிலுமாக நம்மில் நிறைவேற்றுவார் அதற்குப் பின் நாம் அனைவரும் அவருடைய குமாரனின் தற்சொரூபங்களாக மாறி, கிறிஸ்துவுக்கு உடன் சுதந்திரருமாக இருப்போம்.

7. இரட்சிப்படைய, கிறிஸ்துவுக்குள் விசுவாசம் அவசியமா?

அப்போஸ்தலர் 4 : 10 -12 உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும், இஸ்ரயேல் ஜனங்களெல்லாருக்கும் தெரிந்திருக்கக்கடவது. வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்.

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.
யோவ 3:16 "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."
யோவ 3:36 "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான், குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்."
A 102(P 3) : - முழுமையாக ஊழியம் செய்யும் மனப்பான்மையானக் காரியங்களையுடைய வேதாகமத்தில், இரட்சிப்படையக்கூடிய பல வழிகளை (விசுவாசம், கிரியைகள், மற்றும் பேதமை) அது வலியுறுத்துவதில்லை. மேலும், தேவனை மதிக்காமல் இருப்பதின் மூலமாகக் கிடைக்கும் நித்திய அழிவைக்குறித்தும் அதிகமாக போதிப்பதில்லை. மாறாக, மற்ற எல்லா நம்பிக்கையின் கதவுகள் அடைப்பட்டாலும், ஜீவனுக்குப் போகிற ஒரே ஒரு திறந்த வாசலை மட்டும் காட்டுகிறது. அதில் பிரவேசித்து ஜீவனைப் பெறும்படி அழைப்பு கொடுக்கப்படுகிறது. இப்பொழுது இதை காணமுடியாமல், அல்லது அதற்குள் நுழைந்த பின் கிடைக்கும் ஆசீர்வாதங்களின் சிலாக்கியத்தை அறியாதவர்கள் காலப்போக்கில் முழு அறிவினால் நிரப்பப்படுவார்கள் என்று காட்டுகிறது. இந்த முறைமையில் ஓட்டப்பந்தயத்தில் ஓடுபவர்கள் மட்டுமே தேவனைச் சேர முடியும். சிறப்பாக வேலை செய்வதினாலும் அல்ல, அறியாமையினாலும் அல்ல இந்த உலகத்தின் பாவத்தைப் போக்கும், கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மேலுள்ள விசுவாசத்தினால் மட்டுமே இதை சாதிக்கமுடியும். (1பேது 1:19, யோவ 1:29) "இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி இதுவே."
R2220 - பாடத்தின் முடிவில் "கிறிஸ்துவுக்குள் விசுவாசம் தேவையா" - என்ற தலைப்பில் காணவும்..

8. இந்தச்சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவுக்குள் வைக்கும் விசுவாசத்திற்கு உடனடியாகக் கிடைக்கும் பலன் என்ன?

ரோ 5:1 இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.
A231 (P4) : -
சபை மகிமையடைவதற்குக் கடக்கவேண்டிய அதே படிகளை நம்முடைய ஆண்டவரும், போதகருமானவர் கடந்ததினால், "நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி அவர் ஒரு மாதிரியை ஏற்படுத்தினார்" - நாம் மரண நிலையிலிருந்து இந்த ஓட்டத்தைத் துவக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் நம்முடைய ஆண்டவர் இந்த உலகத்திற்கு பூரண நிலைமையில் வந்ததால் (N) அந்நிலையிலிருந்து, இந்தப் பயணத்தைத் துவங்கினார். நாமோ ஆதாமின் சந்ததியாராக இருப்பதினால் மரண நிலையில் இருந்தோம். (R) - இது பாவமுள்ள, அபூரணம் மற்றும் தேவனுடைய சத்துருக்கள் என்ற நிலையையும் குறிக்கிறது. ஆகவே முதலில் நாம் இந்த மரண நிலையிலிருந்து, (R) பூரண நிலைக்கு (N) வருவதே, நமக்குத் தேவைப்பட்ட ஒன்றாக இருக்கிறது. இது எவ்வாறு சாத்தியப்படும்? இது நற்கிரியைகளால் கூடுமா? எந்தப் பாவிகளும் நற்கிரியைகளை நடப்பிக்க முடியாதே. நாம் எவ்விதத்திலும் இதை தேவனிடம் கேட்க தகுதியற்றவர்களாக இருக்கிறோம். ஆகவே தேவன் - "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோ 5:8) இப்படியாக, நம்முடைய பாவங்களுக்காக இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டு, மரணநிலையிலிருந்த நம்மை "அவருடைய இரத்தத்தின் மேலுள்ள விசுவாசத்தினால்" அவர் இரட்சித்து, ஆதாம் படைக்கப்பட்ட நிலையும், அதிலிருந்து அனைவரும் விழுந்துபோன அந்தப் பரிபூரண நிலைக்கு மறுபடியும் மேலே தூக்கி எடுத்தார். இப்படியாக, "நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம்." (N) நிலைமைக்கு உயர்த்தப்படுகிறோம். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுபவர்கள் தேவனோடு சமாதானம் கொண்டிருப்பார்கள். (ரோ 5:1) இனி அவர்கள் ஒரு போதும் தேவனுடைய எதிராளிகளாக எண்ணப்படாமல், தேவனுடைய புத்திரர்களாகக் கருதப்படுகிறார்கள். இயேசு இந்த உலகத்திற்கு வந்த அதே பூரண நிலையில் நாமும் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். இயேசு உண்மையில் பரிபூரணராக இருந்தார் ஆனால் நாமோ பரிபூரணமானவர்கள் என்று கருதப்படுகிறோம். நாம் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டு, இரட்சிக்கப்பட்டு, நீதிமானாக்கப்படுகிறோம். இப்படிப்பட்ட ஒரு நிலைமையை - தேவனுடைய வார்த்தைகளின் மூலமாக நாம் உணர்ந்துகொள்ளலாம். விசுவாசத்தினால் நாம் அணிந்திருக்கும்

கிறிஸ்துவினுடைய நீதியின் சால்வையினால் போர்த்தப்பட்ட நிலைமையில் நாம் இருப்பதினால், தேவனுடைய பார்வையில், குற்றமற்றவர்களாகவும், கறையற்றவர்களாகவும், பரிசுத்தமாகவும் தோற்றமளிக்கிறோம். நம்முடைய பாவங்களை அவர் சுமந்து, ஒரு பாவியை போலாகி, அதற்குரிய தண்டனையை அவர் பெற்றுக்கொண்டு, நமது சார்பாக அவர் மரித்தார். ஆகவே அவருடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும், மனுக்குலம் பாவத்தில் விழுமுன் பெற்றிருந்த எல்லா உரிமைகளும், ஆசீர்வாதங்களும் மீண்டும் கொடுக்கப்படுகிறது. இந்த சிலாக்கியம் நம்மை ஜீவனுக்குள் வழிநடத்தி, தேவனோடு தொடர்பு கொள்ள செய்கிறது. விசுவாசத்தின் பயிற்சியின் மூலம் இந்த உறவை நாம் துவங்குகிறோம். அதை தக்கவைத்துக் கொள்ளும் பட்சத்தில் தேவன் "குறித்தக் காலத்தில்" அவரோடு நித்தியமாக என்றுமே ஜீவிப்போம்.

R2651(col. 2P5) - R2652 (col. 1P1) : -

"... அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது..." (யோவ 6:29) என்ற ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு உண்டான விளக்கத்தைக் காண்போம். இங்கு விசுவாசத்தோடு கிரியையும் சம்பந்தப்பட்டிருக்கிறது. இது கரங்களினால் செய்யப்படும் வேலை அல்ல, மாறாக, நம்முடைய தலையினாலும், நம்முடைய இருதயத்தினாலும் செய்யப்படுவதாக இருக்கிறது. நம்முடைய கரத்தினால் செய்யப்படும் எந்தவிதமான கிரியைகளைக் காட்டிலும், இருதயத்தினால் செய்யப்படும் கிரியைகளையே கர்த்தரின் பார்வையில் மேன்மையாக அங்கீகரிக்கப்படுகிறது. ஏனெனில், நம்முடைய விழுந்துபோன நிலையில் எந்த ஒரு கிரியைகளையும் பூரணமாக செய்ய இயலாது என்று நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். ஆனால் தேவன் பூரணமானவர், அவருடைய வேலைகள் அனைத்தும் பூரணமாகவே உள்ளது. ஆகவே அவர் ஒருகாலத்திலும், இந்த அபூரணமான கிரியைகளை அதாவது சிறிதளவும் பாவமுள்ள செயல்களோடு, ஏற்றுக்கொள்ளமாட்டார். மிகச் சிறந்த முறையில் நாம் செய்த வேலைகளை தேவனுக்கு அர்ப்பணித்தாலும், விசுவாசம் இல்லாமல் அந்தக் கிரியைகள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

தேவன் ஒரு மிகப்பெரிய வேலையை நமக்காகச் செய்ய ஆலோசித்திருக்கிறார் - நாம் பந்தய சாலையில் ஓடுவதற்காக தன்னுடைய ஜீவனை ஈட்டு கிரயமாகக் கொடுப்பதற்கு நமக்காக ஓர் இரட்சகரைத் தந்ததின் மூலமாக இந்த மாபெரும் காரியத்தை செய்தார். இப்பொழுது தேவன் இயேசுவின் மேல் விசுவாசம் உள்ளவர்களை நீதிமான்களாக்குகிறார். ஆகவே, நாம் நியாயத்தீர்ப்பின் கீழ் இருப்பதினால், இயேசுவை நாம் விசுவாசிக்கும் வரைக்கும், நம்முடைய எந்த வேலைகளும் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. ஆனாலும், அவர் தாமே செய்த முன்னேற்பாட்டினால், கிறிஸ்துவின் மேலுள்ள நம்முடைய விசுவாசத்தை அவர் ஏற்றுக்கொண்டு, இந்த விசுவாசத்தின் மூலமாக நம்மை நீதிமானாக்குகிறார். இதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இதன் அடிப்படையில் செய்யப்படாத எந்த வேலைகளையும் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. தேவனுடைய பார்வையில், அனைவரும் விசுவாசத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளும்படியாக இப்படி செய்தார். "விசுவாசம் இல்லாமல் தேவனை மகிழ்விப்பது கூடாத காரியம்." அதிகமாக விசுவாசத்தில் பயிற்சி பெற்றால், தேவனை அதிகமாக மகிழ்விக்கலாம் - நிச்சயமாக கட்டுக்கதைகள், தேவன் சொல்லாதக் காரியங்கள் மற்றும் நாம் அல்லது மனிதர்களின் கற்பனைகளை நம்புவது விசுவாசம் அல்ல. தேவன் சொன்னவைகளை உறுதியாக நம்புவதே விசுவாசம், இதையே தேவனும் ஏற்றுக்கொள்கிறார். இதை அப்பியாசப்படுத்தும் ஒவ்வொருவரையும் அவர் நீதிமானாக்குகிறார் - "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." (ரோமர் 5:1)

இதற்கு மேல் சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்படும் பரம அழைப்பைக் குறித்து ஆண்டவர் இங்கு வேறொன்றும் விவரிக்கவில்லை. அதை குறித்து நாம் காணலாம். தேவனை தேடுவதற்கான முதல் படி - நீதிமானாக்கப்படுதல் - இதை குறித்தே அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்நிலையை நாம் பெற, கிறிஸ்துவை நம்முடைய ஜீவனுக்குரிய அப்பமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். தந்தையாகிய ஆதாமின் மீறுதல்களினால், மரணம் நம் அனைவரின் மேலும் வந்தது. நமக்குள் தேவன் தந்த பூரணமான ஜீவன் நமக்குள் இல்லை என்பதை, நாம் அனுபவ ரீதியாக முதலில் உணரவேண்டும். நம்முடைய பிதாவாகிய ஆதாமின் மேல் வந்த மரணத்தை நீக்க ஆண்டவராம் இயேசு மாம்சமாகி, தன்னுடைய ஜீவனையே ஈட்டுக் கிரயமாகக்கொடுத்ததினால் இப்பொழுது, கிறிஸ்துவுக்கு தேவனுடைய இந்த இலவசமான கிருபையை ஏற்றுக்கொள்பவர்கள், கிறிஸ்துவின் பலியின்

நன்மைகளைத் தனக்குள் ஏற்றுக்கொண்டு, இதினிமித்தம் இந்த உலகத்திற்குத் தன்னுடைய ஜீவனையே ஈடு பலியாகக் கொடுத்து அபிஷேகம் செய்தவரின் மூலமாக தேவன் கொடுக்கும் சகல ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் பெற்றுக் கொள்பவர்கள், மனரீதியாக இந்த உண்மைகளை ஒப்புக்கொண்டு, இருதயப் பூர்வமாக ஏற்றுக்கொள்பவர்கள், மனுஷகுமாரனின் மாம்சத்தைப் புசிப்பவர்களாக இருக்கிறார்கள் - இவர்கள் இந்த யுகத்தில் கிறிஸ்துவுக்குள் கொடுக்கப்பட்ட சகல வாய்ப்புகளையும், ஆசீர்வாதங்களையும், மனித உரிமைகளையும், பயன்படுத்திக் கொள்வார்கள்.

9. இயேசு எப்படியாக நம்முடைய விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரு மாயிருக்கிறார்?

எபி 12 :1, 2 -"...விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம், அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்."

R1830 (col. 1P1) : -

அவருடைய மாதிரியினாலும், போதனைகளினாலும், எவர் ஒருவர் விசுவாசத்தில் ஊக்குவிக்கப்படுகிறாரோ, அவர் தொடர்ந்து இயேசுவைப் பின்பற்றி, ஓட்டத்தை நிறைவுசெய்து, அது பூரணப்படும் பட்சத்தில், அசைக்கமுடியாத அளவுக்கு உறுதிபெற்று, இறுதியில் "மகிமையுள்ள சபையாக", கறைதிரையற்றவராக, தன்னை ஸ்தாபிப்பார். இவர் இன்று பெறும் அனுபவங்களினால், "இராஜரீகமான ஆசாரியத்துவத்திற்கு" அவரைத் தகுதிப்படுத்துவார். ஏனெனில் "அநேக உபத்திரவங்களின் மூலம்" இந்தப் பொறுப்புக்கேற்றபடி பூரணப்படுத்தப்படுகிறார்.

10. விசுவாசத்தை எளிமையாக அறிக்கையிடுவது அவசியமா?

ரோ 10:10 -"நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். "

R2632 (col. 2 P 2,3) : -

கிறிஸ்துவுக்கு குழந்தைகளாக இருப்பவர்கள், இந்த "உலகத்தின் பிள்ளைகளிடமிருந்து" தங்களை வித்தியாசப்படுத்திக்கொள்ள விசுவாசத்தை வெளியரங்கமாக, அறிக்கையிடுவது சற்று அவசியமாகவே இருக்கிறது. ஆனால், இந்த அறிக்கை மிக எளிமையாக இருக்கவேண்டும். ஏனெனில், கிறிஸ்துவுக்கு மிகச்சிறிய குழந்தைகள் கூட அங்கு சொல்லப்படும் விளக்கங்களை மிகத்தெளிவாக புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். (1) பிதாவினால் அனுப்பப்பட்ட கிறிஸ்து, அனைத்து மனுக்குலத்திற்கும் தன்னையே ஈடுபலியாகக் கொடுத்தார் என்றும் அவர் தங்களுடைய சொந்த இரட்சகர் என்றும், அறிக்கையிடவேண்டும். (2)கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, பாவங்களை விட்டுவிட தீர்மானிக்க வேண்டும். (3) இயேசுவை எல்லா விதத்திலும், முழு அர்ப்பணிப்போடு பின்பற்றி, அவருடைய பணியில் தன்னுடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். இவைகளை அறிக்கையிட முடியாதவர்கள் கிறிஸ்துவுக்கு "குழந்தைகளாக" ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள். அல்லது இவர்களை கிறிஸ்துவுக்குள் சகல விதத்திலும் வளர்ச்சியடையவும் எதிர்பார்க்கவும் முடியாது.

இங்குச் சொல்லப்பட்டக் காரியங்களைப் பெயர் சபைகளில் நாம் எதிர்பார்க்கமுடியுமா ? எந்த விதத்திலும் இது சாத்தியமல்ல. பெயர் சபைகளில் அதிகமான களைகளும், குறைவான கோதுமை மணிகளும் இருக்கிறது. இவை அனைத்தும் மகா உபத்திரவத்தின் காலத்தில் சோதனைக்குள்ளாக்கப்படும். இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரைக்கும் இவர்களின் நிலை மாறாது என்று எதிர்பார்க்கப்படுகிறது. தெரிந்துகொள்ளப்பட்ட சபை முழுமைப்பெற்று மகிமையடைந்த பின் மற்ற அனைவரும் சீர்ப்பொருத்தப்படுவார்கள். (அப் 3:19-21)

R2647 (col. 1 P 5) : - நம்முடைய பொதுவான நம்பிக்கைகள், மதப்பற்றை அதிகரிப்பதற்கான நோக்கத்துடன் அல்ல, மாறாக,கீழக்காணும் குறிப்புகளைச் சரியாகவும், தெளிவாகவும் தனிப்பட்ட வகையில் புரிந்துகொள்வதற்காகவே இருக்கிறது. (1) இயல்பாகவே, நாம் விழுந்துபோன அங்கத்தினர்களாக, தண்டனை தீர்ப்படைந்த ஜாதியாக, கோபாக்கினையின் பிள்ளைகளாக, தண்டிக்கப்பட்ட நிலையில் இருக்கிறோம். (2) கிறிஸ்து , ஆதாம் மற்றும் அவருடைய முழு சந்ததிக்காக மரித்தார். ஆகவே இப்பொழுது, இயேசுவின் மேல்

விசுவாசமுள்ளவர்களைத் தேவன் நீதிமானாக ஏற்றுக்கொள்ளுகிறார். (3) தன்னைதான் ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, அனைத்தையும் ஆண்டவருக்கே அர்ப்பணித்து, ஆயிரவருட ஆட்சியில் "ஜெயிப்பவர்களுக்காக" வாக்களிக்கப்பட்ட பங்கைப்பெற, தேவன் அழைத்த ஒவ்வொருவரையும் நீதிமானாக்கியுமிருக்கிறார் - வெளி 2:26, 3:12,21

R3071(col.2P 3,4)- R3072 (col.1P1) : -

எப்படிப்பட்ட செய்திகள் விசுவாசத்தின் செவிகளால் கேட்கப்படும்? மற்றும் விசுவாசத்தின் கண்களினால் காணப்படும்? என்றுமே நமக்குள் நாம் பெற்றிருக்கும் வல்லமையினால், நம்முடைய இருதயத்திலும், வாயிலும், இந்த இரட்சிப்பை பெற்றுக்கொள்ள முடியும் என்று தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்களும் அறிவிக்கிறார்கள். மோசே இவைகளையே பிரசங்கித்து, தீர்க்கதரிசனமாகச் சொன்ன சுவிசேஷம் என்றும், அதை நாம் இன்று பெற்றுக்கொண்டோம் என்றும் அப்போஸ்தலர் நடபடிகைகள் அறிவிக்கிறது. அதாவது, ஆண்டவரை நம்முடைய வாயினால் அறிக்கையிட்டு, இருதயத்தினால் விசுவாசிக்கவேண்டும்.

தீர்க்கதரிசியாகிய மோசேயும், அப்போஸ்தலனாகிய பவுலும் இந்த காரியத்தை ஒரே விதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதலில் தங்களுடைய வாயினாலும் ,இரண்டாவது தங்களுடைய இருதயத்தினாலும் அறிக்கையிடவேண்டும். இந்த வாக்கியங்கள் தற்செயலாக சொல்லப்பட்டவைகள் அல்ல. இருதயத்தில் உள்ள விசுவாசத்தை (சத்தியம்), வாயினால் அறிக்கையிடுவது முதல் சாட்சியாக இருக்கிறது. மேலும், இப்படியாக சத்தியத்தை அறிக்கையிட்டு, அவைகளை முழுமையாக புரிந்து கொள்வது, தெய்வீக ஒழுக்கத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. உண்மையில், நாம் சரியாகப் புரிந்து கொள்ளாத காரியங்களை அறிக்கையிட முடியாது. ஆகவே, நாம் அறிக்கையிடுவதற்கு முன்பு அதை நாம் முழுமையாக நம்ப வேண்டும். அதற்குபின் விசுவாசத்தில் நாம் முழுமையான வளர்ச்சி அடைய சத்தியத்தை அறிக்கை செய்யவேண்டும். ஒருவர் தான் பெற்ற சத்தியத்தின் வெளிச்சத்தை வெளியரங்கமாக அறிக்கையிடாமல், அதை காத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணினால், அவர் தன்னைத்தான் வஞ்சிக்கிறவராக இருப்பார். ஆகவே "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப்பண்ணப்படும்." (ரோமர் 10:10) என்று வசனங்கள் தெளிவாகக் குறிப்பிடுகிறது. விசுவாசத்தினால் துவங்கிய நீதியானது, கிரியையினாலும், உதடுகளினால் அறிக்கையிடாமலும், நித்தியமான இரட்சிப்பை முழுமையாக அடைய முடியாது.

தெய்வீக சத்தியத்தின் இந்த ஒரு சிறப்பு பகுதியை எங்குமுள்ள தேவ ஜனங்கள் தங்களுடைய இருதயத்தில் ஆழமாக பதித்து வைக்க வேண்டும். ஏனெனில் அநேகர் தங்களுடைய பலவீனத்திலும், வியாதியிலும், தேவன் காட்டிய வழிகளில் நடக்க முடியாதபடிக்கு தங்களுக்குள்ளான ஆவிக்குரிய குறைபாடுகளிலும் தேவன் அவர்களுக்கென்று செய்த எண்ணிக்கையற்ற கிருபைகள் எத்தனையோ உண்டு. அவைகளை கட்டாயமாக அறிக்கை செய்து அவருக்கு நன்றி செலுத்த வேண்டும். ஆகவே நாம் தேவனிடமிருந்து இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள, நாம் முன்பு பெற்ற காரியங்களை அறிக்கையிட வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் பெறும் ஒவ்வொரு ஆசீர்வாதங்களும் அறிக்கையிடப்பட்டு, இருளிலிருந்து, ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆவிக்குரிய வளர்ச்சியடைய இதுவே சட்டமாக இருக்கிறது. இது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்குண்டான கற்பனையாகவும் இருக்கிறது. இந்தக்கற்பனைக்குக் கீழ்ப்படியாத பட்சத்தில், இருதயத்திற்குள் இருக்கும் சத்தியம் காலப்போக்கில் காணாமல் போய்விடும். புரிந்துகொள்ளுதலின் கண்கள் மங்கிவிடும். விசுவாசத்தின் செவிகள் மந்தமாகிவிடும். புதிய உடன்படிக்கையின் கீழ் புது சிருஷ்டிகளாக அழைக்கப்பட்ட நாம், வருங்காலத்தில் நமக்காக வைக்கப்பட்டிருக்கும் மகிமையான வாய்ப்புகள், கை நழுவி போய்விடும்.

11. "உணர்வுகளுக்கு" விசுவாசத்தில் ஒரு முக்கிய பங்குள்ளதா?

R1443 - "விசுவாசமும் உணர்வுகளும்"

விசுவாசத்திற்குப் பதிலாக உணர்வுகளை தவறாக எடுத்துகொள்ளக்கூடாது. ஆனாலும் ஒரு செடியின் வேருக்கும், மலருக்கும் தொடர்புள்ளது போல, விசுவாசத்திற்கும் பரிசுத்தமான உணர்வுகளுக்கும் தொடர்பு இருக்கிறது. வேர் நிலத்தில் என்றுமே நிலைத்திருப்பதுப்போல, விசுவாசமும் நிலைத்திருக்கக்கூடியது. ஆனால் உணர்வுகள்

திட்டமிடப்படாத ஒன்றாகும். வேர்கள் எப்பொழுதும், பசுமையான இலைகளையும், மலர்களையும் தராததுப்போல, விசுவாசமும் ஓயாமல் உணர்வுகளை வெளிப்படுத்தாது. நாம் சந்தோஷத்தின் எல்லையில் இருக்கும் பொழுதும், நாம் கொண்ட விசுவாசம் உறுதியாக இருக்கும். அதுபோல, வேதனைகள், வியாதிகள், வறுமை மற்றும் பல இக்கட்டுகளில் நம்முடைய உணர்வுகள் தொய்ந்துப் போனாலும், நம்முடைய விசுவாசம் மேகங்களுக்குக் கீழ் இருக்கும் கிரானைட் மலைகளைப்போல் உறுதியாக இருக்கும். உங்களுடைய சொந்த உணர்வுகளோடு தேவனுடைய அன்பையும், வல்லமையையும் ஒப்பிடாதீர்கள். சூரியனானது, அடர்த்தியுள்ள இருளான பகலிலும், மிகப் பிரகாசமாக வீசுகிறது. ஆனால் மேகங்கள் இடையில் இருப்பதினால் அந்த வெளிச்சத்தை நம்மால் உணர முடியவில்லை.அது போல நாம் செய்யக்கூடிய காரியங்களினால் தேவனுடைய அன்பை உணராதிருக்கலாம். ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கிறார்.

மகிழ்ச்சி நிறைந்த இயல்பான வாழ்க்கையைவிட, குறைவான உணர்வுகளோடு இருப்பதே நலம் என்று கிறிஸ்துவ அனுபவங்கள் மூலமாக நாம் கற்றுக்கொள்கிறோம். தேவன் அவருடைய மழைத்துளிகளை நமக்கு அனுப்புகிறார், இல்லையென்றால், பூக்களும், செடிகளும் நாசமடைந்துவிடும். அதுபோல, மாறாத தேவன் மேல் நாம் விசுவாசம் வைக்கும் பட்சத்தில் ஆழமான நதியைப்போல, நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையும், அன்பும் மிக ஒழுங்காக வளர்ச்சியடையும். இதில் எந்தவிதமான தடைகளும், கட்டுமானங்களும் தடுக்கமுடியாது. மோசே சிவந்த சமுத்திரத்தின் விளிம்பில் நின்ற பொழுது விசுவாசமுள்ள உணர்ச்சியால் அவர் ஆட்கொள்ளப்பட்டார் - "பயப்படாதிருங்கள்.... கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள் ....". ஆபிரகாம் ஈசாக்கை பலியிடும்பொழுது அவர் கொண்ட விசுவாசத்தையோ, அல்லது எரிகோ மதில்களைச் சுற்றி வந்த இஸ்ரயேல் மக்களின் விசுவாசத்தையோ இதற்கு ஒப்பிடமுடியாது. ஆகவே தேவனுக்குள் விசுவாசமாயிருங்கள், அவர் காட்டிய வழிகளில் தொடர்ந்து நடவுங்கள், நிச்சயமாக வெற்றியடைவோம்.

12. நீதிமானாக்கப்படுவதற்கும் அடிப்படையான விசுவாசத்திற்கும், ஆவியின் கனிக்கான அடிப்படை விசுவாசத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

F688 - F692 - இதற்கான பதிலை "விசுவாசம் - ஆவியின் கனி மற்றும் இன்றைய புதுசிருஷ்டி பெற்றுக்கொள்ளும் சொத்து" என்ற தலைப்பில் இந்தக் கேள்விகளின் இறுதியில் காணலாம்.

13. "விசுவாசத்தின் நல்ல போராட்டம்" என்றால் என்ன?

1தீமோத்தேயு 6 :12 -"விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கைப் பண்ணினவனுமாயிருக்கிறாய்."

R2309 - "கிறிஸ்தவர்களின் போராட்டம்" என்ற தலைப்பில் இறுதியில் காணலாம்.

R2312 -விசுவாசத்தின் போராட்டம் - 1தீமோ 6:12 ம் வசனம் - நல்ல போராட்டத்தை, விசுவாசத்தின் நல்ல போராட்டம் என்று அழைக்கப்படுகிறது. அனைத்துக் காரியங்களிலும் இது விசுவாசத்தின் போராட்டமாக இருக்கிறது.

(1) இது காணக்கூடாத எதிராளியோடே, தலைவரின் வழிநடத்துதலுக்குக் கீழ் நடக்கும் போராட்டமாக இருக்கிறது - விசுவாசத்தின் கண்களால் மட்டுமே நம்முடைய இரட்சிப்பின் அதிபதியை நாம் காணமுடியும், மேலும், அவருடைய வார்த்தைகளினால் மட்டுமே நம்மை எதிர்க்கும் நம்முடைய எதிராளியை அடையாளம் கண்டுகொள்ளமுடியும்.

(2) நம்முடைய ஒழுக்கமுள்ள பகுத்தறிவினால் நமக்குள் இருக்கும் பாவங்கள் மற்றும் நீதியையும் அடையாளம் கண்டு கொள்ள முடியும். விசுவாசத்தினால் தேவனுடைய வார்த்தைகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம். மேலும், அந்த வார்த்தைகளில் உள்ள விதிமுறைகளின், கீழ் தேவனுடைய பார்வையில் சரியான மற்றும் நீதியான காரியங்களைக் கற்றுகொள்கிறோம். உலகத்தின் பார்வைக்கு சரியாகத் தோன்றும் காரியங்கள் அனைத்தும் தேவனுடைய பார்வையில் தவறு என்று இதன்மூலம் புரிந்து கொள்கிறோம். இப்படியாக அவருடைய வார்த்தைகளின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம், தேவன் நமக்குத் தந்த வெளிப்பாடுகளின் அடிப்படையில் அனைத்து முடிவுகளையும் ஏற்றுக்கொண்டு, விசுவாசிக்கிறோம்.

(3) நாம் பெறப்போகிற சுயாதீனம் மற்றும் மகிமையை, நாம் பெற்ற அறிவினால் அல்ல விசுவாசத்தினால் மட்டுமே போராடிப் பெற்றுக்கொள்ள முடியும்.

(4) அவரை நேசிப்பவர்களுக்கு தேவன் தாமே மிக மேன்மையான வாக்குத்தத்தங்களையும், விலையுயர்ந்த காரியங்களையும் வாக்களித்திருக்கிறார். இதனிமித்தமாக அவருடைய பணியில் தங்களுடைய ஜீவனையே ஒப்புகொடுக்கும் அளவுக்கு அன்பு எதிர்பார்க்கப்படுகிறது. நாம் விசுவாசத்தின் கண்களினால் மட்டுமே, ஜீவ கீரிடத்தையும், மகிமையடைந்த கர்த்தரையும் காண்கிறோம்.

(5) நம்முடைய மாம்சமான கண்கள் காணக்கூடிய காரியங்கள், நம்முடைய ஓட்டத்திற்கு எதிரிடையான காரியங்களைச் செய்யத் தூண்டுகிறது. இந்த பணிக்காக நம்முடைய ஜீவனை முழுமையாக ஒப்புகொடுக்க தடுக்கிறது, சாந்தம், பணிவு, பொறுமை, அன்பு, நிதானம் என்ற குணங்களை நமக்குள் வளர்ப்பதை தடுத்து, சுயநலம், ஆசைகள், பெருமை, பேராசை மற்றும் இந்த உலகத்தின் ஆவியை நமக்குள் நிரப்புகிறது. ஆகவே, தேவனால் ஊக்குவிக்கப்படும் விசுவாசத்தினால் மட்டுமே இவைகளைப் போராடி மேற்கொள்ளமுடியும்.

இந்தக் காரியங்களை நாம் பார்க்கும்பொழுது, விசுவாசம் எவ்வளவு முக்கியமான ஒன்று என்று தெரிகிறது. விசுவாசம் இல்லாமல் நாம் ஒருபோதும் எதையும் ஜெயிக்கவே முடியாது. விசுவாசம் நிலைத்திருக்க கொஞ்சம் அறிவும் தேவைப்படுகிறது, விசுவாசம் வளர்ச்சியடைய சில வாக்குத்தத்தங்கள் அவசியமாக இருக்கிறது. இவையனைத்தும் மிகப்பெரிய அற்புதமான, தெய்வீக வெளிப்பாட்டில் பெற்றிருக்கிறோம். இதை தொடர்ந்து நாம் அவருடைய வார்த்தைகளின்படி போராயுதங்களைத் தரித்துக்கொள்ள வேண்டும். அவர் கொடுத்த சர்வாயுதங்களை அணிவது வேதனையாக இருந்தாலும், அதை அணியவேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம். இந்தப் போராட்டத்தை நம்முடைய அதிபதியின் வார்த்தைகளின்படி செய்யாவிட்டால், நிச்சயமாக போரில் தோல்வியடைவோம். உண்மையில், நமக்கு தேவைப்பட்ட, தெய்வீகத் திட்டம் மற்றும் தெய்வீக சித்தத்தின் பல்வேறு கோணங்களில் காணப்படுகிற சத்தியத்தின் போதனைகள் நம்முடைய வெற்றிக்கு மிக அவசியமாக இருக்கிறது. இவைகளை கடைப்பிடித்து, சர்வாயுதங்களை தரிக்காமல் போனால் தோல்வி நிச்சயம். ஆகவே மரணபரியந்தம் சர்வாயுதங்களை தரித்துக்கொண்டு, தேவனுடைய வார்த்தைகளின்படி போராடவேண்டும். ஆகவே, நாம் சர்வாயுதங்களை அணிந்து கொள்ளாமல் போருக்குபோவது மற்றும் சர்வாயுதங்களை அணிந்து கொண்டு போருக்கு போகாமல் இருப்பது - இந்த இரண்டு தவறுகளையும் நாம் நம்முடைய வாழ்க்கையில் செய்யாதபடி எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

14. நல்ல போராட்டத்தை நாம் ஏன் போராட வேண்டும்?

R1859(col.1 P6) : -

மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகளாகிய சகலவிதமான கோபம், மூர்க்கம், பகை, பொறாமை, வைராக்கியம், கசப்புகளையும் நம்முடைய இருதயத்திலிருந்து வேரோடு பிடுங்கி எறிந்துவிட்ட பின் பூரண பரிசுத்தத்திலும், தேவனுக்கு மகிமையாகவும், நாம் இந்த நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும். மேலும், நம்முடைய சகல போர் வீரர்களை இந்தப் பாதையில் நடக்க உதவி செய்யவேண்டியவர்களாகவும் இருக்கிறோம். நம்முடையவைகளை அல்ல, தேவனுடைய நாமமும், அவருடைய கற்பனைகள் பொருத்தப்பட்டிருக்கும் அவருடைய இராஜரீகமான கொடியை உயர்த்தவேண்டும். அவருடையவர்களாக இருக்க விருப்பமுள்ளவர்களையும், அறியாமல், தவறான போர் குழுக்களோடு சேர்ந்தவர்களையும் தேவனுடைய அளவின்படி உயர்த்த உதவிசெய்யவேண்டும். கிறிஸ்துவுக்குள் சுயாதீனம் பெற்றவர்களை மீண்டும் வஞ்சித்து, பாவம் மற்றும் மூடநம்பிக்கைளின் நுகத்தின் கீழ் சிறை பிடிக்க தேடித்திரியும் எதிராளியின் கரங்களிலிருந்து இப்படிப்பட்டவர்களை, துணிகரமாக மீட்கவேண்டும். இப்படிப்பட்டவர்கள் காற்றில் சிலம்பம் பண்ணுவதில்லை. நாம் மேடைகளில் வெறித்தனமாகக் கத்துவதில்லை, அல்லது தெரு ஓரங்களில் நாம் கூச்சலிடுவதும் இல்லை. ஆனால் அப்போஸ்தலர்களைப்போல திறமையுள்ளவர்களாக, சாத்தானால் சிறைபிடிக்கப்பட்டவர்களிடம், சத்தியத்தை வெளிப்படுத்த முயற்சிக்கிறோம். இந்தத் தந்திரமும், திறமையும் அவர்களின் விடுதலைக்காகவே பயன்படுத்தப்படுகிறது. ஆனால் சாத்தான் அவர்களை தனக்குள் அடிமைப்படுத்தும்படி சூழ்ச்சி செய்கிறான். ஆகவே நம்முடைய ஆண்டவரும் போதகருமானவர் - பாம்பைப்போல் வினாவுள்ளவர்களாகவும், புறாவைப்போல் கபடற்றவர்களாகவும் இருங்கள்" என்று நமக்கு எச்சரித்திருக்கிறார்.

R2312(col. 2 "ஐந்து முக்கியமான குறிப்புகள்") : - நம்முடைய இரட்சிப்பின் அதிபதி, அநேக வாக்குறுதிகளைக் கொடுத்து, ஆறு இக்கட்டுகளிலும் நம்மோடிருந்து, ஏழாவது இக்கட்டில் நம்மை விடுவிப்பார் என்றும் அதாவது, நம்மை எந்தச் சூழ்நிலைகளிலும் அவர் கைவிடுவதில்லை என்றும் உறுதியளித்து, அவருக்குள்

விசுவாசமாயிருப்பதற்கும் நம்மை ஊக்குவிக்கிறார். மேலும், தேவனுடைய திட்டத்தின்படி அழைக்கப்பட்டவர்கள், அவர் பேரில் உண்மையாக அன்பு கூறுவதினால், சகலமும் அவர்களுடைய நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறார். "விசுவாசமே, உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்" என்று அறிக்கையிடுகிறார். ஆகவே கீழ்க் காணும் காரியங்களை நாம் நமக்குள் உறுதிப்படுத்திக் கொள்ளுவோம்.

(1) நம்முடைய இரட்சிப்பின் அதிபதிக்கு முழுமையாக கீழ்ப்படிய நாம் நம்மை ஒப்புக்கொடுத்து அவரோடு இணைந்து செயல்பட நம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறோம்.

(2) அவருடைய கட்டளைகளை கைக்கொள்ளவும், அவர் நமக்கு கொடுத்திருக்கும் சர்வாயுதங்களை அணிவதற்கும் நாம் முயற்சிக்கிறோம்.

(3) மாம்சத்திற்கும் இரத்தத்திற்கும் எதிர்த்து நின்று பாவங்களின் வெவ்வேறு ரூபங்களை தகர்க்க நாம் போராடுகிறோம்.

(4) நாம் கர்த்தர் மேலும், அவருடையவர்கள் மேலும், உண்மையான விசுவாசமுள்ளவர்களாக இருக்கிறோம். அவர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ - அவர்களை ஊக்குவிக்கவும், ஆலோசனைகளை சொல்லவும், மற்ற ஊழியங்களை செய்யவும் (சிறியதோ, பெரியதோ), தங்களுடைய ஜீவனைக் கொடுக்கும் அளவுக்கு மனப்பூர்வமாக ஆயத்தமாக இருக்கிறோம்.

(5) விசுவாசம் இல்லாமல் நிச்சயமாக நாம் எதையும் ஜெயிக்க முடியாது என்று நாம் நினைவில் கொள்ளவேண்டும் - நம்முடைய கர்த்தராகிய இயேசுவை இரட்சகர் என்றும், அவர் நம்மை பராமரித்து, மனப்பூர்வமாக உதவிகள் செய்து, நம்மை வழிநடத்துகிறார் என்றும் விசுவாசிக்கிறோம். இப்படிப்பட்ட விசுவாசத்தின் மூலம் மட்டுமே - நம்மை நேசித்து, தன்னுடைய சொந்த இரத்தத்தினாலே நம்மை மீட்டு, சகலத்தையும் மேற்கொண்டு ஜெயிக்கமுடியும். நம்மை வெற்றிசிறக்க செய்த நம்முடைய பிதாவாகிய தேவனுக்கே அனந்தகோடி ஸ்தோத்திரம் என்றென்றும் உண்டாவதாக.

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். " - 1கொரி15:57

R2770 (col. 2 P5) -

தேவனுடைய ஜனங்கள் சாத்தானை நிச்சயமாக சந்திக்கவேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு குறிப்பிட்ட காரியம், ஏதோ ஒரு விதத்தில் சாத்தானை அடையாளம் கண்டு கொள்ளமுடியும் என்பதை பொருள்படுத்துகிறது. "விசுவாசத்தில் உறுதியாயிருந்து, சாத்தானுக்கு எதிர்த்து நில்லுங்கள்" என்று அவர் குறிப்பிடுகிறார். அதாவது சாத்தானை எதிர்க்க நம்மில் விசுவாசம் மிக அவசியம் என்பதை வலியுறுத்துகிறார் - இது தேவன் மேல் வைக்கும் விசுவாசமாகும். இந்த விசுவாசம், எந்தச் சூழ்நிலையிலும், நம்மை பின்வாங்கச் செய்யாமல், மரண பரியந்தம், கர்த்தரின் பலிபீடத்தில் நம்முடைய முழு அர்ப்பணிப்பையும் ஒப்புக்கொடுக்க நம்மை வழிநடத்தி, தொடர்ந்து வர இருக்கும் மகிமையில் பங்கடைய நம்மை மகிழ்ச்சியினால் நிரப்பும். -யூதா 3, ரோ 8:17,18

15. நாம் யாருக்காக, யாரை எதிர்த்துப் போர் புரிகிறோம்?

பிலி 2:12 "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும்,அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்."

1யோவ 3:16 "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம், நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்."

எபே 6:12 "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு."

R2309 (- R2310,col. 2P1) - "கிறிஸ்தவர்களின் போராட்டம்" என்ற தலைப்பில் இறுதியில் காணலாம்.

16. "விசுவாசத்தினால் நடப்பது" என்பதற்கு பொருள் என்ன?

11கொரி 5: 7 "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்."

F631(P2,3) : -உண்மையில், புது சிருஷ்டிகளின் நிலைமையும், ஆர்வங்களும், நோக்கங்களும், மாம்சமான அனைத்து காரியங்களுக்கும் எதிரிடையாகவே உள்ளது. இதை குறித்து தீர்க்கதரிசியான தாவீது அறிக்கையிடுகையில் - "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன்...". மரிக்கக்கூடிய சரீரம் அல்ல, புது சிருஷ்டிகள் உண்மையில் தேவனுடைய புத்திரர், ஏனெனில், மாம்ச சரீரம் பலிசெலுத்தப்படவேண்டும். (நீதிமானாக்கப்பட்டு பின்பு) இது நம்மை ஏற்றுக்கொள்வதற்காகவும், ஜெனிப்பிப்பதற்காகவும் தேவன் வைத்திருக்கும் கட்டளையாகும். மாம்சத்திற்கு தேவைப்பட்ட கிருபைகளும், தற்காலிகமான ஆசீர்வாதங்களையும் பெற்ற மாம்ச இஸ்ரயேலர்களுக்கு இப்படிப்பட்ட கட்டளைகள் ஏதுமில்லை. ஆனால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட கற்பனைகளும், பிரமாணங்களும் வரவிருக்கும் உண்மையான இராஜா, உண்மையான அவருடைய இராஜ்யத்தின் மேல் அதிகாரம் செலுத்தும் நாட்களில் சம்பவிக்கப் போகிற காரியங்களுக்கு, நிழலாகக் கொடுக்கப்பட்டுள்ளது. யாத் 15:26, லேவி 26: 3-15, உபா 28 :1-14

இதற்கு எதிரிடையாக, பூமிக்குரிய காரியங்களைப் பொறுத்தவரையில் புது சிருஷ்டிகளுக்குண்டான சோதனைகளில் ஒரு முக்கியமான பங்கு என்னவெனில் - அவர்கள் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கவேண்டும். இதற்கு மேலாக - உபத்திரவங்களைச் சகிக்கவும், சுய கட்டுப்பாட்டை பழக்கப்படுத்திகொள்ளவும் வேண்டும். மேலும் உண்மையில், நமக்கு ஒன்றுமில்லாமல் இருந்தாலும், விசுவாசத்தினால் நாம் அனைத்தையும் பெற்றிருக்கிறோம். ஞானமற்றவர்களாக இருந்தோம், இப்பொழுது தேவனுக்குள் ஞானத்தைப் பெற்றிருக்கிறோம். அவருடைய அடிச்சுவடுகளை நெருங்கி பின்பற்றும் ஒவ்வொருவரும் இந்தக் காரிங்களை அதிக அளவில் உணரமுடியும். "...மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களை சுமந்தார், நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்." நம்முடைய காயங்கள் குணமாக்கப்பட்டதையும், நீதிமானாக்கப்பட்டதையும், கிறிஸ்துவின் சரீர அங்கமாக நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டதையும், நாம் மறந்துவிடக்கூடாது - நாம் புது சிருஷ்டிகளாக, அவருடைய பிள்ளைகளாகும் தகுதி பெற்று, விசேஷமாக, கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுப்பதினால் அவருக்கு உடன்பங்காளிகளாகும் வாய்ப்புகளைப் பெற்று "கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, நம்முடைய மாம்சத்திலே நிறைவேற்ற" வாய்ப்புகளைப் பெற்றதற்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருப்போம். - ஏசா 53:4,5, ரோ 8:17, கொலொ 1:24

R2581 (col. P3 - col 2P3) : - எப்படியிருந்தாலும், பொதுவான மனுக்குலத்திற்கு வரவிருக்கும் சகல ஆசீர்வாதங்களும் "சுவிசேஷத்திற்குள்" அடங்கியிருக்கிறது. ஆனால், இந்த ஆசீர்வாதங்களை உலகம் பெறுவதற்குமுன், "சிறு மந்தை" வகுப்பினர் அதாவது ஆசீர்வதிக்கப்பட்ட கேட்கிற காதுகளும், காண்கிற கண்களும் உடையவர்கள் இன்னும் மேன்மையான ஆசீர்வாதங்ளோடு, வெகு சீக்கிரத்தில் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். வரக்கூடிய அனைத்து ஆசீர்வாதங்களும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருக்கிறது. நேரடியாக அல்ல, நாம் இவைகளை விசுவாசத்தின் மூலம் அறியவேண்டியவர்களாக இருக்கிறோம், ஏனெனில் - நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம். முன்னதாகவே உண்மை சபையானது, (பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டிருப்போர் - எபி 12:23) விசுவாசத்தினால் மட்டுமே நீதிமானாக்கப்படாமல், நீதிமானாகக் கருதப்பட்டு, பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுதலைப் பெற்றவர்களாகக் கருதப்பட்டு, கிறிஸ்துவோடு கூட எழுப்பப்பட்டவர்களாகக் கருதப்பட்டு, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கிறார்கள் என்று கருதப்பட்டு, புதிய உடன்படிக்கைக்குக் கீழ் இருப்பதினால், இனி ஒருபோதும் மாம்சத்தில் இல்லாமல், ஆவிக்குரியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, புது சிருஷ்டிகளாக இருப்போர் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியாமல், ஆவிக்கேற்றபடி அறிந்துகொள்கிறோம்.

இயற்கையான கண்கள் காணமுடியாத காரியங்களை விசுவாச கண்களின் மூலமாக காணக்கூடிய புதிய பார்வையைப் பெறுகிறோம். சகல சத்தியங்களுக்குள்ளும் வழிநடத்தப்படுகிறோம். தேவன் அவருடைய ஆழமான காரியங்களை தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். (1கொரி 2:9,10) இயற்கையான கண்கள் காணாத காரியங்களை விசுவாச கண்களின் மூலமாகக் காணவும், இயற்கையான காதுகள் கேட்டிராத செய்திகளை விசுவாச காதுகள் கேட்கவும், அல்லது சராசரி மனிதர்களுடைய சிந்தையில் ஒருபோதும் தோன்றாததுமான காரியங்களை தேவனிடத்தில் அன்பு செலுத்தி, அதை கிரியைகளில் வெளிப்படுத்துபவர்களுக்கு தேவன் முன்னதாகவே சேமித்து வைத்திருக்கிறார். இவர்களின் விசுவாசத்தின் கண்கள் திறக்கப்பட்டு சராசரி மனிதர்களுக்கு அப்பாற்பட்டு, மற்ற

பரிசுத்தவான்களோடு, கிறிஸ்துவின் அன்பின் அகலத்தையும், நீளத்தையும், ஆழத்தையும் உயரத்தையும் இன்னதென்று உணர்ந்து கொள்கிறார்கள் - எபே 3:18.

ஆயினும், இக்காலத்தில், இந்த விசேஷித்த வகுப்பார் அழியக்கூடிய இந்த சரீரத்தின் அபூரணத்திலிருந்தும், அதன் பலவீனங்களிலிருந்தும் முழுமையாக விடுதலைப் பெறவில்லை. ஆனால், இவர்கள் காணாமல் விசுவாசிக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஒரு விஷயத்தில் அவர்கள் விடுதலைப் பெற்றிருக்கிறார்கள். இந்த புதிய உடன்படிக்கையின் கீழ் அவர்களின் மாம்சீக பலவீனங்கள் தேவனால் பொருள் படுத்தப்படுவதில்லை ஏனெனில் அவர்கள் புதுசிருஷ்டிகளாகக் கருதப்படுகிறார்கள். ஆகவே அவர்களின் மாம்சத்தை மரித்ததாகக் கருதி, அதனுடைய பலவீனங்களையும் அவர் பொருள்படுத்தாமல், அவர்களுடைய உள்ளான நோக்கத்தின்படியே நியாயத்தீர்ப்படைகிறார்கள். ஆகவே "பலியினால் உடன்படிக்கை" செய்து, மீட்கப்பட்ட அனைவரும், தாங்கள் ஞானஸ்நானம் பெற்று, அபிஷேகம் பண்ணப்பட்டவரின் சரீரத்தின் அங்கமாகக் கருதப்பட்டிருக்கும் காரணம் என்ன என்பதை நாம் நிச்சயமாக நினைவில் கொண்டவர்களாக இருக்கவேண்டும். தெளிவாக நாம் அனைவரும் ஒரே தலையின் கீழ் அவருடைய சுவிசேஷத்தை அறிவிக்கக்கூடிய போதகர்களாக இருக்கிறோம். அவருடைய மகிமையான ராஜ்யத்தில் "ராஜரீகமான ஆசாரியர்களாக" நம்முடைய பிரதான ஆசாரியர் நம்மை தகுதிபடுத்தும் வரைக்கும் நாம் இன்னும் கொஞ்சம் காலத்திற்கு விசுவாசமுள்ளவர்களாகக் காத்திருக்க வேண்டும். அதற்குபின் சுவிசேஷத்தில் முன் அறிவிக்கப்பட்டபடி, இந்த முழு உலகத்தையும், அற்புதமான ஆசீர்வாதங்களுக்குள் நடத்த சிறப்புரிமைப் பெற்றவர்களாக, சத்தியத்தின் வெளிச்சத்தை முழுமையாக பிரகாசிக்கவும், தேவனுடைய புத்திரர்களாக சுதந்திரத்தையும் பெறுவோம்.

R1798 - "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்."

F142 (P2) : - "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" என்ற அப்போஸ்தலனுடைய குறிப்பை சுவிசேஷ யுகத்தில் உள்ள முழு சபைக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. நம்முடைய விசுவாசத்தை வளரச்செய்வதே நம்முடைய ஆண்டவரின் நோக்கமாக இருக்கிறது - அவரை காணமுடியாத பட்சத்திலும், அவரை விசுவாசிக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அநேகக் காரியங்களை மறைவாக விட்டுச் சென்றார். மனித பார்வை அல்லது நியாயத்தீர்ப்பைப் பொறுத்த வரையில் அவருடைய விசுவாசம் வளர்ச்சியடையும் விதத்தில் சிலவற்றை விட்டுச் சென்றார். ஏனெனில், பூமிக்குரிய காரியங்களில் அற்புதங்களும் அடையாளங்களும் அனுமதிக்கப்பட்டால், இந்த விசுவாசம் வளருவதற்கு நிச்சயமாக ஒரு தடையாக அமைந்துவிடும். ஆகவே நம்முடைய புரிந்துகொள்ளுதலுக்கான கண்கள் தேவனுடைய வார்த்தைகளின் மூலமாகப் பெற்ற வாக்குறுதிகளுக்கு எப்பொழுதும் திறந்திருக்க வேண்டும். இந்தச் சத்தியத்தைப் புரிந்துகொள்ளுவதின் மூலமாக - காணமுடியாதக் காரியங்களை (இயற்கையாக அறிந்துகொள்ள முடியாத) விசுவாசிப்பதின் மூலம் வரும் மகிழ்ச்சியை நாம் பெறுகிறோம்.

17. விசுவாசத்தின் சோதனைகள் ஏன் அனுமதிக்கப்படுகிறது?

யாக்கோபு 1: 3,4, 1பேதுரு 4:12,13

F642 - F644 :- இக்காலத்தில் தேவன் புது சிருஷ்டிகளோடு வைத்திருக்கும் தொடர்பைப்பற்றி புரிந்து கொண்டிருந்தோமானால், இந்த தெய்வீக நிலையில் பூரணப்படக்கூடியவர்கள் சரியான நோக்கத்துடன் மட்டும் அல்லாமல், தவறானக் காரியங்களை செய்வதை விட சரியானக் காரியங்களை செய்ய விரும்புவார்கள் என்று நாம் மறந்துவிடக்கூடாது. மேலும் அவர்கள் பெற்ற அநேக அனுபவங்களினால் - நீதியானக் காரியங்களைச் செய்வதினால் வரும் ஆறுதல்களையும், நன்மைகளையும், தீமையினால் வரும் துன்பங்களையும், குழப்பங்களையும் பற்றி நன்கு அறிந்திருப்பார்கள். இதன் காரணமாகவே, புது சிருஷ்டிகள் விநோதமான சோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். எல்லா வகைகளிலும், சொல்லப் போனால் தூதர்களைக் காட்டிலும், நியாயத்தீர்ப்பின் நாளில் இந்த உலகத்திற்கு வரும் சோதனையைக் காட்டிலும் இவர்கள் அதிகமாக சோதிக்கப்படுவார்கள். நமக்கு தெரிந்தவரைக்கும் சாத்தானுடைய பேராசையினால் இந்த உலகத்தை தன்னுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கத்துடன் தேவனை விட்டு திரும்பும் வரைக்கும், எந்தப் பரிசுத்த தூதர்களும் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்று நாம் அறிவோம். ஆனால் சாத்தானுடைய மீறுதலினால், மனுக்குலம் வீழ்ச்சியடைந்து, சோதனைக்கு வாய்ப்பளித்தது என்று தெளிவாக உள்ள காரணங்கள் நம்மிடத்தில் உண்டு. இது விழுந்துப்போன தூதர்களுக்கு மட்டும் சோதனையாக அமையாமல், பரிசுத்த தூதர்களுக்கும் சோதனையாக

அமைந்தது. ஏனெனில் தேவன் பொறுமையாக இந்தத் தீமைகளை அனுமதித்து, அவைகளை உடனடியாக அழித்துவிடாமல் இருப்பதை அவர்கள் கண்டபோது இவர்கள் யேகோவா தேவனுடைய வல்லமையின் மேல் வைத்திருக்கும் விசுவாசம் சோதிக்கப்பட்டது. இதைக் கண்ட அநேக தூதர்கள் விழுந்துபோன தூதர்களின் பாதையில் செல்ல தூண்டப்பட்டிருக்கவேண்டும். ஆனாலும், பரிசுத்தமான தூதர்கள் உண்மையில் தேவனிடம் விசுவாசம் வைத்தவர்களாக, நீதியான கோட்பாடுகளுக்கு முழு மனதோடு கீழ்ப்படிந்து நேர்மையாக வாழ்ந்தார்கள். கிறிஸ்துவின் மூலமாக நடக்கக்கூடிய மகத்தான தெய்வீகத் திட்டத்தைப்பற்றி முன்னதாகவே இவர்கள் அறிந்திருக்கிறார்கள். மேலும், வெகு சீக்கிரத்தில் கிறிஸ்து இயேசு மற்றும் மகிமையடைந்த சபையின் மூலமாக யேகோவா தேவன் தம்முடைய வல்லமை, பரிசுத்தம், அன்பு மற்றும் நீதியினால் நடப்பிக்கப்போகும் பிரம்மாண்டமான காரியங்களைக் கண்டு தங்களுக்குள் நம்பிக்கை கொள்வார்கள்.

எப்படியிருந்தாலும், கிறிஸ்துவுக்குள் இருக்கும் புது சிருஷ்டிகளுக்கு வரும் சோதனைகளின் அளவுக்கு பரிசுத்த தூதர்கள் சோதிக்கப்படுகிறதில்லை. மனிதனுடைய அபூரணமான நிலை பூரணப்படுவதற்கு விசுவாசம், பொறுமை, அன்பு மற்றும் வைராக்கியத்திற்கான தொடர்ச்சியான சோதனைகள் மரண பரியந்தம் அனுமதிக்கப்படுகிறது. அதேபோல், மெசியாவின் யுகத்திலும், இருதயத்தில் முழுமையாக தேவனுக்கும், நீதியின் கோட்பாடுகளுக்கும் உண்மையுள்ளவர்களாக இருக்கிறார்களா? என்று முற்றிலுமாக சோதிக்கப்படுவார்கள். ஆனால் இந்த சுவிசேஷ யுகத்தைப் போலிராமல், அவர்களின் எல்லா சூழ்நிலைகளும் நன்மைக்கு சாதகமாக இருக்கும். இதற்கு எதிர்மாறாக, அப்போஸ்தலர் சொன்னதுபோல, இக்காலத்தில், புது சிருஷ்டிகள் "தேவபக்தியாக நடக்க மனதாயிருக்கும் யாவரும் துன்பப்படுவார்கள்." இப்படிப்பட்ட பாடுகளை மனப்பூர்வமாக, அனுபவிக்க முன்வந்து, தேவனுக்கும் அவருடைய கோட்பாடுகளுக்கும் உண்மையாக இருப்பதே தேவன் அங்கீகரிக்கும் விசேஷித்த குணங்களில் ஆதாரமாக இருக்கிறது. இந்த யுகத்தில் அவர் புது சிருஷ்டிகளோடு வைத்திருக்கும் உறவானது, அவர்களின் குணநலன்களில் முடிந்தவரையில், முழுமையாக பரிசுத்ததைக் கொண்டுவருவதேயாகும். தேவனுக்கென்றும், சத்தியத்தின் நிமித்தமாகவும், மகிழ்ச்சியோடே துன்பப்பட்டு, பூமிக்குரிய எல்லா சௌகரியங்கள், மேன்மைகள், வேலையினால் அடையும் ஆதாயங்கள் மற்றும் ஜீவனையே பணையம் வைத்து சத்தியத்திற்கு ஊழியம் செய்பவர்களே இந்த நிலையை அடைவார்கள்.

தெய்வீகத் திட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு தத்துவத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததின் காரணத்தினால், தேவன் சிறு மந்தைக்கு அளிக்கும் நன்மைகளைக் குறித்து குழப்பம் அடைகிறார்கள். ஓர் உலோகத்தில் மென்மையாக ஒரு பொருளைச் செய்ய அது பல முறைகள் சூடாக்கப்பட்டு குளிரச்செய்வது போல, மனுக்குலம் மீண்டும் சீரமைக்கப்படும் - மிகப் பிரம்மாண்டமான பணிக்கு தேவனுடைய கருவிகளாகவும், பிரதிநிதிகளாகவும், ஆயத்தப்படுபவர்கள். இப்படிப்பட்ட அக்கினிமயமான சோதனைகளுக்கும், அதன்பின் வரும் அதற்கு எதிரான சூழ்நிலைகளுக்கு (குளிர்) அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். தீமை என்றுமே நன்மையை விளைவிக்காது. தேவன் என்றும் தீமைக்கும் மற்றும் செய்யப்படும் பாவங்களின் அளவிற்கும் மூலக்காரணர் அல்ல. மேலும், அவருடைய ஞானமும், வல்லமையும் அந்தத் தீமைகளின் பலன்களை நன்மைக்கு ஏதுவாக மாற்றுகிறது. எடுத்துக்காட்டாக, தேவன் சாத்தானை பாவம் செய்ய அனுப்பவில்லை. அவரை பரிசுத்தம், நேர்மை மற்றும் பூரணருமாக சிருஷ்டித்தார். மேலும், சுயாதீனத்தை விசேஷித்த ஆசீர்வாதமாகக் கொடுத்திருந்தார். இவைகளை அவர் தேவனுடைய தெய்வீகத் திட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்தினதால், பரிசுத்தமாக இருந்த தூதன், சாத்தானாகவும் - தேவனுக்கு எதிராளியாகவும் மாறினான். உடனடியாக அவனை அழிக்க தேவன் வல்லவராக இருந்தார். ஆனால் இதை அனுமதிப்பதின் மூலம் வரும் தீமையான அனுபவங்களின் அநேகப் பாடங்களைத் தூதர்களுக்கு மட்டும் அல்ல மனிதர்களுக்கும் உள்ளடக்கியிருப்பதை அவர் முன்னறிந்திருந்தார். அதுபோல் மனுக்குலத்தின் மத்தியில் உள்ள பாவத்தை - தேவன் எந்த நேரத்திலும் அகற்ற வல்லவராக இருந்தும், காலப்போக்கில் அவர் அதை செய்து கொண்டிருக்கிறார். ஆனால் அவருடைய அனந்த ஞானத்தினால், மனுஷனுடைய கோபம், தேவனுடைய மகிமையை விளங்கப்பண்ணும் என்று அவர் முன் அறிந்திருந்தார். ஆகவே பாவிகள் மற்றும் பாவத்தின் மேல் தேவனுடைய இறுதியான எச்சரிப்பைக் குறித்து தேவனுடைய பிள்ளைகள் பயப்படவேண்டிய அவசியமில்லை. தேவனுடைய திட்டத்தில், தீமையை அனுமதித்ததின் இரகசியத்தை வெளிப்படுத்தும் காலம், வெகு சமீபத்திலிருப்பதினால், பாவத்திற்கும், பாவிகளுக்கும் மிகுந்த செழிப்பாக இருக்கக்கூடிய காலம் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. இவர்கள் தேவனுக்கு எதிராக செயல்படும் காரியங்களில் தீவிரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள்.

18. விசுவாசத்தின் தற்போதைய வெகுமதிகள் என்ன?

1கொரி 2:9-10

F689(P2) - F692: - தேவனுடைய பெயரிலுள்ள அர்த்தத்தின்படி தேவன் இருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கிறோம். அவர் சுயமாக வாழ்ந்து, முழு வல்லமை, முழு ஞானம், முழு நீதி மற்றும் முழு அன்பு செலுத்தும் நம்முடைய சிருஷ்டிகராக இருக்கிறார். விடாமுயற்சியோடு அவரைத் தேடுபவர்களுக்கு அவர் பரிசளிப்பார் என்று விசுவாசித்தோமானால், நிச்சயமாக அதை பெற்றுக்கொள்வோம். அவருடைய வார்த்தைகளை அறிந்து, புரிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாக, அவைகளைத் தேடி புரிந்துகொண்டால், அதில் நாம் நம்பிக்கை கொள்ளலாம். நம்முடைய வாழ்க்கையை அதின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம். இப்படிப்பட்ட விசுவாசத்தின் துவக்கமானது, தெய்வீக இரக்கத்தின் கீழ் கிறிஸ்துவை நோக்கி செல்லும் பொழுது, தேவனிடத்தில் நாம் திரும்பி, மறுபடியும் அவருடைய இரக்கங்களைப் பெற்று அவருடன் ஐக்கியப்படும் புதிய வழியை நமக்கு ஆயத்தப்படுத்தும். இந்த விசுவாசத்தோடு, கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளும் பட்சத்தில், நமக்குள் கீழ்ப்படிதல் அதிகரித்து, அதற்குத்தக்கதான ஆசீர்வாதங்கள் நம்மை வந்து சேரும். அப்போது நாம் புது சிருஷ்டிகளாக அங்கீகரிக்கப்படும் காரியங்கள் உறுதிப்படுகிறது. வளர்ச்சியடையக்கூடிய இந்த விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தங்களை உறுதியாகப் பற்றிக்கொண்டு, - தேவனுக்குச் சுதந்தரவாளிகளாகவும், இரட்சகரகாகிய கிறிஸ்துவுக்கு உடன்சுதந்திரவாளிகளாகவும் நம்மை மாற்றுகிறது. இதன் விளைவாக பரிசுத்த ஆவியின் மூலம் நாம் ஜெனிப்பிக்கப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு, குமாரர்களாக தத்தெடுக்கப்படுகிறோம்.

மேலும், இதன் வளர்ச்சியானது, பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள ஏழு விளக்குகளிலுள்ள வெளிச்சத்தைக் கண்டு, மகா ஆசாரியனுடைய விசேஷித்த ஊழியத்தை அறிந்துகொள்ள நமக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. அதில் உள்ள சமூகத்தப்பம், தூபப்பீடத்தின் நற்சுகந்தம் மற்றும் திரைக்கு அப்பால் உள்ள கிருபாசனம் நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் ஊழிய முறைமைகளை நமக்குக் காட்டுகிறது. கீழ்ப்படிதலோடுகூடிய விசுவாசமானது படிப்படியாக தேவனுடைய இரக்கங்களையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு, தெய்வீக வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டது போல உறுதிக்கு மேல் உறுதியடைந்து, தெளிவுக்கு மேல் தெளிவடைந்து, புதிய சிந்தைக்கு அடிப்படையான பகுதியாக அமைகிறது. மாம்ச சிந்தையிலிருக்கும் நிலையில் நாம் ஒருபோதும், வளர்ச்சியடைந்த இந்நிலையை புரிந்துகொள்ள முடியாது என்று அப்போஸ்தலர் தெளிவாக அறிவிக்கிறார் - "எழுதியிருக்கிறபடி - தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண்காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை." - 1கொரி 2:9

வாக்குத்தத்தத்தின் வார்த்தைகளின் மூலமாகவும், பரிசுத்த ஆவியின் செயல் முறைகளின் மூலமாகவும், பரலோகக் காரியங்களில் உள்ள அநேக விலைமதிப்பற்றவைகளையும், முதலாம் உயிர்த்தெழுதலில் அடையும் மகிமைகளையும் காணலாம். அதற்குப்பின் - இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது - பூமியில் உள்ள முழு குடும்பங்களுக்கும் ஆசீர்வாதங்களைக் கொண்டு வருவதற்கான நீதியுள்ள அரசாட்சி - பாவம் மற்றும் தேவனுடைய மகிமைக்கும், அவருடைய தெய்வீகத் திட்டமாகிய அன்புக்கும் இசைவாயிராத தனிப்பட்ட பாவிகளின் முற்றிலுமான அழிவு - போன்றவைகள் நடைபெறும். புது சிருஷ்டிகள் இவையனைத்தையும் விசுவாசத்தின் கண்களினால் காண்கிறார்கள். சராசரி மனுஷருக்கு தெளிவாகவும் விளக்கமாகவும் புரிந்துகொள்ள முடியாத காரியங்களை மிகத் தெளிவாக இவர்கள் கண்டு அறிந்துகொள்வார்கள் என்று அப்போஸ்தலர் உறுதியளிக்கிறார் - 1கொரி 2:9,10

பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட விசுவாசமானது, இதுவரைக்கும் புது சிருஷ்டிகளின் இன்றைய ஆசீர்வாதங்களைக் காணக்கூடியதாக இராமல், ஒவ்வொரு நம்பிக்கையும், மகிழ்ச்சியும் வரக்கூடிய மகிமையைக் குறித்தே இருக்கிறது. உண்மையில், அப்போஸ்தலர் விவரிப்பதுப்போல நம்முடைய அனைத்து சந்தோஷங்களும், நம்பிக்கைகளும் இதன் அடிப்படையில் மட்டுமே அமைந்துள்ளது. "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." இப்படியாக காணப்படாதவைகளைக் குறித்த தேவனுடைய வார்த்தைகளை நாம் விசுவாசிப்பதின் நிமித்தமாக அவைகளை நம்முடைய சிந்தையில் கண்டது போலத் தோன்றுகிறது. ஏனெனில், காணக்கூடியவைகள் அநித்தியமானது, காணக்கூடாதவைகள் நித்தியமானது என்று மிகத் தெளிவாக அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். ஆகவே விசுவாசத்தின் கண்களின் மூலமாகக் காணக்கூடியவைகள் மட்டுமே நித்தியமானது.

வரக்கூடிய ஆசீர்வாதங்களைப்பெற, இன்று விசுவாசத்தின் மூலம், பரிசுத்த ஆவியினால் நாம் பெற்று, தக்கவைத்திருக்கும் ஆசீர்வாதங்கள் எவ்வளவு அவசியமானது என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபும் குறிப்பிடுகிறார் - " ஒருவர் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." மேலும் - ".. சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்" என்று அடுத்த வசனத்தில் சொல்லுகிறார். ஏனெனில், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான் என்றும், அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினைத்துக்கொள்ள வேண்டாம். ஏனெனில், இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான் என்று யாக்கோபு மிகத் தெளிவாகக் கூறுகிறார் - யாக்கோபு 5:8 ஆகவே விசுவாசமில்லாமல், நாம் எதையும் மேற்கொள்ளவோ, சமாளிக்கவோ முடியாது என்று யாக்கோபு நமக்கு தெளிவாக எடுத்துக்காட்டுகிறார். ஆகவே ஒவ்வொரு தேவ ஜனங்களும் விசுவாசத்தில் வளர்ச்சியடைவதற்கு, அப்போஸ்தலர்கள் செய்தது போல, தேவனிடத்தில் ஜெபிக்கவேண்டும் என்று வேத வசனங்கள் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இந்த ஜெபம் கேட்கப்படும் விதத்தில் நாம் ஜெபிக்கவேண்டும். நம்முடைய ஜெபங்கள் கபடற்றதாக இருந்தால், நிச்சயமாக நாம் தேவனையும் அவருடைய வார்த்தைகளையும் தேடி, அவைகளுக்குக் கீழ்ப்படிபவர்களாகவும், அவருடைய பணியில் சந்தோஷப்படுபவர்களாகவும், சகல பரிசுத்த ஆவியின் கிருபைகளை அணிந்து கொள்ளக்கூடியவர்களாகவும் இருப்போம். இப்படியிருக்கும் பட்சத்தில் நாம் உறுதியான விசுவாசத்தைப் பெற்றிருப்போம். அந்த விசுவாசத்தின் மேல் முழு நம்பிக்கையுள்ளவராக இருப்போம். இவைகளைச் செய்தால் நாம் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், குறித்தக் காலத்தில் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும் - 11பேதுரு 1:10,11

F686(P3): -நாம் இருக்கும் எந்தச் சூழ்நிலையிலும், விசுவாசத்தின் வழியாக மகா பரிசுத்தமான விசுவாசத்தைப் பெற்று, தேவனுடைய பிரசன்னத்தில் பிரவேசிக்க, அவருடைய கிருபாசனத்தண்டையில் சேர்ந்து, கிருபை பெற்று, தேவைப்படும் நேரத்தில் உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

19. விசுவாசத்தினால் வருங்காலத்தில் நாம் பெறும் பயன் என்ன?

1யோவ 3:2, வெளி 2:10

F693 - F694 :- விசுவாசத்தின் கண்களும், காதுகளும் எந்த அளவிற்கு தெய்வீக வார்த்தைகளினால் பழக்குவிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவிற்கு புது சிருஷ்டிகள் வருங்காலத்து மகிமைகளைக் குறித்து அறிந்துகொண்டு பாராட்டமுடியும். சராசரி மனிதர்களும், முழுமையாக தங்களை அர்ப்பணிக்காதவர்களும் இவைகளைக் காணமுடியாது. வருங்கால ஆசீர்வாதங்களுக்கு அச்சாரமாக இன்று பெற்றுள்ள பரிசுத்த ஆவியை செயலாற்றி தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் வரைக்கும் இதை புரிந்துகொள்ள முடியாது. வருங்கால ஆசீர்வாதங்கள் வந்தடையும் நேரம் வரைக்கும், தேவன் பேரில் விசுவாசம் வைத்து, நீதிமானாக்கப்பட்ட நிலையில் - ஆசரிப்புக்கூடாரத்தில், லேவியர்கள் பிரகாரத்தில் தேவபணிகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தாலும், பரிசுத்த ஸ்தலத்தில் குத்துவிளக்கையோ, சமூகத்து அப்பங்களையோ பார்க்க அனுமதிக்கப்படாததுப்போல - இவர்களுக்கும் இந்த அறிவு அனுமதிக்கப்படுகிறதில்லை. பரிசுத்த ஸ்தலத்திலிருக்கும் குத்துவிளக்கின் வெளிச்சம், சமூகத்து அப்பங்கள், தூபப்பீடம் மற்றும் அவைகளில் உள்ள காரியங்களைக் குறித்து லேவியர்கள் ஒருபோதும் காண்பதில்லை. ஆனால் அந்த ஸ்தலத்திற்குள் நுழையும் ஆசாரியர்களிடமிருந்து இவைகளைப் பற்றிய காரியங்களை இவர்கள் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

இப்படிப்பட்ட இராஜரீகமான ஆசாரியர்களாகிய புது சிருஷ்டிகளுக்கு அவருடைய நிரூபத்தில் , அப்போஸ்தலனாகிய யோவான் - இக்காலத்தில் முழுமையான கிருபை, அறிவு, விசுவாசம் மற்றும் ஆவிக்குரிய பார்வையைப் பெற்றிருந்தாலும், மாம்சத்தில் இருக்கும்போது, வருங்காலத்து காரியங்களைத் தெளிவாக அறிந்துகொள்ளமுடியாது என்கிறார். ".. இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை, ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். "- 1யோவ 3:2 ஆகவே இவைகள் மனித கற்பனைக்கும் எட்டாத ஒன்றாக இருப்பதினால், தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய விசுவாசத்தின் மூலம் பெற்றிருக்கும் அறிவில்

திருப்தியடைந்திருக்கிறார்கள். எவ்வளவு விபரங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், இந்த மாம்சத்தை விட வருங்காலத்தில் பெறப்போகிற ஆசீர்வாதங்களும் மனித கற்பனைக்கு எட்டாதது என்று நிச்சயமாகத் தெரிகிறது. இந்த சபை தன்னுடைய ஆண்டவரைக் காணும்பொழுது, அவரை போலிருக்கும் என்று நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. அவர் மாம்சத்தில் வந்த நிலையையோ, உயிர்த்தெழுந்த பின் சீஷர்களுக்குக் காட்சியளித்த நிலையையோ இங்கு குறிப்பிடப்படாமல், இயேசு இப்பொழுது இருக்கும் நிலைக்கு சபையோடு மாற்றப்பட்டு மகிமையடைவார்கள் என்று தெளிவாக சொல்லப்படுகிறது. இதுவே நமக்கு போதுமானது.

ஆனாலும், நம்முடைய ஆண்டவர் அந்தத் திரையை ஓரளவுக்குத் திறந்தார் என்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஏனெனில், முதலாம் உயிர்த்தெழுதலின் விபரங்களைக் குறித்து ஒரு சுருக்கமான பார்வையை அப்போஸ்தலனாகிய பவுலின் மூலமாக தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் - 1கொரி15:41-44. அந்த அதிகாரம் முழுவதும், புது சிருஷ்டிகளுக்கு மிக ஆர்வமுள்ளதாக இருக்கிறது. முதலாம் உயிர்த்தெழுதலில் சபையாகிய சிறு மந்தை, ராஜரீகமான ஆசாரியர்களாக, பூரணப்பட்டு, கர்த்தரின் சந்தோஷத்திற்குள் பிரவேசிப்பதற்கு மட்டும் அல்லாமல் இந்த உலகத்தில் வருங்கால நம்பிக்கைகளைக் குறித்தக் காரியங்களை விவரிப்பதினால் இந்த அதிகாரம் மிக சுவாரசியமாக இருக்கிறது. உண்மையில், பவுல் பரிசுத்தவான்களுக்கு மட்டுமே இந்த நிரூபத்தை எழுதினாலும், உலகத்தினைக் குறித்தும் எழுதியிருக்கிறார் ஏனெனில், இரண்டு உயிர்த்தெழுதலும் ஒரே விதமாக இருக்குமோ என்று வாசிக்கக்கூடியவர்கள் குழப்பமடையாதபடிக்கு அவர் உலகத்தில் உயிர்த்தெழுதலைக் குறித்தும் எழுதினார். இதினிமித்தமாக, தேவன் சபை ஜனங்களுக்கு பரலோகத்தில் விசேஷித்த ஆவிக்குரிய நிலையை வைத்திருக்கிறார். அதற்குப்பின் பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் வெளிப்பட்டு, பொதுவான உலக ஜனங்களுக்கு கொடுக்கப்படும். முதலாம் உயிர்த்தெழுதலுக்கும் (முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாக சபை ஜனங்கள் உயிர்த்தெழுவார்கள் - வெளி 20:6), இரண்டாம் உயிர்த்தெழுதலுக்கும் (அதற்கு பின்னாக, தேவனுடைய கிருபையை ஏற்றுகொள்ளும் மீதியிருக்கும் அனைத்து ஜனங்களும் உயிர்த்தெழுப்பபடுவர்) இடையில் இப்படிப்பட்ட வேறுபாடுகள் இருப்பதினால் இரண்டு உயிர்த்தெழுதலைப் பற்றி இந்தப் பாடத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க அப்போஸ்தலனாகிய பவுலை போல் பிரசங்கிக்க ஆலோசனை அளிக்கப்படுகிறது.

20. விசுவாசத்தில் இளைப்பாறுதல் என்பதன் பொருள் என்ன?

எபி 4:1-11

F392 - F394 : -புது சிருஷ்டிகளின் உறுப்பினர்கள் எப்பொழுது அல்லது எவ்வாறு விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள் என்று குறிப்பிடுவது அவசியமில்லை. ஆனால், எல்லா அதிருப்திகளும், பயமும் விரட்டப்பட்டு, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் அவர்களுடைய இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொண்டது எப்படி அல்லது எப்பொழுது என்று நாம் அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய பாவங்களை மூட, ஆண்டவராம் இயேசுவை நம்முடைய பிரதான ஆசாரியராக, தன்னையே பலியாக ஒப்புக்கொடுத்தார் என்று நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ளும்பொழுது, இது துவங்குகிறது. மேலும் புது சிருஷ்டியின் தலையாகவும், ஆபிரகாமின் வாக்குத்தத்தங்களுக்குச் சுதந்தரவாளியாகவும், நாம் அவரை அடையாளம் கண்டிருக்கிறோம். அதுவும் அல்லாமல், அவருடைய ஆசீர்வதிக்கப்பட்ட இராஜ்யத்தில், அவருடைய உடன் சுதந்திரவாளிகளாக நம்மையும் தேவன் அழைத்திருக்கிறார். நாம் நம்மையே முழுமையாக ஒப்புக்கொடுத்து, இடுக்கமான வாசல் வழியாக மகிழ்ச்சியோடு அவர் நமக்கு வாக்களித்த வழிநடத்துதலோடு, அந்த இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது, நாம் பரிபூரணமான இளைபாறுதல், அல்லது ஓய்வுக்குள் பிரவேசிக்கிறோம். அங்கு, நம்முடைய சொந்த வேலைகளிலிருந்து ஓய்ந்திருப்போம். நாம் நீதிமானாக்கப்படவேண்டும் என்ற நம்முடைய எல்லா முயற்சிகளிலும், நாம் தேவனுடைய கிருபைகளைப் பெறுவதற்கு அபூரணமானவர்களும், தகுதியற்றவர்களும் என்று நாம் அறிக்கையிடுகிறோம். மேலும், நாம் நம்மை தகுதிப்படுத்திக் கொள்வதற்கும் அபாத்திரராக இருக்கிறோம். ஆனால், கிறிஸ்து இயேசுவின் இரட்சிப்பின் மூலமும் "தேவைப்படும் ஒவ்வொரு பொழுதும் உதவிகளைச் செய்வேன்" என்ற அவருடைய வாக்குறுதியின் நிமித்தமாகவும் நாம் அந்தத் தெய்வீகக் கிருபையைப் பெற்று இயேசுவின் சீஷர்களாக - அவருடைய அடிச்சுவடுகளில் மரண பரியந்தம் நடக்க வாய்ப்பு பெற்றிருக்கிறோம்.

தேவன் அவருடைய கிரியைகளிலிருந்து ஓய்ந்திருப்பதுப்போல, நாமும் ஓய்ந்திருக்கிறோம் என்று அப்போஸ்தலர் பிரகடனப்படுத்துகிறார். மனிதனை தன்னுடைய சாயலாக சிருஷ்டித்து, தன்னுடைய சிருஷ்டிப்பின் வேலைகளை முடித்தபின் அவர் ஓய்ந்திருக்கிறார் என்று நாம் அறிந்திருக்கிறோம். அவர் தம்முடைய பூரணமான சிருஷ்டிப்பை பாழ்ப்படுத்துவதற்கு - பாவத்தையும், மரணத்தையும் அனுமதித்திருக்கிறார். அவர் இந்நேரம் வரைக்கும் அதை தடுக்கவோ, இதை செய்யக்கூடிய மிகப் பெரிய வஞ்சகனாகிய சாத்தானைத் தடுக்கவோ அல்லது முற்றிலுமாக அழிக்கவோ அவர் முயலவில்லை. தேவன் ஓய்ந்திருக்கிறார் - எல்லா வேலைகளையும் மேசியாவின் பொறுப்பில் கொடுத்துவிட்டு, அவர் அதை முடிப்பதற்குக் காத்திருக்கிறார். கிறிஸ்து தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர் என்றும், தேவனுடைய வேலைகளுக்கு (புது சிருஷ்டிகளாகிய நமக்கு மட்டும் அல்லாமல், அவருடைய தெய்வீக கிருபையை ஏற்றுக்கொள்ளும் - முழு உலகத்தின் மனுக்குலத்தையும் சீர் பொருந்தச் செய்வார்) முழுமையாக அவர் ஒப்புக்கொடுத்திருக்கிறார் என்றும், நாம் தெளிவாக விசுவாசிப்பதன் மூலம் தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறோம்.

புது சிருஷ்டிகளாகிய நம்முடைய ஓய்வு துவங்கிவிட்டது என்று நாம் தெளிவாக அறிந்திருக்கிறோம். ஆனால், முழுமையாக புது சிருஷ்டிகளின் இந்த இளைப்பாறுதலின் துவக்கத்தை நாம் சற்று பின்நோக்கிப் பார்த்தால் இன்று நமக்கு இலாபகரமாக இருக்கும். ஆண்டவர் மாம்சத்திலிருந்தப்பொழுது, அப்போஸ்தலர்கள் ஓரளவுக்கு அந்த இளைப்பாறுதலில் மகிழ்ந்தார்கள் என்று நாம் அறிவோம். ஆனால் அது முழுமையான ஓய்வு அல்ல. அவருடைய அன்பின் ஆழம், உயரம், அகலம் நீளம் இன்னதென்றும் அவர்கள் முழுமையாக அறியாத போதிலும், தங்களுடைய மணவாளன் தங்களோடிருந்ததினால் அவர்கள் சந்தோஷமாக இருந்தார்கள். ஆண்டவர் மரித்துப்போன பொழுது, அவர்களின் இளைப்பாறுதலும், சந்தோஷமும், சமாதானமும் முடிவுக்கு வந்தது. "அவரே இஸ்ரயேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்..." என்று அவர்கள் எதிர்பார்த்ததினால், அவர்கள் அனைவரும் ஏமாற்றமடைந்தார்கள். அவர் மரணத்திலிருந்து எழுந்து, உயிர்த்தெழுதலை நிரூபித்தபின் அவர்களின் பயமும், சந்தேகங்களும் தளர்ந்து நம்பிக்கைக்கு வழி வகுத்தது. ஆனாலும், அவர்களின் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் முழுமையாக அவர்கள் திரும்பப் பெறவில்லை. அவர்கள் மிகுந்த குழப்பத்திலிருந்தார்கள். எப்படியிருந்தாலும், பரிசுத்த ஆவியைப் பெறும்வரை எருசலேமில் காத்திருக்கும்படி கட்டளைப் பெற்றிருந்தார்கள்.

மிகுந்த எதிர்பார்ப்போடு காத்திருந்தார்கள் - எவ்வளவு நாட்கள் ? அவர்கள் மொத்தத்தில் நாற்பத்தொன்பது நாட்கள் காத்திருந்தார்கள். அதை தொடர்ந்து ஐம்பதாவது நாள் வந்தது.அது யூபிலியின் ஓய்வு நாளாயிருந்தது. இயேசுவை ஏற்றுக்கொண்ட அனைவரும், தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதற்கான ஒரு கிருபையின் வாக்குத்தத்தத்தைப் பூரணமாக தேவன் அன்று நிறைவேற்றினார். அவர்கள் பெந்தகொஸ்தே நாளின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு அவருடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். இயேசு பாவிகளுக்காக மரித்து, அவர்களுடைய கண்களுக்கு மறைவாக அவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டாலும், அவருடைய பலி அனைவருடைய பாவங்களுக்குப் பதிலாக யேகோவா தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர் செய்த கிரியைகளிலிருந்து ஓய்ந்திருந்தார். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் அவருக்குள்ளும், அவர் மூலமாயும் நிறைவேற்றப்படும் என்பதை இந்த இளைப்பாறுதல் உறுதியளித்தது. இந்த இளைப்பாறுதல், பாவமன்னிப்பைப் பெறவும், தேவனோடு ஐக்கியப்படுவதற்கும் உறுதியளிக்கிறது. மேலும், இவர்களின் ஒப்பந்தத்தில் இவர்கள் உண்மையானவர்களாக நிலைத்திருந்து, கிறிஸ்துவின் வழிகளில் காத்து நடந்து, தெய்வீக சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து, தங்களுடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும், உறுதிப்படுத்திக்கொண்டால் அவர்களின் இருதயம் பூரணமாக சுத்திகரிக்கப்படும். அப்பொழுது, கிறிஸ்துவுக்குள் வாக்களிக்கப்பட்ட விலைமதிப்பற்ற வாக்குத்தத்தங்களும், ஆசீர்வாதங்களும் சுதந்தரித்து, மகிமையான ஒரு பங்கை அடைவார்கள் என்றும் இது உறுதியளிக்கிறது.

பரிசுத்த ஆவியைப்பெற்ற புது சிருஷ்டிகள் அனைவரும், நிழலான இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். இவர்கள் ஏழாம் நாள் ஓய்ந்திருப்பதை விட்டுவிட்டு, நிரந்தரமாக தங்களுடைய இருதயத்திலும், சிந்தையிலும், தேவனுடைய குமாரனுக்குள் விசுவாசத்தில் இளைப்பாறுகிறார்கள். விசுவாசத்திற்குள் இளைப்பாறுதல் ஒரு முடிவல்ல. மேலும், இது ஒரு மேன்மையான இளைப்பாறுதல் அல்ல. அவர்களுடைய ஓட்டத்தை சந்தோஷத்தோடு ஓடி முடித்த தேவனுடைய ஜனங்களுக்கான நிஜமான இளைப்பாறுதல் முடிவுக்கு வரும். இதற்கிடையில் விசுவாசத்தின் இளைப்பாறுதல் தொடரவேண்டியதாக

இருக்கிறது. ஏனெனில், இனி இருக்கும் இளைப்பாறுதலுக்கான நம்பிக்கை இதுவே. இதை தக்கவைப்பதற்கு நம்முடைய சிந்தையிலும், வார்த்தைகளிலும், கிரியைகளிலும், தேவனுடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்தால் மட்டும் போதாது அவருடைய கிருபையின் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். அப்பொழுது நாம் அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க - அவருக்குள்ளும், அவருடைய வல்லமைக்குள்ளும் உறுதியாக நிலைத்திருப்போம். நாம் ஜெயிக்கக்கூடியவர்களாக ஊக்குவிக்க அவர் சித்தம் கொண்டிருக்கிறார் என்றும் நிஜமான யூபிலியில் நடக்கவிருக்கும் மகத்தான வேலைகளில் ஒரு பங்கைப்பெற நம்முடைய இளைப்பாறுதலும், நம்பிக்கையுமாக இருக்கவேண்டும்.

R1841 -"கானானுக்குள் பயணித்தல்"

இஸ்ரயேலின் நிழலான குணங்கள் இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். முதலாம் பகுதி ஆசரிப்புக்கூடாரத்தின் பணிகளில், முழு இஸ்ரயேல் பாளையம் இந்த உலகத்தையும், அதில் ஆசாரியத்துவம் ஆரோனையும் அவருடைய குமாரரையும், அதில் செலுத்தப்பட்ட பலிகள், நம்முடைய ஆண்டவராம் இயேசுவையும், அவருடைய சபையையும் அடையாளப்படுத்தக்கூடியதாக இருக்கிறது. இரண்டாவது பகுதியில் தெரிந்துக் கொள்ளப்பட்ட முழு இஸ்ரயேல் ஜனங்கள், சுவிசேஷ யுகத்தில் தேர்வு செய்யப்பட்ட தேவ ஜனங்களையும், அவர்களுடைய பிரயாணத்தில் - தெய்வீக வழிநடத்துதல், பாவத்தின் கட்டுகளிலிருந்து ஆசீர்வதிக்கப்பட்ட கானானுக்குள் கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தின் நிமித்தம் நீதிமானாக்கப்பட்ட நிலையில் பயணிப்பதை அடையாளப்படுத்துகிறது. யோர்தான் என்னும் மரணத்தைக் கடந்து, இன்னும் மகிமையான இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்து, நித்தியமாக பாவமும், மரணமும் இல்லாத பரலோகக் கானானுக்குள் சென்றடைவார்கள்.

இரண்டாவது பகுதிக்கான விளக்கத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எபிரேயர்களுக்கு எழுதின நிரூபத்தில் குறிப்பிடுகிறார். (3:8 -19, 4:1-2) இங்கு, எகிப்திலிருந்து கானானுக்குள் பயணித்த மாம்ச இஸ்ரயேலருக்கு நடந்த காரியங்களை மாதிரியாகக் கொண்டு, பரலோக கானானை அடையமுடியாத சபை மக்களை எச்சரிக்கிறார். அங்கு புறப்பட்ட அனைத்து ஜனங்களின் கீழ்ப்படியாமையினால், கானானுக்குள் பிரவேசிக்க தகுதி இழந்தவர்களாக வனாந்திரத்தில் மரித்துபோனார்கள் என்ற உண்மையை அவர் சுட்டிக்காட்டினார். இவர்களின் அவிசுவாசத்தினாலே, தேவனுடைய வழிகளை விட்டுவிட்டார்கள். தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலுக்கு எதிராக இவர்கள் முறுமுறுத்ததினாலே இவர்களின் பிரேதம் வனாந்தரத்தில் விழுந்தது. கடைசியாக -"சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்."(எபி 4:3) என்று அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை எச்சரிக்கிறார்.

பரலோகக் கானான், மாம்சத்தின் திரைக்கு அப்பால் இருக்கும் மகிமையான ஆவிக்குரிய நிலையாகிய தேவனுடைய ஜனங்களுக்கான இறுதியான இளைப்பாறுதலைக் குறித்துப் பேசும்பொழுது, நித்தியமான இளைப்பாறுதல் கிடைப்பதற்கு முன் இந்த மாம்சத்தில் தேவனுடைய ஜனங்கள் பெறும் இளைப்பாறுதலைப்பற்றியும் பேசுகிறார். இதுவே - விசுவாசத்தின் இளைப்பாறுதல் - "விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்..." (எபி 4:3)

இந்த நிழலான காரியத்தில், நமக்குக் கொடுக்கப்படும் ஆசீர்வாதங்களைப்பற்றியும், வாய்ப்புகளைப்பற்றியும், ஆவிக்குரிய தேவனுடைய இஸ்ரயேலர்களின் மேன்மையான ஆவிக்குரிய பொறுப்புகளையும் மிகத் தெளிவாக ஆராயலாம். ஏனெனில், கானானுக்குள் பிரவேசிக்கும் நம்பிக்கையுள்ளவர்கள் இன்று நிச்சயமாக விசுவாசத்தில் இளைப்பாறிக்கொண்டிருக்கிறார்கள். (4:3) நம்முடைய பயணத்தைப் பொறுத்தவரையில், தேவனுடைய ஜனங்களுக்கான இளைப்பாறுதல் (4:1), துல்லியமாக அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லியபடி வனாந்தர பிரயாணத்தையும், அதில் தேவனுடைய தெய்வீக வழிநடத்துதலையும் குறிக்கிறது. சற்று யோசித்துப் பாருங்கள், 400 வருடங்கள் அடிமைகளாக இருந்த, ஆயிரக்கணக்கான புருஷர்களும், ஸ்திரீகளும், பிள்ளைகளும் சில நாட்களுக்குள்ளே இந்தப் பிரயாணத்தை மேற்கொள்ள ஆயத்தப்பட்டார்கள். ஆனால் இவர்கள் மிகக் குறைவான சௌகரியங்களோடு, வனாந்தரத்தில், அறியாத பாதையில், முற்பிதாக்களுக்கு வாக்களிக்கப்பட்ட தேசத்தை நோக்கி தொடர்ந்தார்கள். அவர்களை அநேக தேசங்கள் பகைத்தது. வழியில் அநேக வசதியின்மைகளையும், அபாயங்களையும் சந்திக்கவேண்டியதாக இருந்தது. இவ்வளவு காரியங்கள் இருந்தும் அவர்கள் பயப்படவேண்டிய அவசியமில்லாதிருந்தது, ஏனெனில் பரலோகத்தின் தேவன் அவர்களுக்கு முன் சென்று அவர்களை வழிநடத்துவதாக வாக்களித்திருந்தார்.

அதைப்போல் சபைக்கும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. உண்மையான சபை - உலகத்தை விட்டு பிரிந்து, தெய்வீக பாதுகாப்பும், வழிநடத்துதலின் கீழ் - வனாந்தரப்பிரயாணம் செய்த இஸ்ரயேல் ஜனங்களைப் போலிருக்கிறார்கள். (வெளி12:6,14, லூக் 15:4, ஓசி 2:14, ஏசா 51:3, உன் 8:5) இதில் அநேகவிதமான ஆவிக்குரிய வளர்ச்சிகள் காணப்படுகிறது. அதில் கிறிஸ்துவுக்கு குழந்தைகளும், அந்த நிலையிலிருந்து வளர்ச்சியடைக்கூடியவர்களும் இருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் தேவன் இந்தத் தீமை நிறைந்த உலகமாகிய வனாந்தரத்தில் நடத்தி வருகிறார். அவரே நமக்குக் கேடகமும், நம்முடைய வழிகாட்டியும், மகிமையும், பாதுகாப்புமாயிருக்கிறார். நாம் அவரிடத்தில் விசுவாசத்தோடு, அவர் காட்டும் வழியில் நடக்கவேண்டும். நம்முடைய அப்பமும், தண்ணீரும் நமக்கு நிச்சயம் கொடுக்கப்படும். அவர் நம் மத்தியில் இருக்கிறார் என்ற மகிழ்ச்சி நமக்குப்போதும். அப்பொழுது நமக்கு வாக்களித்த சுதந்தரத்தை தேவன் நமக்கு கையளிப்பார். அவிசுவாசத்தினால் மாம்ச இஸ்ரயேலர்கள் வனாந்தரத்தில் விழுந்ததுப்போல நாமும் விழாதபடிக்கு அவருடைய வழிநடத்துதலுக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்.

இந்த நிழலைப்பற்றி மீண்டும் குறிப்பிடுகையில், அன்று தேவன் தம்முடைய ஜனங்களை வழிநடத்திய விதத்தில் நம்மையும் வழிநடத்துகிறார் என்று நம்முடைய சொந்த அனுபவங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தெரிகிறது. அவர் நமக்கு அநேக அனுபவங்களின் மூலமாக வழிநடத்தும் பொழுது, நாம் ஒழுக்கத்தைக் கற்றுக்கொண்டு, அதன் மூலமாக கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய குணங்கள் வளர்ச்சியடைகிறது. இதற்கு விசுவாசத்தோடு தன்னை ஒப்புக்கொடுப்பவர்கள் வாக்களிக்கப்பட்டதைப் பெற்றுக் கொள்வார்கள், மற்றவர்கள் அபாத்திரராக போய்விடுவார்கள். நாமும் அபாத்திரராக போய்விடாதப்படி நாம் பெறும் அனுபவங்கள் எப்படியிருந்தாலும் சரி, அவைகளை தாழ்மையோடும், பொறுமையோடும், ஏற்றுக்கொண்டு, ஒழுக்கத்தையும், தேவனுடைய பிரமாணங்களையும் கற்றுக்கொண்டு, ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதிபடுத்திக்கொள்வோம் - (கொலொ1:12)

R2534 (col- 2P1) :-

மாம்ச இஸ்ரயேலுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட சீனாய் மலையின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆவிக்குரிய இஸ்ரயேல் ஜனங்கள் இல்லாவிட்டாலும், அதில் சொல்லப்பட்ட ஓய்வு நாள் அவருடைய ஓய்வு நாள் அல்ல. அவருடைய ஓய்வு நாள் யூத ஓய்வு நாளைவிட பெரியதும், முழுமையானதும், பூரணமானதுமாக இருக்கிறது. ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் விசுவாசத்தில் ஓய்ந்திருக்கிறார்கள் - கிறிஸ்துவுக்குள் ஓய்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஆண்டவரின் நுகத்தை கழுத்தில் வைத்தவுடன், அவருடைய வாக்குத்தத்தங்களையும், அவர்களின் ஆத்துமாக்களின் இளைப்பாறுதலையும் உணரலாம். (மத் 11:29) இதை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எபிரெயர் 4:3ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். "விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம்." நாம் அவரை முழுமையாக நம்புவதுபோல நாம் அவருக்குள் முழுமையாக இளைப்பாறுகிறோம். முழுமையாக விசுவாசிப்பவன், முழுமையாக இளைப்பாறுகிறான். குறைவாக விசுவாசிப்பவன், குறைவாக இளைப்பாறுகிறான். ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் இறுதி இலக்கு - இன்று நாம் பெறும் அனுபவங்களின் மூலமும், முழுமையான இளைப்பாறுதலுக்காகக் காத்திருந்து, பூரணமாக அதை பெறுவதாகும். பூரணமான நிலையுள்ள இளைப்பாறுதல், தேவனுடைய ஜனங்களுக்கு இனி வருவதாக இருக்கிறது. "ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. ... ஆகையால், அந்த திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்து போகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்."-எபி 4:9-11

21. விசுவாசம் மற்றும் நம்பிக்கையில் பூரண நிச்சயம் என்பதற்கான விளக்கம் என்ன?

எபி 10:22 - துர்மனசாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்.

எபி 6:11- நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து.....

விசுவாசத்தின் முழு நிச்சயமும், நம்பிக்கையின் முழு நிச்சயமும், சரியான நிலையில் உள்ள ஆண்டவரின் ஜனங்களுக்குரியதாக இருக்கிறது என்று பரிசுத்தவானாகிய பவுல் குறிப்பிடுகிறார். இதே கருத்தை நம்முடைய தீர்க்கதரிசியும் குறிப்பிட்டிருக்கிறார் - "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி..." - பிலி 1:5. இதை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, சில கிறிஸ்தவர்கள் இந்த விசுவாசத்தின் நிச்சயம் முழுமையாக அவர்களிடம் உள்ளதாக நம்புவது எப்படி ? சந்தேகமில்லாமல், என்னுடைய வாழ்க்கை முழுவதும் அவருடைய கிருபையும், நன்மையும் என்னைத் தொடரும் என்றும், இறுதியில் தேவனுடைய கிருபையால் பரலோக இராஜ்யத்தில் பிரவேசித்து, அவரை நேசிப்பவர்கள் தேவன் தரவிருக்கும் மகிமையைப் பெற்றுக்கொள்வோம் என்று எப்படிக் கூறுகிறார்கள் ? இவ்வண்ணமாகக் கோரும் அப்போஸ்தலரும், தீர்க்கதரிசியும், தேவனுடைய இரக்கத்தை முழுமையாகப் பெற்று, மற்றவர்கள் பெற்றிராத அளவுக்கு மிகுந்த சந்தோஷத்தையும், ஆசீர்வாதங்களையும், இருதயத்திற்குள் மேலான அமைதியையும் பெற்றிருக்கிறார்கள். இப்படியாக, விசுவாசத்தின் இளைப்பாறுதலுக்குள் எண்ணிக்கையில் குறைவானர்வர்கள் மட்டுமே பிரவேசித்திருப்பதின் காரணம் என்ன என்று நாம் ஆராய்ந்து பார்ப்போம். இந்த இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க மற்றவர்களுக்கு இருக்கும் தடைகள் என்னவென்றும், அவைகளை நீக்க என்ன செய்யவேண்டும் என்றும் அதற்குள் அநேகர் பிரவேசித்து வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகளைப்பற்றி சற்று தியானிப்போம்.

22. விசுவாசத்தின் முழு நிச்சயத்தை நாம் பெற்றுக்கொண்டு அதை எப்படி தக்கவைத்து கொள்வது?

R2353: - (போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்)

நம்முடைய காரியம் எதுவானாலும் சரி, மேலே சொல்லப்பட்டக் கோட்பாடுகள், சகலத்திற்கும் நேர்த்தியாகப் பொருந்துகிறது. தேவனுடன் உடன்படிக்கை செய்த ஜனங்களைப் பொறுத்த வரையில், விசுவாசத்தின் பாடமானது, சத்தியம், போதனைகள் மற்றும் உபதேசங்களின் மேல் விசுவாசமாக இருந்தால் மட்டும் போதாது, தேவன் மேலும், அவர் சொல்லிய வாக்குறுதிகளை அவர் நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார் என்றும், முழு நம்பிக்கையோடிருக்க வேண்டும். இந்த விசுவாசம் வருங்காலத்திற்கு மட்டும் அல்லாமல் நிகழ்காலத்திற்கும் பொருந்துவதாக இருக்கிறது. இப்படிப்பட்ட விசுவாசம் வரக்கூடிய மகிமையான காரியங்களைக் குறித்து மட்டும் சந்தோஷப்படாமல், தேவனுடைய கண்ணோட்டத்தில் மிகச்சரியாக தோன்றினதும், இப்பொழுது நமக்கு அனுமதிக்கப்பட்ட சகல பாடுகளிலும், சோதனைகளிலும், கஷ்டங்களிலும் களிக்கூருவதாக இருக்கும். ஆகவே அப்போஸ்தலர்கள் சொன்னபடி எல்லாவற்றிலும் மகிழ்ச்சியாக இருப்போம். "சகலத்திற்காகவும் தேவனை ஸ்தோத்தரியுங்கள்" - 1தெச 5:18, எபே 5:20

இந்த உண்மையான விசுவாசத்திற்கு, தொடர்ந்து தேவன் மேல் நம்பிக்கையாயிருப்பதே தகுந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. நம்முடைய ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசுவின் அனுபவங்களில் இதை நாம் காணலாம். இந்த உலகத்தில் அவர் தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றினார் என்பதை உணர்ந்தவராய், அவருடைய சகல காரியங்களிலும், தெய்வீக ஞானத்தால் வழிநடத்தப்பட்டார் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் தன்னுடைய பிதாவினிடத்தில் ஜெபிக்கும்பொழுதும், அவர் பெற்ற ஒவ்வொரு அனுபவத்தின் போதும், அநேக எதிர்ப்புகளை அவர் சந்தித்தப் போதும், அவர் தெய்வீக வழிநடத்துதலின் கீழ் இருந்ததை உணர்ந்தார். அவர் தன்னை முழுமையாக பிதாவினிடம் ஒப்புக்கொடுத்ததை அறிந்து, தன்னுடைய சித்தத்தை அல்ல, அவருடைய சித்தத்தை செய்யவே காத்திருந்தார். ஆகவே எல்லா சூழ்நிலைகளிலும், பிதாவாகிய தேவனின் வழிநடத்துதலை அவர் உணர்ந்திருந்தார்.

பிலாத்து நம்முடைய ஆண்டவருக்குப் பதில் அளிக்கையில் இந்த ஒரு காரியம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது - "...பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது..." மேலும், அவருடைய பாடுகளை மற்றும் உபத்திரவங்களைக் குறித்து அவர் பேசுகையில் - "பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார்".

உண்மையில், எல்லா காரியங்களிலும் பிதா தன்னை வழிநடத்துகிறார் என்பதை அவர் அறிந்திருந்தார் - அவர் சகலவிதமான துன்பங்களையும், பாடுகளையும் சகிக்க இந்த உணர்வே அவருக்குத் தைரியம் கொடுத்தது.

நம்மை நேசித்து, நமக்காக மரித்த அவருக்குள் ஜெயிக்க விருப்பமுள்ள ஒவ்வொருவரும் அவரைப்போலவே, தெய்வீக வழிநடத்துதலின் மேல் நம்பிக்கையாய் இருப்பது மிக அவசியம். தேவனுடைய அழைப்பின்படி நாம் நம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்துவிட்டோம் என்பதில் நாம் உறுதியாக இருந்தால், நமக்கு சகலமும் நன்மைக்காக நேரிடுகிறது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலைகளையும், தேவன் நமக்கு ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதையும், அதில் நாம் பிரவேசித்து ஜெயிக்கும்பொழுது, நமக்காக ஆசீர்வாதங்களையும் வைத்திருக்கிறார் என்பதையும் நாம் உணரவேண்டும். - பிதாவின் பிரதிநிதியாகிய, நம்முடைய ஆண்டவராம் இயேசு, நாம் அனுபவிக்கும் சோதனைகளையும், பாடுகளையும் கண்காணித்து, இவ்வுலகத்தின் சாத்தானின் ஊழியக்காரர்கள் மூலம் நமக்கு அனைத்தையும் அனுமதிக்கிறார் என்பதையும் நாம் உணரவேண்டும். ஆகவே நம்முடைய எந்தவிதமான உலகக் காரியங்கள் நஷ்டமடைந்தாலும், அதை மகிழ்ச்சியோடே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அறிவை இதன் மூலம் பெறுகிறோம். ஆகவே நமக்கு இப்படிப்பட்ட சோதனைகளை ஏற்படுத்துபவர்களிடத்தில், அன்போடும், கனிவோடும், அவர்களை மன்னிக்கும் மனப்பக்குவத்தோடும் நடந்துக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும். ஒருவருக்கும் இப்படிப்பட்ட விசுவாசம் இருப்பதற்கு வாய்ப்பில்லை - இந்த உலகத்தைப் பொறுத்தவரையில் - ஒரு விசேஷித்த வகுப்பார் - சிறு மந்தைக்கு - மட்டுமே இந்த விசுவாசம் இருக்கவேண்டும். இவர்கள் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மேல் விசுவாசம் வைத்து, நீதிமான்களாகி, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக தங்களைப் பொருத்திக்கொண்டு, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவரோடு பாடுகளைச் சகித்து, அவரோடுகூட மகிமையடையக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

23. விசுவாசத்தின் உறுதியான அஸ்திபாரம் எது?

"நான் உங்களை கைவிடுவதே இல்லை" என்று தேவன் சொல்லிய வாக்கின் அடிப்படையில், "போதும் என்ற மனதோடுக்கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்" என்று அப்போஸ்தலன் வலியுறுத்திச் சொல்லிய காரியத்தை நம்முடைய பாடத்தின் ஒரு பகுதியாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆம், உண்மையில் தேவனுடைய பராமரிப்பையும், அவருடைய ஞானமும், கிருபையும் நம்மிடம் செயல்படுகிறதை உணரவேண்டும் என்பதே இதன் முக்கிய கருத்தாக இருக்கிறது - மேலும், நாம் நமக்காக தேர்வு செய்யும் காரியங்களைவிட தேவன் நமக்கு அனுமதிக்கிற காரியங்கள் சகலத்திலும் நேர்த்தியானதாக இருக்கிறது.

அப்போஸ்தலர் சொல்லும்பொழுது - "கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே" என்கிறார். தேவனுடைய தாழ்மையான ஜனங்களின் நுண்ணறிவுள்ள தைரியத்தைக் குறித்து, இந்த முழு உலகம் அநேக முறை ஆச்சரியப்பட்டிருக்கிறது. இவர்களின் தைரியத்திற்கும், பலத்திற்கும் காரணமாக இருப்பது - "தேவனே எங்கள் சகாயர்" என்றும், அவருடைய அனந்த ஞானத்தினாலும், அன்பினாலும், சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறார் என்றும், இவர்கள் தேவன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையே காரணமாக இருக்கிறது.

இந்தக் காரியங்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏன் கொடுக்கப்படுகிறது ? என்று சிலர் நினைக்கலாம். இதற்குப் பதிலாக ஆவியின் கனிகளாகிய அன்பு, மற்றும் இன்னும் பல காரியங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்திருக்கலாமே என்றும் நினைக்கலாம். ஆனால் இந்த பாடங்கள் இந்த காலத்திற்கு மிகப் பிரயோஜனமுள்ளதாக இருக்கும் என்று எண்ணி இதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்று பதில் அளிக்கலாம். நம்முடைய தேவன், நம்மேல் வைத்த கிருபையினால், அநேகக் குருட்டாட்டமான தவறுகளை நம்மை விட்டு அகற்றிவிட்டு அவருடைய மகிமையான திட்டங்களின் தெளிவான விவரங்களை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்று நாம் அறிவோம். இவர்கள் தேவனுடைய திட்டங்களை அறிந்துகொள்வதற்கு மட்டும் அல்லாமல், இந்தத் தெய்வீக சத்தியத்தினால், இவர்கள் மேலும் பரிசுத்தப்படுவதற்கு அவர் இவைகளை வெளிப்படுத்தி, "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்கடைய.." நம்மைத் தகுதிப்படுத்துகிறார். ஆகவே தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு வெறும் உபதேசங்களின் சோதனைகளை மட்டும் அனுமதிக்காமல், இந்த அறுவடையின் காலத்தில், சகோதரர்களின் ஆவியின் கனிகளின் அடிப்படையில் இவர்கள் மத்தியில் பிரிவுகள் ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

நீங்கள் என்னுடைய சில காரியங்களை அறிந்துகொள்ளவில்லை என்றால், நீங்கள் ஒருபோதும் என்னுடையவர்களாக இருக்க வாய்ப்பில்லை என்றும், என்னைப் பற்றிய அறிவு உங்களிடம் போதிய அளவு இல்லாததினால், நீங்கள் என்னுடையவர்களாக இருக்க வாய்ப்பில்லை என்றும் தேவன் அவருடைய முடிவை எங்குமே எப்பொழுதும் சொன்னதில்லை. ஆனால், "கிறிஸ்துவின் சிந்தை (ஆவி) இல்லாத எவனும் தேவனை உடையவன் அல்ல" நாம் இதில் தெளிவாக இருந்தால், சிலுவையின் போர்வீரர்களாக, இரட்சணியம் என்னும் தலைச்சீராவை அணிந்து, விசுவாசம் என்னும் மார்க்கவசத்தை தரித்து, அன்பு மற்றும் சத்தியத்தின் நீதியைத் தரித்து, அவர் காட்டியப் பாதையில் நடப்போம், அப்பொழுது இடது புறமாக ஆயிரம்பேரும், வலதுபுறமாக பத்தாயிரம்பேர்கள் விழுந்தாலும் தீங்கு நம்மை அ ணுகாது - சங் 91: 7, மத் 24:24, 11தெச 2:11

காலங்கள் சமீபித்திருப்பதால், இந்தப் பாடம் நமக்கு மிக முக்கியமானது என்று நம்பி, இதுவரைக்கும் இந்த ஆவியின் கனியை வளர்க்காமல் இருக்கும் தேவப் பிள்ளைகள், இந்தப் பாடத்திற்காக தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்து, தங்களுக்குள் விசுவாசத்தை வளர்த்து, தேவ இராஜ்யத்தில் நல்லதொரு பங்கைப் பெற "போதும் என்ற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்" என்ற வார்த்தைகளைப் பற்றிக்கொண்டு நடப்போம். ஒருவேளை நாம் இந்த உலகத்தின் ஆவியைப் பெற்றவர்களாக இருந்தால், வெகு சீக்கிரத்தில் மகா உபத்திரவத்தின் காலத்தைச் சந்திக்க வேண்டியதாக இருக்கும். போதும் என்ற மனமும், விசுவாசமும் தெய்வீகத்திற்கு மிக முக்கியமானது. இந்தக் குணங்கள் இல்லாமல் மற்ற ஆவியின் கனிகளை வளரச் செய்வது கூடாதக் காரியம். நம்முடைய இருதயத்தில் உலகத்தின் ஆவியினால் வளர்ந்திருக்கும் அதிருப்தி என்னும் களைகளும் நமக்குள் இருக்கும் பெலத்தையும், பக்தியையும் உறிஞ்சி விட்டு, அன்பு, சமாதானம், பொறுமை, சாந்தம், நீடிய பொறுமை, சகோதர அன்பு போன்ற குணங்களின் வளர்ச்சியைத் தடுத்து விடும்.

E229 - E230 : -

ஒரு மனுஷனின் சிந்தை அல்லது ஆவி அவனுடைய வார்த்தைகளினாலும், நடத்தைகளினாலும் அறியப்படும், அதை போல தேவனுடைய சிந்தையை அவருடைய வார்த்தைகளின் மூலம் அறிந்துகொள்ளலாம். இயேசுவின் மூலமாக தேவனிடத்தில் வரும் அனைவரையும் (தங்களுடைய துர்க்கிரியைகளிலிருந்தும், செத்தக்கிரியைகளை விட்டு மனந்திரும்பி, விசுவாசத்தின் மூலம் சீர்ப்பொருந்துபவர்களை) அவர் ஏற்றுக்கொள்வதாக அவர் வாக்குறுதிக்கொடுக்கிறார். (எபி 7:25) ஆகவே நமக்குள் எழவேண்டிய கேள்விகள் என்னவெனில் -

நான் எப்பொழுதுதாவது கிறிஸ்துவினிடமாய் இழுக்கப்பட்டேனா ? - அவரை நான் என்னுடைய இரட்சகராக அடையாளம் கண்டுக்கொண்டு, அவருடைய நீதியின் வழியாக பிதாவாகிய தேவனை சேர்ந்து, அவருக்கு ஏற்றவனாக இருக்கிறேனா ?

இதற்கான பதில் - ஆம் என்று இருக்கும் பட்சத்தில், நமக்குள் எழும் அடுத்தக்கேள்வி என்னவெனில் -

நான் என்னை முழுமையாக ஒப்புகொடுத்திருக்கிறேனா ? - என்னுடைய ஜீவன், நேரம், செல்வாக்கு மற்றும் அனைத்தும் தேவனுக்கு முழுமையாகக் கொடுக்கிறேனா ?

இந்தக் கேள்விக்கும் ஆம், என்ற பதிலைச் சொல்லுவோமானால், நிச்சயமாகத் தேவன் அவருடைய ஒரே பேறானவருக்குள் நம்மை ஏற்றுக்கொண்டு, நம்மை அவருடைய குமாரர்களாகப் பாவிக்கிறார். மேலும், நாம் அவருடைய இருதயத்தின் சிந்தையை கூர்ந்து கவனித்தால், அவர் இன்னும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் கவனமாக இருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட, கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய கிருபை நம்மை தாங்கும் பொழுது, நாம் பெறும் அனுபவங்களினால், தேவனுடைய வார்த்தைகளின் அடிப்படையில் நமக்குள் கட்டப்படக்கூடிய குணங்கள், ஒருபோதும் மாறாது. ஒருவேளை நம்முடைய இருண்ட காலங்களில், பயமும், சந்தேகமும் எதிர்ப்படும்பொழுது, நாம் தேவனுடைய வார்த்தையாகிய விளக்கை மட்டும் கையில் எடுத்து நம்முடைய இருதயம் தேவன் மேல் முழு விசுவாசத்தோடு இருக்கிறதா என்ற உண்மையை ஆராய்ந்து அறிந்துகொண்டால் போதும், நம்முடைய சந்தோஷமும், சமாதானமும் நம்மிடத்தில் வந்து சேரும். ஒரு வேளை "விலையேறப்பெற்ற இரத்தத்தின்" மேல் உள்ள விசுவாசம் தடுமாறுகையில், நாம் இதை உணர்ந்துக்கொண்டு, உடனடியாக அதை செப்பனிட்டு, மறுபடியுமாக நம்முடைய விசுவாசத்தை முழுமையாக ஸ்தாபிக்கக்கூடியவர்களாக இருக்கிறோம் (எபி 10:22) ஆனால் ஒவ்வொருவரும் -"... தேவன் சத்தியமுள்ளவரென்று முத்திரைப்போட்டு நிச்சயப்படுத்திக்கொள்ளவேண்டும்" (யோவ 3:33) ஏனெனில் நம்முடைய தேவன் நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர். தேவனுடைய ஜனங்கள் இந்த தெய்வீக கிருபையின் கீழ் வந்தபின் சமாதானமாக

இளைப்பாறலாம். தேவனிடம் முழு மனதோடு உண்மையாக இருந்து, அவர்களுடைய சித்தம் தேவனுடைய சித்தத்தோடு இசைந்து இருந்து, அவருடைய தெய்வீக கற்பனைகளைக் கைக்கொண்டு, கீழ்ப்படிதலோடிருக்கும் வரை நாம் சுகமாக இந்த விசுவாசத்திற்குள் இளைப்பாறலாம் - மொத்தத்தில் தேவனிடத்திலும், ஜனங்களிடத்திலும், அன்பாக இருக்கவேண்டும்.

இந்த சுவிசேஷ யுகத்தில் எவர் ஒருவர் தன்னை தேவனுடைய பிள்ளை என்று உணர்ந்து, தேவனுடைய வார்த்தைகளுக்கு உண்மையான சாட்சி அளிக்கிறார்களோ, அவர்கள் மெய்யான திராட்சச்செடியில் கொடிகளாக இருக்கிறார்கள், அதாவது உண்மையான சபை வகுப்பாராக இருக்கிறார்கள். (யோவ 15:1) இப்படிப்பட்டவர்கள் உண்மையான சபையின் அங்கத்தினர்கள் என்று தேவனுடைய வார்த்தைகள் சாட்சியிடுகிறது. இந்தச்சாட்சி அவர்களின் ஆவிக்கும், சிந்தைக்கும் தேவன் அவருடைய ஆவியினால் அவரின் வார்த்தைகளின் மூலம் சாட்சி கொடுக்கிறார். தேவன் பேரில் தொடர்ந்து விசுவாசம் வைத்து இயேசுவின் பாதையில் சந்தோஷத்தோடு அவரவருடைய சிலுவையை சுமக்க மனப்பூர்வமாக முன் வருபவர்கள் வெகு சீக்கிரத்தில், உண்மையாக சபை அங்கத்தினராக மாற்றப்படுவார்கள் என்று அதே சத்தியத்தின் ஆவி சாட்சிகொடுக்கிறது - அவர்களின் ஓட்டத்தை முடித்தபின், முதலாம் உயிர்த்தெழுதலாகிய , அவருடைய உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவார்கள். பிலிப்பியர் 3:10

24. நம்முடைய விசுவாசத்தை அதிகரிப்பது எது?

F691 P2: - "ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்."

(யாக் 1:5-8) தேவன் நமக்கு இன்று அளித்த பொக்கிஷங்களையும், வரவிருக்கும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு அவைகளை தக்கவைத்துக்கொள்வதற்கு விசுவாசம் எவ்வளவு முக்கியமானது என்று யாக்கோபு மிகத் தெளிவாகக் காட்டுகிறார். விசுவாசத்தில் உறுதியில்லாமல் நாம் ஒருபோதும் எதையும் ஜெயிக்கமுடியாது என்பதை அவர் வலியுறுத்துகிறார். ஆகவே, அனைத்து வசனங்களும், விசுவாசத்தில் கட்டாயமாக நாம் வளர வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிறது. ஆகவே நாம் அப்போஸ்தலர்கள் ஜெபித்ததுப் போல ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் - "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும்". இந்த ஜெபங்கள் கேட்கப்படுவதற்காக தேவன் அமைத்துள்ள வழிமுறைகளின் வழியாக நாம் ஜெபிக்கவேண்டும். இப்படி ஜெபித்தால், நாம் தேவனைத் தேடி, அவருடைய வார்த்தைகளை அறிந்துகொண்டு, அவைகளை கீழ்ப்படிய முயற்சித்து, அவருடைய ஊழியத்தில் மகிழ்ச்சியடைந்து, அவருடைய கிருபையின் ஆவியை தரித்துக் கொள்ளலாம். இப்படியாக விசுவாசத்தில் உறுதிப்படுவதினால், அவர்கள் என்றுமே தோல்வியைத் தழுவுவதில்லை -"ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள், இவைகளை செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்." - 11பேது 1:10,11

R1967 (col. 2 P 5): - தேவனுடைய ஊழியத்தின், விசுவாசத்திற்கான பரிசுகளை எதிர்ப்பார்க்கவேண்டும் என்றும், தெய்வீக இரக்கங்களின் விசேஷித்த வெளிப்பாடுகள் மற்றும் நம்மிடத்திலும், மற்றவர்களிடத்திலும் கிறிஸ்துவ குணலட்சணங்களை வளர்க்க தடையாக இருக்கும் அனைத்து பிரச்சனைகளையும் தடைகளையும் அகற்ற வேண்டும் என்றும் லூக்17 : 7-10 ம் வசனங்கள் காட்டுகிறது. நாம் இந்த வேலைகளைத் தொடர்ந்து நடத்தும் வரை தெய்வீக இரக்கங்களின் பரிசுகளை எதிர்ப்பார்க்கமாட்டோம். மேலும், அவைகளை நாம் பெற்றபின் நாம் தேவனுடைய ஊழியத்தைச் செய்வதற்கான ஆதாரங்கள் என்று கருதாமல், இவையனைத்தும் நம்மேல் விழுந்த கடமை என்று நினைத்துக் கொள்ளவேண்டும். தேவனுடைய ஊழியக்காரர்களாக நாம் நம்முடைய முழு திறமைகளையும் செலவளிக்க வேண்டும். இதன் காரணமாக, நாம் பரலோக ஆசீர்வாதத்தையும், கிறிஸ்துவின் பங்காளிகளாக இருக்கும் தகுதியையும், பெற்றுக்கொண்டோம் என்ற உணர்வுகளைப் பெறாமல் இருக்கலாம். நாம் நம்முடைய கடமையை மாத்திரம் செய்திருக்கிறோம். ஆனால், தேவன் நமக்காக ஆயத்தப்படுத்தியிருக்கும்

அளவுக்கு அதிகமான ஐசுவரியமுள்ள கிருபைகளையும், அவருடைய ஊழியத்தையும் விரும்பி ஆவலோடு செய்பவர்களுக்காக வைத்திருக்கும் பரிசுகளும், நாம் எதிர்பார்த்திருப்பதை விட மிக அதிகமானது. நாம் எவ்வளவு நேர்த்தியாக வேலைகளை செய்தாலும், அதில் அநேக அபூரணமான காரியங்கள் தென்படும். அவைகள் ஒருபோதும், தேவனுக்கு முழு திருப்தியைக் கொடுக்காது. கிறிஸ்துவினால் முடிக்கப்பட்ட பூரணமான வேலைகள் நம்முடைய வேலைகளின் குறைபாடுகளை நிரப்பாவிட்டால் நம்முடைய கிரியைகள் மதிப்பற்றதாக இருக்கும்.

இப்படியாக, நம்முடைய விசுவாசத்தை அதிகரிப்பது

(a) ஜெபம், (b)வேத வாசிப்பு, (c) தேவனுடைய வாக்குறுதிகளைத் தொடர்ந்து நினைவுக்கூருவது, (d) நம்முடைய அனுபவங்களைக் கவனிப்பது.

(a) ஜெபம் - இந்தப் பாடத்திற்குப் பின் விவரிக்கப்படுகிறது.

(b)வேத வாசிப்பு

F315(1) : - கிரியைகள் மற்றும் நல்லொழுக்கமுள்ள குணங்களைக் காட்டிலும் போதனைகள் மற்றும் விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாத நாட்களில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். போதனைகளுக்கும், விசுவாசத்திற்கும் எந்தவிதமான மதிப்பில்லாத ஒரு காலமாக இருக்கிறது. நாம் இந்த கருத்தோடு ஒத்துப்போக முடியாது. ஏனெனில், திவ்விய வார்த்தைகளின் அடிப்படையில், விசுவாசம் முதல் இடத்தையும், கிரியைகள் இரண்டாவது இடத்தையும் பெறுகிறது. முதன்முதலில் தேவன் நம்முடைய விசுவாசத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு ஏற்றவாறு பலனளிக்கிறார். ஆகவே நம்முடைய உறுதியான விசுவாசம் நம்முடைய பலவீனமான மாம்சத்தில் நம்மால் முடிந்த காரியங்களைச் செய்ய உதவி செய்யும். எல்லா வசனங்களிலும், இதுவே விசுவாசத்தின் கோட்பாடாகக் கொடுக்கப்பட்டுள்ளது. "விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதக் காரியம்", "நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (எபி 11:6, 1யோவ 5:4) சரியான விசுவாசமில்லாமல் ஒருவரும் இந்த உலகத்தை ஜெயிக்கமுடியாது. ஆகவே தேவனுக்குள்ளும், அவருடைய வாக்குத்தத்தங்களுக்குள்ளும் விசுவாசத்தை நடைமுறைப்படுத்தி, அதை சரியாக புரிந்துகொண்டு, விசுவாசத்தில் வளர்ச்சியடையும் பொழுது, அவருடைய தெய்வீகத் திட்டங்களை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். ஆகவே, போதனைகளும், கற்பனைகளும் மிக முக்கியமானது. இவைகள் தேவனைப் பற்றியும் அவருடைய திட்டங்களைப் பற்றியும் அறிந்துகொள்வதற்கு மாத்திரம் அல்ல, மாறாக அவைகளினால் நம்முடைய கிரியைகள், சிந்தைகள் மற்றும் அனைத்திலும் நாம் முழுமையாக பரிசுத்தப்படவேண்டும் என்பதே அதன் நோக்கமாக இருக்கிறது. "அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுப்போல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான். (1யோவ 3:3) இந்த வசனம் தெளிவாகக் குறிப்பிடுவது போல, ஒருவர் தன்னை சுத்திகரிக்க விரும்பினால், முதலில் தன்னுடைய இருதயத்தில் தேவனுடைய வாக்குத்தத்தங்களினால் தூண்டப்பட்டு, தன்னை சுத்திகரிக்க வேண்டியதாக இருக்கிறது. அதாவது கிறிஸ்துவின் போதனைகளை முதலாவது அறிந்த பின்பு தான் நாம் சுத்திகரிப்பை படிப்படியாக நம்முடைய வாழ்க்கையில் கொண்டுவரமுடியும்.

(c)தேவனுடைய வாக்குத்தத்தங்களைத் தொடர்ந்து நினைவில் கொண்டு, அதை நமக்குரியதாக்கிக் கொள்ள ஜெபிக்க வேண்டும்.

R2642(col 2P7) - : விசுவாசக் குறைச்சலை நிறைவு செய்து, அந்த விசுவாசத்தை விருத்தி செய்ய நாம் என்ன செய்யவேண்டும் ? "தேவனே எங்களுடைய விசுவாசத்தை விருத்தியாக்கியருளும்" என்று அப்போஸ்தலர்கள் ஜெபித்ததுப் போல நாமும் ஜெபித்து விட்டு, அந்த ஜெபத்திற்கு ஏற்றவாறு நம்முடைய இருதயத்தில் விசுவாசத்தை வளர்க்க வேண்டும் என்று பதில் அளிக்கலாம். இதற்கு தேவனுடைய வார்த்தைகளில் உள்ள வாக்குத்தத்தங்களை நாம் தொடர்ந்து நினைவுக்கூர்ந்து, நாம் தேவனோடு செய்த உடன்படிக்கையை அன்றாடம் புதுப்பித்துக்கொண்டு, நம்முடைய இருதயமும், உதடுகளும் ஒருமித்து காரியங்களைச் சிந்தித்து, செயல்பட்டு, தேவனுக்கு எல்லாவற்றிலேயும் நன்றியோடு ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கவேண்டும். அவர் நமக்கு கொடுக்க சித்தமானக் காரியங்களை நாம் விரும்பி வேண்டி பெற்றுக்கொள்ள வேண்டும்.

(c) நம்முடைய அனுபவங்களைக் கவனித்துப் பார்த்து..

R2643 (col 1P2): - சோதனைகளும், பிரச்சனைகளும் எழும்பும்பொழுது, நாம் தேவனுடைய வாக்குறுதிகளை நினைவுக்கூர வேண்டும். இவைகளை தேவனே அனுமதித்திருக்கிறார் என்ற உணர்வும் நமக்குள் இருக்கவேண்டும்.

ஏனெனில், அவரோடு பலியினால் உடன்படிக்கை செய்தவர்களை அவர் நேசிக்கிறார். ஆகவே நாமும் அவரிடத்தில் முழுமையாக அன்புகூறும்பொழுது, நமக்கு நேரிடும் சகல காரியங்களும் நன்மைக்கு ஏதுவாகவே இருக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. நமக்கு ஏற்படும் ஒவ்வொரு காரியங்களிலும், தேவன் நமக்குண்டானப் பாடங்களை வைத்திருக்கிறார். அதை பொறுமையோடு கற்றுக்கொள்ளும் பட்சத்தில் நாம் நிச்சயமாகவே நன்மையைப் பெற்றுக்கொள்வோம். இதுவே தேவன் நம்மை ஆசீர்வதிக்கக்கூடிய ஒரே வழியாக இருக்கிறது. அவரிடத்தில் அன்புகூர்ந்து, முழுமையாக அர்ப்பணிக்கக்கூடியவர்களுக்கு இவ்விதமான ஆசீர்வாதங்களை நிச்சயமாக தேவன் வாக்களித்திருக்கிறார். ஆகவே கிறிஸ்துவின் நிமித்தம் நாம் படக்கூடிய பாடுகளின் அடிப்படையில் நம்முடைய ஆசீர்வாதங்களை நாமே உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

எனவே நாம் ஒவ்வொருவரும் அப்போஸ்தலர்களின் வார்த்தையின்படி - நாம் பாவிகளாயிருக்கும் போதே தேவன் நம் மேல் வைத்த அன்பு அளவில்லாததினால், அவருடைய சொந்த குமாரனையே அவர் நமக்கு இரட்சகராகக் கொடுத்து, மேலும் அவர் நம் மேல் வைத்த அன்பை அவர் விளங்கச் செய்தார். மேலும், அவருடைய அன்பின் நிமித்தம் நம்மை நீதிமான்களாக்கியும் இருக்கிறார். நாம் நம்மை முழுமையாக ஒப்புவிக்கும் பட்சத்தில், சில நிபந்தனைகளின் அடிப்படையில் அவருடைய குடும்பத்தின் உறுப்பினராகவும் நம்மை ஏற்றுக்கொள்கிறார். ஒருவர் தேவனுடைய சிந்தைனைகளுக்கு இசைவாக இருக்கும் பட்சத்தில் அவருக்குள் இப்படிப்பட்ட நற்கிரியைகளை துவங்கின தேவன், அந்த தனிநபர்களுக்குள், அதை முற்றிலும் முடிக்க வல்லவராகவும் இருக்கிறார். தேவன் என்றும் மாறாதவர். அவர் சொன்ன காரியங்கள் எதுவும் மாற்றப்படுவதில்லை. ஆகவே நம்முடைய அர்ப்பணிப்பு உண்மையாக இருக்கும் பட்சத்திலும், நம்முடைய சித்தத்தை நினைக்காமல், அவருடைய சித்தத்தை நிறைவேற்றும் பட்சத்திலும், அவருடைய வாக்குத்தத்தத்தை நாம் நினைவுக்கூறும் பொழுது, இன்று நாம் அவருடைய பாதுகாப்பையும், வழிநடத்துதலையும், பெறுவது உறுதியான ஒன்றாகும். தேவன் மேல் நாம் வைக்கும் இந்த நம்பிக்கையே, விசுவாசத்தினால் நமக்கு கிடைக்கும் மாபெரும் வாக்குறுதியாகும்.

25. உங்களுடைய விசுவாசத்தை அதிகரிக்க இன்றைய சத்தியங்களின் சில முக்கிய அம்சங்களைக் கூறவும்?

26. கிரியைகளுக்கும், விசுவாசத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

யாக் - 2:14

R3586 (col. 1 P2.3) : - யுகங்களைப் பற்றிய தெய்வீக திட்டங்களோடு தொடர்புள்ள ஒவ்வொரு வேத வசனங்கள் மற்றும் வசனங்களிலுள்ள உண்மைகளின் அடிப்படையில் நமக்கு ஒரு தேர்வு உண்டாயிருக்கிறது. நாம் எதை இழந்தாலும், சுயத்தை வெறுத்தும், நம்மையே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தும், தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பித்தும், இந்த ஒரு தேர்வில் வெற்றிப்பெற விரும்புகிறோம். அப்போஸ்தலர்கள் சொல்வதுப் போல் -"...அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்." (பிலி 2:12, உன் 2:22) இருந்தாலும், இந்த நற்கிரியைகளெல்லாம் "புது சிருஷ்டிகளுக்குரியதாக" இருக்கிறது. - கிறிஸ்துவின் சரீர அங்கங்களுக்கு சம்பந்தப்பட்டதே தவிர நம்முடைய மாம்சத்தினாலானதல்ல. இவையனைத்தும் தேவனுடைய கிரியைகளாக இருக்கிறது, ஏனெனில், அவருடைய வார்த்தைகள், நமக்குள் பெற்றிருக்கும் தேவ ஆவியினால் செயலாற்றப்படுகிறது - "ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்."

பிலி 2:13, எபே 3:20

எப்படியிருந்தாலும், நாம் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. நம்முடைய நீதிமானாக்கப்பட்ட நிலைமை, நம்மை அழைத்த அழைப்பு, அல்லது தேவனுடைய இராஜ்யத்தில் நமக்களிக்கப்படும் மேன்மையான நிலை அனைத்துமே, நம்முடைய கிரியைகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளாமல், நாம் வைத்திருக்கும் எளிமையான விசுவாசத்தின் அடிப்படையிலேயே நாம் பெற்றிருக்கிறோம். நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, தேவனுடைய சமாதானத்தைப் பெற்றிருக்கிறோம். ஆகவே நாம் எந்த வேலைகளை செய்வதற்கு முன்னும் நாம் அவருடைய பார்வையில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோமா என்று நாம் முதலில் நிதானிக்க வேண்டும். இப்படியாக நாம் நம்முடைய அழியக்கூடிய சரீரங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்து, அவருடைய ஒவ்வொரு வேலைகளிலும், முழு ஈடுபாடோடு

கிரியைகளை துவங்கும் பொழுது, அவருடைய பார்வையில் அங்கீகரிக்கப்படும். அதற்குப் பின் நம்முடைய பலியின் ஜீவியம் துவங்கும், சுயக்கட்டுப்பாடு அதிகரிக்கும், இந்த உலகத்தை மேற்கொள்ள துவங்குவோம், இந்த உலகத்தோடும், மாம்சத்தோடும், பிசாசோடும் போர் புரிய துவங்குவோம். நம்முடைய இருதயங்களில் இந்த போர்களில் நாம் ஜெயிக்கவேண்டும் (நாம் மாம்சத்தில் பூரணப்படாமலிருந்தாலும்). இல்லாவிட்டால் நம்முடைய தேர்ந்தெடுத்தலை உறுதிப்படுத்தவும் முடியாது. நமக்காக தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை கிரயத்திற்கு வாங்கி, தன்னுடைய பங்காளிகள் என்று நம்மை அடையாளப்படுத்தும் அந்தக் கிரீடத்தையும் பெற முடியாது.

R2847 (col. 1P5 – col. 2 P1) : -

ஆபிரகாமின் விசுவாசத்திற்கு ஆதாரமாக அவருடைய அனுபவங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆபிரகாம் தேவனை விசுவாசித்ததின் அடிப்படையில் - " ஆண்டவரே, என்னுடைய விசுவாசத்தின் நிமித்தம் நீர் என்னை ஆசீர்வதித்து, பாபிலோனிலும், கல்தேயாவிலும், என்னை பயன்படுத்தி என்னுடைய விசுவாசத்தை அறிந்துகொள்ளும்" என்று எவ்வளவு அவர் மன்றாடியிருந்தாலும், பயனற்றதாக இருந்திருக்கும், இதை போல இன்றைக்கும் அநேக ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள், இதே கோணத்தில் சிந்திக்கிறார்கள். இது மிகவும் தவறான ஒன்றாகும். தேவன் நம்முடைய இருதயத்தை பார்ப்பது உண்மைதான், ஆனாலும் அவர் நம்முடைய அபூரணமான கிரியைகளை அல்ல, அவரிடத்தில் நம்மை சேர்க்கக்கூடிய நம்முடைய விசுவாசத்தையே அவர் கவனிக்கிறார். இந்த விசுவாசம் அதிகரிக்கும்பொழுது தானாகவே, கிரியைகள் பூரணப்படுத்தப்படுகிறது. மேலும், நாம் அதிகமான விசுவாசமுள்ளவர்களாக இருந்தும், கிரியைகளைச் செய்யாமல் போனால், நாம் கொண்டிருக்கும் விசுவாசம் வெகு சீக்கிரத்தில் மரித்து விடும். நாம் விழுந்துப்போன மனுக்குலமாக இருப்பதால், தேவன் நம்மிடத்தில் பூரணமானக் கிரியைகளை எதிர்பார்ப்பதில்லை. ஆனால் நீதிமானாக்கப்பட்ட நிலையில் தேவனுக்கு முன் நிற்பவர், தன்னுடைய விசுவாசத்தின் மூலம் தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கவேண்டும், நாம் பெற்ற விசுவாசத்திற்கு ஏற்றவாறு கிரியைகளைச் செய்யாவிடில், நம்முடைய விசுவாசம் செத்ததாகிவிடும். - "அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும் " - யாக் 2:17

நீதிமானாக்கப்பட்ட நிலைமை ஓர் இலவசமான பரிசாக இருக்கிறது - " ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" - கிறிஸ்துவின் ஈடுபலியினால், கிறிஸ்துவின் மூலம் தேவன் நமக்கு கொடுத்தப் பரிசாகும். ஆனால் இந்த வாய்ப்பு, நாம் பரிசுத்தமடைந்து, ஜீவபலி செலுத்த பயன்படுத்தப்பட்டால் மட்டுமே இதன் விளைவுகள் பலனுள்ளதாக இருக்கும் பட்சத்தில் நாம் - "தேவனுடைய கிருபையை ... விருதாவாய்ப் பெறவில்லை..." என்பதை நிரூபிக்கலாம் - எபே 2:9, 11கொரி 6:1

27. யார் இந்த "விசுவாச வீட்டார்"?

கலாத்தியர் 6:10 -"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்"

R2740 [col.1p1 – col.2p2] :-

கேள்வி : ஆண்டவர் நம்மை நன்மை செய்யக் கட்டளையிட்டிருக்கிறார், "விசேஷமாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கு". யார் இந்த விசுவாசக் குடும்பம்? இவர்கள் உடன்படிக்கைப்பண்ணின பரிசுத்தவான்களா? அல்லது நீதிமானாக்கப்பட்ட வகுப்பினரா அல்லது பரிசுத்தப்பட்டுக் கொண்டிருப்பவர்களா ? அல்லது முழுமையாகப் பரிசுத்தமடைந்தவர்களா ?

பதில் - வசனங்கள் கூறுகிறபடி, தெய்வீகக் கண்ணோட்டத்திலிருந்து நாம் பார்க்கையில், "கிறிஸ்துவின் சபை" என்பது இயேசு கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களையே குறிக்கும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அதாவது, விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்பட்டு, அதற்கு மேல், தங்களைச் சுத்திகரிக்கும் முயற்சியில் உடன்படிக்கைச் செய்பவர்கள்.

ஆனால் "விசுவாசக் குடும்பத்தினர்" மேலும் அதிக எண்ணிக்கை உள்ளவர்கள் -தங்களுடைய பாவங்களிலிருந்தும், அதன் பலன்களிலிருந்தும் விடுபட, இயேசுவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் - இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்கள், கடும் முயற்சிகள் எடுத்து, அவருடைய நீதியின் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்த விரும்புவோர்கள் சகல

பரிசுத்தவான்கள் மேல் வைத்திருக்கும் அன்பையும், அரவணைப்பையும் வெளிப்படுத்த வேண்டும். இவர்கள் மேல் மட்டும் அல்ல நீதியின் கோட்பாடுகளின் கீழ் இருக்கும் விசுவாசிகள் அனைவர் மேலும் இந்த அன்பை வெளிப்படுத்த வேண்டும். அப்பொழுது நாம் இந்த உலகத்திற்கு மரித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாக, அவரோடு புதிய ஜீவியத்தில் நடந்து, வருங்காலத்தில் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இராஜ்யத்தில் அவருடைய பங்காளிகளாக இருப்போம்.

28. யாக்கோபு 5:14 முதல் 16 வசனங்களின் விளக்கம் கூறவும்

"உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது."

F637[P2] – F638[1]:-

புது சிருஷ்டிகள் தங்களுடைய உடல் நல குறைவுகளிலிருந்து நலம் பெற, தெய்வீக வல்லமையை சார்ந்திருக்க வேண்டும் என்பதற்கு இந்த வேதப்பகுதி மற்றும் மாற்கு 16 :17,18 ம் வசனங்களே ஆதாரமாக இருக்கிறது. மாற்கு சுவிசேஷத்தில் உள்ள இந்த வசனங்கள் கிரேக்கப் பிரதிகளில் காணப்படுவதில்லை என்றும், இவ்வசனங்கள் ஐந்தாம் நூற்றாண்டில் சேர்க்கப்பட்டவைகள் என்றும் நாம் எளிதில் விட்டு விடலாம்.

யாக்கோபின் வார்த்தைகளைப் பொறுத்தவரையில் - இந்த வியாதிகள் அனைத்தும் பாவத்தினால் வருகிறதாக பதினாறாம் வசனத்திலிருந்து நமக்கு குறிப்புகள் காணப்படுகிறது - இது எளிதாகத் தோன்றினாலும், சபையின் மூப்பர்களை வரவழைக்கும் அளவிற்கு மிக கொடூரமாகவே இருக்கிறது. இவைகள் அனைத்தையும் பார்க்கும்பொழுது, வியாதிப்பட்டவர், அதாவது அந்தக் குறிப்பிட்ட பாவி தேவனுடைய ஐக்கியத்தை துண்டிக்கும் அளவிற்கு பாவம் வளர்ந்திருப்பதை காட்டுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், பாவங்களுக்காக மனம் வருந்தி, மன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்பொழுது - " ... விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார், அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" - (வசனம் - 15) என்று வாசிக்கிறோம்.

29. விசுவாசம் மற்றும் நம்பிக்கைக்கும் அடையாளமாகச் சொல்லப்படும் கேடயம் மற்றும் நங்கூரத்திற்கும் உள்ள தொடர்பின் முக்கியத்துவம் என்ன?

எபே 6:16 - "பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்."

F657 [P5]: -சாத்தானின் பொறி பறக்கும் அம்புகளிலிருந்து காப்பதற்கு விசுவாசத்தின் கேடயம் கட்டாயமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்", "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் ஜெயம், நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்." - எபி 11:6, 1யோவ 5:4

எபி 6:19 - அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது.

R3109 [col.1P4,5] :-

தேவன் ஒருபோதும் அவர் செய்த உடன்படிக்கைகளை முறிக்கமாட்டார் என்றும், எந்தச் சூழ்நிலைக்கும் ஏற்றபடி அவர் அதை மாற்றவோ, திருத்தவோ, மாட்டார் என்றும் சொல்லப்பட்டிருக்கிற உடன்படிக்கையின் - வாக்குத்தத்தங்கள் நமக்கு உறுதியளிக்கிறது. ஆகவே நாம் நம்பிக்கையில் இளைப்பாறிக்கொண்டு, இந்த உலகத்தின் சார்பாக நமக்குள் நல்ல கிரியைகளைத் துவங்கினவர், அதை முடிக்கவும் வல்லவராக இருக்கிறார் என்று அதிக உறுதியோடு அவருடைய சித்தத்திற்கு இசைவாகச் செயல்படுவோம். என்றும் மாறாத நாம் பெற்றிருக்கும் இந்தத் தெய்வீக உடன்படிக்கைகளின் அறிவு, தேவன் மேல்,நாம் வைத்திருக்கும் நம்பிக்கையையும்,

விசுவாசத்தையும், அதிகரித்து ஒவ்வொரு சோதனைகளிலும், துன்பங்களிலும், இன்றையக் காலங்களில் வரும் ஏமாற்றங்களிலும் - சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்ற உறுதியான ஆறுதலைக் கொடுக்கிறது அல்லவா, நாம் பெறும் மகிமை, கனம், அழியாமைக்கு மட்டும் அல்ல இந்தத் தெய்வீகத் திட்டத்தில் முழு மனுக்குலமும் பெறப் போகிற ஆசீர்வாதங்களுக்காகவும் இவைகள் சம்பவிக்கிறது என்று நமக்கு உறுதியளிக்கிறது அல்லவா? நிச்சயமாக, அல்லேலூயா, எப்படிப்பட்ட இரட்சகரை நாம் பெற்றுள்ளோம்.

அப்போஸ்தலர்கள் புதிய ஏற்பாட்டில்,இந்த வாக்குத்தத்தங்களைக் குறித்து விரிவாக விவரித்தக் காரியங்களின் சாராம்சத்தை இப்பொழுது நம்முடைய சிந்தையில் கூட்டிச்சேர்த்துப் பார்த்தால், இனிவரும் ஜீவனைக் குறித்து மட்டும் அல்ல, இப்பொழுது உள்ள ஜீவனைக் குறித்தும் உறுதியளிக்கக் கூடியதாக இருக்கிறது. இவைகள் நமக்கு புதிய சந்தோஷத்தையும், புதிய தைரியத்தையும், புதிய வைராக்கியத்தையும், இந்த உலகத்தில் - நம்முடைய குடும்பம், நண்பர்கள், வேலைகளைச் செய்வதற்கு புத்துணர்ச்சியும், எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவனோடு நல்லுறவையும் இந்தக் காலத்தில் பெறுவதற்கு வாய்ப்பளிக்கிறது. மேலும், சுவிசேஷத்தில் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் மிகப் பெரிதான, கிருபையுள்ள நம்பிக்கையின் மேல் நமக்கு உறுதியான விசுவாசத்தை ஏற்படுத்துகிறது மற்றும் தேவன் நமக்குக் கொடுக்க விரும்பும் அனைத்தையும், அதாவது அவருடைய வல்லமையை நாம் சிந்திப்பதற்கும், கேட்பதற்கும் அதிகமாக அவர் கொடுக்ககூடியவராக இருக்கிறார்.

30. விசவாசம் மற்றும் அறிவுக்கும் உள்ள தொடர்பு ஆயிர வருட ஆட்சியில் எப்படிப்பட்டதாக இருக்கும்?

R2677[col.1 P5,6] : -

இந்த சுவிசேஷ யுகத்தில் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" என்று சபை பெற்றுள்ள தகுதியைப்போல் (பழைய ஏற்பாட்டின் நீதிமான்களும் இப்படியாக நீதிமானாக்கப்பட்டிருந்தார்கள்.) ஆயிரவருட ஆட்சியில் காணப்படுவதில்லை, அது அக்காலத்தில் தேவைப்படுகிறதுமில்லை. ஏனெனில் நாம் வாழக்கூடிய இக்காலத்தைக் காட்டிலும், அக்காலத்தின் சூழ்நிலைகள் முற்றிலுமாக வேறுப்பட்டிருக்கும். நாம் இப்பொழுது "தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்", - இப்பொழுதும் விசுவாசத்தினால் மட்டுமே தேவனுடைய திட்டங்களையும், அவர் தரும் வெகுமதிகளையும் அறிந்துகொள்வது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆனால் ஆயிர வருட ஆட்சியில், விசுவாசத்தின் யுகம் முடிந்தவுடன், அனைவருக்கும் இந்த அறிவை மிகத் தெளிவாக புரிந்துகொள்ளக்கூடிய காலம் துவங்கும். தவறுகள் இன்றி சகலவிதமான ஆதாரங்களோடு சத்தியம் வெளிப்படுத்தப்படும். "அங்கு பேதையராயிருந்தாலும் திசைக்கெட்டுப் போவதில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." இத்தகைய அறிவை இந்த உலகம் பெற்றபின் ஒருவரும் தன் அயலானுக்குத் தேவனைப்பற்றி அறிவிக்கவேண்டிய அவசியமில்லை.

நம்பிக்கை மற்றும் விசுவாசத்தை செயல்முறைப்படுத்துவதில் வித்தியாசங்கள் உண்டு. இன்று நாம் அநேககாரியங்களை வேத வசனங்களின் மூலம் விசுவாசிக்கிறோம். அதே காரியங்களை ஆயிர வருட ஆட்சியில் முழு மனுக்குலமும் நம்பும். ஆனால் நாம் இன்று விசுவாசிப்பதுப்போல் அல்ல, அவர்கள் அதற்கான ஆதாரங்களைக் காண்பார்கள். அதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுகளுக்கும் இடமில்லாமல், காணக்கூடிய காரியங்களை நம்பவேண்டிய கட்டாயத்தில் இருப்பார்கள். எடுத்துகாட்டாக - "நம்முடைய கடந்த காலப்பாவங்கள் அனைத்தையும் மன்னித்து, இன்று நாம் தேவனுடையப் பார்வையில் நீதிமான்களாகப் பாவிக்கப்படுகிறோம்.." ஆகவே நம்முடைய சரீரங்களிலும், சிந்தையிலும் இருக்கக்கூடிய பெலவீனங்களை நாம் தொடர்ந்து பரிசோதித்தால் நமக்குள் பாவங்கள் இருப்பதை நாம் அறிந்துகொள்ளுகிறோம். நம்முடைய பாவங்கள் அனைத்தும் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கிறது. சபை ஜனங்களின் இந்த மாம்ச சரீரம் முழுமையாக அழிவைக் காணும் வரை இந்தத் தற்காலிகமான மூடல் தேவைப்படுகிறது. கிறிஸ்துவுக்குள் இவர்கள் முதலாவது உயிர்த்தெழுந்து, பூரணமான சரீரங்களைப் பெற்று மகிமையடையும்பொழுது, முற்றிலுமாக பாவத்திலிருந்து விடுதலைப் பெறுவார்கள். ஆனால் இன்று நம் அனைவரின் பாவங்களும் மூடப்பட்டிருக்கிறது என்று விசுவாசிக்கவேண்டும். இதை நாம் விசுவாசிக்கும் பட்சத்தில், தேவன் நமக்களித்திருக்கும், உன்னதமான அழைப்பை ஏற்றுக்கொண்டவர்களாக, மகிமையையும், அழியாமையையும் பெற்றுக்கொள்ள நம்முடைய உலகப் பிரகாரமான ஆசைகளையும், இச்சைகளையும் வெறுக்கிறோம். இவ்வனைத்துக் காரியங்களையும் நாம் விசுவாசக் கண்களினால் மட்டுமே காண முடியும். இந்த ஓட்டத்தை ஓடும்

அனைவரும் விசுவாசத்தைத் துவக்கினவரும், முடித்தவருமாகிய இயேசுவை மட்டும் கவனித்தால் போதாது, அந்த நீதியுள்ள நியாயதிபதி விசுவாசமுள்ளவர்களுக்கு வைத்திருக்கும் நீதியின் கீரிடத்தையும் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படியாக, நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலமே, விசுவாசத்தின் மிகச் சிறந்த காலமாக இருக்கிறது. அவருடைய வாக்குத்தங்களின் மேல் உள்ள விசுவாசத்திற்கு நாம் நிச்சயமாகப் பலன் பெறுவோம்.

F106 [P3 - F107] : -

உண்மையில், நாம் பெற்றிருக்கும் தற்காலிகமான நீதிமானாக்கப்படுதலை, நிரந்தரமாக மாற்றுவதற்கு விசுவாசம் மிக அவசியமாக இருக்கிறது. ஏனெனில், விசுவாசிக்காமல் தேவனைத் தரிசிப்பது கூடாதக் காரியம் என்று வாசிக்கிறோம். மேலும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களும், கொடைகளும் விசுவாசத்தின் அடிப்படையில்தான் கொடுக்கப்படும். புது சிருஷ்டிகளாக, இயேசு கிறிஸ்துவின் உடன் பங்காளிகளாக அழைக்கப்படுபவர்களிடம் எதிர்பார்க்கப்படும் விசுவாசம் வேறு, இனி வரவிருக்கும் ஆயிர வருட ஆட்சியில் எதிர்பார்க்கப்படும் விசுவாசம் வேறு. தேவனுடைய இராஜ்யத்தில் சாத்தான் முற்றிலுமாகக் கட்டப்படும், கர்த்தரை அறிகிற அறிவு பூமியெங்கும் நிரம்பியிருக்கும். அப்பொழுது, தெய்வீக வாக்குறுதிகளின் நிறைவேற்றம் அனைவராலும் நேரில் காணப்படும். அவைகளைக் காணக்கூடிய அனைவரும் விசுவாசிப்பார்கள். இதே காரியங்களை நாம் காணாமல் விசுவாசித்துக் கொண்டிருக்கிறோம். இந்த யுகம் முடிவிற்குள் நாம் அனைவரும் இந்த விசுவாசத்தில் பூரணப்பட அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் விசுவாசத்தோடு, நடப்பிக்கும் விடாமுயற்சியோடு கிரியைகளின் அடிப்படையில் நாம் பூரணராக்கப்படுவோம். இப்படியாக, நாம் உண்மையான நீதிமானின் நிலையை அடையலாம். " அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்." என்று எழுதியிருக்கிறபடி ஆயிர வருட ஆட்சியில் அவரவர் கிரியைகளின் படி நியாயத்தீர்ப்பைப் பெறுவார்கள். நாமோ, விசுவாசத்தின் அடிப்படையில் இன்று நியாயத்தீர்க்கப்படுகிறோம். அவர்கள் கிரியை செய்தால் மட்டும் போதும், நாமோ நம்மால் முடிந்த வரைக்கும் விசுவாசத்தைக் கிரியைகளினால் பூரணப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

R2220- " கிறிஸ்துவுக்குள் விசுவாசம் அவசியமா ? " (கேள்வி எண் 7 காண்க)

மதங்களின் உலகப் பாராளுமன்றத்தின் தலைவராகிய ஜான் 11 பாரோவுஸ், சிக்காகோவில் நடந்த மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்து சென்றார். அவருடைய அனுபவங்களைப் பற்றி அவர் எழுதுகையில், "இறுதியாக, அனைவரும் மீட்பு பெறுவார்களா?" என்று இந்துக்கள் அவரிடம் கேட்ட ஒரு கேள்வியை குறிப்பிடுகிறார். "இப்படிப்பட்ட ஒரு கருத்தை ஊக்குவிக்க என் எஜமானன் என்னை அனுமதிப்பதில்லை. ஆனாலும், இது வரைக்கும் கிறிஸ்துவைப் பற்றி அறியாதவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்படும் என்று நான் விசுவாசிக்கிறேன் என்றும் சாக்ரெட்டீஸை போல சிலருடைய சிந்தை இயற்கையாகவே கிறிஸ்தவர்களைப் போலிருக்கும். ஒருவேளை நாம் பரலோகத்தில் சாக்ரெட்டீஸை சந்திக்கவில்லை என்றால், நான் ஒருவேளை தவறானப் பாதையில் சென்றிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவேன்" என்று பதில் அளித்தார்.

இன்றைய தினங்களில் மிக வேகமாக வளர்ச்சியடையக்கூடிய கிறிஸ்துவர்களின் கண்ணோட்டத்தை ஓர் எடுத்துக்காட்டாக டாக்டர் பாரோவ் காண்கிறார். இந்த ஜனங்கள் அனைவருமே நம்முடைய ஆண்டவரால் போதிக்கப்பட்ட சுவிசேஷத்தையும், அவருடைய தூண்டுதலைப் பெற்ற அப்போஸ்தலர்களையும், நிராகரித்ததினால், புதிய ஏற்பாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த சுவிசேஷத்தின் நன்மைகளைப் புறக்கணிக்கிறார்கள்.

1. ஆதாம் பாவம் செய்து தேவ சாயலை இழந்தார். ஆனால் கிறிஸ்து இயேசு மனிதனின் பாவத்திற்காக மரித்து, தன்னுடைய ஜீவனை ஈடுபலியாகக் கொடுத்து ஆதாமையும், அவர் இழந்த அனைத்தையும் மீட்டார் என்பதே புதிய ஏற்பாட்டின் சுவிசேஷத்தின் மையக்கருத்தாகும். ஆனால் இப்பொழுது போதித்து வரப்படும் புதிய தவறான சுவிசேஷம் இந்தக் கருத்தை மறுக்கிறது. ஆதாம் குரங்கின் சாயலாக இருந்தான் என்றும் கடந்த ஆறாயிர வருடங்களாக அவன் வீழ்ச்சி அடையவில்லை மாறாக அவன் மனிதனாக வளர்ச்சி அடைகிறான் என்று கூறுகிறது. இந்த அடிப்படைக் கருத்திலிருந்து பார்க்கும்பொழுது, இயேசுவின் ஈடுபலிக்கு எந்தவிதமான அர்த்தமும் இல்லை என்று தெரிகிறது. ஏனெனில் நாம் பார்க்கையில், கடந்த ஆறாயிர வருடங்களாக மனிதன் பாவத்தில் வளருவதற்குப் பதிலாக, முன்னேற்றமான பாதையில் செல்லுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே பாவத்தைக் கருத்தில்

கொள்ளாவிட்டால், பாவத்திற்கான பலியும், மறுக்கப்பட வேண்டும். இவ்வாறாக பரிணாமக் கொள்கையை நம்பும் அனைவரும் இயேசுவின் ஈடுபலியை ஏற்றுக்கொள்ள வாய்ப்பில்லை.

2. ஈடுபலியை விசுவாசித்து, முழு மனதோடு ஏற்றுக்கொள்பவர்களுக்கு, தேவன் மன்னிப்பளித்து, தன்னோடு ஒப்புரவாக்கிக்கொண்டு, அதற்கான சகல ஆசீர்வாதங்களையும் தருவார் என்பதே புதிய ஏற்பாட்டின் சாராம்சம். ஆனால் புதிய தவறான சுவிசேஷம் இந்த ஈடுபலியை மறுத்து, தேவன் கொடுக்கும் மன்னிப்பையும், உறவையும் நிராகரித்து, தேவனுடைய உறவு இன்னும் துண்டிக்கப்படவில்லை என்றும், பாவத்திலே நாம் பிறந்ததையும் மறுதலிக்கிறார்கள். ஆதாம் திராட்சைக் காய்களைப் புசித்தார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயிற்று - எசே 18:2 என்பதை மறுக்கிறார்கள்.

3. புதிய ஏற்பாட்டின் முழுமையான ஆசீர்வாதங்களைப் பகிர்ந்துக் கொள்வதற்குத் தேவை - விசுவாசமே. கிறிஸ்துவின் மரணத்தின் வழியாக தேவனோடு ஒப்புரவாகும் சிலாக்கியத்தை அவருடைய கிருபையினால் நமக்கு அளித்தார். பாவிகளாக இருக்கும் அனைவரும் இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்த நாம் பெற்ற விசுவாசத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. ஏனெனில் அப்போஸ்தலர் கூறுவது போல - " நாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறோம்."மேலும் இதன் வழியாக தான் நாம் அனைத்துத் தெய்வீக நன்மைகளையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும். (ரோ 5:1,2) இது பொதுவான விசுவாசம் அல்ல, அல்லது நாம் மகிழ்ச்சியாக இருப்பதின் மேல் வைக்கும் விசுவாசம் அல்ல, மாறாக இது தேவன் பேரிலும், இயேசுவின் பேரிலும், நாம் வைக்க வேண்டிய விசுவாசமாக இருக்கிறது. மேலும், இது ஊடுருவி இயேசுவின் மரணத்தின் மேலும், நம்முடைய பாவங்களுக்காகஇரட்சகரானார் என்பதையும், பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை ஜெயித்து, அவருடைய இரண்டாம் வருகையில் தேவனுடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கப்போகிறார் என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும்.

புதிய தவறான சுவிசேஷம் கிறிஸ்துவோடு ஐக்கியத்தில் விசுவாசத்தோடு வாழ வேண்டும் என்பதைக் கூறுகிறார்கள். வேறு எதுவும் தேவை இல்லை என்பதே அவர்களுடைய கருத்து. நிச்சயமாக இவர்கள் "மெய்யான வழியையும், சத்தியத்தையும், ஜீவனையும் " தொலைத்து விட்ட அபாயத்திலிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. இவர்கள் வசனங்களில் குறிப்பிடுவதுப்போல "சரியான பாதையில் இவர்கள் நடக்கவில்லை." என்பது தெளிவாகிறது.

ஆனாலும், இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டப்பின் நேர்மையான சிந்தையுடையவர்கள் மற்றும் உண்மையுள்ளவர்கள் அனைவரின் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டு, உண்மையான விசுவாசத்தை அறிந்தவர்களாக ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதில் நாம் மகிழ்ச்சியடையலாம். பிரேதக் குழியில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும் என்று சொன்னது போல, நிச்சயமாக அவர்கள் பிரேதக் குழியிலிருந்து வெளிவரும் சாக்ரேட்டீஸை காண்பார்கள். (11கொரி 4:4, வெளி 20:2,3) அப்பொழுது காட்டப்படும் இரக்கம், பூமிக்குரிய பரதீஸ் திரும்பக் கொடுக்கப்படக்கூடிய காலமாக இருக்கும். அது பரலோக அழைப்பு அல்ல. இது சுவிசேஷ யுகத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பை உறுதிப்படுத்திக் கொண்டு, விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் இருந்தால் பந்தயப் பொருளைப் பெறலாம். (11பேதுரு 1:10) ஆண்டவரின் வார்த்தைகளைக் கேட்போம் - (கலா 3:22,23, 1கொரி 1:21,23,24, 1தெச 4:14, யோவ 20 : 31, யோவ 17:20, அப்போஸ்தலர் 13:37-39, அப் 8:12, 1பேது1:18-23, அப்20:27, 1கொரி15:11, வெளி 10 :8-14)

F688- F692 - "ஆவிக்குரிய கனியாகிய விசுவாசம், புது சிருஷ்டியின் நிகழ்கால சொத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது." (கேள்வி எண் 12 காண்க)

நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறுவதற்கு முன் விசுவாசம் நம்முடையதாக இருக்க வேண்டும். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதற்கு முன்னதாகவே நாம் பாவமன்னிப்பைப் பெற்று தேவனோடு சமாதானமாகிவிட்டோம். பரிசுத்த ஆவியைப் பெறுவதற்கு முன் நாம் பெற்ற விசுவாசம் இதை செயல்படுத்த முடியாது. ஆகவே, ஆவியின் வரத்தின் - ஆவியின் கனியாகிய - விசுவாசத்தைப் பெற வேண்டும். தேவன் பேரிலும், அவருடைய வாக்குறுதிகளின் மேலும் நம்முடைய சிந்தையைச் செலுத்துவதே விசுவாசமாகும். தேவன் மேல் உள்ள நம்பிக்கையை அறியாமையினாலோ, அல்லது விழுந்துபோன நிலையினாலோ நடைமுறைப்படுத்தாதவர்கள், சுவிசேஷ யுகத்தின் விசேஷித்த ஆசீர்வாதங்களைப்பெற முடியாது. வருங்கால ஆட்சியில் பொதுவாக அனைவரும் ஆசீர்வதிக்கப்படும்பொழுது இவர்களும் அதில் பங்குபெறுவார்கள். இந்த சுவிசேஷ யுகத்தின் அழைப்பை தரிசித்து

நடப்பவர்களுக்கு அல்ல, விசுவாசித்து நடப்பவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இப்படியாக விசுவாசத்தினால் நடக்க முடியாதவர்கள், தேவனோடும் நடக்க முடியாது. ஏனெனில், "விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாக இருப்பது கூடாதக் காரியம்". இப்படியாக விசுவாசியாதவர்கள், விசுவாசத்தில் துவங்கினாலும், இவர்கள் அதில் முழுமையாக வளர வேண்டும். வளர்ந்தால் மட்டுமே எதிர்த்து நின்று ஜெயிக்க முடியும் - "இந்த உலகத்தை ஜெயிக்கும் ஜெயம் - நம்முடைய விசுவாசமே."(1யோவான் 5:4)

எதையும் எளிதில் நம்பக்கூடிய மனப்பக்குவத்திற்கும், விசுவாசத்திற்கும் உள்ள வித்தியாசத்தை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மில்லியன் கணக்கான ஜனங்கள் மூடநம்பிக்கையில் மூழ்கியிருக்கிறார்கள். மேலும் ஆதாரம் இல்லாத ஆயிரக்கணக்கானக் காரியங்களை எளிதில் நம்புகிறார்கள். நம்பக்கூடாதக் காரியங்களை நம்பி, நம்ப வேண்டியக் காரியங்களை நம்பாதிருக்கிறார்கள். இதில் பில்லியன் கணக்கான ஜனங்கள் கிறிஸ்தவர்கள். இப்படிப்பட்ட மூடநம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும், தவிர்க்கப்பட்டு, சீர்த்திருத்தி கண்டிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும். உண்மையான விசுவாசம் ஊக்குவிக்கப்பட்டு, வளர்ச்சியடைந்து, பலப்படவேண்டும். இது பாரம்பரியக் கொள்கைகள், மற்றும் தத்துவங்கள் அல்லது கற்பனைகளின் அடிப்படையில் அல்ல தேவனுடைய தெய்வீக வாக்குறுதிகளின் அடிப்படையில் தேவன் பேரில் உள்ள விசுவாசமே உண்மையான விசுவாசம்.

தேவனுடைய பெயரின் அர்த்தத்திற்கு ஏற்றவாறு அவர் தம்மில் தாம் ஜீவனுடையவரும், சர்வவல்லமையுள்ளவரும், சர்வஞானம் படைத்தவரும், மிகுந்த அன்புள்ளவருமாக இருக்கிறார் என்று நாம் விசுவாசித்து, அவரை உண்மையாகத் தேடுபவர்களுக்கு அவர் பலனளிப்பார் என்பதை நாம் விசுவாசிக்கும் பட்சத்தில், அவரை உண்மையாகத் தேடி, அவருடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதைப்பற்றி நாம் தெரிந்துக் கொண்டால், அவர் பேரில் நாம் முழு நம்பிக்கைக் கொள்ளலாம். மேலும், அதற்கேற்றவாறு நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம். தெய்வீக இரக்கங்களின் அடிப்படையில் இப்படிப்பட்ட, விசுவாசத்தின் துவக்கம் நம்மை கிறிஸ்துவைப் போல புதிதும், ஜீவனுள்ள நிலையில் தேவனோடு ஒப்புரவான ஒரு வாழ்க்கையில் வளரச் செய்கிறது. இப்படிப்பட்ட விசுவாசம் நம்மில் வளரும்பொழுது, கீழ்படிதலும், அதிகரித்து, புது சிருஷ்டிகளின் உறுப்பினர்களாக வேண்டிய ஆசீர்வாதங்கள் நம்மை வந்துசேரும். விசுவாசத்தின் வளர்ச்சி, தேவனுடைய புத்திரர்களாகவும், இயேசுவின் உடன் சுதந்திரர்களாகவும் தேவன் நமக்களித்த வாக்குறுதிகளை அதிகமதிகமாகப் பற்றிக்கொள்ளச் செய்கிறது. இதன் விளைவாக நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்று ஜெனிப்பிக்கப்பட்டவர்களாக, அபிஷேகிக்கப்பட்டு, தேவப் புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்படுவோம்.

மேலும், பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள குத்துவிளக்கின் வெளிச்சம், விசுவாசத்தினால் மட்டுமே காணக்கூடிய காரியங்களைக் காணச்செய்து, குத்துவிளக்கு, சமூகத்து அப்பங்கள், தூபப் பீடம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்திலிருக்கும் ஆசரிப்புப் பெட்டியை பொறுத்த வரையில் மகா பிரதான ஆசாரியரின் விசேஷித்த ஊழியங்களைப் பற்றிய தெளிவானக் காரியங்களையும், அதிகமான பலனை அடைய நம்மை ஊக்குவிக்கும். தெய்வீக வார்த்தைகளில் வெளிப்படுத்தியிருப்பதுப் போல, இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையில், கீழ்ப்படிதலான விசுவாசம், தெய்வீகக் கிருபைகளின் வெவ்வேறு வழிகளிலும், உறுதியாக வளர்ச்சியடைந்து, தெளிந்த புத்தியைக் கொடுத்து, புதிய சிந்தையின் துவக்க நிலையை அடைகிறது. இந்நிலையை நாம் அடையும் வரைக்கும், அந்நிலையில் நாம் பெறக்கூடிய நன்மைகளைப் பற்றி அறிவதில்லை. (1கொரி 2:9)

பரிசுத்த ஆவியின் எடுத்துக்காட்டுகளில், வாக்குத்தத்தங்களின் வார்த்தையின் மூலம் நாம் பார்க்கும்போது, மிகுதியான விலையேறப்பெற்ற பரலோகக் காரியங்கள், முதலாம் உயிர்த்தெழுதலின் மகிமையோடு பெறுவதை நாம் காணலாம். தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது, நீதி வாசம் செய்யும், அப்பொழுது, பூமியில் உள்ள முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். தேவனுடைய மகிமையோடும், அவருடைய தெய்வீக அன்பின் பிரமாணத்தோடும் இசைந்து வாழ மனதில்லாத அனைத்து தனிநபர்களும் அழிக்கப்படுவார்கள். புது சிருஷ்டிகள் தங்களுடைய விசுவாசக்கண்களின் மூலம் அனைத்தையும் காண்பார்கள். இயற்கையான மனிதனுக்குத் தெளிவாகவும், உறுதியாகவும் தெரியாதக் காரியங்கள் அனைத்தையும், இந்த விசுவாசக்கண்களின் மூலமாகக் காணலாம் என்று அப்போஸ்தலர் உறுதியளிக்கிறார். (1கொரி 2:9,10)

ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட விசுவாசத்தின் கிரியைகள் முழுமையாகக் காணப்படாமல் இருந்தாலும், புது சிருஷ்டியின் இன்றைய நிலைக்கான பொக்கிஷத்தின் ஒரு பங்காகும். மேலும் ஒவ்வொரு நம்பிக்கையும், மகிழ்ச்சியும் அதனோடு இணைந்திருப்பதினால் "வரவிருக்கும் மகிமையின்" முன்னறிவிப்பை இது மட்டுமே தரக்கூடியதாக இருக்கிறது. "உண்மையில், இந்த விசுவாசத்தின் அடிப்படையில்தான் நம்முடைய நம்பிக்கையும், சந்தோஷங்களும் கட்டப்பட்டிருக்கிறது" என்று அப்போஸ்தலர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். (எபிரெயர் 11:1) இதனால், இதுவரைக்கும் காண முடியாதக் காரியங்களை நம்முடைய மனது காண்கிறது. - "காணக்கூடியவைகள் அநித்தியமானவைகள், காணக்கூடாதது நித்தியமானவைகள்" என்று இதை குறித்து அப்போஸ்தலர் தெளிவாகக் கூறுகிறார்.

இன்று நாம் பெற்றிருக்கும் சொத்துக்களைத் தக்கவைத்துக் கொள்ள விசுவாசம் எவ்வளவு அவசியமாக இருக்கிறது. மேலும் இனி வரும் ஆசீர்வாதங்களையும் இது தெளிவாகக் காட்டுகிறது என்று யாக்கோபும் கூறுகிறார் - "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது, அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பனாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்." (யாக் 1:5-8)

உறுதியான விசுவாசமில்லாமல், எதையும் மேற்கொள்வது கூடாதக் காரியம் என்று அவர் தெளிவாகக் காட்டுகிறார். ஆகவே வேதத்தில் உள்ள ஒவ்வொரு வசனமும் விசுவாசத்தில் நாம் வளர்ச்சியடைய நம்மைத் தூண்டுகிறது. இந்த விசுவாசம் வளர நாம் "ஆண்டவரே எங்கள் விசுவாசம் விருத்தியடைய கிருபை செய்தருளும்" என்று அப்போஸ்தலர்களைப் போல ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். மேலும் நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படுவதற்காக தேவன் வைத்திருக்கும் விதிமுறைகளையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். நம்முடைய ஜெபங்கள் நேர்மையாக இருக்கும் பட்சத்தில், நேர்மையான உள்ளத்தோடு தேவனைத் தேடி, அவருடைய வார்த்தைகளை அறிந்துகொண்டு, அவைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய ஊழியத்தில் மகிழ்ந்து, ஆவியின் கிருபைகளைப் பெற்று விசுவாசத்தில் பூரண வளர்ச்சி அடையலாம். "ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள், இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.

R1859 [col.1]:- (கேள்வி எண் 14 காண்க)

கிறிஸ்துவ வாழ்க்கையைக் குறித்து இதே காரியத்தை அப்போஸ்தலனாகிய பவுலும் வலியுறுத்துகிறார். மிகவும் அபாயமான ஒரு யுத்தமாக அவர் இதை அடையாளப்படுத்தி, கிறிஸ்துவின் உண்மையான படைவீரர்கள் அனைவரையும் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ள துரிதப்படுத்துகிறார். ஏனெனில், சாத்தானின் பலவிதமான தந்திரமான எதிர்ப்புகளைக் குறித்து அவர் பேசும்போது - "மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல, துரைதனங்களோடும், அதிகாரங்களோடும், அந்தகார லோகாதிபதிகளோடும்.... எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாக இருக்கும்படிக்கு.... சத்தியம் என்னும் கச்சையையும், விசுவாசம் என்னும் கேடகத்தையும் நீதி என்னும் மார்க்கவசத்தையும் அணிந்திருங்கள் " (எபே 6:10-18) என்று அறிவுரைக்கூறுகிறார்.

நம்முடைய எதிராளியாகிய சாத்தான் இவ்வுலகத்தின் கோட்பாடுகள், நம்பிக்கை, குறிக்கோள், ஆசை மற்றும் விருப்பங்களில் எவ்வளவு வல்லமையுள்ளவனாகச் செயல்படுகிறானோ, அதற்கு எதிரானப் பாதையில் கிறிஸ்துவ வாழ்க்கை பயணிக்கவேண்டும். இந்த உலகத்தின் காரியங்களில் நம்முடைய பலவீனங்களை அறிந்த சாத்தான் நம்மை எளிதாக ஏமாற்றி பாவ வழிகளுக்கு நம்மை நடத்திவிடுகிறான். இவைகளை நாம் பார்க்கும்பொழுது நிர்ப்பந்தமான சூழ்நிலையில் நாம் அகப்பட்டிருக்கிறோம் என்பதை உணரலாம்.

அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுவதுப்போல நம்முடைய எதிராளி - மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை - ஆகிய மூன்று காரியங்களில் நம்மை வீழ்த்த முயற்சிக்கிறான். (1யோவ 2:16)

முதலாவதாகச் சொல்லப்படும் காரியம், இந்த முழு உலகமும் தீவிரமானப் பசியோடு அல்லது அதிகமான உணர்ச்சிகளோடு செயல்படுகிறார்கள். இவர்கள் சட்டப்படி செய்வதாக நினைத்துக்கொண்டு, சட்ட விரோதமானக் காரியங்களைச் செய்து, மனித நிலையைத் தரம் குறைத்துக் கொள்கிறார்கள்.

இரண்டாவது - "கண்களின் இச்சை" - மனிதக்கண்கள் காணும் யாவையும் சொந்தமாக்கிக்கொள்ள முயற்சிக்கும். இது நன்மையாகத் தோன்றும். அதாவது விழுந்துப்போன நிலையில் இது உகந்ததாகத் தோன்றும். தங்களுடைய கண்ணோட்டத்தில் மற்றவர்களின் உரிமைகளையும் அவர்கள் பொருள்படுத்துவதில்லை. ஒருவேளை சொத்துக்காக அல்லது புகழ்ச்சிக்காக அல்லது வல்லமைக்காக அல்லது சமுதாயத்தில் நல்ல பதவிக்காக மனிதன் போராடலாம். இதற்காக சரீரத்தின் முழு பெலமும், சிந்தையும் செலவழிக்கப்படுகிறது.

மூன்றாவதாக - ஜீவனத்தின் பெருமை" - இது சுயநலத்தின் மலர்ச்சியாக இருக்கிறது. இது தேவனுக்கும், சகலவிதமான நல்ல ஜனங்களுக்கும் வெறுப்பூட்டும் காரியமாக இருக்கிறது. இது ஒரு மனிதனின் அவமானங்களைப் பிரகடனப்படுத்துவதாக இருக்கிறது. மாம்சத்தின் இச்சைகளும், கண்களின் இச்சைகளும் அவர்களுக்கு குறுகிய மனப்பான்மை, குருட்டுப் பிடிவாதம் போன்ற சாபங்களை வருவிக்கிறது. மேலும் இப்படிப்பட்ட குணங்களில் அவர்கள் வளர்ச்சியடையும்போது, மற்றவர்களுடைய சுதந்தரத்தையும், உரிமைகளையும் பற்றிக்கொண்டு, அர்த்தமில்லாத பெருமையிலும், வளர்ந்து, குறுகியக்காலத்தில் பாழாக்கப்படுகிற காரியங்களில் வல்லமையாகச் செயல்பட்டு, உயர்வாக வாழ்ந்து கொண்டிருப்பர்.

இந்த மூன்று காரியங்களையும் கொண்டு எதிராளி நம்மைத் தாக்காதப்படிக்கு நம்முடைய ஆண்டவர் அயராத கண்விழிப்போடு நம்மை காத்துக் கொண்டிருக்கிறார். தன்னடக்கத்தோடு, விழித்திருந்து, நம்முடைய எதிராளியானவன் எந்த வகையிலும் நம்மை மேற்கொள்ளாதப்படிக்கு நாம் மிகவும் எச்சரிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும்.

அவன் தொடர்ந்து நம்மை தாக்கிக்கொண்டிருக்கிறான் என்பது நிச்சயம், மேலும் இந்தத் தாக்குதல்கள் எந்த எச்சரிப்புமில்லாமல், திடீர் என்று பலத்த வேகத்தோடு வருகிறது. இதை அனைவரும் நம்முடைய வாழ்க்கையில் சந்திக்கிறோம். நாம் அசதியாக இருக்கும் நேரத்திலும், கவனியாத நேரங்களிலும், நம்முடைய எதிராளி நம்மை மேற்கொள்ள குறிவைப்பான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. நம்மால் முடிந்தவரைக்கும் சர்வஜாக்கிரதையாக இருந்தாலும், எதிராளியை நாம் மேற்கொள்ளும்பொழுது, நாம் வேதனை அடைகிறோம். ஏனெனில், நாம் பெற்ற வல்லமை அனைத்தையும் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்தச் சூழ்நிலைகளில் நாம் நம்முடைய பெலத்தை நம்பினால் சகலமும் தகர்த்துப் போடப்படும். ஆகவே நாம் தேவனுடைய பிள்ளைகளாகவும், கிறிஸ்துவுக்கேற்ற போர் வீரனாகவும் இருக்கும்பட்சத்தில் இவ்விதமான பொறி பறக்கும் சோதனைகளை ஏதோ புதுமையாக எண்ணவேண்டாம் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு நம்மை எச்சரிக்கிறார். (1பே 4:12- 16) ஒரு கிறிஸ்துவ போர்வீரன் இவைகளுக்கு மிக எச்சரிப்போடு ஆயத்தமாக இருக்கவேண்டும்.

"விசுவாசத்தில் உறுதியாக நின்று பிசாசை ஜெயிக்கவேண்டும்" என்று பேதுரு இங்கு குறிப்பிடுகிறார். இதே கருத்தை யோவானும் வலியுறுத்துகிறார். (1யோவா 5:4) நாம் விசுவாசத்தில் உறுதியாக இருந்தால் அதில் நாம் நீடித்திருப்பது எப்படி? தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், அதன் மகத்துவங்களையும் நாம் இறுகப்பற்றிக்கொண்டு, விசுவாசத்தோடு தேவனுடைய வல்லமையையும் பற்றிக்கொண்டு, தேவைப்படும் ஒவ்வொரு நேரத்திலும் நாம் உதவிகளைப்பெற கிருபாசனத்தண்டையில் சேரவேண்டும். தேவனுடைய தனிப்பட்ட நீதியினால் நாம் விசுவாசிகளாகக் காணப்படுகிறோம். ஆகவே அவருடைய கண்கள் எப்பொழுதும் நம்மேல் நோக்கமாயிருக்கிறது. எனவே, நாம் அவருடைய பிரியமானக் குணங்களை நமக்குள் வளர்க்க முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய இறுதியான போராட்டத்திற்கு இவைகள் மிக அவசியமானது என்று பேதுருவும் கருதுகிறார் - 11பே 1:5-10

மிக சிறந்ததும், விலையேறப் பெற்றதுமான வாக்குத்தங்களின் மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசம், நமக்கு புத்துணர்வோடு, புதுப்பிக்கப்பட்ட தைரியத்தையும், அந்தத் தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும்,

தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள் என்று அவர் நம்மை துரிதப்படுத்துகிறார். மேலும், இவைகளை செய்வீர்களானால், நிச்சயமாக நீங்கள் விழுந்துப்போக மாட்டீர்கள் என்கிறார்.

மேலே கூறப்பட்ட குணங்களில் நாம் வளர்ச்சியடைகையில், தேவனுடைய சத்தியங்களை முழுமையாக அறிந்துகொள்ள நம்முடைய ஆவிக்குரிய கண்களும் தெளிவாகக் காரியங்களைப் புரிந்துகொள்ளும். இப்படியாக, "நீதி என்னும் ஆயுதத்தை நம்முடைய வலது கரத்தில் ஏந்தி, எதிராளியின் பொறி பறக்கும் அம்புகளை நமது இடது கரத்தால் தகர்த்து எறிந்து, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை ஜெயித்து, நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

கிறிஸ்துவ ஜீவியத்தில் இந்த மாபெரும் யுத்தத்தில் நமக்கு முன் எப்படிப்பட்ட வேலைகள் வைக்கப்பட்டிருக்கிறது என்று பாருங்கள். இது நம்முடைய ஜீவியகாலம் முழுவதும் உள்ள போராட்டமாக இருக்கிறது. நம்முடைய மாம்சத்திற்குள் ஊடுருவியிருக்கும் வல்லமையுள்ள எதிராளியோடு நாம் யுத்தம் புரிய வேண்டும். இது மிகப் பயங்கரமானதும், ஆபத்தானதுமாக இருக்கிறது. இந்த உலகத்தின் ஆவியால் நாம் அதிகமதிகமாகப் பாதிக்கப்படும்போது, சுயநீதி, பொறாமை, பெருமை, வீணான மகிமை, தான் என்ற அகங்காரம் போன்ற குணங்கள் நம்மை ஆட்கொண்டு விடும்.

ஆகவே, நித்தமும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் தேவனுடைய கிருபையைத்தேடி உலகம், மாம்சம் மற்றும் பிசாசை எதிர்த்து நல்ல போராட்டத்தைப் போராடுவோம். "பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன், பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்." (நீதி 16:32) ஆம், இந்தப் பொறுப்பு மிகப் பெரியது. ஆகவே இந்த வசனத்தின் அடிப்படையில் நாம் நல்ல போராட்டத்தைப் போராடுவோம். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு மணி நேரத்திலும், இந்தப் போராட்டத்தை வெற்றியுடன் நடத்தி, நம்மை நாம் பரிசுத்தப்படுத்தி, நம்முடைய குணலட்சணங்களை மெருகேற்றுவோம். முடிவு பரியந்தம் இவைகளைத் தொடர்ந்து நடப்பிப்போம்.

முழு அன்போடும், கனிவோடும், ஆண்டவரின் போர்ச்சேவகர்களுக்கு அப்போஸ்தலனாகிய பேதுரு - "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடனுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக" என்று ஊக்கமளிக்கிறார். இப்படிப்பட்ட பாடுகளின் மூலமே நாம் கிறிஸ்துவுக்கு ஏற்ற போர் வீரராக மாற முடியும். பூரணமான தன்னடக்கம், பொறுமை, ஞானம் மற்றும் அவருடைய வார்த்தைகளின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இயேசுவுக்குள் நாம் இளைப்பாறவேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி, தன்னுடைய அனுபவத்தையே அவர் நமக்கு எழுதியுள்ளார். ஆகவே நாம் ஒவ்வொரு வருடத்தின் முடிவிலும், பூரணத்தை நோக்கி வளர்ச்சி அடைவோம்.

R2309 -"கிறிஸ்தவர்களின் போராட்டம்" (கேள்வி 13 மற்றும் 15 காண்க)

"..நல்ல போராட்டத்தைப் போராடினேன், நித்திய ஜீவனைப் பற்றிக்கொண்டேன்..." - 1தீமோ 6 : 12

கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை சமாதானம் செய்கிறவர்களாகவும், "கூடுமானவரைக்கும் அனைவரோடும் சமாதானமாக இருங்கள் என்று சொல்லியிருந்த போதிலும், தன் ஆவியை அடக்குவதினால், இந்த உலகத்தில் கேள்விப்படாத அளவிற்கு அவர்களே சிறந்த போர்வீரர்களாக இருக்கிறார்கள். ஆனால் அதில் இரண்டு விதமான போராட்டங்கள் உண்டு. நன்மையானவைகளை அடைவதற்கும், உண்மையை நிலைநாட்டுவதற்கும், தூய்மையான தெய்வீகத்திற்காகப் போராடுவதும் நல்ல போராட்டம் - இதுவே நீதியின் போராட்டமாகும். மற்றொன்று தீமையானப் போராட்டங்கள், இது தேவையற்ற காரியங்களுக்கானப் போராட்டம்.

ஆனால் நம்முடைய பாடத்தில், விசேஷமாக நல்ல போராட்டத்தை நடத்துவதற்காக பவுலால் குறிப்பாகச் சொல்லப்படும் வீரர்கள் யார்? அவர் அனைவரையும் இந்தப் போராட்டதிற்கு அழைக்கிறாரா? அல்லது பாவிகளை அழைக்கிறாரா? அல்லது கிறிஸ்தவர்களை மட்டும் அழைக்கிறாரா? நிச்சயமாக இல்லை. அவர் கிறிஸ்துவின் சரீரமாக அழைக்கப்பட்டிருக்கும் அர்ப்பணிக்கப்பட்ட சபையை அழைக்கிறார். இதை இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசு கிறிஸ்துவின் வாய்மொழிகளாக அப்போஸ்தலர் இங்கு குறிப்பிடுகிறார். அவரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் மட்டுமே இந்தப் படையில் சேர்ந்து பணிபுரியும் அனுமதி பெறுவார்கள். இருப்பினும், இந்த அழைப்பு பொதுவாக

இந்த உலக ஜனங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதாவது தேவனோடு உடன்படிக்கை செய்யாதவர்களிடம் இந்த அழைப்பு கொடுக்கப்படுவதில்லை. அவரோடுக்கூட உடன்படிக்கை செய்தவர்களை அவர் அறிவார். இந்நாள் வரைக்கும் நடக்கக்கூடிய போராட்டங்களுக்கு இவர்களுக்கு மட்டுமே சில விதிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய இரட்சிப்பின் அதிபதி தன்னுடைய போராட்டத்தைத் துவங்கியது முதல், கிட்டத்தட்ட பத்தொன்பது நூற்றாண்டுகளாக இது நடந்துவருகிறது.

நாம் யாருக்காகப் போராட வேண்டும்? தேவனுக்காகவா? - கிறிஸ்துவுக்காகவா? இல்லை. நாம் நமக்காகத்தான் போராட வேண்டும். சிலர் நல்ல போராட்டத்தைத் தேவனுக்காகப் போராடி, அவரிடத்தில் பரிசுகளையும், நன்றிகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்ற தவறானக் கருத்தை கற்பனை செய்து கொள்கிறார்கள். சர்வ வல்லமையுள்ள தேவனுக்காக யாரும் போராட வேண்டிய அவசியம் இல்லை. எல்லையற்ற வல்லமை பெற்ற நம்முடைய சர்வ வல்லமையுள்ள தேவன், தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்வார். நம்முடைய விழுந்துப்போன முயற்சிகள் அவருக்கு அவசியமில்லை. எடுத்துக்காட்டாக அமெரிக்காவில் வாழ்பவர்கள் நாங்கள் அமெரிக்காவுக்காகப் போராடுகிறோம் என்றால் பொருள் என்ன? அமெரிக்காவில் உள்ள தங்களுக்காக தான் போராடுகிறார்கள் என்று பொருளாகும். அதேபோல் நமக்காகப் போராடும் தேவன், நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவதற்கு நம்மை ஊக்குவிக்கிறார். அதேபோல் இந்தப் போராட்டத்தின் அம்சங்கள் அனைத்தையும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும்.

நாம் யாருக்கு எதிராகப் போராட வேண்டும்? நாம் நம்முடைய அயலகத்தாரோடு அல்லது போராயுதங்களோடு நாம் போராடுவதில்லை என்று நாம் பதில் அளிக்கிறோம். நம்முடைய எதிரிகளிடமும், நம்மை உபத்திரவப்படுத்துபவர்களிடமும், நமக்கு எதிராக தவறான காரியங்களை பழிச்சொல்லுபவர்களிடமும் அல்லது சாத்தானின் வஞ்சகமானத் தந்திரங்களினாலும், மூடநம்பிக்கை, தவறானப் போதனை இன்னும் பல காரியங்களால் குருட்டாட்டம் பிடித்தவர்களாக இருக்கிறார்கள் என்று நாம் இவர்களைக் காணும்போது தெளிவாக அறிந்துகொள்ளலாம். ஆகவே நாம் இவர்களுக்கு எதிராக செயல்படாமல், வாய்ப்புகள் ஏற்படும்போது அவர்களுக்கு நன்மையானவைகளைக் கற்றுக்கொடுக்க கடமைப்பட்டிருக்கிறோம் -" எதிர்த்துப் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாக..... சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும். (11தீமோ 2:25,26) மேலும், இப்படிப்பட்டவர்களோடு நாம் தொடர்பு கொள்கையில், ஒருவேளை அவர்களின் மனக்கண்கள் திறக்கப்பட்டு, உண்மையான அன்பின் ஆவியை அவர்களும் பெறுவதற்கான வாய்ப்பு உண்டாகும்படி தீமைக்குப் பதிலாக நன்மையையும், இரக்கமற்றவைகளுக்குப் பதிலாக கரிசனையையும், வெறுப்புக்குப் பதிலாக அன்பையும், நம்மைப்பற்றி தவறாகப் பேசுபவர்களைப்பற்றி நன்மையாகப் பேசவும், நம்மை உபத்திரவப்படுத்துபவர்களை நேசிப்பதற்கும், நம்முடைய இரட்சிப்பின் அதிபதி நமக்குக் கட்டளைக் கொடுத்திருக்கிறார்.

ஆகவே நம்முடைய போராட்டம் பாவத்திற்கு எதிராக இருக்கவேண்டும் - இதுவே நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமின் மூலம் முழு மனுக்குலத்தைக் கைப்பற்றின மிகப்பெரிய விசாரணைக்காரன். இந்நாள் வரைக்கும் தன்னுடைய ஆதிக்கத்தை மனுக்குலத்தின் மேல் செலுத்தி அதன் பலனாகிய மரணத்தைக் கடந்த ஆறாயிரம் வருடங்களாக வியாதி, வலி, வேதனை, மற்றும் உபத்திரவம், கொடுமைகள் மூலம் செலுத்தி வருகிறான்

சாத்தான் நம்முடைய மறைமுகமான எதிரி, ஏனெனில், அவனே நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமை பாவத்தில் விழத்தள்ளி, முதல் அடிமையாக்கினான். இந்நாள் வரைக்கும் சாத்தான் இதே தந்திரத்தைப் பயன்படுத்தி வருகிறான். நம்மையும் இந்தப் பாவத்திற்கு அடிமைகளாக இருக்கும்படி வழிநடத்துகிறான். இருப்பினும் நம்முடைய யுத்தம் சாத்தானோடு அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். " தேவன் உன்னை கடிந்துகொள்வார்" என்று மிகாயேல் தூதன் சாத்தானிடம் சொன்னப் பதிலை நாம் இங்கு நினைவுக்கூறலாம். தேவன் சாத்தானை அழிக்க நியமித்திருக்கும் குறித்தக் காலத்திற்காக நாம் காத்திருக்க வேண்டும். ஆகவே நாம் சாத்தானைக் கடிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. அவனுடைய வஞ்சகமான தந்திரங்களையும், பாவத்திற்கு ஏதுவாக அவனுடைய தவறான வழிநடத்துதலையும் நாம் புரிந்துகொண்டு அதிலிருந்து விலக வேண்டும், எச்சரிப்போடும் இருக்க வேண்டும்.

"ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு." (எபே 6:12) என்று ஆண்டவர் நமக்குக் கட்டளையிடுகிறார். பாவத்தின் அதிபதியாகிய சாத்தானின் விதவிதமான வலைவீசுதல்களுக்கு நாம் எதிர்த்து நிற்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அவனுடைய தந்திரமான சூழ்ச்சிகளே நமக்கு எதிராக யுத்தத்தை வருவிக்கிறது. ஆகவே நாம் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும், ஏனெனில், நம்முடைய சாமர்த்தியத்தை அவனோடு என்றுமே ஒப்பிடமுடியாது. அவனைப் பார்க்கும்போது நாம் மிகவும் பலவீனரும், விழுந்துப்போன நிலையில் இருக்கிறோம். இப்படியிருக்க, இந்தப் போராட்டத்தை போராடுவதற்கு நிரந்தரமாக நாம் விடப்படுவதும் இல்லை. நம்முடைய அதிபதியாகிய இயேசு, பாவத்தைவென்று மகிமைப்பட்டிருக்கிறார். இப்பொழுது நாம் அவருடைய பங்காக இருக்கிறோம். ஆகவே - "தேவன் நம் பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாக நிற்பவன் யார்? " என்று நாம் தைரியமாகச் சொல்லலாம்.

உலகம், மாம்சம், சாத்தான் ஆகிய இந்த மூன்றும் நம்மை பாவத்திற்கு அடிமையாகத் தன்வசம் சிறைபிடிப்பதற்கு ஏற்பாடு செய்யும் அனைத்து வழிமுறைகளையும் இங்கு அப்போஸ்தலர் நமக்கு மொத்தமாகக் குறிப்பிடுகிறார். பாவத்திற்கு அதிபதியான சாத்தானுடைய வல்லமையானச் செயல்களை இந்நாள் வரைக்கும் நாம் கண்டிருக்கிறோம். அடுத்ததாக, இந்த உலகத்தை நம்முடைய எதிரியாக எந்தவிதத்தில் காணலாம்? இதை நாம் எவ்வாறாக ஜெயிப்பது? நிச்சயமாக இந்த உலகத்தில் நாம் காணக்கூடியவர்களோடு போராட வேண்டியதில்லை, அல்லது துன்மார்க்கரோடு போராட வேண்டியதில்லை. ஏனெனில், அவர்கள் அனைவரின் மனக்கண்களையும் சாத்தான் குருடாக்கிவிட்டான். ஆகவே நாம் இந்த உலகத்தின் ஆவியோடு மட்டுமே போராட வேண்டும். இந்த உலகத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன் சிந்தனைகளுக்கும், அதன் இலக்குகளுக்கும், ஆசைகளுக்கும், ஜீவனத்தின் பெருமைகளுக்கும் நாம் எதிர்த்து நிற்க வேண்டும் - இது நம்முடைய அனுதின போராட்டமாக இருக்கிறது.

இறுதியாக, நம்முடைய போராட்டம் மாம்சத்தோடு அதாவது நம்முடைய சொந்த மாம்சத்தோடு தொடர்கிறது. நம்முடைய முற்பிதாவாகிய ஆதாம் பாவத்தில் விழுந்த நாளிலிருந்து, பாவம் மனுக்குலத்தை இறுகப்பற்றிக் கொண்டு, நம்முடைய சிந்தை, செயல்பாடுகள் அனைத்தின் தரத்தையும் குறைத்துக்கொண்டே வருகிறது. இது தொடர்ந்து தீமைக்கு மட்டுமே வழிநடத்துகிறது. பாவங்களினால் ஏற்படும் நன்மைகள், பாசம், நம்பிக்கை விருப்பம், ஆசைகள் மற்றும் இன்னும் அனைத்துக் காரியங்களையும் வெறுத்தால் மட்டுமே நாம் இதிலிருந்து தப்பிக்கமுடியும். இவைகளைக் கண்டறிய மெய்யான வெளிச்சம் தேவைப்படுகிறது. இந்த வெளிச்சத்தில் நம்முடைய விழுந்துப்போன நிலைமையைத் துல்லியமாக அளவிடலாம். ஆனால் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாகிய பிரதான ஆசாரியர் நம்மை இந்தப் பாவத்திலிருந்து மீட்க தன்னுடைய ஜீவனையேக் கொடுத்தார். நம்முடைய இயலாமையைக் கண்டு அவர் மனதுருகி, பாவத்தின் நுகத்திலிருந்து நம்மை விடுவித்தார்.

இருப்பினும், நம்முடைய சரீரங்களில் பாவங்களின் செயல்பாடுகள் இந்நாள் வரைக்கும் காணப்படுகிறது. கடந்த 6000 வருடங்களாக நாம் அடிமையாக இருந்ததினால், பாவம் செய்யக்கூடிய எண்ணங்கள் இன்னும் நம்மைவிட்டு விலகவில்லை. நாம் இப்பொழுது விடுதலைப் பெற்று கிறிஸ்துவின் புதிய கற்பனைகளை சிந்தையில் நடைமுறைப்படுத்தவும், அவருடைய சிலுவையின் ஒரு போர் வீரனாக அழைக்கப்பட்டு, நீதிக்காகவும், நன்மைக்காகவும் நாம் போராடுவதால், நம்முடைய பழைய மாம்சத்தின் தவறான விருப்பங்களைச் செயல்படுத்துவதற்கு, அந்தப் பழைய விசாரணைக்காரனுக்குக் கீழ் நம்முடைய மாம்சம் இனி ஒருபோதும் கீழ்படுத்தப்படுவதில்லை. ஆகவே கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாக வளர, நம்முடைய மாம்சத்தின் விருப்பங்களுக்கு எதிராக நாம் அதிகபட்சமானப் போராட்டங்களை அனுதினம் போராடவேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய யுத்தகளத்தில், ஒரு மிகப் பெரிய போர் வீரனாகிய பவுலைப் போல நாமும் - "மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை (மாம்சத்தையும் அதன் ஆசை விருப்பங்களையும்) ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் (புது சிந்தைக்கு)." (1கொ 9 :27)

நாம் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியின் கீழ் வந்த காலமுதல், நல்ல போராட்டத்தைப் போராடுவதற்கு நம்மை ஒப்புக்கொடுத்து, நம்முடைய ஜீவனையும் அவருடைய பணிக்காக அர்ப்பணிக்கிறோம் - அந்நேரமுதல் புது உடன்படிக்கையின் அடிப்படையில் நம்முடைய சரீரங்கள் மரித்ததாகக் கருதப்படுகிறது. அப்பொழுது நம்முடைய சிந்தை புதுப்பிக்கப்படுகிறது. தேவனோடு தொடர்புகொள்ளும் ஒரு புதிய ஜீவனைப் பெறுகிறோம். அதற்கு பின் நம்முடைய மாம்சத்திலிருக்கும் பாவக்கிரியைகள் தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்துவுக்குள் முழுமையாக செயலற்றுவிடும். அதற்கும் மேலாக சில பாவக்கிரியைகளைத் தேவன் புது சிருஷ்டியின் கிரியைகளாகக் கருதாமல், அப்படிப்பட்ட பாவங்களை எதிர்த்து நின்று போராட அவருடைய சுத்தக் கிருபையை அளிப்பதாக வாக்களித்திருக்கிறார்.

மாம்சத்திலிருக்கும் இந்த சத்துருக்களே, நமக்கு அதிகமான உபத்திரவங்களைத் தரக்கூடியதாக இருக்கிறது. சாத்தான் இதன் வழியாகப் புது சிந்தைக்கு எதிராக நம்முடைய மாம்சத்தை ஊக்குவித்து நம்மை மீண்டுமாக பாவத்திற்கு அடிமைகளாக வழிநடத்த முயற்சிக்கிறான். சொல்லப்போனால், "கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டி சுற்றிலும், எதிராளிகளால் சூழப்பட்டு, மீண்டும் அடிமைத்தனத்திற்குக் கொண்டு செல்ல முயற்சிக்கப்படுகிறது." ஆகவே நாம் போராட வேண்டும். நமக்காகப் போராட வேண்டும், நம்முடைய விடுதலைக்காகப் போராட வேண்டும், நம்முடைய பலவீனங்களுக்கு எதிராகப் போராடவேண்டும், இந்த உலகத்தின் ஆவிக்கு எதிராகப் போராட வேண்டும், சகலமும் நன்மையாகத் தோன்றச் செய்யும் சாத்தானின் வஞ்சனையான கண்ணிக்கு எதிராகப் போராட வேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு கிறிஸ்துவப் போர்வீரன் எச்சரிப்போடு தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களை அணிந்துகொள்ள வேண்டும். விசேஷமாக தன்னுடைய சொந்த மாம்சத்தைக் குறித்து எச்சரிப்போடிருக்க வேண்டும்.

நம்முடைய தேவனை இரட்சிப்பின் அதிபதியாகப் பெற்றிருப்பதற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நம்முடைய அறியாமையைத் தவிர்க்கவும், சாத்தானின் வஞ்சனைகளை உணர்ந்துக் கொள்ளும் ஞானத்தை அவரே நமக்கு இரட்சிப்பின் தலைச்சீராவாக தந்ததற்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். கிறிஸ்துவின் ஈடுபலியினால் வந்த நன்மையை நம்முடைய அபூரணத்தை நிறைவாக்கி, நித்திய ஜீவனைப் பெற வழிநடத்தி, நமக்கு நீதி என்னும் மார்க்கவசத்தைத் தந்த தேவனுக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நம்முடைய விசுவாசம் என்னும் கேடகத்திற்காகவும், நம்பிக்கைக்காகவும், அவர் நமக்குள் துவங்கின நல்ல கிரியைகளை முடிக்க வல்லவராக இருப்பதற்காகவும் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் பாவத்திற்கு அடிமைகளாக இருக்கும் போதே தேவன் நம்மை நேசித்து, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நம்மை மீட்டு, நம்மை இன்று நேசிப்பதைவிட அதிகமாக நேசித்து, நீதியின் ஊழியக்காரனாக நம்மை மாற்றினார். தேவன் நமக்குக் கொடுத்த பாதரட்சைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். நீடிய பொறுமையுள்ளவர்களாக நம்மை காத்துக்கொள்வதற்குக் கொடுக்கப்பட்ட சத்தியமும், பரதேசிகளாக நாம் இந்த உலகத்தில் பயணிப்பதற்குத் தந்த பாதுகாப்புக்காகவும் அவரை ஸ்தோத்தரிப்போம். சாத்தானை எதிர்க்கும் சத்திய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்திற்காகவும் நாம் அவருக்கு நன்றிகளை ஏறெடுப்போம். நம்மை விலைக்கு வாங்கினவரும், நம்மை நேசித்தவராலும் நாம் வெற்றிப் பெறுவோம்.

மற்றவர்களுக்கானப் போராட்டம்

நம்முடைய போராட்டம் நம்முடைய சார்பிலும், மற்றவர்களின் சார்பிலும் இருப்பதை நாம் காண்கிறோம். மரணபரியந்தம் நம்மை காத்துக்கொள்வதற்கும், சுயாதீனத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் போராடுகிறோம். "பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே." (எபி 12:4) என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். ஆனால் நம்முடைய சகோதரர்களுக்காகவும் நம்முடைய ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாக இருக்கிறோம். மேலும், நம்முடைய இராஜாவின் சார்பில் நாம் போராட வேண்டிய அவசியமில்லாதிருந்தும் அவருக்கு எதிராகச் செயல்படுபவர்களுக்கு அவருடைய நாமத்தின் மகிமைக்காகவும், நீதியான ஆட்சிக்காகவும் நாம் போராடுகிறோம். இவைகள் அனைத்தையும் விட வேறு ஒரு காரியத்திற்காக நாம் போராடவேண்டியதாக இருக்கிறது. நாம் இதை தெளிவாகப் புரிந்துகொள்ள கடந்த பதினெட்டு நூற்றாண்டுகளாக இருந்த வளர்ச்சியையும், அதற்கு பின் நடந்து வரும் காரியங்களும், யுத்தங்களின் பின்விளைவுகள் என்று நம்முடைய ஆண்டவர் குறிப்பிடுவதை நாம் காணலாம்.

நாம் மட்டும் அல்ல, இந்த முழு உலகமும் ஆதாமினால் "பாவத்திற்குக் கீழ் விற்கப்பட்டது" - ஆகவே நாமும் இந்த முழு உலகமும் பாவத்திற்கு அடிமைகளாக இருக்கிறோம். அதுமாத்திரம் அல்ல நம்முடைய இரட்சகர் தன்னுடைய விலையுயர்ந்த இரத்தத்தினாலே நம்மை மீட்டு, நமக்கு மட்டும் அல்ல, இந்த முழு உலகத்திற்கும் மீட்பை ஏற்படுத்தினார். இப்படியாக நம்மை மீட்பதற்காக அல்ல, நம்மை பாவத்திலிருந்தும், பழைய விசாரணைக்காரனிடமிருந்தும், சகல அடிமைத்தனத்திலிருந்தும் மீட்க இயேசு உரிமை பெற்றிருக்கிறார். அவர் இந்த முழு உலகத்தையும் இப்பொழுது மீட்காவிட்டாலும், ஒரு சிறு கூட்டத்தாரை அவர் மீட்டுக்கொண்டிருக்கிறார். இந்நாளில் மீட்கப்பட்டவர்களே அவருடைய சேனைகளாக வருங்காலத்தில், அவரோடு நீதியுள்ள இராஜ்யத்தை ஸ்தாபித்து, இந்த முழு உலகத்தின் பாவங்களையும், தொலைத்து அவர்களை இரட்சிப்பதற்கு உதவி செய்வார்கள்.

"மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. .... அந்தச் சிருஷ்டியானது சுயஇஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது." (ரோ 8:19,21,22) என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார்.

இந்த முழு உலகமும் அடிமைத்தனத்தில் ஏகமாய் தவித்துக் கொண்டு, இந்த உலகத்தின் மீட்புக்காக காத்திருப்பதை நாம் காணும்போது -" இன்னும் கொஞ்சம் காலத்தில், வருவேன் என்றவர் சீக்கிரம் வருவார், அவர் தாமதிப்பதில்லை" என்ற பவுலின் வார்த்தைகளை நாம் நினைவு கூறலாம். அந்த நாள் தேவனுடைய பார்வையில் நேற்று கழிந்த நாள்போலவும், இராச்சாமம் போலவும் இருக்கிறது. நம்முடைய கண்ணோட்டத்தில் பார்க்கும்போது கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாகக் காத்திருந்த நாம் இன்னும் சற்று நேரம் மாத்திரம் காத்திருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு பின் இரட்சிப்பின் அதிபதியோடே இந்த உலகத்தின் மனுக்குலத்தை விடுவிக்கவும், பாவத்தின் நுகத்தை உடைக்கவும், மரணத்தின் சிறையிலிருந்து இரட்சிக்கவும் இவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படும்.

R1798 -" விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" (16ம் கேள்வி காண்க)

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார். நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்." - எபி 10 :38,39

சிந்திக்கக்கூடிய கிறிஸ்தவர்கள் நிச்சயமாக இந்தக் கருத்தைத் தவறவிடமாட்டார்கள் என்று அறிந்து அப்போஸ்தலன் இந்த வார்த்தைகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த வார்த்தைகள் உலகத்தாரை நோக்கிச் சொல்லப்படாமல், இயேசு கிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே சொல்லப்படுகிறது. விசுவாசத்தினால் அவர்கள் மரணத்திலிருந்து புதிதான ஜீவனுக்குள் பிரவேசித்திருக்கிறார்கள். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின, அவர்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கிறார்கள். தேவனுடைய புத்திரர்களாக இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்துவுக்கு உடன்பங்காளிகளாக இருக்கிறார்கள், ஆகவே அவர் பட்டப்பாடுகளில் பங்கடைந்து, மரண பரியந்தம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுவார்கள். இவர்கள் நித்திய ஜீவனில் ஜெநிப்பிக்கப்பட்டு, பரலோகத்தில் அழியாமை என்னும் நிலையை அடைய வழிநடத்தப்படுகிறார்கள்.

இந்த வகுப்பாருக்குத் தேவன் மிகுதியாக விசேஷித்த வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார். இவைகளை நாம் பெற்றுக்கொண்டோம் என்ற நம்பிக்கை உறுதியாக இருந்தால், நிச்சயமாக இவைகள் நம்முடைய வாழ்க்கையில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். ஒருவேளை இதை விசுவாசியாமற்ப் போனால் அதனால் நமக்கு ஒரு பயனும் இராது. தனிப்பட்ட வாழ்க்கையில் இது நடக்காவிட்டாலும், நாம் "விசுவாசத்தின் வழியாக மட்டுமே ஜீவிக்கவேண்டியவர்களாக" இருக்கிறோம். நாம் மரணத்திலிருந்து ஜீவனைப் பெற்றிருக்கிறோம் என்று விசுவாசிக்கவேண்டும். மேலும், அந்த விசுவாசத்தைத் தக்கவைத்துக்கொள்ளவும், அதில் வளர்ச்சியடையவும், சத்திய வார்த்தைகளினால் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படவும், தேவையான ஆவிக்குரிய ஆகாரங்களை அனுதினம் உட்கொள்ளவேண்டும்.

இவ்விதத்தில் நாம் விசுவாசத்தில் வளர்ந்தால், இக்காலத்திலும், வருங்காலத்திலும், நாம் அதிகபட்சமான சலுகைகளைப் பெறுவோம். மேலும் நம்முடைய ஆண்டவருடைய பிரசன்னத்திலும், பிதாவினுடைய சமூகத்திலும், உள்ள ஐக்கியத்திலும், நாம் அனுதினமும் மகிழ்ந்து களிக்கூறலாம். இப்படியாக, வசனங்களின் ஆறுதல்களினாலும், பரிசுத்தவான்களின் ஐக்கியத்திலும், பரிசுத்த ஆவியின் அச்சாரத்துடன் நாம் தேவனுடைய புத்திரர்கள் என்று சாட்சிப்பெறுவோம். இன்றைக்கு நாம் கொண்டிருக்கும் மகிமையான நம்பிக்கைகளோடு, பெறும் சிறப்புரிமைகள், நம்மை ஊக்குவித்து, நமக்குள் இருக்கும் புது சிருஷ்டியை ஜீவனோடு வைத்திருக்கிறது. இதுவே உலகம் அறிந்திராததும், நாம் அனுதினம் உட்கொள்ளவேண்டிய ஆகாரமாக இருக்கிறது. நாம் இந்த உலகத்தை விட்டும், அதன் ஆவியை விட்டும் தனித்து வாழ்வதற்கு இந்த உணவே நமக்கு வழி வகுக்கிறது. இதுவே விசுவாசத்தினால் நடப்பதாகும். இந்த உலகத்தின் வழக்கத்திற்கு முரண்பாடான ஒரு வாழ்க்கையை இது நமக்கு குறிப்பிடுகிறது. நாம் பொதுவாக காணக்கூடிய வாழ்க்கை மற்றும் மாம்சத்தின் விருப்பங்களே இந்த உலக வாழ்க்கையாகும். உலகத்தார் காணக்கூடியவைகளை நோக்குகிறார்கள். சிருஷ்டிகரின் கோரிக்கைகளையும், விருப்பங்களையும் முற்றிலுமாக நிராகரித்து விட்டு, தங்களுடைய விருப்பத்தின்படியும், நோக்கத்தின்படியும் அவர்கள் கண்களினால் அதை நியாயந்தீர்க்கிறார்கள். தெய்வீக வார்த்தைகளின் மேல் விசுவாசம் இல்லாததினால், வருங்காலத்தைக் குறித்த நம்பிக்கை அற்றவர்களாக இருக்கிறார்கள். எந்தவிதத்திலும், தேவனை ஒரு பொருட்டாக எண்ணாமல், பூமிக்குரிய பரிசுகளைப் பெற்றுக்கொள்ள தீவிரமாக முயற்சிக்கிறார்கள்.

தேவனுடைய உண்மையான பிள்ளைகள் இப்படியிருப்பதில்லை. அவர்கள் காணப்படாதவைகள் நித்தியமானவைகள் என்று விசுவாசித்து, (11கொ 4:18) காணக்கூடிய அனைத்தும் அந்நித்தியமானவைகள் என்று எப்போதும் மனதில் நிச்சயிக்கிறார்கள். ஆகவே அவர்கள் இந்த உலகத்திற்காக அல்ல, தேவனுடைய இராஜ்யத்தில் நித்தியமாக ஜீவிப்பதற்காக இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், தேவன் அவர்களுக்காக வெளிப்படுத்தின விசேஷித்த வாக்குத்தத்தங்களை அவர்களின் விசுவாசத்தின் கண்கள் கண்டது. விசுவாசத்தின் இந்த ஜீவியத்தில், சகல விதமான எதிர்பார்ப்புகள், இலக்குகள், நம்பிக்கைகள், கொள்கைகள், மகிழ்ச்சிகள் அனைத்துமே, இந்த உலகத்தின் காரியங்களைவிட மேன்மையாகவே உள்ளது. ஆனால் இவையனைத்தும் விசுவாசத்தையே சார்ந்திருக்கிறது. கிறிஸ்துவ விசுவாசம் புறக்கணிக்கப்பட்டால், விசுவாசத்தின் வாழ்க்கை முடிவுபெறும். அதாவது அவர்களுக்குள் இருக்கும் விசுவாசத்தின் தூண்டுதல் நின்றுவிடும். மேலும் அவிசுவாசத்தினால், அவர்களின் ஆவிக்குரிய பார்வை மங்கிவிட்டால், ஆவிக்குரிய விஷயங்களைச் சரியாக சீர்த்தூக்கிப் பார்க்கமுடியாமல், சாத்தான் முன் வைத்திருக்கும் உலகத்தின் வஞ்சனையானக் காரியங்களில் இழுக்கப்பட்டு, தேவனை விட்டு வெகுதூரம் சென்றுவிடுவார்கள்.

அவிசுவாசத்தின் பலன்களை விரும்புபவர்கள், விசுவாசத்தை விட்டு நழுவி, தேவனுடைய கிருபைகளையும் விட்டுவிலகி செல்கிறார்கள். விலகி செல்வது அல்லது பின்னிட்டுச் செல்ல ஓர் அபாயகரமானக் காரியமாக இருக்கிறது. ".. பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது...நாமோ கெட்டு போய் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்." (எபி 10:38-39) என்று வசனங்கள் குறிப்பிடுகிறது.

இடுக்கமான வாசலில் பிரவேசித்து பலி செலுத்துவதை நிறுத்துவதே, விசுவாசத்தில் பின்வாங்குவதற்கான முதல் படியாகும். மேலும் நாம் விட்டு வந்த காரியங்களை ஓயாமல் சிந்தித்துக்கொண்டிருப்பதன் காரணமாக நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் பந்தயப் பொருளின் மேல் நோக்கங்கள் குறைந்து விடுகிறது. இதுவும் விசுவாசத்தில் பின்வாங்குவதற்குக் காரணமாகவும் அமைகிறது. அதற்கு பின் உலகப்பிரகாரமானக் காரியங்களுக்கு (விழுந்து போன நிலை) நாம் இசைவான ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறோம். இப்படியாக நம்முடைய பலவீனங்களை அறிந்த சோதனைக்காரன், ஏற்பாடு செய்திருக்கும் வழிகளில், இடறலின்றி நடந்து மகிழ்ச்சியோடு இந்த உலகத்தில் வாழ்க்கையை அனுபவிக்கலாம். மாம்சத்தின் சிந்தனைக்கு முன் மிக நுணுக்கமான தவறுகள் கொண்டுவரப்பட்டு அதில் நியாயமாக நடந்துக்கொள்வதுப்போல ஒரு தோற்றம் அளிக்கப்பட்டு, தங்களைத்தாங்களே நீதிமான்களாக நினைப்பதற்கு சாத்தான் எல்லா சூழ்நிலைகளையும் அமைத்து தருகிறான். அப்பொழுது, தேவனுடைய முதல் அன்பையும், அவருடைய நடத்துதலையும் விட்டுவிட்டு சத்தியத்தை விட்டுவிலகி தனக்கு நியாயமானவைகளை நடப்பிப்பார்கள். தேவனுடைய ஆவி இனி ஒருபோதும் அவர்களை வழிநடத்தாது.

தேவனுடைய சில பிள்ளைகள் சோதிக்கப்படும்போது, இப்படிப்பட்ட வழிகளை அவர்கள் தேர்வு செய்வதில்லை. ஏனெனில் நாம் விலையேறப்பெற்ற பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். பழைய சுபாவத்திற்கும், புது சிருஷ்டிக்கும் தொடர்ந்து பிரச்சனைகள் ஏற்படும்போது, விழிப்பாயிருந்தால் மட்டுமே நம்முடைய புது சிருஷ்டி பழைய சுபாவத்தைத் தனக்குக் கீழ்ப்படுத்தமுடியும். நீண்ட காலப்போராட்டங்களில் தேவனுடைய வழிநடத்துதல் நமக்கு மிக அவசியமாக இருக்கிறது. "தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ?" கட்டளைகளினாலும், ஒழுக்கத்தினாலும், அனுபவங்களினாலும், அவர் நம்மை நடத்துகிறார். நாம் அவருடைய ஆவியை பூரணமாகப் பெற்றிருந்தால், இவைகளை நாம் சந்தோஷத்துடனும் மனத்தாழ்மையுடனும் ஏற்றுக்கொண்டு, அதிக நன்மைகளைப் பெறுவோம். அப்போது நமக்கு கிருபைக்கு மேல் கிருபை தந்து, வெற்றிக்கு மேல் வெற்றி தந்து நம்மை வழிநடத்துவதில் தேவன் மகிழ்ச்சியடைவார். நாம் யுத்தகளத்தில் நின்று கொண்டு எதிராளிகளோடு எதிர்த்துப் போரிடுவது பெரிய காரியமல்ல. உண்மையாக வெற்றியைப் பெற நாம் தேவனுடைய சர்வாயுதத்தை மட்டும் தரித்துக்கொள்ளாமல், யுத்தத்தின் நாயகர்களாக இருந்து, கண்களின் இச்சைகளையும், ஜீவனத்தின் பெருமைகளையும், மாம்சத்தின் இச்சைகளையும், நீதி மற்றும் பரிசுத்தத்தின் சகல எதிரிகளை நம்மை விட்டு முற்றிலுமாக அழிக்கக்கூடிய போர் வீரர்களாக இருக்கவேண்டும். அன்பு - தேவனிடத்தில் அன்பு, அவருடைய சத்தியத்தின் மேலும், நீதியின் மேலும் நாம் வைக்கும் அன்பு, இந்தக் காரியங்களை முற்றிலுமாக **அகற்ற.....** நம்மை அனுதினம் ஊக்குவித்து, ஒளியிலுள்ள பரிசுத்தவான்களின் பங்கைப்பெற நம்மை வழிநடத்தவேண்டும். கொழுந்து விட்டு எரியும் அன்பு, நம்மை முழுமையாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கும். 99% அளவு யுத்தம் வெற்றிபெறும். இருப்பினும், "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்."(யூதா 21) என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

சத்தியத்திற்கு, ஏற்ற விசுவாசமும், அதன் கோட்பாடுகளுக்குக் கீழ்ப்படிதலும், இருக்கும் பட்சத்தில், நாம் அதிகமதிகமாக சத்தியத்தில் வளர்ந்து, நீதி மற்றும் சமாதானம் என்ற பாதையில் வழிநடத்தப்பட்டு, நம்மை நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கச்செய்யும்.

விசுவாச ஓட்டம் ஒரு தனிநபருக்குரிய ஓட்டமாக இருந்தாலும், அது தலைக்கு இசைவான ஓட்டமாக இருக்கிறது. வசனங்களை ஆதாரமாகக் கொண்ட உபதேசங்களை ஏற்றுக்கொண்டால் மட்டும் போதாது. நாம் சத்தியம் என்று ஏற்றுக்கொண்ட அனைத்தையும் நாம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். அப்பொழுது சத்தியத்தின் கோட்பாடுகள் நம்முடைய கோட்பாடுகளாகவும், தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நம்முடைய சுவாசமாகவும் மாறும். "தேவனுடைய ஆவியினால் வழிநடத்தப்படும் அனைவரும் தேவனுடைய புத்திரர்கள்" என்று நாம் வாசிக்கிறோம். ஆனாலும் இந்த உலகத்தை ஜெயிக்க நமக்குள்ள பெலன் போதாது என்று நாம் உணருகிறோம். நம்முடைய மாம்சமும், சாத்தானும் அதிக பலமுள்ளவர்களாகத் தோன்றுகிறார்கள். நமக்குள் நற்கிரியைகளைத் துவங்கினவர் அதை முடிக்கவும் வல்லமையுள்ளவராக இருக்கிறார் என்று வாசிக்கிறோம். ஆகவே நாம் மனத்தாழ்மையோடு அவரிடம் நம்மை ஒப்புவித்தால் அவர் நம்மை வழிநடத்துவார். நம் தேவனுடைய வாக்கு என்றுமே மாறாதவைகள். நம்மால் தாங்க முடியாத சோதனைகளை அவர் அனுமதிப்பதில்லை. ஆகவே நம்முடைய விசுவாசத்தை மிக உறுதியாகப் பற்றிக்கொண்டு, அவருடைய வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைத்தவர்களாக, நீதியிலும், விசுவாசத்திலும், சத்தியத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, பூமிக்குரிய காரியங்களில் நாம் பின்னிட்டுத் திரும்பாதபடிக்கு நம்மை நாமே ஜாக்கிரதையாக தேவனிடத்தில் அர்ப்பணிப்போமாக.

R1949 - "விசுவாசத்தின் சோதனைகள்" - ஏன் அனுமதிக்கப்படுகிறது ? (கேள்வி 17 காண்க)

தேவனுடைய ஜனங்களைக் குழப்பங்களுக்குள்ளாகும்படி தப்பறையானப் போதனைகள் அனுமதிக்கப்படுவதின் காரணம் என்ன என்று அநேகர் திகைப்படைகிறார்கள். உண்மையான சத்தியத்தைப் பெற்றுக்கொண்டபின், சகல முரண்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வந்ததென்று எண்ணி, மகிழ்கிறார்கள். அதாவது சமாதானத்தின் நகரத்தை அடைந்துவிட்டோம் என்றும் இனி ஒருபோதும் நாம் திசைத்திருப்பப்படுவதில்லை என்ற முடிவுக்கு வந்துவிடுகிறார்கள். ஆனால் இந்த ஒரு தவறானக் கூற்று, நம்முடைய மிகப் பெரிய எதிராளியாகிய

சாத்தான், வெளிச்சத்தின் பிள்ளைகளை எந்த இடறுதல்களின்றி அவருடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க அனுமதிப்பதில்லை. சாத்தானுடைய வல்லமை இன்னும் பூரணமாகக் கட்டப்படாததினால், தேவனுடைய இராஜ்யத்திற்கு எதிராகவும், அதன் கோட்பாடுகளுக்கு எதிராகவும், அவன் காரியங்களை நம்பவைக்கிறான். அவன் மிக தந்திரமுள்ளவனும், நீடித்த நாட்களாகத் தேவனுக்கு எதிராகச் செயல்படுகிறவனுமாக இருக்கிறான். வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருக்கும் இராஜ்யத்தின் புத்திரர் அவனுடைய பொறி பறக்கும் அம்புகளால் குறிபார்க்கப்படுகிறார்கள். இருளின் இராஜ்யத்திலிருந்து தப்பித்து, வெளிச்சத்தில் நடக்கும் போது, தங்களுடைய பாதத்திற்குக் கண்ணிகள் விரித்து வைக்கப்பட்டு, அவர்களின் பாதங்கள் இடறுதலுக்கானக் காரியங்கள் வழியிலே வைக்கப்படுகிறது. இந்த வேலை மிகவும் நுட்பமாகச் செய்யப்படுகிறது. இருளிலிருந்து தப்பித்தவர்கள் மீண்டும் ஏமாந்து சிக்கிக்கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகிறது. இந்தத் தீமையான நாட்களில், இப்படிப்பட்ட சாத்தானின் பலமான சோதனைகளிலிருந்து வெகு சிலரே தப்பிக்கிறார்கள்.

இந்தத் தீமையான நாட்களிலே, அநேகருடைய விசுவாசங்கள் கரையத்தக்கதாக இப்படிப்பட்ட வல்லமையான சோதனைகளைத் தேவன் ஏன் இன்னும் அனுமதித்துக்கொண்டிருக்கிறார் என்ற கேள்வி நியாயமானதாகதான் இருக்கிறது. இந்தக் கேள்விக்கான விடை -"கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். (11தெச 2:10-12) என்று அப்போஸ்தலனாகிய பவுல் பதில் அளிக்கிறார்.

இப்படியாக, தேவன் அனுமதிப்பது மட்டும் அல்ல, அப்படிப்பட்ட சோதனைகளைத் தேவன் அனுமதிப்பதற்கு விரும்புகிறார் என்றும் தெளிவாகிறது. பொறி பறக்கும் அம்புகளினால் ஆயிரம் பேர் விழுந்து போனால், அந்த ஆயிரம் பேர்களும், சத்தியத்திற்கு ஏற்ற சாட்சிகளாக இருக்க வாய்ப்பில்லை என்பது பொருள். அவர்கள் தூய அன்பினால் சத்தியத்தைப் பெறவில்லை என்பது வெளிப்படுகிறது. ஒரு குழந்தை புதிய விளையாட்டுப் பொருளைப் பெற்றுக்கொள்வதைப் போல அநேகர் மிகுந்த சந்தோஷத்துடன் சத்தியத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். சிலர் நூதனப்பிரியத்தோடு சத்தியத்தைக் கேட்பார்கள். கேட்டப்பின் மகிழ்வார்கள். அதற்கு பின் அதை விட ஆர்வமூட்டும் காரியங்கள் கிடைக்கும்போது, அதை தள்ளிவைத்துவிட்டு மற்ற காரியங்களில் ஈடுபடுவார்கள். அல்லது வாக்குவாதங்களில் தங்களுக்கு வெற்றி கிடைப்பதற்காகவும், தங்களுக்குக் கீர்த்தி சேர்த்துக் கொள்வதற்காகவும், சத்தியங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். அல்லது வாழ்க்கையில் சில தீராத பிரச்சனைகள் மற்றும் வேதனைகள் நீங்க சத்தியத்தைத் தேடுகிறார்கள். ஆனால் சத்தியத்தின் அம்சங்களை அவர்கள் உணராமல், பிரச்சனைகள் வரும்போது அதிலிருந்து தப்பித்து, பரலோகத்திற்குள் நுழைய முயற்சிக்கிறார்கள்.

சத்தியத்தை இலகுவாக மதிப்பிடுபவர்கள், அதற்கு அபாத்திரராகப் போய்விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இந்தச் சத்தியத்தை இழந்துவிடவேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாக இருக்கிறது. ஆகவே, விருப்பத்தோடு, தெய்வீகமாக அனுமதிக்கப்பட்ட விசுவாசத்தின் சோதனைகள் - சத்தியத்தில் வேரூன்றி நிலைத்திராவிட்டால் -"கூடுமானால், தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்" - ஆனால் ஒருவர் அன்பினால் சத்தியத்தைப் பெற்றிருந்தால், அவர்கள் ஒருபோதும், அந்தச் சத்தியத்தை துன்மார்க்கத்திற்க்காவது அல்லது விருதாவாவது அதை விட்டுவிடமாட்டார்கள். ஆகவே சிலர் அபாத்திரராக மாறிவிடுகிறார்கள், சிலர் சத்தியத்தினால் வரும் சுயாதீனத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். "நீதியைப் பிறப்பிப்பதற்காக வெளிச்சம் (சத்தியம்) விதைக்கப்படுகிறது, இருதயம் களித்திருக்க மகிழ்ச்சி (சத்தியத்தின் மகிழ்சசி) விதைக்கப்படுகிறது." அதேபோல், கிறிஸ்துவின் இராஜ்யம் வல்லமையாக ஸ்தாபிக்கப்பட்டு, இந்த பூமியை முழுமையாக தன்னுடைய பிடியில் கொண்டுவரும் வரைக்கும், துன்மார்க்கன், தவறுகளினால் கட்டப்பட்டிருக்கவேண்டும். இதன் காரணமாக, பிதாவாகிய தேவன் கடந்த கால மூடநம்பிக்கைகளுக்கு இன்று மனிதனின் சிந்தையில் ஒரு தடுக்கலைப் போட்டிருக்கிறார். மேலும், தேவனுடைய ராஜ்யத்திற்கு மிக அருகில் உள்ளதினால், சில தவறுகளின் கட்டுப்பாட்டை தளர்த்தியிருக்கிறார். ஆனால் மகா உபத்திரவத்தின் காலத்தில், இவைகள் முற்றிலுமாகக் கட்டவிழ்க்கப்பட்டு, மிகுந்த கலவரத்தில் முடிவடையும். அப்பொழுது நடக்கும் இருப்புக்கோலாட்சி, அவைகளைச் சீர்ப்படுத்தும்.

அப்பொழுது அனைவரும் சத்தியத்தின் முக்கியத்துவதை உணர்ந்து, சத்தியத்தைத் தவறாகப் பயன்படுத்தினதின் விளைவுகளை அறிந்து சீர்ப்பொருந்துவார்கள். ஆகவே இப்பொழுது இந்தத் தவறான நோக்குடன் சத்தியத்தைப் பெற்றவர்கள் அதை இழந்து விடவேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாக இருக்கிறது. ஆனால் தேவனுடைய உண்மையான பிள்ளைகள், அந்தச் சத்தியத்தைத் தங்களுடைய ஜீவனைப் போல நேசிக்கிறார்கள். அவர்கள் நீதியை விரும்புகிறார்கள், தங்களுடைய சகோதரர்களை நேசித்து அவர்களுக்குத் தேவையான நேரத்தில் உதவிகளைச் செய்கிறார்கள். அவர்கள் உருக்கமான அன்பையும், சாந்தத்தையும் பெற்றிருக்கிறார்கள். சம்பாஷணைகளின் போது மிகவும் சாந்தமாக, தேவனுடைய நாமம் மகிமைப்பட சத்தியத்தைத் தெரிவிக்கிறார்கள். அவர்கள் சத்தியத்தின் விலைமதிப்பை அறிந்தவர்கள். அவர்கள் அதை நித்தமும் தியானிப்பார்கள். அதற்குள் இருக்கும் மகா பிரம்மாண்டமான குணநலன்களை (நீதி, அன்பு, அஹிம்சை) நோக்குவார்கள். அவர்கள் கிறிஸ்துவின் பங்காளிகளாக இருப்பதற்கு மட்டுமே மகிழ்வார்கள். அவர்கள் மகிமையான நன்மைகளையும், அன்பையும், ஞானத்தையும் நீதியையும், தேவனைப்போல் பிரதிபலிப்பார்கள். ஆகவே, அவர்கள் சத்தியத்தையும், அதை கொடுத்தவரையும் அதிகமாக நேசித்து, தங்களுடைய இருதயத்தில் ஒரு பொக்கிஷமாக அதை பத்திரப்படுத்தி, அதை மீண்டும் மீண்டுமாக புரட்டிப் பார்த்து அதன் மகத்துவத்தை ருசிப்பார்த்து தங்களையும் அதன் குணலட்சணங்களுக்கு மாறுவதற்கு முயற்சித்து, மற்றவர்களும் அந்த ஆசீர்வாதத்தைப் பெற அதில் நடத்த விரும்புவார்கள்.

இதுவே சத்தியத்தை உண்மையான இருதயத்தில் உத்தமமான நோக்குடன் பெறுவதாகும். இப்படியாக சத்தியத்தைப் பெற்றவர்கள் ஒருபோதும் தப்பறையால் வஞ்சிக்கப்படமாட்டார்கள். அந்தச் சத்தியம் நன்மையானது என்று அவர்கள் உணர்ந்த பின் அதை எந்தச் சூழ்நிலையிலும், அவர்கள் கைவிடமாட்டார்கள். காந்தத்தோடு இரும்பு ஒட்டிக்கொள்வதைப்போல இவர்கள் சத்தியத்தோடு ஐக்கியப்பட்டிருப்பார்கள். ஆனால் மரத்தூள் அந்தக் காந்தத்தில் ஒட்டிக்கொண்டிருந்தாலும், ஊதிவிடும்போது அது பறந்துபோய்விடும். இப்படியாக தான் அநேகர் தேவனோடும் அவர் கொடுத்த சத்தியத்தோடும் உறவு வைத்துக்கொள்கிறார்கள். தப்பறையானப் போதனைகளாகிய காற்றுகள் அவர்கள்மேல் அடிக்கும்போது அவர்கள் பறந்துவிடுகிறார்கள். காற்று அடிக்கும் போது அவர்கள் ஒரே நேரத்தில் பறந்துவிடுவதில்லை, காற்று பலமாக அடிக்கஅடிக்க ஒவ்வொன்றாக பறந்துவிடும். ஆனால் உண்மையான தேவனுடைய ஜனங்களை அவர்களுடைய திராணிக்கு மேல் சோதிப்பதற்குத் தேவன் அனுமதிப்பதில்லை. அவருடைய பாதங்கள் கல்லில் இடறாதபடிக்கு தேவன் அவர்களை காத்துக்கொள்ள அவரவருக்குரிய தூதர்களை நியமித்திருக்கிறார்.

ஆகவே தேவனால் நியமிக்கப்பட்டவர்கள், சத்தியத்தைத் தெளிவாகப் பகுத்து அறிந்து, தாமே தேவனுடைய கிரியையாக இருப்பதைக் கற்றறிந்து, மற்றவர்களைக் கவனத்தோடு வழிநடத்துவார்கள். அவர்கள் தங்களுடைய மந்தையைப் போஷிக்க ஆர்வமுள்ள ஒரு தாயைப்போல் இருப்பார்கள். இப்படியாக, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைச் சகலத்திலும் போஷித்து, வழிநடத்துவார், அவர்கள் ஒருகாலத்திலும் இடறுவதில்லை.

நாம் பெற்ற சத்தியத்தை அன்பினால் இந்நாள் வரைக்கும் பற்றிக் கொண்டிருக்கிறோமா ? என்பது அழைக்கப்பட்ட அனைவரும் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது. "ஒருவன் கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராவிட்டால், அவன் கிறிஸ்துவினுடையவனாக இருக்கமுடியாது." என்று சொல்லியிருப்பதினால், ஆசீர்வதிக்கப்பட்ட ஆவியை நமக்குள் தாராளமாகச் செயல்பட அனுமதிக்கவேண்டும். "ஆவிக்குரிய சுத்திகரிப்பினாலும், சத்தியத்தின் நம்பிக்கையினாலும், நீங்கள் பெரிதான இரட்சிப்புக்காகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று வெகுசீக்கிரத்தில் வெளிப்படும். (11தெச 2:13) சத்தியத்தின் நம்பிக்கையானது உத்தமமான இருதயத்தில் நல்ல கனிகளைக் கொடுக்காவிட்டால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அதாவது, ஆவியை சுத்திகரிப்பது, முழுமையாக தெய்வீக சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பதாகும். இந்தப் பாடத்தை நம்முடைய இருதயங்களில் ஏற்றுக்கொண்டு, பரம அழைப்பின் பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுவோம். எவ்வளவு விலைக்கொடுத்தாவது (சுயபலி)"சத்தியத்தை வாங்கு", எந்த சூழ்நிலையிலும், உலகப் பிரகாரமானக் காரியங்களுக்கு "சத்தியத்தை விற்காதே".

R1822 - "உங்கள் விலையேறப்பெற்ற விசுவாசம்" (17ம் கேள்வி காண்க)

"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்." - 1பேது 1:7

விசுவாசம் இரண்டு அடிப்படையானப் பகுதிகளைக் கொண்டது - அறிவாற்றலுள்ள உறுதி மற்றும் இருதயத்தின் நம்பிக்கை. முதலில் சொல்லப்பட்ட பகுதி பொதுவாகவும், இரண்டாவதாகச் சொல்லப்பட்டப் பகுதி மிக உறுதியானதுமாக இருக்கிறது. இரண்டாவது பகுதியைப்பற்றி நாம் வாசிக்கும்போது - "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப்பண்ணப்படும்" (ரோ 10:10)தலை மற்றும் இருதயமும் - அறிவு மற்றும் உணர்வுகள் - விசுவாசத்திற்குத் தேவையானது. இந்த விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாதக் காரியம். (எபி 11:6) இதில் அநேகர் விசுவாசத்தின் ஒரு பகுதியை மட்டும் கொண்டிருக்கிறார்கள். சிலர் உணர்ச்சிப்பூர்வமாகவும், சிலர் அறிவுப்பூர்வமாகவும் பெற்றிருக்கிறார்கள். பொறி பறக்கும் அம்புகளாகிய சோதனை வரும்போது இவர்கள் அதை எதிர்த்து நிற்க திராணியற்றவர்களாகிறார்கள். ஆகவே விசுவாசத்தின் இந்த இரண்டு பகுதிகளையும் நாம் கொண்டிருப்பவர்களாக இருந்து, முடிவு பரியந்தம் நிலைத்து, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது, அவருடைய மகிமையும், கனமும் உண்டாகும்படி நாம் காணப்படவேண்டும்.

தெய்வீக சத்தியத்தின் அடிப்படைக் கோட்பாட்டை இந்த அறிவாற்றலோடு புரிந்து கொள்ளவேண்டும். அதாவது, தனிப்பட்டவகையில் ஞானமுள்ள, சர்வ வல்லமையுள்ள தேவனே சர்வத்தையும் சிருஷ்டித்து, அவைகளைப் பராமரித்து, தன்னுடைய ஒரே பேறான குமாரன் இயேசுவின் வழியாக இரட்சிப்பின் திட்டத்தை வகுத்தார் என்பதே விசுவாசத்தின் அஸ்திபாரமாக இருக்கிறது. அந்த அஸ்திபாரத்திற்கு மேல் மிக அற்புதமாகக் கட்டப்படும் கட்டிடமே நம்பிக்கை மற்றும் தேவன் அவருடைய பிள்ளைகளை அன்பாக கொடுத்த வாக்குறுதிகளாகும்.

ஆகவே நாம் பெற்றிருக்கும் அறிவுப்பூர்வமான தெய்வீக சத்தியத்திற்கு மட்டும் விசுவாசத்தின் சோதனை அனுமதிக்கப்படாமல், நாம் தேவன் மேல் வைத்திருக்கும் அன்பும் சோதிக்கப்படுகிறது. ஆகவே இந்த இரண்டு காரியங்களிலும் ஒவ்வொரு உண்மையான தேவ பிள்ளைகளும் கடுமையாகச் சோதிக்கப்படுவார்கள். கிறிஸ்துவின் போர்வீரனாக இருக்கும் ஒவ்வொருவரும் சோதனையில் விழுந்துவிடாதபடிக்குத் தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களை அணிந்துகொள்ளவேண்டும். நம்முடைய விசுவாசத்தின் அறிவுப்பூர்வமாகச் சோதிக்கப்பட்டால் - நம்முடைய நம்பிக்கையின் சகலக் காரியங்களுக்கும், தேவனுடைய வார்த்தைகளே பதில் அளிக்கப்பட்டும், எவ்வளவு நேர்த்தியாக இருந்தாலும், மனிதனுடைய சிந்தைகளும், நோக்கங்களும் நம்மைத் தப்பறையானச் சூழ்நிலைகளில் சிக்கிக்கொள்ள விடாதபடிக்கு எச்சரிப்போடு இருக்கவேண்டும். ஏனெனில், விசுவாசத்தின் அஸ்திபாரம் உறுதியாக இராவிட்டால், மேலுள்ள கட்டிடம் நிலைத்திருக்க முடியாது. சாத்தானின் பலவிதமானக் காற்றுகளும், அதற்கு எதிரான சோதனைகளும் அதை கீழேவிழத் தள்ளிவிடும். சந்தேகங்களும், பயமும் அந்தக் கட்டிடத்தை அசையச் செய்யும். சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும் பட்சத்தில் சாத்தான் மிகக் கொடிய சோதனைகளை முன்வைக்கும்போது முழுமையாக அந்த ஆத்துமா நஷ்டமடையும்.

ஆகவே, நாம் முதலில் நம்முடைய விசுவாசத்தில் அஸ்திபாரத்தை வனிக்கவேண்டும் - அடிப்படை சத்தியத்தைப் பற்றிய அறிவை நாம் தெளிவாகக் கற்றறிய வேண்டும். தேவனுடைய ஜனங்களை ஊக்குவிக்கும் தெய்வீக சத்தியத்தின் ஒவ்வொரு பகுதிகளையும் அறிவுப்பூர்வமாக தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும், அதில் நாம் ஆழமாக வேர் கொண்டவர்களாக விசுவாசத்தை ஸ்தாபித்து, தேவனுடைய போதனைகளை உறுதியாக பற்றிக் கொள்ளவேண்டும். நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவனிக்கவேண்டும். (எபி 2:1)

விசுவாசத்தின் அடிப்படைப் போதனைகளில் நாம் தெளிவுள்ளவர்களாக இருந்தாலும், அதற்கு மேல் கட்டப்பட்டிருக்கும் நம்முடைய இருதயத்திற்குள்ளான நம்பிக்கையைப் பற்றியும் கவனமாக இருக்கவேண்டும். அதிகமாக வெள்ளமும், புயலும் காணக்கூடிய கட்டிடத்திற்குப் பாதிப்புகளை ஏற்படுத்திவிடும். சோதிக்கப்பட்டபின்பு, சகலவிதமான அம்புகளையும் எதிர்த்து நின்று வெற்றிப் பெறுவோர்கள் தேவனுடையப் பார்வையில் மிக விலையேறப்பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்று பேதுரு கூறுகிறார். இருளிலாவது, வெளிச்சத்திலாவது,

சத்தியத்தின் போதனைகளில் மட்டும் அல்ல, நாம் தேவன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்கள் மேல் நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தில், நம்முடைய முழு இருதயமும், அதன் நோக்கங்களும், நாம் சத்தியத்திலும், நீதியின் மேலும் வைத்திருக்கும் வைராக்கியத்தையும் நாளுக்கு நாள் அதிகரித்து, உறுதிபட்டு, கிறிஸ்துவின் குணலட்சனங்களில் வளரும்போது, நமக்குள் இப்படிப்பட்டக் காரியங்களை எதிர்பார்க்கும் தேவனை பிரியப்படுத்தமுடியும்.

ஆகவே - "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" - 1பேது 4:12,13 இந்த வசனத்தின் அடிப்படை போதனைகளைப்பற்றி குறிப்பிடாமல், போதனைகளில் நிலைத்திருப்பதற்காவது, நீதியை நிலைநாட்டுவதற்காவது, கிறிஸ்துவின் நிமித்தம் வரும் உபத்திரவங்களினால் வரும் சோதனையைப்பற்றி சொல்லப்படுகிறது. ஆகவே அப்போஸ்தலன் குறிப்பிடும்போது - "கிறிஸ்துவின் நிமித்தம் துன்பப்படுத்தப்படுவீர்களானால், சந்தோஷப்பட்டுக் களிக்கூறுங்கள், ஏனெனில், தேவனுடைய மகிமையான ஆவி உங்கள் மேல் தங்கியிருக்கிறதே". நாம் தவறுகளைச் செய்து பாடுகளை அனுபவியாமல், சத்தியத்தின் நிமித்தமாகப் பாடுகளைச் சகிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே நாம் கிறிஸ்தவ போதனைகளுக்காகவும், கிறிஸ்துவுக்காகவும், பாடுகளை அனுபவித்தால் நாம் வெட்கப்படாமல், இதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவோம்.

தானியேல் தீர்க்கதரிசி விசேஷவிதமாக இந்தகடைசி காலத்தைப்பற்றிக் கூறும்போது, "அநேகர் சுத்திகரிக்கப்பட்டு, வெண்மையும் தூய்மையுமாக்கப்படுவார்கள்". மல்கியா கூறும்போது - "புடமிடகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப்போலவும்,... தேவனுடைய ஜனங்கள் சுத்திகரிக்கப்படுவார்கள்". "முடிவு பரியந்தம் நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடவேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். (1தீமோ 6:12, 11தீமோ 2:3) மேலும் சோதனையில் அகப்பட்டு உபத்திரவப்படும் அனைத்து தேவனுடைய ஜனங்களுக்கும் சங்கீதக்காரன் அநேக ஆறுதலான வசனங்களைக் கொடுத்திருக்கிறார். (சங் 77:1-14, 116 :1-14, 34:19, 31-24, 11தெச 3:3)

அன்பான சகோதர, சகோதரிகளே, நீங்கள் எப்பக்கத்திலும், நெருக்கப்படுவதினால், தேவனுடைய பாதுகாப்பையும், அன்பையும், அரவணைப்பையும், அவர் உங்களுக்குக்கொடுத்த வாக்குத்தத்தங்களையும் சந்தேகிக்கிறீர்களா? சோர்ந்துப் போய் தளர்ந்து விட்டீர்களா? உங்கள் எதிராளி உங்களைவிட மிகவும் பலசாலி என்று நினைக்கிறீர்களா? உங்களை நசுக்கக்கூடிய பாரத்தோடு உபத்திரவங்கள் உங்களை எதிர்நோக்குகிறதா? உங்கள் தலை எதிர்க்கமுடியாத அளவிற்கு அதைச்சுற்றி பாரமான மேகங்கள் தொங்குகிறதா? மிகவும் எளிது - உங்கள் விசுவாசம் தன்னுடைய வெற்றியைக் கோரவேண்டும். இந்நேரத்தில் நீங்கள் உங்கள் விசுவாசத்தினால் சகலத்தையும் ஜெயிக்கலாம். இப்போது உங்கள் விசுவாசம் சோதிக்கப்படுகிறது. வருங்காலத்தில் நீதியின் சூரியன் உங்கள் மேல் பிரகாசிக்கும். இப்பொழுது நாம் அமைதியாக விசுவாசத்திற்கான அஸ்திபாரத்தைப் (அடிப்படை சத்தியங்கள்) போட்டு, அதில் கிறிஸ்துவின் குணலட்சணங்களைக் கட்டிடமாகக் கட்டவேண்டும். இப்பொழுது உங்கள் விசுவாசத்தை நிரூபிப்பதற்காக உலைக்களத்தில் போடப்பட்டிருக்கிறீர்கள். ஆகவே உங்கள் விசுவாசம் ஒழிந்துப்போகாமலிருக்க முழு தைரியத்தோடு, நீடிய பொறுமையுடன், சிந்தையில் சகல வாக்குத்தத்தங்களையும் பற்றிக்கொண்டு, பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்ள அமைதியாக இருக்கக்கடவோம். "நீங்கள் பொறுமையோடு, விசுவாசத்தோடிருப்பதே உங்கள் பெலன்". "கர்த்தருக்குள் இளைப்பாறி, அவருக்காகக் காத்திருங்கள்." அப்போது விசுவாசத்தில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். அதற்கு பின் கர்த்தர் குறித்தக் காலத்தில் தேவனுடைய கரம் சகல கிரியைகளையும் உங்களுக்கு நன்மைக்கு ஏதுவாக அங்கீகரித்து உங்களுக்கு நன்மைகளைக் கட்டளையிடுவார். இப்படியாக மெய்ப்பிக்கப்பட்ட உங்கள் விசுவாசம் அக்கினியினால் சோதிக்கப்படும் அழியக்கூடிய பொன்னைக் காட்டிலும் விலையேறப்பெற்றது என்று பேதுரு கூறுகிறார்.

F721 - F729 - (19ம் கேள்வி காண்க) The End 2.3.10

மற்றவர்களின் உயிர்த்தெழுதலைக் குறித்து சபையின் வேலைகளை இதுவரைக்கும் நாம் கவனித்துவந்தோம். இப்பொழுது முதலாம் உயிர்த்தெழுதலைக் குறித்து வேத வசனங்கள் என்ன கூறுகிறது என்று பார்க்கலாம். புது சிருஷ்டிகள் எப்படிப்பட்ட சரீரத்தோடு எழும்புவார்கள் ? அவர்கள் எப்படிப்பட்ட வல்லமையையும், குணலட்சணங்களையும் பெற்றிருப்பார்கள் ?

"மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே, வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே" (1கொரி 15:48) என்று அப்போஸ்தலர் கூறுகிறார். பொதுவாக உலக ஜனங்கள் ஆதாம் பரிபூரணமாகப் படைக்கப்பட்ட நிலைக்கு அதாவது இந்த உலகத்தில் வந்த "மனிதனாகிய இயேசு கிறிஸ்துவைப்" போல் சீர்பொருந்தப்படுவார்கள் என்று தெளிவாகப் புரிகிறது. அப்பொழுது இந்த முழு உலகமும் தெய்வீகமான சிருஷ்டிகருடைய பூமிக்குரிய சாயலை முழுமையாகப் பெறுவதை எண்ணி நாம் களிக்கூறலாம். ஆனால் சுவிசேஷ யுகத்தின் சபை ஜனங்களாக அழைக்கப்பட்டவர்களுக்கு சில விசேஷித்த நோக்கங்களுக்காகத் தேவன் கொடுத்திருக்கும் விசேஷித்த வாக்குத்தத்தங்களுக்காக மேலும் நாம் களிக்கூறலாம். இவர்கள் தேவனுடைய சாயலைப் பெறக்கூடியவர்கள். அதாவது பூமிக்குரிய தேவனுடைய சாயலை அல்ல, பரலோகத்திற்குரிய ஆவிக்குரிய தேவனுடைய சாயலைப் பெறப்போகிறார்கள். "அவர் வெளிப்படும்போது, நாம் அவருக்கு (மகிமையடைந்த இயேசு)ஒப்பாக இருப்போம்..." என்று நாம் வாசிக்கிறோம். அவர் பரிபூரணமான மனிதன் நிலையைக் காட்டிலும், ஓராவிக்குரிய ஜீவியாகிய அவரை போல் மாறி, அவருடைய மகிமையிலும், வல்லமையிலும் பங்கடைந்தால் நாமும் பிதாவின் சாயலை பெறுவோம். நாம் தேவனுடைய சாயலைப் பெறுவதினால், "மனிதரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரிடம் நாம் சென்று, அவரை தரிசிக்கப் போகிறோம்" - 1யோவ 3:2, 1தீமோ1:17, 6:16, யாத் 33:20

"மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே, வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே" என்ற வசனத்தை நாம் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது. அதாவது, அனைவரும் வானத்துக்குரிய சாயலைப் பெறுவோம் என்று பவுல் இங்கு குறிப்பிடவில்லை. இது தேவனுடைய திட்டமும் இல்லை. அவர் மனிதனை சிருஷ்டிக்கையில், பூமிக்குரிய ஜீவியாகவும், மாம்சத்தோடும், இரத்தத்தோடும் அவருடைய சாயலில் அவரை சிருஷ்டித்து, இந்தப் பூமியை ஆண்டுகொள்ளவும், பரலோக சிருஷ்டிகளைப் பிரதிநிதிகளாகவும் வைத்தார். (ஆதி 1:26-28, சங் 8 : 4 -7) புது சிருஷ்டியின் தேர்வு பொறுத்தவரையில் இந்தப் பூமிக்குரிய படைப்பிற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. இவர்கள் உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஆயிர வருட ஆட்சியில் இந்த முழு உலகத்தையும் ஆசீர்வதிப்பதற்காக "சிறு மந்தையாக" தெரிந்துகொள்ளப்பட்டு, ஆண்டவரின் இராஜ்யத்தின் வகுப்பார் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆகவே இது மேலும், தெய்வீக திட்டங்களைச் செயல்படுத்த மிகப் பொறுப்பான ஒரு வேலையாக இருக்கிறது.

ஆனால் அப்போஸ்தலன் மேலும், இதன் பொருளைக் குறித்த 50வது வசனத்தில் விளக்குகிறார் - "சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது, அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை." இப்படியாக நாம் இந்த மாம்சத்திலிருக்கும் நிலையையும், வருங்காலத்தில் ஆவிக்குரிய நிலையையும் பிரித்துக் காட்டுகிறார். ஆகவே நாம் இந்த மாம்சத்திலிருக்கும்வரை தேவனுடைய இராஜ்யமாக முடியாது என்று தெளிவாகக் கூறுகிறார். ஏனெனில், அது ஓர் ஆவிக்குரிய இராஜ்யம். அதில் ஆவிக்குரிய ஜீவிகள் மட்டுமே இருக்கமுடியும். நம்முடைய தலையும், வழிக்காட்டியுமான நம்முடைய ஆண்டவர் தாமே சபைக்கு மாதிரியாக இருப்பவர் இப்பொழுது ஆவிக்குரிய நிலையில் இருக்கிறார். "நாமும் அவரைப்போலிருப்போம்" - நியாயத்தீர்ப்பினால் இனி உலக ஜனங்கள் சீர்ப்பொருத்தப்படும், முந்தய ஏதேன் தோட்டத்தில் மனிதன் பெற்ற பூரண மாம்சத்தைப்போல் இது இல்லை.

சபை மாம்சத்திலிருந்து ஆவிக்குரிய நிலைக்கு மாற்றப்படுவதைப் பற்றிய கருத்தைப் புரிந்துகொள்வது மிகக் கடினமாக இருக்கும் என்ற உண்மையை பவுல் அறிந்திருந்தார். மரணத்தின் நித்திரையில்

இருப்பவர்களைக் காட்டிலும், உயிரோடு மாம்சத்திலிருப்பவர்களின் உயிர்த்தெழுதலைக் குறித்துப் புரிந்துகொள்வது கடினாக இருக்கும் என்று அவர் உணர்ந்திருந்தார். ஆண்டவருடைய பிரசன்னத்தில் உயிரோடிருக்கும் சபை வகுப்பார் ஆவிக்குரிய சரீரத்தைப் பெறுவதைக் காட்டிலும் மரித்தோர் புதிய ஆவிக்குரிய சரீரத்தில் எழுந்திருப்பார்கள் என்று புரிந்துகொள்வது எளிதாயிருக்கிறது. நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலனாகிய பவுலின் மூலம் இதை நமக்கு தெளிவுபடுத்துகிறார் - "இதோ, ஓர் இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன், நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை, ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஓர் இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்." (1கொரி 15:51,52)

இதை ஒரு இரகசியம் என்று ஆண்டவர் அறிவித்தாலும், இதில் உள்ள மறைப்பொருளை சற்று புரியும்படி தெளிவுப்படுத்தினாலும், ஆண்டவரின் ஜனங்கள் "நித்திரை" அடைந்தார்கள் என்பதற்குப் பதிலாக "மரித்தார்கள்" என்று எழுதப்பட்டதன் பொருளைப்பற்றிய விளக்கம் சரியாக இங்கு கொடுக்கப்படவில்லை. ஆண்டவரின் பிரசன்னம் வரைக்கும் காத்திருக்கும் பரிசுத்தவான்கள் மரியாமல் எடுத்துக்கொள்வார்கள் என்ற கருத்து இங்கு விவரிக்கப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் எங்கும் சொல்லப்படவில்லை. அப்போஸ்தலர்களின் விஷயத்தில், அவர்கள் மரித்தார்கள், ஆனால் மரித்த நேரத்திலிருந்து அவர்கள் உயிர்த்தெழுப்பப்படும் நொடிவரை நித்திரையில் இருப்பதாகக் கருதப்படுகிறது. "மரிப்பது" என்பது ஒரு நொடிப்பொழுதில் நடக்கக்கூடியது ஆனால், "நித்திரை" என்பது உணர்வற்ற நிலையில் பல நூற்றாண்டுகளாக இருப்பது.

ஆகவே, புரிந்துகொள்வதற்காக இங்கு "நித்திரை" என்ற வார்த்தை பவுலின் வசனத்தோடு இணைக்கப்படவேண்டும். அதாவது இயேசுவின் பிரசன்னம் வரைக்கும் மாம்சத்திலிருக்கும் தேவனுடைய ஜனங்கள் மரணத்தில் நித்திரையடைவதற்கு அவசியமில்லை. தேவன் அறிவித்தபடி சபை வகுப்பாரும் மரிப்பார்கள்-" நீங்கள் தேவர்கள் என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து, லோகப்பிரபுக்களில் ஒருவனைப்போல விழுந்துபோவீர்கள்." -(சங் 82:6,7) பொதுவாக உலகத்தார் பிரபுவாகிய ஆதாமைப் போல் மரிக்கிறார்கள். ஆனால் இயேசுவின் மேல் விசுவாசமுள்ளவர்கள் இயேசுவாகிய பிரபுவோடு மரிக்கிறார்கள். (ஏசாயா 9:6, அப்போஸ்தலர் 3:15, 5:31) அவருடைய பலியின் மூலம் நீதிமானாக்கப்பட்டு, அவரோடு பலியின் மரணத்தில் மரிக்கிறார்கள். இரண்டாம் பிரபுவைப்போல அவர்கள் மரணத்தில் "விழுகிறார்கள்"."நாம் அவரோடுக்கூட மரித்தால், அவரோடுக்கூட உயிர்த்தெழுப்பப்படுவோம்." இங்கு அப்போஸ்தலனாகிய பவுல், மரணத்தை உணர்வற்ற நிலையாகக் குறிப்பிடுவதில்லை. மாறாக, மரிக்கும் அக்க்ஷணமே அவர்களுக்குப் பரலோகவீட்டின் ஆவிக்குரிய மேனி கொடுக்கப்படும்.

இயேசுவின் பிரசன்னம் வரைக்கும் காத்திருக்கும், சபை வகுப்பார், மரித்த அந்த நொடிப்பொழுதில் மாற்றமடைவார்கள் (மறுரூபம்) என்பதை முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, சபை வகுப்பார் அனைவருக்கும் மரணத்தின் அனுபவம் பொதுவானது. அதில் எந்த வித்தயாசமும் இல்லை. இயேசுவின் பிரசன்னத்திற்கு முன் மரித்தவர்களுக்கும், அதற்கு பின் மரிப்பவர்களுக்கும் ஒரேவிதமான அனுபவங்கள் நேரிடும். ஆனால் இயேசுவின் பிரசன்னத்திற்குப் பின் மரிப்பவர்கள் மரித்த நிலையில் விடப்படுவதில்லை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, "அவர்கள் நித்திரையடைவதில்லை" என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். இதற்கு மற்றொரு கருத்தை நாம் சிந்திக்கையில், இயேசுவின் பிரசன்னத்திற்குப் பின் மரிப்பவர்கள் இராஜ்யம் வருவதற்கும் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அது முன்னதாகவே ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. இப்படியிருக்க, இயேசுவின் பிரசன்னத்திற்குப் பின் மாம்சத்தில் தேவனுக்குரிய வேலைகளைச் செய்து கொண்டிருப்பவர்கள், மரித்தவுடன் அதே காரியங்களைப் பூரணமடைந்த புது சிருஷ்டிகளாக, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக ஆவிக்குரிய நிலையில் தொடர்ந்து செய்வார்கள்.

"... இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை..."

புது சிருஷ்டிகளின் வல்லமை மற்றும் அம்சங்களைப் பொறுத்தவரையில், அதே மகிமை பெறுவார்களே தவிர அந்த மகிமையிலுள்ள நிலைகள் வேறுபடும் என்று அப்போஸ்தலர் இங்கு கூறுகிறார். ஆனாலும் அனைவரும் ஆவிக்குரிய மகிமையில் இருப்பார்கள். அதாவது, ஆவிக்குரிய நிலையை அடைபவர்களுக்குப் பொதுவான ஒரு மகிமை இருக்கும், அதேபோல் பூமிக்குரிய மேனியைப் பெறுபவர்களுக்கும் ஒரு பொதுவான மகிமை இருக்கும். அவரவர் தங்களுடைய பூரண நிலையில் மகிமையுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் பரலோகத்திற்குரியவர்களின் மகிமை எல்லாவற்றிற்கும் மேலானதாக இருக்கும். சபையைக் குறித்துச் சொல்லும்போது, அவர்கள் சூரியனைப் போலிருப்பார்கள் என்று வசனம் குறிப்பிடுகிறது. (மத் 13:43) கோதுமை வகுப்பாராக இருக்கும் அனைவரையும் நம்முடைய ஆண்டவர் வருங்காலத்தில் மகிமையடைவார்கள் என்று சொல்லியிருந்தாலும், அப்போஸ்தலனாகிய பவுல் சபை வகுப்பார் ஒவ்வொருவரும் பெறப்போகிற மகிமைகளில் உள்ள வித்தியாசங்களைப்பற்றி தெளிவாகக் கூறுகிறார். ஆகவே சபை வகுப்பார் ஒவ்வொருவரின் நிலையும், மகிமையும் வேறுபடும். அனைவரும் பூரணமாக இருப்பார்கள். அனைவரும் திருப்தியடைவார்கள் ஆனால் சகலத்திற்கும் மேலான பிதாவாகிய தேவன், தனக்கு அடுத்தவராக சகலத்திற்கும் மேலானவராக குமாரனை உயர்த்தியிருக்கிறார். இவர்களின் மகிமை, கனம், மற்றும் அதிகாரத்தில் உள்ள வித்தியாசத்தை நாம் காணலாம். இதேபோல் ஆண்டவரைப் பின்பற்றுபவர்கள் மத்தியிலும் இத்தகைய வித்தியாசங்கள் இருக்கும். "சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது." (1கொரி 15: 41)

நம்முடைய ஆண்டவர் சொன்ன இரண்டு உவமைகளில், இந்த வித்தியாசத்தை அவர் உணர்த்துகிறார். பத்து ராத்தல் திரவியம் பெற்றவர்களில் ஒருவன் வந்து பத்து ராத்தல் ஆதாயம் கண்டேன் என்று சொன்னவுடன் அவனை பத்து பட்டணங்களுக்கு அதிகாரியாக்கினார். ஐந்து ராத்தல் ஆதாயம் தேடினவருக்கும் ஐந்து பட்டணங்களைக் கொடுத்தார். (லூக் 19:11-27) இப்படியாக அவனவன் கிரியைக்குத் தக்கதாக அதிகாரத்தையும், கனத்தையும் சேர்த்துக் கொடுப்பார்.

இதை குறித்து நாம் ஆச்சரியப்படவேண்டாம். ஆண்டவர் தேர்ந்தெடுத்த பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை அவர் நேசித்தாலும், அவர்களில் மூன்று பேரை அதிகமாக நேசித்தார். இந்த மூவரிடமும் அவர் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். அநேக முக்கியமான சந்தர்ப்பங்களில் அவர்கள் அவரோடே இருந்தார்கள். "ஜீவ புத்தகம்" திறக்கப்பட்டப்பின் நம்முடைய ஆண்டவர் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும்போது, அவருடைய வலது பக்கத்தில் அப்போஸ்தலனாகிய பவுலையும், இடது பக்கத்தில் யோவானையும் கண்டு நாம் ஆச்சரியப்படவேண்டாம். இது சிங்காசனத்தைக் குறித்தக் காரியம் அல்ல, தேவனால் கையளிக்கப்படும் அதிகாரம் மற்றும் மகிமைக்கு அடையாளமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் சிறு மந்தை வகுப்பார் தேவ ஆவியைப் பூரணமாகப் பெற்றதினால், ஒருவருக்கொருவர் மதிப்பு கொடுக்கக்கூடியவர்களாக இருப்பார்கள். நிச்சயமாக, அவர்களுக்குள் பொறாமை இராது. ஒவ்வொருவரும் பெறக்கூடிய மகிமைக்கு ஏதுவான தெய்வீக நியாயத்தீர்ப்பைப் புது சிருஷ்டிகள் முழுமையாக அங்கீகரிப்பார்கள். இக்காலத்திலும் இந்த காரியங்களை நாம் காணலாம். தேவன் அவர் விரும்பியபடி கிறிஸ்துவின் சரீரத்தில் ஒவ்வொருவரையும் அங்கமாக நியமித்திருக்கிறார். தேவனைத் தொடர்ந்து தேடும் அனைவரும் அவருடைய திட்டங்களை என்றுமே மாற்றுவதில்லை, மாறாக அதை புரிந்துகொண்டு, அதற்கு இசைவாக செயல்படுவார்கள். அதேபோல் வருங்காலத்திலும் நடக்கும்.

இக்கால நிலையையும், வருங்கால நிலையையும் குறித்த வித்தியாசங்களைப்பற்றி விவரிக்கும்போது,- "அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும்." வசனத்தில் "இது" என்ற வார்த்தை புது சிருஷ்டியை குறிப்பிடுகிறது. ஞானஸ்நானத்தின்போது இந்தப் புது சிருஷ்டி கருத்தரிக்கப்பட்டது. அது வளர்ச்சியடையும்போது மாம்சத்தை தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, தெய்வீக சித்தத்தின் ஊழியக்காரனாக மாற்றியது. அதற்கு பின் அழிவுள்ள சரீரத்திலிருக்கும் புது சிருஷ்டி ஒரு புதிய சரீரத்திற்காகக் காத்திருக்கிறது. ஆகவே அழிவுள்ள சரீரத்தில் இருக்கும் புது சிருஷ்டி மரித்ததாகச் சொல்லப்பட்டாலும், சரீரம் மரித்தவுடன் அது மறுரூபமடைந்து, பரலோக வீட்டின் ஆவிக்குரிய மேனியை முதலாம் உயிர்த்தெழுதலில் பெற்றுக் கொள்கிறது.

உயிர்த்தெழுதலில் புது சிருஷ்டி பெறும் ஆவிக்குரிய மேனி அழியாதது என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். அது மரிக்காது. இதற்காகப் பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை - "அப்த்தாரிசியா". இதற்கு இனி மரணம் இல்லை என்பது பொருளாகும். (அழியாமை, சாகாமை) 50,53,54 ம் வசனங்களில் இதே வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. ரோமர் 2:7 மற்றும் 11தீமோ 1:10ல் அதே கிரேக்க வார்த்தை ("அழியாமை") பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆவிக்குரிய சரீரங்கள் அழிவைக் காண்பதில்லை என்ற காரியம் பெரும் சிறப்பு வாய்ந்தாகும். ஏனெனில், இந்தக் குணாதிசயம் பிதாவாகிய யேகோவா தேவனுக்கு மட்டுமே உள்ளது என்று நாம் அறிந்ததே. மேலும் நம்முடைய ஆண்டவராம் இயேசு முடிவு பரியந்தம் தன்னுடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்டு, தேவனுக்குக் கீழ்ப்படிந்ததால் பிதாவாகிய தேவன் தம்மில்தாம் ஜீவனுடையவராக இருப்பதுபோல, இயேசுவும் தம்மில்தாம் ஜீவனுடையவரானார். சபைக்கு தலையானவர் திவ்விய சுபாவத்தில் பங்கடைவதற்கு, மகிமையால் முடிச்சூட்டப்பட்டு அழியாமையை சுதந்தரித்துக் கொண்டார். தேவன் நம்முடைய இரட்சகருக்கு இப்படிப்பட்டவைகளைத் தந்தது மிகவும் நியாயமானவைகள். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் இவ்வனைத்தையும் பெற நம்முடைய இரட்சகர் மட்டுமே தகுதி பெற்றிருக்க, அவருடைய சரீர அங்கத்தினர்களுக்கும் தேவன் வாக்களித்திருக்கிறார் என்பதை நாம் நினைக்கும்போது மிகவும் திகைப்பாக இருக்கிறது. "சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச்செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை அளிப்பார்." (ரோ 2:7, 11பேது1:4)

"கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும், பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்" இங்கு மீண்டுமாக புது சிருஷ்டி "இது" என்று குறிப்பிடப்படுகிறது. இக்காலத்தில் இந்த உலகம் நம்மை அறியாது. நாம் பிதாவால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும், அவருடைய பிள்ளைகளாக இந்த மாம்ச சரீரத்தில் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, பலியின் உடன்படிக்கையை நாம் விசுவாசத்தோடு நிறைவேற்றுவதற்காகவே, தற்காலிகமாக தரித்திருக்கிறோம் என்பதையும் உலகம் அறியாது. "இப்பொழுது நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம்..." ஆனால் இதை உலகம் உணரவில்லை. நாம் தேவனோடு உடன்படிக்கை செய்திருப்பதால் நாம் இந்த உலக ஜனங்கள் மத்தியில் மேன்மையான பதவிகளை அடையமுடியாது. நாம் இவர்கள் மத்தியில் சராசரி மனிதர்களாக இருக்கிறோம். எந்தச் சூழ்நிலைகளிலும், தனிப்பட்ட நபர்களாகவும், பொதுவான சபையாக இருந்தாலும், நாம் துச்சமாக மதிக்கப்படுகிறோம் (உலகம் நம்மை ஏற்றுகொள்ளாது) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கருதுகிறார். ஆகவே நம்மை "அற்பமான சரீரம்" (பிலி 3:21) என்று குறிப்பிடுகிறார். ஆனால் வரக்கூடிய காலத்தில் நிலைமை என்னவாக மாறும் ? இந்தச் சபை (தலை மற்றும் சரீரம்) தூதர்கள் மற்றும் மனிதர்களுக்கு முன்பாக கனம்பெறுவார்கள். புது சிருஷ்டிகள் மகிமையடைவார்கள். இதுவே நமக்களிக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தம்.

"பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்." அழியக்கூடிய மாம்ச சரீரத்தில் இருக்கும் புது சிருஷ்டியை இங்கு "பலவீனமுள்ளதாய்" என்று குறிப்பிடப்படுகிறது. எல்லா புது சிருஷ்டிகளும், இந்த அபூரணமான, விழுந்துபோன மாம்சத்தில் வருத்தப்பட்டு தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தேவனிடத்தில் புதுசிருஷ்டிகளின் நோக்கங்கள், நேர்மையாகவும், பூரணமாகவும், உண்மையாகவும், உறுதியாகவும் இருக்கும் பட்சத்தில், இவைகளை புது சிருஷ்டிகளின் பலவீனங்களாகத் தேவன் கருதாமல்,தம்முடைய மிகுந்த கிருபையினால், அவைகளை மன்னிக்கிறார். இவர்கள் பெறப்போகும் புதிதான சரீரங்களுக்கு இப்படிப்பட்ட பலவீனங்கள் ஒட்டிக்கொண்டிருக்காது என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே -"பலமுள்ளதாய் எழுந்திருக்கும்" என்ற வார்த்தைகள் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய வல்லமையாகிய, புது சுபாவத்தின் வல்லமை அதாவது பூரணமான வல்லமை கொடுக்கப்படும்.

"ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்" இப்பொழுது புது சிருஷ்டி ஜென்மசரீரமாக இருக்கிறது. மாம்சத்திலிருந்து கொண்டுப் போராடுகிறது. தேவனுடைய சுத்தக் கிருபையினால் மட்டுமே, புது சிந்தையை அவர் புது சிருஷ்டியாகக் கருதுகிறார். குறித்தக்காலம் நிறைவேறும்போது, இந்தப் புது

சிந்தைக்கு ஏற்ற ஒரு புது சரீரத்தை தேவன் கொடுப்பார். ஆகவே இப்பொழுது பெற்றிருக்கும் மாம்ச சரீரத்தைப் போலவே, புதிதான ஆவிக்குரிய சரீரத்தையும் புது சிருஷ்டி பெற்றுக்கொள்ளும். எப்படிப்பட்ட மகிமையான ஒரு திட்டம். உண்மையில், சராசரி மனிதனால் உணர்ந்துக் கொள்ளமுடியாத இந்த அனுபவத்தை, நாம் வசனத்தின் மூலம் நம்முடைய சிந்தையையும், வாக்குத்தத்தங்களையும், தேவனுடைய வெளிப்பாட்டையும் "இதுவரைக்கும் காணக்கூடாதவைகளையும்" உறுதியாக விசுவாசிக்கிறது.

ஒருவேளை, இனி வரக்கூடிய மகிமையின் சிந்தனைகள், நம்மை இந்த உலகத்தையும், அதின் காரியங்களையும், சோதனைகளையும், மூடத்தனங்களையும், சந்தோஷங்களையும் விட்டுப்பிரித்து, நம்முடைய ஆண்டவரின் பரிபூரணத்திலும், மகிமையிலும் பங்கெடுப்போம் என்ற காரியங்கள் எவ்வளவு உண்மையானது என்று நமக்கு விளங்கும். ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை - ஏனெனில் நம்முடைய ஆண்டவர் நிக்கொதேமைப் பார்த்து - "பூமிக்கடுத்தக் காரியங்களை நான் உங்களுக்கச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள் ? " என்று கேட்டார். ஆகவே பரலோகக் காரியங்களைப்பற்றி புரிந்துகொள்வதற்கு நாம் முதலில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட வேண்டும். அதற்கு பின் கேள்விக்கு இடமில்லாமல், இந்த சுவிசேஷ யுகத்தில் ஆவிக்குரிய ஓட்டத்திற்கான வாய்ப்பு நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது. நாம் பெறும் தெய்வீக ஆலோசனைகள் மற்றும் உலகத்தை எந்த அளவிற்கு வெறுக்கிறோமோ, எந்த அளவிற்கு பாவமான பாரமான சகலத்தையும் தள்ளிவிடுகிறோமோ, எந்த அளவிற்கு சபைக்கூடுதலை அசட்டை செய்யாமல் இருக்கிறோமோ, எந்த அளவிற்கு அனுதினமும் வசனங்களைத் தேடி ஆராய்ந்துகொண்டிருக்கிறோமோ, அந்த அளவிற்கு நாம் இந்த உலகத்தின் ஆவியை மேற்கொண்டு, சாத்தானுடைய தந்திரங்களுக்கு நம்மைக் காத்துக்கொள்ள முடியும். ஆகவே நாம் அனுதினமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களையும், கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்டக் காரியங்களை நாம் செய்வோமேயானால், நாம் நிச்சயமாக தோல்வியடைவதில்லை, மாறாக, நம்முடைய ஆண்டவரும், இரட்சகருமான இயேசுவின் நித்திய இராஜ்யத்தில் சந்தோஷமாக அனுமதிக்கப்படுவோம். (1யோவ 3:2,3, ரோ 8:17, யோவ 3:12, 1கொரி 2:14, 1யோவ2:15, எபே 6:10-18, எபி 12:1,2,10:25, யோவ 5:29, அப் 17:11, 11பேது 1:4-11)

R2642 -"விசுவாசத்தின் முழு உறுதி" (23ம் கேள்வி காண்க)

"என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும், நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்." - சங் 23:6

சரியான நிலையில் இருக்கும் தேவ ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முழு நம்பிக்கையின் காப்புறுதியையும், விசுவாசத்தின் முழு காப்புறுதியையும் பற்றி பரிசுத்தவானாகிய பவுல் பேசுகிறார். (எபி 6:11,10:22) இதே கருத்தை தாவீது பக்தனும் வெளிப்படுத்தியிருக்கிறார். மேலும் -"உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி..." (பிலி1:5) இப்படிப்பட்ட வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருந்தாலும், வெகு சில கிறிஸ்தவர்கள் மட்டுமே, விசுவாசத்தை முழுமையாக நம்புகிறார்கள். "நாங்கள் தேவனை நேசிப்பதினால், தேவனால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களின்படி நாங்கள் பரலோக இராஜ்யத்தில் மகிமையான நிலையை அடைவதற்கு தேவனுடைய சகலவிதமான நன்மைகளும், கிருபைகளும் எங்களைத் தொடரும் " என்று சந்தேகத்திற்கு இடமின்றி தைரியமாக சிலர் மட்டுமே இப்படி சொல்லமுடிகிறது. இந்தச் சிலர் மட்டுமே மிகுந்த சந்தோஷத்துடன், ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள். இப்படிப்பட்ட இருதயத்தை மற்றவர்களிடம் காணமுடிகிறதில்லை. இப்படிப்பட்ட இருதயத்தைப்பெற அவர்களைத் தடுப்பது எது ? ஆகவே விசுவாசத்திற்குள் இளைப்பாறுகிறவர்களின் எண்ணிக்கை இவ்வளவு சிறிதாக இருப்பதன் காரணத்தை நாம் காணலாம். இவர்களின் தடுக்கல் அதாவது தடைகள் என்ன ? இந்தத் தடைகள் எப்படி அகற்றப்படுவது ?

இரண்டு விதமான தடைகள் உள்ளது - (1) தேவனுடைய பக்கத்தில் இருக்கும் அநேகர், அவரால் மிகுவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், சத்தியத்தின் அறிவை அதிகம் பெற்றவர்கள், இயேசுவின் ஈடுபலியின் மேல்

விசுவாசம் வைத்தவர்கள், வருங்கால ஜீவியத்திற்கு பலியின் ஜீவியமே முக்கியம் என்று உணர்ந்தவர்கள், இப்படியாக நீதிமானாக்கப்பட்டவர்கள், அடுத்து தேவனுடைய குடும்பத்தில் அவருடைய பிள்ளையாகவும், கிறிஸ்துவின் உடன் சுதந்தரராகவும், அவருடைய வாக்குத்தத்தங்களுக்குப் பங்காளிகளாவதற்கான அடுத்த நிலையை அவர்கள் இன்னும் கடக்காமலிருக்கிறார்கள். நம்முடைய அர்ப்பணிப்புக்கான முழு நோக்கம் இதுவே. நம்முடைய விருப்பங்களையும், நோக்கங்களையும், எதிர்காலத்தைக் குறித்தக் கவலைகளையும், இலக்குகளையும், நம்முடைய நேரங்களையும், செல்வாக்குகளையும், நாம் பெற்ற யாவையும் முழுமையாக தேவனுக்கென்று கொடுத்துவிட்டு, அவரிடம் சரணடையவேண்டும். இப்படிப்பட்ட முயற்சிகளை எடுக்காவிட்டால், நாம் இன்னும் கிறிஸ்துவின் சிலுவையை எடுத்து அவர்பின் செல்லவில்லை என்று பொருளாகும். இப் பெரும்பாலான கிறிஸ்தவர்கள், தேவனுடைய வாக்குத்தத்தங்களை இக்காலத்துக்குரியதா ? அல்லது வருங்காலத்திற்குரியதா என்ற கேள்வியை எழுப்புகிறார்கள் என்று தெளிவாகத் தெரிகிறது. ஒரு கோணத்தில் பார்க்கும்போது சரியாகவும் தோன்றுகிறது. ஏனெனில், அவர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்து, தங்களுடைய சரீரங்களை தேவனுக்கு ஏற்ற பலிகளாக நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் மூலம் செலுத்தாவிட்டால், இந்தக் கேள்விக்கானப் பதிலை நிச்சயமாக அவர்களால் உணரமுடியாது.

இவர்கள் இனி ஒருபோதும் காலம் தாமதிக்கக்கூடாது என்று நாம் அவர்களுக்கு புத்திசொல்லுகிறோம். சர்வவல்லமையுள்ள தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த மிகப்பெரிய வாய்ப்பை அவர்கள் நழுவ விடக்கூடாது. இனி மேலும் அவர்கள் அதே நிலையில் நின்றுவிட்டு, தேவனுடைய கிருபைகளைப் பயன்படுத்த தவறிவிட்டால் இதுவரைக்கும் நாம் பெற்ற தேவனுடைய சகல காரியமும் வீணாய்போய்விடும். (11கொரி 6:1) இயேசு கிறிஸ்துவின் மீட்பின் அறிவைப் பெற்ற யாவரும், பாவ மன்னிப்பைப் பெறவும்,விசுவாசத்தின் மூலம் நீதிமான்களாக்கப்படவும், தேவனுடைய கிருபை இலவசமாகப் பொழியப்படுகிறது. நாம் செலுத்தக்கூடிய ஜீவ பலிகள், கிறஸ்துவின் பலியின் மூலம் தேவனுடைய பார்வையில், அவருடைய பலிபீடத்தின் மேல் அங்கீகரிக்கப்படுவதற்காகவே இப்படிப்பட்ட இலவசமான கிருபை கொடுக்கப்படுகிறது. தேவன் கொடுக்கும் கிருபைக்கு ஒரே நோக்கம் இதுவே.

ஆகவே யாதொருவர் இவைகளை உணர்ந்து, வாய்ப்புகளை அறிந்தும், தான் பெற்றிருக்கும் மிகச்சிறிய பங்கை அர்ப்பணிக்க மறுக்கிறார்களோ! அவர்கள் கிறிஸ்துவின் அன்பைப் பெறாதபடிக்கு தங்களை கட்டுப்படுத்திக் கொண்டு, தங்கள் மேல் பொழியப்படும் கிருபையையும், இரக்கத்தையும் உணர மறுக்கிறார்கள். தாங்கள் பெற்ற வாய்ப்புகளைப் புறக்கணிக்கும் இவர்கள், தங்களுடைய ஆபூரணமானப் பலிகளைச் செலுத்தத்தவறிய இவர்கள், இயேசுவின் இராஜ்யத்தில் அதற்கு அதிகமான நஷ்டத்தை அடைவார்கள். இவர்கள் தேவனுடைய கிருபையை வீணிலே வழங்கி, எந்த நன்மையையும் பெறாமல், எல்லாவற்றிற்கும் மேல் இருளில் இருக்கும் உலகக் காரியங்களில் மூழ்கிவிடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் என்ன செய்யவேண்டும் ? உடனடியாக, தங்களை தேவனுடைய பணியில் அர்ப்பணிக்கவேண்டும். காரியம் சிறிதாக இருந்தாலும் சரி, பெரியதாக இருந்தாலும் சரி. ஆனால் இக்காலத்தில் எந்தவிதமான நன்மைகளும் பெறாவிட்டாலும், அவர்கள் பெற்றக் கிருபையை அவர்களின் கிரியைகளினால் எப்படியாவது வெளிப்படுத்தவேண்டும். நாம் பெறும் சிறுசிறு தெய்வீகக் கிருபைகளையும் நாம் புரிந்துகொண்டு போராடவேண்டும். ஆனால் பலவீனமான சிந்தை, நியாயத்தீர்ப்புகள் நம்மை மீண்டும் இந்த உலகக் காரியங்களில் இழுத்து விடாதபடிக்கு எச்சரிப்போடிருக்கவேண்டும். ஏனெனில், விழுந்துபோன சிந்தையானது சகலத்தையும் சீர்தூக்கிப்பார்க்க மறுக்கும். நாம் உபத்திரவப்படவேண்டியது இன்னும் கொஞ்சம் காலம் தான், ஆனால் நம்முடைய ஆண்டவரோடு, அனுபவிக்கப் போகிற நித்திய சந்தோஷத்திற்கும், ஆசீர்வாதங்களுக்கும், மகிமைக்கும் அளவே இல்லை.

அடுத்து, உண்மையில் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்கள், முழுமையாக இக்காலத்தில் பெற்றிருக்கும் ஆவிக்குரிய ஜீவியத்தில் முழுமையாக மகிழ்ச்சியடைவார்கள். உண்மையில் இந்த உலகம் கொடுக்க முடியாததும், எடுக்கமுடியாததுமான தெய்வீக சமாதானத்தை அவர்களின் உள்ளம் பெற்றிருக்கும். இந்த

முழு உலகம் தேடியும், தவித்தும் பெறமுடியாததை, தேவனிடம் தங்களை முழுமையாக அர்ப்பணித்து அவருடைய ஜனங்கள் பெற்றுக்கொள்கிறார்கள். ஆகவே நிர்விசாரமானவர்களைத் தேவனோடு அவர்களின் உடன்படிக்கையை புதுப்பித்துக்கொள்ள நாங்கள் வேண்டுகிறோம். இதுவே தேவனுடைய சுதந்தரத்திற்கு அவர்களைப் பங்காளிகளாக ஆக்கமுடியும். ஆகவே அவர்கள் "விசுவாசத்தின் முழு காப்புறுதியின்" மற்றும் "தேவனுடைய கிருபை, நன்மை இந்தக் காலத்திலும், வருங்காலத்திலும் அவர்களை பின் தொடர்ந்து, பரலோக வீட்டில் நித்தியமாக பிரவேசிப்போம் என்ற முழு நம்பிக்கையின்" அஸ்திபாரத்தை அடித்தளமிட்டு, அதற்குள் பிரவேசிக்க வேண்டும்.

(2) உண்மையான கிறிஸ்தவர்கள் மத்தியில், தங்களை முழுமையாக ஜீவபலியாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்தவர்களில் அநேகர் -"தேவனுடைய நன்மைகளையும் கிருபைகளையும் இப்போதே நாங்கள் உணருகிறோம். இவைகள் எங்களுடைய வாழ்க்கையில் தொடர்ந்து எங்களை நடத்தும். நாம் நித்தியமான தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்போம். ஆகவே எங்களிடம் முழுமையான நம்பிக்கையும், விசுவாசத்தின் உறுதியும் இருக்கவேண்டும் என்று விரும்புகிறோம். நாங்கள் கர்த்தரை ஏற்றுக்கொண்டோம், அவருடைய கிருபையினால் நாங்கள் அனைத்தையும் மேற்கொள்ளுவோம்" என்று தைரியமாக கூறுகிறார்கள். ஆனால் இந்த வகுப்பாரின் குறை என்ன ? இவர்கள் தேவன் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தில் சற்று குறைவு படுகிறார்கள். "விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாதக் காரியம்", "நம்முடைய விசுவாசம் உலகத்தை ஜெயிக்கும் ஜெயமாக இருக்கவேண்டும்"விசுவாசத்தின் கேடயத்தைப் பிடித்திராதவர்கள் சாத்தானை எதிர்க்கமுடியாது. (எபி 11:6, 1யோவ 5:6)

நம்முடைய விசுவாசத்தின் குறைச்சலை மேற்கொள்வதற்கும், விசுவாசத்தை அதிகரிப்பதற்கும் நாம் என்னசெய்யவேண்டும் ?"ஆண்டவரே எங்கள் விசுவாசத்தை அதிகரித்தருளும்" என்று நாம் அப்போஸ்தலரைப்போல் ஜெபித்து விட்டு, அதற்கு இசைவான கிரியைகளை நடப்பித்து, நம்முடைய இருதயத்தில் விசுவாசத்தை வளர்க்கவேண்டும். (a) தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நம்முடைய நினைவில் ஓயாமல் சிந்தித்து, தேவனுடைய வார்த்தைகளில் பரிட்சயமாக இருக்கவேண்டும். (b) நாம் தேவனோடு செய்த உடன்படிக்கையைத் தொடர்ந்து நினைவில் கொள்வதற்கு நம்முடைய இருதயத்திலும், உதடுகளிலும், அறிக்கையிட்டு அவருக்கு நன்றிகளை ஏறெடுக்க வேண்டும்.நம்முடைய சிந்தையிலும்,சகோதரர்களோடு சம்பாஷிக்கும் போதும் பரிசுத்தமான சிந்தைகளோடு அவைகளைப் பகிர்ந்துக்கொள்ள வேண்டும்.

R 2005 col. 2 – R2006 col.1 (24ம் கேள்வியை காண்க)

நாம் எதிர்பார்க்காத காரியங்களுக்காக "வீணான காரியங்களைத் திரும்பத்திரும்ப" நம்முடைய ஜெபங்களில் ஏறெடுப்பதற்கு அவசியமில்லை. ஆகவே நாம் "எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கவேண்டும்" (யாக் 1:6) மேலும், எவைகளை கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்", ஏனெனில் "விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" -(மாற் 11:24, ரோ 14:23)

ஆகவே தேவனுடைய பிள்ளைகள் தந்தையின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியும் மாணவர்களாக இருக்கவேண்டும். நாம் பெற்றுக்கொள்ள வேண்டியதை அவரிடம் கேட்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அதனால் அவரின் மகிழ்ச்சி அதிகரிக்கிறது. ஆனாலும் அவர் நமக்கு மனப்பூர்வமாகக் கொடுக்கும் காரியங்களை மட்டுமே நாம் கேட்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இவைகளை நாம் முழு விசுவாசத்தோடே கேட்கவேண்டும்.

நிச்சயமாக, இத்தகைய ஜெபங்களில் தேவன் நம்முடைய இருதயத்தின் விசுவாசத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கு எந்த சந்தேகமும் இல்லை. "விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாதக் காரியம்" என்று வாசிக்கிறோம். "நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசமே இந்த உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்" என்றும் வாசிக்கிறோம். ஆகவே விசுவாசத்தை வளர்த்துக் கொண்டு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை ஜெபத்தில் வேண்டுபவர்கள் நிச்சயமாக தேவனுடைய நியாயத்தீர்ப்பில் அவைகளைப் பெற்றுக் கொள்வார்கள். அப்போஸ்தலர்கள் மத்தியில் இருந்ததுப்போல் இந்நாளிலும், நம்மத்தியில் -"ஆண்டவரே, எங்களுடைய விசுவாசத்தை அதிகரித்தருளும்" என்ற ஜெபம் காணப்படவேண்டும். அவிசுவாசமானக் காரியங்களில்

நாம் விழுந்துவிடாதபடிக்கு, முடிவு பரியந்தம் விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருக்க மேலும் நாம் ஜெபிக்க வேண்டும்.

உண்மையான விசுவாசம் எதையும் எளிதில் நம்பாது. நன்மையான, தக்க ஆதாரங்கள் இருந்தால் மட்டுமே நம்பும். தேவனுடைய வார்த்தைகளுக்கும், மனுஷனுடைய ஞானத்திற்கும் உள்ள விசுவாசத்தை மிகத் தெளிவாக சீர்தூக்கிப் பார்க்கும். ஆனால் தேவனுடைய வார்த்தைகளைக் கண்டுபிடித்தால், அவர் என்றுமே பொய்யுரையாதவர் என்றும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் நோக்கங்களையும் நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார் என்றும் அறிந்ததினால், நிச்சயமாக அதில் நம்பிக்கை வைக்கும்.

அதற்கு பின் உண்மையான விசுவாசம், ஆண்டவரின் வார்த்தைகளுக்குக் கவனம் செலுத்தி, அவனுடைய அஸ்திபாரத்தைப் பெலப்படுத்தும். அதற்கு அவருடைய வார்த்தைகளுக்குத் தகுந்தபடி நம்பிக்கையான பதில்வர,பொறுமையோடு, ஜெபத்தில் காத்திருக்க வேண்டும். "விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்", மேலும் "நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள் என்று விசுவாசியுங்கள்". இவைகளைச் சொல்லி முடித்தப்பின் நம்முடைய ஆண்டவர் ஓர் அநீதியான நியாயாதிபதியினிடத்தில் ஓயாமல் தொந்தரவு செய்த ஒரு விதவைக்கு பதில் அளிக்கப்பட்ட ஓர் உவமையைச் சொன்னார். இப்படியிருக்க நீதியுள்ள நியாயாதிபதியான தேவன் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விண்ணப்பத்தைக் கேட்காமல் இருப்பாரோ. நீண்ட காலமாக தேவன் பழிவாங்குவதற்காகக் காத்திருந்தாலும் அவர் "குறித்த காலம்" வரைக்கும் காத்திருக்கவேண்டும். ஆகவே "சோர்ந்துப் போகாமல் தொடர்ந்து ஜெபம் பண்ணுங்கள்" என்ற காரியத்தை உறுதிபடுத்த அந்த உவமையைச் சொன்னார். (லூக் 18:1)

நம்முடைய சராசரி விருப்பங்களுக்காக நாம் விசுவாசத்தோடு, விடாமுயற்சியோடு ஜெபிக்கையில், வசனங்களிலிருந்து, நமக்கு தேவையானக் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் சிறுபிள்ளைகள் போல, மேலிருந்து வரும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிபவர்களாகக் காணப்பட வேண்டும். ஆகவே -"இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை, கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீகள்." - (யோவ16:24) என்ற வசனத்தை நாம் நினைவில் கொள்ளவேண்டும். தாங்கள் கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காகவும், விசுவாசத்தின் வளர்ச்சிக்காகவும் ஜெபிப்பவர்களுக்கு மிகுதியான ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் தேவன் தன் வசத்தில் வைத்திருக்கிறார்.

உண்மையில், சில நேர்மையானதும், ஏற்றதுமான காரியங்களுக்காக ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்களுக்கான பதில் நீண்ட காலம் தாமதிக்கலாம். எடுத்துக்காட்டாக - "உம்முடைய இராஜ்யம் வருவதாக உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல இப்பூமியிலும் செய்யப்படுவதாக" என்று பதினெட்டு நூற்றாண்டுகளாக சபை ஜெபித்துக் கொண்டிருந்தாலும், அதற்கான பதில் இன்னும் வழங்கப்படவில்லை. இத்தனை காலங்களாக ஜெபித்தும் அதை மிகுந்த ஆர்வத்தோடு எதிர்பார்த்தும், அந்த இராஜ்யத்தை கண்ணினால் காணாமல் அதற்காக ஜெபித்துக் கொண்டிருக்கும் சபை ஜனங்களின் விசுவாசத்திற்கு ஏற்றவாறு இக்காலத்தில் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். எப்படியாயினும், நம்முடைய அன்றாட உணவு, தற்காலிகமான தேவைகள், தீமையிலிருந்து விடுதலை இன்னும் பலகாரியங்களுக்காகச் செய்யப்படும் ஜெபங்களுக்கு உடனடியாக பதில் அளிக்கப்படுகிறது.

இந்த காரியங்களை பார்க்கும்போது, ஜெபத்தின் உரிமையையும் மற்றும் தேவனுடைய மற்ற கிருபைகளையும், சுயநலமான நோக்கங்களுக்காக தேவன் என்றுமே பதில் அளிப்பதில்லை என்று தெளிவாக தெரிகிறது. நேர்மையாக ஒருவரால் கேட்கப்படும் காரியம் மற்றவருக்கும் வேறொரு கோணத்தில் அதே காரியம் தவறாகத் தோன்றலாம். நாம் சதோதரர்கள் மத்தியில் மகிமை அல்லது மேன்மை அடைவதற்காக தன்னில்தான் நன்மையானக் காரியங்களைத் தவறான நோக்குடன் விரும்பி கேட்பதும் ஒரு தவறான விண்ணப்பமாகும்.

இயல்பாக, நன்மையானக் காரியங்களுக்காகவும், நம்முடைய சௌகரியத்திற்காகவும் நம்முடைய விருப்பங்கள் அதிகரிப்பது ஒரு சுயநலமான நோக்கமாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்களைக் குறித்து - "நீங்கள்

விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்." (யாக் 4:3) என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். நாம் சோதிப்பதற்காக சில நன்மையானக் காரியங்களை ஜெபத்தில் கேட்பதும், அதன் மூலமாக நாம் விசுவாசத்தை ஸ்தாபிப்பதும், ஒரு தவறான செயலாகும். ஆனால் முழுமையான விசுவாசமுள்ளவர்கள் கேட்கும் அனைத்துக் காரியங்களும் கொடுக்கப்படும் என்று வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்க வேண்டும்" என்று தேவன் திட்டமிட்டிருக்கிறார். ஆகவே தேவனால் அங்கீகரிக்கப்படாதவைகளுக்காக நாம் விண்ணப்பிக்கக்கூடாது. ஆனால் நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரும்போது, நாம் ஆவிக்குரிய நன்மைகளுக்காக மட்டுமே பிதாவின் சித்தத்தின்படி விண்ணப்பிக்கவேண்டும். அதற்கு பின் தேவன் நமக்கு இயற்கையாகவே கொடுக்கக்கூடிய பதில்களுக்காகக் காத்திருக்க வேண்டும். மாறாக எவ்விதமான அற்புதங்களினால் அவர் நமக்கு பதில் அளிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஏனெனில், இயற்கையான வழிகள் நம்முடைய தேவைகளுக்குக் குறைவாக இருக்கும் பட்சத்தில் தேவன் இயற்கைக்கு மேற்பட்ட வழிகளைத் தேர்வு செய்வார்.

மேலும், விசேஷமாகப் பரிசுத்த ஆவியின் கிருபைகளுக்காக நீங்கள் தேவனிடத்தில் தாராளமாக விண்ணப்பிக்கலாம் என்று வெளிப்படையாக நமக்கு சொல்லப்படுகிறது. ".... பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா...." -(லூக் 11:13) என்றார். "நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை." - யாக் 4:2

கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய வார்த்தைகளிலும், நடந்து, அவைகளைத் தேடி, வாஞ்சிப்பவர்களுக்குக் கொடுக்கப்படுவதற்காக வைக்கப்பட்டிருக்கும் தெய்வீகக் கிருபைகளை அநேகர் பயன்படுத்தாமல் விட்டுவிடுவதே அவர்களுக்குப் பாதகமாகிவிடுகிறது. ஜெபங்கள் என்றுமே சுயநலம் அற்றதாக இருக்கவேண்டும் என்று நமக்குச் சொல்லப்பட்டாலும், தேவனுடைய வார்த்தைகள் மற்றும் அவருடைய சித்தத்தின்படி ஜெபிப்பதற்கு முழு சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வெற்றி வாக்களிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் வரும் விசுவாசம் மற்றும் நீடிய பொறுமைக்கானச் சோதனைகளும், நம்முடைய ஜெபங்களுக்கான ஏற்றச் சூழ்நிலைகளாக இருக்கிறது. வெற்றிபெறுவதற்கு அடையும் ஒவ்வொரு தோல்வியும் பாவமன்னிப்புக்காகவும், நம்முடைய பலவீனங்களைப் பலப்படுத்தும் தெய்வீக ஆசீர்வாதங்களுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபங்களுக்கான வாய்ப்பாக இருக்கிறது. ஏனெனில், அதற்கு பின் வரும் அதேபோன்ற சோதனைகளை எதிர்நோக்குவதற்கு நாம் உடனடியாக வாக்குத்தத்தம் செய்யப்பட்ட "கிருபாசனத்தண்டையில்" சேருவோம். நாம் மேட்டிமையான சிந்தையில் உயர்வாக நம்மை எண்ணாதபடிக்கும் தன்னிச்சையாகப் பெறப்பட்ட ஒவ்வொரு வெற்றிக்கும் நம்முடைய ஜெபமே காரணமாக இருக்கிறது. ஆகவே நாம் மனத்தாழ்மையோடு எதிராளியான பிசாசானவனிடமிருந்துவரும் அடுத்த தாக்குதலைக் கவனத்தோட சந்திக்க வேண்டும். சத்தியத்திற்காக நடப்பிக்கப்படும் ஒவ்வொரு ஊழியமும் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கும் ஜெபங்களுக்காகவும், மகா இராஜாவை சேவிப்பதற்கான வாய்ப்பாகவும், மேலும் இனி ஊழியம் செய்வதற்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகளுக்கானத் தேவைகளையும், கிருபைகளையும் ஞானமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையாகவும் இருக்கிறது.

நீங்கள் மேற்கொள்ளத்தக்கதான சோதனைகளைச் சந்திக்கும் போது, அவைகள் உங்களுக்குள் இருக்கும் பொறுமை, அனுபவங்கள், சகோதர சிநேகம், இரக்கம், அன்பு, சந்தோஷம் என்ற நல்லகுணங்கள் வளர்ச்சியடையும்போது நீங்கள் நன்றியுள்ள ஜெபங்களை ஏறெடுத்து, தெய்வீகக் கிருபைக்காகவும் உதவிகளுக்காகவும் காத்திருக்கலாம். ஒரு வேளை உங்களை நசுக்கிப் போடும் அளவிற்கு நீங்கள் சந்திக்கும் சோதனையைத் தாங்க முடியாததாக இருக்கும் பட்சத்தில், உங்கள் சுமைகளைச் சுமக்கிறவரிடம் கொண்டு செல்லுங்கள். உங்களுக்கு, இந்தச் சுமையை நன்மைக்கு ஏதுவாக சுமப்பதற்கும் உதவியைக் கேளுங்கள், உங்களுக்குத் தீமையை விளைவிக்கும் எல்லாக்காரியத்திலிருந்தும் விடுதலைப்பெறுங்கள். நம்முடைய இருதயம்

தேவனுடைய வார்த்தைகளைக் கீழ்ப்படிவதற்கு முழு விருப்பமுள்ளதாக இருந்து, சபைக்கூடுதலை விட்டுவிடாமல் இருக்கும் பட்சத்தில், காரணமில்லாமல் உங்கள் வழிகளில் தடைகள் ஏற்பட்டு, அதற்காக நீங்கள் முயற்சிகள் எடுத்து தோல்வியடைந்தால், நிச்சயமாக அந்தக் காரியத்தை நாம் ஜெபத்தின் மூலம் தேவனிடத்தில் எடுத்து செல்லலாம். அதற்கு பின் அவருக்காகப் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். அப்போது வெகு சீக்கிரத்தில், உங்கள் சார்பில் தெய்வீக வல்லமை வெளிப்படுதை நீங்கள் காணலாம். உண்மையான ஒரு சகோதரனை அல்லது கிறிஸ்துவுக்குள் ஒரு சிறப்பான போர்வீரனை சோதனைக்கு உட்பட்டவராக நீங்கள் காணும்போது, கிறிஸ்துவுக்குள்ளாக உங்கள் சகோதரருக்கான அன்பு உங்கள் இருதயம் முழுவதையும் நிரப்பி, அவரை அந்த சோதனையிலிருந்து காப்பாற்றுவதற்கு விரைந்தோடவேண்டும். அதற்கு மேலாக, அவர் முழுமையாக மீட்ப பெறும்வரைக்கும் கிருபாசனத்தண்டையில் சேர்ந்து இடைவிடாமல் அவருக்காக ஜெபிக்க வேண்டும். நீங்கள் நன்மையடையும்படியாக அவருக்காக நீங்கள் செய்யும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உங்கள் முயற்சிகள் ஆசீர்வதிக்கப்படும். வரக்கூடிய காலத்தின் மிகுந்த சந்தோஷமான நற்செய்தியை அறிவிப்பதற்கானப் பக்திவைராக்கியம் உங்களுக்குள் கொழுந்து விட்டு எரியாமற்போனால், உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை அஸ்தமித்துவிடும். ஆனால் நீங்கள் சுவிசேஷத்தை நேசித்து, வைராக்கியத்தை வெளிப்படுத்துவதில் சற்று குறைவுள்ளவர்களாக இருந்தால், அதற்காக தேவனிடத்தில் ஜெபியுங்கள், தேவன் உங்கள் தாலந்துகளைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ள அவர் உங்களுக்கு உதவிசெய்வார். உங்களுக்கு வாய்ப்புகள் குறைவாகக் கிடைத்தாலும், அவரிடத்தில் ஜெபியுங்கள் அதற்கு பின் உங்களுக்குக் கிடைத்திருக்கும் சின்னச்சின்ன வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அதற்கு பின் உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று ஆண்டவரிடம் கூறலாம். அதற்கு பின் அவர் உங்களுக்காக ஏற்படுத்தித் தரும் வாய்ப்புகளுக்காக காத்திருங்கள். அதுவரைக்கும் உங்கள் கைகளுக்கு நேரிட்டதை முழு பெலத்தோடு செய்து கொண்டிருங்கள்.

வாக்குவாதங்களுக்குரிய பிரச்சனைகளில் நீங்கள் அகப்படும்போது, அல்லது உங்களுக்கு இருக்கக்கூடிய தவறான பழக்கவழக்கங்களால் உங்கள் குடும்பத்திலும், விசுவாச வீட்டார் மத்தியில் குழப்பங்கள் ஏற்படும்போது, இவைகளை மேற்கொள்வதற்காக, தேவனிடத்தில் கெஞ்சி மன்றாடுங்கள். இதற்கு இடைப்பட்ட காலத்தில் உங்கள் ஜெபங்களுக்கு இசைவாக, முழு பலத்தோடே அந்த பலவீனங்களை விட்டு விலக முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் ஞானத்தில் குறைவுள்ளவர்களாக இருப்பதினால், தேவனுக்கு ஊழியம் செய்ய முயற்சிக்கும்போது தோல்வியடைகிறீர்களா ? தேவனிடத்தில் ஜெபத்தில் ஏறெடுங்கள். "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." (யாக் 1:5) என்ற வாக்குத்தத்தத்தை நினைவுக்கூர்ந்து ஜெபியுங்கள்.

உங்கள் இரக்ககுணத்தினால் அல்லது மற்றவர்களுடைய வஞ்சகத்தினால் உங்கள் வணிகத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டு விட்டதா? இவைகள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சியைத் தடுக்கிறதா ? தேவனுடைய கிருபாசனத்தண்டையில் சென்று நம்முடைய ஜெபத்தில் ஏறெடுப்பதே இதற்குத் தீர்வைக் கொண்டுவரும். இந்தப் பிரச்சனைகளிலிருந்து விடுபட உங்களுக்கு அனுபவங்கள் இருந்தாலும், நீங்கள் தேவனிடத்தில் இதற்கான வழிமுறைகளைப்பற்றி விசாரிப்பது மிகவும் ஏற்றதாக இருக்கும். உங்களுடைய ஞானம், திறமை மற்றும் சாமர்த்தியத்தைக் காட்டிலும் தேவனுடைய ஞானம் உங்களை வழிநடத்தும்போது, தேவனுடைய அற்புதமான செயல்கள் உங்கள் பிரச்சனைகளுக்கு சிறப்பாக பதில் தரும்.

அறிவு

1.அறிவின் முக்கியத்துவம் என்ன?

மத் 4:4 - அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.

R 3052 through R 3060 : "தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்".

"அப்பம் " என்ற வார்த்தை பொதுவாக, உணவுக்கு பயன்படுத்தப்படுகிறது. ஏனெனில் அது பசியைப் போக்கி, பலத்தைக் கொடுத்து, வளர்ச்சியை ஊக்குவித்து, தொடர்ந்து ஜீவனை தக்கவைக்கக்கூடியதாக இருக்கிறது. தேவன் அவருடைய ஜனங்கள் பலப்பட்டு, வளர்ச்சி அடைந்து, பரலோக வாசிகளாக நித்திய ஜீவனைப் பெறுவதற்கு, தேவன் ஏற்படுத்தின அவருடைய வார்த்தைகளை நம்முடைய ஆண்டவர் அப்பத்தை அடையாளமாக சொல்லுவது, மிகவும் பொருத்தமாக இருக்கிறது. தெய்வீக சத்தியமானது, ஆவிக்குரிய உணவை அடையாளப்படுத்தப்படுகிறது. ஏனெனில் தெய்வீக திட்டத்தில் இயேசுவே "வழியும் சத்தியமும் ஜீவனுமாக" இருப்பதால், தேவனுடைய ஜனங்களுக்கு அவரே "வாழ்வு தரும் அப்பமாக" இருக்கிறார் என்று சொல்லப்படுகிறது. ஆகவே நாம் நம்முடைய நம்பிக்கையான நித்திய ஜீவனை அடைய, நாம் புசித்து அல்லது அவருக்குள் நமக்கு கொடுக்கப்படும் இலவசமான ஜீவனைப் பெற்று அதற்கு பங்காளிகளாக வேண்டும்.

R 3200 [col . 2] :

அடிப்படை சத்தியத்தை பொறுத்தவரைக்கும் கிறிஸ்தவர்கள் மத்தியில், ஸ்தாபிக்கப்பட்ட விசுவாசம் அதிகமாக குறைவுப்படுகிறது. "நான் நினைக்கிறேன்", "நான் நம்புகிறேன்" "ஒருவேளை என்னுடைய கருத்து சரியானதாகவும் இருக்கலாம், தவறானதாகவும் இருக்கலாம்" என்று பேசுவது வழக்கமானது. ஆனால் எனக்குள் அதிகமான விசுவாசம் உண்டு என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவர்கள் எதை விசுவாசிக்கிறார்களோ, எதை போதிக்கிறார்களோ, அதைப்பற்றி கவலை இல்லை. தன்னை கிறிஸ்தவன் என்று சொல்லக்கூடிய ஒவ்வொருவரோடும் நான் கை குலுக்குகிறேன். அவர் கிறிஸ்துவை வாசலாக வைத்து வழிகாட்டினாலும் சரி அல்லது வேறு வழியை காட்டினாலும் சரி, அனைவரையும் கிறிஸ்துவ அன்பில் நான் ஏற்றுக்கொண்டு, அவர்களின் அனைத்து போதனைகளும் வெற்றிபெற நான் ஜெபித்து அவர்களை ஊக்குவிப்பேன்." என்று கூறுகிறார்கள்.

பெருந்தன்மையுள்ளவர்கள் மற்றும் சாந்த குணமுடைய பொதுவான கிறிஸ்தவர்கள் மத்தியில் இக்காரியங்கள் அனைத்தும், காணப்படும். ஆனால் உண்மையில், சத்தியத்தை எதிர்ப்பதனால் தேவனையும் எதிர்ப்பவர்களோடு உறவு கொள்வதற்கு பதிலாகவும், விசுவாசத்தில் பலவீனமானதால் இடறி விழுவதைக் காட்டிலும், கிறிஸ்துவின் நிமித்தம் துன்பத்தை சகிக்கவேண்டும்.

தேவன் மேல் உண்மையான விசுவாசம் உள்ளவர்கள், அவருடைய வார்த்தைகளை கைக்கொண்டு, அடிப்படை சத்தியங்களின் கோட்பாடுகளை, நீண்ட காலத்திற்கு முன்னதாகவே தங்களுக்குள் ஸ்திரப்படுத்தியிருப்பார்கள். பொருத்தப்படவேண்டிய தங்கம், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கற்கள் முன்னதாகவே செப்பனிடப்பட்டு கொண்டிருப்பதை போல இதுவும் நடந்து வருகிறது. தேவனுக்கு உண்மையும் விசுவாசமும் உள்ளவர்களாக இருந்தால், அதாவது உண்மைகளுக்கும், தவறுகளுக்கும் உள்ள வேறுபாடுகளை அறிந்துகொள்ள முடிந்தால், அதற்கான வேலைகள் சீராக நடைபெற்றுக்கொண்டிருக்கும். இந்த ஒரு தகுதியை அடையாளம் கண்டு கொண்ட யோவான் - "ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்." (11யோவ 10) என்று கூறுகிறார். நாம் எவைகளை விசுவாசிக்கிறோம் என்றும், அவைகளை எதற்காக விசுவாசிக்கிறோம் என்றும் முதலில் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். அதற்குப்பின் அக்காரியங்களை எந்தவிதமான சாக்கு போக்குகளுக்கு இடம் கொடாமல் தைரியமாக அறிக்கையிட வேண்டும். "அந்தப்படி எக்காளமும் விளங்காத சத்தமிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம்பண்ணுவான்?"

மீண்டுமாக (2கொரி 2:6-10) "அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே (முத்துக்களை பன்றிகள் முன் போடாதீர்கள்) ஞானத்தைப் பேசுகிறேன், இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்துபோகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், வேனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்." என்று அப்போஸ்தலன் கூறுகிறார்.

இந்த உலகத்தின் வானசாஸ்திரம் மற்றும் நில அமைப்பியலைக் குறித்தும், இப்பிரபஞ்சத்தின் அதிபதி அறிந்திருக்கிறான். ஆனால் தெய்வீக திட்டத்தில் மறைந்திருப்பதும், இனி வரக்கூடிய யுகங்களில் விசுவாசமுள்ள பரிசுத்தவான்கள் பெறப்போகும் இராஜரீகமான மகிமையைப்பற்றிய ஞானத்தையும் அறியாதிருக்கிறான் . இந்த உலகம் அதற்கு விருப்பமான காரியங்களை அதனுடைய கண்ணோட்டத்தில் தொடர்ந்து செய்துக் கொண்டிருக்கிறது. ஆனால், நாம் பெற்றிருக்கும் இந்த ஒரே வாய்ப்புக்காக நம்மை அர்ப்பணிப்போம். "புத்தியீனமான தர்க்கங்களையும், வம்சவரலாறுகளையும், சண்டைகளையும், நியாயப்பிரமாணத்தைக் குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு; அவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும்" (தீத்து 3:9) இவைகளை தவிர்ப்போம். கேட்க விருப்பமுள்ள சாந்தமானவர்களுக்கு நமக்கு ஒப்புவிக்கப்பட்ட சுவிசேஷத்தை அறிவிப்போம் (ஏசா 61:1) மிகவும் அருகாமையில் இருக்கும் ஆட்டுக்குட்டியானவருடைய திருமணத்திற்கு கிறிஸ்துவின் மணவாட்டி தன்னைத்தான் ஆயத்தப்படுத்திக்கொள்ளட்டும். (வெளி 19:7)

2.அறிவை பெறக்கூடிய நான்கு வழிகள் என்ன?

A121[P 3]:

இந்தக் கேள்வி மற்றொரு கோணத்திலும் கேட்கப்படுகிறது - இந்தத் தீமையை அனுபவித்து புரிந்துகொள்வதை தவிர, வேறு எந்த வழியும் இல்லையா ? நிச்சயமாக நான்கு வழிகளின் மூலம் காரியங்களை அறிந்துகொள்ளலாம். சுயமாக அந்த காரியத்தை அறிந்துக்கொள்ளுதல், கூர்ந்து கவனித்தல், அனுபவம் மற்றும் தக்க ஆதாரத்தை வைத்து முழுமையாக உண்மை என்று ஏற்றுக்கொள்ளக்கூடியவைகள். சுயமாக அறிந்துகொள்ளக்கூடிய அறிவு , நேரடியான காரணங்களை செயலாற்றாமல் அல்லது நிரூபிப்பதற்கு தேவைப்படுவதில்லை. இந்த அறிவு சர்வ வல்லமையுள்ள யேகோவா தேவனுக்கு மட்டுமே உரியது. அவரே ஞானத்திற்கும், சத்தியத்திற்கும் நித்திய ஊற்றும் காரணரானவர். மேலும் அவருடைய சிருஷ்டிப்புகள் அனைத்திற்கும் மேலானவராக இருக்கிறார் . ஆகவே இப்படிப்பட்ட அறிவோடு நன்மை மற்றும் தீமையை அறிந்துகொள்வதற்கு மனிதனுடைய ஞானம் போதாது. கண்டு உணர்ந்து கொள்வதினால் மனிதன் அறிவைப் பெறலாம். ஆனால் இம்முறையில் அறிவைப் பெறுவதற்கு சில தீமைகளும் அதன் விளைவுகளும் கண்ணுக்கு முன் காட்சி அளிக்க வேண்டும். ஆகையால், ஏதோ சில இடங்களில் சில உயிரினங்கள் மத்தியிலும், மனிதர்களுக்கு மத்தியிலும், உலகத்தின் மற்ற இடங்களிலும் இந்தத் தீமை அனுமதிக்கப்படவேண்டும்.

3.பாவம் செய்வதற்கு முன் தீமையின் அறிவை ஆதாம் எந்த வழிகளில் பெற்றிருந்தார்?

A122[P2]:

தீமையைப் பற்றிய அறிவை ஆதாம் முன்னதாகவே பெற்றிருந்தார். ஆனால் அதை பரிசோதித்து பார்க்காதபடிக்கு அவர் பெற்றிருந்த ஞானம் அவரை தடுக்கவில்லை. பிதாவாகிய தேவன் தங்களை சிருஷ்டித்தவர் என்பதையும், தேவனுக்கு மட்டுமே அவர்களை வழிநடத்தவும், கட்டுப்படுத்தவும், அதிகாரம் உண்டென்பதையும் ஆதாமும் ஏவாளும் அறிந்திருந்தார்கள். மேலும், "நீங்கள் புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள்" என்று தேவன் நன்மை தீமையின் விருட்சத்தை குறித்து எச்சரித்திருந்தார். ஆகவே இந்த அனுபவத்தை அவர்கள் பெறவில்லை. தேவன் சொல்லிய வார்த்தைகளை மட்டுமே அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய அன்பான

சிருஷ்டிகரின் அன்பையும் கவனமான பராமரிப்பை பற்றியும், அவர்கள் மீறினால் வரும் அபாயத்தையும் குறித்து அவர்கள் உணராதிருந்தார்கள். எனவே தேவன் ஞானமாக அனுமதித்த சோதனைக்கு இவர்கள் உட்பட்டார்கள். இறுதியில் அவருடைய ஞானம் கண்டறியப்பட்டது.

4. உண்மையான ஞானத்தின் ஊற்று எங்குள்ளது?

யோவ 17:17 - உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்.
நீதி 2:6 - கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்.
யோவா 6:45 - எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்.

E50[P 2-4]:

சர்வத்திற்கும் அதிபதியாகிய நம்முடைய யேகோவா தேவன், கற்பனைகளை கொடுப்பவர் மட்டும் அல்ல, அவர் கொடுத்த கற்பனைகளை கற்றுக்கொடுப்பதிலும் சிறந்தவர். மனுக்குலத்திற்காக ஏற்படுத்தின மிகப் பெரிய திட்டத்தில், அவருடைய மிகச் சிறந்த குணங்களாகிய நீதி, அன்பு , வல்லமை, மற்றும் ஞானத்திற்கு இசைவாக பரிபூரண சமாதானத்தோடும் செயலாற்றுவதை, வரும் காலத்தில் அவருடைய ஞானமுள்ள புத்திரர்கள் காண்பார்கள். நம்முடைய ஆண்டவராம் இயேசு தம்முடைய பரலோகப் பிதாவால் மனிதர்களுக்கு அனைத்து போதகங்களுக்கு மேலாக மிகச் சிறந்த ஓர் ஆசிரியராகவும், கருவியாகவும் நியமிக்கப்பட்டவராக இருக்கிறார். நம்முடைய அருமை இரட்சகர் இவைகளை சரியான முறையில் போதித்து கற்பித்தார். " இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது.அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்.சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதியில்லை.""நான் என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன்"" என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது" "நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்" "நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது" "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்"(யோவான் 7:16-18 8:38, 14:24, 17: 6, 14,17) என்று இயேசு பகிரங்கமாகவும், வெளிப்படையாகவும் அறிக்கையிட்டார்.

அதே போல் நம்முடைய ஆண்டவர் விசேஷித்த போதகர்களாகிய அப்போஸ்தலர்களை சபையில் நியமித்தார். "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் " (அப் 20 :28) ஆனால் "இந்த உலகத்தின் ஞானமாக" இருக்கக்கூடிய தங்களுடைய சொந்த போதகத்தைப் போதிக்க இந்தப் போதகர்கள் அனுமதிக்கப்படவில்லை. தேவனுடைய ஜனங்கள் யேகோவா தேவனால் போதிக்கப்பட வேண்டும். மேலும் தேவனுடைய வார்த்தைகளையும், திட்டத்தையும் அவருடைய குணலட்சனங்களையும் மிகச் சிறந்த முறையிலும் சத்தியத்தின் சரியான அளவுக்கோல்களோடு போதிக்காத எவரும் போதகர்களாக அங்கீகரிக்கப்படுவதில்லை. இதை செய்யும் பட்சத்தில் "கிறிஸ்துவின் உபதேசத்திற்கும்" "அப்போஸ்தலரின் உபதேசத்திற்கும்" அதிகமான கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவை அனைத்துமே தேவனுடைய மகிமையாகவும், நித்திய பிரமாணங்களாகவும் இருக்கிறது.

5. அறிவு "மனிதனுக்கு தேவன் கொடுத்த முதல் பரிசாக" இருப்பது எப்படி?

R3279[col.1 P1-8]:

தன்னுடைய சிருஷ்டிகளின் விருப்பத்தை அறிந்த தேவன், முதல் படியாக அவர்களுக்கு ஞானத்தையும், அறிவையும் கொடுக்கிறார். இதன் காரணமாக, சுவிசேஷ யுகத்தின் "போதித்தல் அல்லது சத்தியத்தை அறிவித்தல்" முதல் கற்பனையாக கொடுக்கப்பட்டது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் மேலுள்ள விசுவாசம், மன்னிப்பை பெற்றுத் தரும் என்ற உபதேசம் உலகத்தாருக்கு ஞானமாக தோன்றவில்லை. தேவன் வேறு ஏதாகிலும் கட்டளைகளைக் கொடுத்திருந்தால் நலமாக இருந்திருக்கும் என்று இவர்கள் எண்ணலாம். ஆனால் " எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று" (1கொரி 1:21) என்று பவுல் கூறுகிறார்.

ஆகவே மீட்கப்பட்ட வகுப்பாருக்கு தேவனுடைய முதல் பரிசே - அறிவு

1. தேவனுடைய மிக மேன்மையும் பூரணமான நீதியைக் குறித்த அறிவையும், நாம் பெறவேண்டும். இந்த அறிவு மோசேயினால் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் மூலம் ஆயத்தப்படுத்தப்பட்டது. அந்த பிரமாணங்கள் கிறிஸ்துவினிடத்திற்கு வழிநடத்தும் நல்ல உபாத்தியாக இருந்தது. அதற்குப்பின் கிறிஸ்து அந்தச் சட்டத்திற்கு கீழ்ப்படிந்து, அதனுடைய மகத்துவத்தையும், கனத்தையும் தெளிவாக எடுத்துரைத்த நியாயப்பிரமாணத்தின் ஆசிரியராக இருந்த, பரலோக தேவனை மகிமைப் படுத்தும்படியாக அவருடைய குணங்களை வெளிப்படுத்தி கனப்படுத்தினார்.

2. தன்னுடைய சொந்த பலவீனத்தினால், அடைந்த வீழ்ச்சியும், பாவ நிலையும், கைவிடப்பட்ட சூழ்நிலையைப் பற்றிய அறிவையும் பெறுவது, மனிதனுக்கு அவசியமாக இருக்கிறது. அப்போது தான் தேவன் அவனுக்காக ஏற்படுத்தின திட்டத்தில் ஓர் இரட்சகர் அவனுக்காக கொடுக்கப்பட்டார் என்பதை அவனால் புரிந்துகொள்ளமுடியும்.

3. ஆதாமின் முழு சந்ததியும் தெய்வீக இரக்கத்திலிருந்தும், சரியான மனநிலையிலிருந்தும், உடல் ரீதியான பூரண நிலையிலிருந்தும் எப்படியாக விழுந்துப்போனார்கள் என்ற அறிவும், தேவைப்படுகிறது. இந்த அறிவு இல்லாமல், இந்த முழு உலகத்திற்குப் பதிலாக கிறிஸ்துவின் ஜீவனை ஈடுபலியாக தேவன் ஏற்றுக்கொள்ளும் அந்த விசேஷித்த காரியத்தை புரிந்துக்கொள்ள முடியாது.

4. "பாவத்தின் சம்பளம் மரணம்" -பற்றிய அறிவு இல்லாமல் - ஆதாம் மற்றும் அவருடைய சந்ததிக்கும், நம்முடைய இரட்சகரினால் கொடுத்த ஈடுபலியின் மகத்துவத்தை என்றுமே புரிந்துகொள்ளமுடியாது.

5. மேல் சொல்லப்பட்ட காரியங்களைப் புரிந்துகொள்ள நமக்கு அறிவு மிக அவசியம். இந்த அறிவு இல்லாமல் சரியான விசுவாசத்தில் நம்மால் வளர முடியாது . மேலும் தேவன் நமக்காக வைத்திருக்கும் நீதிமானாக்கப்பட்ட நிலை மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நிலையின் மூலம் பெறக்கூடிய விடுதலையை இப்படிப்பட்ட அறிவைப் பெறாமல் நம்மால் சரியான வழியில் நடக்க முடியாது.

ஆகவே இந்த அறிவு அல்லது தேவன் கொடுத்த அவருடைய திட்டங்களைப் பற்றிய இந்த ஞானத்திற்காகவும், நம்முடைய உள்ளார்ந்த மனதோடும் அவருக்கு நன்றி செலுத்துவோம். இங்கு சொல்லப்பட்ட அனைத்து ஞானமும், அறிவும், கிறிஸ்துவின் மூலமே நமக்கு கிடைத்தது. ஏனெனில், இரட்சிப்பின் திட்டத்தில் அவரும், அவருடைய சிலுவை மரணமும் இல்லாவிடில் இந்த அறிவைப் பெறுவதற்கும், போதிப்பதற்கும் பயனற்றதாக இருந்திருக்கும். ஏனெனில் இயேசுவைத் தவிர இரட்சிப்பளிப்பதற்கு வேறு எந்த வாய்ப்பும் இல்லை.

6. விசுவாசத்திற்கும், அறிவுக்கும் உள்ள தொடர்பு என்ன?

A13[P1]:

தேவனுடைய நோக்கங்களின் வெளிப்பாடுகளைப் பற்றி படிப்பதே, மிக மேன்மையான எந்தக் காரியத்திலும் மேலான கிரியையாக இருக்கிறது. "இதை காண தூதர்களும் ஆசையாக இருக்கிறார்கள். " தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள்

இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள் "(1பேது 1:12) தேவனுடைய ஞானமானது, வருங்காலத்திற்கான தீர்க்கதரிசனங்களையும், இக்காலத்தைக் குறித்தும், கடந்த காலத்தைக் குறித்தும் அறிவுறுத்துகிறது. ஆனால் தேவனுடைய பிள்ளைகளில் சிலர் தங்களுடைய அறியாமையில், தேவனுடைய வார்த்தைகளை படிப்பதை நிராகரித்துவிட்டு - "ஒரு மனுஷன் இரட்சிக்கப்படுவதற்கு மத்தேயு 5ம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட வசனங்களே போதுமானது" என்ற முடிவுக்கு வருகிறார்கள். மேலே சொல்லப்பட்ட காரியங்களை சுட்டிக்காட்டி தேவன் கடுமையாக கண்டிக்கிறார். வருங்காலத்தை குறித்து அறிந்துகொள்வதற்கு ஆர்வமுள்ளவர்களை, திருப்திபடுத்துவதற்காக மட்டுமே தேவன் தீர்க்கதரிசனங்களைக் கொடுக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இதன் உண்மையான பொருள் என்னவெனில் உடன்படிக்கை செய்த தேவனுடைய புத்திரர், தகப்பனுடைய திட்டங்களைப் புரிந்து கொண்டு, அந்தத் திட்டத்திற்கு இசைவாக தன்னால் முடிந்த வரைக்கும் செயலாற்றவும், தேவனுடைய கண்ணோட்டத்திலிருந்து, நடந்துக்கொண்டிருப்பவைகளையும், நடக்கப்போகிறவைகளையும் புரிந்துக்கொள்ளுவதே அவருடைய நோக்கமாக இருக்கிறது. இப்படியாக தேவனுடைய வேலைகளில் ஆரவம் காட்டுபவர்கள், நிச்சயமாக நல்ல ஆவியோடும், புரிந்துகொள்ளுதலோடும், ஊழியம் செய்யும் ஒரு ஊழியக்காரனாக மட்டும் அல்லாமல், தேவனுடைய புத்திரராகவும், சுதந்தரராகவும் செயல்படுவார்கள். ஆகவே தேவனுடைய வார்த்தைகளைக் கவனத்தோடு படித்து அறிந்துகொண்டால் மட்டுமே நம்முடைய விசுவாசம் உறுதிப்பட்டு, பரிசுத்தத்தில் வளர்ச்சி அடையமுடியும்.

A20[P2] through A 21[P1]:

மனிதர்களை காண்பதை, விட்டுவிட்டு நல்ல நோக்கத்தோடு வசனங்களை தேடுவதில் நேரத்தை செலவழித்து பயனடைவதற்கு தேவன் நம்மை அழைக்கிறார். (ஏசா 1:18) இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டவர்கள் விரிவாக கொடுக்கப்பட்டுள்ள பரலோக ஆசீர்வாதங்களைக் காண்பார்கள். விசுவாசமில்லாமலும், நீதிமானாக்கப்பட்ட நிலையைப் பெறாமலும், தெளிவான சத்தியத்தைப் புரிந்து கொள்வது கூடாத காரியம். ஏனெனில் "நீதிமானுக்காக வெளிச்சமும்,.... விதைக்கப்பட்டிருக்கிறது...." (சங் 97:11) என்று சங்கீதக்காரன் கூறுகிறார். ஆகவே தேவனுடைய பிள்ளைக்கு கொடுக்கப்படும் விளக்கின் வெளிச்சம் அவனுடைய பாதையிலிருக்கும் இருளை முழுமையாக அகற்றும்."உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" (சங் 119:105). ஆனால் இந்த வெளிச்சம் "நீதிமான்களுடைய பாதைக்கு" மட்டுமே வெளிச்சமாக இருக்கும். பரிப்பூரணமான நாளைப் போய் இந்த பாதை சேரும் வரைக்கும், அதிகதிகமான வெளிச்சத்தை பிரகாசிக்கும். (நீதி 4:18) உண்மையில் ஒருவரும் நீதிமான் இல்லை, ஒருவராகிலும் இல்லை." (ரோம 3:10) ஆனால் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட வகுப்பார்" என்று குறிப்பிடப்படுபவர்கள் மட்டுமே நீதிமான்கள் என்று எண்ணப்படுகிறார்கள். இவர்கள் மட்டுமே இந்தப் பாதையில் நடக்க சிறப்புரிமை பெற்றவர்கள். இந்தப் பாதையில் நாளுக்கு நாள் சத்திய வெளிச்சம் அதிகரித்து, தேவனுடைய திட்டங்களின் வெளிப்பாடுகளை மட்டும் அல்ல, இனி வரும் காரியங்களையும் அறிந்து கொள்ள வழிவகுக்கிறது. உண்மையில், ஒவ்வொரு விசுவாசியின் பாதையும் வெளிச்சமாகவே இருக்கிறது. இருப்பினும் இந்த வாக்கியத்தின் விசேஷித்த செயல்பாடுகள் என்னவெனில் - இந்த வெளிச்சத்தில் நடப்பவர்களை " நீதிமானாக்கப்பட்ட வகுப்பார்" என்று அழைக்கப்படுகிறார்கள். கடந்த காலத்திலிருந்த முற்பிதாக்கள் ,தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மற்றும் கடந்த காலத்து பரிசுத்தவான்கள் அந்தப்பாதையில் நடந்தார்கள். மேலும் இக்காலத்தில் அதிகரிக்கும் வெளிச்சத்தில் நடந்து கொண்டிருக்கிறோம். இந்நாளை காட்டிலும் வருங்காலத்தில் (பரிப்பூரணமான நாள் வரைக்கும்) இந்த வெளிச்சம் அதிகரித்து கொண்டிருக்கும். இது ஒரே தொடர் பாதையாக இருக்கிறது. மேலும், குறித்த காலங்களில், வெளிச்சம் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டிருப்பது - தேவனுடைய தெய்வீகத் திட்டமாக இருக்கிறது.

ஆகவே இவ்வாக்குத்தத்தம் நிறைவேறுதலுக்காக காத்திருக்கும் -"நீதிமான்களே மகிழ்ந்து களிக்கூறுங்கள்". ஆவிக்குரிய வாழ்க்கையைக் குறித்து கவலைப்படாதவர்களும், குறைந்தளவு விசுவாசமுள்ளவர்களும், இனிவரக்கூடிய வெளிச்சத்தை காணாதவர்களாக இருப்பதினால், தொடர்ந்து அவர்கள் இந்த பாதையில் நடக்காமல், இருளில் அமருவதற்கு தேவன் அவர்களை அனுமதிக்கிறார்.

R1719[last P]:

பார்த்தபடி, நாம் கிறிஸ்துவுக்குள் விசுவாசம் வைத்திருக்கிறோம், தேவனுடைய வார்த்தைகளின் ஆழமான விசுவாசம் கொண்டிருக்கிறோம். இந்த விசுவாசத்தை ஆராய்ந்து, மெய்ப்பித்து விட்டோம். இவைகளை நம்முடைய இருதயத்திலும், சிந்தையிலும் ஆழமாக பதித்துவிட்டோம். ஆகவே கிறிஸ்துவுக்குள் இருக்கும் இந்த விசுவாசம், நம்முடைய வாழ்க்கையை ஊக்குவிக்கும் வல்லமையாக ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. இப்படிப்பட்ட விசுவாசம் உள்ளவர்கள் உலகத்தின் புதிதான காரியங்களை உணர்ச்சிவசமாக தேட மாட்டார்கள். மேலும் மனிதர்களின் வீணான தத்துவங்கள், தேவனுடைய வார்த்தைகளை எவ்வளவு திறமையாக மேற்கொள்கிறது என்ற ஆராய்ச்சியில் எப்போதும் தங்களுடைய நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்டவர்கள் இந்த உலகத்தையும், சாத்தானையும், மாம்சத்தையும் முழுமையாக ஜெயிக்க தங்களுக்குள் போதுமான அளவு விசுவாசம் இல்லை என்பதை பகிரங்கமாகவே வெளிப்படுத்துகிறார்கள்.

R2411[col.1 P5]:

இதற்குத் தேவையான முக்கிய பாடம் - விசுவாசம் - விசுவாசத்தின் மூலம் நாம் தேவனுடையவர்களாக்கப்பட்டு, வளர்ச்சி அடைவதற்காக, பள்ளியில் நுழைகிறோம். மேலும் அறிவின் வளர்ச்சியினால் மட்டுமே நம்முடைய விசுவாசம், வளரமுடியும் (உலக அறிவை பற்றியோ, கல்வியை பற்றியோ இங்கு குறிப்பிடவில்லை). அதாவது நாம் தேவனை அறியும் அறிவையும், அவருடைய திட்டங்களையும், அவருடைய குணங்களையும், அவருடைய வழிமுறைகளையும் அறியக்கூடிய அறிவில் நாம் வளரவேண்டும். ஆகவே நம்முடைய போதகரின் வார்த்தைகளையும், பொதுவான நடத்தைப் பற்றியும், அவருடைய பராமரிப்பைப் பற்றியும், தனிப்பட்ட முறையில் அவர் கொடுத்த கட்டளைகளையும் கவனத்தோடு படிக்கவேண்டும்- இவை அனைத்திற்கும் அவருடைய வார்த்தைகளின் மூலமே நாம் விளக்கம் காணவேண்டும். முதலில் நாம் எதை எல்லாம் விசுவாசித்தோமோ, (தேவனுடைய நன்மைகள் மற்றும் ஞானத்தைக் குறித்து சொல்லப்படுகிறது) அவைகளை நாம் அறிவாக பெற்றுக்கொள்கிறோம். மேலும், அகலத்திலும், நீளத்திலும், ஆழத்திலும் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு வாழவும், நம்முடைய இரட்சகரின் அன்பை அதிகமாக புரிந்துகொள்ளவும் இந்த அறிவு நம்மை வழிநடத்தும்.

7. "தேவனுடைய ஆழமான காரியங்களை" அறிந்து கொள்வதற்கு தகுதி பெற்றவர்கள் யார்?

(சங்கீ 25 :9,12,14) "சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்"

"கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் எவனோ அவனுக்குத் தாம் தெரிந்துகொள்ளும் வழியைப் போதிப்பார்" "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்"

(மத் 11:25) "அந்தச் சமயத்திலே இயேசு சொன்னது: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்"

R 2624[col.2 P3]:

இவைகள் அனைத்தும் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைக்கப்பட்டு, குழந்தைகளுக்கும் பாலகர்களுக்கும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள் நமக்கு எவ்வளவு ஆறுதல் அளிக்கிறது. இந்த உலகத்தில் மனத்தாழ்மையுள்ளவர்கள், தேவனால் கற்பிக்கப்படுவதற்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். ஆனால், உலக அறிவில் தேறினவர்கள், ஆண்டவருக்கு போதிக்க துணிகிறார்கள். இப்படிப்பட்ட மிகுந்த ஆசீர்வாதங்களை பெற்ற நாம் இனி வருங்காலங்களிலும் குழந்தைகளைப் போல மனநிலையை தக்கவைத்து கொள்வதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எளிமையான சிந்தையில் நிலைநின்று ஆண்டவரினால் இன்னும் அதிகமான சத்தியங்களை தொடர்ந்து கற்றுக்கொள்ள தகுதி பெற்று, தேவன் இலவசமாக கொடுக்கக்கூடியவைகளை பயன்படுத்திக் கொண்டவர்களாக மகிழ்ந்து களிகூறுவோம். இப்படியாக நம்முடைய வெளிச்சம் சுற்றிலும் பிரகாசிக்கக்கடவது. பெரும்பாலான படித்த மேதைகளுக்குத்

தேவனுடைய தெய்வீக திட்டம் மறைக்கப்பட்டது. அவர்களின் ஞானத்தில் தொடர்ந்து ஓட பிதாவும் அனுமதித்திருக்கிறார். "இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும் " (1கொரி 3:19) கிறிஸ்துவின் முதல் வருகையில் பிதாவாகிய தேவன் நியாயப்பிரமாணத்தின் சட்ட வல்லுநர்களையும், பரிசேயர்களையும் அவரிடம் அனுப்பாமல், உண்மையான கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களிடம் அவரை அனுப்பினார். ஆனால் சிலர் மட்டுமே அப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள். இந்த யுகத்திலும் இப்படிப்பட்டவர்களே மேலான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு வருகின்றார்கள்.

R3103[col.1 P5 through col.2 P2]:

தேவனோடு இசைந்து, மிக ஆர்வத்தோடு தங்களை வளர்ச்சிக்குள் உட்படுத்துபவர்களுக்கு மட்டுமே தேவனுடைய நோக்கங்களைப் பற்றிய அறிவு கொடுக்கப்படுகிறது. ஏனெனில் வளர்ச்சிக்குரிய எந்த செயலிலும் ஈடுபடாமல், நூதனபிரியத்தோடிருப்பவர்களுக்கு தேவன் அவருடைய திட்டங்களை வெளிப்படுத்துவதில்லை. இருளுக்குள் இருப்பவைகளைப் புரிந்து கொள்வதற்குமுன் வெளியே காணப்படும் சத்தியங்களை முதலில் விசுவாசிக்க வேண்டும். கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சிப்பை விசுவாசிக்கவேண்டும். அதற்குப்பின் தேவனோடு இசைந்து செயல்படுவதற்கும், தேவன் வைத்திருக்கும் அவருடைய தெய்வீக திட்டத்தை அறிந்துகொள்ள உற்சாகத்தோடும் முயற்சிக்கவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், நம்முடைய இரட்சகரினால் வாக்களித்த ஜீவனுக்காக, உள்ளம் நிறைந்த நன்றிகளை ஏறெடுக்கவேண்டும். "ஆண்டவரே நான் என்ன செய்ய நீர் சித்தமாக இருக்கிறீர்?" என்ற உண்மையான கேள்வி எப்பொழுதும் உங்கள் இருதயத்திலிருந்து எழும்பிகொண்டே இருக்கவேண்டும். இப்படிப்பட்டவர்கள் மட்டுமே தேவனுடைய அறிவை முழுமையாக அறிந்துகொள்வதற்குத் தகுதிப்படுகிறார்கள். இவர்கள் மட்டுமே தேவனுடைய திட்டங்களையும், இருளுக்குள் இருக்கும் சகல ஆழமான தேவனுடைய சிந்தனைகளையும் புரிந்துகொள்ள முடியும். இவர்கள் தெய்வீக நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவர்கள், அதில் படிப்பிக்கப்பட்டு சத்தியத்திற்கு ஊழியம் செய்ய அழைக்கப்பட்டவர்கள். இப்படிப்பட்ட நீதிமான்களுக்கு வெளிச்சம் (சத்தியம்) விதைக்கப்படுகிறது. "இதோ, உம்முடைய சித்தத்தை செய்ய இதோ வருகிறேன்" (எபி 10:7)என்று சொல்லும் நேரத்தில் நம்முடைய ஆண்டவரும் இதே மனநிலையை பெற்றிருந்தார். அவர் சாந்தமும் மனத்தாழ்மையுள்ளவர், மேலும் தேவனுடைய சித்தம் செய்ய இருதயத்தில் முழுமையான கீழ்ப்படிதலை கொண்டிருந்தார். இதே போல மனத்தாழ்மையுள்ளவர்களுக்கும், நல்ல விசேஷங்களை பிரசங்கிக்க அவர் அனுப்பப்பட்டார். (ஏசா 61:1)"கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும் "

"சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" (சங் 25:9) எந்த ஒரு மனுஷனும் இப்படிப்பட்ட தகுதி பெற்றவராக நிருபிக்கப்பட்டால் - அதாவது சத்தியத்தில் பழக்கப்பட்டவர்களாக இருந்தால் அவர்கள் பெற்ற சிறப்புரிமைகளுக்காக - மகிழ்ந்து களிக்கூறக்கடவர்கள் - அவர்கள் தொடர்ந்து , ஜீவனை பெற்றுக்கொள்ள தங்களை எப்போதும் தகுதியுள்ளவர்கள் என்று தங்களுடைய கிரியையினால் வெளிப்படுத்தக்கடவர்கள் - சங் 19:13

இந்த ஒரு தகுதி துவக்கத்தில் இருந்தால் மட்டும் போதாது, வெளிச்சத்தின் பாதையில் தொடர்ந்து நடக்க, இந்தத் தகுதி மிகவும் அவசியமானதாக இருக்கிறது. இப்படியாக இந்தப் பாதையில் நாம் பயணிக்கும்போது, சிலநேரங்களில் வெவ்வேறு சோதனைகளை நாம் சந்திக்கும்போது, அதில் நாம் வெற்றி அடையாமல் தோல்வி அடைந்தால், தொடர்ந்து அந்தப் பாதையில் நடக்க நாம் தகுதியை இழந்துவிடுவோம். நமக்குள்ளிருக்கும் வெளிச்சம் மங்கிவிட்டது என்று, மிக கவனத்தோடு விழித்திருந்து அதை கண்டுபிடித்தால் மட்டுமே நமக்குள் இருக்கும் அவிசுவாசம் நீங்கிவிடும். வெளிச்சத்தையே வெளியேற்றிவிடும் அளவுக்கு, இந்த இருள் எவ்வளவு கடுமையாக இருக்கிறது ! (மத் 6:23) நம்முடைய இருதயத்தை ஊக்குவித்த மகிமையான நம்பிக்கை, நம்மை விட்டு நழுவினால், சத்தியத்தினால் நமக்குள் கட்டப்பட்ட விசுவாசம், ஒரு பழமையான பாடல் போலவும், கதையை போலவும் இருக்கும். நாம் தப்பித்துக் கொள்ள செய்யும் முயற்சிகள், அனைத்தும், சத்தியத்திற்காக நாம் செய்யும்

காரியங்கள் என்று தோன்றும் அளவுக்கு, சாத்தான் இக்காலத்து சத்தியங்களை தள்ளிவிட்டு, கடந்த காலத்தின் மிச்சமுள்ள சத்தியங்களை நமக்குமுன் அருமையாக காட்டி, நாம் இருளுக்குள் செல்வதை உணராதபடிக்கு அவன் நம்மை வழிநடத்துவான். தேவ வழிநடத்தல் இல்லாததினால், நாம் இதை உணராதிருப்போம். ஒருவன் அந்த இருளுக்கு நழுவி பின்னிட்டு சாயும்போது அவனுக்குள் நுழைந்த இருள் அதிகரித்து கொண்டே இருக்கும்.
R 2208 through R2209 [col.1 P4] "தெய்வீக இரகசியங்களின் வெளிப்பாடு"[first half of article]-Reproduced at the end of this section,p.108:

8. இரட்சிப்படைய அறிவு தேவையா?

ரோ 10:17- ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.

A102[P1]through A106:

பல்லாயிரக்கணக்கான அறியாப்பிள்ளைகளும், தேவபக்தியற்றவர்களும், நிச்சயமாக தொலைந்து விடுவார்கள் என்பதை அநேக கிறிஸ்தவர்கள் நம்ப விரும்புவதில்லை. (அவர்கள் போதிக்கப்பட்டபடி நித்திய உபத்திரவம் அல்லது நம்பிக்கையற்ற நித்திய ஆக்கினை) தேவன் அறியாமையில் உள்ளவர்களை தண்டிப்பதில்லை என்பதை தேவ வாக்கியங்களின்படி இப்போது ஒத்துக்கொள்கிறார்கள். அவர்கள் இருதயத்தில் கொண்ட சுயாதீனத்தையும், தேவனுடைய நன்மைகளை புரிந்துக்கொள்ளுதலையும் நாம் பாராட்டுகிறோம். ஆனால் அவர்கள் தேவனுடைய வார்த்தைகளை முழுமையாக புரிந்துக்கொள்ளவேண்டும். அறியாமையின் வழியாக அல்ல, அதை காட்டிலும் மேலான வழியில் தேவன் அனைவருக்கும் ஆசீர்வாதங்களைக் கொடுக்க காத்திருக்கிறார்.

[please see studies in the scriptres,vol.1,pp.102-106,for the remainder of this reference.]

அப்போ 10:22 -"அதற்கு அவர்கள்: நீதிமானும், தேவனுக்குப் பயப்படுகிறவரும், யூதஜனங்களெல்லாராலும் நல்லவரென்று சாட்சி பெற்றவருமாகிய கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி உம்மைத் தம்முடைய வீட்டுக்கு அழைப்பித்து, உம்மால் சொல்லப்படும் வார்த்தைகளைக் கேட்கும்படி பரிசுத்த தூதனாலே தேவயத்தனமாய்க் கட்டளைபெற்றார் என்றார்கள்"

R2989[col.2 P3,4]through R2990[col.1 P1]:

பேதுரு வீட்டிற்குள் நுழைந்தபோது, தேவனுக்கு பயந்த, உண்மையான புறஜாதிகளின் கூட்டத்தைக் கண்டார். அதற்குப்பின் - "ஆகையால் நீங்கள் என்னை அழைப்பித்தபோது நான் எதிர்பேசாமல் வந்தேன். இப்போதும் என்ன காரியத்துக்காக என்னை அழைப்பித்தீர்கள் " என்று கேள்வி எழுப்பினார். (வசனம் 29) கொர்நேலியு தன்னுடைய கடந்த கால அனுபவங்களையும், தேவனுடைய ஐக்கியத்திற்காக அவர் கொண்டிருந்த விருப்பத்தையும், அவர் கண்ட தரிசனத்தையும், தேவனுக்கு தான் பிரியமாக நடக்க விரும்புவதையும், அவர் கண்ட தரிசனத்திற்கு ஏற்றவாறு அப்போஸ்தலனாகிய பேதுருவின் வரவையும் அவர் அறிவித்தார். மேலும் "நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவான் என்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதாகவும் எங்களுக்கு அறிவித்தான்" (அப் 11:14) என்று அவருக்கு வாக்களிக்கப்பட்டதைக் கேட்பதற்கு மிகவும் ஆவலோடு எதிர்பார்த்திருந்ததையும் தெரிவித்தார். அவர் தர்மம் செய்ததினால் இரட்சிக்கப்படவில்லை, அவர் செய்த ஊக்கமான ஜெபங்களினாலும் அவர் இரட்சிக்க படவில்லை. ஆனால் "தேவனுடைய வார்த்தைகள்" பேதுருவின் செய்தியின் மூலம் காரியங்களை விவரித்தபோது, கொர்நேலியுவும் அந்த வீட்டில் உள்ள அனைவரும் - இயேசு கிறிஸ்துவினால் கிடைக்கபெற்ற மிகப்பெரிய இரட்சிப்பை உணர்ந்து, அதை கருத்தோடு விசுவாசித்து அதை கவனமாக பற்றிக்கொண்டார்கள். அதனால் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். தேவனுடைய விரோதிகளும் கண்டனத்திற்கு உட்பட்டவர்களும், பாவிகளாக இருந்தவர்களும், உடனே இரட்சிப்பை சுதந்தரித்துக் கொள்ள தகுதிப்பெற்றார்கள். இங்கு அப்போஸ்தலனாகிய பேதுருவின் பிரசங்கத்தை கூர்ந்து கவனித்தால், அது ஜீவனை கொடுக்கக்கூடிய செய்தி, என்பதை நாம் தெளிவாக புரிந்துக்கொள்ளலாம். ஏனெனில் அவைகளினால் கொர்நேலியுவும், அவருடைய சுற்றத்தாரும் தங்களை இரட்சிக்கக்கூடிய விசுவாசத்தைப் பெற்றார்கள். நாம் கவனித்து பார்க்கும்போது பேதுரு முன்னதாகவே கொடுத்த செய்தியை தான் மறுபடியும் கொர்நேலியு வீட்டிலும் கொடுத்தார். "இயேசு சிலுவை மரணத்தில் அனைவரின் பாவங்களுக்காக மரித்தார். அவருக்குள் இருந்த நல்ல குணங்களையும், கீழ்ப்படிதலையும் இறுதி வரைக்கும்

காத்துக்கொண்டார்." மேலும் பிதா தன்னுடைய சர்வ வல்லமையினால் இயேசுவை உயிர்த்தெழுப்பினதை ஆதாரமாகக்கொண்டு, மரித்தவர்கள் அவருக்குள் உயிர்த்தெழுவார்கள் என்ற நம்பிக்கையையும் கொடுக்கக்கூடிய செய்தியாக அது இருந்தது. தேவனுடைய நீதியின்படி பாவிகளுக்காக கிறிஸ்து தம்மையே ஈடுபலியாக கொடுத்ததை தேவன் ஏற்றுக்கொண்டபடியினால், பயபக்தியோடு இயேசுவை விசுவாசித்து, தங்களால் முடிந்த வரைக்கும் நீதிக்கு கீழ்ப்படிய முயற்சிக்கும் பாவிகளை நீதிமான்களாக ஏற்றுக்கொள்ள பிதா மகிழ்ச்சியாக இருக்கிறார் என்பதை இந்த செய்தி உணர்த்தியது. பேதுருவின் பழைய பிரசங்கங்கள் அநேகருக்கு சலிப்புண்டாக்கலாம், ஆனால், நேர்மையான நோக்கத்தை பெற்றிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும், பாவத்திற்கான மன்னிப்பைக் கொடுக்கும் தேவனுடைய செய்தியும், குமாரனின் மரணத்தின் மூலமாக கிடைக்கும் நீதிமானாக்கப்பட்ட நிலையைப் பெறுவதற்கான செய்தி மிகுந்த சந்தோஷத்தை தரக்கூடியதாக இருக்கிறது. இந்த செய்திகளையே, தேவன் தம்முடைய உண்மையான தூதுவர்கள் மூலம் இந்நாள் வரைக்கும் அனுப்பிக்கொண்டிருக்கிறார். இதைத் தவிர வேறு எந்த சுவிசேஷமும் கொடுக்கப்படவில்லை. இந்த சுவிசேஷத்தை தவிர வேறு எந்தச் சுவிசேஷத்தை பிரசங்கித்தாலும், தேவனுடைய ஸ்தானாபதிகளாகவோ, அவருடைய ஆவியைப் பெற்ற அவருடைய வாயின் வார்த்தையாகவோ, அவருடைய ஊழியக்காரர்களாகவோ இருப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

"எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று." (1கொரி 1:21) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். அதாவது அவருடைய இரட்சிப்பின் திட்டத்தைப் பொறுத்த வரைக்கும், இவ்வகையான வழிமுறையில் சத்தியத்தை ஏற்றுக்கொண்டு நீதிமானாக்கப்படுவதில் தேவன் மகிழ்ச்சி அடைகிறார். இன்று இந்த வழியில் செய்திகள் சென்றாலும் சரி, சொல்லப்படும் செய்தியும், கேட்கப்படும் செய்தியும் உண்மையாக இருக்கவேண்டும். ஒரே சீராக இந்தச் செய்திகள் மனிதர்கள் வழியாக மட்டுமே அனுப்பப்படுகிறது. தூதர்கள் மூலமாகவோ, மனிதர்கள் துணையின்றி பரிசுத்த ஆவியின் வல்லமையினாலோ எடுத்து செல்லப்படுவதில்லை. தேவனுடைய இவ்வழிமுறைகளில் உள்ள பாடங்களை, நாம் எப்போதும் கவனத்தில் கொண்டு, அதற்கு இசைவாக நம்முடைய அன்றாட வாழ்க்கையில், இந்தப் பாடங்களை செயல்படுத்த முயற்சிக்க வேண்டும். அனைவரையும் தேவன் இந்த வேலைக்கு பயன்படுத்துவதில்லை. அவரால் தெரிந்துக் கொள்ளப்பட்ட "ராஜரீகமான ஆசாரியர்களிடம்" மட்டுமே ஒப்புக்கொடுத்திருக்கிறார். ஆகவே நாம் "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய" (ரோம 12 :11) வேண்டும்.

9. தேவனைப் பற்றி அறிவதற்கும், தேவனை அறிவதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

யோவா 17:3 - ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்.

R2137[col.1 P4,5col.2 P1]:

இதன் அஸ்திபாரத்தில் கட்டுபவர்கள், தங்களுடைய கிருபையும் சமாதானத்தையும் பெருக்குவதற்கான நம்பிக்கையை அதிகரிப்பார்கள். எவ்வாறு ? "நம்முடைய பிதாவாகிய தேவனையும், நம்முடைய ஆண்டவராம் இயேசுவை அறியக்கூடிய அறிவின் வழியாக" என்று அப்போஸ்தலர் பதில் அளிக்கிறார். துவக்கத்தில் இதன் பொருள் சற்று எளிதாக தோன்றலாம் அல்லது தேவன் ஒருவர் உண்டென்றும், அவரால் அனுப்பப்பட்ட இயேசுவாகிய இரட்சகர் நமக்கு உண்டென்பதையும் அறிந்துகொள்ளலாம். ஆனால், வளர்ச்சி அடையக்கூடிய கிறிஸ்தவனுக்கு இந்தக் காரியமானது மிக ஆழமானதாக இருக்கிறது. பிதாவோடும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவோடும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டு, "கிறிஸ்துவின் சிந்தை" பெற்று, தெளிவாகவும், முழு நிறைவாகவும், பிதாவின் மனதை அறிந்துகொள்வதாகும். தேவனுடைய வார்த்தைகளினால், இந்த அறிவில் நாம் வளரவேண்டும். தெய்வீக சுபாவங்களை வளர்க்கக்கூடிய கோட்பாடுகளை வசனங்கள் மூலமாக அறிந்துகொள்ள வேண்டும். அதாவது தெய்வீக நீதி, ஞானம், அன்பு, வல்லமை எவ்வாறு செயலாற்றுகிறது என்று அறிந்துகொள்ள வேண்டும். இவைகள் அனைத்தும் முன்னேற்றத்திற்கான தொடர் பாடங்களாக இருக்கிறது. கிறிஸ்துவ அனுபவத்தின் முதல் நாளில்

நாம் சில பாடங்களைக் கற்றிருக்கலாம். அந்த வருடத்தின் முடிவில் தெய்வீக சிந்தையைப் பற்றிய அறிவில் போதுமான வளர்ச்சியை காட்டவேண்டும். மேலும் இரண்டாம் வருடத்தின் முடிவில் இன்னும் அதிகதிமாக வளர்ச்சியை அடையவேண்டும். இப்படியாக நம்முடைய வாழ்க்கையின் முடிவு வரைக்கும் வளர வேண்டும்.

தெய்வீக திட்டத்தைப் பற்றிய அறிவு நமக்குள் அதிகரிக்கும்போது நம்முடைய ஆவியின் கனிகளும் அதிகரிக்க வேண்டும். ஒரு வேளை இதற்கு இசைவாகவும், படிப்படியான வளர்ச்சி அடைய தங்களை உட்படுத்திக் கொள்ளாதவர்கள், இப்படிப்பட்ட அறிவை அறிந்துக் கொள்வதற்கான உற்சாகத்தை, வெகு விரைவில் இழந்துவிடுவார்கள். ஆனால் ஆர்வம் உள்ளவர்கள் அதிகதிகமான அறிவிலும், ஞானத்திலும் விருத்தி அடைவார்கள். இப்படிப்பட்டவர்கள் கிருபையில் வளர்ச்சி அடையும்போது, அதிகதிகமாக சமாதானம் பெருகும். ஒருவரிடம் சமாதானம் இருந்தால் சகல வளர்ச்சிக்குரிய காரியங்களும் விருத்தி அடையும். நாம் முதன் முதலில் நம்முடைய ஆண்டவரை காணும்போது சமாதானம் பெற்றோம், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதை உணர்ந்தோம்.

ஆனால் தெய்வீக திட்டத்தை பற்றிய அறிவில் வளர்ச்சி அடைபவர்கள் தாங்கள் பெற்ற சமாதானத்தை நித்தியமாக சுதந்தரித்துக்கொள்வார்கள். இந்த வழியில் சற்று வேகமாக செல்லும் சிலர் "எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் தங்கள் இருதயங்களில் பெற்றுக்கொள்ளும் படியாக" அப்போஸ்தலர்களைப் போல செயல்படுவார்கள்.

தேவனுடைய அறிவு , அவருடைய தெய்வீக பலத்தால் நமக்கு கொடுக்கப்படுகிறது என்று அப்போஸ்தலர் தொடர்ந்து உறுதியளிக்கிறார். "தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி," (1பேது 1:3) எப்படிப்பட்ட உறுதி ! "எல்லா வழிகளிலும், நம்முடைய கிறிஸ்துவ வளர்ச்சிக்கு தேவைப்படும் அறிவின் முக்கியத்துவம் கீழ்க்காணும் நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை நமக்கு ஓயாமல் நினைப்பூட்டுகிறது. "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவ 17:3) அப்போஸ்தலர் விவரிப்பதுப்போல, "தம்முடைய மகிமையினாலும், காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை" அறிந்துகொள்ளுதலுக்கு, தேவனோடு நெருங்கிய தொடர்புக் கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார். நாம் தெய்வீக குணலட்சணங்களின் பூரணத்துவத்தையும், மகிமையையும் உணர்ந்தால் மட்டுமே நம்முடைய அபூரணத்தையும், குறைவுள்ள நிலையை அளவிட முடியும். ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் வழியாக நாம் தேவனோடு கொண்டிருக்கும் நெருங்கிய உறவினால் பெறப்படும் அறிவும், ஐக்கியமும் நம்முடைய இருதயங்களைச் சுத்திகரிக்கும். இப்படியாக தேவனுடைய அறிவில் வளர்ச்சி அடைந்து "..சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகுவோம் ..." (எபே 3:14-19) இந்தத் தெய்வீக குணங்களை உடையவர்கள் "கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (11கொரி 3:18).

R2138[col.1 P3]:

நம்முடைய சிருஷ்டிகரை அறிந்துக் கொண்ட அறிவின்படி நாம் பார்க்கும்போது விசேஷமாக நம்முடைய ஆண்டவரும் இரட்சகராம் இயேசுவின் மூலம் -" தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித்... " (பிலி 3:14) நிச்சயமாக தொடருவோம் அல்லவா? அவருடைய மகிமையான குணங்களை அறிய விரும்புவோருக்கு தன்னைப்பற்றி முழுமையாக வெளிப்படுத்த அவர் விருப்பமுள்ளவராக இருக்கிறார். ஏனெனில் இதனிமித்தம் நாம் அவருடைய ஆவியில் அதிகமான பங்கைப்பெற்று, நாளுக்கு நாள் அவரைப் போலாகி, அவர் நம்மை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு தகுதி பெற்று, தேவன் தான் அன்பு செலுத்தும் பிள்ளைகளுக்காக வைத்திருக்கும் நித்தியமான ஆசீர்வாதங்களை முழுமையாக உணர்ந்து, அதைப்பற்றி இன்று நமக்களித்திருக்கும் மேன்மையானதும், விலையேறப் பெற்றதுமான வாக்குத்தத்தங்களைப் பெற்றிருக்கிறோம்.

R2624[col.2 P4]:

பிதாவாகிய தேவன் தெரிந்து கொண்டவர்களுக்கு மட்டுமே விசேஷித்த கட்டளைகளைக் கொடுக்கவேண்டும் என்பதை இயேசு நன்கு அறிந்திருக்கிறார். ஆயத்தப்படாதவர்களுக்கும், அவரை புரிந்துக் கொள்ளக்கூடிய சரியான மனநிலை இல்லாதவர்களுக்கும், இயேசுவின் சாட்சியைப் பெற்றுக்கொள்ள தயங்குபவர்களுக்கும் இவைகள் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் தம்முடைய விசுவாசமுள்ள சீஷர்களுக்கும், சபை வகுப்பார் அனைவருக்கும் தாம் எதையும் கூறாமல், பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்ட அனைத்தையும் அறிவிக்கிறார். பிதா யாருக்கு தன்னை வெளிப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ அவர்களுக்கு மட்டுமே குமாரன் பிதாவானவரை முழுமையாக வெளிப்படுத்துகிறார். சராசரியான வாசகர்கள் இதை முதலில் வாசிக்கும்போது மேலோட்டமாக புரிந்துக்கொள்கிறார்கள். ஆனால் அநேக வருடங்களாக கிறிஸ்தவ வாழ்க்கையில் வளர்ச்சி அடைந்து தேவனுடைய கிருபையிலும், அறிவிலும் பெருகிக்கொண்டிருப்பவர்கள், இந்தக் கருத்தை ஆழமாக புரிந்துக்கொள்வார்கள். துவக்கத்தில் இயேசுவைப் பற்றியும், அவருடைய தந்தையாம் பிதாவைப்பற்றியும் குறைவாக அறிந்தபோது, அவர்கள் பெற்ற கிறிஸ்துவ அனுபவம் அதற்கு ஏற்றபடி அனுமதிக்கப்பட்டது என்று உணருவார்கள். ஆனால், பிதாவையும், குமாரனையும் மிக அதிகமாக அறியக்கூடிய அறிவு பெற்றவுடன் வித்தியாசமான அனுபவங்களை அடைவார்கள். ஒருவர் தன்னுடைய நெருங்கிய நண்பருடைய இருதயத்தையும், சிந்தையையும், நோக்கத்தையும் அறிந்திருப்பது போல அவர்களின் சிந்தையும் தேவனைப் பற்றியும், குமாரனைப் பற்றியும் முழுமையாக உணர்ந்துகொள்ள ஒரு வாய்ப்பளிக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நெருங்கிய உறவைப் பெறுவது நாம் பெற்ற சிறப்புரிமையாகும். ஆனால் இந்த வாய்ப்பு அனைவருக்கும் கிடைப்பதில்லை. இதை விரும்பித், தேடி, உண்மையாக அவர்களோடு ஐக்கியப்படுவதற்கும், இசைந்து செயல்படுவதற்கும் வாஞ்சிப்பவர்கள் மட்டுமே வாய்ப்பைப் பெறுகிறார்கள். தேவனுடைய இராஜ்யத்தில் பங்காளிகளாக விரும்பும் ஆண்டவரின் உண்மையான சீஷர்கள் இப்படிப்பட்ட கிருபையில் வளர்ச்சி அடைய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் இந்தக் கிருபையின்றி நாம் வளர்ச்சி அடைய முடியாது. நாம் பெற்றிருக்கும் வளர்ச்சியின் அளவுக்கு பிதாவையும் குமாரனையும் அறிந்துகொண்டால் நாம் அவர்களை முழு இருதயத்தோடு நேசித்து, அவர்களுடைய பார்வையில் நன்மையான காரியங்களை அதிகதிகமாக செய்ய முயற்சிப்போம்.

10. அறிவு-பொறுப்புகளை அதிகரிக்கிறதா?

லூக் 12:47, 48 "தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான். எவனிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்; மனுஷர் எவனிடத்தில் அதிகமாய் ஒப்புவிக்கிறார்களோ அவனிடத்தில் அதிகமாய்க் கேட்பார்கள்"

F719 [P1]:

சந்தேகத்திற்கு இடமின்றி "காலத்திற்கு முன் எதைக் குறித்தும் நியாயந்தீர்க்காதிருங்கள்" என்று ஆண்டவர் கொடுத்த கட்டளை ஒரு காரணமாக அமைகிறது. பிரதான நியாயதிபதியாகிய இயேசுவின் தலைமையில் - "நாம் தூதர்களையும் நியாயம் விசாரிப்போம் ....." என்று எழுதிய பிரகாரம் வருங்காலத்தில் நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரம் நம்முடைய கரங்களில் கொடுக்கப்படும். "தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் ஆயத்தமாயிராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான். அறியாதவனாயிருந்து, அடிகளுக்கு ஏதுவானவைகளைச் செய்தவனோ, சில அடிகள் அடிக்கப்படுவான். "(லூக் 12: 47,48) என்று ஆண்டவர் அறிவிக்கிறார். துணிகரமான பாவத்தினால் ஏற்படும் குற்ற உணர்வுகளை, நம்முடைய ஆண்டவரின் அறிவிலும், அவருடைய சித்தத்தின் அடிப்படையில் அதிகமாக சீர்தூக்கிபார்க்கப்படும் என்பதை இந்த வசனம் குறிப்பிடுகிறது. ஆகவே இந்தச் சுவிசேஷ யுகத்தில், ஒளியின் கீழ் வந்தவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிக பொறுப்புள்ளவர்களாக இருப்பார்கள். சபையில் இல்லாதோர், ஆவியை பெறாதோர், சபையைக் காட்டிலும் குறைவான பொறுப்புகளை பெறுவார்கள் என்று பொருள் அல்ல, மாறாக, அவர்களின் பாவத்திற்கு அதிகமாக கணக்குக் கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

A349[P1]:

மேலும் வேதாகமம் திறக்கப்படும் போது அநேக அற்புதமான காரியங்கள் வெளிப்படுகிறது. (சங் 119:18) இன்று வெளிப்படுகிற சத்தியத்தின் வெளிச்சத்தினால், அநேக விசுவாச அறிக்கைகள், மனிதர்களின் பாரம்பரியம் அனைத்தும் தவறு என்று தெளிவாக காட்டுகிறது. ஆராதனைச் செய்யும் அபூரணரும் இதை எளிதில் அடையாளம் கண்டுப்பிடித்துவிடுவதால், அநேகர் இந்தப் பொய்யான காரியங்களை புறக்கணிக்கிறார்கள். இறுதியில் இவைகள் (பொய்கள்) ஒதுக்கப்பட்டு, அவமானப்படுத்தப்படுகிறது. மேலும் இவைகளை எல்லாம் தவறு என்று சுட்டிக் காட்டக்கூடிய தெய்வீக துவக்கத்தைக் கொண்டிருக்கும் வேதாகமத்தை, மனித விசுவாச அறிக்கைகளையும், பாரம்பரியத்தையும் ஒட்டிக் கொண்டிருக்கும் அவமானங்கள் இப்போது வேதாகமத்திலும் பரவக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, அநேக முற்போக்கவாதிகள், வேதாகமத்தில் உள்ள அநேக பகுதிகள் தங்களுக்கு இசைவாக இராததினால் அவைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். உண்மையில், விசுவாச வீட்டாரின் வளர்ச்சிக்கு தக்கதாக ஏற்ற காலத்தில் சத்தியங்கள் கொடுக்கப்பட்டு அவர்களை ஊக்குவிக்கிறது (மத் 24 : 45). சத்தியத்தின் தொடர்பு உடையோர், அதன் குணலட்சணத்தையும் அதில் குறிப்பிடப்படும் பொறுப்புகளையும் உண்மையில் உணர்ந்து கொள்வார்கள். இவைகளை பெற்றுக்கொண்டவர்கள் - செயல்படுத்த வேண்டும் அல்லது புறக்கணிக்க வேண்டும். இதை புறக்கணிப்பதால், பொறுப்புகளை நாம் தட்டிக்களிக்க முடியாது. அதை நாம் ஏற்றுக்கொண்டால் அதற்கான பொறுப்புகளை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இது விசுவாச வீட்டார் அனைவருக்காகவும். அதில் உள்ள ஒவ்வொருவரும் இதை பெற்றுக்கொள்ள கடனாளிகளாக இருக்கிறோம். மேலும் நாம் விசுவாசமுள்ள உக்கிராணக்காரனாக இருந்தால், தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்போது உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது, ஒரு வேளை இது மறுபடியும் இருளாக மாறினால், எவ்வளவு அதிகமான இருளாக இருக்கும். ஆகவே எழும்பி பிரகாசியுங்கள், ஜனங்களுக்காக ஒரு கொடியை ஏற்றுங்கள்.

11. ஒருவருக்கொருவர் அறிவில் வளர்ச்சி அடைவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் அல்லது நம்மேல் விழுந்த கடமை என்ன?

F263 through F 264[P1]:

"மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன்" (கலா 6: 6) தேவன் அவருடைய ஜனங்களை ஒருவருக்கொருவர் போதித்து, கட்டளைகளைக் கொடுப்பதற்காக வடிமைத்திருக்கிறார் என்பதை மேல் கூறப்பட்ட வசனம் காட்டுகிறது. இப்படியாக, அவர் மந்தையில் இருக்கக்கூடிய எளியோரும் தங்களுடைய தனிப்பட்ட விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தினார். ஆனால் இவ்வளவு முக்கியமான காரியம் பொதுவாக அனைவராலும் நிராகரிக்கப்படுகிறது. சபையில் உள்ளவர்களை ஆசிரியர்கள் - மாணவர்கள் என்று இந்த வசனம் அடையாளம் காட்டுகிறது. மாணவர்கள் தயக்கமின்றி தொடர்புக் கொள்ளவேண்டும். மேலும் அவர்கள் அறிந்துக்கொண்ட ஒவ்வொரு காரியத்தையும், அவர்கள் தங்களுடைய ஆசிரியர்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். ஆசிரியராக செயல்படாமல், அறிவுள்ள ஒரு மூத்த சகோதரனாக செயல்படவேண்டும். போதகர்களைக் குறித்து அஞ்சவேண்டாம். அவர்களை ஒரு இயந்திரமாக நினைக்கவும் வேண்டாம்.

ஆயினும், குற்றம் கண்டுப்பிடிக்கும் ஆவி அல்லது பகையைத் தூண்டும் காரியங்கள் மற்றும் மற்றவர்களுடைய பலவீனங்களைப் பிரஸ்தாபப்படுத்தும் காரியங்களை தேவன் என்றுமே விரும்புவதில்லை. இப்படிப்பட்ட காரியங்கள், பரிசுத்த ஆவிக்கு நேர் விரோதமாக இருக்கிறது. அதுமட்டும் அல்ல, இது மிகவும் அபாயகரமானது. ஏனெனில் இப்படிப்பட்ட ஆவியைப் பெற்றவர்கள், அவர்களை எதிர்த்து பேசுபவர்களை சீக்கிரத்தில் குழப்பிவிடுவதற்காக விவாதங்களை எழுப்பக்கூடிய மனநிலையில் இருப்பதால் சத்தியத்தை எளிதில் நம்ப மாட்டார்கள். ஆனால் இதினிமித்தமாக அவர்களும் காயப்பட்டு, மற்றவர்களையும் காயப்படுத்திவிடுவார்கள். சத்தியத்தில் வளருவதற்கு அடிப்படையாக நேர்மையும், உண்மையும் தேவைப்படுகிறது. ஒருவர் சத்தியமாக விசுவாசிக்கக்கூடியதை எதிர்க்கும்பட்சத்தில், அதாவது விளையாடுவதற்காக இப்படிச் செய்தாலும், அது தேவனுக்கு எதிராக செய்யக்கூடிய குற்றமாக இருக்கும். அதனிமித்தம் சில நியாயமான தண்டனைகளைப் பெறவேண்டியதாக இருக்கும். ஐயோ, எத்தனை பேர் இந்த விஷப்பரீட்சையில் இறங்கி, சத்தியத்திற்கு எதிராக

பேசி, அதனால் தாங்களே சிக்கிக்கொண்டு, இனி அவர்கள் செல்லவேண்டிய பாதையை அறியாத குருடராகிவிடுகிறார்கள். தேவனுக்கு அடுத்தபடியாக, இந்த உலகத்தில் சத்தியமே விலையேறப்பெற்றது. இது விளையாட்டுக்குரியதல்ல, அதை அற்பமாக எண்ணி விடக்கூடாது. இப்படிப்பட்டவர்கள் தாங்களே பாதிப்புகளை (கேடு) வருவித்து கொள்வார்கள். (11தெச 2:10,11)

"தொடர்புக்கொள்ள" என்ற வார்த்தையில் சரியான பொருள் மிக விஸ்தாரமாக குறிப்பிடப்படுகிறது. இது ஒருவருடைய சிந்தையை மட்டும் அல்ல, ஆனால் கற்றுக்கொள்பவர்கள் மற்றும் ஆவிக்குரிய நன்மைகளை பெறக்கூடியவர்களும், ஏதோ ஒரு வழியில் கற்றுக்கொடுப்பவர்களோடு தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சி அடையவேண்டும் - தேவனுக்கு செலுத்துவதிலும், சகோதரர்களுக்கும் சத்தியத்திற்கும் அவர்களுடைய நற்கனிகளாகிய உழைப்பையும் தாலந்துகளையும் கொடுக்கவேண்டும் என்பதும் பொருள்படும். புது சிருஷ்டியின் பரிசுத்தமான ஏற்பாட்டின் முக்கிய காரியம் இதுவே "பெற்றுக்கொள்வதை காட்டிலும் கொடுப்பதே நலம்" என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளின் பொருளை, துவக்கத்தில் பெற்ற கிறிஸ்துவ அனுபவங்களில் நாம் அறிந்திருக்கலாம். ஆகவே இப்படிப்பட்ட ஆவியைப் பெற்றவர்கள், சத்தியத்திற்காக உலகப்பொருட்களையும் கொடுத்து, அதற்கு பதிலாக தங்களுடைய உண்மையும் நேர்மையுமான இருதயத்தில் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வதில் உண்மையில் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் எப்படி கொடுப்பது ? பெற்ற ஞானத்தை எவ்வாறு செயல்படுத்துவது என்ற கேள்விக்கு மற்றொரு தலைப்பில் விடையைக் காணலாம்.

R3219[col.2 P2]:

சபைகளில் சத்தியத்தின் அறிவைப் பெறுவதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். இதுவே வளர்ச்சிக்குரிய ஆதாரமாக இருக்கவேண்டும். சத்தியத்தின் அடிப்படையிலான அறிவின் வளர்ச்சியின்றி ஒருவர் தேவனுடைய வல்லமையிலும், அந்த வல்லமையின் சத்துவங்களிலும் பலப்பட முடியாது. தேவனுடைய வார்த்தைகளை பக்தி வைராக்கியத்தோடு படிப்பவர்கள் நிச்சயமாக அவருடைய சத்தியத்தையும் அதிகமாக நேசிப்பார்கள். அதேபோல் தேவனுடைய ஆழமான காரியங்களைக் குறித்து வழிநடத்தப்படுபவர்கள் - அதிகதிகமாக தேவனுடைய கிருபையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாம் அடையாளம் கண்டு கொள்ளலாம். நாம் பூமிக்குரிய குடும்பங்களில் சிறு குழந்தைகளை நேசித்து பராமரிப்பது போல, விசுவாச வீட்டில் வளர்ச்சி குன்றினவர்களையும், விசுவாசத்தில் குறைவுள்ளவர்களையும் நேசித்து ஆண்டவருக்குள் உறுதியான வளர்ச்சி அடைய அவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

12.கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக பயிற்சி பெறுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம் என்பதை எவ்வாறு அறிந்துக்கொள்வது?

1தெச 1:4,5 " எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே."

E229 through E230:

ஒரு மனிதனுடைய வார்த்தைகளையும், நடத்தைகளையும் வைத்து அவனுடைய ஆவியை அல்லது அவனுடைய சிந்தையை அறிந்து கொள்ளலாம். அதேபோல் தேவனுடைய வார்த்தைகளையும் அவருடைய செயல்பாடுகளையும் வைத்து அவருடைய சிந்தையை பற்றியும், ஆவியை பற்றியும் தெளிவாக அறிந்துகொள்ளலாம். அவரிடம் வருகிறவர்களை (செத்த கிரியைகளை விட்டுவிட்டு, துர்க்கிரியைகளிலிருந்து மனந்திரும்பி, இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தினால்) அவருக்குள் ஏற்றுக்கொள்வார் என்பதே அவருடைய வார்த்தைகளின் சாட்சியாக இருக்கிறது. (எபி 7:25) ஆகவே தங்களுடைய புத்திரசுவிகாரத்தைக் குறித்து தேவனுடைய ஆவிக்குரிய சாட்சியைப் பெற விரும்பும் யாவரும் -"நான் இயேசுவை என்னுடைய இரட்சகராகவும், அவருடைய நீதியினால் மட்டுமே நான் பரலோக பிதாவால் ஏற்றுக்கொள்ளப்பட முடியும் என்பதை உணர்ந்திருப்பதற்காகவும் , நான் கிறிஸ்துவினிடம் அழைக்கப்பட்டேனா ? "என்ற கேள்விகளை தங்களுக்குள்ளே கேட்கவேண்டும். இதற்கு "ஆம் " என்ற பதிலை உறுதியாக சொல்ல முடிந்தால் -" நான் இதுவரைக்கும் முழுமையாக என்னை அர்ப்பணித்திருக்கிறேனா ? என்னுடைய நேரம், தாலந்துகள், செல்வாக்கு, என்னுடைய ஜீவன் மற்றும் என்னுடைய

எல்லாவற்றையும் முழுமையாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டேனா ? என்ற அடுத்த கேள்வியை நமக்குள் கேட்க வேண்டும்.

இந்தக் கேள்விக்கும் " ஆம் " என்ற பதிலை உறுதியாக சொன்னால், பிதாவாகிய தேவன் அவரை தம்முடைய நேசிக்கப்பட்ட குமாரனாக ஏற்றுக்கொண்டார் என்று நிச்சயமாக உறுதியளிக்கலாம்.

மேலும் தன்னுடைய இருதயத்தின் சிந்தனைகளை ஆழ்ந்து பரிசோதிக்கும்போது, அதில் இயேசுவின் ஈடுபலியின் நன்மைகளும், தேவனுடைய சித்தத்தை செய்யக்கூடிய மனநிலை நிறைந்ததுமாக காணப்பட்டால், எல்லா புத்திக்கும் மேலான சமாதானத்தை தேவன் அவர்களுக்கு அனுமதிப்பார். நம்முடைய சொந்த அனுபவங்களினால் அறிந்துக்கொண்ட உண்மைகள், கிறிஸ்துவுக்காக நாம் பெற்ற உறுதியான தேவ கிருபை நமக்குள் மாறாத குணங்களாக, தேவனுடைய வார்த்தையினால் கட்டப்படுகிறது. நழுவிச் செல்லும் மணலின் மேல் கட்டப்பட்ட கட்டிடம் போல் இந்த சிந்தனைகள் இருப்பதில்லை. ஒருவேளை இருள் சூழ்ந்த சில நேரங்களில் பயங்களும், சந்தேகங்களும் தோன்றினால், நாம் தேவனுடைய வார்த்தையாகிய விளக்கை கையில் பிடித்தவர்களாக உண்மைகளையும் அதன் அஸ்திபாரங்களையும் கவனித்துப் பார்க்கவேண்டும். நம்முடைய இருதயம் தேவன் பேரில் உள்ள விசுவாசத்தில் நிலைத்திருக்குமேயானால் மகிழ்ச்சியும், சமாதானமும் நம்மிடத்தில் உடனடியாக வந்துசேரும். "விலையேறப்பட்ட இரத்தத்தின் " மேல் உள்ள விசுவாசம் நிலை குலைந்து, நம்முடைய உடன்படிக்கை தடுமாறிக் கொண்டிருப்பதை நாம் உணர்ந்தால், உடனடியாக தக்கநடவடிக்கைகளை எடுத்து, நம்முடைய விசுவாசத்தை செப்பனிட்டு, -"விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு" (எபி 10:22) மீண்டுமாக நம்மை நிலைவரப்படுத்தலாம். ஆனால் இந்த உறுதியை பெற்ற ஒவ்வொருவரும்"தேவன் சத்திய முள்ளவரென்று முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான்" (யோவ 3:33) நம்முடைய ஆண்டவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்பதை உணரவேண்டும். ஆகவே தேவனுடைய கிருபையைப் பெற்ற அவருடைய ஜனங்கள், இந்த உறுதியில் இளைப்பாறலாம். அவர்கள் தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, அவருடைய சித்தத்தை செய்ய விரும்பி, தேவனுடைய தெய்வீக கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்து, தேவனிடத்திலும், மனிதர்களிடத்திலும் அன்பு செலுத்தும் வரைக்கும் இந்த இளைப்பாறுதலில் இவர்கள் நீடித்திருப்பார்கள். (எபி 11:6, 13:8)

மேல் கூறப்பட்ட படிகளை கடந்தவர்கள், தேவனுடைய வார்த்தைகளின்படி "சாட்சிகள்" என்றும், அவர்கள் தேவனுடைய "புத்திரர்" என்றும், இந்தச் சுவிசேஷ யுகத்தில் உண்மையான "திராட்சைச் செடியின் கொடிகள்" என்றும் உண்மையான சபையின் பயிற்சி பெறும் அங்கத்தினர்கள் என்றும் உறுதி பெறுகிறார்கள். (யோவா 15 :1) இப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய உண்மையான சபையில் இணைக்கப்பட்டார்கள் என்று தேவனுடைய வார்த்தையின்படி சாட்சி பெறுகிறார்கள். இந்த சாட்சி தேவனுடைய ஆவி, அவருடைய வார்த்தையினால், சாட்சி கொடுக்கிறது. பயிற்சி காலத்தில் அவர்களின் இருதயம் தொடர்ந்து தேவன் மேல் விசுவாசமாக இருக்கும் பட்சத்தில் - அவர்கள் அனுதினமும் தங்களுடைய ஆண்டவரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினால் வெகு சீக்கிரத்தில் பயிற்சி பெற்று கிறிஸ்துவின் சபையில் நிரந்தரமான அங்கத்தினர்களாவார்கள், என்ற சாட்சியை சத்தியத்தின் அதே ஆவி சாட்சிக் கொடுக்கிறது. இவர்கள் ஓட்டத்தை முடித்தபின், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று இயேசுவுக்கு பங்காளிகளாவார்கள். -(பிலி 3:10)

F191[P1]:

நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்றும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு, வெகு சீக்கிரத்தில் பூரணப்படுவோம் என்றும் அநேக அடையாளங்களினால் உறுதிப்படுத்திக்கொண்டோம்.

- தேவனுடைய சித்தம் அவர்களுக்குள் நிறைவேற்றப்பட, அவருடைய வல்லமை அவர்களுக்குள் கிரியைச் செய்கிறது. இது தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு பரிசுத்த ஆவியும், அதிக உறுதியும் தருகிறது. இதற்குப் பதிலாக எந்தச் சூழ்நிலையிலும், அவர்கள் தேவனுடைய வார்த்தையை அறிவிக்க ஆயத்தமாயிருக்கிறார்கள்.

13. தேவனுடைய சித்தத்தின் அறிவுக்கு கீழ்ப்படிவதன் மூலம் இக்காலத்தில் நாம் சுதந்தரித்துக் கொள்வது என்ன?

எபே 1:7,18"அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற

நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்"

R2762[col.2 P1-4]:

தேவனுடைய இராஜ்யம் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்பட்டபின், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்கள் தங்களுடைய பரலோக ஐசுவரியத்தை சுதந்தரித்துக் கொள்வார்கள். இக்காலத்தில் அவர்களின் பலிகளின் மூலமாகவும், பயபக்தியினாலும், தேவனை முழுமையாக நேசிப்பவர்கள் என்று நிரூபிக்கப்படும் அனைவருக்கும், தேவன் அவர்களுக்காக வைத்திருக்கும் சகல பரலோக ஆசீர்வாதங்களையும் கையளிப்பார். ஆனால் இந்த விசுவாசமுள்ளவர்களுக்கு கொடுக்கப்படும் பரலோக ஆசீர்வாதங்களின் ஒரு சில காரியங்களை நாம் இப்பொழுதே, ருசிபார்க்கக்கூடிய வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறோம் என்பதை கவனிக்க வேண்டும். இன்றைக்கு நாம் பெறும் பரலோக ஐசுவரியங்களை "கிருபையின் ஐசுவரியங்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (எபே 1:7,18) பரிசுத்த ஆவிக்குள்ளான விசுவாசம், நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் காணக்கூடாத காரியங்களை விசுவாசத்தின் கண்களினால் கண்டு புரிந்துக்கொள்ளுவதே இந்த ஐசுவரியம். ஞானம் மற்றும் கிருபைகளின் பொக்கிஷங்கள், தெய்வீக நன்மைகளின் அறிவு என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். மேலும் தேவனுடைய ஐக்கியமானது கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கும் அந்த ஆசீர்வாதங்களை குறிப்பிட்ட அளவில் பெற்று மகிழ்வதற்கு இப்போது நம்மை அனுமதிக்கிறது. "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" (கொலோ 2:3) இந்தப் பொக்கிஷங்களை தேடுவதற்கு வாய்ப்புகள் கிடைக்குமுன் நாம் கிறிஸ்துவுக்குள் பலியின் மூலமாக அவருடைய சரீர அங்கங்களாகவும், உண்மையான சபையாகவும் வளரவேண்டும். அதற்குப்பின் ஆசாரியர்களாக மகா பிரதான ஆசாரியரின் அடிச்சுவடுகளில் நடந்து, நம்முடைய பலியின் ஜீவியத்தில் வளர்ச்சி அடையும்போது, "கிருபையின் ஐசுவரியங்களை" நாளுக்கு நாள் அதிக அளவில் பெற்றுக்கொண்டே போகலாம்.

மேலும், நம்மை நாம் விசுவாசத்தோடு ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கும் போது, மற்ற ஆசீர்வாதங்களும் இராஜரீகமான ஆசாரியத்துவத்தை வந்து சேருகிறது. இவைகள் பரிசுத்த ஆவியின் ஐசுவரியங்களாக இருக்கிறது. அவர்களின் சொந்த விருப்பம், பூமிக்குரிய இலக்குகள், வேலைகள் அனைத்தையும் பலிசெலுத்தும் போது, தேவனுடைய ஊழியத்திலும், சத்தியத்திற்கு பணி செய்வதிலும் இவர்கள் வளர்ச்சி அடைகிறார்கள். இதை தொடர்ந்து செய்யும்போது, பரிசுத்த ஆவியின் கனிகளாகிய சாந்தம், பொறுமை, கனிவு, சகோதர சிநேகம் மற்றும் அன்பில் பூரண வளர்ச்சி அடைந்து பிதாவின் சாயலையும், குமாரனுடைய சாயலையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

மேலும் இதுவரைக்கும் காணாததும், உலகம் தரக்கூடாததும், எடுத்து கொள்ளமுடியாததுமான சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். தங்களுக்குரியதெல்லாம் ஆண்டவரிடம் கொடுத்து விட்டார்கள் என்பதையும், அவர் கொடுத்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் சொந்தமாக்கிக் கொண்டோம், என்பதையும் முழுமையாக உணரும்போது, இந்தச் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெறுகிறார்கள். உலகப்பிரகாரமான காரியங்களை தேவனிடத்தில் அற்பணித்த பின், இந்த வாக்குத்தத்தங்கள் அனைத்தும் சுதந்தரித்துக் கொண்டோம் என்று முழுமையாக பற்றி கொள்ளலாம். தேவனாலே அவர்கள் நீதிமானாக்கப்பட்ட நிலையைப் பெற்றார்கள் என்பதையும் உணரலாம். இந்த அழைப்பு தங்களால் உண்டாகாமல் தேவனால் உண்டானதென்றும், அவர்கள் செலுத்தக்கூடிய சகல பலிகளும் அந்த அழைப்போடு இசைந்ததாக ஆசீர்வாதங்களைப் பெறும் அளவுக்கு தெய்வீக பராமரிப்பின் கீழ் வழிநடத்தப்படும் என்பதில் உறுதியளிக்கலாம். மேலும் இந்தப் பூமியில் அவர்கள் படக்கூடிய பாடுகள், உபத்திரவங்கள் மற்றும் சோதனைகளுக்கு ஒப்பிடமுடியாத அளவுக்கு தேவனுடைய இராஜ்யத்தில் மகிமையையும், கனத்தையும் தேவன் கொடுக்கக்கூடியவராக இருக்கிறார். (11கொரி 4:17)

"நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்" (சங் 37:23) என்ற தீர்க்கதரிசன வசனத்தை - தேவனுடைய இந்தச் சமாதானத்தோடும், அவருடைய பராமரிப்பு மற்றும் வழிநடத்தலின் நம்பிக்கையோடும் இருப்பவர்கள் தங்களுக்கு பொருத்திப் பார்க்கலாம். இந்த வழி எவ்வளவு முள்ளுகளும், குறுகலுமாக இருந்தபோதிலும், தேவனுடைய அன்பிலும்

ஞானத்திலும் உள்ள நம்பிக்கையினால் அதில் மகிழ்ச்சியாக செல்லமுடியும். ஏனெனில் உங்களுக்குள் நற்கிரியைகளைத் துவங்கினவர் அதை முடிக்கவும் வல்லவராக இருக்கிறார். தெய்வீக ஞானத்தினால் சில ஆசீர்வாதமான அனுபவங்களைக் கொடுத்து, வருங்காலத்தில் அதிக நன்மைகளை அடைய வழிநடத்தும். இப்படியாகவே தேவன் இவ்வகுப்பாரை ஆசீர்வதிக்கிறார். "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியம் " என்பதை இவர்களும் உணர்ந்துக்கொள்வார்கள். இக்காலத்தில் அநேக ஐசுவரியங்களால் இருதயம் நிரப்பப்படுகிறது மேலான உணர்வுகள், விசுவாசத்திலும், அன்பிலும் ஐசுவரியமுள்ளவர்களாக இருக்கிறோம். வாய்ப்புகள் கிடைக்கும் போது அனைவருக்கும், விசேஷமாக விசுவாசவீட்டாருக்கும் நன்மை செய்கிறோம்.

இவையனைத்தும் தேவனால் அங்கீகரிக்கப்படும்போது, இவர்கள் இராஜரீகமான ஆசாரியர்களாகவும், தேவனுடைய சுதந்தரவாளிகளாகவும், இயேசுவின் உடன் சுதந்தரராகவும், அழியாததும், வாடாததுமாகிய பரலோக மகிமையைப் பெறுவார்கள். (1பேது 1:4)

14. சத்தியத்தை அறியக்கூடிய அறிவு, மூட நம்பிக்கைகளின் பயங்களின் மேல் என்னென்ன பாதிப்புகளை எற்படுத்துகிறது?

யோவான் 8:32 "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்"

R3153[col.1 P5 to end of article]- "கிறிஸ்துவின் சீஷர்கள்" [last two-third of article].reproduced at the end of this section

15. அறிவில் நாம் எப்படி வளர்ச்சி அடைவது?

நீதி 2:3-6"ஞானத்தை வா என்று கூப்பிட்டு, புத்தியைச் சத்தமிட்டு அழைத்து, அதை வெள்ளியைப்போல் நாடி, புதையல்களைத் தேடுகிறதுபோல் தேடுவாயாகில், அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதல் இன்னதென்று நீ உணர்ந்து, தேவனை அறியும் அறிவைக் கண்டடைவாய். கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்".

11போது 3:18"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்"

R3153[col.1 P6,7 through col.2 P2-4]:

முதலில் கிறிஸ்துவை நம்முடைய இரட்சகராகவும் ஆண்டவராகவும் விசுவாசித்து ஏற்றுக்கொண்டது, நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையின் மிக பெரிய ஆசீர்வாதமாகும். ஆனால் இந்தப் படியை கடக்கக்கூடியவர்களுக்கும் கிடைக்கும் பரிசு, அவருடைய வார்த்தைகளில் நிலைத்து நிற்பதிலும், அவருடைய உண்மையான சீஷர்களாக தொடர்ந்து வாழக்கூடிய உண்மையான நோக்கத்தைப் பொறுத்தே உள்ளது. இதை செய்வதில் எந்தக் கஷ்டமும் இல்லை. ஆனால் மனித பெருமையானது தெய்வீக சத்தியத்தை விட்டு விலகி, அங்கும் இங்கும் திரிந்து புதிய தத்துவங்களையும் கூற்றுக்களையும் தேடி அலையும். இந்த உலகத்தின் ஞானத்தில் தேறினவர்களுடைய கருத்தோடே இசைந்திருக்க வழித் தேடும்.

தொடர்ந்து சீஷத்துவத்தில் வளர்ந்துக் கொண்டிருப்பவர் நிச்சயமான சத்தியத்தை அறிந்துக்கொள்வார்கள் என்ற வாக்குறுதியை வசனத்தில் மூலம் பெறுகிறார்கள். ஆனால், "பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு, எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற....." (11தீமோ 3: 6,7)அநேகர் உண்டு. இவர்கள் தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருப்பதை விட்டுவிட்டு தேவனுடைய வார்த்தைகளை நிராகரிக்கக்கூடிய மனித தத்துவங்களை நாடுகிறார்கள். இவர்கள் என்றுமே சத்தியத்தைக் கண்டடைய மாட்டார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு எந்த விதமான வாக்குத்தத்தங்களும் கொடுக்கப்படவில்லை. தெய்வீகமாக நியமிக்கப்பட்ட சரியான வழி முறையில் சென்றால் மட்டுமே ஒருவர் சத்தியத்தைக்கண்டடைய முடியும். நம்முடைய ஆண்டவரும், அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளும் தேவனால் நியமிக்கப்பட்ட வழியாக இருக்கிறார்கள். ஆவியின் தூண்டுதலினால் எழுதப்பட்ட எழுத்துக்களில் காணப்படும் போதனைகளைத் தொடர்ந்து படித்து தியானம் செய்து, அவைகளை நம்பி, தேவனுடைய வார்த்தைகளில் சொல்லப்பட்டவைகளின் அடிப்படையில் நம்முடைய குணங்களைச் சரியாக உருவாக்கவேண்டும்.

அப்போஸ்தலர் கூறுகிறபடி, தேவனிடமிருந்து அவ்வப்போது கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களான சகோதரர்கள் வழியாக கொடுக்கப்படும் சகல உதவிகளுக்கும் இந்தக் கருத்து முழுமையாக ஒத்துப்போகிறது. (எபே 4:11-15, 1கொரி 12 :13,14) தேவன் எப்போதும் எழுந்தருளியிருக்கிறார், அவர் முடிவு பரியந்தம் எழுந்தருளியிருப்பார். கிறிஸ்துவின் சரீரத்திற்குத் தேவையானதை போஷிக்க அவர் உதவி செய்வார், ஆனால் தேவனுடைய போதனைகளை அவருடைய உறுதியான வார்த்தைகளின் மூலம் ஜாக்கிரதையாக நிரூபிக்கவேண்டியது ஒவ்வொரு சரீர அங்கத்தினர்கள் மேல் விழுந்த கடமையாக இருக்கிறது.

இப்படியாக தொடர்ந்து தேவனுடைய வார்த்தைகளில் உண்மையும், உத்தமுமான சீஷர்களால் நிலைத்திருந்தால், உண்மையில் "நாம் சத்தியத்தை அறிந்துக்கொண்டு" காலத்திற்கேற்ற போதனைகளில் நிலைவரப்பட்டு, அதில் ஆழமாக வேரூன்றி, பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தில் நிலைக்கொண்டவர்களாக "நல்ல போராட்டத்தை போராடி" "நல்ல சாட்சிகளாக" கிறிஸ்து இயேசுவுக்குள் நல்ல போர் சேவகனாக இறுதிவரைக்கும் அதாவது மரணபரியந்தம் நிலைத்திருப்பார்கள். ஒரே நாளில் நாம் சத்தியத்தின் அறிவை பெற முடியாது. ஆனால் பொறுமையாகவும், படிப்படியாகவும், நாம் சத்தியத்தை அறிந்துக்கொள்ளலாம். நாம் அடி எடுத்து வைக்கக்கூடிய ஒவ்வொரு படிகளும் நிச்சயமானதும், வளர்ச்சிக்கு ஏதுவானதுமாக இருக்கவேண்டும். ஒவ்வொரு படிகளும் அடுத்தபடியைத் தாண்டுவதற்கு வழிநடத்தக்கூடியதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு நிலையைக் கடக்கும்போதும், அறிவிலும், நற்கனிகளிலும் அதிகதிகமான வளர்ச்சியை வெளிப்படுத்தவேண்டும்.

இப்படியாக, கிடைக்கபெற்ற சத்தியம் நமக்குள் சுத்திகரிப்பின் வல்லமையை படிப்படியாக அதிகரித்து, நமக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் கனிகளாகிய நீதி, சமாதானம், சந்தோஷம், அன்பு, சாந்தம், விசுவாசம், பொறுமை, மற்றும் ஒவ்வொரு நல்ல குணமும் ஒவ்வொரு கிருபைகளும் காலத்திற்கேற்ற படி வளர்ச்சி அடைந்து, மகிமையாக பூரணத்துவத்திற்கு வழிநடத்தும்.

R3156[col.2 P1]: -

இந்நிலையை பெற்ற பின், நம்முடைய வேத பகுதியின் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளை நமக்கு சொந்தமாக ஏற்றுக்கொண்டபின், தேவனுடைய வாக்குத்தத்தங்களைச் சரியாக புரிந்துக்கொள்வதற்கு தேவைப்பட்ட நேரத்தை செலவழித்து, விசுவாசத்தில் தொடர்ந்து செயலாற்ற வேண்டும். இதுவே "கிருபை மற்றும் அறிவின் வளர்ச்சி " என்று வசனங்கள் குறிப்பிடுகிறது.

தேவனுடைய வாக்குத்தத்தங்களை ஏற்றுக்கொண்டு அதை விசுவாசத்தோடு செயல்படுத்தும் போது நிச்சயமாக, நாம் அறிவில் வளர்ச்சி அடையலாம். இப்படியாக, நம்முடைய வாழ்க்கையில் இந்த வாக்குத்தத்தங்கள் நிறைவேற நாம் ஆயத்தப்பட்டு, பெற்றுக்கொண்ட ஒவ்வொரு அறிவையும், உண்மையான இருதயத்திலும் நேர்மையான சிந்தையிலும் பெற்றுக்கொள்ளும்போது இயல்பாகவே நாம் கிருபையில் வளர்ச்சி அடைவோம். அதுமட்டும் அல்ல அடுத்து நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய அறிவுக்கேற்ற கீழ்ப்படிதலிலும், நீதியிலும் (கிருபை) நாம் ஆயத்தப்பட்டு, தகுதி பெறுவோம். ஒருவேளை நாம் திரும்பிப் பார்க்கும் பட்சத்தில் நிச்சயமாக இந்த வளர்ச்சியின் காரியங்கள் தடைப்படும். அறிவை இழக்கும்போது, கிருபைகளும் குறைந்து இருளுக்குள் போக துவங்குகிறார்கள். தேவனுடைய வார்த்தைகள் நாளுக்கு நாள் மங்கலாகி இந்த உலகத்தில் அல்லது பாவத்தில் தொலைந்து விடுவார்கள்.

16. "இரட்சிப்பின் தலைச்சீரா" என்பதன் பொருள் அல்லது முக்கியத்துவம் என்ன? கடந்த காலத்தைவிட இப்போது இது எந்த அளவுக்கு அவசியம்?

எபே 6:17 - இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.

F658[P1]:

அறிவுப்பூரணமாக அல்லது தெய்வீகத் திட்டத்தை முழுமையாக புரிந்துக்கொள்வதே "இரட்சிப்பின் தலைச்சீரா" அடையாளப்படுத்துகிறது. இப்போதைய நிலையைக்காட்டிலும் கடந்த காலத்தில் இதை பற்றிய காரியங்கள் அந்த அளவுக்கு அவசியப்படவில்லை. ஆனால் சாத்தான் மிக ஆவேசமாக சத்தியத்தை எதிர்த்து, சகலத்தையும்

விஞ்ஞான ரீதியாகவும், அழிவுக்குரிய ஆயுதங்களாகிய உலக ஞானத்தின் கல்வி அறிவுக்கு திசை திருப்பிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், இந்தத் தலைச்சீரா மிக அவசியமாக இருக்கிறது. மேலும், இக்காலத்தில் அதாவது இந்த நேரத்தில் மிக தாழ்மையுள்ள கிறிஸ்தவ போர் வீரர்கள் மட்டுமே அணிந்து கொள்ளும்படிக்கு இந்தத் தலைச்சீரா வடிவமைக்கப்பட்டிருக்கிறது. எதிராளியிடமிருந்து நம்முடைய ஆண்டவர் தம்முடைய சேவகர்களை விசுவாசத்தின் கேடகத்திற்குள்ளும் இந்தத் தலைச்சீராவுக்குள்ளும் வைத்து பாதுகாக்கிறார். இப்போதோ சர்வாயுதவர்க்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளது.

R2873-: - "ஈடுபலியின் தத்துவம்"

கேள்வி - நீதிமானாக்கப்படுவதற்கு ஈடுபலியின் தத்துவத்தைப் புரிந்துக்கொள்வது மிக அவசியமா ?

பதில் - தேவனுடைய பார்வையில் நாம் பாவிகளாக காட்சி அளிக்காமல் அவருடைய புத்திரர்களாக நம்மை அவர் ஏற்றுக்கொள்வதற்காக கொடுக்கப்படும் நிலையை நாம் நீதிமானாக்கப்பட்ட நிலைமை என்று கூறுகிறோம். தேவனோடு கூட ஐக்கியப்படும் இந்த நிலை ஆபிரகாமின் காலத்திலிருந்தே நடைமுறையில் காணப்படுகிறது. மேலும் தேவனோடு இப்படிப்பட்டத் தொடர்பு வைத்தவர்களை அவர் சிநேகிதர்களாக பாவித்தார். ஆபிரகாம், தாவீது, சாமுவேல் அல்லது வேறு எந்தத் தீர்க்கதரிசிகளும் ஈடுபலியின் தாற்பரியத்தை புரிந்துக்கொள்ளவில்லை. அக்காலத்தில் தேவன் அவர்களுக்கு அதை முழுமையாக அறிந்துக்கொள்ள வாய்ப்பளிக்கவில்லை. ஆனாலும், இதை குறித்த குறிப்புகளையும், நிழல்களையும் அநேக வாக்குத்தத்தங்களின் மூலம் உணர்த்தினார்.

ஆயினும், இவர்கள் அனைவரும் தேவன் மேல் விசுவாசம் வைத்தார்கள். ஆகவே இவர்கள் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் - 4ம் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார். தேவனுடைய சித்தத்தையும், திட்டத்தையும் அவர்களுக்கு வெளிப்படுத்தின அளவுக்கு, அவர்கள் முழுமையாக விசுவாசித்தார்கள். தேவனுடைய அறிவை பெற்றுக்கொள்ளும் அளவுக்கு ஆபிரகாமின் நாட்களில் அவர்களின் புரிந்துக்கொள்ளுதலின் அறிவு தேவையான அளவுக்கு அதிகரித்திருந்தது. தேவன் மேல் நாம் வைக்கும் விசுவாசத்தினால் மட்டுமே நாமும் நீதிமானாக்கப்பட்ட நிலைமையைப் பெறுகிறோம் என்று ரோமர் 4:24 ல் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். பழைய ஏற்பாட்டின் ஜனங்களை ஏற்றுக்கொள்வதற்கும் இந்த விசுவாசத்தையே அடிப்படை தகுதியாக வைக்கப்பட்டது. ஆனால் இப்போதோ நம்முடைய ஆண்டவராம் இயேசு இரட்சகரின் மேலும் அவர் வழியாக பிதாவாகிய தேவன் மேலும் விசுவாசம் வைக்கக்கூடியவர்களாக இருக்கிறோம். அவரை பற்றி கேள்விப்படாதவர்களுக்கு அவரை விசுவாசிக்க முடியாது. ஆனால் ஆபிரகாம் தேவனையும், அவருடைய வார்த்தைகளையும் (அவருடைய சந்ததிக்குள் பூமியின் முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படும்) விசுவாசித்தார். இப்படிப்பட்ட ஆபிரகாமின் விசுவாசம் தேவனுக்கு முன்பாக நீதியாக எண்ணப்பட்டது. நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரை விசுவாசிப்பதற்கு ஒப்பாக இவர்களுடைய கிரியையுள்ள விசுவாசம் முழுமையான கீழ்ப்படிதலின் மூலம் நிரூபிக்கப்பட்டது. நம்முடைய ஆண்டவரின் பகிரங்கமான வருகையில் அவர்களுடைய விசுவாசம் பூரண நிலையை அடைந்துவிடும்.

இயேசுவின் முதலாம் வருகையில், அவருடைய உபதேசங்கள் பெரிய வெளிச்சத்தைக் கொண்டுவந்தது. புரிந்துக்கொள்ளுதலின் கண்கள் திறக்கப்பட்டு, ஈடுபலியின் அர்த்தங்கள் விவரிக்கப்பட்டது. ஆகவே சுவிசேஷ யுகம் துவங்கி இந்நாள் வரைக்கும், நம்முடைய ஆண்டவர் உவமைகள் மூலமும், அநேக உபதேசங்கள் வழியாகவும் ஈடுபலியின் மகத்துவத்தை அறிவித்து வருகிறார். ஆகவே கிறிஸ்துவின் மரணம் முழு உலகத்தின் பாவங்களுக்குப் பதிலாக கொடுக்கப்பட்டது என்ற உண்மையை - தேவனுடைய ஞானத்தில் மிக தெளிவாக சொல்லப்பட்டிருப்பதை நாம் புரிந்துக்கொள்ளவேண்டும். ஆனால் உலகம் இதை புரிந்துக்கொள்ளவில்லை.

நம்முடைய நீதிமானாக்கப்பட்ட நிலைக்கு அஸ்திபாரமாக, ஈடுபலியின் சத்தியம் மிக அவசியமானது. அதே நேரத்தில் நம்மை பொறுத்த வரைக்கும் "தேவனையும்" அவருடைய வார்த்தைகளின் படி கிறிஸ்துவின் ஜீவன் கொடுக்கப்பட்டது என்று விசுவாசித்து, அதன்படி செயல்படவேண்டும்.

நம்முடைய நாட்களில் இந்தப் பாடம் "காலத்திற்கு ஏற்ற போதனையாக" இருக்கிறது. ஏனெனில் இந்தப் பாடத்தில் அநேக முரண்பாடுகளும், நம்முடைய அடிப்படையான விசுவாசத்திற்குரிய சோதனைகளும் வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நாம் மீட்கப்பட்டோம் என்ற தத்துவத்தைத் தெளிவாக புரிந்துக்கொள்ளக்கூடிய காலத்தில் இருக்கிறோம்.

பாபிலோனின் மேஜைகள் முழுவதும் (-புறக்கணிக்கப்பட்டவைகள் -) வாந்தியால் நிறைந்திருக்கிறது என்று தீர்க்கத்தரிசி அறிவிக்கிறார். ஒரு காலத்தில் அந்த மேஜையில் ஈடுபலியைக் குறித்த நன்மையான காரியங்கள் காணப்பட்டது. ஆனால் இப்போது அவர்களின் இருதயமோ சரியான நிலையில் இல்லாததினால் அவர்கள் போதனைகளைத் தவறாக புரிந்துக்கொண்டார்கள். இதனிமித்தம் தேவன் பாபிலோனை புறக்கணித்தார். மேலும் அவளுக்குள் இருக்கும் அவருடைய ஜனங்களை வெளியே வந்து "காலத்திற்கு ஏற்றப்போதனைகளை" உட்கொள்ள அழைப்புக் கொடுக்கிறார். (நான் என் வாயிலிருந்து உன்னை வாந்திப்பண்ணி போடுவேன்) ஆகவே விடியலின் வெளிச்சத்தில் பாபிலோனின் மேஜைகளின் மேல் உள்ள வாந்திகளும், தேவன் அவருடைய பிள்ளைகளுக்குக் கொடுக்கக்கூடிய ஏற்றக்கால சத்தியங்களும் தெளிவான வித்தியாசத்தோடு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவன் கொடுக்கும் ஆகாரத்தை (ஈடுபலியின் சத்தியம்) உண்பவர்கள் புத்துணர்ச்சி அடைகிறார்கள்.

R3156[col.2 P3]: -

நம்முடைய வேத பகுதியைத் தவறாக புரிந்துக்கொள்ளக்கூடிய அபாயமும் இருக்கிறது. தேவனுடைய ஜனங்களின் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சம்பவங்களும் தேவன் நினைத்தபடியே நடந்து வருகிறது என்று தவறாக போதிக்கிறார்கள். அதாவது தேவன் அவருடைய ஜனங்களின் விருப்பத்தை ஒதுக்கிவிட்டு, இயந்திரங்களைப் போல அவருடைய வேலைகளைச் செய்ய கட்டாயப்படுத்துகிறார் என்று பொருள்படுகிறது. இது மிக தவறானது. தேவனுடைய வார்த்தைகளில் இப்படியாக ஏதும் சொல்லப்படவில்லை. தேவன் மகிழ்ச்சியோடு எல்லாவிதத்திலும் முழு சுயாதீனத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். நம்மை சில வாகனங்களைப் போல சிருஷ்டித்து, அவர் விரும்பிய படி நம்மை அங்கும் இங்கும் இழுத்துச் செல்லக்கூடிய நிலையில் நம்மை சிருஷ்டிக்கவில்லை. இப்படிப்பட்டவர்கள் அவருடைய பிள்ளைகளாக இருக்கமுடியாது. மனிதனை சுயாதீனம் உள்ளவனாக சிருஷ்டித்தார். தேவனை போல, தான் விரும்பியதை செய்யக் கூடியவனாக இருந்தான். நாம் விரும்பியதை செய்வதற்கு எல்லா சூழ்நிலையும் சாதகமாக இல்லாமல் போனாலும், நாம் விரும்பியதை சித்தங்கொள்ள நாம் சுயாதீனம் பெற்றிருக்கிறோம். நம்முடைய ஆண்டவரும் அவருடைய ஜனங்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு செயல்பட்டுக்கொண்டிருப்பதை நாம் முன்னதாகவே பார்த்திருக்கிறோம். இயல்பான மனிதனில் சித்தங்களுக்கு மதிப்பு கொடுக்கும் தேவன் இயேசு கிறிஸ்துவுக்குள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டிகளாக இருப்பவரின் சித்தத்திற்கு தேவன் எவ்வளவு மதிப்புக் கொடுப்பார் ?

17. நாம் அறிவை பெறுவதற்கு அதிகமான கவனம் செலுத்தலாமா?

F319[P1]: -

அறிவில் வளர்ச்சி அடையும் போது பக்தியை விட்டு விலகுவதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு. ஆனால் இந்தச் சிந்தை விநோதமாகவும் தோன்றலாம். நம்முடைய கொள்ளளவு மிக சிறியதாகவும், பக்திவிருத்திக்காக நாம் ஒதுக்கும் நேரங்கள் குறைவானதாகவும் இருக்கிறது. அதாவது நம்முடைய கவனம் ஒரு பக்கமாக இருக்கும் போது மறுபக்கத்தில் குறைவான வளர்ச்சி காணப்படுகிறது. கிறிஸ்தவன் வெறும் தலையாக மட்டுமே அல்லது இருதயமாக மட்டுமே இருப்பதில்லை. "நல்ல சிந்தையில் உள்ள ஆவி", நமக்குள் பரிப்பூரண நிலை அடைய சகல ஆவியின் கனிகளையும் கிருபைகளையும் பிறப்பிப்பதற்கு நம்மை வழிநடத்தும். நம்முடைய நாட்களில் நாம் பூரணப்படவேண்டிய காரியங்கள் அனைத்துமே நமக்கு எதிரான திசையில் உள்ளது. ஒருவர் இப்பகுதியிலும், மற்றவர் மற்ற பகுதியிலும் கிரியை செய்கிறார்கள் வெகு சிலரே எப்படி வேலைகளை செய்யவேண்டும் என்பதை புரிந்துக் கொள்கிறார்கள். புதுசிருஷ்டிகள் "தங்ளுடைய பாதங்களுக்குச் சரியான பாதையை" வகுத்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் ஏதோ ஒரு குணத்தை நம்முடைய வாழ்க்கையில் பயிற்சி பெறுவதற்காக செய்யும் முயற்சிகள், மற்ற காரியங்களில் தேவன் தந்த வாய்ப்புகளையும் உரிமைகளையும் பயன்படுத்தாததினால், அபாயத்தில் விழுந்துவிடுகிறோம்.

R2488[col.1 P6]: -

தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதற்கு கிறிஸ்தவர்கள் பெற்ற மிக பெரிய பாக்கியமாக உள்ளது. ஆயினும், அநேக வேதப் படிப்புகள் விருதாகவே போய்விடுகிறது. வேதத்தில் படிக்கக்கூடியவைகளை அனுதின வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தாமல் விட்டுவிட்டால் நிச்சயமாக அந்தப் படிப்பும் வீணாக போய்விடும். வேதப் படிப்பு தேவனுடைய

சித்தத்தை அறிவதற்கு மட்டும் அல்ல பொறுமையோடும், விடாமுயற்சியோடும் அவருடைய சித்தத்தின் படி செய்பவர்களே அதை பயன்படுத்திக் கொண்டு, இறுதியில் கீரிடத்தை ஜெயிக்க முடியும். தேவனுடைய தெய்வீக திட்டத்தின் அறிவை பெறுவதற்கு தேவனுடைய ஜனங்கள் ஒவ்வொரு வாய்ப்புகளை - பலிகளை செலுத்தியாவது - பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஆனால் தேவனுடைய பிள்ளைகள் மற்றவர்களின் பலிகளினால் பயன் அடைவதை விட்டுவிட்டு தங்களுடைய சொந்த சௌகரியங்களையும் வசதிகளையும் பலிசெலுத்துவதில் கவனமாக இருப்பார்கள். மற்றவர்களின் சிரமம் அல்லது பிரயாசம் அல்லது பொருளாதாரத்தை மட்டுமே நம்பிப் பெறக்கூடிய வேதப் படிப்புகள் தேவனுடைய ஐசுவரியமுள்ள அன்பின் ஆவியை பெறுவதைக் காட்டிலும் சுயநலத்திற்கு அடையாளமாக காணப்படுகிறது.

18. அன்புக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பு என்ன?

1கொரி13:2"நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை"

R3150[col.1 P5,6]: -

அன்பின் கிரியைகளை விவரிப்பதற்குமுன் அதன் முக்கியத்துவத்தையும், மேலான வரங்களை அதிகமாக பெற்றிருந்தாலும், அன்பு நம்மில் இராவிட்டால், கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக இருப்பதற்கான ஆதாரத்தை இழந்தவர்களாக இருப்போம் என்பதையும் அப்போஸ்தலர் முன்னறிவிக்கிறார். அன்பு இராவிட்டால் தேவனுடைய வார்த்தைகளுக்கு எந்த சம்பந்தமும், தொடர்பு இல்லாதவர்களாக சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற **கை தாளம் போலவும் இருப்போம். நாம் சுவிசேஷத்தை சரளமாக பேசினாலும், கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக** இருப்பதற்கான ஆதாரத்தை நாம் பெறுவதில்லை என்று அப்போஸ்தலர் உறுதியளிக்கிறார். அன்பின் ஆவியை பெறாமல், தேவனுடைய அன்பான குமாரனின் சுவிசேஷத்தை பற்றி வல்லமையோடும், அதிகாரத்தோடும் பேசுவதற்கு யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. அருமையான கட்டுரைகளை உரைக்கும் அநேக மேடைப் பேச்சாளர்களை நாம் கண்டிருக்கிறோம். சத்தியத்திற்கேற்ற அன்பினால் அவர்கள் பேசாவிட்டால், அவர்களின் பேச்சுக்கள் விருதாவாகவும், உணர்வற்றதாகவும் காணப்படுகிறது.

வரங்களில், தீர்க்கதரிசன வரமே சிறந்தது என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். அதில் சகல இரகசியங்களை அறியக்கூடிய அறிவைப் பற்றியும் பேசுகிறார். மேலும் ஒரு கிறிஸ்தவனுக்கு மிக அவசியமாக தேவைப்படுகிற விசுவாசத்தைப் பற்றியும் பேசுகிறார். இவைகளை முழுமையான அளவில் பெற்றிருந்தாலும், அன்பிராவிட்டால் எந்தப் பயனுமில்லை. புது சிருஷ்டியாக வளர்ச்சி அடைவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. ஏனெனில், புது சிருஷ்டி ஜெநிப்பிக்கப்படுவதற்கு அன்பே மிக அவசியமானது. எவ்வளவு அற்புதமான பரிட்சையாக இருக்கிறது ? நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையில் பயன்படுத்த முயற்சிப்போம். தேவன் எதிர்ப்பார்க்கும் காரியங்களில் நாம் எப்படியாக இருந்தாலும் சரி, நாம் பெற்ற அறிவை காட்டிலும் நாம் அவர் மேல் வைக்கும் அன்பினாலும் சகோதரர் மேல் வைத்திருக்கும் அன்பினாலும், பொதுவாக அனைவரின் மேல் வைக்கும் அன்பினாலும், நம்முடைய எதிராளிகள் மேல் வைக்கும் அன்பினாலும் அளக்கப்படுகிறோம். தேவனுடைய அன்பினால் ஜெநிப்பிக்கப்படாமல், தேவனுடைய ஆழமான காரியங்களைக் குறித்த இரகசியங்களை ஒருவரும் அறிந்துக்கொள்ளமுடியாது என்பதை நாம் முதலில் புரிந்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் தேவனுடைய ஆவியின்றி தேவனுக்குரியவைகளை ஒருவன் அறிய முடியாது. தகுதியை இழந்தால் அந்த அறிவை பெறுவதற்கான ஆவியை முதலில் இழந்துவிடுவார். ஆகவே நாம் அன்பிற்கு முதல் இடம் கொடுத்து தேவன் நம்மை அங்கீகரிப்பதற்கும், நாம் அவரை நெருங்குவதற்கும் அன்பின் பரிட்சைகளையே பிரதானமாக நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

11பேது 1:8"இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது"

E238 [P2] through E239 [P2]:

மேலும் நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால், இப்போது நடக்கும் காரியங்களைக் குறித்தும் "இனி வரும் காரியங்களை" குறித்தும் அறியாதவர்களாக இருக்க வாய்ப்பில்லை என்று தேவனுடைய வார்த்தைகளின் வழியாக

பரிசுத்த ஆவி நமக்கு சாட்சி அளிக்கிறது. ஏனெனில் நாம் அவருடைய வார்த்தைகளினால் போதிக்கப்பட்டு பிரகாசிக்கப்படுகிறோம். நாம் "கிருபையில் வளர்ச்சி" அடைந்துக்கொண்டு பூரணமான வளர்ச்சி அடைவதற்கு பலமான ஆகாரத்தை உண்பதற்கு வாஞ்சையோடு இருக்கிறோம். (1பேது 2:2, எபி 5:13,14) ஆவியின் கனிகளில் வளர்ச்சி அடையும் பட்சத்தில் நாம் தேவனோடும், ஆண்டவராம் இயேசுவோடும் நெருங்க முடிவதால், அவர்கள் தங்களுடைய திட்டங்களைத் குறித்தும் குணங்களைக் குறித்தும் தெளிவாக நமக்கு அறிவிக்க வாய்ப்புகள் அதிகரிக்கும்.

இப்படிப்பட்ட வளர்ச்சியை பற்றி குறிப்பிடும் போது " இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.

இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" 11பேது 1:5-11 என்று பேதுரு கூறுகிறார். (யோவான் 16:12,15 வசனங்களோடு ஒப்பிட்டு பார்க்கவும்)

கிறிஸ்துவுக்குள்ளாக நாம் புது சிருஷ்டிகளாக வளர்ச்சி அடைகிறோமா ? என்ற சாட்சியைப் பெற்றிருக்கிறோமா ? என்று ஒவ்வொருவரும் தனக்குள்ளாக கேட்டு கொள்ளவேண்டும். மேலும் வேதத்தில் குறிப்பிட்டிருக்கும் ஆவியின் கனிகள் நமக்குள் வளர்ச்சி அடைகிறதா ? என்று நாம் நம்மையே கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் அன்பில் வளர்ச்சி அடைவதும் மற்ற அனைத்து ஆவியின் கனிகளில் வளர்ச்சி அடைவதும், அபாரமான அறிவின் வளர்ச்சியை சார்ந்ததே என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் பெறக்கூடிய ஒவ்வொரு படியான அறிவும், அதற்கு ஏற்ற பொறுப்புகளையும், கீழ்ப்படிதலையும் வருவிக்கும். மேலும் ஒவ்வொரு கீழ்ப்படிதலின் படியும், அறிவின் அடுத்தபடிக்கு நம்மை வழிநடத்தும். நாம் அன்பிலும், மற்ற ஆவியின் கனிகளின் வளர்ச்சி அடையக்கூடிய காரியங்கள் நம்முடைய அறிவின் வளர்ச்சியின் அடிப்படையையே சார்ந்துள்ளது என்று நாம் மறந்து விடக்கூடாது. அதேபோல் நம்முடைய அறிவின் வளர்ச்சியும், நம்முடைய ஆவியின் கனியின் வளர்ச்சியையே சார்ந்துள்ளது. நாம் அடி எடுத்து வைக்கும் அறிவின் ஒவ்வொரு படிகளும், அதற்கு ஏற்ற கீழ்ப்படிதலும், பொறுப்புகளையும் நமக்குள் வருவிக்கும். ஒவ்வொரு கீழ்ப்படிதலின் படியும், மேலும் அறிவை பெறக்கூடிய அடுத்தபடிக்கு நம்மை வழிநடத்தும். இப்படியாக, கிறிஸ்துவின் பள்ளியில் தேவனால் கற்பிக்கப்படுபவர்கள், ஆவியின் சாட்சியை முழுமையாக உணர்ந்து கொள்வார்கள். அறிவும், கிருபையும் உள்ள ஆவியின் வளர்ச்சிக்கு நாம் இப்படிப்பட்ட சாட்சிப் பெற்றால், மகிழ்ந்து களிகூறலாம். மேலும், அறிவிலும், கிருபையிலும் பூரணமாக வளர்ச்சி அடைவதற்கு தெய்வீக வழிநடத்துதல் முழுமையாக கிடைக்கும் வரையில் அதே பாதையில் தொடர்ந்து பயணிக்க வேண்டும்.

R2649[col.2 P1,2]:

அறிவு மிகவும் விலையுயர்ந்தது, ஆனால் தற்செயலாக நமக்குள் வரும் இந்த அறிவு பொறுமையை ஏற்படுத்தி, நம்மை வீணாக்கி தேவனுடைய ஆவியாகிய அன்பு, சாந்தம், பணிவு, பரிவு போன்ற குணங்களுக்கு முரண்பாடாக நம்மை வழி நடத்திவிடுகிறது. நாம் பெற்ற அறிவு ஒலி கொடுக்கும் மணிகளை போலிருக்கிறது. ஆனால் தேவனுடைய பார்வையில் எந்த விதமான பிரயோஜனமும் இல்லை. நாம் பெற்ற அறிவு நியாயமான தேவைக்கு பயன்படுத்தும்போது "தேவனுடைய அன்பை" முழுமையாக உணரமுடியும். மேலும் அவருடைய குணலட்சனங்களை பெற்றுக்கொள்வதற்காக அவர் தந்த ஞானத்தைப் பற்றியும் உணர்ந்துக் கொள்ள முடிகிறது. இப்படியாக நம்மால் முடிந்தவரைக்கும் நம்முடைய பரலோக தந்தையை போலவும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் சாயலை

தரித்துக் கொண்டு, நேச குமாரனின் தற்சொரூபங்களாக மாற முயற்சிக்கவேண்டும். "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து;அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" எபே 3:17-19 என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

சந்தேகத்திற்கு இடமின்றி, படித்து புரிந்துக்கொண்டு அதை கைக் கொண்டு, வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தக்கூடிய அடிப்படையான கோட்பாடு அன்பு மட்டுமே. இந்த மறுப்பதிப்புகளை வாசிக்கும் அநேகர் "தேவனுடைய அன்பின்" பங்காளிகளாக மாறிவிட்டார்கள் என்று நாம் நம்புகிறோம். மேலும் இதையே தேடக்கூடியவர்கள், அதில் பூரணப்பட்டு, வேரூன்றி ஸ்திரப்படுவார்கள். இதன் வழியாக மட்டுமே, கிருபையிலும் அறிவிலும் நித்தியமான வளர்ச்சியை அடையமுடியும் என்பதை அப்போஸ்தலர் உறுதிப்படுத்துகிறார். கிறிஸ்துவின் பள்ளியில் நுழைந்துவிட்டு, பூரணப்படுதலை நோக்கி வளர்ச்சி அடைவதற்கு மறுத்தால் அது வரைக்கும், அவர்கள் பெற்ற தேவனுடைய திட்டத்தைப் பற்றிய அறிவு வெகு சீக்கிரத்திலோ, தாமதமாகவோ அவர்களை விட்டு நழுவிவிடும். ஆனால் சரியான பாதையில் முன்னேறிச் செல்வோர், தெய்வீக திட்டத்தின் ஆழத்தையும் அகலத்தையும் அறிந்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் அவர்களுக்குமுன் திறக்கப்படும். அவர்கள் அறிவில் அடையக்கூடிய வளர்ச்சியின் அளவில் அவர்களுக்குள் இருக்கும் அன்பும் வளரும்.

R3215[col.1 P6 through col.2 P1]:

எப்படிப்பட்ட கிருபையில் வளர்ச்சி அடையவேண்டும் ? தேவனுடைய சிந்தையோடு இசைவாக அவருடைய ஐக்கியத்திலும் நெருக்கத்திலும் அவருடைய கிருபையில் வளர்ச்சி அடைவதாகும். முதலாவது இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால் கிடைத்த இரட்சிப்பின் மேல் வைத்திருக்கும் விசுவாசத்தை நன்கு புரிந்துக்கொண்டவர்களாகவும், அதை பற்றிய அறிவை பெற்றுக்கொண்டு, இரட்சகராம் இயேசுவின் மூலமாக பிதா கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களை நம்பி, சார்ந்து, நம்முடைய அனுதின ஜெபத்திலும், இயேசுவுக்கு முழுமையாக கீழ்ப்படிந்து, தேவனுடைய சித்தத்தை நோக்கி அவரோடு நெருங்கிய தொடர்பு கொள்ளக்கூடியவர்களாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஸ்திரமான மனநிலையும், சிந்தையும் நமக்குள் இருந்தால் நம்முடைய தேவனுக்கு ஏற்றபடியும், அவர் விரும்பியபடியும் அதிகமாக ஆவிக்குரிய கனியின் வளர்ச்சி மிக சீராக நம்முடைய வாழ்கையில் காணப்படும். "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" (யோவ 14:23) என்று நம்முடைய ஆண்டவரின் ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேறும்படியாக தெய்வீக அங்கீகரிப்பும், இரக்கமும் நாளுக்கு நாள் நம்முடைய வாழ்க்கையில் அதிகரித்து கொண்டே இருக்கும். "இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். " (யோவ 14:23)

மொத்தத்தில், விசுவாசத்தினால் தேவனோடு நடந்து, நாளுக்கு நாள் கீழ்ப்படிதலிலும், அன்பிலும் வளரக்கூடியவர்களை பற்றி நன்கு புரிந்துக்கொண்டு, அவ்வழியில் தாங்களும் நடக்க முழுமையான ஆசீர்வாதங்களைப் பெறுவதே கிருபையில் வளர்ச்சி அடைவதாகும்.

R2198[col.1 P5]:

நாம் பெற்ற அறிவை முழுமையாக தேவனிடம் அர்ப்பணிக்காவிட்டாலும், தேவன் கொடுத்த எல்லாவிதமான சுதந்திரத்தையும் வாய்ப்புகளையும் அவருக்காக செலவழிக்காமல் இருந்தாலும், நிச்சயமாக நாம் பேராபத்தில் சிக்கிக்கொள்வோம். ஏனெனில் தேவனிடத்தில் முழுமையாக அர்ப்பணிக்காத பட்சத்தில், நமக்குள் பெருமை வளர்ந்து, சர்வாதிகாரம் தலைதூக்கி, இறுமாப்படைந்து சுய திருப்தி அடைவோம் என்று அப்போஸ்தலர் நம்மை எச்சரிக்கிறார். ஆனால் நாம் பெற்ற அறிவு தேவனுடைய அன்போடு இசைந்திருந்தால், அவருடைய பணிக்கு நம்மை முழுமையாக அர்ப்பணிக்க செய்து நம்மை நன்மைக்கு ஏதுவாக வழிநடத்தும். இவ்வாறாக வழிநடத்தப்பட்டால் நமக்குள் பெருமை கொள்ளாதபடிக்கு தேவனுடைய அன்பும் சுயக்கட்டுப்பாடும் நமக்குள் அதிகரிக்கும் . அன்பு

நம்முடைய நற்குணங்களை நமக்குள் வளர்ச்சி அடையச் செய்யும். மேலும் தேவனோடு இசைந்திருப்போருக்கும் நன்மைக்கு ஏதுவாகவும் வழிநடத்தும்.

19. நீதிமானாக்கப்பட்ட விசுவாசத்தை முந்திக்கொள்ளும் அறிவுக்கும், நம்முடைய விசுவாசத்திற்கு சேர்க்கப்படக்கூடிய அறிவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

11பேது 1:5"இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்"

R2037- "ஆர்வமுள்ள கேள்விகள்"

கேள்வி - 11பேது 1:5ம் வசனத்தில் "கினோசிஸ்" என்ற ஆங்கில வார்த்தை அறிவு" என்பதற்கு "ஆழமாக ஆராய்ச்சி" என்று பொருள்படுவதாக சிலர் கூறுகின்றார்கள். நம்முடைய விசுவாசத்தை இப்படிப்பட்ட ஆழமான ஆராய்ச்சிகளின் வழியாக உறுதிப்படுத்தவேண்டியது மிக அவசியம் என்று நம்முடைய அப்போஸ்தலர் வலியுறுத்துகிறாரா ?

பதில் - விசுவாசத்தை பலப்படுத்துவதற்கு இப்படிப்பட்ட ஆழமான ஆய்வுகள் தேவையில்லை என்பதை - 1கொரி 8 :1, 11கொரி 4 :6, எபே 3:19, 11பேது 3:18 வசனங்கள் குறிப்பிடுகின்றன.

"உங்களுடைய விசுவாசத்தை இப்படிப்பட்ட ஆழமான ஆராய்ச்சியின் மூலம் வளர்த்துகொள்ளவேண்டும் என்பதை அப்போஸ்தலர் பொருள்படுத்தாமல், விசுவாசத்திற்கு தேவையான அறிவை பெற்று, அதற்கேற்ற நற்கிரியைகளை நடப்பிக்கும் போது அந்த விசுவாசம் ஸ்திரப்படும். மேலும் எதிராளி நம்மை தாக்கும்போது, நாம் விசுவாசத்தினால் நடப்பிக்கக்கூடிய நற்கிரியைகள் நமக்குள் சகிப்பு தன்மைகளும், பொறுமையும் அதிகரித்து, இரக்கமுள்ள குணலட்சனங்கள் வெளிப்படும். மேலும் "உங்கள் ஞானத்தோடு தைரியத்தையும் கூட்டுங்கள்" என்று சொல்லும் போது - நாம் விசுவாசத்தில் உறுதியோடிருந்து, ஆவிக்குரிய வழிநடத்துதலின் கீழ் நம்முடைய குணங்களில் வளர்ச்சி அடையும்போது இன்னும் அதிகமான அளவில் அறிவை பெற்றுகொள்வார்கள் என்று அப்போஸ்தலர் இங்கு குறிப்பிட்டிருக்கவேண்டும். (11பேது 3:18) விசுவாசமுள்ளவர்கள் அறிவிலும் கிருபையிலும் வளர்ச்சி அடைந்து, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதின் வழியாக தேவனால் இவ்விதமாக கொடுக்கப்பட்டவைகளையும், கிறிஸ்துவின் பள்ளியில் நாம் பெறும் அனுபவத்தின் மூலம் நாம் அடையும் அறிவை அடையவும் தேவனுடைய ஆழமான காரியங்களை அறிந்துக்கொள்ள முடிகிறது. இப்படிப்பட்ட அறிவு அடிப்படை சத்தியத்தின் மூலமாக பெறப்படுவதில்லை, ஆனால் உணர்வுள்ள உள்ளத்தோடு தேவனோடு, இசைந்திருப்பதினால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். "அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" (பிலி 3:8) என்று பவுல் கூறுகிறார்.

உண்மையும், உத்தமும் நேர்மையுமான இருதயத்தில் பெறப்படும் இந்த அறிவு "சுய -கட்டுப்பாடு" என்ற முக்கியமான குணத்தை நமக்குள் வளரசெய்யும். இந்தக் குணம் உடையவர்கள் தன்னில் தான் சுத்திகரிக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. தன்னை தான் கட்டுப்படுத்துபவன் தனக்குள் இருக்கும் புளிப்பை அதிகதிகமாக வெளியேற்றுவான். ஏனெனில் தன்னில் சுய-கட்டுப்பாட்டை வளர்த்து கொள்பவர்கள், பொறுமையில் வளர்ச்சி அடைகிறார்கள். ஏனெனில் சுயக்கட்டுபாடு உள்ளவர்கள் மற்றவர்களிடம் பொறுமையாகவும், பரிவுடனும் நடந்து கொள்ளவும், பயிற்சி பெறுகிறார்கள். இப்படியாக பொறுமையில் வளர்ச்சி அடைபவர்கள் பரிவு அல்லது இரக்கத்தில் வளாச்சி அடைய வழிநடத்தபடுகிறார்கள். இந்நிலையில் தேவனுடைய அன்பு இருதயத்தை நிரப்பி, நம்முடைய சகல கிரியைகளிலும், வார்த்தைகளிலும் அதை வெளிப்படுத்தும். இப்படிப்பட்ட நிலை சகோதர அன்பை நமக்குள் வளர்க்கும். தேவனால் நீதியிலும், சத்தியத்திலும் நடக்கும் ஒவ்வொரு சகோதரர்களையும் அன்பு செலுத்த வழிவகுக்கும். இப்படிப்பட்ட சகோதர அன்பு, ஆவியின் கனிகள் அனைத்திலும் பூரணமடைவார்கள். விசேஷமாக தேவன் பேரில் வைக்கும் ஆழமான அன்பு, உண்மையும் பரிசுத்தமானதும், தீமை குறித்து சிந்திக்காமல், சுயபொறுமையைத் தேடாமல், மற்றவர்களை குற்றப்படுத்தாமல் சத்தியத்தில் களிக்கூர்ந்து, இன்றைய கிறிஸ்துவ வாழ்க்கையில் உச்சக்கட்டத்தை அடைந்து, சகல நற்குணங்களிலும் தேறி, முதல் உயிர்த்தெழுதலின்போது அழியாமையைப் பெற்றுக்கொள்ளதக்கதாக பூரணப்படுவார்கள்.

20. அறிவின் வழியாக "கிருபையும் சமாதானமும்" எவ்வாறாக பெருகும்?

11பேது1:2,3"தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி"

R2136-"தேவனுடைய அறிவு - அதன் மதிப்பு"[first 6P's]:

இந்த வார்த்தைகளுக்கு தொடர்பாக நமக்குள் எழும் முதல் கேள்வி என்னவெனில் - "இவைகள் யாரிடம் விண்ணப்பிக்கப்பட்டது ? இந்தக்கட்டளைகள் பாவிகளுக்கு கொடுக்கப்பட்டதா ? பாவிகள் இப்படிப்பட்ட வழியில் மட்டுமே தேவனை அணுக முடியுமா ? இல்லை. இந்த வசனத்திற்கு முன்னதாக எழுதப்பட்ட வசனத்தின்படி, இயேசுவின் இரத்தத்தின்மேல் உள்ள விசுவாசத்தின் மூலம் நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்தக் கட்டளைகள் கொடுக்கப்படுகிறது.

கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாக வேண்டும் என்பதை இது காட்டுகிறது. நீதிமானாக்கப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, முழுமையாக தங்களை அர்ப்பணித்த விசுவாசிகளாக இருந்தாலும் சரி, "இந்த ஆசரிப்புக்கூடாரத்தில்" நாம் தொடர்ந்து வளர்ச்சி அடைவதற்கு விசுவாசத்தோடு முடிவு பரியந்தம் நிலைநின்று "முதலாம் உயிர்த்தெழுதலில்" பங்கடைய வேண்டும். ஒவ்வொரு வருடமும் புதிய ஜீவனுக்குள், புதுப்பிக்கப்பட்டு வளர்ச்சி அடையவேண்டும். ஆனாலும் இந்தக் கருத்து கிறிஸ்துவின் நாமத்தை பேருக்காக பயன்படுத்தக்கூடிய அநேகருடைய அனுபவத்தில் எதிரிடையாகவே தோன்றுகிறது. ஆகவே "நான் முதல் முதலில் ஆண்டவரை அறிந்துகொண்டபோது இருந்த ஆனந்த பாக்கியம் எங்கே ? ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் இயேசுவின் பார்வையும் அவருடைய வார்த்தைகளும் எங்கே ?" என்று பாடல் வரிகளை அநேகர் பாடுகிறார்கள்.

கிருபை மற்றும் சமாதானமும் மாறி மாறி , கூட்டப்பட்டும் கழிக்கப்பட்டும் வருகிறது என்ற பிரபலமான சிந்தனைகள் கிறிஸ்துவ வகுப்பின் மத்தியில் பரவி உள்ளது. முதலில் ஆசீர்வாதத்தைப் பெறுகிறார்கள். அதற்குப்பின் அதை தொலைத்து விடுகிறார்கள். மீண்டுமாக அதை பெறுகிறார்கள். அதற்குப்பின் அதை தொலைத்து விடுகிறார்கள். இப்படியாக, அவர்களின் வாழ்க்கையில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டுவருகிறது. இப்படிப்பட்ட நிலையில் "கிருபையும் சமாதானமும் உங்களுக்குள் பெருகக்கடவது" என்று அப்போஸ்தலன் குறிப்பிட்ட வார்த்தைகளை சிலர் மட்டுமே புரிந்துகொள்ள முடிகிறது. மற்றவர்கள் இதை புரிந்துகொள்ளாமல், தவறாக நடைமுறைப் படுத்துவதற்கு நியாயமான காரணங்கள் உண்டு. அநேக கிறிஸ்தவர்கள் அடிப்படையாக தங்களுடைய இரட்சகர் மேல் கொண்ட விசுவாசத்தினால் கண்டடைந்த சமாதானத்தையும், கிருபையும், தக்கவைத்துகொள்வதற்கு தேவையான அறிவில் குறைவுள்ளவர்களாக இருப்பதே இதற்குக் காரணமாக இருக்கிறது. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுவதை போலிருக்கிறார்கள். (1கொரி 3:1) "காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்.பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானோந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும் " - (எபி 5:12-14)

ஒரு பாடத்தில் உள்ள ஒரு தவறு, அநேக பாடங்களில் அநேக தவறுகளுக்கு வழிநடத்திவிடும். இந்தக் காரியத்திலும் இவ்வாறாகவே நடந்துவருகிறது. விசுவாசிகள் மட்டுமே தப்பித்துகொண்டு வீழ்ச்சிக்கு தண்டனையாக நித்திய ஆக்கினை என்ற அடிப்படை போதனை அநேக தேவனுடைய ஜனங்களின் முயற்சிகளை தவறாக வழிநடத்தப்பட்டு, நியாயத்தீர்ப்புகள் உருகுலைந்துவிடுகிறது. முக்கியமாக ஒரு தனிப்பட்ட நபர் தன்னை தான் நித்திய ஆக்கினையிலிருந்து விடுவித்து கொள்ள முதலில் சிந்திப்பார், அதற்கு பின் இயற்கையாகவே தன்னால் முடிந்தவரைக்கும் மற்றவர்களை தப்புவிக்க உதவி செய்வார். இந்த நோக்கத்தையே மையமாக கொண்டு, "பாவிகளை இரட்சித்து", "கிறிஸ்துவுக்கு குழந்தைகள்" என்ற நிலையில் கொண்டுவருவதற்கு முதன்மையாக கவனம் செலுத்தவது ஆச்சரியம் அல்லவே. ஆனால் அவர்கள் குழந்தைகளாக மாறினபின் தேவனுடைய அறிவில்

வளர்ச்சி அடைந்து கிறிஸ்துவுக்குள் பூரணபுருஷராக மாறுவதற்கான காரியங்களுக்கு மிக குறைவான கவனம் செலுத்தப்படுகிறது. குழந்தைகளாகவே தொடர்ந்து பாலான ஆகாரத்தை கொண்டு போஷிப்பிக்கப்பட்டு, பலமான ஆகாரத்தை உண்ணுவதற்கு பழக்கம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். ஏதோ ஒரு சமயத்தில் அவர்கள் பலமான ஆகாரத்தை புசிக்க முயற்சிக்கும் போது அவைகளினால் பலப்படுவதைக் காட்டிலும், அவைகள் தொண்டையில் சிக்கி திணறுகிறார்கள்.

ஆகவே விசுவாசிகள் நடக்கவேண்டிய சரியான வழி முறைகளை அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். அதில் அவர்கள் படிப்படியாக வளர்ச்சி அடைந்து கிறிஸ்துவ வளர்ச்சியில் பூரணப்பட்டு, அவர்கள் பெற்ற கிருபையையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளலாம். இதன் துவக்கம் சரியானதாக இருந்தாலும் சரி, "வேதத்தின் வார்த்தையினால் "உண்மையாக ஜெநிப்பிக்கப்பட்டு, "ஒருதரம் பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட மகா பரிசுத்தமான விசுவாசத்தில்" வளருவதே அத்தியாவசியமாக இருக்கிறது. உலகபிரகாரமாக சோதித்து அறியக்கூடிய அறிவினால் அடையக்கூடிய விசுவாசம் அல்ல. இவர்கள் விசுவாசம் "மகா பரிசுத்தத்தை" விட்டு வெகு தூரத்தில் உள்ளது. இப்படிப்பட்ட விசுவாசம் தங்களுடைய சொந்த தீர்ப்பினால் ஏற்படக்கூடியதாக இருக்கிறது. எது சத்தியம் என்றும் எது தவறு என்றும், மோசேயின் சாட்சி மற்றும் தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், ஆண்டவராம் இயேசுவின் சாட்சிகளில் என்ன தவறுகள் உண்டு என்று அலசி ஆராய்ந்தபின் வரும் விசுவாசமாகும். இவர்களின் விசுவாசம் வீழ்ச்சியையும், ஈடுபலியையும் அதற்கு தேவையான சகலத்தையும் ஒத்துகொள்வதில்லை, இதன் விளைவாக ஈடுபலியை அடிப்படையாக கொண்டிருக்கும் உயிர்த்தெழுதலை முற்றிலுமாக மறுத்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட விசுவாசம் "மகா பரிசுத்தமான விசுவாசம் அல்ல. இப்படிப்பட்ட காரியங்களின் மேல் விசுவாசம் உள்ளவர்கள் அப்போஸ்தலரால் குறிப்பிடப்பட்டவர்கள் அல்ல. அவர்களிடம் கிருபையும், சமாதானமும் என்றுமே பெருகுவதில்லை. ஆயினும், நம்முடைய வாசகர்கள் மட்டுமே ஆவியோடும், புரிந்துகொள்ளுதலோடும், கீழே சொல்லப்படும் பாடல் வரிகளை முழுமனதோடு பாடமுடியும்.

"என்னுடைய நம்பிக்கை இயேசுவின் இரத்தம் மற்றும் அவருடைய நீதி மட்டுமே, இயேசுவின் நாமத்தை தவிர நான் வேறு எதன் மேலும் சாயமாட்டேன். கிறிஸ்து என்னும் கன்மலையின்மேல் நான் நிற்பேன்,மற்ற எல்லா இடங்களும் புதை மணலாம்."

நம்முடைய ஆண்டவரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நீதியின் மேல் விசுவாம் வைப்பதே நாம் கட்டப்பட வேண்டிய உண்மையான அஸ்திபாரமாகும். பாவத்திற்கான அவருடைய பலி ஆதாமுக்கும் அவருடைய சந்ததிக்கும் ஒரே முறை கொடுக்கப்பட்டதும், முழுமையான ஈடுபலியாகவும், இருக்கிறது. இதனால் காலப்போக்கில் அவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் அறிவை பெற்று, புது உடன்படிக்கையின் கீழ் சுத்திகரிக்கப்பட்டு, கிருபையின் அடிப்படையில் நித்திய ஜீவனை பெறுவார்கள் என்ற உண்மையான விசுவாசம் வேண்டும். இப்படிப்பட்ட அஸ்திபாரத்தில் கட்டப்பட்டவர்களுக்குள் கிருபையும் சமாதானமும் பெருகும்.

A346:

இந்தக் காரியங்களை பற்றிய அறிவும் நெருங்கி இருக்கும் சகல ஆதாரங்களும், உடன்படிக்கை செய்த தேவனுடைய பிள்ளைகளிடம், விசேஷமாக திவ்விய சுபாவத்தை பரிசாக பெற விரும்பும் அனைவரையும் அதிகமாக ஊக்குவிப்பதாக இருக்கும். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய தலையை உயர்த்தி, மகிழ்ந்து, தங்களுடைய மீட்பு சமீபமாக இருப்பதை அறிந்து, சகல பாரமான தடைகளையும் தள்ளி விட்டு, தாங்கள் துவங்கின ஓட்டத்தை பொறுமையோடே ஓடவேண்டும். சுயத்திலிருந்து நம்முடைய கவனத்தை நகர்த்திவிட்டு, இப்படிப்பட்ட பலவீனங்கள் அனைத்தும் இயேசுவின் ஈடுபலியினால் மூடப்பட்டது, என்பதை உணர்ந்து, நம்முடைய பலிகளும், சுய வெறுப்பும், நம்முடைய இரட்சகரும் ஆண்டவராம் இயேசுவால் மட்டுமே தேவனால் அங்கீகரிக்கப்பட்டது என்று அறிந்துகொள்ளவேண்டும். மேலும், அவருடைய வார்த்தைகளில் சொல்லியிருக்கிறபடி நாம் "ஜெயிப்பவர்களாக" வெற்றிபெற போதுமானது. இது அவருடைய குணங்களிலிருந்தும், தெய்வீக திட்டத்திலும் நாம் பங்கு பெறுவதற்கான விதிமுறைகளினால் பெறும் அறிவிலிருந்து கிடைக்கக்கூடிய பெலனாகும். ஆகவே "தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது

நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (11பேது 1:2-4) என்று பேதுரு குறிப்பிடுகிறார்.

ஆனால் பரலோக பரிசை அடைய ஓடும் ஒவ்வொருவருக்கும் தேவன் வாக்களித்த இந்த அறிவையும், இந்தப் பெலத்தையும் கொடுக்குமுன் அவர்களின் உடன்படிக்கையில் உண்மையாக நிலைநிற்கிறார்களா ? என்பதை நிச்சயமாக சோதிப்பார். உடன்படிக்கையின் போது நீங்கள் உங்கள் முழு நேரத்தையும், முழு திறமைகளையும், தேவனுக்கு அர்ப்பணித்தீர்கள். இப்போது கேள்வி என்னவெனில் - தேவனுக்கென்று நீங்கள் இப்போது எவ்வளவு கொடுத்திருக்கிறீர்கள் ? உடன்படிக்கையின் போது நீங்கள் வாக்களித்தபடி உங்களுடையதெல்லாம் மனப்பூர்வமாக கொடுக்க முன்வந்திருக்கிறீர்களா ? மற்றவர்கள் தேவனுடைய திட்டங்களை ஏற்றுக்கொள்ளவும் அவருடைய மேன்மையான வேலைகளை செய்வதற்கும் உங்களுடைய விருப்பங்களையும், திட்டங்கள் அனைத்தையும் விட்டுவிட மனதாய் இருக்கிறீர்களா ? எல்லா விதமான சமுதாய கட்டுகளிலிருந்தும் பூமிக்குரிய சிநேகிதத்தை இழந்தாலும் இவைகளை செய்யமுன்வருகிறீர்களா ? சுயத்தை வெறுத்தாலும் செய்த உடன்படிக்கைக்கு உண்மையாக இருக்க விரும்புகிறீர்களா ? நீங்கள் உங்களை முழுமையாக அர்ப்பணிக்கவில்லையா ? அல்லது பாதியை மட்டும் அர்ப்பணிப்பதற்கு நீங்கள் எண்ணங்கொண்டிருந்தீர்களானால், உங்கள் சோதனையின் நாட்களில் விசுவாசத்தின் பரிட்சைகளுக்கு நிலைநிற்பதற்காக நீங்கள் தேவனுடைய வார்த்தைகளையும், புதைந்திருக்கும் பொக்கிஷங்களையும் ஆராய்வது மிகவும் கசப்பான வேலையாக தோன்றும்.

21. அறிவுக்கும் ஜெபத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

யோவா 15:7"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்"

F679 through F680:

"ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு" (சங் 16 :11) என்று தீர்க்கதரிசி அறிவிக்கிறார். ஒரு மனுஜன் ஜெபிக்கும்போது தேவனுடைய பிரசன்னத்தில் எல்லையில்லா மகிழ்ச்சி அடைவதற்கும், தெய்வீக ஆசீர்வாதங்களை பெறுவதற்கும் ஆயத்தப்படுகிறான். மேலும், தேவனுடைய ஜனங்கள் தைரியமாக அவருடைய கிருபாசனத்திற்குச் செல்ல இந்த ஜெபம் வழிநடத்துகிறது. இந்த வாய்ப்பு அவருடைய திட்டங்களையோ, தெய்வீக சித்தங்களையோ மாற்றுவதற்காக கொடுக்கப்படவில்லை. ஆகவே சரியான வழிமுறையில் ஜெபிப்பதற்கு தேவன் நமக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். அதில் நம்முடைய சொந்த விருப்பம் அல்லது தெய்வீக சித்தத்திற்கு விரோதமாக ஏறெடுக்கப்படும் எந்தக் காரியமும் தேவனால் கேட்கப்படுவதில்லை. ஆகையால், நம்முடைய விண்ணப்பங்கள் அனைத்தும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாகவே இருக்கவேண்டும். "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" (யாக் 4:3) என்று யாக்கோபு கூறுகிறார்.

இதே காரியத்தை நம்முடைய ஆண்டவர் "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை;என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே

போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்" (மத் 6:25-34) என்று கூறுகிறார். மீண்டும் "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்" (யோவ 15:7) என்கிறார். இங்கு சொல்லப்படும் விதிமுறைகள் அனைத்தும் முக்கியமானது -

1. ஜெபிக்கக்கூடியவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் ஈடுபலியின் மேல் விசுவாசம் வைத்து, அதை ஏற்றுக்கொண்டு அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கவேண்டும். மேலும் அவர்களுடைய சித்தங்களையும், ஊழியங்களையும் தேவனுக்கென்று அர்ப்பணித்து, புது சிருஷ்டிகளாக கிறிஸ்துவுக்குள்ளாக தொடர்ந்து ஜீவித்து இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் ஜெபிக்கக்கூடிய சிலாக்கியத்தைப் பெற்று கொள்ளலாம்.

2. அடுத்து தேவனுடைய வார்த்தைகளுக்குள் அவர்கள் நிலைத்திருக்கவேண்டும். சத்திய வார்த்தைகளிலும், அதன் கிருபையிலும் பங்கெடுத்து, தேவன் கொடுப்பதற்கு வாஞ்சிக்கும் காரியங்களை அதாவது அவருடைய விருப்பத்திற்கு இசைவாக இருக்கும் விண்ணப்பங்களை ஏறெடுப்பதற்கு ஏற்ற ஞானத்தை பெற்றிருந்தால் மட்டுமே ஜெபங்கள் தேவனால் அங்கீகரிக்கப்படும். இதற்கு இசைவாக இல்லாவிட்டால் புது சிருஷ்டிகளின் ஜெபங்களும் கேட்கப்படாமல் போய்விடும்.

ஆகவே இந்த இரண்டு விதிமுறைகளின் அடிப்படையில் மட்டுமே - தேவனுடைய கிருபாசனத்தண்டைக்கு சென்று நாம் ஜெபிக்க முடியும். குறித்த காலத்தில் அப்படிப்பட்ட ஜெபங்களை தேவன் கேட்பதற்கு வாய்ப்புகள் உண்டு. இவர்கள் மட்டுமே முழுமையான மகிழ்ச்சியை அடைய முடியும்.

வசனங்கள் விவரிப்பதுபோல, தேவனுடைய சமூகத்திற்கு செல்லவும், அவரோடு தொடர்பு கொள்வதற்கும் எடுக்கப்படும் முயற்சியே - ஜெபம். இவர்களை தவிர இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே யார் சேர முடியும் ? (எபி 4:16) பொதுவாக இந்த உலகத்திற்கு இப்படிப்பட்ட சிலாக்கியம் கொடுக்கப்படவில்லை. உண்மையில் வெவ்வேறு புரிந்துக்கொள்ளுதலோடு மில்லியன் கணக்கான ஜனங்கள் தங்களுடைய ஜெபங்களை ஏறெடுக்கிறார்கள். ஆனாலும் தேவன் அவைகளை ஏற்றுகொள்வதில்லை. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (எபி 11:6) உண்மையான தேவனை அடையாளம் கண்டுகொண்டு, அவரை கனப்படுத்தி அவருடைய விருப்பங்களை அறிந்து அதன்படி நடக்கவேண்டும். இப்படிப்பட்ட காரியங்களை கொர்நெலியு தம்முடைய வாழ்க்கையில் கடைபிடித்தார். ஆகவே புறஜாதிகளுக்கு அழைப்பு கொடுப்பதற்கான நிலை தேவனுடைய தெய்வீக திட்டத்தில் வளர்ச்சி அடையும் போது, கொர்நெலியுவின் சகல நற்கிரியைகளுக்கும் பலன் கிடைத்தது. ஆனாலும் அது வரைக்கும் தேவனோடு தொடர்பு கொள்வதற்கான சரியான வழி அங்கு வாய்க்கவில்லை. ஆகவே தேவன் ஏற்ற நேரத்தில் பேதுருவை அவரிடம் அனுப்பி தேவனுடைய புத்திரராகும்படியான வழிமுறைகளையும், சரியான முறையில் தேவனோடு தொடர்புகொள்ளவும் கற்றுக்கொடுத்தார்.

F688[P1]:

பரிசுத்த ஆவியாகிய பரத்திலிருந்து வந்த ஞானமே, அப்போஸ்தலனாகிய பவுலை, புதிய பட்டணத்திற்குள் வழிநடத்தியது. "ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம்" (அப் 16:13)மேலும், மகிழ்ச்சி பெருகும்படியாக, ஒருவருக்காக ஒருவர் ஊக்கமாக ஜெபிக்கையில், தேவனுடைய அன்பும், ஞானத்தையும் அவர்கள் முழுமையாக பெறுகிறார்கள். ஆயினும் தேவனுடைய வார்த்தைகளைக் கற்றுகொள்வதற்கும், ஒவ்வொருவரும் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் வளர்ச்சி அடையவும், அநேக கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது.

தேவனால் ஆசீர்வதிக்கப்படாத எந்த வேத ஆராய்ச்சிகூட்டங்களும் சரியாக துவங்குவதுமில்லை, அதேபோல தேவனுடைய ஆசிர்வாதங்களுக்காகவும், இருதயத்திற்கு ஏற்ற ஆகாரத்திற்காகவும், நன்றி செலுத்தப்படாத எந்தக் கூட்டமும் சரியாக முடிவுபெறுவதும் இல்லை - அவருடைய கிருபையான வார்த்தைகளைப் பெற்றுகொண்டவர்கள் உண்மையான நோக்கத்துடன் அவருடைய சித்தத்தைச் செய்யவேண்டும்.

R3217[col.2 P2,3]:

நாம் பார்க்கக்கூடியதை மிக பெரிய அளவில் உள்ள மாதிரியை நம் அருகில் உள்ள சிறிய அளவில் இப்போது காணலாம். நம்முடைய அறியாமையில் உள்ள காலங்களில் நம்மில் எத்தனையோ பேர், வெவ்வேறு விதமான கட்டுகளுக்கும், கிறிஸ்தவ மண்டலத்தில் உள்ள பிரிவுகளுக்கும், ஜெபித்திருப்போம். இறுதியில் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நாம் ஜெபித்திருக்கிறோமா ? அல்லது நம்முடைய சுய மகிமைக்காகவும், நன்மைக்காகவும் மாத்திரம் ஜெபிக்கிறோமா ? நாம் சரியான முறையில் சரியான நோக்கத்துடன் ஜெபிக்க கற்றுக்கொள்ளுவோம். அதற்கேற்ற நற்கிரியைகள் செய்யும்படியாக, கேட்கிறதற்கு தீவிரமாகவும் பேசுவதற்கு தாமதாகவும் இருந்து தேவனுடைய வார்த்தைகளில் அவர் முன்னதாக நமக்கு கொடுத்திருக்கும் விதிமுறைகளையும், கட்டளைகளையும், பாடங்களையும் கற்றுக்கொள்ள கடவோம். நம்முடைய விருப்பங்களை அவரிடம் தெரிவிக்க சற்று தாமதிப்போம். உண்மையில், கிறிஸ்தவ குணநலட்சணங்களில் வளர்ச்சி அடைய பரலோகத்தின் பிதாவின் வழியையும், அவருடைய சித்தத்தையும் தேடுவோம்.

நம்முடைய அன்றாட வாழ்க்கையிலும் இதே கோட்பாடுகளை நாம் பொருத்தவேண்டும். அநேக பெற்றோர்கள், தங்களுடைய இருதய பாரத்தோடு, மரணபடுக்கையில் இருக்கும் தங்களுடைய குழந்தைகளுக்காக ஜெபித்த ஜெபங்கள் பதில் அளிக்கப்படவில்லை என்று கதறுவதை நாம் கேட்டிருக்கிறோம். சில நேரங்கில் இப்படிப்பட்ட ஜெபங்களும் தேவனால் கேட்கப்படுகிறதா ? இதை குறித்து நாம் என்ன சொல்லுவோம் ? எல்லா காரியங்களும் ஒன்றை போலிராது. ஆனால் தேவனுடைய வார்த்தைகள் சரியான முறையில் செயலாற்றப்பட்டு, இருதயத்தில் சரியான வளர்ச்சி அடைந்து, அவர்களுடைய எல்லா ஜெபங்களும் கேட்கப்படும் அளவுக்கு அவர்களின் ஜெபத்தின் தரம் தேவனுக்கு இசைவாக உயரவேண்டும். அப்போது தேவனுடைய வார்த்தைகள் அவர்களுக்குள் முழுமையாக நிலைத்திருக்கிறது என்று உணரலாம். இவர்கள் தேவனுடைய விருப்பத்திற்கு மாறாக எதையும் கேட்காமல், தெய்வீக சித்தத்தையும் வழிநடத்துதலையும் விசுவாசித்து - "ஆண்டவரே எங்களுடைய சித்தத்தின்படி அல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆக கடவது" என்று ஜெபிப்பார்கள்.

22. அனைத்து விதமான அறிவுக்கும் நமக்கு நன்மையை வருவிக்குமா?

யோவா 17:17"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்"

F137[P2]:

புது சிருஷ்டிகளுக்கான இடத்தை அல்லது நிலையை அடையக்கூடிய சுத்திகரிப்பை முன்னதாகவே தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் பள்ளியில் பயின்று,"அவருடைய சத்தியத்தினால் பரிசுத்தப்படுவதை" கற்று கொள்பவர்களை தவிர வேறு ஒருவரும் தேவன் விரும்பும்படியான சுத்திகரிப்பை பெறமுடியாது. தவறுகளும், அறியாமையும் நம்மை பரிசுத்தப்படுத்தாது. மேலும், எல்லா சத்தியங்களும் நம்மை பரிசுத்தத்திற்கு வழிநடத்தும் என்று எண்ணிவிடக்கூடாது. இதற்கு எதிரிடையாக சத்தியத்தை நேசித்து, தவறுகளை வெறுத்து, நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளினால் "சத்தியம்" மட்டுமே நம்மை பரிசுத்தப்படுத்த வேண்டும். பொதுவாக இந்த முழு உலகமும் சத்தியத்தை தேடுவதற்கு ஒவ்வொரு துறையிலும் அதிகமான முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறது. இயற்கைவாதிகள், வானசாஸ்திரிகள், புவியியல், மற்றும் பல துறைகளில் ஆராய்ச்சிகள் நடந்து வருகிறது. ஆனால் இவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட சத்தியங்கள் ஒருவரையும் பரிசுத்தப்படுத்துவதில்லை. மாறாக, இவைகள் அனைத்தும் வேதாகமத்திற்கு நேர் எதிராக வழிநடத்துகிறது. ஆகவே "எப்படியெனில், தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று" (1கொரி 1:21) என்று பவுல் கூறுகிறார். உண்மை என்னவெளில், ஒவ்வொரு துறையிலும் முழுமையான சத்தியத்தை கண்டறிய எடுக்கும் முயற்சிகள், இன்றைய வாழ்க்கையில் உள்ள குறுகிய வருடங்களில், நம்முடைய விழுந்துபோன அபூரணமான நிலையில்,

நம்முடைய கொள்ளளவு மிக குறைவாயுள்ளது. ஆகவே இதில் வெற்றி அடைந்தவர்கள் உலகத்தில் அந்தத் துறையில் தேறினவர்களாக இருப்பதை நாம் காணலாம். வான சாஸ்திரத்திற்கு ஒருவர் தன்னுடைய கவனத்தை அதிகமாக செலுத்தினால் மற்ற துறைகளை பற்றியும், "உம்முடைய வசனமே சத்தியம்" என்ற யுகங்களைப் ப்றறிய தேவ ஏற்பாட்டை அறிந்து கொள்வதற்கு காலம் குறைவாக இருக்கும். அக்காலத்தில் மிக சிறந்த முறையில் கல்வி கற்ற அப்போஸ்தலன் - இதன் அடிப்படையில், தீமோத்தேயுவுக்கு "மனித தத்துவங்களுக்கும் (விஞ்ஞான கூற்றுகள்) கட்டுகதைகளுக்கும்" ஜாக்கிரதையாக இருங்கள் என்று அறிவுரை கூறினார். இங்கு விஞ்ஞானம் என்ற வார்த்தை சத்தியத்தை குறிக்கிறது. அதாவது அவருடைய காலத்தில் உள்ள விஞ்ஞானிகளை பற்றி அப்போஸ்தலன் நிச்சயமாக பேசியிருக்கமாட்டார். இவர்கள் தவறான நோக்கமுடையவர்கள், அவர்களுடைய வார்த்தைகளுக்கு ஞானத்தை ஆதாரமாக காட்டினார்கள், மற்ற காரியங்களிலும் ஏதோ கொஞ்சம் உண்மை இருந்தபோதிலும் விஞ்ஞானம் என்று அழைக்கப்படுகிற மனித கூற்றுக்கள் சத்தியமாக இருக்காது (முற்றிலுமான உண்மை இல்லை.) இவைகள் தேறின அனுமானங்களாகும். கவனிக்கக்கூடிய - மாணவர்களுக்கு இப்படிப்பட்ட அனுமானங்கள். அவர்களின் பாடங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். நாம் வரலாற்றில் தெளிவாக காண்கிறபடி ஒவ்வொரு காலங்களிலும் வேறுப்பட்ட கருத்துகள் தோன்றி கொண்டே இருக்கும். ஐம்பது வருடங்களுக்கும் முன் ஏற்றுகொள்ளப்படாத விஞ்ஞான உண்மைகள் இன்று ஏற்றுகொள்ளப்படுகிறது.

23. "ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது"? இந்த வசனத்தை நாம் எப்படி விவரிப்பது?

1யோவ 2:20,27- "நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகம் பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்","நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக"

F260 through F261:

ஒருவர் கிறிஸ்தவராக இருக்கும் பட்சத்தில் அதாவது தெய்வீக திட்டத்தை ஓரளவுக்கு புரிந்துகொண்டவர்கள், முதலாவது அவர்கள் பாவிகளாக இருந்தார்கள் என்றும், அதற்காக அவர்களுக்கு ஒரு இரட்சகர் மிகவும் அவசியமாக தேவைப்பட்டார் என்றும் அறிந்திருக்கவேண்டும். அடுத்து அந்த இயேசு அபிஷேகம் பண்ணப்பட்டார் என்றும், அவருடைய சொந்த ஜீவனை பலி செலுத்தி, தங்களை இரட்சித்தார் என்பதையும் தங்களுக்குமுன் நிறுத்தி கொள்ளவேண்டும், என்பதை அப்போஸ்தலர் கூறுகிறார். மேலும் இப்படிப்பட்டவர்களுக்கு எந்த மனுஷனும் அடிப்படை சத்தியத்தை போதிக்க வேண்டிய அவசியமில்லை என்று அப்போஸ்தலன் கூறுகிறார். மேலே சொல்லப்பட்ட கிறிஸ்துவ மதத்தின் அடிப்படையை அறியாமலிருந்தால் அவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்க வாய்ப்பில்லை. பாவத்திற்காக கிறிஸ்து மரித்து, நம்மை நீதிமான்களாக்கும்படியாக அவர் உயிர்த்தெழுந்தார் - மேலும் நாம் பெற்ற இந்த நிலையே, நாளுக்கு நாள் நம்மை சுத்திகரித்து, மகிமையான நம்பிக்கையை கொடுப்பதே நம்முடைய சார்பில் செலுத்தப்பட்ட ஈடுபலியின் பலனாகும். ஒரு வேளை குமாரன் வெளிப்படுவதற்கு முன்னதாக குமாரனை விசுவாசிக்காமல் பிதாவின் மேல் மட்டும் நம்பிக்கை வைத்திருந்தாலும், இப்போது, தேவனுடைய குமாரனை மறுதலிக்கிறவன், பிதாவையும் மறுதலிப்பவனாக இருப்பான் என்றும் கூறுகிறார். அதே நேரத்தில் எல்லாவற்றிற்கும் காரணராகவும், எல்லாவற்றையும் செயல்படுத்துகிறவராகிய பிதாவையும் அவருடைய திட்டத்தை ஏற்றுக்கொள்கிறவன் குமாரனையும் ஏற்றுகொள்வான் என்று கூறுகிறார்.

அப்போஸ்தலர் எதை பொருள்படுத்தினார் என்பதை இன்றைக்கு தெளிவாக நாம் அறிந்துகொள்ளலாம். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், இயேசுவை பிதாவாகிய தேவனுடைய ஒரே பேறான குமாரன் என்றும், அவர் மாம்சத்தில் வெளிப்பட்டு, பரிசுத்தமும், பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்து நமக்காக ஈடுபலியை கொடுத்தார் என்றும் முதலாவது விசுவாசிக்க வேண்டும். இயேசு தந்த பலியை தேவன் அங்கீகரிப்பதற்குச்சாட்சியாக அவரை மகிமையான இராஜாவாகவும், இரட்சகராகவும் உயிர்ப்பித்தார். இந்த விசுவாசம் இல்லாமல் ஒருவரும் பரிசுத்த ஆவியை அபிஷேகமாக பெற்றுக்கொள்ளமுடியாது. இந்த அபிஷேகம்

பெற்றவர்கள் அடிப்படையான உபதேசங்களை மீண்டும் ஆலோசிப்பதற்கு அவசியமில்லை. ஏனெனில், இயேசு தேவனுடைய குமாரனா? அவர் தான் அபிஷேகம் பண்ணப்பட்டவரா? பிதா குறித்த காலத்தில் அவருடைய திட்டத்தை நிறைவேற்றுவாரா ? என்ற காரியங்களைக் கலந்தாலோசிப்பது நேரத்தை வீணாக்குவதற்கு வழிவகுக்கும். நாம் இதே அபிஷேகத்தை பெற்றிருந்தால், இப்படிப்பட்ட சத்தியங்கள் நமக்குள்ளே இருக்கும் - " அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது;." அவருக்குள் நிலைத்திராதவன், வெட்டப்பட்ட திராட்சை கொடி, இவன் உலர்ந்து போவான். ஆனால் அவருக்குள் நிலைத்திருப்பவன், அவருடைய ஆவிக்குள்ளும் நிலைத்திருக்கிறான், நிச்சயமாக இவன் இயேசுவை மறுதலிக்கமாட்டான்.

" அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது;." யூத யுகம் முழுவதிலும் பிரதான ஆசாரியனின் தலையின்மேல் ஊற்றப்பட்டு அவருடைய சரீரம் முழுவதையும் நனைத்த அபிஷேக தைலத்திற்கு பரிசுத்த ஆவி அடையாளப்படுத்தப்பட்டது. இப்படியாக, யார் ஒருவர் கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிறார்களோ, அவர்கள் அனைவரும் இயேசு பெற்ற அபிஷேகத்திலும், அந்த வல்லமையான தூண்டுதலிலும் பங்கு பெறுபவர்களாக இருக்கிறார்கள். எண்ணெய் வழுவழுப்பாக இருப்பதுபோல தேவனுடைய ஆவி அனைவரோடும் சமாதானத்தை ஏற்படுத்தி, சுடுமான வரைக்கும் நீதியின் பாதையில் வழிநடத்தும். உராய்வுகளை உருவாக்கும் பகை, கோபம், ஆத்திரம் போன்றவைகளை இது சரிக்கட்டிவிடும். இப்படிப்பட்ட பரிசுத்த ஆவியின் செயல்பாட்டின் கீழ் மகிழ்ச்சியாக தேவனிடம் கற்றுக்கொள்பவர்கள், வெளிப்பாடுகளில் கருத்துகள் முரண்பட்டாலும், தேவனோடு அவர்கள் தொடர்பு கொண்டதினால் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படுகிறது என்று அறிந்து, வெகு சீக்கிரத்தில் தேவனுடைய சித்தத்திற்கு இசைந்து, சமாதானத்தோடும், மகிழ்ச்சியோடும் இருதயத்தில் பரிசுத்தத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

இயேசுவை விசுவாசித்து, அவரே அபிஷேகிக்கப்பட்டவர் என்று அவரை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய இருதயத்தில் சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் கொடுக்கும் தேவனுடைய ஆவியை பெற்றுக்கொள்கிறார்கள். தங்களுக்கு மட்டும் அல்ல, கிறிஸ்துவின் சரீர அங்கத்தினராக வளர்ச்சி அடையும் மற்றவர்களுக்கும் ஆதாரமாக விளங்குகிறது. சமாதானம், சந்தோஷம் குறைந்து, தங்களுடைய இருதயத்தில் கோபம், பகை, அகங்காரம், சண்டைகள் போன்றவைகளின் அதிகரிப்பு, நிச்சயமாக பரிசுத்த ஆவியின் குறைச்சலுக்கு ஆதாரமாக இருக்கிறது. உண்மையில் நாம் அனைவரும் ஒரே விதமாக இருப்பதில்லை. அன்பின் செயல்பாடு சிலரிடம் உடனடியாக வெளிப்படுத்தப்படுவதில்லை. ஆனால் துவக்கக்கால கிறிஸ்துவ அனுபவங்களில் இந்த அன்பு இருதயத்திலிருந்து வெளிப்படவேண்டும். நாம் தேவனுடைய ஆவியை பெற்று இயேசுவோடு இருப்பதற்கு இதுவே ஆதாரம். மேலும் வெகு சீக்கிரத்தில் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் மற்றவர்களுக்கு முன்பாகவும் நாம் பெற்ற ஆவியை ஆதாரமாக வெளிப்படுத்தவேண்டும்.

24. ஏசாயா 53:11ம் வசனத்தின் விளக்கம் கூறுக

ஏசா 53:11"அப்படியே கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்குத் திரும்பிவருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேல் இருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்"

E91[P1,2]:

"சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்" (மத் 11:27) இந்நாட்களிலும், நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. உலகம் அவரை அறியவில்லை. அவருடைய மேன்மையான துவக்கத்தை அறியாமல் இருக்கிறார்கள். அவருடைய தாழ்மையை அறியாதிருக்கிறார்கள். மாம்சத்தில் வெளிப்பட்ட நாள் வரைக்கும் நித்தமும் பிதாவின் சமூகத்தில் அவருடைய மனமகிழ்ச்சியாக இருந்த காலத்தை நாம் நினைவுக்கு கொண்டுவரலாம். குமாரன் பிதாவை அறிந்திருந்தார் என்பதில் ஆச்சரியம் இல்லை. துவக்கத்தில் அவருடைய சீஷர்களும், உலகமும் பிதாவை அறியாதிருந்தாலும், அவருடைய வார்த்தைகளின் வெளிப்பாட்டின் மூலமாகவும், அற்புதமான தெய்வீக யுகங்களைப் பற்றிய வெளிப்பாட்டின் வழியாகவும் நாம் அவரை அறிந்துக்கொள்ள

கற்றுக்கொண்டிருக்கிறோம். "நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்" (யோவ17:25)

"உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மையுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலானவர்.தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை" (யோவ 3:31,32) இந்த அற்புதமான பரலோக அறிவின் திறவுகோலான காரியம் இந்த வசனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. "தாம் வளர்ந்த ஊரிலே வந்து, அவர்களுடைய ஜெபஆலயத்திலே அவர்களுக்கு உபதேசம்பண்ணினார். அவர்கள் ஆச்சரியப்பட்டு: இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது?" (மத் 13:54) என்று அவரை ஏற்றுகொள்ளாதவர்கள் கேட்டார்கள். அது அவருடைய பரலோகத்திற்குரிய அறிவும், அவருக்கு நெருங்கியவரும், நீண்ட காலமாக தொடர்புள்ளவருமான பிதாவினிடமிருந்து பெற்ற ஞானமே. ஆதலால் பிதாவின் வாக்குறுதிகளின்மேல் முழு விசுவாசம் வைத்து, பூரண மனுஷனாக இந்த உலகத்தையும், மாம்சத்தையும், சாத்தானையும் ஜெயித்து, நம்முடைய பாவங்களுக்காக ஏற்றுகொள்ளக் கூடிய பலியை செலுத்தினார். இப்படியாக, தீர்க்கதரிசியின் மூலமாக முன்னதாகவே "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" (ஏசா 53:11) என்று எழுதப்பட்டுள்ளது.

R1835[col.1 P1]:

"நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான் உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்திருக்கிறார்கள்.." என்பதே நம்முடைய ஆண்டவரின் விசுவாசமாக இருந்தது. அவர் தம்முடைய பிதாவோடு கூட இருந்தார், பிதாவின் அன்பையும் அவருடைய நன்மைகளையும் உணர்ந்தவர். பிதாவின் வல்லமையைக் கண்டவர். அவருடைய எல்லா கிரியைகளிலும், பிதாவின் நீதியையும், அன்பையும் முழுமையாக அறிந்தவர். ஆகவே "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்" (எசா53:11) என்று எழுதியிருக்கிறது. வருங்காலத்தில் தேவனுடைய நோக்கத்தை பூர்த்தி செய்வதற்காக பிதாவாகிய தேவன் விசுவாசத்தில் உறுதியாக நிலைநிற்பதற்கு கொடுத்த விசுவாசத்தின் அறிவை இயேசு பிதாவினிடத்திலிருந்து பெற்றிருந்தார். ஆகவே அவர் விசுவாசத்தில் நடக்கமுடிந்தது. மேலும் சகல விதமான தடைகளை மேற்கொள்ளவும், மரணத்தை ஜெயிக்கக்கூடிய பலத்தையும் இந்த விசுவாசத்தினாலே பெறமுடிந்தது.

25. இனி வரக்கூடிய காலத்தை குறித்த அறிவை நாம் பெறுவதற்கு எதிர்பார்க்க வேண்டுமா?

ஆமோஸ் 3:7"கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்" யோவ 16:13"சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்"

B15[P3]:

- யூத யுகத்தின் முடிவில் ஓர் அறுவடை காலம் இருந்தது போல, சுவிசேஷ யுகத்தின் முடிவிலும் ஓர் அறுவடை காலம் காணப்படுகிறது. (மத் 9:37, 13:24,30,39) அந்தக் கால அளவை போல, சுவிசேஷ யுகத்தின் அறுவடை காலமும் 40 வருடமாகும். அறுவடையின் காலத்தில் விசேஷமாக தீர்க்கதரிசனங்களின் சாட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதாவது யூத யுகத்தின் முழு வெளிச்சமும் அறுவடையின் காலத்தில் பிரதிபலிக்கும். அதேபோல சுவிசேஷ யுகத்தின் அறுவடையின் போதும் மகிமையான ஒளி பிரகாசிக்கப்படுகிறது. இந்த வெளிச்சத்தில் தேவனுடைய திட்டங்களின் செயல்பாடுகளை அதாவது நடந்தவைகளையும், இனி நடப்பவைகளையும் மிக தெளிவாக காணலாம். அதுமட்டும் அல்ல அவருடைய வாக்குத்தத்தங்களின்படியே வரும்

காரியங்களை நமக்கு காட்டுகிறார் (யோவ 16:13) வரும் ஆட்சியில் அனைவரையும் அசீர்வதிக்கும் ஞானமான கோட்பாடுகளை அற்புதமான தரிசனங்களில் காண்கிறோம். சகல காரியங்களும் அதன் மகிமையான சீர்பொருந்துதலையும் காண்கிறோம். இந்த அறுவடையின் காலத்தில் மிக பெரிதும் அற்புதமான சில சம்பவங்கள் மையப்படுத்தப்பட்டிருப்பதை நாம் காணலாம். அதாவது மகா உபத்திரவத்தின் காலத்தில் , யேகோவாவின் நாளில் அந்திக்கிறிஸ்து அமைப்பாகிய மகா பாபிலோனின் முழுமையான இறுதி விழ்ச்சியைக் காணலாம். மீண்டுமாக யூதர்களுக்கு கிருபையின் காலம் துவங்கும். நம்முடைய ஆண்டவரின் இரண்டாம் வருகையும், அவருடைய இராஜ்யத்தின் ஸ்தாபனமும் நடைபெறும் மற்றும் முதலாம் உயிர்த்தெழுதல் நடைபெற்று பரித்தவான்கள் தங்களுடைய பரிசுகளை பெறுவார்கள்.

R2973[col.2 P4]:

ஜாமக்காரர்கள் உலகத்தாரை போல வெளிப்புறமான அடையாளங்களை மட்டும் தேடாமல், நம்முடைய இராஜாவினால் முன்னதாகவே அறிவிக்கப்பட்ட தீர்க்கதரிசனமான காரியங்களை வேதாகமத்தில் தொடர்ந்து மிக கவனமாக ஆராய்ந்துவருகிறார்கள். ஏனெனில் முன்குறிக்கப்பட்ட காலங்கள் நிச்சயமாக சம்பவிக்கும் என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஏனெனில் இனி வரக்கூடிய காரியங்களுக்கு இவர்கள் "இருளுக்குள் இருப்பவர்கள்" அல்ல. இவர்கள் வருங்காலத்தைக் குறித்த சகலமும் பரிசுத்த ஆவியினால் போதிக்கப்படும் என்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே குறித்த காலத்தில் சம்பவிக்கக்கூடிய காரியங்களை உலகம் அறிந்துக்கொள்வதற்கு முன்னதாகவே இவர்கள் உணர்ந்துகொள்வார்கள். (யோவ 16:13) அதே வரைபடம், பூமிக்குரிய அரசியல் சமுதாயம் மற்றும் பொருளாதார அமைப்புகளின் வீழ்ச்சியையும் காட்டுகிறது. அதாவது யேகோவா தேவனின் மிக மகத்துவமான திட்டத்தில் குறிக்கப்பட்ட அந்தச் சரியான நேரத்தில் அவைகள் வீழ்ச்சி அடைந்து, தெரிந்துகொள்ளப்பட்ட சபையின் கைகளில் அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிப்பார். (உலகத்தின் ஆட்சியாளர்களாகவும், மகிமை அடைந்த இராஜரீகமான ஆசாரியர்களாக தங்கள் தங்கள் சிங்காசனத்தில் அமருவார்கள்.) ஒவ்வொரு சிருஷ்டிப்பையும் ஆசீர்வதிப்பதற்காக தேவனுக்கு மகிமையில் இவர்களை உயர்த்துவார்.

26. தானி 12:4 ம் வசனம் நிறைவடைந்துகொண்டிருக்கிறதற்கான ஆதாரங்கள் என்னென்ன?

தானி 12:4" தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்"

A337[P1]:

எல்லா காரியங்களையும் புதிதாக ஒழுங்குப்படுத்துவதற்காக, தேவன் குறித்த காலம் இதுவே என்று நிரூபிக்க அவசியமில்லாத வகையில் (தானி 12:4,1)ல் முன்னதாக அறிவித்து அதன் விளைவுகளையும் முன்னதாக தீர்மானித்தது போல மெதுவாக மனுக்குலத்தில் காணப்படும் அறிவான விஞ்ஞான கண்டுபிடிப்புகளாகிய வெளிச்சத்தை வீசி, அறியாமை என்னும் முக்காட்டை பொறுமையாக விலக்கி கொண்டிருக்கிறார். அறிவு முன்னதாக வந்திருந்தால், உபத்திரவங்களும் முன்னதாக வந்திருக்கும் அனைத்தும் அழிந்தபின் புதிதான ஒரு உலகம் அல்லது அமைப்பு உண்டாயிருக்கும் ஆனால் அதில் நீதியும், வாசமாய் இராமல், இந்நாளில் காணப்படும் பாவங்களும், அநீதிகளும் அதிகமாக காணப்பட்டிருக்கும். வேலை ஆட்களை குறைப்பதற்காக கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரங்கள் மனிதனுக்கு அதிகமாக ஓய்வு எடுக்கும் நேரத்தை கொடுத்திருக்கும், விழுந்துபோன நிலையில் இருக்கும் மனுஷன் தன்னுடைய மனநிலையையும், தனி மனித ஒழுக்கத்தையும், உடல் ரீதியான முன்னேற்றத்திற்காக அந்தக் காலங்களை செலவிடாமல், வரலாறுகள் நிரூபிப்பதை போல, அதிக தீமையானவைகளுக்கும் பாவமான செயல்களுக்குமே மனுக்குலம் தீவிரித்திருக்கும்.

D414[P1]:

பொதுவாக இந்த உலகம் முழுவதிலும், விசேஷமாக கிறிஸ்துவ மண்டலத்திலும் அறிவு பெருகி கொண்டிருப்பதைக் கவனிக்க தவறுகிறார்கள். மனுஷன் இதை மறந்துவிட்டாலும் தேவனுடைய வார்த்தைகளின் மூலம் கிடைக்கும் உண்மையான ஞானத்தின் ஊற்றை தேடுகிற ஞானமானவர்களின் கவனத்தை இது ஈர்க்கிறது. ."உன் ஜனத்தின்

புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்.பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்.தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்" என்றும் (தானி 12:1-4) அறிவிக்கப்படுகிறது. முன்னதாக தீர்மானிக்கப்பட்டவைகள் மிக அபாரமான அளவில் நிறைவேறுவதை காண்கிறார்கள். அதேநேரத்தில் முன்னறிவிக்கப்பட்ட மகா உபத்திரவத்தின் காலமும் துவங்குவதை காண்கிறார்கள். இவைகள் நடந்துகொண்டிருக்கும் வரலாறை தலைக்கீழாக மாற்ற துவங்கும் சூழ்நிலைகளை உருவாக்குகிறது. ஏனெனில் இதை தொடர்ந்து பேசும் போது "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்;.....அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்." அப்போது நடந்துகொண்டிருக்கும் சாத்தானின் ஆட்சியில் சகல விதமான சுயநலமும் அந்த உபத்திரவகாலத்தோடு முடிவுக்கு வந்தபின், கிறிஸ்து மகிமையில், வல்லமை பொருந்தினவராக, இந்த மனுக்குலத்தை ஆசீர்வதிக்கும்படியாக தம்முடைய இராஜ்யத்தை பகிரங்கமாக ஸ்தாபிப்பார்.

R2973[col.2 P1-3]:

சபை தன்னுடைய பயணத்தை துவங்கி வெகு காலம் சென்று விட்டது என்று தானியேல், ஏசாயா, எரேமியா மற்றும் அனைத்து பரிசுத்தமான தீர்க்கதரிசிகள் மூலமாக நம்முடைய ஆண்டவர் கொடுத்த அறிகுறிகளை கவனமாக ஏற்றுகொண்டவர்கள் நிச்சயமாக உணர்ந்து கொண்டிருப்பார்கள். ஆனால் இந்த அறிகுறிகளை புரிந்துகொண்ட, நாம் இந்தப்பயணத்தின் முடிவை நெருங்கி கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோம். மேலும் தேவன் இந்த உலகத்திற்கு தரக்கூடிய மிக பெரிய ஆசீர்வாதத்திற்கும், நீண்டகாலமாக கிறிஸ்தவர்கள் ஜெபித்து கொண்டிருக்கும் ஜெபங்கள் நிறைவேறும் காலத்திற்கும் நாம் வெகு அருகில் இருப்பதை அறிந்திருக்கிறோம். எடுத்துக்காட்டாக, "முடிவு காலம்" என்று தீர்க்கதரிசியாகிய தானியேலின் மூலம் ஆண்டவர் கொடுத்த கால அளவு கிட்டத்தட்ட 100 வருடங்களாக இருக்கவேண்டும் என்று ஜாமக்காரர்கள் கனித்திருக்கிறார்கள். "தானியேலாகிய நீயோவென்றால், முடிவுகாலமட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து வைத்து, இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு; அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான்" தானி 12:4 ல் எழுதியிருக்கிறபடி இந்த "முடிவு காலத்தில்" பூமி முழுவதிலும் அங்கும் இங்கும் ஓடி, பயணங்கள் அதிகரிக்கும் என்றும், பொதுவாக அறிவு பெருகிப்போகும் என்றும் வேதத்தை கூர்ந்து கவனிப்பவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

தீர்க்கதரிசனங்களை ஆர்வத்தோடும், நம்பிக்கையோடும், கவனமாக கூர்ந்து கவனிப்பதே தேவன் வாக்களித்த மகிமையான காரியங்களாகும். இந்தத் தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றத்தை கவனிக்கக்கூடிய அனைவரும் உணர்ந்திருக்கிறார்கள். அனைத்து மனுஷரும் நடக்கக்கூடிய காரியங்களைக் காண்கிறார்கள். ஆனால் அனைவரும் ஒரே மாதிரியாக புரிந்துக்கொள்ளுவதில்லை. விசுவாசமுள்ள ஜாமக்காரர்கள் இவைகளை உண்மைகளாக மட்டும் ஏற்றுகொள்ளாமல், "முடிவு காலத்தை" பற்றிய கால தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றங்களின் நிரூபணங்களாகவும் ஏற்றுக்கொள்கிறார்கள். மேலும் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளினாலும், தீர்க்கத்தரிசனமான அளவுகளை பயன்படுத்தி - "முடிவு காலம்" என்பது கிபி 1799ம் ஆண்டு முதல் துவங்கியது என்றும் மேலும், இந்தக் காலத்தை "அவருடைய (யேகோவின்) ஆயத்த நாள்" என்றும் அழைக்கப்படுகிறதை ஜாமக்காரர்களுக்கு நிரூபிக்கப்படுகிறது. பிதாவாகிய தேவன் அவருடைய நேச குமாரனுடைய இராஜ்யத்திற்கான ஆயத்தங்களை செய்துகொண்டிருக்கிறார்.

தேவன் அறியாமை என்னும் திரையை விலக்கி வெளிச்சத்தை வீச செய்வதையும் காண்கிறார்கள். மேலும் இப்படியாக, இறுதியில் இந்த உலகம் மிகுதியாக ஆசீர்வதிக்கப்படும். இயற்கையான முறையில் இராஜ்யம் ஸ்தாபிப்பதற்கான ஆயத்தவேலைகளுக்கு தேவன் பயன்படுத்துகிறது. நீதியின் சூரியன் எழும்பி, தன்னுடைய குணமாக்கும் கதிர்களை வீசி, ஆயிரவருட ஆட்சி துரிதமாக துவங்கி, சகல விதமான இரக்கங்களும், வாய்ப்புகளும், ஆசீர்வாதங்களும், பொழியப்படும். "உலகத்தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்" - அப் 3:21

உண்மையுடனும், முழு ஆர்வத்துடனும், உறுதியோடு கவனிப்பவர்கள் தேவன் முன்னதாகவே சகல நன்மையான காரியங்களையும் ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார் என்பதை அறிந்திருக்கிறார்கள் (1கொரி 2:9-13, 1பேது 1:4) மேலும், தானியேலின் தீர்க்கதரிசனம் குறிப்பிடுவது போல, போக்குவரத்தின் அதிகரிப்பு, அறிவின் பெருக்கத்தை ஏற்படுத்தும் அதே சமயத்தில் அந்த அறிவின் பெருக்கம் உலகத்தில் அதிகமான அதிருப்தியை ஏற்படுத்தி அதன் விளைவாக "ஒருவரும் இதுவரையில் கண்டிராத மகா உபத்திரவ காலத்திற்கு" வழிவகுக்கும் என்றும் ஜாமக்காரார்கள் கணித்துள்ளார்கள். பொதுவாக உலகத்தின் மனுக்குலத்தின் மத்தியில் இவைகள் நிறைவேறிக்கொண்டிருக்கிறதா என்று ஆராய்ந்துவருகிறார்கள். தேவனுடைய ஆசீர்வாதங்களையும் கிருபைகளையும் பெற்றிருந்தாலும், துக்கங்களும் பிரச்சனைகளும் காணப்படுகிறது. ஆயிர வருட பகிரங்கமான ஆட்சிக்கு ஆயத்தமாக தேவன் கொடுத்துக்கொண்டிருக்கும் தெய்வீக நன்மைகளுக்காக அவருக்கு முழு மனதோடு நன்றி செலுத்தி, கனத்தையும் அன்பையும் அவருக்கு அர்ப்பணிப்பதை விட்டு விட்டு, புதிதாக மாற்றபடாத இருதயத்தில் உள்ள பேராசைகளும், மிகுதியான சுயநலமும், கோபமும், பகையும் மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள் இப்போது அதிகமாக காணப்படுகிறது. ஆம், மிகுந்த உபத்திரவத்தின் உச்சகட்டத்தை மனுக்குலம் எட்டி பிடித்துகொண்டிருப்பதை, இந்த நிகழ் காலத்தில் உள்ள மனித அமைப்புகள் அனைத்திலும் காணப்படுகிறது. இப்படியாக, இந்த உலகம் குழப்பத்தையும் அழிவை நோக்கி செல்லும் என்று வசனங்கள் தெளிவாக அறிவிக்கக்கூடிய காரியங்கள் தெளிவாக காணப்படுகிறது. ஜாமக்காரர்கள், இவைகளின் மேல் மிகுந்த கவனம் வைத்திருந்தாலும், அவர்களுடைய கண்கள் தேவனையும், அவருடைய தெய்வீக நன்மைகளைவிட்டு விலகுவதில்லை. தேவனே இவைகளுக்கு காரணம் என்று மனுக்குலம் புரிந்துக்கொள்ளும் நாள் வரைக்கும் மிகவும் சாதகமான சூழ்நிலைகளில், சுயநலமாக செயல்படும் பட்சத்தில் இயற்கையாகவே சமுதாய பிரச்சனைகளும் மற்ற அமைப்புகளின் வீழ்ச்சிகளும் ஏற்படும். மேலும் "மனுஷனுடைய கோபம் உமது மகிமையை விளங்கப்பண்ணும்; மிஞ்சுங்கோபத்தை நீர் அடக்குவீர்" (சங் 76:10)

27. "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும் மற்றும் சத்தியத்தை அறிகிற அறிவினால் அனைவரும் நிரப்பப்படுவார்கள்?" இவைகள் எப்போது சம்பவிக்கும்?

ஏசா 11:9"என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"
1தீமோ 2:4"எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்"

A74[B3]:

ஒரு யுகத்திற்குரிய வார்த்தைகள் அல்லது வாக்கியம் மற்றொரு யுகத்திற்கு பொருத்தக்கூடாது. ஏனெனில் ஒரு யுகத்திற்காக சொல்லப்பட்ட காரியங்கள் மற்றொரு யுகத்திற்கு உண்மையாகாது. எடுத்துக்காட்டாக, இப்போது, பூமி கர்த்தரை அறிந்திருக்கும் அறிவினால் நிறைந்திருக்கிறது என்றும், இனி ஒருவரும் தன் அயலானுக்கு கர்த்தரை பற்றி அறிவிக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் சொல்லுவது அசத்தியமாகிவிடும். (ஏசா 11:9, எரே 31:34) ஏனெனில், இந்த யுகத்தில் இது சாத்தியம் இல்லையே. வந்திருக்கும் நம் ஆண்டவர் பகிரங்கமாக அவருடைய இராஜ்யத்தை ஸ்தாபிக்கும் வரையில் இவைகள் சம்பவிக்க வாய்ப்பில்லை. இதுபோல இந்த யுகம் முழுவதிலும் இன்னும் நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கும் கடைசி காலத்திலும் அநேக வஞ்சகமான காரியங்கள்

போதிக்கப்பட்டு வருகிறது. "மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக""பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்" (11தீமோ 3:1, 13) ஆகவே மேசியாவின் ஆயிர வருட ஆட்சியின் முடிவில் சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பதுபோல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

E19[P4] :

இந்தக் கருத்துக்கு இசைவாக தேவ வசனங்களும் கூறுகிறது. அதாவது 1000 வருட ஆட்சியை பொறுத்தவரையில், இனி ஜாதிகளை மோசம் போக்காதபடிக்கு சாத்தானை கட்டப்பட வேண்டும் (வெளி 20:3) மேலும் தேவனுடைய இராஜயம் பூமியில் ஸ்தாபிக்கப்படும்போது, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். (எபி 8:11)மேலும் -"உம்முடைய இராஜ்யம் வருக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூமியிலும் செய்யப்படுவதாக" என்று கர்த்தர் கற்பித்த ஜெபம் நிறைவேறும். அப்போது தேவனுடைய விருப்பமும் நிறைவடையும். (1தீமோ 2:4)

A105[P2]:

தற்காலிகமான எல்லா சோதனைக் காலமும் மரணத்தோடு நிறைவேறும் என்று அநேகர் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படியாக எந்த வசனமும் போதிப்பதில்லை. ஒரு வேளை மரணமே இந்த அறியாமையில் உள்ள உலக மனுக்குலத்தின் முடிவாக இருந்தால், வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கும் அநேக வசனங்கள் அர்த்தமற்றதாக போய்விடும். "மேகங்கள் நிறைந்திருந்தால் மழையைப் பூமியின்மேல் பொழியும்; மரமானது தெற்கே விழுந்தாலும் வடக்கே விழுந்தாலும், விழுந்த இடத்திலேயே மரம் கிடக்கும்" (பிரச 11:3) என்ற வசனம் மட்டுமே இதை நிரூபிப்பதற்கு ஆதாரமாக காட்டப்படுகிறது. ஒரு வேளை இந்த வசனத்தோடு, மனிதனுடைய வருங்காலத்திற்கு ஏதாகிலும் தொடர்பு இருந்திருந்தால், ஒருவர் கல்லறைக்குள் நுழையும்போது உள்ள நிலை, அவர் உயிர்த்தெழும் வரைக்கும் மாறக்கூடாது. இதுவே வசனங்கள் அனைத்தும் கற்பிக்கும் சீரான உபதேசமாகும். ஆனால் தேவன் அறியாமையில் இருக்கும் மனுஷனை இரட்சிக்கவிரும்பாமல், "சத்தியத்தை அறிகிற அறிவினால்" அனைவரையும் இரட்சிக்கவிரும்புகிறார். (1தீமோ 2:4) ஏனெனில் முழு மனுக்குலமும் அறியாமையில் மாண்டிருக்கிறார்கள். மேலும் அவர்கள் சென்ற நிலையில் செய்கையும் வித்தையும் அறிவும், ஞானமும் இல்லை (பிர 9:10) ஆகவே மரித்தோரை உயிர்ப்பித்து அவர்களுக்கு சத்தியத்தை அறிவித்து, அதன்வழியாக அவர்கள் பெறும் விசுவாசத்தினால் அவர்களை இரட்சிப்பதற்கு தேவன் சகலத்தையும் ஆயத்தப்படுத்தியிருக்கிறார். ஏனெனில் "ஆதாமுக்குள் மரித்த அனைவரும் கிறிஸ்துவுக்குள் உயிர்த்தெழவேண்டும்." என்பதே தேவனுடைய திட்டமாக இருக்கிறது. சுவிசேஷ யுகத்தின் சபை, கிறிஸ்துவின் சரீரமானோர், முதலாவதாகவும் அதற்குப்பின் அவருடைய பகிரங்கமான ஆட்சியில் மற்றவர்கள் உயிர்பிக்கப்படுவார்கள். சிறியோர் முதல் பெரியோர் வரைக்கும் உள்ள அனைத்து ஜனங்களும் தேவனை அறிந்துகொள்ளவேண்டும் என்று தேவன் குறித்த அந்த காலத்தில் அனைவரும் அவரை அறிந்துகொள்வார்கள். 1கொரி 15:22

28. ஆயிர வருட ஆட்சியில்,அறிவுக்கும் விசுவாசத்திற்கும் உள்ள தொடர்பு என்னவாக இருக்கும்?

R2677[col.1 P5] through R2678[P1]:

இந்தச் சுவிசேஷ யுகத்தில் "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" என்று அழைக்கப்படும் நிலை, மேசியாவின் யுகத்தில் செயலாற்றப்படாது. ஏனெனில் அக்காலத்தில் இந்நிலை தேவைப்படாது. இக்காலத்து நிலைமையின் விதிமுறைகளுக்கும் வருங்கால நிலைமையின் விதிமுறைகளுக்கும் மிக பெரிய வித்தியாசங்களைக் காணலாம். ஏனெனில் இப்போது நாம் "தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" விசுவாசம் அரிதானது. ஆகவே அது அதிகமாக பாராட்டப்பட்டு தேவனால் பரிசளிக்கப்படுகிறது. அதே நேரத்தில் மேசியாவின் யுகத்தில் விசுவாசத்தின் யுகம் கடந்துவிட்டு, அறிவுக்குரிய யுகம் துவங்கிவிடும். ஒவ்வொரு யுகத்திற்கான ஆதாரங்கள் மிக தெளிவாக காட்டப்படுகிறது. ". என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." இதற்கு விசேஷித்த விசுவாசம் தேவை இல்லை. ஆகவே விசுவாசத்திற்குரிய விசேஷித்த பரிசுகளும் இனி கொடுக்கப்படுவதுமில்லை.

ஆகவே, நாம் மேசியாவின் யுகத்தில் மனுக்குலம் நம்ப மாட்டார்கள் என்று நாம் கூறவில்லை. அக்காலத்தில் அனைவரும் நம்பவேண்டிய சூழ்நிலையில் இருப்பார்கள். ஆகவே அதை தவிர வேறு வழி இராது. நம்பிக்கைக்கும், விசுவாசத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் வித்தியாசம் உண்டு. இன்று நாம் அநேக காரியங்களை விசுவாசத்தின் மூலம் நம்புகிறோம். ஆனால் மேசியாவின் யுகத்தில் ஆதாரம் இல்லாமல் நம்ப மாட்டார்கள். இவர்கள் விசுவாசத்தினால் நம்பாமல் அவர்கள் அறிவினால் பெற்ற ஆதாரத்தின் அடிப்படையில் நம்புவார்கள். தக்க ஆதாரங்கள் இருப்பதினால் அவர் சந்தேகப்படுவதற்கு வாய்ப்பிராது. எடுத்துக்காட்டாக, நாம் தேவனுடைய பார்வையில் நீதிமானாக எண்ணப்படுவதற்கு, நம்முடைய கடந்த கால பாவங்களுக்கு மன்னிப்பு கேட்கவேண்டும். நம்முடைய சிந்தையிலும், சரீரத்திலும் உள்ள பலவீனங்களை தொடர்ந்துகவனித்து, பாவமன்னிப்பு கேட்காவிட்டால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படாது. இந்நிலையில் நம்முடைய பாவங்கள் மூடப்படுமே தவிர சபை ஜனங்களின் மரணத்தில் இந்த மாம்ச சரீரத்தின் அழிவு நடந்து, ஆண்டவரின் வருகையில் முதலாம் உயிர்த்தெழுதலின்போது மகிமையான ஆவிக்குரிய பூரண சரீரத்தை கொடுக்கும் வரையில் அவர்களின் பாவங்கள் முழுமையாக வெளியேறாது. அப்போது அவர்களுக்குள் எந்த விதமான பாவமோ, பலவீனமோ, அபூரண நிலைகளோ காணப்படாது. அப்போது உண்மையில் பாவங்கள் முற்றிலுமாக வெளியேற்றப்படும். ஆனால், இப்பொழுது நாம் தேவன் சொன்னபடி அவர் பேரில் விசுவாசம் வைப்பதினால், நம்முடைய பாவங்கள் மூடப்பட்டது என்று நாம் நம்ப வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அடுத்து பரம அழைப்பை பெற்றவர்கள், பூமிக்குரிய, தற்காலிகமான காரியங்களை பலி செலுத்தி பரலோக மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் பெறுவதே நம்முடைய விசுவாசத்தின் அடுத்த படியாக இருக்கிறது. ஆனால் இந்தப் பரலோக கீரிடமும், ஆசீர்வாதமும் விசுவாசத்தின் கண்களை உடையவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. சுவிசேஷ யுகத்தில் விசுவாசிகளாகிய நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் பந்தயத்தில் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவையும் அவருடைய நீதியான நியாயத்தீர்ப்பையும், அவர் தலையில் இருக்கும் நீதியான கீரிடத்தையும் நோக்கி பொறுமையோடு முடிவு பரியந்தம் சீராக ஓடுபவர்கள் கீரிடத்தைப் பெறுவார்கள். இப்படியாக நாம் விசுவாச யுகத்தில் நீதிமானாக்கப்பட்ட நிலையில் அநேக வாக்குறுதிகளின் மேல் நம்பிக்கை வைத்தவர்களாக வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம். அதற்கான மிக மதிப்புள்ள பரிசையும் பெறுவோம்.

மேசியாவின் யுகத்தில் இப்படிப்பட்ட விதிமுறைகள் இருப்பதில்லை, மாறாக, அப்போது அறிவு அதிகரித்திருக்கும். ஒவ்வொரு நாளின் அனுபவங்கள் மனரீதியாகவோ, உடல்ரீதியாகவோ, ஒழுக்கம் சம்பந்தப்பட்ட வளர்ச்சியை அடைவதற்கு வழிநடத்தும். எதிர்பார்த்திருக்கிறபடி இப்படிப்பட்ட அனுபவங்கள் அநேக செயல்முறைகளை கற்றுக் கொடுக்கும். இந்த கீழ்ப்படிதலின் விளைவாக சீர்பொருந்துதலை பரிசாக பெறுவார்கள். கீழ்ப்படியாமல் போனால், இரண்டாம் மரணத்தை தண்டனையாக பெறுவார்கள்.

இந்தக் காரியங்கள் வசனங்களில் மிக தெளிவாக நமக்குமுன் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த யுகத்தில் "உங்கள் விசுவாசத்திற்கு ஏற்றபடி உங்களுக்கு கொடுக்கப்படும்" என்ற தெய்வீக கோட்பாட்டின்படியே நாம் தீர்க்கப்படுகிறோம் என்று வசனங்கள் தெளிவாக காட்டுகிறது . ஆனால் மேசியாவின் யுகத்தில் உலகத்தின் நியாயத்தீர்ப்பு எவ்வாறு நடக்கும் என்று வசனங்கள் தெளிவாக கற்பிக்கிறது. வெளி 20:12"மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்"

மேசியாவின் யுகத்தில் அனைவருக்கும் புத்திர சுவிகாரம் கொடுக்கப்படும் என்று நினைப்பது மிக தவறு. ஆயினும், இவர்கள் முழுமையாக தங்களை அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் நீதிமான்களாவதற்கு இவரே காரணராக இருப்பதினால், ஏற்ற நீதியில் நிலைநிற்க வேண்டும். முழுமையாக கீழப்படிந்து, தெய்வீக சட்டத்திற்கு முழுமையாக இசைந்திருந்து, நீதியின் சட்டங்கள் மற்றும் அன்பின் கட்டளைகளை பூரணமாக கடைபிடித்தால் மட்டுமே நித்திய ஜீவன் கொடுக்கப்படும். இந்த அளவுக்கு தேவனோடு இசைந்திருப்பவர்கள் தேவையான பலியைச் செலுத்துவார்கள்.

பாவமும், சாத்தானும் "இந்தத் தீமையான உலகத்தில் " இருக்கிறது. ஆனால் வரப்போகிற மேசியாவின் யுகத்தில் இவைகள் இராததினால், அங்கு பலிகள் தேவைப்படாது. வரக்கூடிய இராஜ்யத்தில் நீதிவாசமாக இருக்கும். அதில் நீதியான நியாயாதிபதி, ஆட்சி செய்வார் மற்ற அனைவரும் இசைவாக இருப்பார்கள். அந்த ஆட்சியில் ஒவ்வொரு அம்சங்களும் நீதியாகவும், உண்மையாகவும் அன்பாகவும் இருக்கும்.

திரும்பகொடுத்தலுக்கான வாய்ப்புகள் மனுக்குலத்திற்கு அழைப்பாக கொடுக்கப்படுகிறது. "பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள்.அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும்" (எரே 31:29,30) என்று தீர்க்கதரிசி சொன்ன வார்த்தைகள் நிறைவடையும். உபத்திரவ காலம் வரைக்கும் அதாவது கிபி 1915ம் வருடம் வரைக்கும் இந்தக் காலம் துவங்கவில்லை என்று நாம் அறிந்திருக்கிறோம். இந்த வருடத்திலிருந்து இராஜ்யம் பகிரங்மாக ஸ்தாபிக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் தீவிரமாக நடந்து கொண்டு வருகிறது. சீர்பொருந்துதலின் வாய்ப்பை பெற்று துணிகரமாக பாவம் செய்து மரித்துபோகிறவர்கள், ஆதாமின் பாவத்திற்காக அல்ல, தங்களுடைய பாவத்திற்காக மரிப்பவர்களாக இருப்பார்கள். ஆனால் தேவனுக்கு கீழ்படிந்திருப்பவர்கள் திரும்ப கொடுத்தலின் காலத்தில் தேவனுடைய ஆசீர்வாதங்களை ருசித்து, உண்மையான மனம் திரும்புதலை வெளிப்படுத்தி, உடனடியாக சீர்பொருந்த துவங்குவார்கள். இந்த அழைப்பின் கீழ் விசுவாசமுள்ளவர்கள் பரிசளிக்கப்படுவார்கள்.

மேசியாவின் யுகத்தின் ஆசீர்வாதங்கள், சுவிசேஷ யுகத்தின் முடிவுக்கு சற்று முன்னதாகவே துவங்கியிருப்பதை நாம் நன்கு அறிந்துள்ளோம். 1. இந்த வரிசையில் முதலாவது அறிவு, பின்பு விஞ்ஞான கண்டுபிடிப்புகள் - உலகத்தில் உள்ள மனுக்குலத்திற்கு ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகிறது. இவைகள் அனைத்தும் இந்நாள் வரைக்கும் கண்டிராத ஆசீர்வாதங்களாகும். இதுவே "கர்த்தருடைய நாளின் ஆயத்த" வேலைகளாகும். 2. சுவிசேஷ யுகத்தின் முடிவும் மேசியாவின் யுகத்தின் துவக்கமும் ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பதினாலே, இந்த விஞ்ஞான கண்டுபிடிப்புகள் அதாவது மேசியாவின் யுகத்திற்கான ஆசீர்வாதங்களோடு, மகா உபத்திரவத்தின் காலமும் துவங்குகிறது. இதில் இக்காலத்து அமைப்புகள், சமுதாயம், பொருளாதாரம், அரசியல் மற்றும் மதங்கள் அனைத்தும் தரைமட்டம் ஆகிவிடும். அதற்குப்பின் தேவனுடைய நன்மையான காரியங்கள் அவருடைய இராஜ்யத்தில் புதிதான அமைப்புகளோடு ஸ்தாபிக்கப்படும். 3. திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் இப்போது முழுமையாக சபையை வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது. அதாவது உலகத்தின் மேல் வரக்கூடிய ஆசீர்வாதங்கள் சபை முன்னதாகவே கண்டு, களிகூறுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆகவே தன்னுடைய இருதயத்தில் மேலான உள்ளுணர்வுகளோடும், துதியோடும், நன்றிகளை ஏறெடுக்கிறது. அவருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டு நம்மை நேசித்து "நம்முடைய பாவத்திற்காக மட்டும் அல்ல இந்த உலகத்தின் பாவத்திற்காகவும் தன்னையே பலிசெலுத்தினவருக்கும்" முழு மனதோடு நன்றி செலுத்த கடவோம்.

F106[P3] through F107:

சீர்பொருந்தும் காரியங்களைச் செயலாற்றி உண்மையான நீதிமானாக்கப்படுவதற்கு, விசுவாசம் மிக அவசியம் ஏனெனில் "விசுவாசம் இல்லாமல் தேவனுக்கு பிரியமாக இருப்பது கூடாத காரியம்." மேலும் சீர்பொருந்துதலுக்குரிய ஆசீர்வாதங்களைப் பரிசாக பெறுவதற்கு விசுவாசம் மிக அவசியம். ஆனால் இக்காலத்தில் "பரிசுத்தவான்களாக அழைக்கப்பட்டு" கிறிஸ்துவின் பங்காளிகளாகவும், புது சிருஷ்டிகளாகவும் மாறுவதற்கு தேவைப்பட்ட விசுவாசம், மேல் சொல்லப்பட்ட விசுவாசத்தைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. தேவனுடைய இராஜ்யத்தில் சாத்தான் கட்டப்பட்ட பின், கர்த்தரை அறிகிற அறிவினால் இந்தப் பூமி நிரப்பப்படும், அப்போது தெய்வீக வாக்குத்தத்தங்களின் நிறைவேற்றங்கள் அனைவராலும் புரிந்துக்கொள்ளப்படும். இப்போது விசுவாசத்தினால் மட்டுமே உணர்ந்து கொள்ளக்கூடிய காரியங்களை மனுக்குலம் அப்போது கண்டு, அவர்கள் பெற்ற அறிவினால் எளிதாக உணர்ந்து கொள்வார்கள். ஆனால் அவர்கள் பூரண நிலைமையை அடைவதற்கு அதற்கேற்ற விசுவாசம் கட்டாயம் தேவை. மேசியாவின் யுகத்தின் முடிவில் அவர்கள் பெற்ற விசுவாசத்தை செயலாற்றினால், அல்லது கிரியைகளினால் வெளிப்படுத்தினால் மட்டுமே உண்மையான நீதிமானாக்கப்பட்ட நிலையை அடையமுடியும். "அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள்

கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்." என்று அக்காலத்தைக் குறித்து அறிந்திருந்தாலும் அதற்கு எதிரிடையாக இக்காலத்தைக் குறித்து அறிந்திருந்தாலும் அதற்கு எதிரிடையாக இக்காலத்து சபையின் நியாயத்தீர்ப்பு "நாம் பெற்ற விசுவாசத்தின் " அடிப்படையில் நடந்துக்கொண்டிருக்கிறது. ஆயினும் அவர்கள் கிரியைகள் விசுவாசத்தோடு காணப்படவேண்டும். அதாவது அவர்களால் முடிந்த வரைக்கும் விசுவாசத்தை கிரியைகளினால் வெளிப்படுத்தவேண்டும். .

"மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது" (கலா 3:8) என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். நியாயப்பிரமாண உடன்படிக்கையின் அடிப்படையில் சீர்பொருந்தக்கூடிய காரியங்கள் நிறைவேறாமல், கிருபையின் பிரமாணத்தின் கீழ் நிறைவேறுவதை இந்த வசனம் காட்டுகிறது. ஆனால் மேசியாவின் யுகத்தில் புது உடன்படிக்கைக்குக் கீழ் கிருபையினால் சீர்பொருந்தப்படுவார்கள். அந்த உடன்படிக்கையின் கீழ் அனைவரும் தேவனையும் அவருடைய காரியங்களையும் நம்பி, ஏற்றுக்கொண்டு அதனால் பயனடையவேண்டும். இக்காலத்தில் நீதிமானாக்கப்பட்ட நிலையை அடைவதற்கும் வருங்காலத்திலும் நீதிமானாக்கப்பட்ட நிலையை அடைவதற்கும் மற்றொரு வித்தியாசமும் உண்டு. இக்காலத்தில் சரியான விசுவாசத்தோடும், பிதாவினுடைய ஐக்கியத்தோடும் எல்லாவிதமான பாதகமான நிலையிலும் நீதிமானாக எண்ணப்படுகிற நிலையை அடைகிறோம். ஆனால் மேசியாவின் யுகத்தில் சாதகமான எல்லா சூழ்நிலைகளின் மத்தியில், அவர்கள் இந்நிலையை பெறுவார்கள். அப்போது இந்த முழு உலகமும் மத்தியஸ்தரின் கரங்களுக்குள் இருக்கும். அதில் தேவனுடைய சித்தத்தின்படி கிரியை செய்பவர்கள், உண்மையாக நீதிமானாக்கப்பட்ட நிலை அடையும் வரைக்கும் திருத்தப்பட்டு, சீர்பொருத்தப்படுவார்கள். அதற்குப்பின் இந்த முழு உலகத்தையும் மாசற்றதாக பிதாவுக்கு முன் நிறுத்தி, தேவனும் பிதாவாக இருப்பவருக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். (1கொரி 15:24)

சில கேள்விகளுக்கான நீண்ட விளக்கம் தொடர்கிறது.

R2208-: - " தெய்வீக இரகசியங்களின் வெளிப்பாடு " [முதல் பாதி கட்டுரையைப் பார்க்கவும்]

(7ம் கேள்வியைக் காண்க).

"கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்" - சங் 25:14

தெய்வீகத் திட்டத்தை பொறுத்தவரைக்கும் ஏதாகிலும் இரகசியம் உண்டோ ? "அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை." என்று சொல்லும் அளவுக்கு தேவனுடைய ஏற்பாடுகள் எவ்வளவு தெளிவாக உள்ளது. சிறு பிள்ளைகளும் எளிதாக புரிந்துக்கொள்ளும் அளவுக்கு இரட்சிப்பின் திட்டத்திற்கான படிகள் மிக தெளிவாக உள்ளது அல்லவா ?

இல்லை, நிச்சயமாக இல்லை. தெய்வீக திட்டத்தைப் பொறுத்தவரைக்கும், எல்லா இடங்களிலும் வித்தியாசமானக் கருத்துக்கள் நம்பப்பட்டு வருகிறது. முற்றிலும் தவறாக இருக்கும் அநேக புறஜாதியாரின் கூற்றுக்கள் இருந்தாலும், கிறிஸ்தவர்கள் மத்தியிலும் பகைமைகளும், விரோதங்களும் எழும்புவதற்கான வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகிறது. உலகத்தில் உள்ள ஞானமுள்ள கிறிஸ்தவ மண்டலம், தேவனுடைய உள்ளார்ந்த நோக்கங்களையும், அவருடைய சிருஷ்டிகளைப்பற்றிய காரியங்களையும் பற்றி எத்தனை விதமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் ? கிறிஸ்தவ மண்டலத்தின் வெவ்வேறு பிரிவுகளில் காணப்படும் வெவ்வேறு கூற்றுக்கள் - இந்த வித்தியாசங்களை தெளிவாகக் காட்டுகிறது. "இலவசமான கிருபை" யின் கீழ், தேவன் அவருடைய அனைத்து சிருஷ்டிகளுக்கும் ஒரே விதமான வாய்ப்பைக் கொடுத்திருக்கிறார். ஆயினும், நம்முடைய கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அனைத்தும், ஒரே விதமான வாய்ப்புகளாக தோன்றவில்லை, அல்லது அனைவருக்கும் ஒரே விதமாக கூறப்பட்டதுபோல தெரியவில்லை அல்லது அனைவருக்கும் இதை பெற்றுக்கொள்வதற்கு ஒரே விதமான சூழ்நிலை இருப்பது போல தெரியவில்லை. ஆனால் மற்றொரு பக்கத்தில் பார்க்கும்போது "தேர்வுக்காக" கொடுக்கப்படும் பொதுவான அழைப்பில் அனைவருக்கும் கொடுக்கப்படும் கிருபைக் குறைக்கப்படுகிறது. ஆகவே, அதில் சிலர் மட்டுமே தேர்வுக்கு உட்படுகிறார்கள். இந்தக் கருத்துக்கள் மட்டுமல்ல. கிறிஸ்துவ மண்டலத்தில் இன்னும் பல முரண்பாடான கருத்துக்கள் காணப்படுகிறது. அநேக ஆன்மீகவாதிகள்,

பேராசிரியர்கள் மற்றும் சிறந்த வல்லுநர்களின் கருத்துக்களினால், பேதைகளும் பாதை மாறக்கூடிய சூழ்நிலையில் இப்போது அகப்பட்டிருக்கிறார்கள்.

தேவனுடையத் திட்டம் இரகசியமானது. ஆகவே, நம்முடைய பாடத்திற்கான வாக்கியம் சொல்லர்த்தமாகவே உண்மை என்று தெரிகிறது. மேலும் கடந்த யுகங்களிலும், காலங்களிலும் "தேவனுடைய இரகசியம்" என்பதை பொறுத்த வரைக்கும் மற்ற வசனங்களில் சொல்லப்படும் வாக்கியங்களும் ஒத்துப்போகிறது. இந்த உண்மைக்கு இசைவாக அனைத்து தீர்க்கதரிசிகளும் தெளிவுள்ள வகையிலும், உவமைகளின் வழியாகவும் பேசினார்கள். மிக பெரிய தீர்க்கதரிசியாகிய நம்முடைய ஆண்டவரும் "உவமைகளின் வழியாகவே பேசினார் என்று வாசிக்கிறோம். குறித்த காலத்தில் பரிசுத்த ஆவி கொடுக்கப்படும், அப்போது சகல சத்தியத்திற்குள்ளும் உண்மையான சீஷர்கள் வழிநடத்தப்படுவார்கள் என்று வாக்களித்தார். "சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" (யோவ 16:13) தேவனுடைய சில இரகசியங்கள் உடனடியாக புரிந்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது. சில இரகசியங்கள் இந்த யுகம் முழுவதிலும் படிப்படியாக புரிந்துக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இன்று நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தெய்வீக இரகசியம், சுவிசேஷ யுகத்தின் முடிவு வரைக்கும் மறைக்கப்பட்டிருந்தது. அவர் இதை உலக தோற்றத்திற்கு முன்னிருந்தே இரகசியமாக வைத்திருந்தார். (வெளி 10 : 7)

தேவனுடைய ஆவியினால் ஏற்றக்காலத்தில் சுவிசேஷ யுகத்தின் போது, படிப்படியாக புரிந்துக்கொள்ளக்கூடிய தேவனுடையத் திட்டத்தின் இரகசியம், பொதுவான உலகத்திற்கு வெளிப்படுத்தப்படாமல் ஒரு விசேஷித்த வகுப்பாருக்கு மட்டுமே அருளப்பட்டது. " ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்","நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" - 1கொரி 2:14,10 என்று அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவாக குறிப்பிடுகிறார்.

"தேவனுடைய இரகசியம் அவருக்கு பயந்தவர்களிடம் இருக்கிறது." நம்முடைய பாடத்திலும் இதே சிந்தை நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த யுகம் முழுவதும் இது உண்மையாகவே இருந்து வருகிறது. சுவிசேஷ யுகம் முடிவில் அவருக்கு பயந்து, அவரை கனப்படுத்தக்கூடிய இந்த விசேஷித்த வகுப்பார் மட்டுமே தேவனுடைய இரகசியங்களைப் புரிந்துக்கொள்ளக்கூடிய வாய்ப்பை பெறுகிறார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேவனுக்கு பயப்படக்கூடியவர்களுக்கும், மனுஷருக்கு பயப்படக்கூடியவர்களுக்கும், அவனுடைய கிரியைகள், அமைப்புகள், அவனுடைய விசுவாச அறிக்கைகளில் உள்ள வேறுபாடுகளை நாம் முதலில் புரிந்துக்கொள்ளவேண்டும். "மனுஷனுக்கு பயப்படுகிற பயம் கண்ணியை வருவிக்கும்" இந்தப் பயம் அறிவு மற்றும் கிருபையின் வளர்ச்சியை நிச்சயமாக தடுத்துவிடும். மேலும் "கர்த்தருடைய இரகசியங்களை" புரிந்துக்கொள்ளுவதையும் தடை செய்யும். ஆனால் "தேவனுக்கு பயப்படுகிறதே ஞானத்தின் ஆரம்பம்", மேலும் இந்த ஞானத்தில் தொடர்ந்து வளர்ச்சி அடைந்து, தேவனை அறிகிற அறிவில் நம்மை பூரணப்படுத்தும். அதனால் அவர்மேல் முழு நம்பிக்கை வைத்தவர்களாக, நெருங்கிய உறவு கொண்டவர்களாக" அவருடைய இரகசியங்களை" புரிந்துக்கொள்ளுதலை பெறுவதற்கான புத்திர சுவிகாரத்தையும் பெறலாம்.

ஆபிரகாம் தெய்வீக நம்பிக்கையைக் கொண்டிருந்ததினால் அவர் "தேவனுடைய சிநேகிதன்" என்று அழைக்கப்பட்டார். ஆகவே மற்றவர்கள் அறிந்திராத காரியங்களை தேவன் ஆபிரகாமுக்கு அறிவித்தார். அந்தக் காலத்தில் ஒருவருக்கு தேவனுடைய காரியத்தை அறிவிக்க வேண்டியதாக இருந்தது ஆகவே "கர்த்தரின்

இரகசியம்" ஆபிரகாமுக்கு அறிவிக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக - சோதோம் அழிக்கப்படும் முன் "நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ? " என்று கர்த்தர் சொன்னார். ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதனாக இருந்தபடியால், மனுக்குலத்தின் இரட்சிப்பின் தெய்வீகத் திட்டத்தின் சில காரியங்கள் அவருக்கு அறிவிக்கப்பட்டது. "உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார்.

தேவனைத் தவிர ஆபிரகாமுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ, இந்த வாக்கியத்தை முழுமையாக புரிந்துக்கொள்ள இயலாது அல்லது இரட்சிப்பின் தெய்வீகத் திட்டத்தின் ஆழத்தையும், அகலத்தையும், நீளத்தையும், உயரத்தையும் புரிந்துக்கொள்ளமுடியாது. ஆனாலும் இது முழு கவிசேஷத்தையும் கொண்டிருக்கிறது. அதே போல நம்முடைய ஆண்டவர் தம்முடைய முதலாம் வருகையில் இஸ்ரயேல் வீட்டாரிடம் உவமைகளினால் பேசினார். ஆனாலும் சிலர் மட்டுமே முழு விசுவாசத்தோடும், கீழ்ப்படிதலோடும், தேவனிடம் தங்களை அர்ப்பணித்தார்கள். இவர்களை தேவன் சிநேகிதர்களை போல நடத்தினார். அவர்களுக்கு அநேக காரியங்கள் விவரிக்கப்பட்டது. ஆகவே இயேசு பேசின உவமைகளின் அர்த்தங்களைப் பற்றி கேட்டபோது "இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்." மீண்டுமாக "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவா15:15) என்றார்.

தெய்வீகத் திட்டத்தின் இரகசியங்கள், உவமைகளிலும், எண்களிலும், அடையாளங்களிலும், மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. இவைகள் உடன்படிக்கை செய்த பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தி உலகத்திற்கும் பேர்க்கிறிஸ்தவர்களுக்கும் மறைக்கப்பட்டது. இவைகள் மிக ஆழமாக வெளிப்படுத்தலின் புத்தகத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது. சொல்லியிருக்கிறபடி, யோவானுக்கு இந்த அடையாளங்கள் தரிசனமாக காட்டப்பட்டது. பரலோக மகிமைகள் அடையாளங்களாகக் காட்டப்பட்டது. தம்முடைய வலது கரத்தில் 7 முத்திரைகளை முத்திரிக்கப்பட்ட ஒரு சுருளை பிடித்தவராக, பிதாவாகிய தேவன் தம்முடைய மகிமை பொருந்திய சிங்காசனத்தில் அமர்ந்திருப்பதாக காட்டப்பட்டது. - இந்த உலகத்தின் இரட்சிப்பின் திட்டம் ஒருவரும் அறியாததும், தேவன் மட்டுமே அறிந்த இரகசியத்தின் மறைபொருள் இதுவே, - "புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூறுகிற பலமுள்ள ஒரு தூதனையுங் கண்டேன்." என்ற அடையாளமாக ஒரு சத்தத்தை யோவான் கேட்கிறார். தேவனுடைய வழிநடத்துதலுக்கு தன்னை முழுமையாக ஒப்புவிப்பதற்கு பாத்திரவானாக இருப்பவர் யார் ? மிக பெரிய தெய்வீக திட்டத்தை நிறைவேற்றுபவர் யார் ? எவ்வளவு அற்புதமான ஞானம் மற்றும் அன்பின் நீளத்தையும், அகலத்தையும், ஆழத்தையும், உயரத்தையும் புரிந்துக்கொள்வதில் பாத்திரமாக இருப்பவர் யார் ? என்ற சத்தம் கேட்கப்பட்டது. அமைதி நிலவியது. இதற்கு ஒருவரும் பாத்திரவான் இல்லை என்று எண்ணி யோவான் மிகவும் அழுதார். ஆகவே தெய்வீகத் திட்டம் முழுமையாக வெளிப்படுவதற்கு இனி வாய்ப்பில்லை என்று நினைத்து அழுதார். - " அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான்."

ஆம், நம்முடைய அன்பான இரட்சகரின் கொடூரமான சோதனைகள் மற்றும் உபத்திரவங்களே அவரை தகுதிப்படுத்தியது. தன்னைத்தான் அவர் தாழ்த்தி, பிதாவினிடம் தான் கொண்டிருந்த மகிமையை விட்டுக் கொடுத்து, மனிதனாகி, இறுதியில் அனைவருக்காகவும் தன்னுடைய ஜீவனையே ஈடுபலியாக கொடுத்தார். மொத்தத்தில் அவர் இரண்டு வேலைகளை செய்தார். 1. அவருடைய சொந்த இரத்தத்தினால் நம்மை மீட்டார். 2. அடுத்து, பிதாவுக்கு கீழ்ப்படிந்து, தன்னை ஒப்புக்கொடுத்து, கடந்த யுகங்களிலும் காலங்களிலும் மறைக்கப்பட்ட " தேவனுடைய சகல இரகசியமான" காரியங்களை நிறைவேற்றி, அவருக்கேற்ற பிரிதிநிதியாக தன்னையே நிரூபித்தார் - எபே 3:3-5

ஆண்டவரின் முப்பதாவது வயதில், அவருடைய மனத்தாழ்மையினால் வந்த மேன்மையான நிலை அனைத்தும் தரிசனமாக காட்டப்பட்டது. இவைகள் அனைத்தும் "அடிக்கப்பட்ட ஆட்டைப்போல" அடையாளமாக காட்டப்பட்டது. அபிஷேகிக்கப்பட்ட கண்களுக்கு இந்தக் காட்சி எத்தனை வல்லமையாக தோன்றும். அதற்குப்பின் அடையாளமாக வரும் காட்சிகள் என்னவெனில் - "இரகசியமான தேவனுடைய சித்தத்தை", யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாட்டை, உலக தோற்றத்திற்கு முன் திட்டமிட்ட தெய்வீக நோக்கத்தை பெற்றுக்கொள்ள ஆட்டுக்குட்டியானவர், பிதாவாகிய தேவனிடம் செல்வதை காண்கிறோம். இதற்குமுன் இந்த உலகத்தை தன்னுடைய சொந்த இரத்தத்தினால் இரட்சிக்கக்கூடிய வழியை ஆயத்தப்படுத்தினார். அதற்குப்பின் "தேவனுடைய இரகசியம்" "கர்த்தருடைய ஆட்டுக்குட்டியானவரிடம்" கொடுக்கப்பட்டது.

அதற்குப்பின் முத்திரைகள் உடைக்கப்பட்டது. தெய்வீக நோக்கத்துடன் ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு காரியங்கள் வெளிப்பட்டது. ஒவ்வொரு முத்திரை உடைக்கப்படும்போது, அந்தச் சுருள் கொஞ்சம் கொஞ்சமாக திறக்கப்பட்டு "தேவனுடைய இரகசியங்கள்" கொஞ்சம் கொஞ்சமாக தெளிவடைந்து, ஜனங்களுக்கு புரிந்துக்கொள்ள வழிவகுத்தது. ஆகவே சுவிசேஷ யுகம் முழுவதிலும் தேவனுடைய ஜனங்கள் "கர்த்தருடைய இரகசியங்களை" -(தெய்வீகத் திட்டம்) - அறிந்துக்கொள்ளுவதற்கான சிறப்புரிமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் கடைசி முத்திரை உடைக்கப்படும் வரைக்கும் அதாவது அந்தச் சுருள் முழுமையாக திறக்கப்படும் வரைக்கும் தேவனுடைய திட்டங்கள் முழுமையாக வெளிப்படவில்லை. "ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக்கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி: நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன்" "வானத்தையும் அதிலுள்ளவைகளையும், **பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவரும்,** சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிற வருமானவர்மேல் ஆணையிட்டுச் சொன்னான்"வெளி 5:1, 10:7

இந்த உலகத்தில் வெவ்வேறு பகுதிகளில் வாழும் தேவனுடைய ஜனங்கள், தேவனுடைய திட்டங்களைக் குறித்து ஒரே சிந்தை உடையவர்களாக இருப்பார்கள் என்று நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் வசனங்கள் தெளிவாக காட்டுகிறது. ஆகவே தேவனுடைய ஜனங்கள் என்று தங்களை சொல்லிக்கொள்பவர்கள், தாங்கள் எந்த நிலையில் உள்ளவர்கள் என்று முந்தி அறிந்துக்கொள்ளவேண்டும். இவர்கள் "ஊழியக்காரர்களா "அல்லது தேவனோடு நெருங்கிய ஐக்கியத்தோடிருப்பவர்களும், அவருடைய பரிசுத்த ஆவி என்னும் அச்சாரத்தை பெற்று, பரலோக பிதாவின் திட்டங்களை அறிந்த தேவ புத்திரர்களாக, எண்ணப்படுகிறவர்களா, என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

நம்முடைய பாடப் பகுதி, தேவனிடத்தில் கொண்ட பயபக்தியை பற்றி மட்டுமே பேசுகிறது ஆனால், நாம் பார்த்தபடி இந்தப் பயபக்தியானது பிதாவின் சித்தம் மற்றும் அவருடைய பணிகளை செய்வதற்கு நாம் பெறும் கிருபையின் ஆழமான கிரியைகளுக்கு தொடர்ந்து வழிநடத்துகிறது. இந்த வகுப்பார் மட்டுமே தேவனுக்கேற்ற பயபக்தியை உடையவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் "..ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்: கர்த்தர் கவனித்துக் கேட்பார்; கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது.என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன்"

இவர்களே, தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களும், கிறிஸ்துவின் சரீரமும், ஜெயித்தவர்களும், சிறுமந்தையும், கிறிஸ்துவோடுக்கூட ஆட்சி செய்யும் இராஜரீகமான ஆசாரியர்களுமாக, இந்தப் பூமியின் முழு குடும்பங்களை ஆசீர்வதிக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இப்படியாக, மகா உபத்திரவத்தின் காலத்திற்கு முன்னதாகவே தேவன் அவர்களை மீட்டு தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல கடாட்சிப்பார்.

ஆசரிப்புக்கூடாரம் ஸ்தாபிக்கப்பட்ட போது ஆவிக்குரியவைகளை அடையாளப்படுத்தும் அழகான பொன் மேஜை, குத்துவிளக்கு, தூபபீடம் இன்னும் மற்ற அனைத்து காரியங்களும் இஸ்ரயேலின் பார்வைக்கு மட்டும் அல்லாமல், மற்ற லேவியர்களின் பார்வைக்கும் மறைக்கப்பட்டிருந்தது. அதாவது அங்கு வேலை செய்யும் லேவியர்களும் அவைகளை பார்க்க அனுமதிக்கப்படவில்லை. இவைகளை காணக்கூடிய பாக்கியத்தை ஆசாரியர்கள் மட்டுமே பெற்றிருந்தார்கள். ஆகவே இவர்கள் ஆவிக்குரிய "இராஜரீக ஆசாரியர்கள்" அடையாளப்படுத்துகிறார்கள். ஆகவே இவர்கள் மட்டுமே தேவனுடைய மறைப்பொருட்களையும், இரகசியங்களையும் புரிந்துக்கொள்ளக்கூடிய சிறப்புரிமையை பெற்றவர்கள்.

R3153[col 1 P5 to end of article]-"கிறிஸ்துவின் சீஷர்கள்" (14-ம் கேள்வி காணக)

"உண்மையான சீஷர்கள்" என்று நம்முடைய ஆண்டவர் குறிப்பிடும் போது "பெயர் அளவில் சீஷர்கள்" இருப்பதாகவும் வலியுறுத்துகிறார். நாம் தொடர்ந்து உண்மையான சீஷர்களாக இருக்க விரும்புவதால் - "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள;" (யோவா 8:31) இந்நிலையை நாம் தக்கவைத்து கொள்ளவேண்டும். மாய்மாலமாக, பெயர் அளவில் சீஷர்களாக இருப்பவர்களை தேவன் நிச்சயமாக அருவருக்கிறார்.

கிறிஸ்துவை நம்முடைய இரட்சகராக விசுவாசித்து ஏற்றுக்கொள்வதே - கிறிஸ்துவ வாழ்க்கையின் முதல் படியின் ஆசீர்வாதமாக இருக்கிறது. ஆனால் இதற்குப்பின் கிடைக்கும் ஆசீர்வாதங்கள், நாம் தொடர்ந்து அவருடைய வார்த்தைகளைக் கீழ்ப்படிந்து, உண்மையான சீஷர்களாக இருப்பதை சார்ந்தே இருக்கிறது. இது கடினமானதுமல்ல. ஆனால் மனித பெருமையானது எளிமையான தெய்வீக சத்தியத்தை விட்டுவிட்டு சொந்தமான புது கூற்றுக்களையும், மனித தத்துவங்களையும் தேடி அலையக்கூடியதாக இருக்கிறது. உலக அளவில் ஞானமாகவும், மிக பெரிய மனிதர்களாக இருக்கவேண்டும் என்று விரும்புபவர்கள் இப்படியாகவே செயல்படுகிறார்கள்.

தொடர்ந்து உண்மையான சீஷர்களாக இருப்பவர்கள், சத்தியத்தை தொடர்ந்து அறிந்து கொள்வார்கள். ஆனால் "எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிறார்கள் " (11தீமோ 3:7) என்று சொல்லப்படுகிறது. தேவனுடைய வார்த்தைகளில் தொடர்ந்து நிலைத்திருப்பதை சிலர் விட்டுவிடுகிறார்கள். அதற்குப் பதிலாக மனித தத்துவங்களையும், தேவனுடைய வார்த்தைகளை எதிர்க்கும் கூற்றுக்களையும் நாடுகிறார்கள். இவைகள் மத்தியில் சத்தியத்தை தேடுகிறவர்கள் கண்டடைவார்கள் என்று எங்கும் வாக்களிக்கப்படவில்லை. ஏனெனில் அவர்கள் என்றுமே சத்தியத்தை கண்டடையமாட்டார்கள். சரியான தெய்வீக வழிகளை தவிர தெய்வீக சத்தியத்தை ஒருவரும் கண்டடைய முடியாது. நம்முடைய ஆண்டவரும், அப்போஸ்தலர்களும், தீர்க்கதரிசிகளுமே அவ்வழியை நமக்குமுன் வைத்திருக்கிறார்கள். நம்மை கிறிஸ்துவுக்குள் வளர்ச்சி அடைவதற்கு ஊக்குவிக்கும், இவர்களின் எழுத்துக்களைப் படித்து, தியானித்து, அதை நம்பி, நம்முடைய குணலட்சனங்களை விசுவாசத்தோடு, இவைகளுக்கு இசைவாக பொருத்துவதே தொடர்ந்து தேவனுடைய வார்த்தைகளில் நிலைத்திருப்பதாகும்.

ஆனால், ஒவ்வொரு காலத்திலும் கிறிஸ்துவின் சரீரமாக இருக்கும் நம்முடைய சகோதரர்கள் மத்தியிலிருந்து கொடுக்கப்படும் சகல விதமான உதவிகளைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். (எபே 4:11-15, 1கொரி 12:13, 14) கிறிஸ்துவின் சரீரத்தை போஷிப்பதற்காக ஆண்டவர் எப்போதும் ஆயத்தமாக இருக்கிறார். ஆனால் ஒவ்வொரு சரீர அங்கங்களும் மிக ஜாக்கிரதையாக மற்ற அங்கத்தினர்கள் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கக்கூடிய வார்த்தைகளை போதித்து தங்களுடைய கடமையை நிரூபித்து கொள்ளவேண்டும்.

இப்படியாக தொடர்ந்து நாம் தேவனுடைய வார்த்தைகளில் உண்மையான விசுவாசமுள்ள சீஷர்களாக நிலை நின்றால், நாம் உண்மையாக" சத்தியத்தை அறிந்துக் கொண்டு, "இக்காலத்து சத்தியத்தில் நிலைத்திருப்போம். "விசுவாசத்தில் ஆழமாக வேர்க்கொண்டிருப்போம். மேலும் நமக்குள் இருக்கும் நம்பிக்கைக்கு சரியான காரணத்தை கொடுக்க அறிந்திருப்போம். பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தில், நல்ல போராட்டத்தைப் போராடி, நல்ல சாட்சி பகிர்ந்து, கிறிஸ்துவுக்குள் நல்லபோர் சேவகர்களாக தீங்கனுபவித்து, முடிவு பரியந்தம் நிலைநிற்போம். இந்தச் சத்தியத்தின் அறிவை ஒரே நாளில் பெற்றுக்கொள்ளமுடியாது. ஆனால்

சரியான வழியில் செல்லும் போது படிப்படியாக இந்தச் சத்தியத்தை கற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு படி நிச்சயமாக முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். ஒவ்வொரு படியும் மேலான சத்தியங்களை புரிந்துக்கொள்ளு அறிவைக்கொடுக்கும். அதனால் ஆசீர்வதிக்கப்பட்ட ஆவிக்குரிய குணங்களை ஸ்தாபிக்கப்படும்.

இப்படியாக, பெற்றுக் கொள்ளப்படும் சத்தியம் படிப்படியாக சுத்திகரிப்பின் வல்லமையை நம்முடைய வாழ்க்கையில் அதிகரித்து, ஆசீர்வதிக்கப்பட்ட ஒன்பது ஆவியின் கனிகளையும் நமக்குள் வளர்ச்சி அடைந்து பூரணப்படும்.

இப்படியாக, இந்த உண்மையான சீஷர்கள் சத்தியத்தை அறிந்து, அதனால் சுத்திகரிக்கப்படுவார்கள் என்று நம்முடைய ஆண்டவரும் உரைத்திருக்கிறார். "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்." சத்தியத்தைப் பெற்றவர்கள் சில ஆசீர்வதிக்கப்பட்ட அனுபவங்களினால் பெற்ற வல்லமையை வைத்து அதை உணர்ந்துக் கொள்ளமுடியும். நன்மையானதும், உண்மையான இருதயத்தில் பெற்ற சத்தியம், உடனடியாக, பாவத்தின் செயல்பாடுகளையும், அறியாமையையும், மூடப்பழக்கங்களையும், பயத்தையும் தகர்க்க துவங்குகிறது. நம்முடைய இருதயத்தையும், சிந்தைகளையும் அலசி ஆராய்ந்துப் பார்க்கும். சத்தியத்தின் வெளிச்சத்தில் இருளான பாவங்கள் நிலை நிற்பதில்லை. மேலும் பாவத்தில் தொடர்ந்து நிலைநிற்பவர்கள், அதன் அபூரணத்தை எடுத்து காட்டுவதற்குத் தேவையான வெளிச்சம் பெற்றுக்கொண்ட பின்னும் பாவத்தில் நிலைத்திருந்தால் அந்த வெளிச்சம் அவர்களை விட்டு போய்விடும்.

உண்மையான வெளிச்சத்திற்கு முன்பாக அறியாமையும், மூட நம்பிக்கைகளும் மறைய வேண்டும். விடுதலை பெறக்கூடிய இந்த உணர்வுகள் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டதாக இருக்கும். ஆனால் மில்லியன் கணக்கானோர் இன்னும் இப்படிப்பட்ட கசப்பான நுகத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பயத்தினாலும், தப்பறையான நம்பிக்கையினாலும், சாத்தானுடைய சில வஞ்சகத்தில் அகப்பட்டு, (தேவனுடைய நித்திய ஆக்கினை) ஆவிக்குரிய வளர்ச்சியில் குறைவாக காணப்படுகிறார்கள். ஏனெனில் இவர்கள் தெய்வீக நியமனத்தை மாயமாகவே கோருகிறார்கள். சத்தியத்தை பெற்றவர்கள், அசத்தியமான காரியங்களிலிருந்து மிக பெரிய அளவில் தப்பித்திருக்கிறோம். சாத்தானோடு கட்டப்பட்டிருந்த கட்டுகள் துண்டிக்கப்பட்டு விட்டது. கிறிஸ்துவின் மூலம் தேவனுக்கே நன்றிகளை ஏறெடுப்போம்.

இந்த முழு உலகத்தின் மேல் வரும் பேராபத்தின் பயத்திலிருந்து நாம் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். இந்நாள் வரைக்கும் மிக பெரிய அளவில் ஆட்சி செய்து வந்த சகல அமைப்புகளும் பயங்கரமாக அசைக்கப்படும். அனைவரும் வரக்கூடிய பயங்கரங்களை நினைத்து அஞ்சுகிறார்கள். அனைவரின் பயங்களும் அதிகரித்து கொண்டே இருக்கிறது. வரக்கூடிய அபாயங்கள், நாளுக்கு நாள் கண்களுக்கு புலப்படுகிறது. ஆனாலும் இதற்கு மத்தியில் இன்னும் சில வருடங்களில், இந்த உலகம் மிக பயங்கரமான நிலையை கடக்க வேண்டும் என்று வாக்கு மாறாத தேவனுடைய வார்த்தைகள் முழு உறுதியளிக்கிறது. உண்மையான கிறிஸ்துவின் சீஷர்கள், அவருடைய வார்த்தைகளில் நிலைத்திருப்பவர்கள், பயமில்லாதவர்களாக, மகிழ்ந்து களிக்கூறுவார்கள். ஏனெனில் இந்தக்கறைப்பட்ட உலகத்தின் ஆதாரங்கள் அல்லது தூண்களை முற்றிலுமாக அழிப்பதற்கு தேவன் இந்தப் பெரிதான அழிவை அனுமதிக்கிறார் என்பதை தெளிவாக அறிந்திருக்கிறார்கள். சத்தியத்தின் கட்டளைகளின்படி இப்படிப்பட்ட சூழ்நிலைகளின் அவசியத்தை உணர்ந்து, மனுஷனுடைய கோபம் தேவனுடைய மகிமையை விளங்கப்பண்ணும் என்ற தெய்வீக பராமரிப்பில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குத்தத்தம் - "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.." இப்படிப்பட்ட கிருபையை தேவனிடமிருந்து பெற்றவர்கள், தொடர்ந்து அதில் நிலைத்திருக்கலாம் அல்லவா ? தவறான போதனைகளை நாம் நாடாமல், எல்லா சூழ்நிலைகளிலும் விசுவாசமுள்ளவர்களாக இருந்து எல்லா தவறுகளையும் எதிர்த்து நிற்போம் அல்லவா ? ஆகவே, நம்முடைய விசுவாசத்தின் கிரியைகளினால் நம்முடைய புரிந்துகொள்ளுதலை நிரூபிப்போமாக.

பொறுமை

1.பொறுமை என்ற கிறிஸ்தவ அடிப்படையான குணலட்சணத்தின் முக்கியத்துவம் என்ன?

யாக்கோபு 1:4 -"நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது."

R 3090[col. 1 P2] :-

"நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, "பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது." ஆம், இந்தப் பொறுமையானது சகல நல்ல குணங்களுக்கும் எளிதாக வழிவகுக்கும். ஏனெனில், மற்ற அனைத்து குணங்களையும், பொறுமையின் கிரியைகள் தொடர்ச்சியான சுயக்கட்டுப்பாடு மற்றும் ஒழுக்கத்தின் மூலமே வளர்ச்சியடைய முடியும். பொறுமையைச் செயலாற்றாமல் கிறிஸ்துவ வாழ்க்கையில் நாம் ஒரு அடிக்கூட முன்னேற முடியாது. இந்த ஒரு குணமானது கிறிஸ்தவ குணலட்சணங்களுக்கு அழகு சேர்ப்பதாகவும், உலக மக்களின் நம்பிக்கையை ஜெயிக்கக்கூடியதாகவும், தேவனுடைய சத்தியத்தினால் ஊக்குவிக்கப்பட்டு கிருபை நிறைந்த அவரை மகிமைப்படுத்துகிறது. மனிதனுடைய அபூரணத்தைப் பூரணப்படுத்தவும், பலவீனங்களை மேற்கொள்ளவும் தெய்வீகக் குணங்களைப் பெற்றுக்கொள்ள நாம் படும் வேதனைகளைச் சகிக்கவும், நீடிய பொறுமையோடு கூடிய தாழ்மை மிக அவசியமானது. இது கோபங்களைத் தணித்து, இரக்கத்தைப் பெருகச் செய்யும். நீதி மற்றும் சத்தியத்தின் பாதையில் செல்ல தீவிரிக்கும். தன்னுடைய அபூரணத்தை உணர்ந்து மற்றவர்களுடைய குறைகளையும் அபூரணமானக் குணங்களையும் இரக்கத்தோடு மன்னிக்க நம்மை பக்குவப்படுத்தும்.

R3059 [col. 2 P3]: -

பொறுமையைக் குறித்து தேவனுடைய வார்த்தை அல்லது செய்தி என்னவெனில், "நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது." (யாக்கோபு 1:4) - தேவனுடைய இந்த வார்த்தை அவருடைய வாயிலிருந்து புறப்பட்டதன் நிமித்தம், இந்தத் தெய்வீக ஆலோசனை நாம் பூரணப்படுவதற்கு எவ்வளவு முக்கியமாக இருக்கிறது . தேவன் நமக்கு விதித்திருக்கும் அளவுகோலை எட்டிப்பிடித்து நம்முடைய விசுவாசத்தை நிரூபிப்பதற்கு முன்னமே ஆண்டவரிடத்தில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தை வெளிப்படுத்தத் தேவையான சோதனைகளைப் பெற்றதாகக் கற்பனை செய்யலாம். ஆகவே நமக்குள் பொறுமை எவ்வளவு தேவை என்பதை தேவன் தெளிவாக விவரிக்கிறார் - "..உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்.. " (1பேதுரு 4:12) நாம் காணக்கூடிய மற்றும் அனுபவிக்கும் பிரச்சனைகளில் பொறுமையாக இருக்கும் பட்சத்தில், சுவிசேஷ யுகத்தில் சபையாக அழைக்கப்படுபவர்களுக்குத் தேவன் கொடுக்கும் மகிமை, கனம் மற்றும் அழியாமையைப் பெறும் அளவிற்கு நம்மில் வளரக்கூடிய கிருபை, ஞானம் மற்றும் புரிந்துகொள்ளும் திறனை அவர் கூட்டிக் காட்டுகிறார். இந்தத் தகுதியை அனுபவிக்கும் ஒவ்வொருவரும், கட்டாயமாகப் பரிசோதிக்கப்பட்டு, முயற்சி செய்து தேவனிடத்தில் தங்களுடைய முழுக் கீழ்ப்படிதலையும் நீதியின் கோட்பாடுகளாகிய - நியாயம், சத்தியம், அன்பு மற்றும் கேள்விகளுக்கு அப்பாற்பட்ட சகலத்திலும் தங்களை நிரூபித்துக் காட்டுவது மிக அவசியமானதொன்றாகும். நம்முடைய இரட்சிப்பின் அதிபதியோடு இராஜ்யத்தைப் பகிர்ந்துக் கொண்டு, சகலத்தையும் "ஜெயித்து" அனைத்தையும் சுதந்தரிக்கும் முன் நம்முடைய குணநலன்கள் மேற்கூறிய கோட்பாடுகளில் மிக உறுதிப்பட்டு, நிலைக்க வேண்டும். இரட்சிப்பின் அதிபதியைப் பூரணப்படுத்துவதற்கு, சோதிக்கப்பட்டு, பாடுபட்டு நிரூபிக்க வேண்டியது அவசியமானால், கோபாக்கினையின் பிள்ளைகளாக அவருடைய சுத்த கிருபையினால் மட்டுமே நீதிமானாக்கப்பட்ட நாம் நிச்சயமாக தேவனுக்கு முன் நம்முடைய குணலட்சணங்களை நிரூபிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

R2793 [col. 1P4]: -

வரவிருக்கும் மகிமை அல்லது நம்முடைய குணலட்சணங்களின் நம்பிக்கை அனைத்தும் தேவனுடைய வாக்குறுதிகளை அஸ்திபாரமாகக் கொண்டிருக்கிறது. நாம் இந்தச் சத்தியத்தின் பரிட்சையை எந்தச்

சூழ்நிலையிலும், எந்த நிலையிலும் விட்டுக்கொடுக்காமல், சத்தியத்தை வார்த்தையினால் மட்டும் அல்ல, ஆவியினாலும் அன்பினாலும் பற்றிக்கொள்ளக்கடவோம். ஏனெனில், இதுவே உண்மை. மேலும் இது அற்புதமும் மகிமையும் கூட. இந்தச் சத்தியத்தை நாம் பற்றிக்கொள்ளும் பொழுது யாரும் நம்மை திசைத்திருப்பி விடாதபடிக்கும், நாம் அதை பற்றிக்கொள்ள தடை செய்பவர்களுக்கும் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மேலும் தேவனுடைய வார்த்தைகளை நாம் பயன்படுத்தும் போது, நாம் வஞ்சிக்கப்பட்டு, நம்மை நாம் குருடாக்கிக்கொண்டு, நாமே நமக்கு தடை விதிக்காதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நீடிய பொறுமையினால், நாம் கிறிஸ்துவின் குணலட்சணங்களை அப்பியாசப்படுத்துவது மட்டும் அல்ல, நாம் எதிர் நோக்கும் துன்பங்கள், சோதனைகள், வேதனைகள் அனைத்தையும் சந்தோஷத்துடன் சகிக்க வேண்டும். இதுவே நம்முடைய இறுதி பரிட்சைக்கு அனுமதிக்கும் தகுதியாகும். இதன் மூலம் நம்முடைய குணலட்சணங்கள் வளர்ச்சி அடையும் என்பதை நம்முடைய ஆண்டவர் மலை பிரசங்கத்திலே குறிப்பிடுகிறார். பொறுமையின்றி பூரண அன்பைப் பெற்றுக்கொள்ளவும், அதை தக்கவைத்துக்கொள்ளவும் முடியாது.

2. பொறுமை என்ற இந்த வார்த்தையின் பொதுவான முக்கியத்துவம் என்ன?

பொறுமையோடிருப்பவர்களின் உண்மையான பண்புகளும் குணங்களும் -

a. வேதனை, துன்பங்கள், மற்றும் தொல்லைகள் அனைத்தையும் சகிக்க வேண்டும்.

b. பரிவு, இரக்கம் காட்டுதல், மற்றவர்களை புரிந்துகொள்ளுதல்

c. தொடர்ந்து விடாமுயற்சியோடிருப்பது.

d. எந்த ஒரு பதில் அல்லது முடிவுக்கும் பதற்றமின்றி பொறுமையோடு காத்திருப்பது.

R2790 [col. 2P6] : -

பொறுமை என்ற வார்த்தையின் மேல் விசேஷித்த அழுத்தம் கொடுக்கப்படுவதைக் காண்கிறோம். இந்த வார்த்தையை நாம் ஆராய்ந்துப் பார்த்தால் இரண்டு வித்தியாசமான கிரேக்க வார்த்தைகள், பொறுமை என்ற ஒரே வார்த்தையாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில்."மாக்குரோத்தூனியா" என்ற வார்த்தை (எபிரெயர் 6:12, யாக்கோபு 5:10, அப்போஸ்தலர் 26:3) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வசனங்கள் பொறுமைக்குப் பொதுவான அர்த்தத்தைக் கொடுக்கிறது. ஏறக்குறைய புதிய ஏற்பாட்டில் முழுவதுமே இதே வார்த்தை (மாக்குரோத்தூனியா) பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ரோ 2:4, 9:22, எபே 4:2, கொலொ 1:11, 3:12, 1தீமோத்தேயு 1:16, 11பேது 3:15...) ஆனால் நம்முடைய பாடத்திற்கு இந்தப் பதம் பயன்படுத்தப்படவில்லை அதாவது வேதத்தில் பொதுவாக "பொறுமை" என்று பயன்படுத்தப்படும் வார்த்தையை இந்தப் பாடத்தில் நாம் எடுத்துக் கொள்வதில்லை. மாறாக "ஹுப்போமோனீ" என்ற மற்றொரு வார்த்தையை நாம் பாடத்திற்கு ஆதாரமாக எடுத்துக்கொள்ளுகிறோம்.

3. வேத வசனங்களில் விசேஷமாக வெளிப்படுத்தல் 3:10ல் மற்றும் லூக்கா 8:15ல் பயன்படுத்தப்பட்ட இந்த வார்த்தையின் ஆழமான முக்கியத்துவம் என்ன?

வெளி3:10 " என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்."

லூக் 8:15 "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்து பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்."

R2790

"அடிப்படைக் குணங்களில் ஒன்றானது பொறுமை"

சபை வரலாற்றில், பிலதெல்பியா சபைக்குப் சொல்லப்பட்டதான ஒரு அறிவுரையைப்பற்றி நாம் இன்று ஆராய்ச்சி செய்யப் போவதில்லை, மாறாக, இந்த வசனத்தில் உள்ள கோட்பாடுகளை நமக்குப் பொருத்தி, நாம் நம்மை ஆராய்ந்துப் பார்த்து, கவிசேஷ யுகம் முழுவதிலும் தேவன் இந்தக் கோட்பாடுகளுக்கு இசைவாக வழிநடத்தினதை நாம் இப்பொழுது பார்க்கப்போகிறோம். எந்தச் சூழ்நிலையிலும் சபை வரலாற்றில் பிலதெல்பியா சபைக்குக் கொடுத்த அறிவுரைகளை இந்த யுகத்திலும் நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டு தேவனை கனப்படுத்தி, அவருக்குப் பிரியமாக நடக்க வேண்டும்.

"பொறுமை" என்ற வார்த்தைக்கு விசேஷமான அழுத்தம் கொடுக்கப்படுகிறது. நாம் பார்த்தபடி இந்தப் பதத்தை இரண்டு வித்தியாசமான கிரேக்க வார்த்தைகளிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. "மாக்குரோத்தூனியா" (எபி 6:12, யாக்5:12, அப் 26:3)மற்றும் "ஹுப்போமோனீ". "மாக்குரோத்தூனியா" இந்த வார்த்தையை நம்முடைய பொதுவான வாழ்க்கையில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. இதற்கு நீடிய பொறுமை என்று பொருள். ஆகவே இந்தக் கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் முழுவதிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (ரோ 2:4, 9:22, எபே4:2, கொலொ 1:11, 3:12, 1 தீமோ 1:16, 11 பேது 3:15...) ஆனால் நாம் பார்க்கக்கூடிய வேதப்பகுதியில் இந்த ஒரு வார்த்தை மட்டும் பயன்படுத்தப்படுவதில்லை. பொதுவாக "ஹுப்போமோனீ" என்ற மற்றொரு வார்த்தையும் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது.

"ஹுப்போமோனீ" என்ற வார்த்தை இன்னும் பல ஆழமான முக்கியத்துவம் வாய்ந்த அர்த்தம் கொண்டுள்ளது. இது பொறுமையாக இருப்பதை மட்டும் குறிப்பிடாமல், தீமையைச் சந்தோஷத்தோடும், முழு விருப்பத்துடன் சகிப்பதை வலியுறுத்துகிறது. ஆகவே இது தற்காலிகமான உணர்ச்சிவசப்படக்கூடிய காரியமாக அல்ல. மாறாக, இது ஒரு நிலையான குணாதிசயமாகும். எடுத்துக்காட்டாக ஓர் உலகத்தான் தன்னுடைய வணிகத்தில் பொறுமையாகச் செயலாற்றுவான் - தன்னுடைய வாடிக்கையாளர்களோடு அவர்கள் தொடர்பு கொள்ளும் விதம், அவர்கள் எப்படியிருந்தாலும் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவதற்கு, மிக எச்சரிப்போடும் பொறுமையோடும் இருப்பார். ஆனால் நம்முடைய பாடப்பகுதிக்குள் வரும் "பொறுமை" என்ற வார்த்தை, இருதயத்திற்குள், குணங்களின் வளர்ச்சி அடைந்து தெய்வீகமான ஞானத்திற்கும், அன்புக்கும், தேவனுடைய சித்தத்திற்கும் எதிராக எந்தச் சூழ்நிலையிலும் செயல்படாமல், தேவன் குறித்தக் காலத்தில் இன்றைய தீமைகளை அகற்றிடுவார் என்ற நம்பிக்கையுடன், அதோடே போராடாமல், அதை பொறுத்துக்கொள்ளும் குணமாகும். நம்முடைய ஆண்டவரே பாராட்டத்தக்கதான இந்த ஒரு குணலட்சணத்தைக் கண்டு பிடித்து, நம்மில் எந்த அளவுக்கு வளர்ச்சி அடைந்து இருக்கிறது என்று நம்மை நாமே ஆராய்ந்துப் பார்ப்பது நலமாக இருக்கும் என்று நம்புகிறோம். இந்த ஒரு குணத்தை அடிப்படையாக வைத்தே அவரைப் பின் பற்றுபவர்களை அடையாளம் கண்டுகொள்கிறார். ஆகவே இதில் நாம் வளர்ச்சி அடைந்து அவருடைய பூரணமான அங்கீகாரத்தைப் பெறுவோம்.

நாம் பார்த்துக் கொண்டிருக்கும் வேத பகுதியில் சொல்லப்பட்ட நீடிய பொறுமை, நம்முடைய ஆண்டவரின் வார்த்தை அல்லது உபதேசமாக இருப்பதினால், எழுதப்பட்ட சுவிசேஷங்களை நாம் சற்றுப் புரட்டி, அவர் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார் என்பதைப் பார்க்கலாம். அவர் இரண்டு முறைகள் இந்த வார்த்தையை உச்சரித்தார் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. - லூக் 8:15, விதைக்கிறவன் என்ற உவமையில் "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள், வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" இங்கு பொறுமை என்பது மகிழ்ச்சி, சகிப்புத்தன்மை மற்றும் தொடர்ந்து உறுதியோடும் உண்மையோடும் நடப்பதைக் குறிக்கிறது. இந்த வார்த்தை இங்கு சொல்லப்படும் கருத்து என்னவெனில், தேவன் அங்கீகரித்து அவருடைய இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளும் கனி கொடுக்கும் வகுப்பார் இவர்களே. அவருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்வது மட்டும் பொருள் அல்ல, ஏனெனில், பாறையான நிலம் கூட கனி தரும் அளவுக்கு வசனங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், சூரியக் கதிர்களால் உபத்திரவம் எழும்பும்போது அது பட்டுப்போனதாக வாசிக்கிறோம். ஆழமாக மண் இல்லாததினால் இப்படி ஆயிற்று. ஆண்டவர் இதைக் குறித்து விவரிக்கும் பொழுது, பாறை மிகுதியாகவும், மண் குறைவாகவும் இருக்கும் இடங்களைக் குறிக்கும் இந்த வகுப்பார், மகிழ்ச்சியுடன் சத்தியத்தைக் கேட்டு, உபத்திரவத்தின் காலத்தில் உறுதியாகவும், நீடிய பொறுமையோடும் நிற்க திராணியற்றவர்களாக விழுந்து போகிறவர்கள். எதையும் மேற்கொள்ள பொறுமை இல்லாத இவர்கள், தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது என்கிறார்.

4. நீடிய பொறுமை ஏன் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது?

R2791[col.2P1,2] : -

தேவனுடைய இராஜ்யத்தில் அவருடைய குமாரனுக்கு உடன் பங்காளிகளாக அழைக்கப்படுகிறவர்களுக்கு இந்த ஒரு குணத்தையும் அடிப்படைத் தகுதியாக தேவன் வைத்திருக்கிறார் என்று நாம் பதில் அளிக்கலாம். நாம் செய்யக்கூடிய வேலைகளைக் குறித்து கவனிக்கும் பொழுது இதற்குள் இருக்கும் ஞானம் வெளிப்படுகிறது. -

நம்முடைய ஆண்டவரின் உடன்பங்காளிகளாக அவரோடு தேவனுடைய ஆயிரவருட ஆட்சியில் பூமியின் முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்க வேண்டிய வேலை கொடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு பெரிய வேலையாகும். ஆகவே இதற்குத் தகுதியான ஆட்களை மட்டுமே தேவன் தேர்வு செய்வார். தேவனுடைய குணங்களையும் நன்மைகளையும் அறிந்து, பாவத்தையும், அநீதியையும் வெறுத்தால் மட்டும் போதாது, இவைகளின் கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு வாழ்க்கையில் நடை முறைப்படுத்த வேண்டும். நீதியினிமித்தம் சந்தோஷத்தோடு மனப்பூர்வமாகத் துன்பப்படும்போது, நீடிய பொறுமையோடு சகிக்க வேண்டும். தற்காலிகமாக, ஒரு சில சோதனைகள் மட்டுமே, ஒருவரை நீதியின் பாதையில் நடப்பவர் என்று நிரூபித்து விடாது. ஆனால் மரிக்கும் வரைக்கும் சந்தோஷத்துடன் பாடுகளைச் சகிப்பதனால் மட்டுமே நமக்குள் இருக்கும் நீடிய பொறுமையை நாம் நிரூபிக்கமுடியும்.

நாம் வைரத்தைக் கொண்டு இதை விளக்கலாம். பிளாஸ்டிக் பொருட்களைக் கொண்டு வைரத்தை உற்பத்தி செய்யலாம் என்ற பட்சத்தில், முடிந்த வரையில் வைரத்தைப் போலவே நாம் அந்த பிளாஸ்டிக்கை உருமாற்றினாலும், அதன் விலை வைரத்திற்கு ஒப்பாகுமா? அல்லது வைரத்தைப்போல மதிப்பு பெறுமா? நிச்சயமாக இல்லை. அதேபோல் ஒரு கிறிஸ்தவனும் தேவனுடைய குணலட்சணங்கள் பூரணமாக அடைந்திருந்தால் மட்டுமே அவர் தேவ புத்திரனாக முடியும். விசேஷமாக இந்த "நீடிய பொறுமை" என்ற குணம் நம்மில் இல்லை என்றால், நிச்சயமாக நாம் அவருடைய பொக்கிஷமாகக் கருதப்பட வாய்ப்பில்லை. ஆகவே எந்தச் சூழ்நிலையிலும் உறுதியாக, துன்பங்களை சந்தோஷத்துடன் சகிக்கும் குணத்தை உடையவர்கள் மட்டுமே இராஜ்யத்திற்கு ஏற்றவர்களாக இருக்க முடியும் என தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.

5. நீடிய பொறுமைக்கும், சுய கட்டுப்பாட்டுக்கும் உள்ள தொடர்பு என்ன?

11பேது 1:6 "ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும்.."

R2037 [col. 1 P7] : -

இந்த அறிவு, ஓர் உண்மையும், நன்மையான இருதயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டால், காலப்போக்கில் "சுய - கட்டுப்பாடு" என்ற கனியைக் கொடுக்கும்."தனக்குள் நம்பிக்கையாக இருப்பவன் தன்னை சுத்திகரித்துக் கொள்ளுகிறான், தன்னைத்தான் கட்டுப்படுத்தி பழைய புளித்த மாவை புறம்பே கழித்துப்போடுகிறான்." இப்படியாக நமக்குள் சுய கட்டுப்பாடு இருந்தால், நமக்குள் பொறுமை வளர்ச்சியடையும். மற்றவர்களிடம் காட்டப்படும் இரக்கமும், பொறுமையும் நமக்குள்ளே வளர்ச்சியடைய நாமே நமக்கு ஆசிரியர்களாக இருப்போம். இப்படிப்பட்ட பொறுமை, வளர்ச்சியடைந்தால், நம்மை அடுத்த மேன்மையான குணலட்சணமாகக் குறிப்பிடப்படும் அன்புடன் கூடிய தேவபக்தியை நமக்குள் அதிகரிக்கும். இந்த ஒரு நிலையில் அவருடைய சகலவிதமான சிந்தைகளும், வார்த்தைகளும், கிரியைகளும் தேவனுடைய அன்பாக நம்முடைய இருதயங்களில் பொழியப்படும். இது நமக்குள் சகோதர சிநேகத்தை வளர்ச்சியடையச் செய்யும். தேவனுடைய அன்பில் நிலைநின்று, சத்தியம் மற்றும் நீதி என்ற அடிப்படையில் சகோதரர்கள் மேலும், அயலகத்தார் மேலும் சகோதர அன்பு அதிகரிக்கும். இப்படிப்பட்ட சகோதர அன்பு தேவனுடைய கிருபைகளை இன்னும் ஆழமாக புரிந்துகொள்வதற்கு வழிவகுத்து, பிரதான குணமாகிய தெய்வீக அன்பை நமக்குள் நிலைநாட்டும். தேவன் பேரில் நாம் கொண்டுள்ள அன்பு, சகோதரர்களுக்காக நாம் கொண்ட அன்பு. இது தூய்மையானதும், ஆழமானதும், உண்மையானதுமாக இருக்கும். இது எந்தவிதமான தீமையையும் எண்ணாது, மற்றவர்களை எளிதில் குற்றம் சாட்டாது, எப்பொழுதும் சத்தியத்தில் மகிழ்ந்து கொண்டிருக்கும். இன்றைய காலக்கட்டத்தில், இதுவே ஒரு கிறிஸ்தவன் அடையும் உச்சக்கட்ட நிலையாகும். கிருபையின் மேல் கிருபை பெற்று, மங்காத அன்பில் வளர்ந்து உயிர்த்தெழுதலின்போது கிடைக்கப்பெறும் புதிய சரீரத்தில் பூரணப்படுவார்கள்.

6. நம்முடைய சோதனைகளை நாம் ஏன் பொறுத்துக் கொண்டு காத்துக்கொள்ள வேண்டும்?

லூக் 21:19 "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்."

R2791[1P4,5] : -நம்முடைய ஆண்டவர் இந்த வார்த்தையை மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்தியிருக்கிறார். (லூக் 21:19) சாத்தான் இந்த உலகத்தில் அதிபதியாக இருக்கும் பட்சத்தில், பாவத்தினால்

கட்டப்பட்டிருக்கும்போது, இக்காலத்தில், அவருடைய சீஷர்களாக இருப்பதினால் வரும் விளைவுகளைப்பற்றி இயேசு சொல்லிக்கொண்டிருந்தார். இவர்கள் துன்பங்களையும், எல்லா திசைகளிலிருந்தும் வரும் எதிர்ப்புகளை சந்திக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஆனால் இப்படிப்பட்ட துன்பங்களும் சோதனைகளும் அனுமதிக்கப்பட்டாலும், அவர்களுக்கு முழுமையான தெய்வீகப் பாதுகாப்பும், அரவணைப்பும் கொடுக்கப்படும் என்று எந்த ஒரு உறுதியும் கொடுக்கவில்லை. எல்லா சோதனைகளிலும் "உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" என்று சொன்னார்.

வருங்காலத்தில் நிறைவேறக்கூடிய தேவனுடைய கிருபையான வாக்குத்தத்தங்கள் மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசமும், நம்பிக்கையும் சாத்தானின் குருடாக்கப்பட்ட ஊழியக்காரர்களும், கள்ள சகோதரர்களும், இந்த உலகத்தில் நமக்கு எதிரிடையானவர்களும் நம்மை எதிர்த்து அவர்கள் வழிக்கு இழுத்துச் செல்லாதபடிக்கு அசைக்கமுடியாத அளவுக்கு உறுதியாக இருக்க வேண்டும். தேவன் கட்டிக்கொண்டிருக்கும் மகிமையான ஆலயத்திற்கு ஜீவனுள்ள கற்களாக இருக்கும் நம்மை செதுக்கி, மெருகேற்றி, சரியான இடத்தில் பொருந்துவதற்கு அவர் அனுமதிக்கும் சோதனைகளுக்காக நாம் நித்தமும் மகிழுவோம். இந்த ஒரு கோணத்திலிருந்து நாம் நம்முடைய சோதனைகளைக் கண்ணோக்கினால், உண்மையில் நம்முடைய ஆத்துமாவைக் காத்துக்கொண்டு, எல்லாவிதமான உபத்திரவங்களிலும் மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆம், நாம் முடிவு பரியந்தம் தேவனிடத்தில் விசுவாசமாக இருந்து, எதையும் எதிர்நோக்கக்கூடிய மனநிலையைப் பெற்றிருந்தால், மாம்சத்தில் படும் பாடுகளும், உபத்திரவங்களும், மனிதர்களின் எதிர்ப்புகளும், இந்த ஆத்துமாவுக்கு தேவன் கொடுத்த அநேக விலையேறப்பெற்ற வாக்குறுதிகளைச் சுதந்தரிக்க என்றுமே தடைசெய்யாது என்பதை நாம் முதலில் உணரவேண்டும்.

7. விசுவாசத்திற்கும் நீடிய பொறுமைக்கும் உள்ள தொடர்பு என்ன?

யாக் 1:3 "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்."

R2792 [col. 1P2] : -

பொறுமை, நீண்ட காலம் பொறுத்துக்கொள்வது பற்றிய முக்கியமானக் காரியங்களை நாம் பரிசீலிப்பது, நமக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆகவே புதிய ஏற்பாட்டில் மற்ற சூழ்நிலைகளில் இந்த வார்த்தை எப்படியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று பார்ப்போம். "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது." (எபி 10:36) என்று பவுல் குறிப்பிடுகிறார். தேவனுடைய சித்தத்தைச் செய்வதே நமக்கு சோதனை என்று பொருள் அல்ல. ஆனால், அந்தக் கட்டத்தை எட்டிப்பிடித்து விட்டால், நம்முடைய இருதயங்களிலும், சிந்தைகளிலும், தேவனுடைய நீதி நிலையாக ஸ்தாபிக்கப்படும் வரைக்கும் பொறுமையோடு காத்திருக்க வேண்டும். அப்போது நாம் எந்தச் சூழ்நிலையிலும் அந்த நீதியில் நிலைத்திருந்து, தேவனுடைய இராஜ்யத்திற்கு ஏற்ற மனநிலையைப் பெறுவோம். "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்." (யாக் 1:3) என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். சொல்லப்போனால், நம்முடைய சோதனைகளில், விசுவாசத்தில் நிலைத்திருந்தால், நமக்குள் நீடிய பொறுமையை உருவாக்கும். அடுத்து, இந்த நீடிய பொறுமையை நாம் சுதந்தரிக்காவிட்டால், நம்முடைய சோதனைகளில், விசுவாசத்தில் திருப்திகரமாக நிலைநிற்கவில்லை என்பது பொருளாகும். இப்படியிருந்தால், நாம் தேவனுடைய இராஜ்யத்திலும் பொருந்துவதற்கு வாய்ப்பில்லை.

R3245 [col. 1 P6] : - "பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என்றும் "விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்றும்", நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது."என்று அப்போஸ்தலன் விவரிக்கிறார். பொறுமையினால் அநேக நல்ல குணங்கள் வளர்ச்சியடையும் என்று ஆதாரத்தோடு நிரூபிக்கப்படுகிறது. தேவனுடைய ஜனங்களுக்குள்ள பொறுமையானது, விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். மேலும் பொறுமையின் அளவு, நமக்குள்ளிருக்கும் விசுவாசத்தின் அளவை எளிதில் கணித்துவிடும். எப்போதும் பதற்றமாகவும், அமைதியற்ற மனநிலையும் உடைய கிறிஸ்தவர்கள் விசுவாசம் இல்லாதவர்கள். அவர்களுக்குள் விசுவாசம் இருந்தால், தேவனுடைய வாக்குறுதிகள் மேல் நம்பிக்கை வைத்து

பொறுமையாகக் காத்திருப்பார்கள். எல்லா சூழ்நிலையிலும், நமக்களிக்கப்பட்டப் பொறுப்புகளை நாம் செய்து விட்டு, அதற்குண்டானப் பலனையும், காலங்களையும், நேரங்களையும் தேவனிடத்தில் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு அமைதலோடு காத்திருக்க வேண்டும்.

R3246[col. 2P1]: -இன்றைக்குள்ள தேவனுடைய பிள்ளைகள் தேவனுக்காகக் காத்திருக்கும் விசுவாசம், நீடிய பொறுமை, மற்றும் கீழப்படிதல் என்னும் பாடத்தை தங்களுடைய இருதயத்திற்குக் கொண்டுச்செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். தேவன் வாக்களித்த பகிரங்கமான இராஜ்யத்தின் ஸ்தாபனத்திற்கும், அதனால் வரும் ஆசீர்வாதங்களுக்காகவும், சமாதானத்திற்காகவும் நாம் நீண்ட காலமாகக் காத்திருக்கிறோம். மனுஷருடைய கோபம் தேவனை துதிக்கும் துதியாக மாறி, தேவனிடத்தில் அவர்கள் செல்வதற்கான வழியை வகுத்து, காலப்போக்கில், ஏற்ற சூழ்நிலை வரும்போது, அவருடைய இராஜ்யத்தில் அனைவரும் சரியான இடத்தைப் பெறும் வரைக்கும் நீடிய பொறுமையோடு நாம் காத்திருக்க வேண்டும்.

8. நாம் "உபத்திரவங்களில் ஏன் மேன்மைபாராட்ட" வேண்டும்?

ரோ 5:3 ".. உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து.."

R 2737 [col.1 P6,7] - முன்னேற்றமடைந்த ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய வாழ்க்கையில் வீசின புயல்களையும், சூரிய பிரகாசத்தையும், துக்கங்களையும், மகிழ்ச்சிகளையும், கண்ணீர்களையும், சிரிப்பையும் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருகிறான். ஞானமான சிந்தனையினால் அவைகளின் தாக்கம் குறைந்து, சோதனைகளையும், உபத்திரவங்களையும், வாழ்க்கையின் போராட்டங்களையும், நமக்காக ஏற்படுத்தப்பட்ட பாடங்கள் என்றும் அவைகள் மாறுவேடத்தில் வந்த ஆசீர்வாதங்கள் என்றும் உறுதியளிக்கும் தேவனுடைய வார்த்தைகளைக் கட்டளைகளாகப் பெற்றதினால், தன்னுடைய உபத்திரவத்தின் வீரியம் குறைந்துக் கொண்டிருப்பதைக் காண்கிறான்.

"... காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது." - 11 கொரி 4:16,17

மேலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படும் முன் கிடைக்காத, இப்படிப்பட்ட திடமான பரிசுத்தமுள்ள மகிழ்ச்சியை அப்பொழுது முழுமையாக உணர்ந்துகொள்வார். பகை, கோபம், பொறாமை போன்ற குணங்களின் கலப்படமில்லாத தனிமைப்படுத்தப்பட்ட சந்தோஷமாக இருக்கிறது. ஏனெனில், அவர்கள் அநியாயத்தில் பிரியப்படாமல், சத்தியத்தில் மகிழ்ந்தவர்கள். மேலும், முந்தைய காலத்தைக் காட்டிலும் தேவனுக்கான சந்தோஷமும், அவருடைய வார்த்தைகளினால் கிடைக்கும் சந்தோஷமும், பரிசுத்த ஆவியினால் கிடைக்கும் சந்தோஷமும், விலையேறப்பெற்ற விசுவாசத்தில் இருக்கும் சகோதர ஐக்கியத்தினால் வரும் சந்தோஷமும் நம்முடைய உபத்திரவத்தின் காலத்தில் தேவனுடைய கிருபையின் மூலமாக நமக்கு கூடுதலான சந்தோஷங்களைத் தருகிறது. தேவன் உபத்திரவங்களை விரும்புகிறார் என்று அர்த்தமல்ல. அவர் பொறுமையை அதிகமாக விரும்புகிறார். இந்த ஒரு நற்குணம் நமக்குள் வளர்ச்சியடைவதற்காக தேவன் நமக்கு இந்த உபத்திரவங்களை அனுமதிக்கிறார். அவருக்குள் நாம் சரியாக வழிநடத்தப்பட்டால், நிச்சயமாக நாம் தேவனுடைய விருப்பத்தின்படி நாம் அதிகமாக கனிக்கொடுப்போம்.

R3123 [col. 1 P3]: - தேவனுடைய சந்தோஷங்களை ருசியாராதவர்கள், உபத்திரவத்தில் சந்தோஷப்படுவதைக் குறித்து இந்த உலகத்தின் கண்ணோட்டத்தில் எவ்வாறாக இருக்கும் என்று யோசித்துபாருங்கள். "கிறிஸ்துவுக்காக அனுபவிக்கும் பாடுகளினால் வரும் மகிமையை அதற்கு ஒப்பிட முடியாது" என்பதற்காக நாம் மகிழ்ந்து களிக்கூறலாம். எல்லா புத்திக்கும் மேலான தேவனுடைய சமாதானத்தை அவருடைய ஜனங்களின் இருதயத்தையும், நிரப்பியதைப் பற்றி இந்த உலகத்திற்கு என்ன தெரியும் ? "என்னுடைய சமாதானத்தை உங்களுக்கு விட்டு செல்கிறேன், உலகம் தரக்கூடாத சமாதானத்தை நான் கொடுக்கிறேன். ஆகவே உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக..." என்று இயேசு சொன்ன ஆறுதலை இந்த உலகம் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பே இல்லை. மேலும், உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும், உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பராட்டுகிறோம். மேலும், நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில்

ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது." (யோவ14:27, ரோ5:3-5) இப்படியாக தேவன் அனுமதிக்கக்கூடிய எந்த வேலைகளிலும், வரும் அனுபவங்களையும் விசுவாசமுள்ள ஊழியக்காரர்கள் மகிழ்ந்து களிக்கூறுவார்கள். நாமும் அவர்களின் தேவனையே தேவனாகப் பெற்றிருக்கிறோம் என்பதை நினைவுகூர்ந்து அவர் வழிநடத்தும் பாதையில் சந்தோஷமாக நடப்போம். கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் இந்த ஒரு கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள மறுத்தால், நிச்சயமாக பயமும், திகிலும் அவர்களைப் பற்றிக்கொள்ளும்.

R3281[col.2 P1,2]: - ஒரு வார்த்தையில் சொல்லப்போனால், நீதிமானாக்கப்பட்டு, தத்தம் செய்தவர்களின் சோதனைகள், தேவனை இக்காலத்தில் சேவிக்க வாய்ப்பளிக்கிறது. பாவம் சூழ்ந்திருக்கும் இக்காலத்தில், நீதியாக வாழ்ந்து சத்தியத்தை வெளிச்சமாக ஏந்தி நிற்பவர்கள் கட்டாயமாக துன்பப்படுவார்கள். ஒருவரின் அர்ப்பணிப்பு முழுமையடைந்தப் பின் அவர்கள் தேவனை சேவிக்கும் வாய்ப்புக்காக நிச்சயம் மகிழ்வார்கள். இப்படியாக அவர்களுடைய உண்மையான அன்பும், அர்ப்பணிப்பும் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறும். தங்களை இவ்வண்ணமாக தத்தம் செய்து, இருதயத்தில் தூய்மையாக இருப்பவர்கள், இன்றைக்கு அனுமதிக்கப்படும் சோதனைகளின் காரணத்தை நன்கு உணர்ந்தவர்கள், தங்களுடைய உபத்திரவங்களில் மேன்மை பாராட்டுபவர்கள், கிறிஸ்துவின் வார்த்தைகளினால் அவர்களை விசுவாசத்திற்கு வளர செய்து, தங்களுடைய ஆண்டவர் பட்ட அதே பாடுகளை தாங்களும் படவேண்டும் என்பதை உணர்ந்து, அவருடைய பாதையில் நடந்துகொண்டிருப்பதை உறுதிப்படுத்திகொண்டு, "உலகம் உங்களை பகைத்தால் ஆச்சரியப்படாதீர்கள், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும், நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்த கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.", "முடிவு பரியந்தம் விசுவாசத்தில் நிலைத்திருங்கள், நான் உங்களுக்கு ஜீவ கிரீடத்தை தருவேன்." என்ற வாக்குத்தத்தங்களை நினைவுக்கூறுவார்கள்.

மேலும், விசுவாசத்தில் நிலைத்திருப்பவர்கள், தாங்க முடியாத சோதனைகளைத் தேவன் அனுமதிக்கமாட்டார் என்பதையும், அதிலிருந்து தப்பிப்பதற்கு வாய்ப்புகளை அவர் ஏற்படுத்த வல்லவர் என்பதையும் அறிந்து, சோதனையின் நாட்களில் அவர் நம் அருகில் இருப்பார் என்பதை உணர்ந்து அவர்களுடைய உபத்திரவத்தில் இன்னும் அதிகமாக மேன்மை பாராட்டுவார்கள். அவர்கள் வளரவேண்டிய குணங்களைப் பற்றியும், உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையயும், உண்டாக்குகிறதென்பதையும் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறார்கள். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. இவையனைத்துமே உபத்திரவங்களின் வழியாக மட்டுமே பெற்றுக்கொள்ளமுடியும். உத்தமமாக நாம் நம்மை அர்ப்பணித்ததினால், இந்த உலகத்தின் ஆவிக்கும் சுயநலத்திற்கும் பதிலாக, தேவனுடைய முழு அன்பும் நம்முடைய இருதயத்தில் பொழியப்படுகிறது - 1கொரி 10:13, ரோ 5:3,5

9. நாம் ஓயாமல் எந்த விதமான சிந்தனைகளை மனதில் சிந்தித்கொண்டிருந்தால், நம்முடைய " உபத்திரவங்களில் பொறுமையாக" இருக்க முடியும்?

ரோ 12 :12 " நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்."

R 2213 [col. 2 P3] : -"உபத்திரவத்தில் பொறுமையாயிருப்பது"

உபத்திரவம் என்ற வார்த்தை "ட்டிரிபுலம்" (**tribulum**) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. கோதுமையைச் சுத்தப்படுத்தவும், அதில் உள்ள சாவட்டை, உமி போன்ற தேவையில்லாத காரியங்களையும் பிரிக்கும் போரடிக்கும் இயந்திரத்தை லத்தினில் "ட்டிரிபுலம்" என்று அழைத்தார்கள். இப்படிப்பட்ட ஒரு சொல்லே கோதுமை என்று அழைக்கப்படும் தேவனுடைய ஜனங்களுக்கு (தத்தம் செய்தவர்கள்) எவ்வளவு நேர்த்தியாகப் பொருந்துகிறது. அந்த கோதுமை மணிகளே நமக்குள் வளரும் புது சிருஷ்டி, ஆனால் தேவையற்ற உலகக் காரியங்களான உமி நம்மை மூடிக்கொண்டிருக்கிறது. ஆம், மிக விலையுர்ந்த பொக்கிஷம் பூமியின் அழியக்கூடிய காரியங்களால் மூடப்பட்டிருக்கிறது. சிறந்த முறையில் கோதுமைமணி

பயன்படுத்துவதற்காகக் களஞ்சியத்தில் சேர்க்கப்பட வேண்டும். ஆகவே ஒவ்வொரு மணிகளும் இந்த உமியை விட்டு வெளியே வருவதற்கு உபத்திரவப்படுவது மிக அவசியமாக இருக்கிறது. இந்தக் கோதுமை மணி உமியை விட்டு பிரியும் வரைக்கும் இனி வரக்கூடிய தேவ ஊழியங்களுக்கும் தேவனால் அழைக்கப்பட்ட அழைப்பிற்கும் தகுதிப்பெறமுடியாது. தேவனுடைய பரிபூரண சித்தத்தைப் பொருத்தவரையில், நம்முடைய அபூரணமான நிலை, என்னவென்பதை நன்கு அறிந்திருக்கிறோம். ஆகவே தேவன் எவ்வளவு உபத்திரங்களை அனுமதித்தாலும், அனைத்தையும் நீடிய பொறுமையோடு சகித்து, அதில் மகிழ்வதற்கு ஆயத்தமாக இருக்கக்கடவோம். "நம்முடைய உபத்திரவத்திலும் மேன்மை பாராட்டுவோம்" - ரோ5 :3

R2258[col.1 P4 –col.2P1]: -

உண்மையில் தேவனோடு உடன்படிக்கை செய்தவர்களுக்கு வரும் ஒவ்வொரு சோதனைகளும், எல்லா உபத்திரவங்களும், வாழ்க்கையின் பிரச்சனைகளும் அவர்களின் குணங்கள் நீதியின் அடிப்படையில், அன்பினால் கட்டப்பட்டிருக்கிறதா என்று சோதித்து, நிரூபிப்பதற்காகவே தேவனால் அனுமதிக்கப்படுகிறது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் எதிர்நோக்கும் சோதனைகள், பிரச்சனைகள் மற்றும் உபத்திரவங்கள் நமக்கு முன் ஒரு புதிய வெளிச்சத்தையே கொண்டுவந்து, நாம் மேற்கொள்ளவேண்டிய நல்ல போராட்டத்திற்குத் துணைபுரியும். இப்படிப்பட்ட சின்னசின்ன சோதனைகள் மூலமாக நாம் தேவன் மேல் வைத்திருக்கும் அன்பையும், பக்தியையும் அவர் நிரூபித்துக் கொண்டிருக்கிறார் என்று நாம் உணரும்போது, நமக்கு வரும் அனைத்தும் எவ்வளவு முக்கியமானது என்று சிந்தியுங்கள். ஆகவே நாம் சந்திக்கும் ஒவ்வொரு உபத்திரவங்களையும் விடாமுயற்சி செய்து சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும்போது, நாம் தேவனிடத்தில் வைத்திருக்கும் அன்பையும், பக்தியையும் செயல்முறைப்படுத்தி நிரூபிக்கவேண்டும். இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது ஒவ்வொரு சோதனையும் நாம் பெறும் ஒவ்வொரு ஆசீர்வாதமாகும். "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்", "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமை உண்டாகக்காணப்படும்." "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான், அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்." "இக்காலத்தில் நாம் அனுபவிக்கும் இலேசான உபத்திரவம், வரக்கூடிய கனம் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல".

இப்படியாக, தேவனிடத்தில் அன்புக்கூறுகிறவர்கள், அநேக உபத்திரவங்களின் வழியாக அவர்கள் தேவன் மேல் வைத்த அன்பு சோதிக்கப்பட்டு, அவருடைய இராஜ்யத்தில் இடம் பெறுவார்கள் என்பதை மறுபடியும் வலியுறுத்துகிறோம். தங்களுடைய முழு இருதயத்தோடு தேவனிடத்தில் அன்புக்கூறாதவர்களை, இந்த உலகம், மாம்சம் அல்லது பிசாசால் ஏதோ ஒரு வழியில் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாகத் தூண்டப்படுவார்கள். இவர்கள் தேவனுடைய திட்டத்தைக் காட்டிலும், தங்களுடைய சொந்த கருத்துக்களையும், கூற்றுகளையும், விரும்புவார்கள். இப்படிப்பட்டக் காரியங்கள் சுயநலம் அல்லது குறிக்கோள் அல்லது பகை, பொறாமை, கோபத்தின் அடிப்படையைக் கொண்டதாக இருக்கிறது என்று நாம் ஆராய்ச்சியின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

F 632[P2] –F634 [P2] : - வெகு சீக்கிரத்தில் இந்த உலகத்தின் இராஜாக்களும், ஆசாரியர்களும், நியாயாதிபதிகளுமாக இருக்கக்கூடிய ஆசாரியர்களாகிய நாம் இந்த உலகத்தைக் கண்டு மனதுருகவேண்டும். ஆனால் இக்காலத்தில் நம்முடைய உடல் பலத்தை அதிகமாக செலவழிக்கவோ, பலவீனமானவர்களை சுகப்படுத்தவோ அவசியம் இல்லை. நாம் ஒவ்வொருவரும் விழுந்துபோன மனுக்குலத்தின் பங்காளிகளாக இருப்பதினால், இப்படிப்பட்ட அனுபவங்களை பெற்றுக்கொண்டிருக்கிறோம். ஏனெனில், முற்காலத்தில் "நாமும் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தோம்". இயேசு தன்னுடைய ஜீவனை பலியாகக் கொடுக்கும்வரையில் சபையும் அவருடைய காரியங்களைப் புரிந்துக்கொள்ளமுடியவில்லை. பெந்தேகோஸ்தே நாளின் போது, பரிசுத்த ஆவி கொடுக்கப்படும் வரைக்கும் சீஷர்களுக்கு பரலோகக் காரியங்களைப் பற்றி சொல்வது வீணாக இருந்தது. (யோவ3:12, 16-13, 1கொரி 2:10-12) ஆகவே நம்முடைய ஆண்டவர் தம்முடைய முழு ஆற்றலையும் உவமைகள் மற்றும் புரியாத புதிர்களைச் சொல்லவும் செலவழித்தார். பரிசுத்த ஆவியைப் பெற்றபின் சீஷர்களுக்கு அனைத்தும் புரிந்தது. ஆனால் தேவனுடைய இராஜ்யத்தில் இன்னும் மேன்மையானக் காரியங்கள் நடக்கும் என்பதை அவர்

காட்டுவதற்காக அநேக உடல் ஊனமுற்றோரையும், பலவீனப்பட்டிருந்த மனிதர்களையும் சொஸ்தமாக்கினார். இந்த வேலைகளை இயேசுவோடு செய்வதற்கு சபையாருடைய புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறந்து, மரித்த நிலையில் இருப்போரை அவருடைய சத்தத்தைக் கேட்கச்செய்து, ஒரு புதிய வாழ்க்கையைத் துவங்க அழைப்பைக் கொடுத்திருக்கிறார். ஆகவே ".. நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுப்பதற்கு..." மிகப் பெரிதான சிறப்புரிமையைப் பெற்றிருக்கிறோம் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அனுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்." -1யோவான் 3:16, கொலொசேயர் 1:24

இந்த வார்த்தைகளின்படி சொல்லர்த்தமாக நம்முடைய ஜீவனை இழக்கவேண்டிய அவசியமில்லை. நம்முடைய சரீரத்தில் உள்ள ஜீவனை இழப்பதினால் நமக்கு எந்த விதமான பலியின் பலனும் கிடைக்காது. மேலும் "கிறிஸ்துவின் பாடுகள்" எந்தவிதத்திலும் நம்முடைய சரீரத்திற்கு வேதனைத் தருவதில்லை. நம்முடைய ஆண்டவர் நமக்காக இழந்த அவருடைய ஆற்றலையும், ஜீவனையும், அவர் நம்முடைய பலவீனங்களுக்காக உணர்ச்சிவசமாக மனதுருகின காரியங்களையும் நம்முடைய பலிகளுக்கு என்றுமே ஒப்பிடமுடியாது. ஆகவே நம்முடைய எதிர்பார்ப்புகள் இந்த உலகத்தைக் காட்டிலும் மேலானதாகவும், கிறிஸ்து அநேகக் காரியங்களை இழந்தது போல, நாமும் நம்முடைய சகலவிதமான பூமிக்குரியவைகளை இழந்து, "அவரோடுகூட பாடுபடவேண்டியவர்களாக" இருக்கிறோம். கனம் பொருந்திய மனிதர்கள் மத்தியிலும், செல்வாக்கு நிறைந்தவர்கள் மத்தியிலும், இழப்புகள் இலகுவாக அனுமதிக்கப்படுகிறது. ஆனால், நம்முடைய ஆண்டவர் முழு விருப்பத்தோடு மற்றவர்களை ஐசுவரியவான்களாக்கும்படி தன்னை தரித்திரராக்கினார். நமக்கு மாதிரியை விட்டுச் செல்லும்படி, இதே அனுபவத்தை அப்போஸ்தலர்களும் பெற்றிருந்தார்கள். இப்படியிருக்க, தேவனால் அனுமதிக்கப்பட்ட "தீமோத்தேயு பட்ட பாடுகளையும்", "அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய சரீரத்தில் பெற்றிருந்த முள்ளையும்" ஏன் அனைவராலும் காணமுடியவில்லை? உண்மையில் இவையனைத்தும் சாத்தானால் வந்தது. ஏனெனில், பாவம் சாத்தானால் நுழைந்தது. அனைத்து பலவீனங்களும் பாவத்தின் பின்விளைவாக இருக்கிறது. ஆனால் சிறையிருப்பு, அடிகள், கப்பல் சேதம் மற்றும் மரணம் இதை தவிர அவனால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

இந்த இயற்கை சீற்றத்திற்கு, நேரடியாக இல்லாவிட்டாலும், மறைமுகமாக தூண்டிவிடக்காரணமானான். ஆனாலும் அப்போஸ்தலன் தன்னை உயர்த்தாமல், தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து, இப்படிப்பட்ட அனுபவங்களை தான் தேவனுக்காகச் செலுத்தவேண்டிய பலியின் ஒரு பகுதியாக எண்ணி, சத்தியத்தின் நிமித்தம் மகிழ்ச்சியடைந்து உபத்திரவத்தில் தேவனை மகிமைப்படுத்தினார்கள். மற்றவர்களைக் காட்டிலும் இவருக்கு அதிகமாக துன்பங்கள் வந்தபோதும் வரக்கூடிய மகிமை அதிகரிக்கும் என்பதை அறிந்து இவர் மகிழ்ந்தார்.

இருப்பினும், நீதியின் நிமித்தம் வரக்கூடிய துன்பங்களிலும், தவறான செயலின் நிமித்தம் வரும் துன்பங்களிலும் இருக்கும் வித்தியாசத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டும். சுயக்கட்டுபாடில்லாதவர்கள் மற்றவர்களுடைய காரியங்களில் தலையிடுகிறதினாலும், மற்ற தீய செயலினாலும், பெருந்தீனியராக இருப்பதினால் (பிலி 3:19) அநேக உபத்திரவங்களுக்குள் அகப்படுகிறார்கள். இப்படிப்பட்ட உபத்திரவங்களை நீதியினிமித்தம் வரும் உபத்திரவம் என்று நாம் எடுத்துக்கொள்ளமுடியாது. இப்படிப்பட்ட உபத்திரவங்களில் நாம் என்றுமே சந்தோஷப்படுபவர்களாக இராமல் ஜெபத்தில் தரித்திருந்து - பொறுமையோடும், சுயக்கட்டுப்பாட்டோடும் இருக்கவேண்டும். புது சிருஷ்டிகளின் நியாயத்தீர்ப்பின்போது, முன்னதாகவே அறிவிக்கப்பட்டபடி சகல வாய்ப்புகளும் அவர்களுக்கு திறக்கப்படும். அதில் அவர்கள் பக்திவைராக்கியத்தோடும், சுயபலி செலுத்தும்போது, மாம்சீக ரீதியாக அநேக துன்பங்களை அடைவார்கள். இந்தக் காரியம் உலகத்தாரின் பார்வைக்கு விவேகமற்ற செயலாகத் தோன்றும். அப்பொழுது நாம் வெட்கப்படவேண்டிய அவசியமில்லை. இப்படிப்பட்டப் பாடுகள் மத்தியில் அவர்கள் தேவனை மகிமை படுத்தவேண்டும் - கிறிஸ்துவின் நிமித்தம் பாடுகளை அனுபவிப்பதற்காக நாம் சந்தோஷப்பட்டு களிக்கூற வேண்டும்.

ஒருவேளை நம்முடைய பாவத்தினால் அல்லது சுயநலத்தினால் வராத எந்த உபத்திரவத்தையும் நாம் பொறுமையோடு சகித்து, தேவனுக்கு நன்றிசெலுத்த வேண்டும். ஆயிரவருட ஆட்சியில் வேதனையால் புலம்பிக்கொண்டிருக்கும் முழு மனுக்குலத்தை இரக்கத்தோடும், பரிவோடும் தேவனிடத்தில் சேர்க்க வேண்டிய பொறுப்பில் இருப்பவர்களுக்கு தேவன் இக்காலத்தில் அனுமதிக்கும் அனுபவங்களின் மூலமாகப் பாடங்களைக்

கற்றுக்கொள்ளலாம். இப்படியாக இருதயத்தில் வரும் கிருபையும், இரக்கமும் வாழ்க்கையில் எல்லா கட்டங்களிலும் சாதகமானக் காரியங்களைக் கொண்டுவராது. மேலும், நம்முடைய அழியக்கூடிய இந்தச் சரீரங்களைப் புதிதாகவும் மாற்றாது. ஏனெனில், "காணாமல் விசுவாசிக்கக்கூடிய நம்மை" கண்டு விசுவாசிப்பதற்குரிய நிலைக்குத் தள்ளக்கூடிய அபாயநிலை நேர்ந்திடுமே. ஆகவே சபைக்கு இப்படிப்பட்ட காரியங்களைத் தேவன் அனுமதிப்பதில்லை. ஏனெனில், நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். இருதயத்தில் உள்ள கிருபையானது, உஷ்ணம், குளிர், தாகம், பசி போன்ற காரியங்களுக்கு நம்மை உணர்வற்றவர்களாக மாற்றுவதில்லை. இவைகளில் நமக்கு தேவைப்பட்டவைகள் கிடைக்க தாமதிப்பதன் மூலம் நாம் பொறுமையைக் கற்றுக்கொண்டாலும், நம்முடைய பரலோகப் பிதாவின் பராமரிப்பும், அவருடைய வாக்குத்தத்தங்களும் நம்பி, சகலமும் காலப்போக்கில் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று பொறுமையோடும் விசுவாசத்தோடும் காத்திருக்கிறோம்.

இந்த உலகம் தங்களுடைய வியாதிகளுக்காக வேர்களையும், மூலிகைச் செடிகளையும் தேடுகிறபோது, புது சிருஷ்டிகள் எதையும் பயன்படுத்தாமல் இருப்பார்கள் என்று பொருள்படுமா ? கண்டுபிடிக்கப்பட்ட எதையும் பயன்படுத்தாமல் அந்த வேதனைகளிலும், வலியிலும், துன்பப்பட்டு, அவர்களின் பொறுமையை நிரூபிக்கவேண்டுமா ? நிச்சயமாக இல்லை. கவிசேஷ யுகத்தில் தேவன் விழுந்துபோன மாம்சத்தோடு அல்ல, ஆனால் அவர்களுக்குள் இருக்கும் புது சிருஷ்டியோடு மட்டுமே தொடர்பு கொள்கிறார் என்பதை நம்முடைய சிந்தையில் பதித்துகொள்ள வேண்டும். "மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது" - நாம் அதை மரணத்திற்கு ஒப்புகொடுத்திருக்கிறோம். எப்படியாகிலும் அது அழியக்கூடியது. நமக்குள் இருக்கும் புது சிருஷ்டியே முக்கியமானது. நம்முடைய அழியக்கூடிய சரீரங்களைப் பொறுத்தவரையில் நாம் பெற்ற சிறப்புரிமை என்னவெனில், நம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்ற தடையில்லாதபடிக்கு, வியாதிகளிலிருந்தும் நம்முடைய சரீரத்தைப் பாதுகாத்துகொள்ள நாம் நியாயமானக் காரியங்களைச் செய்யவேண்டும். உங்கள் சரீரம் பசியோடும் தாகத்தோடும் இருக்கும்போது, தேவனுடைய வேலைகளை முழு பலத்தோடுச் செய்ய, தேவையான ஆகாரத்தை அளவோடு கொடுக்க வேண்டும். நம்முடைய சரீரம் குளிரில் நடுங்கும்போது அதற்குத் தேவையான வஸ்திரத்தைக் கொடுக்கவேண்டும். இவையனைத்தும் தேவன் நமக்கு அனுமதிக்கிறார். நாம் ஜுரத்தில் இருக்கும்போதும், அதை குறைப்பதற்குத் தேவையான முயற்சிகள் எடுக்கவேண்டும். அதற்காக நாம் ஞானதிருஷ்டிக்காரர்களுக்கும், அறிந்த நிலையை உண்டாக்குபவர்களிடமும், சாத்தானின் உதவியோடு வேதனைகளைப் போக்க குறி சொல்பவர்களுக்கும் நாம் நம்மை ஒப்பக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அழிந்துபோகும் சரீரத்தைக் காத்துக் கொள்ள ஒரு சராசரி மனுஷன் எவ்வாறு செயல்படுகிறானோ, அவையனைத்தையும் செய்ய புது சிருஷ்டியும் உரிமைப் பெற்றிருக்கிறது. தங்களுடைய சரீரத்தை நியாயமாகப் பராமரித்துக்கொள்வது அவரவரின் கடைமையாக இருக்கிறது. நம்முடைய ஆண்டவருக்காக இந்தச் சரீரங்களை மரணபரியந்தம், ஒப்புக்கொடுத்து, தேவனுக்கேற்றப் பணிகளை தன்னால் முடிந்த வரையிலும் செய்யவேண்டும் என்ற காரணத்தினால், புது சிருஷ்டிகளின் இந்தக் கடைமையைப் பற்றி புது சிருஷ்டி தொகுப்பில் மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

10. ஜீவ பலியாக நம்மை ஒப்புகொடுப்பதற்கு நாம் விசுவாசத்தோடு செய்த உடன்பக்கைக்குப் பொறுமை தேவைப்படுகிறதா?

R3266 [col. 2 P5]: -

தேவன் நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருந்து, நம்முடைய பலியின் வேலைகளைச் செய்து முடிப்பதற்கு தொடர்ந்து வாய்ப்புகளைக் கொடுத்துகொண்டே இருக்கிறார். ஆனால் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்ற நம்முடைய சித்தங்கள் வெட்டி எறியப்படவேண்டும். இல்லாவிட்டால் நாம் என்றுமே அவருடைய ராஜ்யத்தில் பங்குபெறமுடியாது. இராஜரீகமான ஆசாரியர்களாக இருக்கமுடியாது. ஆகவே தேவன் மிக கிருபையாக பாடத்திற்கு மேல் பாடங்களையும், கொடுத்து நம்மை இவைகளின் முக்கியத்துவங்களை உணரச்செய்கிறார். அவருடைய வார்த்தைகள் அனைத்துமே இந்தக்கண்ணோட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. நாம் நம்முடைய சரீரங்களுக்கு மரித்து, தேவனுக்கும், ஆண்டவராம் இயேசுவுக்கும் நம்மை ஜீவனுள்ளவர்களாக இருப்பதின் முக்கியத்துவங்களை அவர் நமக்கு வெளிப்படுத்துகிறார். அவருடைய கிரியைகளைச் செய்யும்போது, நமக்குள் ஆவியின் கனிகள் அதிகமாக வளர்ச்சியடைகிறது. பலி செலுத்தக்கூடிய ஒவ்வொருவரும், சாந்தமாகவும்,

மனத்தாழ்மையுள்ளவராகவும், போதிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். இல்லையென்றால் வெகு சீக்கிரத்தில் இந்த வழியைவிட்டு விலகிவிடுவோம். நமக்குள் பொறுமையை வளர்த்துக் கொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது. ஏனெனில், நம்மை வெறுப்பதற்கும், அநீதியானக் காரியங்களுக்கு நம்மை ஒப்புக்கொடுக்கும்போது அதை சகித்துக் கொள்வதற்கும் அதிகமான பொறுமைத் தேவைப்படுகிறது. இவைகள் நமக்கு சகோதர சிநேகத்தைப் பெருகச் செய்கிறது. மேலும், ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் - நம்முடைய இருதயங்களிலும், வாழ்க்கையிலும், தேவனுடைய முழு சித்தம் வளர்ச்சியடைய, முதலாவது நீண்டகாலமாக அன்பு, ததும்பி வழிய வேண்டும். அப்போது நாம் இந்தப் பூமியில், பலியின் வேலைகளை முடிக்கமுடியும்.

11. நாம் எதிர்ப்புகளையும், உபத்திரவங்களையும் எதிர்நோக்குவது எப்படி?

1 பேது 2:20-23 - "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு ? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள், ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனைக் காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்."

R3199 [col.1 P3]: -

இப்படிப்பட்ட எதிர்ப்புகளை, நாம் எதிர்பார்க்கவேண்டியதே, சந்தேகத்திற்கு இடமின்றி நம்முடைய மரணம் வரைக்கும் இவைகள் தொடர்ந்து வரும். இந்த எதிர்ப்புகளுக்கு நாம் பொறுமையோடு ஒப்புக்கொடுத்தால், நம்முடைய இயல்பான உலகப்பிரகாரமான சந்தோஷங்களைப் பலிசெலுத்தி, எந்தப் பிரச்சனைகளின் மத்தியிலும், சத்தியத்தின் நிமித்தம் நல்ல போர்ச் சேவகர்களாக உறுதியோடு தேவனுடைய சித்தத்தைச் செய்யவும், வருங்காலத்தில் அவருடைய ராஜ்யத்தில் செய்யவும் நமக்கு வாய்ப்பளிக்கும். நம்முடைய சரீரங்களைத் தெய்வீகப் பணிக்காக ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதன் பொருள் இதுவே. இந்த ஊழியத்தில் உண்மையாக இருப்பதற்கு - முதலில் தேவனுடையத் திட்டத்தைக் கவனமாகப் படித்து புரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவதாக பரிசுத்த ஆவியைப் பெறவேண்டும். அதன் வழியாக தேவனுடையத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் வைராக்கியம் கொண்டு, எப்படிப்பட்ட உலகப்பிரகாரமானக் காரியங்களைப் பலி செலுத்தவேண்டுமானாலும் அதை செலுத்தி, தேவனுடையத் திட்டத்தை நிறைவு செய்யவேண்டும். இதுவே மூன்றாவது நிலையாகும்.

R1964 [col. 2 P2] : -

கிறிஸ்துவோடு துன்பப்படும் யாவரும், எந்த அளவு துன்பங்கள் வந்தாலும், இயேசுவைப்போல அதே பணிவுடனும், மனத்தாழ்மையுணர்வுடனும், இரக்கத்துடனும், பொறுமையுடன் சகித்தால் வரக்கூடிய கடுஞ்சோதனையானக் காலத்திலும் நீடிய பொறுமையோடிருக்க நம்மை பழக்குவிக்கும். இந்த ஒழுக்கக்கேடான இந்த மனுக்குலத்தைப் பொறுத்தவரையில் இயேசு ஆச்சரியப்படவில்லை. ஏனெனில், பாவம் நிறைந்ததும், இருளின் அந்தகார லோகாதிபதியின் உலகத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தார். ஆகவே அனைத்து விதமான துன்பங்களையும், உபத்திரவங்களையும் அவர் எதிர்நோக்கியிருந்தார். இவையனைத்தையும் மிகுந்த அன்பான இருதயத்தோடும் எதிர்நோக்கினதால், மற்றவர்களுக்காக வைத்திருக்கும் இரக்கமும் மற்றும் பரிவினாலும், அவருடைய துன்பங்களை அவர் பொருள்படுத்தவில்லை. உண்மையில், கிறிஸ்துவைப்போல, நாமும் இப்படியாக நீடிய பொறுமையுடன் பாடுகளை அனுபவிக்கும் ஆவி நமக்குள் இருந்து, குறித்தக் காலத்தில் பரலோகம் செல்வதற்கு மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறோமா ? "நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள், ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்." ஆகவே நாம் "இளைப்புள்ளவர்களாய் நம்முடைய ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ள வேண்டும்" (1பேதுரு 2:20-23, எபிரெயர் 12:3) கிறிஸ்து பாடுகளைச் சகித்ததுப்போல நாமும்

இரக்கத்தோடும், நம்மை துன்பப்படுத்துபவர்கள் செய்யும் மோசமானத் தவறுகளுக்காக ஜெபித்து, கூடுமானால் அவர்கள் மனம் திரும்ப அவரிடம் விண்ணப்பித்து, அவருடைய ஊழியத்தைச் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும், சகலத்தையும் சகித்து, நல்ல போர்ச் சேவகனாக நாம் தேவன் மேல் வைத்திருக்கும் பக்தியை நிரூபிக்க தேவன் கொடுத்த இப்படிப்பட்ட வாய்ப்புகளுக்கு நன்றி செலுத்தக்கடவோம்.

12. நாம் " அனைவரிடத்திலும் பொறுமையாக" எப்படி இருப்பது?

1 தெச 5:14 - "மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிற தென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்"

R3136 [col .1P5]: -

"அனைவரிடமும் பொறுமையாயிருங்கள்" - தேவனுடைய ஜனங்களுக்கு மத்தியில் இருக்கும் சரிசமநிலையுள்ளவர்கள் மற்றவர்களிடம் இரக்கத்தையும், பொறுமையையும் நடைமுறைப்படுத்த வேண்டும், அதாவது பெலவீனர்களிடமட்டும் அல்ல, அனைவரிடமும் இப்படி நடக்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறதாகத் தோன்றுகிறது. "பொறுமை உங்களுக்கு மிக அவசியம்" என்று அடிக்கடி வசனங்கள் குறிப்பிடுகிறது. உண்மையான தேவ பிள்ளைகள் இதற்குள் இருக்கும் சத்தியத்தை உணர்ந்துகொண்டு, கிறிஸ்துவ வாழ்க்கையில் பிரதானக் குணங்களில் பொறுமையும் ஒன்று என்பதை ஆழமாகப் புரிந்துகொள்வார்கள். (1) அறிவின் வளர்ச்சி, நம்மை பொறுமையில் வளரச்செய்யும். பிதாவாகிய தேவன் நம்மிடத்தில் காட்டின பொறுமையை நாம் உணர்ந்தால், அதே பொறுமையை நிச்சயமாக நாம் மற்றவர்களிடத்திலும் காட்டலாம். (2) முழு மனுக்குலத்தின் மேலும் மிகப்பெரிய அழிவு காத்திருப்பதை அறிந்த நாம் - நம்முடைய விழுந்துபோன நிலை மற்றும் அந்த விழ்ச்சி ஏதோ ஒரு வகையில் எவ்வாறு பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது என்றும் - பெரும்பாலும் மனதாலும், உடலாலும் அநேகர் பாதிக்கப்பட்டதைக் காணும்போது, நிச்சயமாக நம்முடைய மனது இரங்கும். நமக்குள் இருக்கும் தயாள குணமும், பரிவும் அதிகரித்து, இவைகளோடு நாம் தொடர்பு கொள்ளும்போது, நமக்குள் நீடிய பொறுமை பெருகும். விசேஷமாக விசுவாச வீட்டார் - தேவனுடைய கிருபையான அழைப்பில், இன்னும் பூரணப்படாதவர்களை உண்மையில் இந்த அனுபவம் பொருந்தும். தேவனுடைய கிருபையான அழைப்பை உணர்ந்தவர்கள், அவர் அழைத்தவர்களிடம் நாம் மிக ஜாக்கிரதையாக அணுகி, அவர் அழைத்த அழைப்பிற்கு இசைந்து கிரியை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க விருப்பப்படும் யாவரையும் இடுக்கமானப் பாதையில் நம்மோடுகூட நடக்க முழுமையாக முயற்சிக்கவேண்டும். இந்த ஒரு வேலைக்கு நமக்கு விசேஷித்தப் பொறுமை தேவைப்படுகிறது. -ரோ14:15, 1 கொரி 8:11

F306 – F307 -"அனைவரிடமும் சமாதானமாக இருங்கள்"

இந்த அறிவுரைக்குக் கீழ்ப்படிந்து, எல்லா சூழ்நிலைகளிலும், அனைவரிடமும் இந்தப் பொறுமையை நடைமுறைப்படுத்தினால், மற்றவர்களோடு நாம் மிகச்சரியாக நடந்துகொள்வது மட்டும் அல்லாமல், நமக்குள் விசேஷித்த ஆவியின் கனியாகிய பொறுமையை முழு உற்சாகத்தோடு வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை ஒவ்வொரு புது சிருஷ்டியும் உணர்ந்து கொள்ளமுடியும். பொறுமை என்னும் ஆவியின் கனியை நம்முடைய வாழ்க்கையில் செயல்படுத்த சபையிலும், வெளியிலும் அநேக வாய்ப்புகள் கிடைக்கும். இந்த முழு உலகமும் நம்முடைய பொறுமையை உரிமை கோருகிறார்கள் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். வசனங்களின் மூலமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அநேக உபத்திரவங்களினால் தவித்துக் கொண்டிருக்கும் இந்த உலகத்தின் நிலைமையை சரியாகப் புரிந்துகொண்டால் மட்டுமே நாம் இவர்களின் காரியங்களை உணரமுடியும். அப்போது மனிதனின் வீழ்ச்சியும் அதனால் வந்த விளைவுகள் தெளிவாகக் காணப்படுகிறது. இந்த பாவிகள் மேல் தேவன் வைத்திருக்கும் நீடிய பொறுமையையும், அவர்களை மீட்கும் விஷயத்தில் அற்புதமான அன்பையும், உளையான சேற்றிலிருந்து (பாவம் மரணம்) சபையை தூக்கி எடுத்து மிகுதியான ஆசீர்வாதங்களைக் கொடுப்பதோடு மட்டுமல்ல, இந்த முழு உலகத்தின் மனுக்குலத்திற்கும் அவர் கொடுக்கப்போகும் ஆசீர்வாதங்களைக் காணலாம். இந்த உலகத்தைப் பொருத்தவரையில் அவர்களின் பிரச்சனை என்னவெனில் - "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களின் கண்களை குருடாக்கிவிட்டான்" தவறாக வழிநடத்திக்கொண்டிருக்கிறான்.

11 கொரி4:4

நிச்சயமாக இந்த அறிவு நமக்கு அதிகமான பொறுமையை உண்டுபண்ணும். மேலும் இந்த உலகத்தோடும் நாம் பொறுமையாக இருந்தால், தேவனுடைய கிருபையினால் இயேசுகிறிஸ்துவுக்குள் மன்னிப்பைப்பெற்று தேவனுடைய குடும்பத்தில் ஒரு நபராக அங்கீகாரம் பெற்று, அவருடைய பாதையில் நடக்க விரும்பும் நம்முடைய சகோதரர்களோடு இன்னும் பொறுமையோடு செயல்பட கடமைப்பட்டிருக்கிறோம். நம்முடைய கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக அழைக்கப்பட்டிருக்கும் உடன் சகோதரர்களிடம் எப்படிப்பட்ட அன்பையும், நீடிய பொறுமையையும் நாம் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று சற்று யோசித்து பாருங்கள். இவர்களிடம் பொறுமையாக நடந்துகொள்வதைத் தவிர வேறு எதையும் நாம் செய்யவேண்டிய அவசியமில்லை. இந்த பொறுமை நம்மிடம் குறைவாகக் காணப்பட்டால் நிச்சயமாக நம்முடைய கர்த்தராகிய இயேசு அதை கடுமையாகக் கண்டித்து உணர்த்தக்கூடியவராக இருக்கிறார். விசேஷமாக, மாம்சம், உலகம், சாத்தானோடு நாம் எதிர்த்து நிற்கையில் நம்முடைய பலவீனங்களையும், மன அழுத்தங்களையும் தாங்கிக்கொள்ள அதிகமான பொறுமை தேவைப்படுகிறது. அனைவரிடமும் பொறுமையாக நடந்துக் கொள்வதற்கு, இந்த உண்மைகள் நமக்கு உதவியாக இருக்கும்.

13. சுவிசேஷ யுகத்தின் அறுவடையில் விசேஷித்த பொறுமை தேவைப்படும், காரணம் என்ன?

R2155 [col . 2P1]: -

இந்த யுகத்தின் முடிவில் நம்முடைய ஆண்டவர் மிகுந்த பொறுமையோடு இருக்கவேண்டும் என்பதை முன்னதாகவே எச்சரிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. உங்கள் சகோதரர்களிடமும், தீமையோடு போராடும்போதும், ஆண்டவருடைய காலத்திற்காகக் காத்திருக்கும் போதும், "இந்தத் தீமையான உலகத்தை" சீர்பொருத்துவதற்காகவும் நாம் நீடிய பொறுமையோடு காத்திருக்கவேண்டும். விசுவாசத்திலும், தேவனுடைய திட்டத்தின் அறிவிலும், தைரியமாகத் தேவனுக்கென்று செயல்படுவதிலும் குறைவுள்ள இந்த எளிய உலகம் வருங்காலத்தில் நடப்பவைகளை அறியாமல், பொறுமையை முற்றிலுமாக இழந்துவிடுகிறார்கள். ஆனால் "உங்களுக்குப் பொறுமை மிக அவசியம்" - என்று தேவனுடைய ஜனங்களுக்குச் சொல்லப்படுகிறது.

R2792 [col. 2P5]- R2793 [col. 1P4] : -

நாம் இப்பொழுது நுழைந்திருக்கும் சோதனைக்காலத்திற்கேற்ற ஆலோசனையை நம்முடைய அப்போஸ்தலர்கள் கொடுக்கிறார்கள். சோதனைகளும், உபத்திரவங்களும் அநேக விதமாக இருக்கும். சில மிகத் தந்திரமானதாக இருக்கும். கிறிஸ்துவுக்குள் வேரூன்றாதவர்களும், சத்தியத்தில் நிலையில்லாதவர்களும் நிச்சயிக்கப்பட்ட அடிப்படை சத்தியத்திலிருந்து (ஈடுபலி) விலகிப்போவார்கள். தவறான வாக்குவாதங்கள் செய்வோர்களை சாத்தான் தன்னுடைய கருவியாகப் பயன்படுத்தி இந்த முழு உலகத்திலுள்ள அனைவரையும் வஞ்சித்துக் கொண்டிருக்கிறான். இக்காலத்தில் சாத்தானின் வல்லமையால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கிறிஸ்தவர்களின் விஞ்ஞானத்தைத் தவிர வேறு எதுவும் சோதனையாக வைக்கப்படுவதில்லை. அவனுடைய தவறானக் காரியங்களுக்கும் அசத்தியங்களுக்கும் அநேக நம்ப தகுந்த ஆதாரங்களை முன்வைக்கிறான். அதை நம்பினவர்கள், சத்தியத்தினிமித்தம் வரும் துன்பங்களிலிருந்து நிச்சயமாக ஒரு விடுதலையைப் பெறுவார்கள். ஏதோ ஒரு வழியில் விடுதலை வந்தால் சரி என்றிருப்போருக்கு இந்தக் காரியங்கள் மிகவும் சாதகமாக இருக்கும். சத்தியத்தின் நிமித்தம் வரும் வேதனைகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்காக தங்களைத் தாங்களே வஞ்சிக்க கற்றுக்கொண்டபின் சத்தியத்தின் உண்மையான அர்த்தங்கள் அவர்களுக்குத் தவறாகத் தோன்றும். அதற்கு பின் சில குழப்பங்கள் உண்டாகி, இறுதியில் அனைத்து சத்தியங்களும் தவறாகத் தோன்றும். தவறாகத் தோன்றும் சத்தியத்தின் வெளிச்சம் நாளுக்கு நாள் அவர்களுக்கு அதிகரித்து, முற்றிலுமாக இருளில் தள்ளப்படுவார்கள்.

மிகுதியான ஆர்வ கோளாறு இப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்குக் கொண்டுசெல்லும். "மரணம் இல்லை, ஜீவன் உண்டு, வேதனை இல்லை சுகமுண்டு, தீமையில்லை நன்மையுண்டு" என்று தங்களுக்குத் தாங்களே சொல்லிக் கொள்கிறார்கள். இவை அனைத்தும் முரன்பாடான வாக்கியங்களாக இருந்தாலும், அவைகளை உண்மை என்று எவ்வாறு நிரூபிக்கிறார்கள் ? அவர்களின் தத்துவ ஞானத்தின் கோட்பாடுகள் என்ன ? - இதையே சாத்தான் விரும்புகிறான். ஜனங்களின் கவனத்தை ஈர்த்து, படிப்படியாக அவர்களை தவறான வழியில் நடத்தி அவர்களின் முழு சிந்தையையும் அவனுக்குள் கொண்டுவந்து தற்காலிகமான விடுதலைகளையும், அதற்கேற்ற கைமாறும்,

மகிழ்ச்சிகளையும் தருகிறான். இவர்கள் இருளை வெளிச்சம் என்று ஏற்றுகொண்டவர்கள், அவர்களுக்கு வெளிச்சம் இருளாகத் தோன்றும்.இவர்கள் இந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டதின் காரணம் என்ன ? இவர்கள் பொறுமையோடு காத்திருக்க சம்மதியாததினாலும், உறுதியான மனநிலையில் இந்த சத்தியத்தைப் பெற்றுக்கொள்ளாததே இதற்குக் காரணமாக இருக்கிறது. சத்தியத்தை, அடிப்படையான அன்பில் அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. ஆகவே அவர்களுடைய வாழ்க்கைக்கு சாதகமான, இலேசான காரியங்களை தெரிந்துக்கொள்கிறார்கள். இவர்கள் ஆர்வமூட்டக்கூடிய செய்திகளை அதிகமதிகமாக விரும்புகிறார்கள். அல்லது உடல் ரீதியான நலத்திற்கும், அவர்கள் பிரயாசப்படுகிறார்கள். இவர்கள் இதை நீடிய பொறுமையோடு தாங்கிக் கொண்டிருந்தார்களானால், சகலமும் நித்திய ஆசீர்வாதங்களுக்கு வழி நடத்தியிருக்கும்.

சோதனையின் காலம் அனைவர் மேலும் ஒரேவிதமாக வருவதில்லை. ஏனெனில், முழு கிறிஸ்துவ மண்டலமும், சிந்தையில், குணங்களில், ஆவியில் ஒரு நிலையில் இருப்பதில்லை. கிறிஸ்துவ மண்டலத்தின் மேல் வரும் உபத்திரவம் பொதுவானது என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின நிரூபத்தில் குறிப்பிடுகிறார். (11 தீமோ 3:1-5) இங்கு இந்தக் காலத்திற்குரிய சில சோதனைகளை அவர் சித்தரிக்கிறார்."மகா உபத்திரவத்தின்" காலம் இந்த உலகத்தின் மேல் வருவதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு அடிப்படையாக இருக்கும் குணம் - சுயநலமும், அதற்கு கருவியாகப் பயன்படுகிறது பொறுமையற்ற குணமே என்று தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கப்படுகிறது. "மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்..." என்று பவுல் குறிப்பிடுகிறார்.

தெசலோனிக்கேயருக்கு எழுதின நிரூபத்தில் (11 தெச 2:9-12) இந்த உபத்திரவக் காலத்தில் முழு உலகத்தில் மேல் வந்தும், அதன் முழுமையான உச்சக்கட்டத்தை இன்னும் அடையாதிருக்கும் சோதனைகளைப்பற்றி அவர் முன்னறிவிக்கிறார். இவைகள் இன்னும் சில வருடங்கள் நீடித்தாலும், அவைகள் கிரியைச் செய்துகொண்டிருக்கிறது. ஏனெனில் நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாக இருக்கிறதே. இக்காலத்தின் தீமைகளுக்குப் பிரதானமாகச் செயல்படுகிறவன் சாத்தான் என்பதை அவர் கூறுகிறார். விசேஷமாக இந்த யுகத்தின் முடிவில் சோதனையின் காலத்தில் அவன் முழு பலத்தோடு கிரியை செய்கிறான். "அவனுடைய சகல வல்லமையினாலும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும். " என்ற காரணத்தையும் அவர் குறிப்பிடுகிறார். "ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்."

நாம் நம்பக்கூடிய காரியங்கள், குணலட்சணங்கள் அல்லது வரவிருக்கும் மகிமை அனைத்தும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆகவே நாம் இந்தச் சத்தியத்தை எந்தவிதத்திலும் அல்லது எதனுடனும் விட்டுக்கொடுத்து விடக்கூடாது. நாம் வார்த்தைகளை வசனங்களினால் மட்டும் அல்ல ஆவியினால் அவைகளின் மேல் அன்போடு பிடித்திருப்பவர்களாக இருக்க வேண்டும். இதுவே உண்மையானதும், அழகானதும், சிறப்பானதுமாக இருக்கும். சத்தியத்தைப்பற்றிக் கொண்டிருக்கும் நம்மை யாரும் திசை திருப்பி விடாதபடிக்கு கவனமாக இருக்க வேண்டும். மேலும் இந்த வசனங்களைத் தவறாகப் பயன்படுத்தி நம்மை நாம் வஞ்சித்து, நம்முடைய கண்களை நாமே குருடாக்கிக் கொண்டு, நம்மையே தடைசெய்யாதபடிக்கு எச்சரிப்போடிருக்க வேண்டும். ஆகவே நாம் இந்த நீடிய பொறுமையை நமக்குள் வளர்த்து அதை செயல்படுத்துவதின் மூலம் தேவனால் நமக்கு அனுமதிக்கப்படும் சோதனைகள், உபத்திரவங்கள் மற்றும் அனைத்தையும் சந்தோஷமாகச் சகித்து மற்ற குணங்களையும் (மலைபிரசங்கத்தில் சொல்லப்பட்டவைகள்)

நமக்குள் பரிபூரண அன்பை முழுமையாக வளர்க்கக்கடவோம். ஏனெனில் பரிபூரண அன்பில்லாமல் இந்தக் குணங்களைப் பெறவோ, தக்கவைக்கவோ முடியாது.

14. பொறுமை நம்மை தேவனுடைய வழியைவிட்டு விலகச் செய்வதற்கு வாய்ப்புகள் உண்டா?

எபே 5:11"கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்."

R2155 [col. 1 P6] : -

விசுவாசம், சகிப்பு தன்மை, அறிவு - இவையனைத்தும் நன்மையான எந்த முயற்சிக்கும் பொறுமையோடு காத்திருப்பதற்குத் தேவனுடைய ஜனங்களைப் பக்குவப்படுத்துகிறது. எளியோரிடத்திலும், குருடராக இருக்கும் இந்த உலகத்தினிடத்திலும், "கிறிஸ்துவுக்குள் குழந்தையாக" இருப்போரிடத்திலும், மந்தமான மூடர்களிடத்திலும், உணர்ச்சிவசப்பட்டு ஓயாமல் தவறு செய்பவர்களிடத்திலும், அதிகப்பிரசங்கியான பேதுருக்களையும், சந்தேகிக்கும் தோமாக்களையும் நாம் பொறுமையோடே சகிக்க வேண்டும். ஆனால் கனியற்ற அந்தகாரக் கிரியைகள் மற்றும் பாவத்திற்கு இந்தக் கிருபை விலகுகிறது. இப்படிப்பட்ட இடங்களில் நாம் தீமையான எண்ணங்களைக் கடிந்துகொள்ளுதலை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். ஆனால் மனந்திரும்பிய குமாரனைப்போல் வருபவர்களுக்கு முழுமையான பரிவையும், இரக்கத்தையும் காண்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

15. நீடிய பொறுமையை அன்பை விட சிறந்ததாக அப்போஸ்தலன் ஏன் கூறுகியார்?

தீத் 2:2 "முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்கும்படி புத்திசொல்லு."

11 தீமோ 3:10" நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும்.."

R 2723 [col. 1 P2- col. 2P2] : -

நம்முடைய பாடத்திற்கு ஏற்ற வார்த்தைகளை தீத்து 2:1-15ம் வசனங்களில் பவுல் குறிப்பிட்டிருக்கிறார். கிரேத்தா தீவில் உள்ள விசுவாசிகளின் சபைக்கு கண்காணியாக இருந்த தீத்துவுக்கு சில கட்டளைகள் கொடுக்கப்பட்டது. இந்தக் கட்டளைகள் தத்தம் செய்த விசுவாசிகளைத் தவிர வேறொருவருக்கும் பொருந்தாது. குறிப்பாக கிரேத்தாவில் உள்ளவர்கள் ஆறு வகுப்பாராகப் பிரிக்கப்படுகிறார்கள். (1) முதிர் வயதுள்ள புருஷர்கள் (2) முதிர்வயதுள்ள ஸ்திரீகள் (3) வாலிபர் (4) இளம்பெண்கள் (5)கிறிஸ்துவுக்கு சுதந்தரவாளிகள் - ஊழியக்காரர்கள் (6) தீத்து (7) இந்தப் பாடம் சபையில் உள்ள எல்லா வகுப்பினருக்கும் சொல்லப்படும் அறிவுரைகளோடு முடிவடைகிறது.

போதகராக இருந்த தீத்துவுக்கு, ஒவ்வொரு வகுப்பாரைப் பற்றிய சிந்தை தன்னுடைய மனதில் இருந்ததாக, ஞானமாக ஊழியம் செய்து அவர் அவரை அந்தந்த நிலைக்குக் கொண்டுவர பாடுபட்டிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாக அவருடைய கவனத்திற்கு பவுல் கொண்டுவந்தார். "நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக்கேற்றவைகளைப் பேசு." என்று சொல்லி, அதற்குப் பின்வரும் சகல கட்டளைகளையும் அதன் அடிப்படையில் தெரியப்படுத்தினார். கிரேத்தா தீவிலிருந்தவர்கள் நல்ல குணலட்சணம் இல்லாதவர்களும், ஞானத்தில் குறைவுள்ளவர்களாகவும் இருந்ததினால், அப்போஸ்தலனாகிய பவுல், இப்படிப்பட்ட அறிவுரையைக் கொடுத்தார் என்று கருதுகிறார்கள். ஆனால் இங்கு கட்டளையாகச் சொல்லப்பட்ட ஒவ்வொரு வார்த்தைகளும் கடைசி காலத்தில் உள்ள நமக்கு, இவ்வளவாகச் சத்தியத்தில் வெளிச்சம் பெற்றிருந்து, எவ்வளவு நேர்த்தியாகப் பொருந்துகிறது என்று பார்க்கலாம்.

முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்க வேண்டும் என்று புத்திசொல்லுகிறார். அவர்களுடைய வாழ்நாட்களின் அனுபவங்கள் மட்டும் அல்ல, அவர்களுடைய கிறிஸ்துவ ஜீவியத்திலும் அவர்கள் பெற்ற அனுபங்கள் அவர்களுக்குள் நல்லொழுக்கத்தையும், முதிர்ச்சியையும் கொண்டு வரவேண்டும். இந்த மூன்று குணங்களும் தங்களுடைய அழியக்கூடிய இந்தச் சரீரத்தில் அதிகமாக

நிலைத்திருந்தால், அவர்களை புது சிந்தை அருமையாகச் செயல்படும். ஆனால், புது சிருஷ்டிகளுக்கு இதற்குக் கூடுதலாக மற்றும் மூன்று குணங்கள் தேவைப்படுகிறது. - தேறின விசுவாசம், முழுமையான அன்பு, நீடிய பொறுமை. அப்போஸ்தலனின் உள்நோக்கத்தின் படி கிரேக்க வார்த்தையில் சொல்லப்படும் விசுவாசம், அன்பு, பொறுமைக்குள் அநேகவிதமான விசுவாசம், அநேகவிதமான அன்பு, அநேகவிதமான பொறுமை என்றும் அவைகள் என்னென்ன பொருளை உடையது என்றும் குறிப்பிடுகிறார். விசுவாசம், அன்பு, பொறுமை இவைகள் தேவனுடையவைகள் என்றும் "தேவனால் அவர்கள் போதிக்கப்படுவார்கள்" என்றும் எழுதியிருக்கிறபடி அவருடைய வார்த்தைகளின் மூலம் தம்முடைய ஜனங்களுக்கு இவைகளைக் கட்டளையிடுகிறார் என்றும் நம்முடைய மனதில் பதியவைக்கும்படி இப்படியாக பிரித்துச் சொல்லியிருக்கிறார்.

ஆவியின் கனியின் வரிசையில் அன்பு முதலாவது இடத்தைப் பிடித்திருந்தாலும், அப்போஸ்தலனாகிய பவுல் தற்செயலாக விசுவாசத்தை முதலில் எழுதவில்லை. ஒருவர் சத்தியத்தின் ஆவியைப் பெறாமல், சத்தியத்தைப் பெறமுடியாது. ஆகவே சத்தியத்தின் முக்கியத்துவம் விசுவாசத்தையே சார்ந்துள்ளது.

ஒரு மனுஷன் எதை நம்புகிறான் என்ற அவசியமில்லை, ஆனால் அவன் என்ன செய்கிறான் என்பது அவசியம் என்று அடிக்கடி நமக்குச் சொல்லப்படுகிறது. இதற்கு முழுமையான விசுவாசமே முக்கியமானது என்று நாம் பதில் அளிக்கலாம். ஏனெனில், இந்த விசுவாசத்தினால் நம்முடைய நடத்தை ஒழுங்குபட்டு, ஊக்குவிக்கப்படும். நாம் பெற்ற சத்தியத்தின் அளவுக்கேற்றபடி நமக்குள் இருக்கும் விசுவாசம் இருக்கும். ஏனெனில் நமக்குள் சத்தியம் இருந்தால் மட்டுமே நாம் சுத்திகரிக்கப்படமுடியும். - அதற்குப் பதிலாக நாம் தவறுகளைப்பற்றிக் கொண்டிருந்தால், அவைகள் நமக்குள் இருக்கும் சத்தியத்தைக் கட்டுப்படுத்தி அதை பலனளிக்கவிடாது. இந்த ஒரு சூழ்நிலையில் நாம் சுத்திகரிக்கப்படுதலின் அளவு குறைந்துகொண்டே போகும். ஆகவே நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நம்முடைய ஆண்டவரின் ஜெபத்தை நினைவில் கொள்ளவேண்டும் -"உம்முடைய வசனமே சத்தியம், உம்முடைய சத்தியத்தினால் அவர்களைப் பரிசுத்தமாக்கும்."

அதே போல் தற்செயலான அன்புக்கு முன் அவர் பொறுமையை வைக்கவில்லை. இயல்பான வாழ்க்கையில் பொறுமையைக் கற்றுக்கொண்டாலும், எடுத்துக்காட்டாக - உலகபிரகாரமானக் குறிக்கோள், ஆசைகளுக்காகக் காத்திருப்பது நம்முடைய இருதயத்தைப் பாதிப்பதில்லை. ஆனால், வெளியிலிருந்து தடைகள் மிகப்பலமாக வரும்போது, அதுவரைக்கும் இருந்த பொறுமை எல்லை தாண்டி முந்தியிருந்த பதற்றத்தை விட பொறுமையற்ற சூழ்நிலை வந்துவிடும். இறுதிவரைக்கும் பொறுமையாக இருப்பது நம்முடைய இருதயங்களில் ஏற்படும் மாற்றமாக இருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருக்கும் சுயநலம் என்னும் ஊற்றை, அன்பு என்ற ஊற்றாக மாற்ற வேண்டும்.

இந்தக் குணங்கள் எவ்வளவு மகத்துவமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இன்றைய தினங்களில், இப்படிப்பட்ட குணநலங்கள் உள்ள முதியோர்களைக் காண்பது அரிதாகவே இருக்கிறது. ஆனால் சபைகளில் உள்ள மூத்த சகோதரர்கள் நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும், அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்க வேண்டும். அவர்களுடைய புதிய சிந்தை தேவனுடைய விசுவாசமுள்ள தேவனுடைய வார்த்தைகளினால் நிறைந்து, அவர்களின் இருதயங்கள் அன்பினால் நிரப்பப்பட்டு, சகலவிதமான நற்குணங்களை வெளிப்படுத்த வேண்டும். இவையனைத்தையும் ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் பொறுமையாக இருக்க வேண்டும். எல்லா மூத்த சகோதரர்களும் தேவனுக்குமுன் பூரண புருஷர்களாக இருந்து, ஜீவனுள்ள தலையாகிய கிறிஸ்துவின் சரீரத்தின் அளவுக்கு வளர்ச்சியடைந்து, அவருடைய சாயலை தரித்துக்கொள்ள வேண்டும். நம்முடைய சிந்தையில் இந்தச் சாயலை முன்வைத்து நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கைக்கு மாதிரியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

R2791[col. 2P3,5] – R2792[col.1 P1]: -

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய வார்த்தைகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட முறைகள் கிறிஸ்துவ குணங்களில் நீடிய பொறுமையை அன்பைக் காட்டிலும் மேலான இடத்தில் கோடிட்டுக் காட்டுகிறார். பரிசு பொருளைப் பெற்றுக்கொள்ள இந்த ஓர் எல்லை வரைக்கும் நாம் ஓடவேண்டியவர்களாக இருக்கிறோம். எடுத்துக்காட்டாக தீத்துவுக்கு (தீத்து) கிறிஸ்துவ மேன்மையானக் குணங்களைப்பற்றி எழுதும்போது விழித்திருந்து, ஜாக்கிரதையுள்ளவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும், விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாகவும்,

பொறுமையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்கிறார். இந்தக் குணங்கள் அனைத்தையும் பெற்றிருப்பவர்கள் கடைசி பரீட்சையாகிய பொறுமையில் ஜெயிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, அவரால் ஏற்றுக்கொள்ளப்படும்போது, சந்தோஷத்துடன் சகிக்கும் மனப்பக்குவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி, நாம் பெறும் பரிசு பொருளுக்கு இலக்காக வைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் இந்த ஒரு குணம் அன்பைவிட சிறந்ததாக நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று கேட்கலாம். இந்தப் பொறுமை நம்முடைய வாழ்க்கையின் ஒரு பகுதியில் மட்டும் செயல்படுவதில்லை மாறாக, துவக்கம் முதல் முடிவுவரைக்கும் இந்தப் பொறுமை நமக்குத் தேவைப்படுகிறது. ஆதியில் அனுபவிக்கும் உபத்திரவங்களில் நாம் நீடிய பொறுமையோடு இருந்தால், நாட்கள் வேகமாக செல்லும்போது வரும் அதிகமான சோதனைகளில் நாம் நீடிய பொறுமையில் உறுதிப்பட்டவர்களாக ஆவியில் வளர்ச்சியடைவோம். முதலாவது கால் பங்கில், அதற்குப் பின் அரைபங்கு, அதற்குப் பின் முக்கால் பங்கு அதற்குப் பின் பூரணமான அன்பின் வளர்ச்சி நம்மை பரிசுப்பொருளைப்பெற தகுதிப்படுத்துகிறது. நாம் நம்முடைய சிநேகிதர்களை மாத்திரம் அல்ல, நம்முடைய சத்துருக்களையும் சிநேகிக்கக்கூடிய அன்பைப் பெற்றுக்கொண்டபின் எதிர்பார்க்கப்பட்ட விசுவாசத்தோடும், சந்தோஷத்தோடும், நீடிய பொறுமையோடும் தேவன் அனுமதிக்கும் கடைசி சோதனைகளில் ஜெயித்துக்காட்ட வேண்டும். ஆகவே அப்போஸ்தலன் -"அனைத்தையும் செய்து முடித்தபின் பொறுமையோடு நிலைத்திருங்கள்", "குறிக்கப்பட்ட நிலையை அடைந்தபின் பொறுமை தன்னுடைய வேலைகளைப் பூரணமாகச் செய்ய அனுமதியுங்கள்" உங்களுக்குள் இருக்கும் நீடிய பொறுமை, நீங்கள் பெறப்போகும் பரிசுக்காக வளர்ந்திருக்கும் அன்பை மட்டும் இல்லாமல், மற்ற குணங்களையும் ஆழமாக வேர்கொண்டு உங்களுக்குள் ஸ்தாபிக்கப்படுவதை நிரூபிக்க எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் சந்தோஷத்துடன் சகிப்பதற்கு உங்களைப் பழக்குவிக்கும்.

ஆம், நம்முடைய ஆண்டவராம் இயேசு இந்தத் தீமையான உலகத்தில் பாடுகளை அனுபவித்ததைப்போல, நாமும் அனுபவிக்க தேவன் செய்த ஏற்பாடுகளை நாம் கண்டோம். இதன் மூலம் நம்முடைய ஆண்டவரின் குணங்களை நமக்குள் ஆழமாகப் பதியவைத்து, நம்மை எந்த விதத்தில் வீழ்த்தும் காரியங்களுக்கு மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக நம்மை காத்துக்கொள்ளும்.

16. பொறுமை மற்றும் " கிறிஸ்துவுக்குள் நல்ல சேவகனாக தீங்கனுபவிப்பதற்கு" உள்ள தொடர்பு என்ன?

1 பேது 5:10 "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக.

R1860 [col. 2 P1] : -

ஆண்டவருக்குள் இருக்கும் சகல நண்பர்கள் மேல் வைத்திருக்கும் அளவு கடந்த அன்பும் பரிவும் இருப்பதினால் அப்போஸ்தலன் மிகுந்த அக்கறையுடன் நல்வாழ்த்துக்களோடு இந்த அறிவுரையைக் கூறுகிறார் - (1பேதுரு 5:10) நாம் கிறிஸ்துவுக்குள் நல்ல போர் சேவகர்களாக தீங்கனுபவித்தால் மட்டுமே தேவன் விரும்பும் நிலையை நாம் அடையமுடியும். அதாவது, பூரணமான தன்னடக்கம், தீமையைத் தடுத்து நிற்கும் ஆற்றல், விசுவாசத்தை ஸ்தாபிப்பது, பொறுமை, சிறந்த நல்லொழுக்கத்தோடு கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து, அவருடைய வாக்குத்தத்தமான வார்த்தைகளில் நம்பிக்கையோடு இருக்க வேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி ஆண்டவருடைய ஊழியத்தைத் தொடர்ந்து நடப்பிக்கையில் பேதுருவின் வாழ்க்கையில் நடந்த சொந்த அனுபவங்களாக இருந்தது. அதேபோல் காலப்போக்கில் நாமும் இப்படியாகப் பெற்றுக்கொள்வோம். ஆகவே நாம் ஒவ்வொருவரும் எல்லா குணங்களிலும் பூரணமான சிகரத்தை அடைய முயற்சிப்போம்.

17. கிறிஸ்துவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொளைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் எப்படிப்பட்ட ஓட்டத்தை ஓடவேண்டும்?

எபி 12:1 "ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும்

முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கவோம்."

எபி 6 :12 " உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவுபரியந்தம் அப்படியே ஜாக்கிரதையைக் காண்பிக்கவேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்."

R2792 [col. 2 P4] : -

கிறிஸ்தவ மண்டலத்தில இப்படிப்பட்ட ஆவி வளர நாம் உண்மையில், எதிர்ப்பார்க்கிறோம். கடந்த காலத்தில் அவர்கள் மற்றவர்களைத் தாக்கும் தன்மை இல்லாதவர்களாக மிகுந்த பொறுமையுடன் இருந்திருக்கவேண்டும். நீண்ட காலத்திற்கு முன்னதாகவே அவர்கள் தங்களுடைய கரத்தில் இந்த வேலைகளைச் செய்திருந்தால், உலகம் முன்னதாகவே மனம் திரும்பியிருக்கும் என்று நினைக்கலாம். ஆனால் தேவனுடைய வார்த்தைகளை நீடிய பொறுமையுடன் காத்துக் கொண்டவர்கள், பரத்திலிருந்து வரும் சுத்தமானதும், சமாதானம் கொடுக்கக்கூடியதும், கிருபை நிறைந்ததும், அநேக நற்கிரியைகள் செய்வதும், நீடிய சகிப்புத்தன்மையுமுள்ள, தேவனுடைய ஞானத்தைக் கேட்டு பெற்றுக் கொண்டவர்கள் அனைத்தும் குறித்தக் காலத்தில் நிறைவேறும் என்று நன்கு அறிந்திருக்கிறார்கள். இதை கற்றுக்கொண்டதன் நிமித்தம் நம்முடைய ஆண்டவர் தீமைகளை எதிர்த்து, மனவேதனை அளித்த காரியங்களைப் பொறுத்து, சகல உபத்திரவத்தையும் சந்தோஷத்துடன் சகித்ததைப்போல, அவர்களுக்குள்ளும் நீடிய பொறுமையில் வளர்ச்சியடைந்து, தேவன் இப்படிப்பட்ட காரியங்களை ஞானமான நோக்கத்திற்காக அனுமதித்திருக்கிறார் என்றும் எல்லாவற்றிற்கும் மேலாக கிறிஸ்துவோடு அவருடைய ராஜ்யத்தில் பங்காளிகளாக இருக்கும்படி, "சிறு மந்தைக்கான" ஆயத்தங்களும் தொடர்ந்து நடந்துக் கொண்டிருப்பதை அவர்கள் உணருவார்கள்.

R3149 [col. 1 P6]: -

இவ்வாறாக, "உங்கள் சிந்தையை கச்சையினால் கட்டி", மன உறுதியோடு நீண்ட நாட்கள் சீராக தொடர்ந்து முயற்சிக்க மேலும் ஆலோசனைகளைக் கூறுகிறார். "தன்னடக்கமுள்ளவர்களாயிருங்கள்" நீங்கள் ஒன்றுக்கும் உணர்ச்சி வசப்படவேண்டாம். ஒரு சிறிய விஜயத்திற்கு நீங்கள் உணர்ச்சி வசப்படும்போது, நாம் அதுவரைக்கும் பெற்றிருந்த ஆவிக்குரிய சகல கனிகளும் மிகக் குறுகிய நேரத்தில் இழக்கச்செய்யும். மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி, சோர்வடைந்து நம்மை துன்பத்தில் ஆழ்த்திவிடும். ஆனால் நீண்டகாலம் நீடிய பொறுமையோடிருக்க விசுவாசம் மற்றும் பொறுமையின் சகலவிதமான சோதனைகளையும் ஜெயித்தால் மட்டுமே வாக்குத்தத்தம் செய்த ஆசீர்வாதத்தைப் பெறமுடியும். நமக்குமுன் வைக்கப்பட்டிருக்கும் பந்தயம் வேகமாக ஓடுவதற்கு அல்ல மாறாக "பொறுமையோடு தொடர்ந்து" பயணிக்கவே நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. தன்னடக்கத்தோடும் ஜாக்கிரதையோடும் நமக்களிக்கப்பட்ட விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நாம் சீர்தூக்கிப்பார்த்து, அதன் முக்கியத்துவங்களை உணர்ந்து, அவைகளினால் கிடைக்கும் உற்சாகத்தை எச்சரிப்போடு ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையினால் கொடுக்கப்பட்ட இந்தக் கட்டளைகளை நல்ல போதகர்கள் மற்றும் ஆசிரியர்களின் உதவியோடு நம்முடைய இருதயத்திலும், சிந்தையிலும் உண்மையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இவைகள் அனைத்தும் நம்மை வசனங்களை சரியாக தியானிக்கச் செய்து, பொறுமையோடு நம்மை நாம் மனத்தாழ்மையோடு கீழ்ப்படிந்தால், நாம் பெறும் சத்தியம் நமக்குள் தெய்வீக மாற்றத்தை உண்டுபண்ணி, நம்மை மறுரூபப்படுத்தும். அதற்குப் பின் சிறிதானாலும், சரி பெரிதானாலும் சரி நம்மால் முடிந்த வரைக்கும், கேட்கும் யாவருக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு நாம் ஒப்புக்கொடுத்த தாலந்துகளை உண்மையாக அவருடைய பணிக்கு செலவழிக்க வேண்டும்.

17. நீடிய பொறுமை இருவித பரீட்சையாக இருக்கிறது?

எபி10:36 "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது."

C212 [P1]: -

வெகு சீக்கிரத்தில் தங்களுடைய விசுவாசத்தை நிரூபித்தவர்கள் உடனடியாக தங்களுடைய பரிசைப் பெற்றுக்கொள்வார்கள் என்பது பொருள் அல்ல. ஒருவேளை நம்முடைய எதிர்ப்பார்ப்புகளுக்கு எதிரிடையாக இருந்தாலும், சிலர் அந்தகார இரவின் உபத்திரவங்களில் அகப்பட்டவர்களுக்கு இப்படிச் சம்பவிக்கலாம்."இங்கு

பரிசுத்தவான்களின் பொறுமை, தேவனுடைய கற்பனைகளையும், இயேசுவின்மேல் உள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்ளும்." இந்தத் தீமையான நாட்களில் மிகப் பெரிய தவறுகள் தைரியமாக ஜனங்கள் மத்தியில் சுற்றிக்கொண்டிருக்கும்போது, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துகொண்டவர்களாகத் தைரியத்தோடும், எல்லா தெளிவோடும் சத்தியத்திற்காக நின்று ஊக்கமளிக்கக்கூடிய அறிவுரைகளைக் கூறவேண்டியவர்களாக இருக்கிறோம்." எல்லா சூழ்நிலைகளிலும், நாம் மகிழ்ச்சியோடு சர்வாயுதங்களைத் தரித்தவர்களாக, நம்மைப் பாதுகாத்துக்கொள்ள ஆவியின் பட்டயத்தை எப்போதும் கையில் பிடித்தவர்களாக சகல பரிசுத்தவான்களுக்காகச் சொல்லும் ஜெபங்களோடு நாம் நிற்கவேண்டும். வாக்குத்தத்தங்களைப் பெறும்படியாக தேவனுடைய சித்தத்தை செய்து முடித்தாலும் அவைகளைப் பெற்றுக்கொள்ள நீடிய பொறுமையோடு காத்திருக்க வேண்டும். வெளி 14:12, எபே 6:13, எபி 10:36

R2791[col. 1 P2,3]: -

நம்முடைய பாடம் நீடிய பொறுமையைக் குறித்திருப்பதினால், நம்முடைய ஆண்டவரின் போதனை அல்லது வார்த்தைகளைக் குறித்துப் பார்க்கலாம். அவர் இரண்டு முறை இந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார். லூக்கா 8:15ல் விதைக்கிறவனுடைய உவமையில் - "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்து பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்." தேவனுடைய இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்வதற்கு, கனிகொடுக்கக்கூடிய வகுப்பாராக நிரூபிக்கப்படுவதற்கு மிகுந்த பொறுமையோடு இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஏனெனில், பாறையில் விழுந்த விதைகளை - முதலில், மிகுந்த சந்தோஷத்துடன் வசனத்தை ஏற்றுக் கொண்டார்கள், ஆனால், வெயிலின் உஷ்ணம் அதிகரித்தப்போதோ, அவைகள் தீய்ந்து போய்விட்டது. இவர்கள் தேவனுடைய வசனத்தை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டாலும், அவர்களுக்குள் பொறுமையில்லாததினால், உபத்திரவங்கள் வரும்போது, அவர்கள் அதில் நிலைநிற்க முடியாமல் போய்விடுகிறது. இவர்கள் என்றுமே இராஜ்யத்தின் வகுப்பாராவதற்கு வாய்ப்பில்லை.

நீடிய பொறுமையே இறுதி பரீட்சை என்று நம்முடைய ஆண்டவர் இந்த உவமையின் மூலமாக நமக்கு எடுத்துக்காட்டுகிறார். விதைகளைப் பெற்றுக்கொள்ளும் நல்ல நிலம், முளைகிளம்பி, அன்பு, நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் விசுவாசத்தினாலும் நல்ல பலன்களைத் தருகிறது. அதற்குப் பின் இருக்கும் நீடிய பொறுமை அந்தக் கனிகளை மேலும் வளர்ச்சியடையச்செய்து, களஞ்சியத்தில் சேர்க்க தகுதி பெறுகிறது. நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளில் நீடிய பொறுமை என்ற குணத்திற்கு எவ்வளவு வெளிச்சம் வீசப்படுகிறது பாருங்கள். இந்த நீடிய பொறுமை இல்லாத சூழ்நிலையில் "உம்முடைய சித்தத்தை செய்ய அடியேன் வருகிறேன்" என்று சொன்ன ஆண்டவரின் சாயலை அணிய முடியாது. இராஜரீகமான ஆசாரிய வகுப்பாருக்கு நம்முடைய ஆண்டவர் தங்களுடைய சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு மாதிரியை விட்டுச் சென்றிருக்கிறார். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும் நாம் சத்தியத்திற்காக நம்முடைய சகோதரர்களுக்கு நம்முடைய ஜீவனைக் கொடுக்கும் மனநிலையைக் கொண்டவர்களாக இருக்கிறோம். மேலும், இந்தப் பலிகளை இயேசுவின் ஈடுபலியின் மூலம் ஏற்றுக்கொள்ளும் தேவன் - முழு மனதோடும், சந்தோஷத்துடனும் செலுத்தபடும் பலிகளில் அவர் மகிழ்ச்சியடைகிறார்.

R2792 [col. 1 P2]: -

பொறுமை, மற்றும் சந்தோஷத்துடன் சகிப்பு தன்மையின் முக்கியத்துவங்களை நாம் பார்ப்பது நமக்கு மிகவும் உதவியாக இருக்கும். ஆகவே புதிய ஏற்பாட்டில் இந்த வார்த்தைகள் இருக்கும் மற்ற இடங்களையும் நாம் கவனிப்போம். பவுல் - "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறுவதற்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது." என்று குறிப்பிடுகிறார். இந்த இடத்திலும், தேவனுடைய சித்தம் செய்வதை சோதனையாக வைக்காமல், அதை செய்து முடித்தப்பின் நம்முடைய இருதயத்திலும், விருப்பத்திலும் நாம் நீடிய பொறுமையோடிருந்து, தேவனுடைய நீதியை எந்தச் சூழ்நிலையிலும், சந்தர்ப்பங்களிலும், நம்முடைய இருதயத்தின் கோட்பாடாக ஸ்தாபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்போது நம்முடைய மனநிலை இராஜ்யத்திற்கு ஏற்றதான நிலையில் வரும். "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்." (யாக்கோபு 1:3) என்ற

யாக்கோபு குறிப்பிடுகிறார். அதாவது நீங்கள் விசுவாசத்தில் சோதிக்கப்பட்டால், உங்களுக்கு தேவையான பொறுமை தானாக வந்துவிடும் என்று சொல்லுகிறார். ஒருவேளை நமக்கு பொறுமை இல்லை என்றால், நாம் இன்னும் விசுவாசத்தின் பரீட்சைகளுக்கு நில்லாதவர்களாக இருப்பதால், இராஜ்யத்திற்கும் உகந்தவர்கள் அல்ல என்று பொருள்படும்.

19. "அவருடைய வார்த்தையின் பொறுமையைக் காத்துக் கொள்பவர்களுக்கு" தேவன் அளித்த வாக்குத்தத்தம் இன்று எவ்வாறு நிறைவேறுகிறது?

வெளி 3:10 "என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்."

R2792[col. 1 P6-col.2P4]: -

நம்முடைய தேவன் லவோதிக்கேயா சபையோரை துன்பங்களுக்கு அனுமதிக்காமல் காப்பாற்ற வில்லை என்றாலும், "பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனங்களை காத்துக்கொள்வோரை" தேவன் காத்துக்கொள்வார். ஏனெனில் - "ஒருவன் என் சத்தத்தை கேட்டு கதவை திறப்பானானால், நான் அவனோடு வந்து போஜனம் பண்ணுவேன்" என்று நமக்கு வாக்களித்திருக்கிறார். இக்காலத்தில், இந்த ஓட்டத்தை பொறுமையோடு ஓடுபவர்களுக்கு தேவன் கொடுக்கும் பரிசாகும். அதே சமயத்தில் இப்படிப்பட்ட சோதனையின் காலத்தில் நாம் தப்பித்துக் கொள்ள முயற்சிக்காமல், இயேசுவின் பிரசன்னத்தில், அதற்கேற்ற ஆசீர்வாதங்களைப் பெறும் சிறப்புரிமைகளைப் பெற்றிருக்கிறோம் என்பதை உணரவேண்டும். ஆகவே நாம் அவருடைய கட்டளைகளைப் பெற்று, அவருடைய ஐக்கியத்தில் இதுவரை எந்த விசுவாசியும் அனுபவித்திராத காலத்திற்கேற்றப் போதனைகளை உட்கொள்ளுவோம். ஆனால் நாம் எதிர்பார்த்தபடி நாம் பெறும் அதிகமான தேவனுடைய இரக்கங்களின் மத்தியில் இதற்குச் சரியான பாடுகளும் கடுமையானச் சோதனைகளும், இந்த முழு பூமியின்மேல் வரப்போகிறது.

நாம் இதுவரையிலும் நீடிய பொறுமையாக இல்லாவிட்டாலும் இப்பொழுது அதை கடைபிடிப்பது மிக அவசியம். "உங்கள் ஆத்துமாக்களில், பொறுமையை தக்கவைத்துகொள்ளுங்கள்" இது இப்போது மிகப் பொருத்தமானது. இந்தப் பந்தயத்தை மிகப் பொறுமையோடும், முழு விருப்பத்தோடும், வாஞ்சையோடும் ஓடுபவர்கள் வரக்கூடிய "தீமையான காலத்தில்" விசுவாசத்திற்குள் நிலைநிற்க முடியும். மற்ற யாரும் நிற்கமுடியாது. ஏனெனில் அப்போஸ்தலனாகிய பவுல் - ".. அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும், அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்." (1 கொரி 3:13) என்று குறிப்பிடுகிறார்.

கடைசி காலத்தில் அனுமதிக்கப்படுகிற சோதனை விசேஷமாக நம்முடைய நீடிய பொறுமையை சோதிக்கக்கூடியதாக இருக்கிறது. மேலும், நாகரீகம் நிறைந்த இந்த உலகத்தில் நீடிய பொறுமை காணப்படுவது மிகவும் அரிதாக இருக்கிறது. ஐம்பது வருடங்கள், அல்லது நாற்பது வருடங்கள், அல்லது முப்பது வருடங்கள் அல்லது இருபது வருடங்கள் அல்லது பத்து வருடங்களுக்கு முன்னிருந்த பொறுமையோடு இந்நாளில் இருக்கக்கூடிய பொறுமையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அது நாளுக்கு நாள் குறைந்துக் கொண்டு வருகிறதை நாம் பார்க்கலாம். நீதியின் நிமித்தமாகவோ, கிறிஸ்துவுக்காகவோ அல்லது மற்றவர்களுக்காகவோ ஒருவரும் பொறுமையாக இருப்பதற்கு விரும்புவதில்லை. ஒருவேளை கொஞ்சநேரம் பொறுமையாக இருந்து விட்டால் அதில் அநேக முறுமுறுப்புகளோடு, பொறுமை இழந்த நிலையில் காணப்படுகிறார்கள். மேலும், இந்த நாகரீகம் நிறைந்த உலகத்தில், பொறுமையற்ற நிலை மற்றும் பொறுத்துக் கொள்ளாத ஒரு குணங்கள் பொதுவாக அனைவரிடமும் காணப்படுவதினால், இடுக்கமான வழியில் பிரவேசிப்பவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் தெய்வீகக் கிருபையைப் பெற்றிருந்தால் மட்டுமே வளர்ச்சியடைய முடியும்.

நமக்குத் தேவைப்படும் தெய்வீகக் கிருபை, தெய்வீகத் திட்டத்தின் ஞானத்தின் வழியாக நமக்கு கொடுக்கப்படுகிறது. இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாமல், தேவனை அணுகாமல் இருப்பவர்களுக்கு இந்தக் கிருபை அளிக்கப்படுவதில்லை. இதன் காரணமாக, கிறிஸ்துவின் சீஷர்களாக இருக்கக்கூடிய அநேகர் நீடிய பொறுமையை காலப்போக்கில் இழந்துவிடுகிறார்கள். ஐரோப்பாவில் ஜனக்கூட்டத்தினால் ஏற்பட்ட கலவரத்தை இராணுவ படை அடக்கியது. ஆனால் விசாரணை இல்லாத தீர்ப்புகள் அத்தேசத்தில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அவர்களின் பொறுமையற்ற நிலையை வெளிப்படுத்துகிறது. சாத்தான் முழுமையாகக் கட்டப்பட்டு,

தீமைகளைக் கட்டுப்படுத்தி, தேவனுடைய இராஜ்யம் பகிரங்கமாக ஸ்தாபிக்கப்படும் வரையில் தேவன் இந்தத் தீமையின் மேல் நீடிய பொறுமையுள்ளவராக இருப்பார்.

உண்மையில், இப்படிப்பட்ட ஆவி கிறிஸ்துவ மண்டலத்தில் வளரவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம். கடந்த காலத்தில் வாழ்ந்தவர்கள் ஓரளவுக்கு நற்குணங்களோடு இருந்ததினால், சீர்பொருந்துதலின் காரியங்களை அவர்களே தங்களுடைய சொந்த முயற்சியினால் செய்திருந்தால் இந்த உலகம் சீர்திருந்தியிருக்கலாமே ! என்று எண்ணலாம். ஆனால் தேவனுடைய வார்த்தைகளை நீடிய பொறுமையோடு காத்துக் கொள்பவர்கள், சர்வவல்லவரிடமிருந்து ஞானத்தைப் பெற்றவர்கள் குறித்தக் காலத்தில் தேவனுடைய திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதையும், தேவன் எதிர்பார்க்கக்கூடிய நீடியபொறுமையில் வளர்ந்து கொண்டிருப்பார்கள். இந்தப் பொறுமையில் வளர்ச்சியடைந்தால், நம்முடைய ஆண்டவர் தீமையையும், அதின் பாதிப்புகளையும், தவறுகளையும் அதன் உபத்திரவங்களை சந்தோஷமாகவும், நீடிய பொறுமையோடும் சகித்தது போல, நாம் இருக்கவேண்டும். ஏனெனில், தேவன் இவையனைத்தையும் அனுமதித்ததோடு மட்டும் அல்ல, அவர் சகலத்தையும், தேவனுடைய இராஜ்யத்தில் கிறிஸ்துவோடுகூட ஆயிரவருஷம் ஆட்சிசெய்யும் "சிறு மந்தையை" அவர் அழைத்து ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் மிகப்பெரிய நன்மையான நோக்கத்திற்காகவே செயலாற்றுகிறார் என்பதையும் உணர்ந்து கொள்ளலாம்.

20. பொறுமைக்கு மாதிரியாக இருக்கும் இயேசுவிடமிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?

எபி 12:3"ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, நமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினனத்துக்கொள்ளுங்கள்."

R2313[col. 2P2] : -

நம்முடைய ஆண்டவர் நமக்காக நீடிய பொறுமையோடு பட்ட அவமானங்களை எண்ணுகையில் நம்முடைய நெஞ்சைத் தொடுகிறது. மேலும் அதைத் தொடர்ந்து தியானிக்கும்போது, நாம் மனம்வருந்தி, சீர்பொருந்துவதற்கு ஏதுவாக இருக்கிறது. நம்முடைய ஆண்டவரை ஏற்றுக்கொண்டு, உணர்வுப்பூர்வமாக அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களிடத்தில் இந்த வல்லமை குறைந்து போவதுமில்லை. இந்த சிந்தனை நம்மை உருகவைக்கும். ஏனெனில் அவர் நமக்காக செலுத்தின பலியினாலும், அவருடைய பாடுகளினாலும் உபத்திரவத்தினாலும் நாம் ஜீவனைப் பெற்றிருக்கிறோம். ஆகவே இயேசுவைப் பின்பற்றுபவர்கள் நீடிய பொறுமையோடும், சாந்தத்தோடும், கிறிஸ்துவுக்காக அனுபவிக்கும் துன்பத்திலும், அநீதியின் நிமித்தம் வரும் பாடுகளிலும், சோர்ந்துப் போகாமல் அனைத்தையும் சகிக்க நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை நினைத்துக் கொள்ளும்படி நமக்கு பாடம் கற்பிக்கிறார். (எபி 12:3) ஐசுவரியவானாக இருந்த அவர் நமக்காக தரித்திரரானாரே என்றும், நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ள நமக்காக நீதியுள்ள அவர் மனப்பூர்வமாக தம்முடைய ஜீவனையே கொடுத்தாரே என்றும் மீண்டுமாக, அப்போஸ்தலர் கிறிஸ்துவின் பாடுகளைக் குறிப்பிடுகிறார். இப்படியாக "நாமும் சகோதரர்களுக்காக தம்முடைய ஜீவனைக் கொடுக்க மனப்பூர்வமாக சம்மதிக்கவேண்டும்".

R2879[col.2 P2]: -

பொதுவாக போராடுகிற ஜனங்கள் (மாம்சத்தில்) பழிவாங்கும் உணர்வுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் நம்முடைய ஆண்டவரிடத்தில், சுயகட்டுபாடு, சாந்தம், சகோதர சிநேகம், பரிவு, இரக்கத்தையும் கற்றுக்கொண்டவர்கள் - "தீமைக்குப் பதிலாகத் தீமை செய்யவேண்டாம்" - என்ற காரியத்தைச் செய்ய ஆயத்தப்பட்டவர்களாக இருப்பார்கள். நம்முடைய ஆண்டவர் வையப்படும்போது பதில் வையாமலிருந்தார், என்பதை அவர்கள் மாதிரியாக நோக்குவார்கள். அவர் பாவம் செய்து விட்டு, அதற்காக அவர் மௌனமாக இருந்தார் என்பது பொருள் அல்ல. மேலும், அவருடைய எதிரிகள் பூரணமாக இருந்தபடியால் அவரால் ஒன்றும் பேசமுடியவில்லை என்பதும் பொருள் அல்ல. அவர் தன்னை முழுமையாக தெய்வீக சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்திருந்தபடியால், ஜனங்களுடைய இகழ்ச்சியையும், தூஷணங்களையும் பொறுமையோடும், தாழ்மையோடும் சகித்தார். அழைக்கப்பட்டவர்களும் நீடிய பொறுமையுள்ளவர்களாக வாழ்ந்து, இப்படிப்பட்ட பாடங்களைக் கற்றுக்கொண்டு,

நம்முடைய விசுவாசத்தை மெய்ப்பித்து, இயேசுவின் உண்மையான குணலட்சணங்களை நமக்குள் வளர்த்து, நம்முடைய வாழ்க்கையில் செயலாற்றி, அவர் ஜனங்களிடத்தில் இரக்கமுள்ளவராக இருந்ததுப்போல, நாமும் குருடராகவும், அறியாமையிலும் இருக்கக்கூடிய ஜனங்களுக்கு இரக்கம் பாராட்ட வேண்டும்.

ஆண்டவரின் குணலட்சனங்களில் வளர்ச்சியடைபவர்கள், தங்களை இகழ்வோரையும், தூஷிப்பவர்களையும் பொருட்படுத்தமாட்டார்கள். அனைத்தையும் இழந்தாலும், பாடுகளை சந்தோஷமாக அனுபவிக்க ஆயத்தமாக இருப்பார்கள். ஆகவே இக்காலத்தில் உங்கள் உபத்திரவங்களில் சந்தோஷமாகக் களிக்கூறுங்கள், ஏனெனில், இந்தப் பாடுகள் நாம் பெறப்போகிற மிகப்பெரிய மகிமைக்காக இன்று அனுமதிக்கப்படுகிறது. "உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களை துன்பப்படுத்துபவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள்" என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளோடு பேதுருவின் வார்த்தைகள் எவ்வளவு இசைவாக இருக்கிறது. (பிலி 3:8, 11 கொரி 4:17, மத்5:44, ரோ12:14) ஆகவே நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். ஓட்டப்பந்தயத்தின் இறுதி கட்டமாகிய இந்தக் குணத்தை நாம் இன்னும் பெறாமலிருந்தால், பூரண அன்பின் குறிப்பாகிய - நம்முடைய எதிராளிகளையும் சிநேகிக்கும் அன்பும், அவர்களை மனமுவந்து ஆசீர்வதிக்கும் உணர்வு, அவர்களுக்கு உதவி செய்யும் மனப்பக்குவம், அவர்களை இருளிலிருந்து தூக்கிவிடும் விருப்பம், மற்றும் அனைத்துக் காரியங்களும், தேவனுடைய தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாக இல்லாவிட்டாலும், நாம் தொய்ந்து போகவேண்டாம். வெகு சீக்கிரத்தில் இந்த இலக்கை எட்டிப்பிடிக்க நாம் முயற்சிப்போம். ஏனெனில், நிச்சயமாக ஓர் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

R2616 [col. 2 P1] : -

அப்போஸ்தலர் சில உபத்திரவங்களைச் சொல்லிவிட்டு, அதை நீடிய பொறுமையோடு சகித்தால், தேவனுடைய உண்மையான ஊழியக்காரர்கள் என்ற நிலையைப் பெறுவோம் என்று அறிவிக்கிறார் - "மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும்,இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடியசாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தஆவியிலும், மாயமற்றஅன்பிலும், சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும், நீதியாகிய வலதிடது பக்கத்து ஆயதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும், எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்." (11 கொரி 6:4-10) நம்முடைய ஆண்டவர் உண்மையானவராக இருக்கும் பட்சத்தில், எப்பேர்பட்ட வஞ்சகன் என்று நினைக்கப்பட்டார், ஒளியின் பிரபுவாக இருக்கும்போது, அவர் பெயல்செபூலுக்கு தலைவன் என்று அழைக்கப்பட்டார். இப்படிப்பட்ட பழிகளை எவ்வளவு நீடிய பொறுமையோடு சகித்தார். அவரை பின்பற்றுகிற நாம் அனைவரும் சாத்தானின் நயவஞ்சகத்தினால் தவறாக குற்றம் சாட்டப்படும்போது, இப்படிப்பட்ட துன்பங்களை பொறுமையோடு சகிக்க கட்டாயமாக எதிர்ப்பார்க்கப்படுகிறோம். இப்படிப்பட்ட துன்பங்கள் நம்முடையப் பாடுகளின் ஒரு பகுதி என்று நம்முடைய பிதாவாகிய தேவன் கூறுகிறார். ஏனெனில் -"என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்..." என்று இயேசு குறிப்பிட்டார்.

R3543 [col. 2 P2] : -

நமக்கு எதிராக இருப்போரிடம் நாம் எப்படியாக நடந்துகொள்ள வேண்டும் என்பதை நம்முடைய ஆண்டவர் யூதாஸோடு நடந்து கொண்ட விதத்தைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது. அதை மட்டும் அல்ல, அவர்கள் மனந்திரும்புவதற்கு நாம் செய்யவேண்டிய இறுதி முயற்சிகளையும் நமக்கு பாடமாக அங்கு வைத்திருக்கிறார் என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும், இயேசு தம்முடைய சீஷர்கள் கெட்டுப்போகாமலிருக்க நீடிய பொறுமையோடிருந்து, அவர்களை கடைசிவரைக்கும் செம்மையானப் பாதையில் வழிநடத்தி, அவர்களின்

தவறுகளைத் திருத்தி, சீஷர்களாக மாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சத்தியத்தை ஏற்றுக்கொண்டு, சகல நன்மையான சூழ்நிலைகள் மத்தியிலும், தங்களுக்குள் இருக்கும் சுயநலத்தை வளர்த்து, மிகக் கடுமையானவர்களாக மாறுபவர்கள் ஆண்டவருடைய நேரடியான கண்டிப்பைக் கூட உணராமல், வசனங்களினால் எந்த மாற்றத்தை தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளாமலிருப்பார்கள் என்ற பாடத்தையும் நாம் இதிலிருந்து கற்றுக்கொள்ளலாம். "அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதக் காரியம் " என்ற பவுலின் வார்த்தைகளை இங்கு நாம் நினைவுகூறலாம். தேவனுடைய ஆவியை முழுமையாக தங்களுடைய இருதயத்தில் உள்ள சுயநலத்திற்காக முழுமையாக பயன்படுத்தும் போது, அவர்களை என்றுமே மனந்திருப்ப முடியாது.

21. வேத வசனங்களில் பொறுமையைப்பற்றி குறிப்பிடப்பட்ட மற்ற எடுத்துகாட்டுகள் என்னென்ன?

யாக் 5:10,11 "என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள். இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமோ, யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள், கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே."

11 கொரி 6: 4-10 "மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும்,இடுக்கண்களிலும், அடிகளிலும், காவல்களிலும், கலகங்களிலும், பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும், உபவாசங்களிலும், கற்பிலும், அறிவிலும், நீடியசாந்தத்திலும், தயவிலும், பரிசுத்தஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்தியவசனத்திலும், திவ்வியபலத்திலும், நீதியாகிய வலதிடதுபக்கத்து ஆயுதங்களைத் தரித்திருக்கிறதிலும், கனத்திலும், கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும், எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும், சகலத்தையுமுடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்."

11 கொரி 12:12"அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்கள்ளே நடப்பிக்கப்பட்டதே."

22. பொறுமை என்ற குணம் ஒரு மூப்பருக்கு அவசியமா ?

1 தீமோ 3:3 " அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பணஆசையில்லாதவனுமாயிருந்து..."

F251 [P2]: -

"நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும். போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும் வேதவாக்கியம் சொல்லுகிறதே." (1 தீமோ 5:17,18) என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தின் அடிப்படையில் பேர் சபைகள் தங்களை ஆட்சி செய்யும் மூப்பர் வகுப்பினரைத் தெரிந்தெடுக்கிறார்கள். இவர்கள் மற்றவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்த, அதிகாரம் பெறுகிறார்கள். இப்படிப்பட்ட ஓர் "ஆளுகை முறை" வேதவசனங்களுக்கு முரண்பாடாக இருக்கிறது. "முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போல... நடத்து" என்றும் "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்" என்று மூப்பராக இருந்த தீமோத்தேயுவுக்கு அறிவுரை சொல்லப்பட்டது. இவைகளை நாம் பார்க்கும்போது, சாந்த குணமுடையவராகவும், நற்பண்புகள் உள்ளவராகவும், நீடிய பொறுமையுள்ளவராகவும், சகோதர சிநேகம் உள்ளவராகவும், அன்புள்ளவராகவும் இருந்தால் மட்டுமே அதிகாரம் பெற்ற ஒரு மூப்பராக இருக்கமுடியும். இவர்கள் நிச்சயமாக மந்தைக்கு ஒரு நல்ல மாதிரியாக இருக்க வேண்டும். ஒருவேளை அந்த மூப்பர் அதிகாரம் செலுத்துபவராக இருந்தால், மந்தையும் அதிகாரம்

செலுத்தக்கூடியவர்களாக மாறுவார்கள். அதே மூப்பர் சாந்த குணமுடையவராகவும், நீடிய பொறுமையுள்ளவராகவும், அன்புள்ளவராகவும் இருந்தால் மந்தையும் அதே குணத்தில் வளர்ச்சியடைவார்கள். சொல்லப்போனால், மூப்பர்கள் தங்களுடைய பொறுப்புகளை எவ்வளவு விசுவாசத்தோடு செயலாற்றுகிறார்களோ அவ்வளவு கனத்தை நாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆகவே நாம் மீண்டுமாக மேற்சொல்லப்பட்ட வசனங்களை நினைவு கூறுவோம் - "நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை, விசேஷமாக திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்."

F298 [P 1,2]: -

இங்கு சொல்லப்படும் அறிவுரைகள் மூப்பர்களுக்கு மட்டும் அல்ல, முழு சபைக்கும் இது பொருந்தும். முழு சபையும் தேவனுடைய புது சிருஷ்டிகளாக இருந்தாலும், மாம்சத்தில் அபூரணமாக இருக்கும் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மட்டுமே தேவனுக்கு முன்பாக பூரணராக நிற்கமுடியும். மேலும், நாம் அனைவரும் நம்முடைய அபூரணநிலையில் அவரவர் பலவீனங்களின் அடிப்படையில் நாம் வித்தியாசப்படுகிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். பூமிக்குரிய பிள்ளைகள் திருந்துவதற்கு வித்தியாசமான முறைகள் கையாளப்படுகிறது. அதேபோல் நம்முடைய பரலோகப் பிதாவும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான வழிநடத்துதலைத் தருகிறார். மற்றவர்களுடைய அபூரணத்தை நாம் கவனித்து, அதை விமர்சிக்கும்போது, நமக்கு நாமே அதிகமான கேடு வருவிப்பவர்களாக இருப்போம். ஏனெனில், நாம் ஓயாமல் மற்றவர்களின் பலவீனங்களை மட்டுமே கூர்ந்து கவனிக்கக்கூடியவர்களாக மாறிவிடுவோம். நம்முடைய பலவீனங்களைக் காண நம்முடைய கண்கள் குருடாக்கப்பட்டுவிடும். அப்போஸ்தலரின் அறிவுரைகளின் உள்நோக்கத்திற்கு இப்படிப்பட்ட ஆவி எதிரிடையாகவே இருக்கிறது.

சத்திய ஆவியினாலும், பரிசுத்த ஆவியினாலும், சாந்தத்தின் ஆவியினாலும், அன்பின் ஆவியினாலும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், கிருபையின் ஆவியில் வளர்ச்சியடைவார்கள் இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய குற்றங்களை மட்டுமே கவனித்துக் கொண்டிருப்பார்களே தவிர மற்றவர்களைக் குறைகூறுவதற்குக் கூட அஞ்சுவார்கள். மேலும், அவர்கள் மற்றவர்கள் மேல் வைக்கும் அன்பினால் அனைவரையும் மன்னிக்கக்கூடிய சுபாவத்தைப் பெற்றிருப்பார்கள். இதினிமித்தம் இவர்களின் குறைகள் இயல்பாகவே மன்னிக்கப்படும். ஆனால் அன்பின் ஆவி சகோதரர்களின் குற்றங்களையும், குறைகளையும் மன்னிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு நன்மை உண்டாக நாம் மிகுந்த சண்டையோடும் அல்லது போராடியும் அல்ல மாறாக, பொன்னான (தெய்வீக) சட்டத்திட்டத்தோடு நாம் செயல்படவேண்டும். தயவோடும், சாந்தத்தோடும், நீடிய பொறுமையோடும், நாம் ஒருவருடைய குற்றத்தை ஒருவர் மன்னிக்கவேண்டும். அதேசமயம் அதே பலவீனத்தில் இருப்போரை நாம் வெளியே வந்ததுபோல, அவர்களையும் அதிலிருந்து வெளிவர உதவி செய்ய வேண்டும்.

23. நாம் நீடிய பொறுமையை எப்படி வளர்த்துக் கொள்வது?

(a) ஜெபத்தின் வழியாக

R2005[col.2P8] - R2006 [col. 1]: -

இதை தொடர்ந்து நாம் விசேஷமாக பார்க்கும்போது, ஜெபத்திற்கான சிறப்புரிமை அல்லது தேவனிடத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எந்தவிதமான கிருபைகளும் சுயநலமானக் காரியத்திற்கு அனுமதிக்கப்படுவதில்லை. உகந்த காரியத்தை விரும்பி அதை கேட்கும் பட்சத்தில், அதே காரியம் மற்றநோக்கத்துடன் கேட்கும்போது அது தவறாகக் காணப்படும். ஆகவே நம்முடைய சகோதரர்கள் மத்தியில் நாம் மகிமைப்படும்படி எந்த நன்மையானக் காரியங்களை தேவனிடத்தில் விண்ணப்பித்தாலும், அது தவறாகும். ஏனெனில் அந்த நோக்கம் தவறானதாக இருக்கிறது.

ஆகவே நம்முடைய வசதிக்காகவும், சௌகரியத்திற்காகவும், நன்மையானக் காரியங்களை விரும்புவது தவறு. இப்படிப்பட்டவர்களைக் குறித்து அப்போஸ்தலர் - "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்."(யாக் 4:3) சோதிப்பதற்காக நாம் ஏதோ ஒரு நன்மையான காரியத்தைக் கேட்டு, அதற்கு பின் நம்முடைய விசுவாசத்தை ஸ்தாபிப்பது போன்ற காரியங்கள் ஒழுங்கற்ற செயலாகும். ஆனால் முழுமையான விசுவாசிகளுக்கு அனைத்தும் வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், தேவனுடைய திட்டத்தைப் பொறுத்தவரையில், நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே அங்கீகாரம் பெறாத எந்தக் காரியத்தையும் நாம் விண்ணப்பிக்கக்கூடாது. நம்முடைய வேண்டுதல்கள் அனைத்தும் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவே இருக்கவேண்டும். ஆவிக்குரிய காரியங்களுக்காக நாம் வேண்டுதல் செய்தாலும், அவைகளை இன்னவிதத்தில் நாம் பெற்றுக்கொள்வோம் என்று எதிர்ப்பார்க்கக்கூடாது. அதாவது நம்முடைய ஜெபங்களுக்கானப் பதிலை எந்தவிதமான அற்புதத்தின் வழியாக அல்ல இயற்கையான முறையிலேயே நாம் எதிர்ப்பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இயற்கையான வழிகள் குறைவுப்படும்போது இயற்கைக்கு அப்பாற்பட்ட முறைகளை தேவன் பயன்படுத்துவார்.

நாம் பரிசுத்தஆவியைப் பெறுவதற்காக வேண்டுதல்களும், விண்ணப்பங்களும் உடனடியாகப் பதில் அளிக்கப்படும் என்று நமக்கு உறுதியளிக்கப்படுகிறது. "பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார். " (லூக் 11:13)

அநேகர் சந்திக்கும் பிரச்சனை என்னவெனில், கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தைகளையும் காத்து நடப்போரின் ஆவிக்குரிய தேவைகளுக்காக தேவன் சேர்த்துவைத்திருக்கும் தெய்வீக கிருபைகளைப் பயன்படுத்தாமல் விட்டுவிடுவதேயாகும். அனைத்து ஜெபங்களும் சுயநலமானவைகள் என்று ஒருவரும் கருதவேண்டாம். இதற்கு எதிராக நாம் தேவனுடைய சித்தத்தின்படியும் அவருடைய வார்த்தைகளின்படியும், நாம் ஜெபிப்பதற்கு முழு சுதந்திரம் பெற்றிருக்கிறோம்.

விசுவாசம் மற்றும் பொறுமையை சோதிக்கும் ஒவ்வொரு சோதனையும் நமக்களிக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்களை நினைவுக்கூறும் ஜெபங்களை ஏறெடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமைகிறது. ஒவ்வொரு தோல்வியும் வெற்றி பெறுவதற்காகவும், மன்னிப்பைப் பெறுவதற்காகவும், தெய்வீக ஆசீர்வாதங்களைப் பெறுவதற்காகவும் ஜெபிக்க வாய்ப்பாக இருக்கிறது. நம்முடைய பலவீனங்களுக்காகவும், அடுத்தமுறை நாம் ஏற்ற நேரத்தில் கிருபாசனத்தண்டைக்குப் போகும்படி நமக்கு ஆலோசனைகள் வழங்குவதற்கு நாம் ஜெபங்களை ஏறெடுக்கலாம். ஒவ்வொரு வெற்றிக்குப் பிறகும், நம்மை நாம் உயர்த்தாதபடிக்கு தாழ்த்திக் கொள்வதற்கும், மேட்டிமையான சிந்தை கொள்ளாமல் இருப்பதற்கும், அடுத்து சாத்தானின் வஞ்சகமான சோதனையை கவனிப்பதற்கும் நாம் ஜெபிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படுகிறது. சத்தியத்திற்கு நாம் ஒவ்வொருமுறையும் ஊழியம் செய்யும்போதும், அப்படிப்பட்ட வாய்ப்புகள் மேலும் கிடைத்து, அதை ஞானமான முறையில் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவும் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்பதற்கு ஜெபிக்க வாய்ப்புகள் கிடைக்கிறது.

நீங்கள் மேற்கொள்ளத்தக்கதான சோதனைகள் வந்தபின்,பொறுமை, அனுபவம், சகோதர அன்பு, இரக்கம் மற்றும் பல நல்ல குணங்கள் உங்களுக்குள் அதிகரிக்கும்போது, தேவன் கொடுத்த தெய்வீக கிருபைக்காகவும், உதவிகளுக்காகவும் களிகூர்ந்து அவருக்கு நன்றிகளை ஏறெடுங்கள். உங்கள் சோதனைகள் உங்களால் சுமக்கமுடியாத அளவு பாரமாக இருந்து, உங்களை நசுக்கிப்போடும் என்று நீங்கள் எண்ணினால், பாரம் சுமக்கிறவரிடத்திற்கு அதை கொண்டுபோங்கள். நீங்கள் நன்மைகளைப் பெறும்படி எதை சுமக்கவேண்டும் என்பதையும், உங்களுக்கு நன்மையை ஏற்படுத்தாத காரியங்களை எவ்வாறு அகற்றுவது என்றும் உங்களை சேதப்படுத்துவது எது என்றும் அறிந்துகொள்வதற்கு அவரிடத்தில் உதவி கேளுங்கள். நீங்கள் உங்கள் முழு மனதோடு ஆண்டவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று விரும்பினால் -"சபை கூடுதலை மறந்துவிடாதீர்கள்". நீங்கள் காரணமின்றி உங்கள் வழிகளில் தடுக்கப்பட்டு, அதை மேற்கொள்ள உங்களால் முடியாமல் போனால், தேவனிடத்தில் ஜெபத்தில் தெரிவியுங்கள். அதற்கு பின் உங்களுடைய ஜெபத்திற்கு இசைவாக கிரியை செய்து காத்திருங்கள், வெகு சீக்கிரத்தில் தெய்வீக வல்லமை உங்கள் சார்பில் செயல்படுவதை நீங்கள் உணரலாம். ஒரு உண்மையான சகோதரன் சோதனையிலோ, வேறு எந்த அபாயத்திலோ அகப்பட்டதை நீங்கள் கண்டால், உங்கள் இருதயம் சகோதர அன்பினால் நிரம்பி வழியட்டும். அவரை விடுவிப்பதற்காக நீங்கள் வேகமாக செயல்படுவதோடு, அவரை விடுவிக்கும்வரை அல்லது அவரை மீண்டுமாக இடுக்கமான பாதையில் வழிநடத்தும் வரை அவருக்காக நீங்கள் கிருபாசனத்தண்டையில் ஏறெடுக்கும் ஜெபங்கள் தொடர்ந்து ஏறெடுக்க வேண்டும். நீங்கள் குறைவுள்ளவர்களாக இருந்தாலும், உங்களுடைய ஜெபங்களும், முயற்சிகளும் ஆசீர்வதிக்கப்பட்டு நீங்கள் நன்மையடைய வழிவகுக்கும். இந்த நற்செய்தியை அறிவிப்பதற்குப் பற்றி எரிகிற வைராக்கியம் உங்களுக்குள் இல்லாவிட்டால், தேவனிடத்தில்

விசுவாசத்தோடு ஜெபியுங்கள், அவைகளை நீங்கள் பெறக்காத்திருங்கள், சீக்கிரத்தில் பெற்றுக் கொள்வீர்கள். உங்களுக்கு சுவிசேஷத்தின் மேல் அதிகமான அன்பும், வைராக்கியமும் இருந்தும் அவைகளை அறிவிக்க உங்களுக்கு வல்லமையில்லாதிருந்தால், தேவனிடத்தில் ஜெபியுங்கள். உங்களுக்கு சத்தியத்தை அறிவிக்க வாய்ப்பில்லை என்றாலும் ஜெபியுங்கள், நீங்கள் பெற்றிருக்கும் சின்னசின்ன வாய்ப்புகளை சந்தோஷத்துடனும் மனத்தாழ்மையோடும் பயன்படுத்துங்கள். தேவன் அதிகமான வாய்ப்புகளை உங்களுக்குக் கொடுப்பார்.

வாக்குவாதங்கள் இருந்தால் அல்லது உங்கள் குடும்பத்தினருக்கு, சகோதரர்களுக்கு பாரமான மற்ற தீய பழக்கவழக்கங்கள் இருந்தால், அவைகளைத் தேவனிடத்தில் ஜெபத்தில் ஏறெடுங்கள். இந்தப் பழக்கங்களை மேற்கொள்ள வல்லமையைக் கேளுங்கள். இதற்கு இடையில் உங்கள் ஜெபங்களுக்கு இசைவாக அந்தப் பழக்கங்களிலிருந்து விடுபட நீங்கள் கடும் முயற்சி செய்யுங்கள். நீங்கள் ஞானத்தில் குறைவுள்ளவர்களாக இருப்பதால் தேவனுடைய காரியங்களைச் செய்வதிலும், சத்தியத்தின் ஊழியங்களிலும் நீங்கள் தோல்வியடைந்தால் "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக் 1:5) என்ற வாக்குத்தத்தத்தை நினைவுப்படுத்திக் கொண்டு தேவனிடத்தில் முறையிடுங்கள்.

உங்கள் அஜாக்கிரதையினால் அல்லது மிகுந்த இரக்கத்தினால் அல்லது தவறானத் தீர்ப்பினால் உங்களுடைய தொழிலில் ஏதேனும் பிரச்சனைகளா? இது உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பாதிப்புக்குள்ளாக்குகிறதா ? தேவனுடைய கிருபாசனத்தண்டையில் இதைக் குறித்து நீங்கள் ஜெபிப்பது மிகவும் ஏற்றதாக இருக்கும். உங்களுக்கு எந்த வழியிலிருந்து விடுதலை வரவேண்டும் என்ற கட்டளையை நீங்கள் கொடுப்பதற்குத் தகுதியற்றவர்களாக இருந்தாலும், அந்தச் சூழ்நிலையில் நீங்கள் ஞானமாக செயல்படுவதற்கு ஏற்ற வழிநடத்துதலை நீங்கள் கேட்கலாம். அப்பொழுது உங்களுடைய ஞானத்திற்கு மேல் தேவனுடைய ஞானம் செயல்பட்டு நீங்கள் எதிர்பார்த்ததை விட நல்ல முடிவுகளைக் கொடுக்கும்.

(b) **அறிவில் வளர்ச்சியடைய வேண்டும்**

R3136 [col. 1 P5]: -

"அனைவரிடமும் பொறுமையாயிருங்கள்" என்ற காரியம் தேவனுடைய ஜனங்கள் மத்தியில் தேறினவர்கள் மற்றவர்களிடம் பொறுமையாக இருக்கவேண்டும் என்று குறிப்பிடுவதைப்போல் தோன்றுகிறது. ஆனால் அனைவரிடமும் நாம் நீடிய பொறுமையோடிருக்கவேண்டும். "உங்களுக்கு பொறுமை மிக அவசியம்" என்று அடிக்கடி வேத வசனங்கள் குறிப்பிடுகிறது. நாளுக்கு நாள் வளரக்கூடிய தேவனுடைய பிள்ளைகள் இதன் உண்மையைப் புரிந்துகொண்டு, பொறுமை கிறிஸ்துவின் சிறந்த குணங்களில் முக்கியமான ஒன்று எனப் புரிந்துகொள்வார்கள். (1) ஞானத்தில் வளர்ச்சியடைவது நமக்குள் பொறுமையை அதிகரிக்கும். நாம் பரலோகப் பிதாவின் பொறுமையை அறிந்துகொள்ளும்போது, நாமும் மற்றவர்களிடத்தில் இந்த குணத்தை அதிகதிகமாகப் பயன்படுத்த உதவிசெய்யும். (2) இந்த முழு மனுக்குலத்திற்கு மேல் வந்திருக்கும் மிகப் பெரிய அழிவை நாம் உணரும்போது அதாவது நம்முடைய விழுந்துபோன நிலைமையும், அதனால் ஏதோ ஒரு வகையில் அனைவர் மேலும் வந்த பாதிப்புகள் - நம்மை இந்த மனுக்குலத்தின் மேல் மனதுருகச் செய்கிறது. குறிப்பாக விசுவாச வீட்டாரிடம் இது உண்மையாகக் காணப்படுகிறது. ஏனெனில் நாம் மற்றவர்களைவிட குறைவானவர்களாக இருந்தபோதிலும், தேவனிடத்திலிருந்து விசேஷித்த அழைப்பைப் பெற்றிருக்கிறோம். தேவன் எப்படிப்பட்டவர்களை அழைத்திருக்கிறார் என்பதை நாம் முதலில் உணர்ந்து அவர் விரும்புகிறபடி அவருக்கு இசைவாக செயல்படுவதில் கவனமாக இருக்க வேண்டும். அதாவது கிறிஸ்து இயேசுவின் பாதையில் நடக்க அழைப்பு பெற்ற யாவரையும் அந்தப் பாதையில் நடத்த நம்மால் முடிந்தவரைக்கும் முயற்சிக்கவேண்டும். இந்த விசேஷ பணிக்கு நமக்குள் விசேஷித்தப் பொறுமை இருக்கவேண்டும். ரோ14:15, 1 கொரி 8:11

(c) **நம்முடைய விசுவாசத்தை அதிகரிப்பதன் மூலம்**

R3245[col. 1P6]:-

"பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" என்றும் " விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்றும்," நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும்

இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது."என்று அப்போஸ்தலன் விவரிக்கிறார். பொறுமையினால் அநேக நல்ல குணங்கள் வளர்ச்சியடையும் என்று ஆதாரத்தோடு நிரூபிக்கப்படுகிறது. தேவனுடைய ஜனங்களுக்குள்ள பொறுமையானது, விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். மேலும் பொறுமையில் அளவு, நமக்குள்ளிருக்கும் விசுவாசத்தின் அளவை எளிதில் கணித்துவிடும். எப்போதும் பதற்றமாகவும், அமைதியற்ற மனநிலையையுடைய கிறிஸ்தவர்கள் விசுவாசம் இல்லாதவர்கள். அவருக்குள் விசுவாசம் இருந்தால், தேவனுடைய வாக்குறுதிகள் மேல் நம்பிக்கை வைத்துப் பொறுமையாகக் காத்திருப்பார்கள் .எந்த சூழ்நிலையிலும், நமக்களிக்கப்பட்ட பொறுப்புகளை நாம் முடித்து விட்டு, சகலத்தையும் தேவனிடத்தில் ஒப்படைத்துவிட்டு, பொறுமையோடு தேவனுக்காக காத்திருக்க வேண்டும்.

(d) தேவனுடைய திட்டத்தின் காலங்களுக்குரியவைகளை அறிந்துகொள்வதின் மூலம்

R2155[col. 1 P5]: -

நான்காவது கூடுதலானக் காரியம் - பொறுமை. நன்மையான எந்தக் காரியத்தையும் பூரணப்படுத்துவது - காலம். காலத்திற்கு முன் பறிக்கப்படும் பழங்கள் பழுக்காமல், கடினமாகவும், கசப்பாகவும் இருக்கும். ஆனால் ஏற்றகாலம் நிறைவேறும் வரை அதற்குத் தேவையான உரம், தண்ணீர் மற்றும் அனைத்தையும் கொடுக்கும் பட்சத்தில் ருசியுள்ள பழுத்தப் பழங்களைப் பறிக்கலாம். அதேபோல் தேவனுடைய திட்டங்களும் நோக்கங்களும் அமைந்திருக்கிறது. தேவனுடைய ஆழமான திட்டங்கள் மிகப் பொறுமையாக கிரியை செய்யும். உலகில் இருக்கும் அரசாங்கத்திற்கு மட்டும் அல்ல ஒவ்வொரு சிருஷ்டிகளின் இருதயத்திலும் இப்படியாகவே நடக்கும். தேவன் அனைத்துக் காரியங்களையும் அவருடைய அனந்த ஞானத்தின்படியும் வகையறுக்கப்பட்ட நீதியின் சட்டத்தின்படியும் செயல்படுகிறார். பொறுமையற்ற நிலையில் நாம் இதை அனுபவிக்க வேண்டும் என்றால் அது பழுக்காத, கசக்கக்கூடிய கடினமான காய்களைப் புசிக்கக்கூடிய மதியீனமான செயலாக இருக்கும். ஆனால் பொறுமையோடு காத்திருப்பவர்களுக்கு தேவன் பக்குவமாக அதை கொடுத்தால் அது எவ்வளவு இன்பமாக இருக்கும். ஆகவே பொறுமை பூரணமாக கிரியை செய்யும் வரையில் தேவனுடைய குறித்த காலத்திற்காகக் காத்திருப்போம். தேவனுக்குள் இளைப்பாறுவோம். கர்த்தருக்குக் காத்திருப்போம். அவருடைய வேளைக்காகக் காத்திருப்போம், நம்மை குறித்தும் மற்றவர்களைக் குறித்தும் அவருடைய சித்தத்தைத் தெரிவிக்கும் வரையில் பொறுமையோடு காத்திருப்போம். தேவன் மேல் விசுவாசம் வைத்தோர் என்றுமே குழப்பமடையமாட்டார்கள்.

R2792 [col. 2 P4]: -

உண்மையில், இப்படிப்பட்ட ஆவி கிறிஸ்துவ மண்டலத்தில் வளரவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கலாம். கடந்த காலத்தில் வாழ்ந்தவர்கள் ஓரளவுக்கு நற்குணங்களோடு இருந்ததினால், சீர்பொருந்துதலின் காரியங்களை அவர்களே தங்களுடைய சொந்த முயற்சியினால் செய்திருந்தால் இந்த உலகம் சீர்திருந்தியிருக்கலாமே என்று எண்ணலாம். ஆனால் தேவனுடைய வார்த்தைகளை நீடிய பொறுமையோடு காத்துக் கொள்பவர்கள், சர்வவல்லவரிடமிருந்து ஞானத்தைப் பெற்றவர்கள் குறித்த காலத்தில் தேவனுடைய திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதையும், தேவன் எதிர்பார்க்கக்கூடிய நீடிய பொறுமையில் வளர்ந்துகொண்டிருப்பார்கள். இந்தப் பொறுமையில் வளர்ச்சியடைந்தால், நம்முடைய ஆண்டவர் தீமையையும், அதின் பாதிப்புகளையும், தவறுகளையும் அதன் உபத்திரவங்களை சந்தோஷமாகவும், நீடிய பொறுமையோடும் சகித்தது போல நாம் இருக்கவேண்டும். ஏனெனில், தேவன் இவையனைத்தையும் அனுமதித்ததோடு மட்டும் அல்ல, அவர் சகலத்தை, தேவனுடைய இராஜ்யத்தில் கிறிஸ்துவோடுக்கூட ஆயிரவருஷம் ஆட்சிசெய்யும் "சிறு மந்தையை" அவர் அழைத்து ஆயத்தம் செய்துக்கொண்டிருக்கும் மிகப் பெரிய நன்மையான நோக்கத்திற்காகவே செயலாற்றுகிறார் என்பதையும் உணர்ந்துக்கொள்ளலாம்.

தூஷணமும், பொல்லாத பேச்சுக்களும், வதந்திகளும்

1. தூஷணமான பேச்சுகள் என்றால் என்ன?

யாக் 3:8-10 - நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது, அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம், தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.

R2443 [col. 1 P 5 - col.2 P1]: -

ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் தங்களுடைய நாவினால் சபிக்கிறார்கள் என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு எந்தக் கோணத்தில் கூறுகிறார் ? மேலும், அனைவருக்கும் இவ்வளவு வெளிப்படையான எச்சரிப்பு தேவையா? நிச்சயமாக எந்தக் கிறிஸ்தவனும் தங்களுடைய சகோதரர்களை எந்தவிதமான பிரதிக்கினையோடு அல்லது முன்திட்டமிட்டு, பக்தியற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி சபிக்கமாட்டார்கள். ஆனால் நம்முடைய நாவு மற்றவர்களைக் காயப்படுத்தி, சபிப்பதற்கு மற்ற வழிகள் ஏதும் உண்டா ? உபயோகத்தில் இருக்கும் "curse" என்ற ஆங்கில வார்த்தையின் பொருள், கடந்த நூற்றாண்டில் சற்று மாற்றப்பட்டுள்ளதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். பொதுவாக, "curse" என்ற வார்த்தைக்கு"காயப்படுத்துவது" என்ற பொருள் முழுமையாக தொலைந்துபோனது. அதற்குப் பதிலாக "ஆணையிடுதல்" மற்றும் "பக்தியற்ற பேச்சுகள்" என்று பொருள்படுத்தப்பட்டது. ஆணையிட்டு சபித்தலைக் குறிக்கக்கூடிய வெவ்வேறு வார்த்தைகள் கிரேக்க மொழியில் பயன்படுத்தப்பட்டது. (அநாத்தீமா மற்றும் அநாத்தீமாட்டிஸோ என்ற வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் பத்து முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.) மேலும், பகிரங்கமாக கூறக்கூடிய சாபங்களைக் குறிப்பதற்கும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டது. (அதாவது காட்டாரா மற்றும் காட்டாராயோமாய் என்ற வார்த்தைகள் - எதிராக பேசுதல், தீமையாக பேசுதல் அல்லது பேச்சின் மூலமாக காயப்படுத்துவதை பொருள்படுத்தும்) இரண்டாவதாக சொல்லப்பட்ட வார்த்தையை அப்போஸ்தலனாகிய யாக்கோபு பயன்படுத்துகிறார். ஒரே நாவினால் நாம் தேவனை துதிக்கிறோம். அதே நாவினால் நம்முடைய சகோதரர்களை தவறாகவோ அல்லது காயப்படுத்தியோ, புறம் கூறுகிறோம் என்று பொருள்படும்படி அவர் கூறுகிறார். "உங்களை சபிப்பவர்களை (தீமையாக பேசுபவர்களை) ஆசீர்வதியுங்கள்" என்று நம்முடைய ஆண்டவரும் இதே வார்த்தையை பயன்படுத்துகிறார். "ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றி சபியாதிருங்கள்" என்று அதே வார்த்தையை பவுலும் தேவனுடைய ஜனங்களுக்கு எச்சரிப்பாக கூறுகிறார். மேலும் "இனி ஒருபோதும் கனிக்கொடுக்கமாட்டாய்" என்று இயேசு இதே வார்த்தையைக் கூறி சபித்தார் என்று வாசிக்கிறோம். வருங்காலத்தில் அது வளர்ச்சி அடையாமல், சாதகமற்ற சூழ்நிலையில் இருக்கும் என்பதை முன் அறிவித்தார். இப்படியாக நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் இருந்த யூதர்கள், சாபத்திற்குக் கீழ் இருந்ததாக பவுல் அறிவிக்கிறார். நியாயப்பிரமாணம் தீமையானது அல்ல, ஆனால் மாம்சத்தில் அபூரணமாக இருந்த இஸ்ரயேல் ஜனங்கள் அதன் தீர்ப்பின் (சாபம்) கீழ் வந்துவிட்டார்கள். "கிறிஸ்து நமக்காகச் (முன்னே யூதர்களுக்கு) சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு (தீர்ப்புக்கு) நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்....." (கலா 3:10-13) என்றும் பவுல் அறிவித்தார். இதே காரியத்தை கீழக்காணும் வசனத்திலும் காணலாம்,

"இந்த பூமி முள்ளும் குறுக்கையும் முளைப்பிக்கும்" என்று இந்த பூமியை சபித்தபோது, அந்த நிலம் பயிரிடுவதற்கு ஏற்றதாக இருக்கவில்லை. மாறாக, அதன் களைகள் பிடுங்கப்பட்டு சுட்டெரிக்கப்பட்டபின் அது விளைச்சலுக்கு ஆயத்தமாக இருக்கும்.- மத் 5:44, ரோம 12:14, மாற் 11:21, எபி 6:8

இந்த உண்மையான வார்த்தையையும், அதை பயன்படுத்தின முக்கியமான நோக்கத்தையும் நம்முடைய சிந்தைக்குமுன் கொண்டுவந்து பார்க்கும்போது ஓரளவுக்குச் சரியாக மொழிப்பெயர்த்திருந்தாலும், இக்காலத்து பொதுவான கல்வி அறிவின்படி பயன்படுத்தப்பட்ட விதமானது -அந்த வார்த்தையின் முக்கியமான அர்த்தம் மறைந்தேவிட்டது என்று தெரிகிறது. (அதேபோல, "தீமை" என்ற வார்த்தையின் விரிவான அர்த்தமும் தொலைந்து விட்டு, நிலையான ஒழுக்ககேடு, தவறு, தீமை, துன்மார்க்கம் என்று பொருள்படுத்தபடுகிறது. ஆனால் விரும்பப்படாத எந்தக் காரியத்திற்கும் அல்லது நன்மை அல்லாதவைகளும் - தீமை என்று பொருள்படும்)

2. கிறிஸ்தவர்களாக இருப்பவர்கள் மத்தியில் இந்தத் தவறுகள் சாதாரணமாக காணப்படுவது எப்படி?

R2443[col.2 P 2]: -

இந்தக் கோணத்திலிருந்து அப்போஸ்தலரின் வாக்கியத்தை காணும்போது, அவருடையக் குற்றச்சாட்டு, இன்றைய கிறிஸ்தவ ஜனங்களுக்கு அபாய ஒலியாயிருக்கிறது. எத்தனை பேர் தங்களுடைய நாவினால் சக கிறிஸ்தவர்களைக் காயப்படுத்துகிறார்கள் ? அதே நாவினால் தேவனுக்கு துதிகளையும் செலுத்துகிறார்கள். உடன்படிக்கை செய்த தேவனுடைய ஜனங்கள் வேறு எல்லா பாவங்களை விட இந்தத் தவறை அதிகதிகமாக செய்து கொண்டு வருகிறார்கள். எந்த விதமான உணர்வும் இல்லாமல் இதில் தவறுகிறார்கள். சுவாசிப்பது போல இயல்பாக செய்யப்படும் இந்தத் தவறுகள் அநேகரிடம் காணப்படுகிறது. அவதூறாக பேசுவதையும், தீமையாக பேசுவதையும் எதிர்த்து, வேத வசனங்களில் உள்ள கட்டளைகளை காண்பித்து பிரசங்கிக்கும் அநேகர் உண்டு. இந்தப் பாடங்களை நன்கு புரிந்திருக்கிறார்களோ இல்லையோ தெரியவில்லை. ஏனெனில் அவர்களின் சொந்த நடத்தை அல்லது ஒழுக்கத்தை மறந்தவர்களாக மற்றவர்களைக் குறித்து அவதூறு பேசிக் கொண்டிருக்கிறார்கள். அநேக வருடங்களாக புது சிந்தையின் கவனத்திற்கும் வராதளவுக்கு இந்தத் தீமை விழுந்துபோன மனித சிந்தையில் ஆழமாக பதிந்திருப்பதற்கு ஆதாரமாக நாம் இதை கூறுகிறோம். ஏனெனில், தேவனுடைய வார்த்தைகளின் படி நடந்து, உண்மையான தேவ ஜனங்களாக இருக்க விரும்புவோர், தங்களை திருத்திக்கொள்வார்கள், ஆனால் இந்தச் சிந்தையில்லாதவர் இந்தப பாவத்தை கவனியாமல் விட்டுவிடுகிறார்கள்.

3. நாவின் வல்லமை என்ன?

யாக் 3:1-18

"என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல் தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான். பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம்நிறைந்ததுமாயிருக்கிறது.அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகது.ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது.உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்.உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப்

பொய்சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியம் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது."

F586- F588 " தேவனை துதிப்பதும், மனுஷரை சபிப்பதும் "

முழுமையான விஷம் நிறைந்ததும், கட்டுக்கடங்காத ஒரு அவயமாக யாக்கோபு நாவை குறிப்பிடுகிறார், மேலும், ஆச்சரியமல்ல அதை கட்டுப்படுத்துவது மிக கடினம் என்றும் வலியு றுத்துகிறார். அது நெருப்பைப் போல அனைத்தையும் கொளுத்திவிடும் என்றும் கூறுகிறார். (யாக் 3ம் அதிகாரம்) இந்த அனுபவங்களைப் பெறாதவர்கள் ஒருவரும் இல்லை. வாழ்க்கையில் ஏற்படும் அதிகமான பிரச்சனைகளுக்கு உண்மையில்லாத நாவு தான் காரணம், என்று கண்டுபிடிக்கப்பட்டது. துரிதமானதும், மூர்க்கமானதும், உக்கிரமானதுமான வார்த்தைகளினால் மில்லியன் கணக்கான பணமும், ஆயிரக்கணக்கான உயிர்களையும் சேதபடுத்துகுகிற - யுத்தங்களை ஏற்படுத்தியது. மேலும் இப்படிப்பட்ட அநேக காரியங்கள், நீதி மன்றங்களில் தொடுக்கப்படும் வழக்குகளுக்குக் காரணமாக இருக்கிறது. மேலும், கடந்த 6000 வருடங்களாக மனித இனத்தைப் பாதிப்புக்குள்ளாக்கிய முக்கிய காரணமும் இதுவே. " அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது." என்று, நாவைப் பற்றி அப்போஸ்தலர் கூறுகிறார். அயல்வீட்டுக்காரனை கொலைச் செய்யாமலும், அவனிடம் திருடாமலும் இருக்கும் ஒரு நிலையை ஒரு கிறிஸ்தவன் அடைந்திருக்கலாம், ஆனால் அதே அயலானை நாவினால் கீறி, காயப்படுத்தி, அவருடைய நல்ல பெயரைக் கெடுத்துகொண்டிருக்கிறாரே, இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் சரியான வழியில் நடப்பவர்களாக இருந்தாலும், பரலோக நிலையை அடைவதற்கு வெகு தூரத்தில் இருக்கிறார்கள்.

நம்முடைய விழுந்துபோன நிலையில் இப்படிப்பட்ட துன்மார்க்கமான குணம் இருப்பதை நன்கு உணர்ந்தபோதிலும் நாவை அடக்குவது எவ்வளவு கடினமான காரியம் என்று அனைவரும் அறிந்திருக்கிறோம். ஆகவே இந்த நாவை அடக்குவதற்கு சரியான வழியை யோசித்து அதில் கவனம் செலுத்தவேண்டும். அதாவது இருதயத்திலிருந்து இந்த மாற்றம் வரவேண்டும். "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" என்று ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தைகள் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய இருதயத்தில் உள்ள பிரச்சனைகள் அதிகமாக இருப்பதன் காரணமாகவே நம்முடைய நாவின் பிரச்சனைகள் அதிகமாக காணப்படுகிறது. ஆகவே, நம்முடைய இருதயத்தின் சிந்தைகளை சரிப்படுத்தினால் நம்முடைய நாவை அடக்குவது சற்று எளிதாக இருக்கும். தொடர்ந்து மற்றவர்களை அலட்சியமாகவும், இகழ்ந்தும் பேசக்கூடிய உதடுகள் தங்களுக்குள் இருக்கும் பெருமையையும், அகந்தையையும், கர்வத்தையும், அதிகமான தன்னம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறது. தொடர்ந்து மற்றவர்களை மறைமுகமாகவோ, நேரடியாகவோ தவறாக பேசும் உதடுகள் சுத்தமில்லாததும், தேவனுடைய அன்பின் ஆவியினால் நிரப்பப்படாமலும் இருக்கிறது. ஏனெனில் "அன்பானது பிறனுக்குப் பொல்லாங்குசெய்யாது" அது அவனைக் குறித்து பொல்லாங்கை யூகிக்க அனுமதிக்காது. அனுகூலமற்ற குணங்களை யூகிப்பதைவிட அனுகூலமான குணங்களை யூகிக்கும், ஒவ்வொரு சூழ்நிலையையும், அவனுக்கு சாதகமாகவே (நியாயமானதை) யோசிக்கும்.

தன்னை குறித்து பேசி, தன்னை காயப்படுத்தி கொள்ளாத அளவுக்கு ஒவ்வொரு மனுஷனுக்குள்ளிருக்கும் சுயநலமான அன்பு மிக உறுதியானது. அதேபோல சுயலமற்ற அன்பு பிறனையும் நேசிக்கும். அது அயலானை தன்னைப்போன்று நேசிப்பது, மாத்திரமல்ல, அயலான் அல்லது சகோதரனுக்கு கேடு விளைவிக்கும்படி பேசுவதைக் கூட வெறுக்கும், அல்லது அவனுடைய நடத்தையைக் குறித்துக்கூட பிரதிபலிக்க விருப்பப்படாது. ஏனெனில், தனக்கு விரோதமாக, அப்படி ஒரு வழியை தெரிந்துகொள்ள விருப்பமில்லாமல் இருக்கும். அப்படியானால், இந்த

விஷயத்தை எந்த வழியிலிருந்து நாம் பார்த்தாலும், புதுசிருஷ்டியின் மிக முக்கியமான விஷயம் நம்முடைய இருதயங்களில் பரிபூரண அன்பை அடைவதுதான் என்று நாம் பார்க்கிறோம். இது சத்தியத்தின் ஊழியமாகிய திவ்விய ஊழியத்தில் ஒத்துழைக்குமாறும், அதிக வைராக்கியமும், முயற்சியும், தியானமும் உள்ளவர்களாக இருக்கவும், தேவனுக்கு நேராக நம்மை ஊக்குவிக்கும். மேலும் மனிதர்களிடத்திலும் நம்மை இதேபோல் நியாயத்துடனும், அன்புடனும், நடக்கும்படியாக மாத்திரமல்ல, கூடுமானவரை, அனைவரைப் பற்றியும் கிருபையாய் நினைக்கவும், பேசவும் ஊக்குவிக்கும். இது பரிசுத்த ஆவியாகும். இதைக் கேட்டு நாம் ஜெபிக்க வேண்டும் என்று நம்முடைய மீட்பர் கற்றுக்கொடுத்தார். மேலும், இதைக் குறித்துதான் அவர் "பூலோகத்திலுள்ள பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பூலோகத்திற்குரிய நல்ல ஈவுகளை கொடுப்பதைக் காட்டிலும், நம்முடைய பரலோகப்பிதா ஆவிக்குரிய நல்ல ஈவுகளை அதிகமாக கொடுப்பதற்கு மிக வாஞ்சையாயிருக்கிறார்" என்று அறிக்கையிட்டார். நம்முடைய சரீரம் முழுவதும், சிந்தனையினாலும், வார்த்தையிலும்,செயலிலும் அன்பு ஊற்றப்பட வேண்டும் என்பதற்காக, இந்தப் பரிசுத்த ஆவிக்காகவும், அன்பின் ஆவிக்காகவும் ஊக்கமாக ஜெபிக்க, வாஞ்சையோடு, முயற்சிக்கவேண்டும் என்று குறிப்பிடுகிறது. இப்படி செய்தால், நாம் பரலோகத்திலிருக்கிற நம்முடைய பிதாவின் பிள்ளைகளாக இருப்போம். இப்படியாக, அவருடைய அன்புக்கும், அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற எல்லாவற்றிற்கும், நாம் பாத்திரமாக இருப்போம்.

R2447[col. 2 P1] -

நம்முடைய சரீர அவயவங்களில் நாவே செல்வாக்குமிக்கது. நம்முடைய சகல அவயவங்களும் இணைந்து செயல்பட்டாலும், நாவை மேற்கொள்ளவோ, அதை கட்டுப்படுத்தவோ முடியாது. ஆகவே தேவனுடைய பணியில் அதை கட்டுபடுத்துவது மிக அவசியமாக இருக்கிறது. அழியக்கூடிய இந்தச் சரீரங்களினால் தேவனுடைய ஊழியத்தை செய்வது மிக முக்கியம். அன்பு, கனிவு, உதவி பற்றிய சில வார்த்தைகள் - மனித வாழ்க்கையில் எவ்வளவு பெரிய மாற்றங்களை ஏற்படுத்துகிறது. மேலும் ஒவ்வொரு தேசங்கள் சீர்படுத்துவதற்கு, எவ்வளவு காரியங்களை இந்த நாவு செய்யவேண்டும். அதேநேரத்தில் இந்த நாவு - தீமையான மற்றும் இரக்கமற்ற வார்த்தைகளை பேசி, அநீதியான செயல்களைச் செய்து, நற்கீர்த்தியுள்ள அனைத்தையும் அழித்து விடுகிறது. அல்லது அப்போஸ்தலர் கூறுவது போல "அது எல்லாவற்றையும் கொளுத்தி விடுகிறது". இது தீவிர உணர்ச்சிகளை தூண்டிவிட்டு, சண்டைகளையும், பகைகளையும் பிறப்பிக்கும். "நாவு காட்டை கொளுத்திவிடும் நெருப்பு. (Gehenna) கெஹன்னா என்று சொல்லப்படும் இரண்டாம் மரணத்தை குறிக்கும் என்று யாக்கோபு சொல்லுவதில் ஆச்சரியமில்லை.

R2156 [col. 1 P5]

இந்தப் பாடம் நாவுக்கு எதிராக மட்டும் அல்ல, இந்த நாவைக்கொண்டு மற்றவர்களுக்கு எதிராக செயல்படுத்தும் வல்லமைக்கு எதிராகவும் எச்சரிக்கப்படுகிறது. எல்லா அவயவங்களைக் காட்டிலும், நாவு அதிக ஆற்றலுள்ளது (நன்மை அல்லது தீமையை செய்ய) என்று அனுபவம் பெற்ற அனைவரும் ஒத்துக்கொள்வார்கள். மேலும், மற்ற அவயவங்களை காட்டிலும் நாவை அடக்குவது கடினம் என்று அனுபவங்களும் கற்றுத் தருகிறது. ஆகவே விழுந்து போன நிலையின் ஒவ்வொரு ஆசையையும், ஆர்வமிக்க காரியங்களையும், நிறைவேற்றிக் கொள்ள இந்தத் திறமையுள்ள ஊழியக்காரனை தீமையான காரியங்களுக்கு பயன்படுத்திக் கொள்கிறது. ஆகவே ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன்னுடைய கவனத்தையும், ஞானத்தையும் சரியாக பராமரித்து, தன்னுடைய சரீர அங்கங்களை கட்டுக்குள் வைத்து கிறிஸ்துவுக்குள் இருக்கும் புது சிந்தனைக்கு கீழ்படுத்துவதில் கவனமாக இருக்கவேண்டும். இப்படிச் செய்தால் தனக்கும் மற்றவர்களுக்கும் எந்தவித பாதிப்புகளையும் ஏற்படுத்தாமல், நெருக்கமான பாதையில் செல்ல உதவி செய்யும். குதிரையின் வாயிலிருக்கும் ஒரு சிறிய கடிவாளம், அந்தக் குதிரையை முழுமையாக கட்டுப்படுத்தி நடத்துவது, போலவும், ஒரு சிறிய சுக்கான் பெரிய கப்பலின் திசையை திரும்பி நடத்துவது போல, நம்முடைய நாவும், எழுதக்கூடிய பேனாவாக இருக்கிறது. நன்மைக்கானாலும், தீமைக்கானாலும் சரி, அநேக ஜனக்கூட்டங்களைத் திசைதிருப்பிவிடும். ஆகவே இந்த நாவு எவ்வளவு முக்கியமானது என்றும், அதை நாம் நன்மையை காட்டிலும் தீமைக்காக எந்த அளவுக்கு பயன்படுத்துகிறோம் என்றும், நம்முடைய விசுவாசத்தை அதிகரிப்பதற்குப் பதிலாக எத்தனை முறை நம்முடைய விசுவாசம் குன்றிப்போய்விட்டது என்றும்,

நீதியையும், சமாதானத்தையும் பிறப்பிப்பதற்குப் பதிலாக எத்தனை முறை அதிருப்திகளையும், சண்டைகளையும் ஏற்படுத்தியது என்றும் நாம் கவனிக்கவேண்டும். உலகப்பிரகாரமான காரியங்கள் இவையனைத்தும்,உண்மையாக இருக்கும் பட்சத்தில் தேவனுடைய ஜனங்கள் மத்தியில் இது இன்னும் அதிகமான பாதிப்புகளை ஏற்படுத்தலாம். நாளுக்கு நாள் - சத்தியம், நீதி மற்றும் சமாதானத்திற்கு ஏதுவாகவோ அல்லது எதிராகவோ வழிநடத்தும் ஓர் உபாத்தியராக நாவு செயல்படுவதை, ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளவேண்டும்.

4."ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறது" என்பதன் பொருள் என்ன?

யாக் 3:6" நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது!"

R2603 - நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறது.

"ஆகையால், (முக்கியம்) நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது."

ஒரு தீமையான நாவினால் ஏற்படும் மிக கொடிய பாதிப்புகளை உறுதியான அடையாள மொழியில் அப்போஸ்தலர் இங்கு குறிப்பிடுகிறார். "நரக (அடையாளம்) அக்கனியினால் (அடையாளம்) கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது" ஒரு நாவு அக்கினியைப் போல கொளுத்தி விடுகிறது என்றால், தவறான காரியங்களைப் பிடிவாதமாக செய்யக்கூடிய மனோபாவம், சுய விருப்பம், சுயநலம், பகை, குரோதம் இவைகள் அனைத்தையும், அறிவையும் வாய்ப்பையும் பயன்படுத்தி கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து சீர்திருத்தாவிட்டால், இவர்கள் நித்தியமாக அழிக்கப்படுவதற்கு தகுதி பெறுவார்கள் - அதாவது இரண்டாம் மரணத்தை (கெஹன்னா - நரக அக்கினி) அடையக்கூடிய வகுப்பாராக இருப்பார்கள் என்று யாக்கோபு உத்தேசிக்கிறார். நெருப்பைப் பற்றவைப்பது போல ஒருவர் சந்திக்கக்கூடிய அனைவரிடமும் ஒருவரைப் பற்றி தீயக் காரியங்களை நாவினால் கூறிக் கொண்டிருக்கையில், ஆயுள் சக்கரத்தை கொளுத்திவிடும். ஒரு பேச்சாளரைப் பற்றின, விரோதமான சில வார்த்தைகளை, அவருடைய சகல தீயக் காரியங்களையும் தீவிரமாக பரப்பிவிடும். அதுபோல மற்றவர்களுக்கும் ஏற்படும். இப்படியாக, இப்படிப்பட்ட காரியங்களைத் தொடர்ந்து செய்தால், இறுதியில் அவதூறு பேசக்கூடிய அந்த நபர் முற்றிலுமாக கெட்டுப்போய், இனி ஜீவிப்பதற்கான உரிமையை இழந்துவிடுவார்.

5. புறம் கூறுதலின் அழிவுக்குரிய பாதிப்புகள் என்ன? மேலும் விழுந்துபோன நிலை, இதற்காக சொல்லும் காரணங்களும், தப்பித்துக் கொள்வதற்கான சாக்குபோக்குகள் என்னென்ன?

R2443 [col. 2 P3] through 2444 [col. 2 P2] (பாடத்தின் இறுதியில் பார்க்கவும்)

R2445 [col. 1P 3:6]

உண்மைகளை கண்டடைவதில் என்னுடைய நேரங்களை நான் விரயம் செய்யமாட்டேன். வாழ்க்கை மிக குறுகியதாக இருப்பதால், நான் மற்றவர்களின் சொல்கேட்டு பேசாமல், எப்போதும், என்னுடைய அறிவிலிருந்து பேசத்தக்கதாக மிக கவனத்தோடு உண்மைகளை தேடிப்பிடித்தால் என்னுடைய சொந்த வேலைகளை செய்வதற்கு எனக்கு நேரமில்லாமல் போய்விடுமே - என்று ஒருவர் மறுத்து பேசலாம்.

இப்படியாக, வசனங்களின் அடிப்படையிலாக நீங்கள் பின்பற்றக்கூடிய பிரமாணம் என்னவெனில் - "ஒருவனையும் தூஷிக்கவேண்டாம்"

1. ஏனெனில், உங்களுக்கு உண்மைகளைப் அறிந்துகொள்ள நேரமில்லாததாலும், உங்களுக்கு முன் எல்லா உண்மைகளையும் வைக்கப்பட்டாலும், அவைகளை நடுநிலைமையோடு பார்க்கக்கூடிய பக்குவம் குறைவாக இருக்கக்கூடும்.

2. ஏனெனில், உங்களுக்குள் கிறிஸ்துவின் ஆவியும், அன்பும் அதிகதிகமாக தங்கியிருந்தால், உண்மைகளைக் கூறுவதற்கு சகலவிதமான ஆதாரங்கள் இருப்பினும், நீங்கள் அவைகளை எடுத்துரைக்க விரும்பமாட்டீர்கள். நீங்கள் அறிந்த உண்மைகள் தீங்கானதாக இருப்பதால் அவைகளை அறிவிக்க உங்களுக்கு வெறுப்பாக இருக்கலாம். அப்படியானால் அவதூறான புரளிகளை கட்டாயமாக கேட்க வேண்டும் என்று ஆவலோடிருக்கும் காதுகளையும், இந்தத் தீயக் காரியத்தை பற்றிய எந்த விதமான முன் அறிவும் இல்லாமல், தவறான செய்திகளை ருசிகரமாக பேசி, அந்த தீய செய்திகளை வேகமாக பரப்பும் நாவுகளின் நிலை என்னவாகும் ? இவர்களுக்குள் கிறிஸ்துவின் ஆவி சிறிதளவும் இருக்க வாய்ப்பில்லை. சகோதர அன்பில் இல்லாதவர்களும், "பொன்னான கோட்பாடுகளை" இந்நாள் வரைக்கும் இவர்கள் கற்றதுமில்லை என்று பொதுவாக காணப்படுகிறது.

6. தீமையான எண்ணம் கொள்வது என்றால் என்ன? மேலும் தீமையான எண்ணம் கொள்வதற்கும் அல்லது அவதூறாக பேசுவதற்கும் என்ன சம்பந்தம்?

R3594 [col. 1P 1-5]:

தொட்டா சினுங்கி போல,மற்றவர்களால் எளிதில் துன்பப்படாதீர்கள். மற்றர்வர்களின் வார்த்தைகளையும், செயல்களையும் அன்புள்ளதாக ஏற்றுகொள்ளுங்கள். அற்பமான காரியங்களும், சிறிய தர்க்கங்களும், அன்பு என்னும் வஸ்திர மூடலினால் கவனியாமல் விட்டுவிடலாம். முக்கியமான குற்றங்கள் தற்செயலாகவோ, அறியாமையிலோ நடந்து விட்டதாக நாம் அனுமானிக்கலாம். மேலும் இவைகளை விசாரிக்கும்போது, கோபத்தை கிளறிவிடாமல், கிருபை பொருந்திய வார்த்தைகளினால், கனிவோடு பேசவேண்டும். அநேக பிரச்சனைகளில், குற்றங்களை பொருள் படுத்தாமல் எளிதில் அவர்களை மன்னித்துவிடலாம்.

"தீமையான அனுமானங்கள்"- மற்றவர்களின் வார்த்தைகளுக்குள்ளும், கிரியைகளுக்குள்ளும் உள்ள நோக்கங்களைத் தீமையாக கற்பனை செய்யக்கூடாது, என்ற பிரமாணத்தின் கீழ் இந்தக் கட்டளை கொடுக்கப்படுகிறது. நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் தெய்வீகத்திற்கு - "தீமையான அனுமானங்கள்" முற்றிலும் எதிரான நிலையில் இருப்பதாக அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். மேலும் கறைப்பட்ட சிந்தனை, மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகள் , பொறாமைகள், சண்டைகளையும் இதற்கு ஒப்பாக பேசுகிறார். - 1தீமோ 6:3-5, கலா 5:19-21

பாடத்தின் மறுப்பக்கத்தில், புதிதாக ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய ஜனங்கள், நித்தமும் வளர்ச்சி அடையவேண்டிய, ஆவியின் கனிகளை பற்றிய கட்டளைகளை, பவுல் வரிசைப்படுத்துகிறார். இதில் வளர்ச்சி அடைவதே "வெற்றிபெற்றதற்கு" முக்கிய ஆதாரமாக நிரூபிக்கப்படுகிறது. "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது;... தீங்கு நினையாது,..அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்."(1கொரி 10: 4-7) என்று அவர் கூறுகிறார்.

இப்படிப்பட்ட தீமையான எண்ணங்கள் அடிக்கடி தூண்டப்பட்டு, தீமையான விருப்பங்கள் உருவாக, வற்புறுத்தப்படும். ஆனால் அன்பின் ஆவியை பெற்றவர்கள் மிகவும் மிருதுவாக இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர்கள் பெற்ற அனுபவத்தினால், "தேவனுடைய பக்தியையும், பயத்தையும் உடனடியாக புரிந்துகொள்ளும் திறனும்" அதிகரித்து, அன்பில் வளர்ச்சி அடைந்த நிலையை பெறுவார்கள். மேலும், தீமையை பார்க்கும் போதே, அவர்கள் எச்சரிப்பாக இருப்பார்கள். தீமையான எண்ணங்கள் மறுக்கமுடியாதளவுக்கு, உண்மையான ஆதாரங்களோடிருப்பினும் அவர்கள் எச்சரிக்கையாயிருப்பார்கள். அறியாமையில் உள்ள மனுஷனை பழிச்சொல்லி, அபாய நிலையை அடைந்து, சில இழப்புகளை சந்திப்பதற்கு பதிலாக, அற்பமான காரியங்களை விட்டுவிடுவது நலமாயிருக்கும். நாம் இந்தக் கட்டளைகளை பின்பற்றுவதினால், சந்திக்கும் இழப்புகளை, சரியாகவும், அதற்குமேலாகவும், சரிக்கட்டுவதற்கு இப்படிப்பட்ட, ஆலோசனையைக் கொடுத்த தேவன், வல்லமையுள்ளவராக இருக்கிறார். அவரை உண்மையாக நேசிப்பவர்களுக்கு இப்படிப்பட்ட அனுபவங்கள் அனைத்தும் நன்மைக்கு ஏதுவாக நடக்க அவர் விருப்பமுள்ளவராக இருக்கிறார். அவருடைய முன்னேற்பாட்டில்,

கீழப்படிதலை முதலில் வைத்திருக்கிறார். "நீங்கள் என்னுடைய சீஷர்களாக இருந்தால் என்னுடைய கட்டளைகளை கைக்கொள்ளுங்கள்"

"தீமையான அனுமானங்கள் அல்லது அவதூறு பேசி.." தேவனுடைய கற்பனைகளை புறக்கணிக்கும், ஒருவர் தனக்கு தானே வலையை பின்னிக் கொண்டு எவ்வளவு சாதுரியமாக மற்ற காரியங்களில் நடந்துகொண்டாலும் தானே அதில் விழுந்துவிடுவார். ஏனெனில், சகோதரரைப் பொறுத்தவரையில் அவரின் இருதயம் சந்தேகங்களினாலும், அவநம்பிக்கையினாலும் நிறைந்திருப்பதால் தேவனையும் சந்தேகிக்க மனது ஆயத்தப்படுகிறது. அதாவது கசப்பான ஆவி தேவ ஆவியோடும், அன்பின் ஆவியோடும் போராடுகிறது என்று பொருள்படுகிறது. ஏதோ ஒன்று மற்றொன்றை ஜெயிக்கும். தவறான ஆவி விரட்டப்படவேண்டும். இல்லாவிட்டால் புது சிருஷ்டியை மாசுபடுத்திவிட்டு, அழித்துவிடும். இதற்கு எதிராக புது சிருஷ்டி ஜெயித்துவிட்டால் - தீமையான எண்ணங்கள் மேற்கொள்ளப்பட்டு, பிரச்சனைகள் மற்றும் விரோதிகளுக்கு எதிரான போராட்டம் மேற்கொள்ளப்படும். எண்ணங்கள் இருதயத்திலிருந்து தோன்றும், அவைகள் நம்மை நன்மையான வார்த்தைகளுக்கும் கிரியைகளுக்கும் அல்லது தீமையான வார்த்தைகளுக்கும் கிரியைகளுக்கும் வழிநடத்துகிறது.

7. "இரகசியமான குற்றம் என்றால் என்ன?" இவைகளின் இரண்டு வகைகள் என்ன?

சங்க 19:12-14 " தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக."

R2248 [col.1p6]

உண்மையான கிறிஸ்தவனின் இருதயத்தின் நோக்கங்களில் இருக்கும் முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட சிந்தையை தீர்க்கத்தரிசனமான ஜெபம் அடையாளப்படுத்தும்.

"அவருடைய நீதியை விசுவாசித்ததினால் கடந்தகாலத்தில் தேவனுடைய நீடிய பொறுமையினால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதை உணர்ந்துபார்க்கையில், கிறிஸ்து இயேசுவுக்குள் இருந்த தேவனுடைய கிருபையினால் நம்முடைய பாவங்களை அவர் சுமந்ததை நாம் சரியான முறையில் உணர்ந்தால் நிச்சயமாக நாம் குற்றங்கள் புரிவதை தவிர்க்க முயற்சிப்போம். இரகசியமான இந்தக்குற்றங்கள் இரண்டு வகைப்படும். நமக்குள் இரகசியமாக செய்யப்படும் குற்றங்களாக இருக்கும். - சறுக்குதல்கள், அறியாமையினால் அல்லது எந்த நோக்கமும் இல்லாமல் செய்யப்படும் குற்றங்கள். ஆனால், தேவனோடு நல்ல ஐக்கியப்பட்ட ஒருவருடைய உண்மையான இருதயமும் அதன் விருப்பமும் நிச்சயமாக அறியாமையில் செய்யும் பாவங்களுக்காகவும் வருந்தி இப்படிப்பட்ட குற்றங்களை மேற்க்கொண்டு ஜெயிக்கவும், திவ்விய கிருபைக்காகவும், வேண்டி ஜெபிப்பார். இவைகளுக்கு அப்பாற்பட்ட மற்ற இரகசியமான குற்றங்களும் உண்டு. இவைகள் நமக்கும் தேவனுக்கும் மட்டுமே தெரிந்ததாக இருக்கிறது. நம்முடைய பாவங்களின் உண்மையான வடிவத்தை வெளிப்படுத்துவதற்கு முன் நம்முடைய சிந்தையில் இருக்கும் அபூரணங்களையும் அல்லது குற்றங்களையும் அகற்றவேண்டும்.

8. தீமையான ஆலோசனை பாவமாக இருந்து, இரகசிய குற்றமாக மாறுவது எப்படி?

R2248 [col.1p7 throughcol.2p5]:

எந்த விதமான பாவங்களும் சிந்தையில் இரகசியமாக தோன்றாமல் பகிரங்கமாக வெளிப்படுத்தப்படுவதில்லை என்று அனைத்து கிறிஸ்தவர்களின் நன்மையான வழியில் பெற்ற அனுபவங்களும், பாவத்திற்கு எதிரான போராட்டமும் கற்பிக்கிறது. பெருமையின் ஆலோசனையின்படி ஒருவர் தன்னைதான் மிக மேன்மையாக உயர்த்திக்கொள்வது பாவமான ஒரு சிந்தையாகும். பேராசையினால் சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்தாகவும் இருக்கலாம். அல்லது மாம்சத்திற்குரிய விருப்பமாகவும் இருக்கலாம். இவைகளைப் பற்றி நம்முடைய சிந்தையில் வரும் ஆலோசனைகள் பாவம் அல்ல. இப்படிப்பட்ட காரியங்களுக்கு நாம்

செவிகொடுப்போமா, கொடுக்கமாட்டோமா என்று நம்முடைய சிந்தையைத் தூண்டுகிறது . நாம் எடுக்கக்கூடிய முயற்சிகளில், நம்மை சுற்றியுள்ள காரியங்களில் நம்மை நாம் காத்து கொள்ளலாம். அநேகர் தீமையான சிந்தனைக்கு இணங்கினாலும், அவ்வ போது தீமையான கிரியைகளைச் செய்வதற்கு எல்லாவிதமான ஆலோசனையும் புறக்கணித்து விடுவார்கள். ஆனால் ஒருவேளை அந்தத் தீமையான சிந்தனை ஊக்குவிக்கப்பட்டால் அது இரகசிய பாவமாக மாறிவிட்டு, காலபோக்கில் பாவத்தின் செயல்பாடுகள் விருத்தி அடைந்து, பகிரங்கமாக வெளிப்படுத்தப்படும். இது தீமையான நடத்தையிலிருந்து மிக மோசமான நிலையை சென்றடையும். எடுத்துக்காட்டாக - ஒருவருடைய மேன்மையையும், பேர் புகழையும், மகிமையையும் இரகசியமாக கெடுத்து, அதனால் அவர்களுக்கு வரும் அனைத்து நன்மைகளையும் நாம் பெறுவதற்கான தீமையான சுயநலமுள்ள ஆலோசனையை நாம் ஊக்குவித்தால், பகையும் விரோதங்களும், சச்சரவுகளும் நம்மை வெகு சீக்கிரத்தில் சூழ்ந்துகொள்ளும். அவரைபற்றி மற்றவர்களிடம் புறம் கூறுதல் மற்ற மாம்சத்தின் கிரியை அனைத்திற்கும் நாம் எளிதாக வழிநடத்தப்படுவோம். துவக்கங்கள் எப்போதும் சிறியவைகளாக இருக்கும். அதை மேற்கொள்வது எளிதாக இருக்கும். அதே நேரத்தில் அது வளர்ச்சி அடைந்துவிட்டால் அதை கட்டுபடுத்துவது மிக கடினம். "இரகசியமான பாவங்களிலிருந்து என்னை சுத்திகரியும் அவைகளினால் பகிரங்கமான பாவங்களுக்கும் என்னை காத்தருளும்" என்று தீர்க்கதரிசனமாக ஜெபித்திருக்கிறார்கள்.

"அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.

பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்." என்று யாக்கோபு 1:14,15 வசனங்களை நாம் வாசிக்கிறோம். இங்கு அதே கருத்துவேறு விதத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சோதனையின்போது முதலில் சிந்தையில் வரும், அசுத்தமான அல்லது கனிவற்ற அல்லது அவிசுவாசமுள்ள ஆலோசனை தோன்றுகிறது. ஆனால் அது பாவம் அல்ல. அதே தீமையானவைகளை செய்வதற்கு அசைபோடும் போது, நம்முடைய சிந்தனைகளை திசை திருப்பி வசீகரமான யோசனைகளால் ஈர்க்கப்பட்டு தீமைகளை செயலாற்ற முடிவு செய்கிறது. இந்தக் கட்டத்தில் நாம் எதை விரும்புகிறோம் என்பது உறுதிப்படுகிறது. (தீமையானதை பற்றியிருக்கிறோமா அல்லது புறக்கணித்து விடுகிறோமா ?) ஒருவேளை நாம் தவறான முடிவுகளை எடுப்போமானால் அதைத் தொடர்ந்து இரகசியமான தவறுகள் துவங்குகிறது. சாதகமான சூழ்நிலையில் மட்டுமே இதன் வளர்ச்சி அதிகமாக இருக்கும் இதன் விளைவாக பகிரங்கமான பாவங்கள் வெளிப்படும். எடுத்துக்காட்டாக பிறனை பற்றித் தவறான காரியத்தைக் கூறி அல்லது புறம்கூறி செயல்களை சொல்லும்போது தீமையான செயல்களை செய்யும் தீமையான ஆலோசனை ஜாக்கிரதையாக துவங்கி விடுகிறது. அதற்குப்பின் பகிரங்கமாக வெளிப்படும். அவர்களின் முழு வாழ்க்கையும் பாதிக்கப்படும் அளவுக்கு எப்போதும் அவர்கள அபாய நிலையில் இருப்பார்கள். ஏனெனில் எந்த நேரத்திலும் அவர்கள் அத்துமீறி செயல்பட்டு மிகப் பெரிய குற்றங்களை மனமுவந்து, துணிகரமாக திட்டமிட்டு செயல்படுத்துவார்கள். அதன் சம்பளமாகிய மரணம், அதாவது இரண்டாம் மரணத்தை பெற்றுக்கொள்வதற்கு வழிவகுத்துவிடும்.

R2568 [col.2p2]:

சோதனை என்றால் பாவம் இல்லை என்ற மற்றொரு பாடமும் நமக்குண்டு. இப்படியாக நம்முடைய ஆண்டவரும் சோதிக்கப்பட்டார். அவருக்குள் பாவம் இல்லாததினால் அவைகளை அவர் மேற்கொண்டார். அதேபோல அவருடைய சகோதார்களும் சுத்த இருதயத்தோடும் சுத்த நோக்கத்தோடும் பிதாவின் சித்தத்தை தேடுபவர்கள், அவருடைய மாதிரியைப் பின்பற்ற வேண்டும். நமக்குள் சோதனைகளை அனுமதித்தால் மட்டுமே பாவம் நமக்குள் நுழையும். ஆனால் தவறான சிந்தை வந்தபின் தாமதிக்கும்போது, சோதனையின் வலிமையை அதிகரிக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மேலும் சாத்தான் சோதனை காரணமாக இருந்து நம்மை தவறான பாதையில் நடத்தி அதில் அகப்படுத்த மிகவும் சிரமப்பட்டு முயற்சிகள் எடுக்கிறான் என்பது குறிப்பிடக்கூடியதாக இருக்கிறது. ஆனால் தேவன் அப்படி அல்ல, "அவர் எந்த மனுஷனையும் சோதிப்பதில்லை" (யாக் 1:13) அவர் சாத்தானையும் அவனுடைய பிரதிநிதிகளையும் அவருடைய ஜனங்களை சுழ்ந்துகொண்டு சோதிக்க அனுமதித்தாலும் அந்தச்சோதனைகள் மூலமாக அவர்கள் தீமையை எதிர்த்து அதிகமான விசுவாசத்தை பெற கிறிஸ்துவின் குணலட்சணத்தில் வளர்ச்சி

அடையவேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார். நம்முடைய விசுவாசத்தின் பலம் அதிகரிப்பதற்காக இந்தச் சோதனைகள் அனுமதிக்கப்பட்டாலும் நம்முடைய திராணிக்கு மேல் நாம் சோதிக்கப்படுவதற்கு அவர் அனுமதிப்பதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வழியையும் ஏற்படுத்துவேன் என்ற உறுதியையும் தேவன் நமக்கு தருகிறார் என்பதையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

9. வெளிப்படையான பாவங்கள் என்றால் என்ன? இரகசியமான குற்றம் பகிரங்கமான பாவமாக மாறுவது எப்போது?

10. இந்த மிகுதியான துணிகரத்திற்கு வழிநடத்தும் பாவங்கள் என்ன?

R2248 [col.2p5]:

ஒரே சிந்தை வெவ்வேறு கோணங்களில் வெளிப்படுத்தப்படுவதை காண்கிறோம். அசுத்தமான அல்லது பணிவற்ற அல்லது அவிசுவாசமுள்ளமனதில் ஏற்படும் முடிவுகள் நிமித்தம் முதலில் சோதனை வருவதைக் காணலாம். ஆனால் அதில் எந்த பாவமும் இல்லை, தவறும் இல்லை. ஆயினும், இந்த தீமையான முடிவுகளை நாம் அசை போடும்பொழுது பாவம் கருத்தரிக்கப்படுகிறது. அந்த சிந்தையை நாம் தவிர்க்காமல் வளர்ச்சிக் குள்ளாக்கும்போது இரகசியமான பாவங்களுக்கு வழிவகுக்கிறது. நாம் அதை ஊக்குவித்தால் அந்த பாவம் வளாச்சியடைந்து சாதகமான சூழ்நிலைகளில் வெளிப்படையான கிரியைகளை நடப்பிக்கும். எடுத்துக்காட்டாக அயலானுக்கு விரோதமாக சொல்லப்படும் தவறான காரியங்கள் அல்லது வதந்திகள் அல்லது தீய காரியங்கள் - இந்த தீமையான முடிவுகள் மிக ஜாக்கிரதையாக செயல்படுத்தப்படுகிறது. ஆனால் முடிவில் மனப்பூர்வமாக துணிந்து முன் திட்டமிட்டு செய்யக்கூடிய பாவங்களுக்கு நம்மை வழிவகுத்து அதன் கூலியாக இரண்டாம் மரணத்தை பெறச் செய்யும்.

"அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்." (யாக் 1:14,15) என்று யாக்கோபு குறிப்பிடுகிறார். இங்கு ஒரே சிந்தை வேறுவிதமாக சொல்லப்படுகிறது.

11. இப்படிப்பட்ட பாவங்களிலிருந்து நம்முடைய இருதயங்களை எவ்வாறு சுத்திகரித்து காத்துக்கொள்வது?

R2517 [co.1p6 to end of article] இந்த பாடத்தின் முடிவில் இதற்கான விளக்கத்தை காணலாம்

R2249 [col.1p1 through col.2p1]:

ஒவ்வொரு அறிவுள்ள கிறிஸ்தவர்களும் இதற்காக தொடர்ந்து ஊக்கத்தோடு மனதார ஜெபிக்கையில் இரகசியமான குற்றங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட்டு பகிரங்கமான துணிகர பாவங்களை கட்டுப்படுத்த முடியும் எனத் தோன்றுகிறது. பாவங்களின் துவக்க நிலையை கண் காணித்துகொண்டு, தேவைப்படுகிற நேரங்களில் தொடர்ந்து கிருபாசனத்தண்டையில் சேர்ந்து தேவனுடைய உதவியோடு இருதையத்தை சுத்தமும், பரிசுத்தமான நிலையில் காத்துக்கொள்ளலாம். தங்களுடைய சிந்தையில் இரகசியமான பாவங்களை துவக்கத்திலேயே புறக்கணிப்பதை விட்டு விட்டு மிகவும் கஷ்ட்டப்பட்டு, வெளிப்புறமான பாவங்களை தவிர்ப்பதின் மூலமாக தேவனோடு நெருக்கமாகவும், பரிசுத்தமாகவும் ஜீவிக்க விரும்பும் யாவரும், நியாயமான காரியத்தை மூடத்தனமாகவும், முயற்சிக்கிறவர்களாக இருக்கிறார்கள். நாம் அம்மை நோயை தடுப்பதற்கு வெளிப்புறமான சுகாதாரத்தில் கவனம் செலுத்திவிட்டு, அந்தக் கிருமி நம்முடைய சரீரத்திற்குள் அனுமதித்தால் என்ன பிரயோஜனம் ? வெளியரங்கமான பாவங்கள் முதலில் கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் போல சிந்தையில் நுழைந்துவிடுகிறது. தடுப்பு சிகளாகிய சத்தியத்தையும், அதன் ஆவியையும் அனுப்ப அந்தப் பாவ சிந்தைகள் வளர்ச்சி அடைந்த நம்முடைய நடத்தையில் அந்தத் தீய குணங்களும் செயல்பாடுகளும் பயங்கரமாக வெளிப்படுவதற்கு முன், அவைகளை அழிக்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக - பெருமை மற்றும் சுயமரியாதை என்ற கிருமிகள் நம்முடைய சிந்தையில் நுழையும்போது, பெருமை - மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியையாக இருக்கிறது என்றும், அது கிறிஸ்துவின் ஆவிக்கு

விரோதமானது என்ற தடுப்பூசியை நாம் உடனடியாக போடக்கூடியவர்களாக இருக்கிறோம். அந்தக் கிருமியை அழிக்கக்கூடிய தடுப்பூசியில் போடப்படும் சரியான அளவு மருந்தை நாம் இங்கு காணலாம். "தன்னை உயர்த்திக் கொள்கிறவன் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" மற்றும் அழிவுக்கு முன்னானது அகந்தை.."

நம்முடைய சிந்தையில் பகை என்னும் கிருமி நுழைந்துவிட்டால், பகை மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியையாகவும் நம்முடைய உடன்படிக்கையில் நமக்குரியது என்று சொல்லக்கக்கூடிய கிறிஸ்து இயேசுவின் ஆவிக்கு எதிராகவும் இதுவே பகை என்னும் கிருமிக்கு, எதிராக பயன்படுத்தக்கூடிய தடுப்பூசியாகும். மேலும் பகையானது, குரோதம், விரோதம், சண்டை, சச்சரவு போன்ற தீமையான எண்ணங்களோடு இணைந்து செல்லும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. புதிய உடன்படிக்கையை மற்றும் நம்முடைய ஆண்டவரின் விளக்கவுரையின்படி இப்படிப்பட்ட குணங்கள் கொலைக்கு சமமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. 1யோ 3:15, மத் 5: 21, 22

நம்முடைய சிந்தையில் பேராசை என்ற கிருமி நுழைந்துவிட்டு, அவைகளுக்கு இசைவாக அநீதியான முறைகளை பயன்படுத்தினால் - "ஒருவன் உலகத்தையே ஆதாயப்படுத்திக் கொண்டு தன்னுடைய ஜீவனை நஷ்டப்படுத்திக்கொண்டால் அதனால் என்ன பயனுண்டு " மற்றும் " பண ஆசையே எல்லா தீமைக்கும் வேராக இருக்கிறது..... அநேக வேதனை தங்களை உருவ குத்திக்கொள்கிறார்கள்" என்ற நம்முடையஆண்டவரின் வார்த்தைகளாகிய தடுப்பூசியை நாம் உடனே போட்டுக்கொள்வோம்.

இந்தப் பாடத்திற்கு நாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு பாவத்தின் துவக்கமாக சிந்தையில் நுழையக்கூடிய இரகசிய குற்றங்களைப் பற்றி, வசனங்கள் சொல்லக்கூடிய சத்தியங்களை நம்முடைய சொந்த அனுபவங்கள் மூலமாக நாம் அறிவுறுத்தப்படுகிறோம். " எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்." (நீதி 4-23) என்ற வசனத்தை நாம் தெளிவாக புரிந்துகொள்ளவேண்டும்.

நம்முடைய சிந்தையில் சோதனைகள் வரும்படியாக தேவன் நம்மை அமைத்திருக்கிறார் என்பதில் நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அல்லது சோதனைகள் வரும்போது நாம் ஜெபிக்கக்கூடாது என்று சொல்லப்படவும் இல்லை. ஏனெனில் இப்படிப்பட்ட சோதனைகளும், பிரச்சனைகளுமின்றி நம்முடைய தரப்பில் பாவங்களை மேற்கொள்ளுதலோ, சாத்தானை ஜெயிப்பதிலோ எந்தவிதமான வெற்றியும் பெறமுடியாது. ஆனால் இந்த ஒரு காரணத்திற்காக நாம் கிறிஸ்துவின் பள்ளியில் பயிற்சி பெற்று கொண்டிருக்கிறோம் என்று நாம் நன்கு அறிந்திருக்கிறோம். ஆகையால் வரும் அனைத்து சோதனைகளும் நம்மை அணுகாதபடி தேவன் நமக்கு பாதுகாப்பு கவசம் போடவில்லை. அதற்குப் பதிலாக நம்முடைய போதகரிடமிருந்து சோதனைக்காரனை சந்திக்க கற்றுக்கொள்ளலாம். மேலும் நம்முடைய ஆண்டவரின் கிருபையாலும், உதவியாலும் பாவத்திற்கு எதிரான போராட்டங்களில் நாம் வெற்றி பெறலாம். இந்தப் பிரச்சனைகளில் நம்முடைய வெற்றியின் அளவு, நாம் பெற்ற விசுவாசம் மற்றும் ஆண்டவர் மேல் உள்ள நம்பிக்கையைச் சார்ந்துள்ளது. அவருடைய ஞானத்தின் மேல் உள்ள நம்பிக்கையை உணர்ந்தால், அவருடைய கட்டளைகளை முழுமையாக கடைபிடித்து நம்முடைய இருதயத்தை முழு எச்சரிப்போடு காத்துக் கொள்வோம். அவருக்கு முழுமையாக கீழ்படிவதன் மூலம் தேவனுடைய ஞானத்தின் மேல் உள்ள நம்பிக்கை மற்றும் நமக்கு தேவைப்படும் நேரங்களில் அவருடைய உதவியைப் பெறலாம். ஆகவே "உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாக இருக்கிறது" என்று எழுதியிருக்கிறது. அதாவது கீழப்படிதல் மற்றும் விசுவாசத்தை செயலாற்றுவதன் மூலம் - "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே." (ரோம 8:37)

12. ஆண்டவர் நம்மை எவ்வாறு நியாயந்தீர்க்கிறார்?

மத் 12:34 - 37"விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க, நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள்

யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்; அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்றார்."

R1937 [col.1p2,3]:

நாம் சபை என்றும், இக்காலத்தில் மாம்சத்தில் இருக்கும் நம்மை,இரண்டாம் வருகையில் வந்திருக்கும் மணவாளன் பார்வையிட்டு கொண்டிருக்கிறார் என்பதையும் (மத் 22:11) உணர்ந்திருக்கிறோம். ஆகவே இந்த நியாயத்தீர்ப்பும், தெரிந்துகொள்ளுதலும், நடக்கக்கூடிய கோட்பாடுகளை நாம் மிக துல்லியமாக கவனிக்கவேண்டும்.

நம்முடைய இருதயம் மற்றும் வாயும் விசேஷித்த கவனிப்பின் கீழ் அல்லது ஆழ்ந்த சோதனையின் கீழ் வைக்கப்பட்டிருப்பதை நம்முடையஆண்டவரின் வார்த்தைகள் குறிப்பிடுகிறது. இருதயத்தின் சோதனை தனிப்பட்ட குணங்களையும், வாயின் வார்த்தைகள் அந்த குணங்களின் முன்னுரையை குறிப்பிடப்பட்டுள்ளது. -" எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும். வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி, உதடுகளின் மாறுபாட்டை உனக்குத் தூரப்படுத்து." (நீதி 4:23,24) சரியான வார்த்தைகள் வெளிப்படுத்த சரியான மனநிலை தேவைப்படுகிறது என்ற காரியம் தெளிவாக குறிப்பிடப்படுகிறது. ஏனெனில், ஒவ்வொரு மனுஷனின் அனுபவத்தின்படியும் இருதயத்தின் நிறைவால் வாய் பேசும்" என்று எழுதியிருக்கிறது. ஆகவே நம்முடைய ஆண்டவரின் எதிர்பார்ப்புக்கு தக்கதாக, நம்முடைய வார்த்தைகள் நியாயத்தீர்ப்பின் கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு இருக்கவேண்டும். தேன் தடவப்பட்ட வார்த்தைகள் வஞ்சகத்திற்கு போடப்படும் முகமூடியாக இருக்கிறது, என்றும் சுயநலமான காரியங்களுக்கு தேவையான மாற்றங்கள் ஏற்படும்போது அந்த முகமூடிகள் வெகு சீக்கிரத்தில் கழன்றுவிடும் என்றும் நம்முடைய ஆண்டவர் குறிப்பிடுகிறார். நம்முடைய முழு வாழ்க்கையிலும் செயல்படுத்தப்படும் நடத்தை நம்முடைய இருதயத்தின் உண்மையான காரியங்களின் முன்னுரையாக இருக்கிறது.

13. நாம் ஏதாகிலும் கெடுதல் உண்டாக்கும் வார்த்தைகளுக்காக நித்தமும் தேவனிடத்தில் ஏன் கணக்குக் கொடுக்கவேண்டும்?

R1938 [col.1p4 throughcol.2p2]:

நாம் அபூரணமாக இருப்பதால் வார்த்தையிலும், கிரியைகளிலும் பூரணமாக இருக்க இயலாது. நாம் எவ்வளவு கடுமையாக முயற்சித்தாலும் நம்முடைய திறமையான வார்த்தைகளும் விசுவாசமான முயற்சிகள் கண்காணிப்போடு காரியங்களை நடத்தினாலும், வார்த்தையிலும், செயலிலும் குற்றங்கள் ஏற்படுகிறது. ஆனால் கேடுண்டாக்கக்கூடிய ஒவ்வொரு வார்த்தைக்கு நம்முடைய நியாயத்தீர்பபின் நாளில் கணக்குக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனின் அன்றாடக் கடமையின்படி நம்முடைய அன்றாட வாழ்க்கையை ஆழ்ந்து சோதிக்கையில் தேவனை கனவீனப்படுத்திய வார்த்தைகளை நாம் நினைவில் கொண்டவர்களாக " என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." (1யோவா2:1) நமக்காக பரிந்துபேசுபவர் மூலமாக கிருபாசனத்திற்குச் சென்று நம்முடைய தப்பிதங்களை உணர்ந்ததை விவரித்து, தேவனுடைய நாமத்தையும், அவருடைய பரிசுத்தமான செயல்களையும் கனப்படுத்துவதற்குத் தவறியதால் அடையும் மனம் வருந்துதலை அவரிடம் அறிக்கையிட்டு அந்த பாவங்களை அவருடைய கிருபையின் மூலமாக கிறிஸ்துவின் வழியாகவும் மனத்தாழ்மையோடு, கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தில் நம்முடைய நம்பிக்கையும், விசுவாசத்தையம் நிலைப்படுத்திக்கொண்டு பாவமன்னிப்பை கேட்கவேண்டும்.

இப்படியாக நம்முடைய ஒவ்வொரு தகாத வார்த்தைகளுக்கும் கணக்கு கொடுக்க வேண்டும். மேலும் நம்முடைய மனம் வருந்துதலை வார்த்தைகளினாலும் விசுவாசத்தினால் கிறிஸ்துவின் மூலம் பெற்ற நன்மைகளையும் மன்னிப்பை பெற்றுக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் தேவனை மகிமைப்படுத்த தவறின

தகாத வார்த்தைகள் நமக்கு எதிராக நின்று நம்மேல் குற்றம் சாட்டும், அதற்கேற்ற பலனை நாம் கட்டாயமாக அனுபவிக்கவேண்டியதாகும். இதில் முதலில் நம்மை நாம் படுக்காயப்படுத்திகொண்டு, ஒவ்வொரு வார்த்தைகளும் நம்முடைய தேவையற்ற குணங்களை உறுதிப்படுத்தி கொண்டு, அநீதியின் வழியில் நம்மை சாய்த்துவிடும். அடுத்து மற்றவர்களுக்கு இது ஒரு மோசமான எடுத்துக்காட்டாகும், அவர்களுக்குள்ளும் இந்தத் தீமையான காரியங்கள் நுழையத்துவங்கும். " மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்." (நீதி 15:1) இப்படியாக, ஞானமற்ற அல்லது இரக்கமற்ற வார்த்தைகளை நாம் கேட்பதன் விளைவாக, நமக்குள் அநேக கஷ்டங்களை உருவாக்கி, சுய கட்டுப்பாடு, மற்றவர்களை பற்றின இரக்கம் பரிவு உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய நீதியுள்ள பாடங்களை நாம் கற்றுக்கொள்வோம். பொதுவாக எல்லா காரியங்களிலும் தங்களுடைய சொந்த தவறுகளினால் ஏற்படும் சோதனைகளை ஆண்டவரை (அல்லது சாத்தான்) குற்றம் சாட்டுவது வழக்கமாக இருக்கிறது. மேலும் உபத்திரவங்களின் காரணத்தை கண்டுபிடிக்க தவறினவர்கள் (தங்களுக்குள்ளே) தேவனுடையவார்த்தைகளை கீழ்ப்படிவதன் மூலமும், வைராக்கியமான சுய ஒழுக்கத்தின் வழியாகவும் தாங்களே அகற்ற வேண்டிய காரியங்களை அந்தப் பிரச்சனையை அற்புதமாகத் தீர்க்கவேண்டும் என்று வீணாக ஜெபிக்கிறார்கள். "நாம் நம்மையே நியாயந்தீர்த்தால்... நாம் நியாயந்தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம். ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம்பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்." (1கொரி 11:31,32) மேலும் வரும் அனைத்து கஷடங்களுக்கும் தேவனாலோ அல்லது பிசாசினாலோ நேரடியாக ஏற்படுவதில்லை என்பதை ஒத்துக்கொள்ளவேண்டும். "அவனவன் தன் தன் இச்சையினால் இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்....." பொதுவாக எந்தப் பழியையும் மற்றவர்கள் மேல் சுமத்துவதே பழக்கமாயிற்று. நாம் பொறுமையை இழந்து, வெறுப்பான வார்த்தைகளை பேசி, தவறுகள் செய்வதற்கு வெகு எளிதாக மற்றவர்களை காரணம் காட்டிவிடுகிறோம். "என்னை போல நீதியான மனதை அனைவரும் பெற்றிருந்தால் (குடும்பம், சபை, சமுதாயம்...) வானத்திலிருக்கும் பரலோகம் இந்த பூமியின் மேல் வந்ததுபோல் தோன்றுமே...." என்ற சிந்தையில் எத்தனை பேர் தங்களையே வஞ்சித்துக்கொண்டு தங்களை ஊக்குவித்து கொள்கிறார்களோ என்று தெரியவில்லை. அருமையானவர்களே நம்மை நாம் சோதித்துப் பார்க்கலாம். தாழ்மையாக இருக்கலாம். நம்மை நியாயந்தீர்க்கும் நம்முடைய இருயத்தில் சிந்திக்கக்கூடிய சுய திருப்தி மற்றும் சுய புகழ்ச்சிக்குரிய வார்த்தைகளை குறைத்துக்கொள்வோம். "உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. திரும்பக் கொடுப்பார்களென்று நம்பி நீங்கள் கடன்கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன? திரும்பத் தங்களுக்குக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன்கொடுக்கிறார்களே. உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே. ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள். மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்." (லூக் 6:33-38) நீடிய பொறுமையோடிருந்து, நன்மைக்காக துன்பப்படுவதையே, தேவனுக்கு சுகந்த வாசனையான பலியாக அவர் அங்கீகரித்துக்கொள்வார். "ஏனெனில், தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால், அதுவே பிரீதியாயிருக்கும். நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள்

அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்." (1பேது 2:19-21) ஆகவே அன்பார்ந்தவர்களே நாம் நீதிக்காக மட்டுமே துன்பப்பட்டு, அதற்காக நம்முடைய தேவனையோ, அயலகத்தாரையோ, பழிசொல்லாமல், அதன் விளைவாக நாம் பெற்ற அனுபவங்களும் அதனால் நாம் பெறும் நல்ல குணங்களையும் பழக்கப்படுத்திக்கொள்ளவேண்டும்.

"நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்." (யாக் 3:2) ஆனால் அப்படிப்பட்ட ஒரு மனுஷன் ஒருவரும் இல்லை. நமக்காக பரிந்துபேசுகிறவரும், நம்முடைய இரட்சகரின் நன்மைகளுக்காக நாம் அனைவரும் நித்தமும் தொடர்ந்து மன்றாடவேண்டும். இதை செய்து கொண்டு நம்முடைய அனைத்து நினைவுகளையும் கிறிஸ்துவின் சிந்தைக்கு அடிமைப்படுத்தினால், தேவபக்தியோடு பரிபூரணமான பரிசுத்தத்தில் வளர்ச்சி அடையவேண்டும்.

இந்த உண்மையை காணும்போது, தேவ ஜனங்கள் யாவரும் இவைகளை நன்கு உணர்ந்துகொள்ள முயற்சிப்பார்கள் என்று நம்புகிறோம். அதாவது நாம் இப்போது நியாயத்தீர்ப்புக்கு முன் நின்று கொண்டிருக்கிறோம். இதைக் குறித்த பேதுருவின் வார்த்தைகளுக்கு செவி சாய்ப்போம். "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (11பேது 3:12) தேவ சாயலை அணிவோர் எந்த விதமான துன்பம் கொடுக்கக்கூடிய வீண்பேச்சுக்களையும், அசுத்தமான அல்லது பரிசுத்தமில்லாத சம்பாஷணைகளையும், கலகத்திற்குரிய வார்த்தைகளையும் பேசமாட்டார்கள். கிறிஸ்துவின் நாமத்தில் உண்மையாகவும், உத்தமமாக இருப்பவர்கள் இவைகளை தூரமாக களைய வேண்டும். நாம் நித்தமும் தேவனிடத்தில் நம்முடைய கணக்கை முடிக்கும்போது, நாம் உச்சரிக்கும் தவறான எந்த வார்த்தைகளுக்கு மனம் வருந்தி, மன்னிப்பை பெறாமல் விட்டுவிடப்பட்டு, நம்முடைய நியாயத்தீர்ப்புக்கு முன் நின்றுவிடக்கூடாது. "நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தையே சம்பாஷணையாக பேசுங்கள்." நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான்." "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவை களெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்." (பிலி 1:27, 4:8)

ஆகவே நம்முடைய இருதயத்தில் நல்ல பொக்கிஷங்கள் இருந்தால் மட்டுமே சத்தியத்தின் வார்த்தைகளை பேசமுடியும். மேலும் நாம் மகிமைப்பட பரிசுத்த நடக்கைகளையும், சம்பாஷணைகளையும் நாம் தொடர்ந்து கடைபிடிக்கவேண்டியதாக இருக்கிறது. இதனிமித்தம் விழுந்துப்போன நிலையில் இருக்கும் நாம் தீமையான எண்ணங்களையும் கிரியைகளையும் விட்டு விலகமுடியும். "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" - பிலி 1:27, 4:8, 1பேதுரு 2:12

14. நம்முடைய இருதயங்களின் முன்னுரையான வார்த்தைகள் எவ்வாறு இருக்கிறது?

லூக்கா 6:45 "நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்."

R1922 [col.1p4]:

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் பொதுவாக, பேசப்படும் வார்த்தைகள் மற்றும் கிரியைகள் நம்முடைய இருதயத்தின் முன்னுரையாக இருக்கிறது என்று நம்முடைய ஆண்டவர் குறிப்பிடுகிறார். "நல்ல மரம் கெட்ட கனிகளை கொடுக்காது அதுபோல கெட்ட மரம் என்றுமே நல்ல கனிகளை கொடுக்காது. ஒவ்வொரு மரமும் அதன் கனிகளினால் அறியப்படும்..." அதுபோல "நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்." மத் 12:35

R1938 [col.1p1]:

நம்முடைய ஆண்டவர் சொன்ன வார்த்தைகளை நாம் மனதில் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு பயனற்ற வார்த்தைகளுக்கும் நாம் பதில் சொல்லவேண்டும். இக்காலத்து சபையின் நியாயத்தீர்ப்பின் நாட்களில் நம்முடைய வார்த்தைகள் அதிக முக்கியத்துவம் பெறுவதை நாம் காணலாம். நம்முடைய எல்லா வார்த்தைகளும் இருதயத்தின் முன்னுரையாக தேவன் ஏற்றுக்கொள்கிறார். நம்முடைய வார்த்தைகள் கலகமூட்டுவதாகவும், மரியாதை இல்லாததும், இரக்கமற்றதாகவும், அவிசுவாசமுள்ளதாகவும் அசுத்தமாக இருந்தாலும் - "இருதயத்தின் நிறைவு வாய்பேசும்" என்ற கோட்பாட்டின் கீழ் நியாயந்தீர்க்கப்படுகிறது. ஆகவே நம்முடைய அன்றாட வாழ்க்கையில நம்முடைய வார்த்தைகள் தேவனுக்குமுன் தொடர்ந்து சாட்சியாக நின்று, நம்முடைய இருதயத்தின் நிலையை எடுத்துக்காட்டும். "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" எபி 4:13 என்று நம்முடைய ஆண்டவரின் வார்த்தை காலத்திற்கேற்ற எச்சரிப்பாக இருக்கிறது. "தேவன் பரலேகத்தில் இருக்கிறார், நீங்களோ பூமியில் இருக்கிறீர்கள். ஆகையால் உங்கள் வார்த்தை சுருக்கமாக இருப்பதாக" ஆகவே உங்கள் வார்த்தைகள் தேவனுக்கு முன்பாக நிற்கபோகிறதினாலே சிந்தித்ததாகவும், ஞானமுள்ளதாகவும் இருப்பதாக, தேவையற்ற புறங்கூறுதல், கோபம், வதந்திகளைப் பேசவேண்டாம்.

15. இருதயத்தின் பரிசுத்தம் என்பதன் முக்கியத்துவம் என்ன?

R3114 [col.2p1]:

"பரிசுத்தமான இருதயம்" - பரிசுத்தமான சித்தம், நோக்கம், சிந்தை - இவை அனைத்தும் நீதியை நோக்கி செல்லும் என்பதை முக்கியத்துவப்படுத்துகிறது. திடீர் என்று ஒரு கடுமையான சோதனை வரும்போது, மாம்சத்தின் பலவீனத்தினாலே வலது பக்கம் சாய்வதா, இடது பக்கம் சாய்வதா என்று யோசிக்கும்போது, சுத்தமான இருதயம், நீதியின் பக்கம் நம்மை எளிதில் வழிநடத்தும். சுத்தமான இருதயம் நீதியையும் சத்தியத்தையும் நேசிக்கும், அநீதியை வெறுக்கும். அசுத்தமானவைகளை, விட்டு விலகும், பரிசுத்தமானவைகளை ஏற்றுக்கொள்ளும். ஒரு மனுஷனுடைய ஆடைகளில், மொழியில் மற்றும் பழக்கவழக்கங்களில் பரிசுத்தத்தை விரும்புவார்கள். இப்படிப்பட்டவர்களின் ஐக்கியத்தை மட்டுமே அந்த இருதயம் விரும்பும். "ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தை கெடுக்கும் என்று அறிந்து மற்ற எல்லாவற்றையும் புறக்கணிக்கும்.

R3604 [col.p1]:

"நம்மை நாம் நியாயந்தீர்த்துக்கொண்டால், நாம் நியாயந்தீர்க்கப்படோம்." என்று நம்முடையஆண்டவரின் வார்த்தைகளை நினைவில் கொண்டவர்களாக நம்முடைய இருதயத்தின் சிந்தையை நாம் சுய பரிசோதனை செய்து பார்க்கலாம். நாம் நம்மை நியாயந்தீர்க்காவிடில், நாம் அவருடையவர்களாக இருப்பதாலும், நாம் நம்மை அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததினாலும், நாம் தேவனால் தூய்மைப்படுத்தப்படுவோம். கள்ளம் கபடம் இல்லாத இருதயத்தில் பரிசுத்தமான வார்த்தைகள் பிறக்கும். அது உண்மையும், சுத்தமும் நல்லொழுக்கம் உள்ளதாகவும் இருக்கிறது. இந்த வார்த்தையின்படி சபையிலோ, வெளியிலோ பரிசுத்தமானவர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில்லை. ஆனால், அதை புரிந்துகொள்ளுவதற்கு நம்முடையஆண்டவர் கொடுத்த திறவு கோலாகிய - "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" - என்ற வசனத்தை கண்டு நாம் மகிழ்ச்சி அடையலாம்.

ஆகவே இந்த அழியக்கூடிய அபூரணமான நிலையில் இருக்கும் வரை, பரிபூரணமான பரிசுத்தத்தில் நிலைத்திருப்பது இயலாத காரியம். ஆனால் நமக்கு இது சாத்தியமானது. பரிசுத்தமான நோக்கத்துடன், பரிசுத்தமாக இருக்கும் இலக்கோடிருக்கும் நாம் பரிசுத்தமான இருதயத்தை பெற முடியும்.

R2250 [col.2p4]:

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனை தரிசிப்பார்கள்" பரிசுத்தமுள்ள இருதயம், சித்தம், நோக்கம் அதாவது ஒவ்வொரு வார்த்தையிலும் கிரியையிலும் முழுமையாக பரிசுத்தமாக இருப்பதற்கும்" அதற்கு விரோதமாக இருப்பதற்குரிய வித்தியாசத்தை நாம் சரியாக அறிந்துகொள்ளவேண்டும். ஏனெனில், இக்காலத்து சாதகமற்ற சூழ்நிலையில் இந்த அழியக்கூடிய சரீரங்களில் இருக்கும் வரையில் நாம் அசுத்தமாக இருப்பதால், நிச்சயமாக தேவனை தரிசிக்க முடியாது. ஆகவே இங்கு கொடுக்கப்பட்ட நிலைமை நம்முடைய இருதயத்திற்கு மட்டும் அல்ல நம்முடைய நடத்தைக்கும் பொருந்தும். "பரலோகத்திலிருக்கும் உங்கள் பிதா பூரண சற்குணராக இருப்பதுபோல நீங்களும் பூரண சற்குணராக இருங்கள்" மற்றவர்களோடு அல்ல, இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு நம்மை நாம் தொடர்ந்து அளவிட்டு பாக்கவேண்டும். ஆகவே இந்த நிலைக்கு நம்முடைய இருதயத்தின் சிந்தைகளையும், நடத்தையையும் நாம் உயர்த்திக்கொள்ளவேண்டும், ஆனால் நம்முடைய சித்தங்கள் (இருதயம்) மட்டும் சுத்திகரிக்கப்பட்டு, மறுரூபமாக்கப்பட்டு, தூய்மைப்படும் விலைமதிப்பற்ற பொக்கிஷத்தை பெற்றிருக்கும் நம்முடைய இக்காலத்து அபூரணமான இந்த மண்பாண்டம் உயிர்த்தெழுதல் வரைக்கும் எந்த மாற்றமும் பெறாது. அதற்குப் பிறகு நாம் பரிபூரணமான தெய்வீக சுபாவத்தைப் பெறுவோம், அது வரையில் இப்போது குறையுள்ள நிலையில் இருக்கும் நாம் வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தை பெறமுடியாது.

16. சுத்தமான இருதயத்தின் முக்கியத்துவம் என்ன?

1சாமு 16 :7 "கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்."

R3305 [col.2p2-5]:

நம்முடைய வார்த்தைகள் மற்றும் நடத்தையிலும் ஒவ்வொரு சிந்தையும் பாதிப்புகளை ஏற்படுத்தலாம் என்ற கோட்பாட்டில் நம்முடைய வசனப் பகுதியின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது. ஆகவே நம்முடைய சிந்தனைகளை கவனமாக கண்காணிக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். இருதயத்தின் நிறைவால் வாய் பேசும் என்று நம்முடைய இரட்சகரும் இதே காரியத்தை வேறு கோணத்தில் வெளிப்படுத்துகிறார்.

நாம் சரியான இருதயத்தை பெற்றிருப்பது மிக அவசியம். கசப்பான நீரூற்று தித்திப்பான தண்ணீரை கொடுக்காததுபோல, பாவமுள்ள கசப்பு நிறைந்த இருதயத்திலிருந்து ஆசீர்வாதமான வார்த்தைகள் வரமுடியாது. சில வேளைகளில் தேவ கிருபை பெற்ற ஜனங்களிடமிருந்து துன்மார்க்கமான ஜனங்கள் சிலவற்றை கற்றுக்கொள்வதுண்டு. ஆனால் அதை அவர்கள் ஆழமாக கொண்டிராததினால், அவர்களுக்குள் இருக்கும் கசப்புகள் வெகு சீக்கிரத்தில் வெளிப்படும்.

இக்காலத்தில், கசப்பான நீரூற்றுகள், தித்திப்பான தணணீரை கொடுக்கும் என்று கர்ததர் எதிர்பார்ப்பதில்லை. உடன்படிக்கை செய்த விசுவாசிகளின் இருதயம் மாற்றம் அடையவேண்டும் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. ஆகவே அவர்களை "பரிசுத்தவான்கள்", "தேவனுடையபுத்திரர்" கிறிஸ்துவுக்குள் சுத்திகரிக்கப்பட்டவர்கள், "ஆண்டவரின் சகோதரர்கள்" என்று ஒவ்வொரு நிருபமும் அவர்களை அழைக்கிறது. இவர்கள் தேவனுக்காக புதிய இருதயம், புதிய சித்தம் கொண்டவர்களாக தங்களுடைய ஒவ்வொரு வார்த்தையிலும், செயலிலும் சிந்தையிலும், நீதி சத்தியம் மற்றும் நன்மையான காரியங்கள் உள்ளதா என்று எப்போதும் எச்சரிப்போடு கவனித்திருப்பார்கள்.

இதற்கு இசைவான காரியங்களை அப்போஸ்தலன் இந்த வகுப்பாருக்கு சொல்ல விரும்புகிறார். நம்முடைய வெளிப்படையான செயல் பாடுகளையும் நடத்தைகளையும் நாம் ஆராய்வது நலமாக இருக்கும், ஏனெனில் நம்முடைய உள்ளார்ந்த நன்மையான எண்ணங்களை நம்முடைய செயல்களினால் சிலர் தவறாக புரிந்துகொள்வதற்கு அநேக வாய்ப்புகள் உண்டு. " உங்களுடைய நன்மைகள் தீமையாக பேசப்படுவதற்கு அனுமதியாதேயுங்கள்" நம்முடைய உதடுகள் பாவம் செய்யாதபடிக்கும் நம்முடைய வாய்க்கு காவல் வைப்பது" நல்லது. நம்முடைய வார்த்தைகள் தேவனை மகிமைப்படுத்துவதற்கும் அல்லது சகோதரர்களை போஷிப்பிக்கிறதற்கும் அல்லது உலகத்திற்கு நன்மை உண்டாக பேசவேண்டும். ஆனால் நம்முடைய கிரியைகளுக்கும் வார்த்தைகளுக்கும் சவாலாக நிற்கும் இராணுவப் படைகள் அல்லது காவலர்களின் எண்ணிக்கை, நம்முடைய சிந்தைனைகளை காவல்காக்கும் காவலர்களின் எண்ணிக்கையை விட குறைவாகவும் வலிமை குறைவாக இருக்கிறது. ஆகவே நாம் எல்லா நேரங்களிலும் கவனமாக இருக்கவேண்டும்.

R2891 [col.2p4,5]:

"சுத்தமுள்ளவைகள் எவைகளோ" - இந்த உலக முழுவதிலும் எல்லா இடங்களில், அதிகமான அசுத்தங்கள் நிறைந்திருக்கிறது. ஆகவே உடன்படிக்கை செய்த தேவனுடைய ஜனங்கள் அப்போஸ்தலனின் போதனைகளை பின்பற்றி மிக கவனமாக, அசுத்தங்களை நம்மை விட்டு அகற்றி, மீண்டுமாக அவைகள் தங்களுடைய இருதயத்திற்குள்ளும், சிந்தைக்குள்ளும் நுழையாமல், காத்துக்கொள்வது இக்காலத்தில் ஏற்றதாக இருக்கிறது. ஏனெனில் நாம் எவ்வளவு கிரியைகளை செய்தாலும். இந்த அசுத்தங்கள் நம்முடைய கிரியைகளின் பலன்களை கெடுத்துவிடும். சிந்தையிலும், சித்தத்திலும் பரிசுத்தத்தை காத்துக்கொள்பவர்கள், தங்களுடைய வார்த்தைகளையும், கிரியைகளையும் காத்துக்கொள்வது எளிதாக இருக்கும். ஓர் அசுத்தம் நமக்குள் நுழையவேண்டும் என்றால் உலகம், மாம்சம் மற்றும் பிசாசு - இம்மூன்றின் வழியாக தான் நுழையும். முதலாவது அது சிந்தையை தாக்குகிறது, அங்கு போராட்டங்கள் ஏற்பட்டால் யுத்தம் ஜெயிக்கப்பட்டது என்று அறிந்துகொள்ளலாம். ஒருவேளை எந்த விதமான போராட்டங்கள் இல்லை என்றால், அதன் முடிவு எப்படியிருக்கும் என்று சொல்லமுடியாது. "பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" யாக் 1:15

நம்முடைய சிந்தையை பரிசுத்தமாக காத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஒரு காரியம் உண்மை என்று நிரூபிக்கப்பட்டபின், அதில் எந்தவிதமான அநீதி காணப்படவில்லை என்றாலும் அது அசுத்தமாக இருந்தால், தேவனோடு உடன்படிக்கை செய்த ஜனங்களின் சிந்தைக்கு இது தகாததொன்றாகும். அல்லது இப்படிப்பட்ட மாசுகள் சிந்தையில் நுழைந்து, அதை அசுத்தப்படுத்துவதோடிராமல், அவைகளை முழுமையாக வெளியேற்றும் போதும் தொடர்ந்து சில வருடங்களும் இவைகள் கொடுக்கும் உபத்திரவங்களை தாங்கமுடியாது.

R2480 [col.2p2]:

தடுத்து நிறுத்தவேண்டிய காரியம் அல்லது தவிர்க்கவேண்டிய காரியத்தை விரும்புவதும், தீமையான காரியங்களில் முன்னேறி செல்வதாகும். இப்படிப்பட்ட காரியத்திலிருந்தும் முற்றிலுமாக விடுபடவேண்டும் என்று அப்போஸ்தலர் கண்டிக்கிறார். இவைகளை தாழ்த்தி முற்றிலுமாக அழிக்கும்படி கூறுகிறார். பலவகையான தீமைகள், பாவம் என்று நாம் அறிந்தால் மட்டும் போதாது. அதற்கு எதிராக போராடுவோம் என்று உறுதி எடுத்துக்கொள்ளுவதை காட்டிலும் தேவனால் அங்கிகரிக்கப்படாத எல்லா காரியங்களிலும் நமக்குண்டான விருப்பங்களையும், ஏக்கங்களையும் நம்முடைய இருதயத்திலிருந்து முற்றிலுமாக வேரோடு பிடிங்கிவிடவேண்டும். இப்படிப்பட்ட ஒரு காரியம் நம்முடைய இருதயத்தையும், வாழ்க்கையையும் அதிகமாக சுத்திகரிக்கும். விசேஷமாக கிறிஸ்துவின் பெயரைக் கொண்டவர்களின் சிந்தை எவ்வளவு தூய்மைப்படும். இந்தக் குறிப்பையும், அப்போஸ்தலரின் எச்சரிக்கையை கவனியாத அநேகர், தொடர்ந்து எதிராளியானவனால் சோதிக்கப்பட்டுக்கொண்டே இருப்பார்கள். ஏனெனில் வெளிப்புறமாக தேவனுக்கு விரோதமான காரியங்களை வெறுத்து, இருயத்தில் அவைகளை இரகசியமாக நேசித்தால் என்ன பிரயோஜனம் ? இப்படிப்பட்ட சூழ்நிலைகளில்

மிக குறைவான ஆவிக்குரிய வளர்ச்சி காணப்படுகிறது. ஆகவே சரியான நேரத்தில், சிறந்த பரிசை பெற அப்போஸ்தலனாகிய பவுல், சரியான நடைமுறையை நமக்குமுன் வைத்திருக்கிறார். - நம்முடைய சிந்தை, விருப்பம் இலக்கும் மற்றும் இருதயத்தின் ஆசைகள் அனைத்தும் தேவனுடைய பரிபூரணமான சித்தத்திற்குக் கீழ்படுத்தப்படவேண்டும். இப்படி நடப்போர் சுவிசேஷத்தில், நமக்குமுன் வைக்கப்பட்டிருக்கும் ஓட்டப்பந்தையத்தில் சீரான பாதையில் சரியாக ஓடுபவர்களாக இருப்பார்கள்.

17. இருதயத்தில் பரிசுத்தத்தை நாம் எவ்வாறு பெறமுடியும்?

R2734 [col.1p5] through R2735 [col.1p1]: (இந்த பாடத்தின் முடிவில் காணலாம்)

18. "நம்முடைய இருதயம் எல்லாவற்றிலும், கேடுள்ளதாக...." இருக்கும் பட்சத்தில் நம்முடைய நோக்கங்கள் பரிசுத்தமாக இருக்கிறது என்று எப்படி அறிந்துகொள்வது?

R2734[col.1p2:4]:

"இருதயத்தில் பரிசுத்தம்" என்பதில் உள்ள அர்த்தங்களை அநேகர் தவறாக புரிந்துகொள்கிறார்கள். இந்த மாம்சத்தில் இது கூடாத காரியம் என்று ஒரு வகுப்பார் கருதுகிறார்கள். வேறு சிலர் - ஒவ்வொரு வார்த்தைகளிலும், கிரியையிலும், சிந்தையிலும் பரிபூரணமான பரிசுத்தத்தில் இருக்கவேண்டும் என்று நம்பி, தாங்கள் அப்படியே இருப்பதாக நினைத்துக்கொண்டு, மற்றவர்களுக்கும் போதித்து வருகிறார்கள். இவர்கள் மிகப் பெரிய தவறைச் செய்கிறார்கள்.

தங்களுடைய சொந்த இருதயத்தின் நிலையை அறியாத இவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக, நம்முடைய ஆண்டவரின் நாட்களிலிருந்த பரிசேயர்கள் தங்களை சட்டத்தை முழுமையாக கைக்கொள்ளக்கூடிய பரிபூரணமான நீதிமான் என்று பறைசாற்றிக்கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் தங்களைத்தாங்களே வஞ்சித்துக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் அவர்களுக்கு மிக அவசியம் என்பதையும், அறியாமல், தங்களுடைய சொந்த நீதியாகிய கந்தையான வஞ்சகத்தை அணிந்துகொண்டு தங்களை ராஜ்யத்திற்கு அபாத்திரராக தீர்த்துக்கொண்டார்கள். அதே போல இந்நாளிலும், நாங்கள் வார்த்தையிலும், கிரியைகளிலும் அபூரணராக இருக்கிறோம் என்று கோருகிறவர்கள், தங்களுடைய பலவீனங்களுக்கும் ஆபூரணத்திற்கும் தவறுகளுக்கும் தாங்களே குருடாக்கப்பட்டவர்களாக தேவனுடைய பார்வையில் மிக மோசமான நிலையில் உள்ளனர். தங்களை பாவி என்று தேவனிடத்தில் தங்களை அறிக்கையிடுபவர்களைக் காட்டிலும் இவர்களின் நிலை பரிதாபமாக இருக்கிறது. ஏனெனில் தங்களை பாவிகள் என்று அறிக்கையிடுகிறவர்கள், கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட்டு தேவனுடைய பார்வையில் நீதிமானாக எண்ணப்படுகிறார்கள்.

அதேபோல, இக்காலத்தில் இருதயத்தில் தூய் மைப்படுவது கூடாத காரியம் என்று நினைப்பவர்களும் தவறாக சிந்திக்கிறார்கள். இருதயத்தில் பரிசுத்தத்திற்கும் - வார்த்தைகளிலும் கிரியைகளிலும் பரிப்பூரணமான நீதி வெளிப்படுவதற்கும் உள்ள மிக பெரிய வித்தியாசத்தை அறியாததினால், இப்படிப்பட்ட தவறான எண்ணங்கள் வருவதுண்டு. இருதயம் என்பதின் சிந்தை , அதில் உள்ள சித்தம் - உண்மையான மனிதனின் நோக்கத்தை குறிக்கும். இப்படிப்பட்ட யோசனைகளை நம்முடைய சிந்தைக்குமுன் கொண்டுவரும்போது, ஒருவருடைய இருதயம் தூய்மையாக உள்ளதா, அதில் உள்ள நோக்கங்கள் தூய்மையாக இருந்தாலும், தனக்குள் இருக்கும் நல்ல நோக்கத்திற்கு இசைவாக கிரியை செய்ய முடியாது என்று அறிக்கையிடுவதைக் காணலாம். இந்தச் சிந்தனைகளை நம்முடன் கொண்டுவந்தபின் ஒருவர் இருதயத்தில் சுத்தமுள்ளவரா அதாவது பரிசுத்தமான நோக்கம் உடையவாகளா என்று எளிதில் அறிந்துகொள்ளலாம். இருப்பினும், இந்த நல்ல எண்ணங்களைக் கடுமையான முயற்சியினாலும் செயல்படுத்த முடியவில்லை என்று அறிக்கையிடுதலையும் நாம் புரிந்துகொள்ளலாம். ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவுக்கு முன் சுத்தமான இருதயம் கொண்டவர்கள், ஒரே சிந்தை உடையவர்களாக இருப்பார்கள். அவர்களின் பரிசுத்தமான நோக்கத்தில், முதலில் தேவனுடைய சித்தத்தை செய்ய முயற்சிக்கும். ".

...பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்." யாக் 4:8 என்று அப்போஸ்தலரின் உற்சாகமான வார்த்தைகள் நமக்கு ஊக்கம் அளிக்கிறது.

19. மனசாட்சிக்கும், இருதயத்தின் பரிசுத்தத்திற்கும் உள்ள தொடர்பு என்ன?

R2735 [col.1p1]:

தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் நம்மேல் வைத்திருக்கும் அந்த தெய்வீக அன்பை நமக்குள் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்ற முக்கிய காரணத்திற்காகவே, நமக்கு எல்லா வாக்குத்தத்தங்களும் கொடுக்கப்படுள்ளது. இப்படிப்பட்ட அன்பு நமக்குள் வளர்ச்சி அடையவேண்டுமானால், அதாவது ஆண்டவர் நம்மேல் காட்டின அன்பின் அளவிலும், சாத்தானின் சுயநலத்திற்கும் அவனுடைய சட்டத்திட்டங்களுக்கு முற்றிலும் எதிராகவும் அவருடைய அன்பின் பிரமாணங்களும் வளரவேண்டும் என்றால் முதலில் சுத்த இருதயம் நமக்குள் இருக்கவேண்டும். சரியான முறையில் இப்படிப்பட்ட வளர்ச்சியடைவதற்கு நல்ல மனசாட்சி மிக அவசியம். ஏனெனில் சிலருக்கு கெட்ட மனசாட்சிகளும் உண்டு. நம்முடைய விழுந்துபோன நிலையில் இருக்கும் மற்ற அவயவங்கள் குணப்படுவதை, உயர்ந்த நிலையில் சிந்திக்கவைப்பதற்கு சில ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தவேண்டும். ஒருவருடைய மனசாட்சி மணிநேரங்களை சரியாக குறிக்கப்பட்டிருக்கும் கடிகாரத்தை போலிருக்கிறது. ஆனால் அது சரியான நேரத்தை காட்டுவதற்கு அதற்குள் இருக்கும் முக்கிய வில்விசையை (main spring) முதலில் ஒழுங்குப்படுத்தி வைக்கவேண்டும். அதாவது அந்த கடிகாரம் சரியாக ஓடுவதற்கு அதற்குள் இருக்கும் வில்விசையை சரியாக ஒழுங்குப்படுத்தப்படவேண்டும். அதேபோல தேவனுடைய வார்த்தைகளில் உள்ள அன்பின் பிரமாணத்தோடு, இசைவாக இருக்கும் புதிய இருதயத்தில் பரிசுத்தமான சித்தங்களை நாம் அனுமதித்தால் நன்மை இன்னதென்றும். தீமை இன்னதென்றும் சரியாக உணர்த்தப்படுவோம்.

20. உண்மையைச் சொல்வது தீமையானதை பேசுதல் என்று பொருள்படுமா?

R2444 [col.1p4 throuh col.2p1]:

மற்றும் சில நல்ல கிறிஸ்தவர்கள், இந்தக் கேள்வியை தவிர்த்து தாங்கள் உண்மையை மட்டுமே பேசுகிறார்கள் என்று நினைத்துக்கொண்டு, பொதுவான இந்தத் தவறுகளில் தங்களைத்தாங்களே நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். வெட்டிப்பேச்சை பேச விரும்புவோர், தங்களுடைய நியாயத்தீர்ப்பை தாங்களே திசை திருப்பி, அவர்கள் அறியாததும், அந்த விஷயத்தில் எந்த விதமான அறிவும் இல்லாமலே, அவைகளை உண்மை என்று ஏற்றுக்கொள்கிறார்கள். அல்லது அந்தக் காரியங்களை உண்மை என்று ஏற்றுக் கொண்டபின் அதைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளும் ஆர்வத்தோடு, அவர்கள் இது வரைக்கும் கேட்ட காரியங்கள் உண்மை என்று நிரூபிக்கப்படாவிட்டால், இவர்கள் பேசிய காரியங்கள் பொய்யாகிவிடும் என்று எண்ணி, அதை சரி செய்யமுயற்சிப்பார்கள். இயல்பான பெருமை கொண்ட மனது, உண்மைகளை விசுவாசிக்க மறுத்துவிட்டு, பேசின பொய்களை உண்மை என்று நிரூபிக்க முயற்சிக்கும். இப்படியாக ஒரு தீமை மற்றொரு தீமைக்கு வழி வகுக்கும்.

இருந்தபோதிலும் - "உண்மை என்று எனக்கு தெரிந்தால் மட்டுமே, நான் அதை பேசுவேன். நானே சொந்தமாக கவனித்து, என்னுடைய சொந்த அறிவின்படி அது உண்மை என்று விளங்கினால் மட்டுமே நான் அதைப்பற்றி பேசுவேன் என்று சொல்லுவார்கள். ஒரு வேளை அதைப்பற்றி நான் கேள்வி பட்டிருந்தால், நான் கேட்ட காரியத்தை மட்டும் சொல்வேன். இதை உண்மை என்று நான் அறிவிக்கமாட்டேன். இப்படியாக, நான் மற்றவர்களை பற்றி எந்தத் விதமான தீமைகளை பேசுவதில்லை என்று உறுதியளிப்பேன் என்று சிலர் சொல்லலாம். ஒழுக்ககேடுகளுக்குப் பின்னிருக்கும் நல்மனசாட்சிக்கு - உண்மையை பேசுவதே நன்மை என்றும் சத்தியத்தை பேசுவது வெட்டிபேச்சு இல்லை என்றும் தேவன் பொருள்படுத்துகிறார் என்று நல்மனசாட்சிக்கு அறிவிக்கிறது. ஆனால் வீண் பேச்சுக்களையும், தீமையாக பேசுவதும், மாம்சத்தின் கிரியையாக இருப்பதால் தவறானவைகளை பேசுவதே பாவம் என்று தேவன் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

இரு மிகப் பெரிய தவறு - ஒரு காரியம் உண்மையானாலும் சரி, பொய்யானாலும் சரி, வெட்டிப்பேச்சு -வெட்டி பேச்சுதான். இதை தேவனுடைய சட்டம் மட்டும் அல்ல நாகரீகமுள்ள மனிதனுடைய சட்டமும் இதை

வலியுறுத்துகிறது. உண்மையில், மனித சட்டத்தில் வீண் பேச்சுக்களை பேசினால் என்று வழக்கு தொடுக்கப்பட்டால், அதை உண்மை என்று நிரூபிக்கப்பட்டால், அதனால் ஏற்பட்ட மன கஷடங்களுக்கு அவர்கள் நியாயமான தண்டனைகளைச் சட்டப் பூர்வமாக பெறுவார்கள். ஆகவே மற்றொருவரை காயப்படுத்தும்படியாக அல்லது துக்கப்படுத்தும்படி பேசக்கூடிய எல்லா அவதூறான பேச்சுக்கள், புறம்கூறுதலாகவே இருக்கிறது. ஆகவே உண்மையோ, பொய்யோ, மனிதர்களை காயப்படுத்தக்கூடிய எல்லா வார்த்தைகளும் தேவனுடைய சட்டத்தில் மட்டும் அல்ல, மனிதனுடைய சட்டத்திலும் தவறு என்று ஒத்துக்கொள்ளப்படுகிறது.

21. நமக்கு தெரிந்த எல்லா காரியங்களைப்பற்றி அனைவருக்கும் கட்டாயமாக சொல்லவேண்டுமா?

R2588 [col. 1p3]: -

"ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு." மற்றும் "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்தப் புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" (தீத்து 3:2, எபே 4:29) என்ற கட்டளைகளின் ஆழத்தையும், அகலத்தையும், உயரத்தையும் பற்றி எப்போது கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்வார்கள் ? தேவனுடைய உண்மையான ஜனங்கள் இந்தக் கற்பனையை கற்றுக்கொள்ள எத்தனை நாள் செல்லும் ? உண்மையாக இருக்கும் பட்சத்திலும் அதைப் பற்றி பேசுவது தவறு என்றும் எப்போது அறிந்துகொள்வார்கள் ? மற்றவர்களுக்கு பயனற்றதாக இருக்கும் என்று எதிர்பார்க்கும் பட்சத்தில் உண்மையோடு சில காரியங்களை சேர்த்து பேசவேண்டிய அவசியம் இல்லை என்று எப்போது கற்றுக்கொள்வார்கள் ? மற்றவர்களின் பிரச்சனையில் தலையிடக்கூடாது என்றும், தேவையற்ற வெட்டிப் பேச்சுக்களை பேசக்கூடாதென்றும் மற்றவர்களை கேலி செய்யக்கூடாது என்றும், பிறரிடம் குற்றம் காணக்கூடாதென்றும் எத்தனை பாடங்களை வரிவரியாக கற்பிக்கப்படவேண்டும் ? இவை அனைத்தும் அன்பின் குறைபாடுகளையும், கிறிஸ்துவின் சாயலை தரித்திராத ஒரு நிலையை நிரூபிக்கிறது. கடும் முயற்சிகளினால், இந்த குறைகள் நிறைவாக்கினால் மட்டுமே நம்முடைய பரம அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் நாம் உறுதிப்படுத்திக்கொண்டு, பரலோக இராஜ்யத்தில் நல்லதோர் பங்கை பெறமுடியும்.

22. மனதை புண்படுத்தும் பேச்சுக்கள் –தூஷணங்களாக குறிப்பிடப்படுமா?

R3030 [col. 1p3] :

அன்பின் செயலாற்றும் - முதலில் அயலகத்தாருக்கு அவர்களின் நன்மையான காரியங்களுக்கும் ஆசிரை வருவிக்கிறது. ஆகவே "அன்பு பிறருக்கு தீங்கு நினையாது " என்று எழுதப்பட்டிருக்கிறது. தேவனோடு உடன்படிக்கை செய்த ஜனங்கள் இந்தப் பாடத்தை அன்றாட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த பழக வேண்டாமா ? ஆகையால் நம்முடைய கரங்களைவிட வல்லமையான நம்முடைய வாயின் வார்த்தைகளினால் மற்றவர்களை காயப்படுத்தாமலும், துக்கப்படுத்தாமலும் இருக்க நாம் கற்றுக்கொள்ளாமல் இருப்போமா ? அதற்குப்பின் ஒரு சகோதரனைபற்றியோ, அயலானைப் பற்றி இழிவாக பேசும் பேச்சுக்கள் அவர்களை காயப்படுத்தும் என்று அறிந்து, அதை பேசாமல் இருப்போம் அல்லவா ? ஒரு வேளை நாம் இவைகளை செய்யாவிடில், தேவனுடைய அன்பின் பிரமாணங்களையும், சட்டங்களையும் சீர்குலைப்பவர்களாக இருப்போம் அல்லவா ? நம்முடைய சகோதரர் அல்லது அயலகத்தார், அபாயமான ஒரு சூழ்நிலையில், அகப்படும்போது, அவர் மேல் வைத்த அன்பின் நிமித்தமாக நாம் சில உண்மைகளை சொல்லுவது தவறாகாது. அதற்குப் பதிலாக நாம் தப்பித்துக்கொள்வதற்கும், மற்றவர்களை குற்றவாளி என்று தீர்ப்பதற்கும், நம்மை அதிக நீதிமான்களாக காட்டிக் கொள்வதற்கும், பேசப்படும் வார்த்தைகள் (மற்றவர்களை பற்றிய உண்மைகள்) தேவனுக்கு முன் தவறாகும்.

F406 [p1]:

மனதை புண்படுத்தக்கூடிய உண்மைகள் தேவனுடைய பிரமாணங்களையும், பொன்னான சட்டங்களையும் சீர்குலைத்துவிடும் என்றால் - இன்னும் மரியாதையற்ற வார்த்தைகள் மற்றவர்கள் பெயரைக் கெடுக்கும் பேச்சுக்களை பற்றி நாம் என்ன சொல்லுவோம் ? ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் உலகத்தார் மத்தியிலும் பெயர் கிறிஸ்தவர்கள் மத்தியிலும், உண்மையான சபை ஜனங்களிடத்திலேயும் அதிகமாக காணப்படுகிறது. எந்தச் சூழ்நிலையிலும் மரியாதையற்ற வார்த்தைகள், பெயரைக் கெடுக்கும் பேச்சுக்கள் சத்தியமாக இருப்பதில்லை. "ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும்,..." இருங்கள் என்ற தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாத தேவ ஜனங்களுக்கு வெட்கத்தின் மேல் வெட்கமாம். இவர்கள் அனுபவமற்ற நிலையில், தேவனுடைய பிரமாணத்திற்கு குழந்தைகளாக இருப்பவர்கள்.

23. பொதுவாக அறிவிக்கப்பட்ட போதனைகளை பகிரங்கமாக கண்டனம் (விமர்சிப்பது) செய்வது தவறானதா? தீமையான பேச்சா?

R3045[col.2P6]: -

பொதுவாக அறிவிக்கப்பட்ட போதனைகளில் உள்ள வித்தியாசத்தை முதலில் கவனிக்கவேண்டும். தேவைப்பட்டால் பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட போதனைகளிலிருக்கும் தவறுகளை, பகிரங்கமாக கண்டனம் தெரிவிக்கவேண்டும். அதற்குப் பின் முடிவெடுக்கவேண்டிய பொறுப்புக்கள் அவரவரை சார்ந்ததாக இருக்கும். அன்பின் அடிப்படையிலும் மனத்தாழ்மையிலும் சத்தியத்தையும் சகோதரரை சேவிப்பதன் அடிப்படையில் நம்முடைய விமர்சனங்கள் இருக்கவேண்டும். எல்லாவற்றிருக்கும் மேலாக மனத்தாழ்மையில் துவங்கும் கண்டனங்கள் சரியாகவே இருக்கும் என்று நமக்கு உறுதியளிக்கிறது. இதனால் சில உண்மைகளையும் நாம் நிரூபிக்கலாம்.

24. அவதூறு பேசுதல் என்றால் என்ன?

R3595 [col.2p1]

உலகத்தின் அளவுகோலின்படி அவதூறுபேசுபவன் ஒரு திருடன் என்று - ஷேக்ஸ்பியர் எழுதியிருக்கிறார்.

R2444[col.1P5-col,2P2] : -

முதலாவதாக செய்யப்பட்ட தவறு, அடுத்துவரும் தவறை நியாயப்படுத்த முடியாது என்று தெய்வீக சட்டங்களும், மனித சட்டங்களும் ஒத்துக்கொள்கிறது. ஒரு குற்றம் புரிந்துவிட்டால், உலகபிரகாரமான நீதிமன்றங்கள் குற்றவாளிக்கு நியாயமான தண்டனைத் தீர்ப்பு அழிக்க முயற்சிப்பார்கள். ஆனால் அதே நேரத்தில், பாதிக்கப்பட்டவர்களின் கைகளினால் தண்டனைகள் அனுமதிக்கப்படுவதில்லை. முரட்டாட்டமான வார்த்தைகளினாலும், நாவைப் போல கூர்மையான ஆயுதங்களினாலும், பகையினாலும் பொறாமையினாலும் குற்றம்புரிந்தவரின் பெயரைக் கெடுப்பது போன்ற எந்தக் காரியங்களும் அனுமதிக்கப்படுவதில்லை. உண்மையில் அவதூறு பேசுகிற அநேகர் என்றுமே குற்றப்படுத்தப்படுவதில்லை. இப்படிப்பட்ட அவதூறான பேச்சுக்கள் பேசுபவர்களுக்கும் தங்களை சமுதாயத்திற்கு காலப்போக்கில் அதிகமான கேடுகளை விளைவிக்கும். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய நல்ல பெயரை தாங்களே கெடுத்துக்கொள்கிறார்கள்.

25. தவறான சாட்சி என்றால் என்ன? ஒரு வார்த்தையும் பேசாமல், மௌனமாக இருந்துகொண்டு தவறான சாட்சி பகிரக்கூடுமா?

R3045 [col.2p3,4]:

தவறான சாட்சிகள் பொய் சொல்லுவதற்கு சமமானது. ஆனால் ஒரு காரியத்தை தவறாக சொல்லும்போது அது ஆழமான பொய்யாக மாறிவிடுகிறது. நேரடியான வாக்கியமாக இருந்தாலும் சரி, மறைமுகமான வாக்கியமாக இருந்தாலும்சரி, ஒருவரிடம் தவறான காரியங்கள் அறிவிக்கப்பட்டால் பொய் பேசுவதைக்காட்டிலும் அதிக பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. உண்மையில் நாகரீகமுள்ள ஜனங்கள் மத்தியில் அவர்களின் மனசாட்சியின் உக்கிரகத்தை தணிக்க, இப்படிப்பட்ட தந்திரமான பேச்சுக்களை பேசிவிட்டு, தங்களுடைய இருதயங்களில் திருப்தியடைகிறார்கள். ஒருவர் தவறான காரியங்களை சொல்லும்போது மௌனமாய் இருந்தாலும் அல்லது

தலையை மட்டும் அசைத்தாலும், அந்தத் தவறுக்கு சாட்சியளிப்பவராக இருக்கிறார். இதற்குத் தொடர்பாக தவறான ஒரு வாக்கியம் பேசப்படுவதைக் காட்டிலும் மௌனம் சம்மதத்திற்கு அறிகுறியாக புரிந்துகொள்ளப்படும். தேவனுடைய வீட்டில் மோசேக்கு கீழுள்ள ஊழியக்காரராகிய யூதர்களுக்கு நியாயப்பிரமாணத்தில் இது ஒரு முக்கிய கற்பனையாக கொடுக்கப்பட்டிருக்க, புதிய உடன்படிக்கையின் கீழுள்ள தேவ புத்திரர்கள் எவ்வளவு முக்கியமாக கடைபிடிக்க வேண்டியதாக இருக்குமே. இந்தக் குறிப்பில் புது உடன்படிக்கையில் உள்ள அன்பின் பிரமாணம் இன்னும் ஆழமாக செயல்படும் அல்லவா ? சில குறிப்பிட்ட வார்த்தைகளை இந்தக் கற்பனை தடை செய்கிறது. ஓர் அயலானை பொறுத்தவரையில், உண்மையல்லாத காரியங்களை பேசுவது மட்டும் அல்ல, அவருடைய தரத்தை குறைக்கக்கூடிய எந்தவிதமான காரியத்தையும் அவரை பற்றி பேசுவது தவறாகும். அது உண்மையாக இருக்கும் பட்சத்திலும் அவரைப் பற்றி பேச அவசியமில்லை. ஒருவேளை மற்றவர்களை அழிவினின்று காக்கவும், சட்டத்தின்படி விடுதலை செய்யவும் அல்லது ஒருவரை எச்சரிக்கவேயன்றி இப்படிப்பட்ட உண்மைகளை நாம் எங்கும் பேசிவிடக்கூடாது. மேலும் இப்படிப்பட்டச் சூழ்நிலையில் தேவைப் பட்ட காரியங்களை மட்டுமே பேசவேண்டும். இவையனைத்தும் அன்பின் அடிப்படையில் செயல்படுத்த வேண்டும்.

அன்பின் பிரமாணத்தினால் நம்முடைய சகோதரர்களோடு நாம் ஐக்கியப்பட்டிருக்கிறோம். ஆகவே நம்முடைய முழு கவனத்தை அந்த ஐக்கியத்தின் மேல் வைக்க வேண்டும். நம்முடைய ஆண்டவரின் பாடங்களை முழுமையாக கற்றுக் கொள்வதற்கு கிறிஸ்தவர்களுக்கு சற்று கடினமாக தோன்றுகிறது. தனிப்பட்ட காரியங்கள் அல்லது பொதுக்காரியங்களிலும் ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரியைக் குறித்து குறைகள் இருந்தால் நாம் மற்றவர்களிடம் அல்ல அந்த நபரிடமே அந்தக் காரியங்களை குறித்து பேச வேண்டும்.

26. ஒரு சகோதரனாவது சகோதரியாவது தீய காரியங்களை அறிவிக்க துவங்கும் போது நாம் எப்படி நடந்து கொள்வது?

R3595 [col.p7,8]:

ஒருவர் உங்களிடம் மற்றவர்களை குறித்து தவறான செய்தியை சொல்ல துவங்கும்போது மிக அன்போடும், அதிக உறுதியோடும் உடனடியாக தடை செய்யவேண்டும். "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்." அவர்களுடைய எந்தச் செய்தியையும் நீங்கள் பகிர்ந்துகொள்ளவேண்டாம். நம் ஆண்டவரின் கற்பனைக்குக் கீழ்படியாமல், அப்படிப் பகிர்ந்து கொள்ளும் பட்சத்தில் சபைகளில் மிகப் பெரிய குழப்பத்தை உண்டுபண்ணும். ஒருவேளை அந்த நபர் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடையாத குழந்தையாய் இருந்தால் முறைப்படி அவர் வளர்வதற்கு இந்தப் பாடத்திற்கு ஏற்ற தேவனுடைய வார்த்தைகளை எடுத்துக் காட்டவேண்டும். (மத் 18:15, 1தீமோ 5:19) ஒரு வேளை இந்தச் சம்பாஷனை நேரடியாக உங்களிடம் வரலாம் உங்கள் காதுகளில் மட்டும் விழுந்தால், அந்த செய்திக்கு மறுப்பு தெரிவிக்கும் விதத்தில் உடனடியாக அந்த இடத்தில் இருந்து சென்று விடுங்கள்.

ஒரு வேளை ஆண்டவருடைய கற்பனைக்குச் செவிசாய்ப்பதற்கு அழைப்பு பெற்றும் தொடர்ந்து தவறான காரியங்களைப் பேசுவார்களானால் - "நான் உன் செய்தியை கேட்க மாட்டேன், ஒருவேளை நாம் கேட்டால் ஆண்டவரின் பிரமாணத்தை மீறக்கூடிய குற்றவாளியாவேன்." என்று சொல்லி அவரை கண்டிப்போடு எச்சரிக்க வேண்டும். மேலும் நாம் அந்தக் காரியங்களை நம்பினால், நம் ஆண்டவரின் வார்த்தைகளை மதியாத கிறிஸ்தவர்களாகி விடுவோம். ஏனெனில், ஆண்டவரின் கற்பனைகளைக் கைக் கொள்ளாதவர்கள் சகோதர ஐக்கியத்தின் மத்தியில் அவர்களுக்கு உள்ள காரியங்களை மாற்றி கூறுவதற்கு அவர்கள் தயங்குவதில்லை. ஒருவேளை நாம் இப்படிப்பட்ட சம்பாஷனைகளை கேட்டுக் கொண்டிருந்தால் இந்தப் பாவத்திற்கும், அதன் விளைவுகளுக்கும் நாமும் பங்காளிகளாவோம். இந்தக் கசப்பான வேர் நமக்குள் வளர்ச்சியடைந்தால், நாம் தேவனுடைய கிருபையை இழந்துவிடுவோம். (எபி 12:15)

27. தவறாக பேசக்கூடிய உலகத்தாரிடம் நாம் எப்படி நடந்து கொள்வது?

" கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்.அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே." (எபேசி 5:11-12)

R2444 [col.1 P1-3]:

"மதத்தின் மேல் பற்றுள்ளவர்களிடம் நாம் ஆன்மீகத்தைப் பற்றி பேசலாம், ஆனால் உலகத்தாரோடு அல்லது வேலை ஸ்தலத்தில், மதத்தின்மேல் நாட்டம் இல்லாத உலகத்தாரோடு நாம் என்ன பேசுவது? சூழ்நிலைகள் ஏற்படும் போது நாம் பேசாமல் இருந்தாலும், அவர்களின் வெட்டிப் பேச்சுக்களையும், செய்திகளையும் கேட்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட சம்பாஷனைகளில் கலந்து கொள்ளாவிட்டால் அனைவரும் என்னை ஒதுக்கி விடுவார்களே" என்று வெட்டிப் பேச்சை பேசுவதற்கு அநேகர் இப்படிப்பட்ட சாக்குபோக்கை சொல்லிவருகிறார்கள். ஆம், பரித்தவான்கள் இந்த உலகத்தாரோடு என்றுமே ஒத்துப் போக முடியாது. அவர்கள் இந்த உலகத்திலிருந்து பிரித்து எடுக்கப்பட்டதினால் அவர்கள் எங்கிருந்தாலும் தனித்தே காணப்படவேண்டும் என்று நாம் பதிலளிக்கலாம். உலகத்தார் மேலோட்டமாக மதத்தை தழுவலாம் அல்லது வாரத்தில் ஒரு நாள் ஆன்மீகத்தில் ஈடுபாட்டை காட்டலாம். ஆனால் உண்மையில் மதம் என்பது இருதயத்திலிருந்து வரக்கூடியதாயும், நம் அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு நொடியிலும் அதன் பிரதிபலிப்பு இருக்கவேண்டும். தெய்வீக கட்டளைகளை கண்டிப்பாக நாம் கடைபிடித்தோமானால், தீமையை விரும்பக் கூடிய நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பலரிடம் இருந்து உண்மையில் பிரிய வேண்டியதாய் இருக்கும். தேவனுடைய புத்திரர்களாக அவருடைய ஆவியை பெற்றவர்கள் உலகத்தாராய் இருப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

இதை புரிந்து கொண்ட நம்முடைய ஆண்டவர், உலகத்தார் செல்வது விசாலமான பாதை என்றும் சீஷர்கள் செல்வது குறுகலான பாதை என்றும் வேறுபடுத்தி காட்டினார். "நீங்கள் ஒருவரையும் தூஷிக்காமல் இருக்கவேண்டும், அவதூறு பேசாமல் இருக்கவேண்டும்" என்பது கிறிஸ்துவின் அன்பின் பிரமாணத்திற்கு கட்டுப்பட்டது, புது சிருஷ்டிகளாக இருப்பதினால் விருந்தாளிகளையும், அயலகத்தாரையும், நண்பர்களையும் உங்களால் உபசரிக்க முடியாமல் போய்விடலாம். அப்பொழுது நீங்கள் மகிழ்ந்து களிகூறலாம். ஏனெனில் கிறிஸ்துவின் நிமித்தம் நீங்கள் சின்ன சின்ன பாடுகளை அனுபவிப்பதற்கு வாய்ப்புகள் கிடைத்திருக்கிறது. முதலில் நாம் அடையக்கூடிய நஷ்டம் மிகப் பெரிதாக தோன்றலாம். ஆனால் நம்முடைய வரக்கூடிய மகிமைக்கு ஒப்பிட்டு பார்க்கும்போது இந்த பாடுகள் மிகக் குறைவானதாகவே இருக்கும். (பிலி 3:7,8 11கொரி 4:7)

நமக்கு நேரிடும் சகலமும் நம்முடைய நன்மைக்காக ஏற்படுகிறது என்று நம் ஆண்டவர் வாக்களித்ததினால் நாம் மகிழ்ந்து களிகூறலாம். புது சிந்தையில் நடக்க வேண்டும் என்று விரும்பக்கூடிய ஒருவர் உலகத்தாரின் சிந்தையோடு இசைந்து நடப்பது ஆவிக்குரிய மனிதனின் வளர்ச்சிக்கு பாதிப்புகளை ஏற்படுத்தலாம். ஆகவே இப்படிப்பட்ட உலக சிநேகிதத்தை நம்மை விட்டு விலக்குவது நம்முடைய ஆவிக்குரிய சிந்தையை, வளர்த்து நம் ஆண்டவரோடும் அவர் வார்த்தைகளோடும் மிக நெருங்கிய ஐக்கியத்தை கொடுக்கும். இப்படிச் செய்வதினால் கிறிஸ்துவின் உண்மையான சரீர அங்கங்களோடு நாம் தொடர்பு கொள்ளவது எளிதாயிருக்கும். இந்தக் காரியங்களை அடிப்படையாக கொண்டு "உலக சிநேகம், தேவனுக்கு முன்பாக பகை" என்று யாக்கோபு கூறுகிறார். (யாக் 4:4) இந்த ஒரு காரியத்தை தம்முடைய ஜனங்கள் தம்முடைய முழு விருப்பத்தின்படி குறுகலான வாசலில் பிரவேசிக்க விரும்ப வேண்டும் என்று எதிர்ப்பார்த்து ஒவ்வொருவருக்கும் ஏற்ற சூழ்நிலைகளை தேவன் அமைத்து தருகிறார். ஒன்று அவர்கள் தெய்வீக உறவையும், ஐக்கியத்தையும் இழக்கவேண்டும் அல்லது உலகத்திற்குரிய நண்பர்களையும் ஐக்கியத்தையும் இழக்கவேண்டும். தேவன் விரும்பும் காரியங்களை இந்த உலகம் வெறுப்பதினாலும் இந்த உலகத்தின் தீமையான பேச்சுக்களையும், சிந்தைகளையும், கிரியையும் அன்பையும், தேவனுடைய பார்வையில் அருவருக்கப்படுவதாக இருப்பதாலும், இப்படிப்பட்ட தீய பழக்க வழக்கங்களை விரும்புவதாலும், அநேகர் தேவனுடைய ஐக்கியத்தை தொலைத்து விடுகிறார்கள். அவருடைய ஆவியையும் இழந்து விடுகிறார்கள். "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல." (ரோமர் 8:9)

R2967 [col.1p3]:

நம்மிடம் பொதுவாக காணப்படும் இப்படிப்பட்ட குறைவான நிலையிலிருந்து (சிந்தை, வார்த்தை, கிரியைகள்) நாம் உயரவேண்டும். ஏனெனில், தேவனுடைய பிள்ளைகளாக இருக்கும் நாம், அவருடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதால், இந்த உலக காரியங்களோடு எந்த ஐக்கியமும் வைத்துக் கொள்ளமுடியாது. அப்போஸ்தலர் சொல்லுகிறபடி இவைகள் "இருளின் கனியற்ற கிரியைகள்" என்று நாம் விட்டுவிடவேண்டும். கனியற்ற நிலை என்பது அழிவுக்குரிய பாவ நிலை என்று அப்போஸ்தலர் தெளிவாக நமக்கு கூறுகிறார். இது மரணத்திற்கு வழிவகுக்கும். இதற்கு எதிராக, கிறிஸ்துவின் சிந்தை, கனி கொடுக்கக்கூடியதாகவும், அதில் வளர்ச்சி அடைவதும், ஆசீர்பெற்று, உயர்நிலைக்கு நம்மை வழிநடத்தும். தனிப்பட்ட கிறிஸ்தவர்களை மட்டும் அல்ல, நம்முடைய ஆண்டவர் சொல்லியபடி அவரை சார்ந்த மற்றவர்களும் அதனால் பயன் அடைகிறார்கள். உண்மையுள்ள கிறிஸ்தவன் எப்படிப்பட்ட இருளான பாவத்திலும் ஒளிவீசக்கூடியவராக இருப்பார். அவர்கள் இந்தப் பூமிக்கு உப்பாக இருந்து, பூமி கொட்டுப்போகாமல் அதை பாதுகாக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். இன்றைய நாகரீகம் நிறைந்த உலகத்தில், பரிசுத்த ஆவியைப் பெற்ற தேவ ஜனங்களினால் சில ஒழுக்கங்கள் அல்லது நன்மையான காரியங்கள் நடை பெற்று வருகிறது. "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." (மத் 5:16) நாம் வாழும் அனுதின வாழ்க்கையில் ஜீவிக்கக்கூடிய நிரூபங்கள், நம்முடைய பாவங்களை உணர்த்தி எச்சரிக்கிறது. இது சரியானதாக இருப்பினும், நம்முடைய கடமையாக இருக்கிறது. நாம் இருளுக்கு விரோதமாக செயல்பட்டாலும், தெய்வீக ஒளிக்குள் பிரவேசித்து, சத்தியத்திற்கு சாட்சி பகிர்ந்து, பரிசுத்த ஆவியை வெளிப்படுத்தி பாவங்களை துணிந்து தகர்த்து எறியலாம்.

R2406 [col.2p5]:

தேவனுக்கு பயந்து அவருடைய நாமத்தை கனப்படுத்தி அவருடைய வார்த்தைகளை தியானித்து அவருடைய மாதிரியை பிரதிபலித்து தெய்வீக வழிநடத்துதலுக்குத் தங்களை உட்படுத்தி, ஜீவிப்பவர்களுக்கு மத்தியில் எந்த விதமான பகையும், பொறாமையும், மாம்சத்தின் கிரியைகளும் வேலை செய்யவாய்ப்பு கிடைப்பதில்லை. ஆகவே மேல் கூறப்பட்டுள்ள காரியங்களை நாம் செய்தால், சகலவிதமான தீய பேச்சுக்களும் கிரியைகளும் மறைந்துபோய்விடும். மாம்சத்தின் எந்தக் கிரியையும் தேவனிடமிருந்து அல்ல சாத்தானிடமிருந்தே வருகிறது என்று இவர்கள் எளிதில் அறிந்துகொண்டு மற்றவர்களுக்கும் அன்போடு எடுத்துக்காட்டலாம். அல்லது இப்படிப்பட்ட சம்பாஷனைகளை உடனடியாக தவிர்த்து நம்முடைய அதிருப்தியை தெரிவிக்கலாம். அதற்குப் பின் அப்படிப்பட்டவர்களின் கூட்டங்களையும் தவிர்க்கலாம். அதற்குப் பின் நம்முடைய சொந்த வார்த்தைகளையும் நடத்தைகளையும், கவனித்து, "இருளிலிருந்த வெளிச்சத்திற்கு வரவழைத்தவரை துதிக்கவேண்டும்."

28. உலகத்தாருக்கு விரோதமாக பேசப்படுவதைக் காட்டிலும கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரனுக்கு எதிராக பேசக்கூடிய வார்த்தைகள் மிகப்பெரிய குற்றமாக கருதப்படுமா?

T62 [p3]:

இவைகள் நம்முடைய இருதயத்தில் என்னென்ன பாடங்களை புகட்டுகிறது ? பரிசுத்த ஸ்தலத்தில் நம்முடைய பலிகள் உண்மையாக செலுத்தப்படும் வரை அல்லது பிரகாரத்தில் விசுவாச வீட்டாரின் ஐக்கியத்தில் விசுவாசத்தை காத்துக் கொள்ளும் வரை, இக்காலத்த உண்மையான பலிகளை நாம் மாசுபடுத்துவதில்லை. மேலும் நாம் இந்நிலையில் இருக்கும்பட்சத்தில் பகை, குரோதம், பொறாமை, போன்ற துர்க்குணங்களினால் நாம் குருடாக்கப்படுவதில்லை. ஆகவே, அங்கீகரிக்கப்படும் பலிகளை நம்மனக் கண்களினால் உணர முடிகிறது. இப்படியிருக்க, ஒரே பலியை ஒரே தூபபீடத்தில் பங்காளிகளாக சகோதரர்களாக ஒருமித்து செலுத்தினபின் ஒருவர் மற்றொருவரைக் குறித்து குறைபேசும் அளவுக்கு வெவ்வேறு ஆவிகளை பெற்றுவிட்டார்கள். இவர்கள் எதிராளிகள் அல்லவே. இப்படிப்பட்ட காரியங்களுக்கு உண்மையில் நாம் அஞ்ச வேண்டும். (எபி 4:1) ஏனெனில், இப்படி பேசுபவர்கள் பரிசுத்த ஸ்தலத்தை விட்டும், பிரகாரத்தை விட்டும் தேவனுடைய ஐக்கியத்தைவிட்டும், அவருடைய ஜனங்களின் தொடர்பை விட்டும் வெளியே சென்று "காரிருளுக்குள் பிரவேசித்து விடுகிறார்கள். (உலகம்) நம்மால் முடிந்த வரைக்கும் அவர்களை மீண்டும் வெளிச்சத்திற்கு அழைத்துவர முயற்சிக்க வேண்டும் (யாக் 5:20) இந்தக்

காரியங்களை செய்யும்போது தீமைக்கு பதில் தீமை செய்யாமல், பலிக்கு பலி வாங்காமல், எந்த சூழ்நிலையிலும் நாம் பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியேறாதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். விசுவாசத்தில் வளரக்கூடிய ஆசாரியர்கள் மகா பிரதான ஆசாரியனின் அடிச் சுவட்டை அவசியமாக பின்பற்ற வேண்டும். சத்ருக்களை நேசித்து தங்களை உபத்திரவபடுத்துபவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். "பாடுபடும் போது பயமுறுத்தாமலும் வையப்படும்போது திரும்பி வையாமலும் நியாயமாய் தீர்ப்பு செய்யக்கூடிய தேவனிடத்தில் தன்னை ஒப்பு கொடுத்த" நம் ஆண்டவரை போல நாம் இருக்கவேண்டும். (1பேதுரு 2:23)

R3275 [col.p4,5]:

"ஒருவரையும் அவதூறாக பேசவேண்டாம். " என்று வசனங்கள் அறிவிக்கிறது. இந்தக் காரியத்தை உண்மையான வெளிச்சத்தில் காணக்கூடிய ஒவ்வொருவரும் தேவன் பேரிலும், அவருடைய நீதிக்காகவும், பற்றி எரிகிற வைராக்கியத்தை வெளிப்படுத்துவார்கள். அந்த வைராக்கியத்தில் சகல விதமான பலவீனங்களும், பாவங்களும் விசேஷமாக நம்முடைய சொந்த மாம்சத்தில் இருக்கும் குறைகளையும் சுட்டெரித்துவிடும். ஆனால் ஒருவேளை மற்றவர்களை குறித்து குறைபேசுகையில் தேவனுக்கும், அவருடைய அன்பின் ஆவிக்கும் எதிரிடையாக செயல்படுகிறவர்களாய் இருப்போம். ஆண்டவரின் சரீர அங்கங்களைக் குறித்து நாம் குறைபேசுவது அவருடைய பார்வையில் மிகப் பெரிய தீமையாய் இருக்கும். இந்தத் தீமையை செய்பவர்கள் முதலில் தேவனுடைய இரக்கத்தை இழக்கவேண்டியதாய் இருக்கும். அதற்குப் பின் அவரைவிட்டும் அவருடைய சரீரத்தை விட்டும் வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு விடும். "

உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறக்கிறாய், உன் நாவு சற்பனையைப் பிணைக்கிறது. நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, உன் தாயின் மகனுக்கு (சாராளின் உடன்படிக்கையின் கீழ் விசுவாச வீட்டார், கிறிஸ்துவின் சகோதரர்கள்) அவதூறு உண்டாக்குகிறாய். இவைகளை நீ செய்யும்போது நான் மவுனமாயிருந்தேன், உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவு கொண்டாய்; ஆனாலும் நான் உன்னைக் கடிந்துகொண்டு, அவைகளை உன் கண்களுக்கு முன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவேன். தேவனை மறக்கிறவர்களே, இதைச் சிந்தித்துக்கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் நான் உங்களைப் பீறிப்போடுவேன், ஒருவரும் உங்களை விடுவிப்பதில்லை." (சங் 50:19-22)

29. வதந்திகள், புறம் கூறுதல், தீயப்பேச்சுகள், அவதூறு பேசுவது போன்ற காரியங்களை தவிர்ப்பதற்கும், வசனங்கள் மூலமாக சரி செய்வதற்கும் என்னென்ன வழி உண்டு?

மத் 18:15 - 17 "உன் சகோதரன் உனக்கு. விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக."

R3594 [col.2p4] throughR3595 [col.1p6]:

புறம் கூறுதல், பின்னாக பேசுவது, வெட்டிப் பேச்சு, போன்ற அனைத்து காரியங்களும் தேவனின் பிள்ளைகளுக்குக் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டிருக்கிறது. ஏனெனில் இந்தக் காரியங்கள் முழுமையாக தேவனின் அன்பின் ஆவிக்கு விரோதமானது. இவையனைத்தும் உண்மையாக இருந்தாலும் இந்தக் காரியங்களை தேவனுடைய பிள்ளைகள் தவிர்க்கவேண்டும். இவைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள மேல்கூறப்பட்ட வசனமே சிறந்த வழியாக நமக்கு காட்டப்படுகிறது. (மத் 18:15-17)

வளர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்களும் இந்தத் தெய்வீக சட்டததைத் உணராமல் தவறுகள் செய்யலாம். ஆகவே குறிப்பாக நம்முடைய ஆண்டவரின் பிரமாணங்களில் இந்தக் கட்டளை விசேஷித்ததாக

கொடுக்கப்பட்டுள்ளது. "என்னுடைய கட்டளைகளை நீங்கள் கைக்கொள்வீர்களானால், நீங்கள் எனக்கு சீஷர்களாக இருப்பீர்கள்" ஆகவே இந்த வசனத்தை பார்க்கும் போது இன்னும் அநேகர் கிறிஸ்துவின் சீஷர்களாக வளர்ச்சி அடையவில்லை என்பது தெளிவாகிறது.

புறம் கூறுதல், ஒருவர் பின்னாக பேசுவது, தவறான வதந்திகள் போன்ற காரியங்களை தடுக்கக்கூடிய இந்தச் சட்டத்தை சற்று கவனமாய் பார்ப்போம்.

முதல் பாதிக்கப்பட்ட இருவர் மட்டுமே ஒன்றுகூடி பேசவேண்டும். குற்றம் சாட்டுபவர் மற்ற நபரால் பட்டபாடுகளை அறிவிக்கும் போது, தான் நீதியுள்ளவர் என்பதை வெளிப்படுத்துகிறார். குற்றம் சாட்டின இவரை நாம் "A" என்று அழைக்கலாம். மேலும் குற்றம் சாட்டப்பட்டவரை நாம் "B" என்று அழைக்கலாம். தங்களுடைய நோக்கங்கள், தங்களை பொறுத்தவரைக்கும் சரி என்ற சிந்தனையோடு இவர்கள் இருவரும் "சகோதரர்களாக" சந்தித்து, பேச்சு வார்த்தைகளை நடத்தி, இருவரும் ஒரே முடிவுக்கு வந்தால், பிரச்சனைகள் தீர்ந்துவிடும். சமாதானம் நிலவும்.

இவர்கள் ஒத்துப்போக வில்லை என்றால், "A" தன்னுடைய சம்பாஷனைகளை அடிப்படையாகக் கொண்டு, அவதூறான காரியங்களை மற்றவர்களிடம் பேசாமலும், தன்னுடைய உற்ற நண்பரிடம் கூட "இதை ஒருவரிடம் சொல்லிவிடாதே, நான் சொன்னேன் என்று சொல்லாதே" போன்ற காரியங்களை சொல்லாமல் இருக்கலாம். இந்தக் காரியத்தை "A"மிக முக்கியமானதாக கருதினால், இந்தப் பிரச்சனையை தொடர்ந்து பேச வேண்டும் என்று விரும்பினால், அவருக்குமுன் ஒரு வழி திறக்கப்படுகிறது. இரண்டு பேர் அல்லது மூன்று பேரை "**B**"யினிடம் அழைத்துச் சென்று அவர்களோடு இந்தப் பிரச்சனைகளை கலந்தாலோசித்து, அவர்களின் பார்வையில் சரியான முடிவை அல்லது தீர்வைக் காணவேண்டும். அழைத்து செல்லக்கூடிய நபர்கள், கிறிஸ்துவ குணலட்சனங்களில் வளர்ச்சி அடைந்தவர்களாயும், நல்ல எண்ணங்கள் உள்ளவர்களும், நல்ல ஆவியை பெற்றவர்களாக இருக்கவேண்டும். இவர்கள் இருத்தரத்தாரினுடைய நியாயங்களை சீர்த்தூக்கி பார்க்கக்கூடியவர்களாக இருக்கவேண்டும். மேலும் சமாதானம் செய்ய "A"க்கு சாதகமாக தீர்ப்பு சொன்னாலும், அதை ஏற்று கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தில் "B"இருக்கவேண்டும். அனைவரையும் மேற்கொண்டு பேசுவதும், தனக்கு சாதகமாக இரண்டு மூன்று பேர்களை திரட்டிகொண்டு இவர் சார்பாக மட்டுமே பேசக்கூடியவர்களாயும், "B"க்கு விரோதமாக தீர்ப்பு சொல்லவேண்டும் என்று முன் கூட்டியே தீர்மானித்து, அங்கு கூறும் காரியங்கள் நம்முடைய ஆண்டவரின் சட்டத்திற்கும் அவருடைய ஆவிக்கும் முற்றிலும் விரோதமாக இருக்கும்.

"B"க்கு விரோதமாக தீர்ப்புச் சொல்லப்பட்டால் அவர் அதை கேட்டுக்கொள்ளவேண்டும். அவர் அவர்களுக்கு செவி கொடுக்கவேண்டும். அவர்களுடைய தீர்ப்பு நீதியுள்ளதாக இருந்தால், "B" அதை ஏற்றுகொள்ளவேண்டும் . ஒருவேளை "B"ன் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது காரியங்கள் நியாயமாக தோன்றினால், "A" தன் குற்றத்தை ஒத்துக்கொள்ளவேண்டும். மனந்திரும்புதலோடு "B" யினிடம் மன்னிப்பு கேட்கவேண்டும். இப்படி நடந்தால், இருதரப்பினரும், மற்றவர்களிடம் இந்தக் காரியத்தை குறித்து பேசவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

தீர்ப்புகள் "A"வுக்கு பாதகமாயிருந்தால், அதை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டு தன்னுடைய குற்றத்தை ஒத்துக்கொள்ளாவிட்டால், நம்முடைய ஆண்டவரின் பிரமாணங்களை மீறுபவராக இருப்பார். மற்றவர்களின் தீர்ப்பு தனக்கு விரோதமாக இருப்பதை அறிந்து, அவர்களில் ஒருவரையும் நம்பமுடியாத சூழ்நிலை வரும்போது, தனக்குள்ளிருக்கும் தற்பெருமையான எண்ணங்களை உணர்ந்து அதை அகற்ற தேவனுடைய சமூகத்தில் அமர்ந்து ஜெபிக்கவேண்டும். இந்தக் காரியத்தை பொறுத்தவரையிலும் தேவனுடைய கோட்பாடுகளையும், நீதியையும் கவனத்தோடு வாசித்து அறியவேண்டும். ஆனால் "A" இதை விட்டுவிட்டு, சபையாரிடத்திலோ, பொதுவாக இந்தக் காரியத்தைக் குறித்து எதையும் பேசக் கூடாது. ஒரு வேளை "A" அப்படிச் செய்தால், தீய ஆவியினால் ஏவப்பட்டு சத்தியத்திற்கும், அன்பின் ஆவிக்கும் விரோதமாக செயல்பட்டு தேவனுடைய ஆவிக்கு கீழ்படியாமல் இருப்பவராக காணப்படுவார்.

வந்தவர்கள் "B" க்கு எதிராக தீர்ப்பளித்து "A"க்கு சுமாராக தீர்ப்பளித்தால், பாதிக்கப்பட்ட இருவரும் சமாதானத்தோடு பிரச்சனைகளைத் தீர்க்கவேண்டும். அதற்குப் பின் மற்றவர்கள் யாரும் இதில் தலையிடவேண்டிய அவசியமில்லை.

ஒருவேளை "B" க்கு எதிராகவும், "A"க்கு சாதகமாவும் அனைவரும் ஏக மனதோடு தீர்ப்பு கூறும் பட்சத்தில், "B" அவர்களின் தீர்ப்புக்கு கவனம் செலுத்தாமல் தன்னை திருத்திகொள்ள முயற்சிக்காமல், "A"வை மீண்டும் துன்புறுத்தினால், அதற்குப் பதிலாக "A" அல்லது அங்கு வந்த நபர்களும் "B"ன் மேல் பழிச்சொல்லக்கூடாது. அதற்குப் பின் "A" இந்தக் காரியத்திற்கு தீர்வு காணவேண்டும் என்று எண்ணினால் பிரச்சனையை சபைக்குமுன் கொண்டுவரவேண்டும். சபையின் முடிவுக்கு இருவரில் ஒருவர் கட்டுபடாதபட்சத்தில் அவர்கள் மனந்திருந்தி சபையின் ஐக்கியத்தில் இணையும் வரையில் இவர்கள் ஆயக்காரனைப் போல பாவிக்கப்படவேண்டும்.

ஒருவருடைய கடமையை மற்றொருவர் ஏற்றுக்கொள்ளமுடியாது. ஒவ்வொருவரும் ஆண்டவருடைய கட்டளைக்குத் தனிப்பட்ட முறையில் கீழ்படியவேண்டும். ஒருவேளை தேவனுடைய பிரமாணங்களை மீறி சபைக்குள் பிரச்சனைகள் எழும்பும்போது, தேர்வுசெய்யப்பட்ட சபை முக்கியஸ்தர்கள் அந்தப் பிரச்சனையை கையாள வேண்டும். இவர்கள் பிரச்சனையை தீர விசாரித்து குற்றம் செய்தவர்களை எச்சரித்து, திருத்தவேண்டும்.

ஆனால் அனைத்துவிதமான கடிந்துகொள்ளுதல்களும் அன்பின் அடிப்படையில் நடப்பிக்கப்படவேண்டும். ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் பலவீனராகவும், அபூரணராகவும் இருக்கிறோம் என்பதை மறந்து விடக்கூடாது. ஒவ்வொரு விஷயத்திலும் தண்டிப்பதற்கு அல்ல, திருத்துவதற்கே முயற்சிக்க வேண்டும். நம்முடைய ஆண்டவர் மட்டுமே தண்டிப்பதற்கு அதிகாரம் பெற்றவர். மனம் வருந்தாமல், குற்றம் உணராமல் சபையின் ஐக்கியத்திலிருந்து விலகினால், பகிரங்கமாக மனம் வருந்ததுதலை வெளிப்படுத்தி ஐக்கியத்தில் ஒன்று சேரவேண்டும். நம்முடைய அன்பு, சமாதானம் சந்தோஷம் அனைத்தும் நம்முடைய ஆண்டவர் தந்ததே, ஆகையால் சீஷர்களாக இயேசுவை பின்பற்றக்கூடிய நாம் இவைகளை (அன்பு, சந்தோஷம் சமாதானம்) தவிர வேறு எந்த முறைகளை நாம் பயன்படுத்தினாலும் மற்றவர்களை காயப்படுத்திவிடும்.

இப்படியாக நம்முடைய ஆண்டவர் உண்மையான சீஷர்களை இப்படிப்பட்ட பாவங்களிலிருந்து காத்துக் கொண்டார். இல்லாவிட்டால் மாம்சத்தின் கிரியைகளும், சாத்தானின் வஞ்சகங்களும் சத்தியத்தையும், அன்பின் ஆவியின் வளர்ச்சியையும் தடுத்திருக்குமே. வதந்திகளையும், தீய பேச்சுக்களையும், அவதூறுகளையும் கேட்கக் கூடியவர்கள், அந்தத் தீமையான கிரியைகளின் பங்காளிகளாவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இவர்கள் ஆண்டவரின் கட்டளையை மீறுகிறவர்கள். எனவே இப்படிப்பட்டக் காரியங்களை தேவனுடைய உண்மையான ஜனங்கள் கேட்பதற்கு மறுக்கவேண்டும் . அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஆண்டவரின் அதிகாரப் பூர்வமான "தேவனைவிட ஞானவான்களா ? " என்ற வார்த்தைகளை எடுத்துரைக்க வேண்டும்.

30. மூப்பருக்கு எதிராக பேசப்படும் தீமையான அல்லது தவறான காரியங்களைக் குறித்து நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்?

1தீமோ 5:19 "மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு மூன்று சாட்சிகள் இல்லாமல் நீ ஏற்றுக்கொள்ளக்கூடாது."

F293 through F294 - மூப்பர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள்

அப்போஸ்தலர் தன்னுடைய வாக்கியத்தை கொண்டு இரண்டு கோட்பாடுகளை குறிப்பிடுகிறார். 1, மூப்பர்கள் சத்தியத்திற்கும் தேவபக்திக்கும் மிகுந்த வைராக்கியம் காட்டுபவர்களாக இருப்பதால் தங்களுடைய மேன்மையான குணநலன்களை கொண்டு சபையோர் அனைவராலும் முன்னதாகவே அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறார்கள். 2, சில நேரங்களில் சபையில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நபர்களை தன்னுடைய வேலைகளை செய்வதற்காக சாத்தான் பயன்படுத்தலாம். - பகை, விரோதம், பொறாமை, மூர்க்கம் போன்ற குணங்களை இவர்களை கொண்டு அவனுடைய சித்தத்தை சபையில் செயல்படுத்துவார்கள். "என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்." "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்" "வீட்டெஜமானையே

பெயல்செபூல் என்று சொன்னார்களானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா?" (மத் 10:25, யோவான் 15:18, 1யோவ 3:13) என்று நம்முடைய ஆண்டவர் இவர்களை குறித்து எச்சரிக்கிறார். விசுவாசமும், திறமையும் உள்ள சகோதரர் கிட்டத்தட்ட ஆண்டவரின் சாயலைப் பெற்றவர், மூப்பருக்குரிய ஓரளவு தகுதி பெற்றவர். இவருக்கு சாத்தான் மற்றும் சீர்கொட்ட தூதர்கள் மட்டுமே எதிரிகளாக இருப்பார்கள். அப்படிப்பட்டவரை க்கூட சாத்தான் தவறான பாதையில் வழிநடத்திவிடலாம். ஆகையால் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

இந்த காரணங்கள், எந்த ஒரு நபரும் சொல்லும் வார்த்தைகயை வைத்து மூப்பரை குற்றப்படுத்தாதபடி உறுதி செய்கின்றன, அப்படியில்லாவிடினும் அவருடைய வாழ்க்கை குற்றமற்றதாக இருக்கலாம். காதில் விழுந்த காரியம் அல்லது வதந்திகளைப் பொறுத்த வரையில், அவைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவே கூடாது, ஏனெனில் உண்மையாகவே நுகத்தை சுமக்கிற எவனும், ஆண்டவருடைய ஆட்சியை கவனத்தில் கொண்டுள்ளவனாய் இருக்கும்போது, வதந்திகளைப் பரப்ப மாட்டான். இல்லையெனில், ஆண்டவருடைய நடத்த்துதல்களை இப்படியாக உதாசினம் பண்ணுகிறவர்களின் வார்த்தையில் நம்பிக்கை வைக்கமாட்டான். முதலாவதாக, அவைகளுக்குச் செவி கொடுப்பதற்கு குற்றம் சாட்டுபவர்கள் சாட்சிகளாக இருந்தததாக கூற வேண்டும். மேலும் இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் புகார் கூறினாலும் ஏற்கெனவே வரையறுக்கப்ப பட்டதைக் காட்டிலும் மேலதிகமாக விஷயத்தை விசாரிப்பதற்கு வேறு வழி இல்லை. மூப்பருக்கு எதிராகப் புகார் கூறும் எந்த ஒரு நபரும், தனிப்பட்ட ஆலோசனையும் பயன் அளிக்காத பட்சத்தில், அவரோடு இரண்டு அல்லது மூன்று சாட்சிகளை வைத்துக் கொள்வார், அவர்கள் இவ்விதமாக பிடிவாதமான எதிர்ப்புக்கு சாட்சிகளாவார்கள். அதன் பின்னர்,இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கும்போது, தீமோத்தேயுவினால் அல்லது வேறு எவர் மூலமாகவாவது சபையினிடத்திற்கு கொண்டு வரப்படலாம்.

குற்றம் சாட்டுவதற்கு இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இருக்க வேண்டும் என்பது, எல்லா அங்கங்களையும் மதிப்பதற்கு தேவையானதாகும். உண்மையிலேயே அப்போஸ்தலர், எந்த சகோதரருக்கும் மூப்பர் எல்லா உரிமையும், சிலாக்கியத்தையும் கொடுக்க வேண்டும் என்று நினைத்தாரோ என்று யோசிப்பதற்கு இடம் இருக்கிறது. ஒரு மூப்பர் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் நன் மதிப்பைப் பெற்றவராக இருப்பதினிமித்தம், ஒரு சிறிய குற்றச் சாட்டுக்கும், அவருடைய உயர்ந்த ஸ்தானத்தினிமித்தம் விசாரிக்கப்படல் வேண்டுமா என்று ஒருவேளை சிலர் நினைக்கலாம். ஆனால், அப்போஸ்தலருடைய வார்த்தையின்படி ஒரு மூப்பருக்குக் கிடைக்க வேண்டிய தருணம் மற்றவர்களுக்குக் கிடைப்பதைப் போலவே சரிசமமாக இருக்க வேண்டும்.

இந்த சாட்சிகள் என்ற விஷயம் ஒவ்வொரு புது சிருஷ்டியின் மனதிலும் ஆழமாக பதிக்கப்பட வேண்டும். மற்றவர்கள் தங்களுக்குத் தெரியும் என்று சொல்லுவதும், அவதூறாக அவர்கள் சொல்லுவதும் கேட்க்பபடக் கூடாது. மேலும், ஏற்றக் கொள்ளப்படக் கூடாது. ஆண்டவர் கூறியுள்ளபடியே இரண்டு அல்லது மூன்று பேர், யாராவது ஒருவருக்கு எதிராக புகார்களைக் கொண்டு வருவார்களானால், புறம் பேசாமல், அவதூறு பேசாமல் , ஆனால் கட்டளையிட்டபடி சபைக்கு முன்பாக் கொண்டுவரும் போது, அந்த வேளையில் அவைகளை நம்பக்கூட வேண்டியதில்லை. ஆனால் அந்த வேளைதான் சபை செவிகொடுப்பதற்கேற்றதாகும். இரு சாராரும் வந்திருக்கும்போது அவர்கள் முன்னிலையில் கேட்க வேண்டும், அதன் பின்னர் தேவபயத்துடன் கூடிய தீர்மானத்தையும், எச்சரிப்பையும் கொடுக்க வேண்டும், அதுவும் குற்றம் செய்தவரை வெளியில் உள்ள இருளுக்குள் தள்ளாமல், அவரை மறுபடியும் நீதிக்குள்ளாக வரும்படியாக, வார்த்தைகள் கவனமானவைகளாக அவருக்கு உதவி செய்கிறவைகளாக இருக்க வேண்டும்.

F418 [p1,2]:

ஒரு தனிப்பட்ட நபர் மனகுறைப்பட்டாலும் அனைவரும் அறிந்தபடி தனிநபர் பாவம் செய்தாலும், மூப்பர்கள் தனிப்பட்ட முறையில் விசாரிக்காமல் சபைக்கு முன், இந்தக் காரியத்தை கொண்டுவந்து, விசாரணை நடத்தவேண்டும். அதேபோல மூப்பருக்கு எதிராக ஒருவர் வதந்திகளை பரப்பினால், தனிப்பட்ட முறையில் அவரை விசாரியாமல் சபையில் விசாரிக்கவேண்டும். ஒருவேளை இவர்களின் நோக்கம் நியாயமான காரணங்கள் கொண்டிருந்தாலும், ஆண்டவரின் கற்பனையை மீறுபவர்களாக இருப்பார்களே. (முதலில் ஒருவராக போய், பேசவேண்டும், திருந்தாவிட்டால் இருவர் அல்லது மூன்று பேர்களோடு போய் பேசவேண்டும்) அவதூறுசெய்யும்

நோக்கத்துடன், இந்த ச் செய்திகளை பரப்பி, ஒருவரை மட்டும் அல்ல அநேகரிடம் சென்றடைந்ததினால், இந்த காரியங்கள் சபைக்கு கொண்டுவரப்படவேண்டும்.

இப்படிப்பட்ட விஷயத்தில் குற்றம் சாட்டப்பட்ட அந்த மூப்பர், மூப்பர்களின் கூட்டத்தை கூட்டவேண்டும். அதற்குப் பின் அவர்மேல் சொல்லப்பட்டக் குற்றச்சாட்டை மறுத்து, விளக்கம் அளித்துவிட்டு குற்றம் சாட்டினவர்களை சபைக்கு முன் கொண்டு வரவேண்டும். சபையின் மூப்பர் விதித்த கற்பனைகளுக்கு எதிராக புறம்கூறி, அவருடைய நல்ல பெயரைக் கெடுத்து குற்றம் செய்திருக்கிறார்கள். சபை ஏக மனதாக தேர்ந்தெடுத்த மூப்பருக்கு விரோதமாக இவர்கள் பேசினதால், முழு சபைக்கு விரோதமாகவும் இவர்கள் குற்றம் புரிந்தவர்களாவார்கள். இப்படிப்பட்ட காரியங்கள் கண்டிக்கப்பட்டு எச்சரித்து, அவர்களின் குற்றத்தை உணர்த்தவேண்டும். இவைகளை நடத்தினபின், மூப்பர் தவறு செய்திருந்தால், முன் சொல்லியபடி அவர்களுக்கு எதிராக குற்றம் சாட்டுவதற்கு நியாயமான உரிமையைப் பெறுவார்கள்.

31. மூப்பர் தன் நாவுக்கு கடிவாளம் போடவேண்டிய அவசியம் என்ன?

யாக் 3:2 " நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக்கூடிய வனுமாயிருக்கிறான்."

R2447 [col.2 p2]:

சபையின் பொதுவான ஊழியக்காரர்கள் விசேஷமாக தங்களுடைய நாவை சரியான முறையில் பயன்படுத்தவேண்டும் - தங்களுடைய நாவை தீமைக்காகவோ, நன்மைக்காகவோ அல்லது சபையோரை ஆசீர்வதிப்பதற்காகவோ, சபிப்பதற்காகவோ ? எப்படிப்பட்ட காரியத்திற்கு பயன்படுத்தப்படுகிறது என் று நிதானிக்க வேண்டும். நம்முடைய ஆண்டவரின் சரீரத்தின் நாவாக செயல்படும் ஊழியக்காரர்கள் முழுமையாக அவருடைய ஆவியை பெற்றிருக்கவேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. இவர்களின் பேச்சுக்கள் சபையில் மட்டும் அல்ல, உலகத்தார் மத்தியிலும் கேட்கப்படுகிறது. சபையின் ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தினர்களுக்கும் கிறிஸ்துவின் நாவாக செயல்படக்கூடிய ஒவ்வொருவருக்கும் இந்தக் கோட்பாடு பொருந்தக்கூடியதாக இருக்கிறது. ஒருவர் தன்னுடைய நாவை ஞானமாகவும் அல்லது ஞானமற்ற முறையிலும், பரலோக ஞானத்திற்கும், அல்லது பூமிக்குரிய ஞானத்திற்கும் பயன்படுத்தலாம். தன் நாவினால் விசுவாசத்தை தகர்த்து, சகோதர்களின் நல்ல பெயரைக் கெடுத்து அன்பையும், நம்பிக்கையையும் தூக்கி எறியலாம். அல்லது ஆவிக்குரிய கனிகளில் வளர்ச்சி அடைவதற்கு ஏதுவாக பயன்படுத்தலாம். விழுந்துபோன சுபாவத்தின் விஷம் நிறைந்த தீமையான காரியத்தைப் பேசி, சபையாகிய முழு சரீரத்தையும் கொளுத்தி விடுவதற்கோ அல்லது தூய்மைபடுத்துவதற்கோ நாவானது பயன்படுத்தப்படுகிறது. தேவனுடைய ஜனங்கள் மத்தியில், தேவனுடைய சித்தத்தை செய்வதற்கும் நன்மையான காரியங்களை பேசுவதற்கும் தங்களுடைய நாவை தங்களின் கட்டுப்பாட்டிற்குள் வைத்தவர்கள் வெகு சிலர். ஆகவே தேவனுடைய இரக்கத்தினால் நம்முடைய நாவை தேவனுடைய சித்தத்திற்கு மட்டுமே செயல்படுத்துவோம் என்ற பிரதிக்கினையை நாம் எடுத்துக் கொண்டு வரக்கூடிய நாட்களில் நம்முடைய சரீரத்தில் மிக முக்கியமாக கருதப்படும் இந்த நாவை முழுமையான கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருளில் இருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவரும் நம்முடைய இராஜாதிராஜாவும், கர்த்தாதி கர்த்தரின் ஊழியத்திற்குக் கீழ்படுத்துவோம்.

R2157 [col.1 p1]:

சபை கூடுதல்களுக்கு மூப்பர்களை தேர்வு செய்யும் பட்சத்தில் இந்த நாவை குறித்ததான தகுதிகளை மிக முக்கியமாக கவனிக்கவேண்டும் வார்த்தையினால் மற்றவர்களை எரித்துவிடக்கூடிய நபர்களை நாம் தேர்வு செய்யாமல், சாந்தமும், அமைதியும், தங்களால் தங்கள் நாவை கடிவாளத்தால் கட்டுப்படுத்தக் கூடியவர்களையும், தேவனுடைய வார்த்தைகளை மட்டும் பேசுபவரை நாம் தேர்வு செய்யவேண்டும். இப்படிப்பட்ட நாவு, ஒருவரை குணப்படுத்தும். இல்லாவிட்டால் மற்றவர்களை காய்ப்படுத்திவிடும். தேவனுடைய வார்த்தைகள்

வல்லமையுள்ளதாயும், இருதயங்களை ஊடுருவும் அளவுக்கு கருக்குள்ளதாக இருந்தாலும், எந்த விதமான கசப்புள்ள நோக்கங்கள் இன்றி கூறப்படுகிறது. ஆகவே நாம் பேசக்கூடிய சத்தியம் முழுமையாக, அன்பின் அடிப்படையில் கூறப்படவேண்டும்.

F249 [p2]:

இவர்கள் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்பவர்களும், ஒரே மனைவி உடையவர்களாய் இருக்கவேண்டும். பிள்ளைகள் உடையவர்களாயிருந்தால், தன்னுடைய குடும்பத்தை சரியாக நடத்துபவராய் இருக்கவேண்டும். குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றகூடியவர்களாய் இருக்கவேண்டும். அப்பொழுது, சபையில் உள்ள தேவ ஜனங்களை மிகச் சரியாக நடத்தலாம். அவர் இருநாவு, உள்ளவராகவோ, வஞ்சனை பேசுபவராகவோ, சண்டையிடுபவராகவோ வாக்குவாதம் செய்கிறவராகவோ இருக்கக்கூடாது. சபைக்கு வெளியிலும் இவர் நல்ல பெயரை பெற்றவராக இருக்கவேண்டும். இந்த உலகம் பொதுவாக பரிசுத்தவான்களை மெச்சிக் கொள்வதில்லை. ஆனாலும் பரிசுாத்தவான்களின் நேர்மை, நீதி, உண்மை போன்ற குணங்களுக்கு இந்த உலகம் மெச்சிக்கொள்ளும். ஒரு சபையின் தேவைக்கேற்றபடி மூப்பர்களை தேர்வு செய்யலாம்.

32. தவறான காரியங்களை அல்லது தீமையான காரியங்களை பேசாதபடிக்கு நாம் என்னென்ன அறிவுரைகளை கேட்டுக் கொள்ளவேண்டும்?

F292[top of page]:

ஒருவரைப் பற்றி தவறாக கூறுவது நம்முடைய ஆண்டவரின் ஆவிக்கும் தேவனுடைய வார்த்தைக்கும் எதிரிடையாக காணப்படுகிறது. ஒருவரிடம் அறிவுரைகளைக் கேட்பதற்கு கூட நாம் மற்றவர்களை குறை சொல்லக்கூடாது. நம்முடைய ஆண்டவரின் அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு இதை பின்பற்ற வேண்டும். விசித்திரமான விஷயங்களில் மூப்பரிடம் சென்று ஞானமான அறிவுரை கேட்கவேண்டும்.

33. பிறர் வேலையில் சம்பந்தமில்லாமல் தலையிடுவது, மற்றும் தீமையாக பேசுவது, இவைகளுக்குள்ள சம்மந்தம் என்ன?

F583 [p1] through F586-conscientious meddling. Reproduced at the end of this section,p.355.

F403 [p1:3]:

இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும். நாம் மற்றவர்களின் காரியங்களில் தேவையில்லாமல் தலையிடும் போது அவரவரக்கு சாதகமாக அநேக வெட்டிப் பேச்சுக்களை பேசிவிடுவோம். அப்போது நம்முடைய இருதயத்திற்குள் தேவனுடைய அன்பும் இரக்கமும் குறைவானதாயும், உலக காரியங்கள் அதிகமாய் இருப்பதையும் நாம் புரிந்துகொள்ளலாம். நம்முடைய இருதயத்திற்குள் இப்படிப்பட்ட நிலை காணப்படும் பட்சத்தில், உடனடியாக கிருபாசனத்தண்டையில் சென்று தேவனுடைய ஆவி நமக்குள் நிரப்பப்பட ஜெபிக்கவேண்டும். ஏனெனில், தேவனுடைய நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களுக்கு தேவ ஆவி கொடுக்கப்படும் என்று நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. ஒருவேளை இந்த வெட்டிப் பேச்சுக்களும் மற்றவர்களை குறித்து, பேசக்கூடிய காரியங்களும் நமக்கு மகிழ்ச்சியை தந்தால் நம் இருதயத்தின் நிலை இன்னும் மோசமாகிவிடும். கசப்பான பகை, குரோதம், பொறாமை, போன்ற காரியங்கள் நிரம்பிவழிய துவங்கும். இவைகள் அனைத்தும் மாம்சத்தின் கிரியைகள் என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார்கள். (கலா 5:19-21) இந்தப் பாடத்தை பொறுத்த வரையில் "புதுசிருஷ்டி" விழித்திருந்து எச்சரிப்போடு இருக்கவேண்டும் ஏனெனில், தனக்குள் தேவனுடைய ஆவியை நிரப்பாத பட்சத்தில் தேவனுடைய நித்தியமான இராஜ்யத்திற்குள் அனுமதி பெற இயலாது.

இப்படிப்பட்ட காரியங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குள் நடத்துவதற்கு எதிராக நம்மை வழிநடத்தும். "இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து

பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை." (11பேதுரு 1:5-11) என்ற அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகிறார். "உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது." (யாக் 3:14,15) என்று யாக்கோபு கூறுகிறார். வெட்டிப்பேச்சு, கசப்பான ஆவி உடைய ஒருவரும், அன்பின் ஆவி, கிறிஸ்துவின் ஆவி மற்றும் தேவனுடைய பரிசுத்த ஆவிக்கு நேர்விரோதமாக செயல் படுகிறவர்களாக இருப்பார்கள். ஆகவே வெளிச்சத்திற்கு பதிலாக இருளையும், அபிஷேகிக்கப்பட்ட ஆவிக்கு பதிலாக சாத்தானுடைய ஆவியையும் நிரப்பி, தன்னுடைய தீச்செயல்களுக்கு மேன்மை பாராட்டி தன்னையும், மற்றவர்களையும் வஞ்சிக்கிறவராய் இருக்கலாகாது.

எல்லா நேரங்களிலும் தேவனுடைய ஜனங்கள் இப்படிப்பட்ட அசுத்தங்களினால் மாசுபட்டு குழப்பங்கள் அடைந்து வேதனை படக் கூடிய காரணத்தை அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். "வைராக்கியம் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு.."(யாக் 3:16) விழுந்துபோன மாம்ச நிலைக்கு ஒப்பிடப்படும் இந்தக் களைகள் வளர்வதற்கு அனுமதித்தால் அவைகள் வளர்ந்து, அருமையாக பூத்துக்கொண்டிருக்கும் செடிகளை அடையாளப்படுத்தும் ஆவியின் கனிகளை நெருக்கி கொன்றுபோட்டுவிடும்.

34. புறம் கூறுதலையும் வெட்டிப் பேச்சுக்களையும், வதந்திகளையும் மேற்கொள்வதற்கு தேவனுடைய தெய்வீக பிரமாணம் நமக்கு எப்படி உதவி செய்கிறது?

F407- நாம் நம்மை நியாயம் தீர்த்துக்கொள்ளவேண்டும்.

"நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்"1கொரி 11:31

மற்றவர்களை குறித்தான பிரச்சனைகளையும், வெட்டிப்பேச்சுக்களையும் பேசுபவர்களின் பலவீனத்தையும் தெய்வீக பிரமாணம் நிச்சயமாக மேற்கொள்ளும். இப்படிப்பட்ட வெட்டிப்பேச்சுகள், வதந்திகள், மற்றவர்களின் பிரச்சனைக்கான விபரம் - இவைகளை தவிர பேசுவதற்கு இந்த உலகத்திற்கு ஒன்றுமில்லையே. ஆனால் தேவனுடைய திட்டங்களும், "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" என்று "தூதர்கள் பாடின பாட்டின்" முழுமையாக நிறைவேறும் காலம் வரைக்கும், புதுசிருஷ்டிகள் இவைகளை சிந்தித்து கொண்டும், வாயினால் பேசிக்கொண்டும், மற்ற உலக காரியங்களுக்கு மௌனமாய் இருப்பதே நலமாக இருக்கும். இவைகளே, தேவன் அங்கீகரிக்கக்கூடியதும், ஆசீர்வதிக்கக்கூடியதாய் இருக்கிறது.

அப்போஸ்தலர் நாவை குறித்துப் பேசுகையில் நம்முடைய சரீரத்தில் உள்ள அவயவங்களில் இது மிகவும் வல்லமையுள்ளது என்று காட்டுகிறார். அவைகள் பேசக்கூடிய அன்பான வார்த்தைகள் என்றும் அழிவதில்லை, ஜீவனுள்ளோருக்கும், இன்னும் பிறவாதவர்களுக்கும், ஆசீர் வழங்கக்கூடியதாய் இருக்கிறது. அல்லது விஷம் நிறைந்த வார்த்தைகள் மற்றொருவரின் வாழ்க்கையை கசப்பாக்கி அவருடைய ஜீவனை கொடூரமாய் நசுக்கி விடுகிறது. ஆகவே " துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?... என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது.." (யாக் 3:8-11) என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

R3030 [col.1 p1 through col.2p1]-

இயல்பான மனுஷ சுபாவத்தை தெய்வீக சட்டத்திற்கு உட்பட்ட உண்மையான ஆவிக்கேற்ற சுபாவமாக மாற்றுவதற்கு நியாயப்பிரமாணம் முயற்சித்தது என்று அப்போஸ்தலர் விவரிக்கிறார். ஆயினும் அந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்ட சில தடைகள் "இதை செய்யாதிருப்பீர்களாக" என்று சொல்லக்கூடிய காரியங்கள் தெய்வீக சித்தத்திற்கு எதிராக மற்றவர்களை துன்பப்படுத்த கூடாது என்பதற்காக கொடுக்கப்பட்டது. தேவனுடைய வீட்டின் ஊழியக்காரர்களுக்கு இந்தப் பிரமாணங்கள் போதுமானதாக இருந்தது, ஆனால் தேவனுடைய வீட்டில் புத்திரர்கள் குடியேறின போதோ, (எபி 3:5,6) அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதினால், அன்பின் பிரமாணத்தை முழுமையாக உணர்ந்து நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் அதிகமாகவும், இன்னும் ஆழமாகவும் தேவனுடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படுகிறர்கள். "கொலைச் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக விபச்சாரம் செய்யாதிருப்பாயாக" - என்ற பிரமாணங்கள் "புது சிருஷ்டி" மட்டுமே கொண்டிருக்கும் அடிப்படையான அன்பின் பிரமாணத்திற்கு முரண்பாடாக இருக்கும்.

ஆனால் புதிய உடன்படிக்கையில் உள்ள புதிய பிரமாணமாகிய அன்பு - யூத உடன்படிக்கையை அடிப்படையாக கொண்டுள்ள நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும் மிக ஆழமாக புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. "செய்யவேண்டாம்" என்று சொல்லப்படும் பிரமாணங்கள் ஏதாகிலும் இருப்பினும் அது தேவனுடைய சட்டத்திற்கு முரண்பாடாய் இருக்குமே. ஆகவே "உங்களை நேசிப்பதுபோல பிறரையும் நேசிப்பாயாக" என்று சுருக்கமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அன்பின் பிரமாணம் அநேக அத்துமீறிய காரியங்களை தடுத்துவிடுகிறது. எடுத்துக்காட்டாக பொய் சாட்சி சொல்லாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்க "உண்மையான குற்றச்சாட்டையும்" பேசக்கூடாது என்று அன்பின் பிரமாணம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பிள்ளைகளுக்கு கூறுகிறது. அதாவது உண்மையாக இருந்தாலும் அவைகளை பேசக்கூடாது என்ற கட்டளை கொடுக்கப்படுகிறது. ஒருவேளை இப்படிப்பட்ட காரியங்களை பேசுவது நம்மேல் விழுந்த கடமையாக இருக்கும் பட்சத்தில் எந்த விதமான பகை, விரோதம், கசப்பு போன்ற காரியங்களை அடிப்படையாக கொள்ளாமல், அன்பின் அடிப்படையில் நாம் பேச வேண்டும். தேவனுடைய புத்திரர் இப்படிப்பட பிரமாணத்தை அவர்களுக்குள் மட்டுமல்லாமல் அவர்களின் நண்பர்கள் உற்றார் உறவினர் இன்னும் தங்களின் பகைவர்களுக்கும் அன்பை செயலாற்றினால் வேறெந்த குற்றங்களையும் செய்வதற்கு வாய்ப்பில்லாமல் தங்களைத்தாங்களே எல்லா விதத்திலும் மகிழ்ச்சியுடன் பலி செலுத்துபவர்களாய் இருப்பார்களே. "கூடுமானால் விசுவாச வீட்டாருக்கும் நன்மை செய்யுங்கள்" இதுவே நம்மைப் போல் பிறரையும் நேசிப்பதாகும்.

பொன்னான பிரமாணம்-அன்பு

இந்த அன்பு மற்றவர்கள் ஆசீர் பெறுவதற்கு கிரியை செய்கிறது. "அன்பு மற்றவர்களுக்கு தீங்கு நினையாது " என்பதை நிறைவேற்றுகிறது. ஆண்டவரிடத்தில் உடன்படிக்கை செய்த ஜனங்களாய் இருக்கும் நாம் அன்றாட வாழ்க்கையில் இதை பழக்கப்படுத்த முயற்சிக்காமல், நம்முடைய கரங்களினால் ஏற்படும் காயங்களை காட்டிலும் நாவினால் ஏற்படும் காயங்கள் மிக ஆழமானது என்பதை அறிந்து வார்த்தைகளை நாம் கட்டுபடுத்த பழகி, நம்முடைய வார்த்தைகளினால் ஒரு சகோதரரையாவது ஒரு அயலானையாவது காயப்படுத்தாமல் இருப்போமா ? ஒரு சகோதரனையோ, அயலானையோ குறித்து பேசும் கனவீனமான வார்த்தைகள் நிச்சயமாக அவர்களை காயப்படுத்துவதினால் தேவனுடைய அன்பின் பிரமாணத்தை (பொன்னான பிரமாணத்தை) நாம் மீறுகிறவர்களாய் இருப்போமே, ஒருவர் மற்றவரினால் பாதிக்கப்பட்டு நஷ்டமடையும் பட்சத்தில் மட்டுமே நாம் இப்படிபட்ட உண்மைகளை தேவையான அளவுக்கு அறிவிக்க வேண்டும் என்பதை நாம் கற்றுக் கொள்ளவேண்டும் ?

இப்படிப்பட்ட எச்சரிப்பை கொடுப்பதற்கு முன் நாம் பல முறை யோசித்து சீர்தூக்கிப் பார்த்து அதற்குப் பின் தேவைப் பட்டால் உண்மைகளைச் சொல்லவேண்டும். மேலும் அவர்களை குறைசொல்லுவது நம்முடைய நோக்கமாயிராமல் அவரை அழிவிலிருந்து மீட்டுக் கொள்வதற்காக நாம் சில காரியங்களை பகிர்ந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். குற்றம் புரிந்த நபர் (மத் 18:15) வசனத்தின்படி தன்னை திருத்திக் கொள்ளாத பட்சத்தில் அவரிடம் தனியே சென்று இதை குறித்துப் பேசலாம். காரியங்கள் முக்கியமாக இருக்கும் பட்சத்தில் வேரிரண்டு பேரை அழைத்துச் சென்று பேசலாம். அப்போதும் திருந்தாவிட்டால் நாம் இந்தக் காரியத்தை

மற்றவர்களிடம் பேச அனுமதிக்கப்படுவதில்லை. மாறாக, சபையில் உள்ள மூப்பர்களை அழைத்து அவர்களின் ஆலோசனையைக் கேட்கவேண்டிதாயிருக்கும்.

அன்பு பிறருக்கு தீங்கு செய்யாது மற்றும் " தீமையானதையும் எண்ணாது " என்ற வாக்கியங்களின் அர்த்தங்களை நாம் ஆழமாக கற்றுக்கொள்ளவேண்டும். ஏனெனில் நம்முடைய நாவு அல்லது கிரியை எந்தவிதமான தவறான நோக்கங்களின் அடிப்படையைக் கொண்டிராமல் தீமை செய்யும் பட்சத்தில் இப்படிப்பட்ட அன்பை செயல்படுத்துவதின் மூலம் பிரமாணத்தை நிறைவேற்றக் கூடியவர்களாய் இருப்போம். குறிக்கப்பட்டுள்ள பரிசுப் பொருளை நாம் அடைந்ததாக எண்ணிவிடமுடியாது. நாம் பொறுமையோடு நம்மை நாம் இந்தத் தெய்வீக பிரமாணத்திற்குட்படுத்தி வாழ்க்கையில் செயலாற்றினால் தேவனுடைய இராஜ்யத்தின் பங்காளிகளாக அங்கீகரிக்கப்பட்டு இன்னும் பெரிதான ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

R2688 [col.2 p2,3]:

ஆனால் இந்த அன்பின் பிரமாணம் தெய்வீக நீதியை நமக்குள் புகுத்தி அதற்கும் மேலாக தயையையும் தாராள குணத்தையும் நமக்குள் வளர்ச்சியடையச் செய்கிறது. இப்படிப்பட்ட மனநிலைகள் இருக்கும் பட்சத்தில் ஒருவருடைய இக்கட்டான காலங்களில் மனப்பூர்வமாய் உதவலாம். ஆண்டவரின் உண்மையான பரிசுத்தவான்கள் எப்படிப்பட்ட ஆவிக்குரிய குணலட்சணங்களில் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பொன்னான பிரமாணத்தின் மூலமாகவே இப்படிப்பட்ட மாற்றங்களை கொண்டுவரமுடியும். இது வாழ்க்கையின் கிரியைகளை மட்டும் பாதிக்காமல் தாங்கள் சந்திக்கக்கூடிய அனைவரிடமும் முதலில் நீதி நடப்பிக்கப்படும் அதற்குப் பின் எந்தவிமான எதிர்ப்பார்ப்புமின்றி அவர்களை காயப்படுத்தாமல் அவர்களின் தேவைக்குத் தகுந்த உதவிகள் செய்யப்படும். கூடுதலாக இந்த அன்பின் பிரமாணம் பேசப்படும் ஒவ்வொரு வார்த்தைகளிலும் காணப்படுகிறது. இந்தப் பிரமாணத்தின் கீழ் கசப்பும், கோபமும், அவதூறான வார்த்தைகளும் காணப்படுவதில்லை. இப்படிப்பட்ட வார்த்தைகளை பிறர் பயன்படுத்தக் கூடாது என்று நாம் எந்த அளவுக்கு எதிர்பார்க்கிறோம். ஆச்சரியமல்ல, கிறிஸ்துவை தரித்துக் கொண்டவர்கள் - கோபம், பகை விரோதம், பொறாமை அவதூறு, பேசும் அனைத்து வார்த்தைகளையும் களைந்து போட வேண்டுமென்று அப்போஸ்தலர் கூறுகிறார். கூடுதலாக இப்படிப்பட்ட வார்த்தைகளை களைந்துபோடுவது மட்டுமல்ல, கனிவான வார்த்தைகளையும் அன்பான கிரியைகளையும் நடப்பிப்பதற்கு இந்தப் பிரமாணம் நம்மை வழிநடத்தும். அப்போஸ்தலர் மீண்டும் கூறுவதுபோல " இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்.ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே." "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்." (கொலோ 3:8-10, 12-15)

இந்தப் பொன்னான பிரமாணம் வெளிப்புறமான கிரியைகளில் துவங்கி நம்முடைய வார்த்தைகளில் காணப்பட்டு வெகுசீக்கிரத்தில் நம் சிந்தையை வந்தடையும் நம் கிரியைகளையும் வார்த்தைகளையும் கொண்டு பிறர் நம்மை தேவனுடைய பிள்ளைகளென்று புரிந்து கொள்ளும்படியாக மற்றவர்களை குறித்து நம்முடைய சிந்தைகளும், கிரியைகளும் மிகவும் தாராளமாக தயவுள்ளதாகவும் இருக்கவேண்டும்.

35. "ஒருவரையும் தூஷிக்கவேண்டாம்" என்ற கற்பனைக்கு விதிவிலக்கான ஒரே காரியம் என்ன?

R2445 [col.1 p1]:

நம்முடைய இருதயத்தின் விருப்பம் தீமையாக இருப்பதற்கு பதிலாக மற்றவர்கள் மேல் நாம் வைத்திருக்கக்கூடிய அன்பு அதிகமாய் காணப்பட்டு அவர்கள் நஷ்டமடையாதபடிக்கும், காயப்படாதபடிக்கும் உண்மையான தீய காரியங்களை அறிவிப்பதற்கு அனுமதி பெறுகிறோம். இதுவே இந்தப் பிரமாணத்தின் ஒரே விதிவிலக்கான காரணம். ஏனெனில் நாம் இதை அறிவிக்காத பட்சத்தில் மற்றவர் நஷ்டமடைந்து விடுவாரே. எடுத்துக்காட்டாக ஒரு கொலை நடந்துவிட்டால் அதை குறித்து பேசிக்கொண்டிருப்பதை காட்டிலும் சட்டத்திற்குட்பட்ட மேலதிகாரியிடம் அந்த உண்மையை அறிவிப்பது கடமையாக இருக்கும். அதேபோல ஒருவரிடம் இருக்கக்கூடிய பலவீனங்களை நாமறிந்தால், அந்தப் பலவீனத்தினால் ஓர் அபாய நிலையை அடைந்து கொண்டிருக்கிறார்கள், என்பதை நாம் உணரும்போது அதை முறைப்படி அறிவிப்பது நம்முடைய கடமையாகும். சபைக்காவது சரி அல்லது தனிப்பட்ட நபருக்காவது நாம் அறிந்த உண்மைகளை மட்டுமே அறிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட காரியங்களை பேசுவது அவதூறாயிராது. மாறாக சம்மந்தப்பட்ட நபரை வீழ்ச்சியிலிருந்து தப்புவிக்கும். ஏனெனில் இது நல்ல நோக்கத்துடன் பேசப்பட்டது. இப்படிப்பட்ட காரியங்களை பேசுவதற்கு முன் நம்மை நாம் சீர்த்தூக்கி , ஆராய்ந்து பார்க்கவேண்டும் நம்முடைய நோக்கம் சரியானதா ? நம்முடைய நாவு மற்றவர்களை காயப்படுத்த பயன்படுகிறதா ? அல்லது ஆசீர்வதிக்கப் பயன்படுகிறதா என்பதை நமக்குள் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். இதன் மத்தியில் பலவீனப்பட்ட நபரிடம் மிகுந்த அன்பை காட்டி அவர்களை மீண்டும் சத்தியத்தின் பாதையில் நடத்த முயற்சிக்கவேண்டும் அவர்களின் தவறை ஓயாமல் சுட்டிக் காட்டுவதை தவிர்க்கவேண்டும். அந்தப் பிரச்சனைக்கு தேவைப்படாத அந்த நபரின் பலவீனத்தை எதற்கும் மேற்கோள் காட்டிவிட கூடாது.

36. இயேசுவின் மாதிரியில் நாம் பெறக்கூடிய ஊக்கமான, உபதேசங்கள் என்ன?

1பேது 2:23"அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்."

R2879 [col.2 p1,2]:

பொதுவாக (மாம்சத்திலிருக்கும்) சண்டை போடும் குணமுள்ளவர்கள் எப்போதும் பழிவாங்கும் உணர்வில் இருப்பார்கள். ஆனால் நம்முடைய ஆண்டவரிடமிருந்து சுயக்கட்டுப்பாட்டையும், சாந்தத்தையும் சகோதர அன்பையும் தயவும், கற்று கொண்டவர்கள் "தீமைக்கு பதிலாக தீமை செய்யாமலும், வையப்படும்போது பதில் வையாமலும்" என்ற கற்பனையை நிறைவேற்ற ஆயத்தமாய் இருப்பார்கள். நம்முடைய ஆண்டவரை பார்க்கும்போது அவருக்கு ஏற்பட்ட காரியங்களின் விதத்தை நாம் பார்க்கலாம். "அவர் வையப்படும்போது பதில் வையாமலும்", அவருடைய எதிராளிகள் அவர்மேல் எந்தவிதமான குற்றத்தையும் நீதியாக கண்டுபிடிக்கவில்லை. மேலும் அவருடைய எதிராளிகள் அவரை குற்றம்சாட்டும் அளவுக்கு எந்த விதத்திலும் பூரணப்பட்டவர்களல்ல. அவர் தன்னை முழுமையாக தெய்வீக சித்தத்திற்கு ஒப்புகொடுத்ததின் நிமித்தம் அந்த ஜனங்களின் தவறான ஏச்சுப் பேச்சுக்களையும், தூஷணங்களையும் அவர் பொறுமையாய் சகித்துக் கொண்டார். "இதற்காகவே நான் வந்தேன்" என்பதை நினைவில் கொண்டு, அந்தக் காரியங்களை பொறுமையாய் சகித்து, தன்னுடைய முழு விசுவாசத்தை நிரூபித்து, அவருடைய உண்மையான சாயலை செயலாற்ற இந்த ஜனங்களின் அறியாமைக்காக அவர் கொண்டிருந்த இரக்கத்தையும், உணர்வுகளையும், அன்பையும் பூரணமாக வெளிப்படுத்தினார்.

கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சியடையக்கூடிய நாமும் இப்படிப்பட்ட வளர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும். நாமும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் அகப்படும்போது பழிக்குப் பழி வாங்காமல், அனைத்தையும் சகித்து, மகிழ்ச்சியுடனும் சந்தோஷத்தோடும் சோதனைகளையும், பிரச்சனைகளையும் எதிர் கொண்டு ஜெயிக்கவேண்டும். ஏனெனில் சகல காரியங்களும் நித்தியமான கன மகிமைக்காக இக்காலத்தில் நமக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று அப்போஸ்தலரின் அறிவுரைகளை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இங்கு பேதுருவின் வாக்கியத்திற்கும் நம் ஆண்டவர் பேசின வசனங்களுக்குமுள்ள இசைவை நாம் காணலாம் . (பிலி 3:8, 11கொரி 4:17, மத் 5:44, ரோமர் 12:14) ஆகவே சாபத்திற்கு பதிலாக ஆசீர்வாதத்தை கூறவேண்டுமென்று அப்போஸ்தலர் கூறுகிறார். இந்தப் பந்தயத்திற்கு முடிவானதும் பூரண அன்பை குறிக்கக்கூடியதும் பகைவரை

நேசித்து, அவர்களை ஆசீர்வதிப்பதற்கு மனப்பூர்வமாக ஆயத்தப்பட்டு இருளிலிருந்து அவர்களை வெளியேற்றும் அளவுக்கு நாம் அந்த உயர்வான ஸ்தானத்தை பெறாவிட்டால் நாம் தெய்வீக திட்டத்தோடு இசைந்திருக்க மாட்டோம். இப்படிப்பட்ட நிலை நமக்குள் காணப்பட்டால் சோர்வடைய வேண்டாம். நம்மால் முடிந்த வரையில் இந்தப் பரிபூரணமான நிலையை அடைவதற்கு எல்லா வழிகளிலும் நித்தமும் முயற்சிக்கலாம். வெகுசீக்கிரத்தில் இந்த நிலையை அடையும்போது "நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்." என்று அப்போஸ்தலர் குறிப்பிடுவதுபோல நாம் நித்தியமான ஆசீர்வாதத்தை சுதந்தரித்து கொள்ளலாம்.

மன்னா டிசம்பர் 7: **"அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.** "(1பேதுரு 2:23)

இயேசுவின் எதிராளிகள் அவர் மேல் நியாயமான குற்றங்களை கண்டுபிடித்துவிட்டு, அதை நிரூபித்ததினால் அவரை திட்டவில்லை. அல்லது அவருடைய எதிராளிகள் ஒரு பூரண நிலையில் இருந்ததினால் இயேசுவினால் எந்தவிதமான குற்றத்தை காணமுடியாததினால் அவர் மௌனமாக இருக்கவில்லை. தெய்வீக சித்தத்திற்கு அவர் தம்மை முழுமையாக அர்ப்பணித்ததினால், அபூரணமான ஜனங்கள் தன்னை திட்டும்போதும், தூற்றும்போது அவர் பொறுமையாக இருந்தார். இதனிமித்தம் அவர் அநேக பாடங்களை கற்றுக்கொண்டு, தனக்குள் இருந்த விசுவாசத்தையும், உண்மையான குணங்களையும் நிரூபித்தார். இந்த ஜனங்கள் தங்களுடைய அறியாமையிலும், குருட்டாட்டத்தினாலும் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்று நன்கு உணர்ந்திருந்தார். ஆகையால், அவர்கள் மேல் அவர் கொண்டிருந்த அன்பு மிகப் பெரியது என்பதை அவர் வெளிப்படுத்தினார்.

R3091 [col.2 p2]:

தீமையான செய்தியை கொண்டுவந்த பத்து வேவுக்காரர்களைப் பற்றி யோசுவாவுடன் இருந்த காலேபின் தாராளமான வார்த்தைகள் குறிப்பிடப்படுவதற்கு மனரம்மியமாக இருக்கிறது. இவர்களை பற்றி குறைவாக பேசுவதற்கு எவ்வளவு வாய்ப்புகள் இருந்தாலும், தன்னைக் குறித்து மேன்மையாக எண்ணுவதற்கும், யோசுவாவிடம் தன்னை மேன்மையாக காட்டுவதற்கும், அருமையான சூழ்நிலை அமைந்திருந்தாலும், அவர் அப்படிச் செய்யாமல், மிக மேலோட்டமாக அந்தப் பத்து பேரின் தவறுகளை சொல்லி, அதனால் அவர்களை காயப்படுத்தாமலும், கோபமூட்டாமலும், "என் சகோதரர்களே" என்று பாசத்துடன் அழைத்தார். ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கும் இப்படிப்பட்ட மன நிலை காணப்படவேண்டும். ஏனெனில் நாம் ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டு, அந்த அபிஷேகத்தின் வழியாக "தேவனுடைய ஆழமான காரியங்களை" அறிந்தவர்களாக இருக்கிறோம். மாம்சத்திற்குரிய இஸ்ரயேலர்களைக் காட்டிலும் மேன்மையான பங்கை நாம் பெறவிருக்கிறோம். ஆகவே, புதிய ஜீவனைப் பெற்று ஆவியின் கனிகளில் வளர்ச்சி அடையும் ஒருவர் தன் சகோதரருக்கு விரோதமான தீமைகளை பேசக் கேட்கும் போது "தீமைக்கு பதிலாக. ..... தீமை செய்யாதிருங்கள்" என்ற கர்த்தருடைய வார்த்தைகளை நாம் உடனே நினைவில் கொள்ள வேண்டும். ஏனெனில் தீய காரியங்களை பேசுவது மாம்சத்தின் கிரியையாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்ததிரிப்பதில்லை என்று அப்போஸ்தலர் முன் அறிவித்திருக்கிறார். இதற்கு மிக சரியான எடுத்துக்காட்டாக நம்முடைய பிரதான தூதனாகிய மிகாயேல் இருக்கிறார். சாத்தான் தன்னோடு வழக்காடுகையில், சாத்தானை குற்றப்படுத்தாமலும், தூஷிக்காமலும் "கர்த்தர் உன்னை கடிந்துகொள்வார்" என்று சொன்னார். அப்போஸ்தலனாகிய பவுலின் குறிப்பான அறிவிப்பை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். மற்றவர்களை பற்றி பேசக்கூடிய தீய காரியங்கள் மாம்சத்தின் அசுத்தத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. நாம் தேவனுடைய ஜனங்களாக இருந்தால் இப்படிப்பட்ட அசுத்தத்திலிருந்து நாம் நிச்சயமாக சுத்திகரிக்கப்படவேண்டும். அப்போது நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவோம். ஏனெனில், தீமையான காரியங்களை பேசுபவர் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டார்கள்.

37. தீமையான அனுமானங்களையும், தீய பேச்சுக்களையும் எவ்வாறு மேற்கொள்வது?

(a) இருதயத்தை சுத்திகரிப்பதன் வழியாக.

நீதி 4:23 "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்."

F409 [p2]:

சிந்தனைகள் உருவாகும் இருதயம், அதில் உள்ள ஆவியையும் கவனிக்காமல், மாம்சத்தை சுத்திகரித்து, நாவுக்கு கடிவாளம் போடுவது வீணாக இருக்கும். ஏனெனில் இருதயத்தில் உருவாகும் சிந்தையே வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும் மாம்சத்தில் அசுத்தங்களை வெளிப்படுத்துகிறது. விடாமுயற்சியோடு ஜெபிப்பதினால் மட்டுமே நாம் இவைகளை சுத்திகரிக்க முடியும். "நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்." நாம் முழுமையாக சுத்திகரிக்கப்படாவிட்டாலும், நம்முடைய இருதயத்திலும், அதில் உள்ள நோக்கத்திலும், சிந்தையிலும், ஆவியிலும் நாம் பூரணமாக சுத்திகரிக்கப்படவேண்டும். (இருதயத்தில் சுத்திகரிக்கப்பட்டால் காலபோக்கில் நாம்முடைய வார்த்தைகளும் கிரியைகளும் பரிசுத்தப்படுமே) ஆகவே நம்முடைய ஆண்டவர் நம்முடைய இருதயத்தில் உள்ள பரிசுத்தத்தையும் அவருக்கு உண்மையாக இருக்கும் நிலையையும், காலப்போக்கில் புதிய சரீரத்தை பெறுவதற்கான அன்பின் பிரமாணத்தை பார்க்கக்கூடிய வராக இருக்கிறார். ஏனெனில் "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனை தரிசிப்பார்கள்." - மத் 5:8

(b) ஜெபத்தின் வழியாக

சங் 141 :3 "கர்த்தாவே, என் வாய்க்குக்காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்."

சங்க 19:12-14 "தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன். என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக."

R2249 [col.3 p2]:

நாம் தேவனோடு உடன்படிக்கையை ஏற்படுத்தினால் நம்முடைய ஒவ்வொரு சூழ்நிலைகளிலும் சோதனைகளிலும், பிரச்சனைகளிலும் நம்முடைய ஆண்டவர் அருகிலிருந்து நமக்கு தேவையான காரியங்களை அவர் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அதை ஏற்றுக்கொண்டு அதற்கு தகுந்தபடி நடந்தால் நாம் சரியாக வழிநடத்தப்படுவோம். ஆகவே, நம்முடைய தேவைகளுக்கு ஏற்றபடி அவருடைய உதவிகளை வேண்டி ஜெபிக்கவேண்டும். நித்தமும் அவருடைய கிருபைக்காகவும், ஆசீருக்காகவும் பொதுவாக ஜெபிக்கவேண்டும். சோதனையின் நேரத்தின் போது முழு நம்பிக்கையோடும், அவர் அன்பை புரிந்துகொண்டு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நமக்கு நடக்கிறது என்ற நம்பிக்கையோடும், அவர் நமக்காக யாவையும் செய்வார் என்ற உறுதியோடும், நம்முடைய இருதயம் உடனடியாக நம்முடைய ஆண்டவரை நோக்கி உயரவேண்டும். இப்படிப்பட்ட நேரங்களில் நாம் நம்முடைய ஆண்டவரின் ஆலோசனையைக் கேட்கும்போதும், நீதி, சத்தியம், பரிசுத்தம், அன்பில் வளர்ச்சி அடைவதற்கு உதவிகளை நாடும்போதும் நிச்சயமாக நாம் அவருக்குள் நெருங்குவோம். இப்படியாக, நாம் மணி நேரங்களுக்கு ஒரு முறையும், தினமும், மாதந்தோறும் மற்றும் இறுதியாக முழு வெற்றியையும் கண்டடைவோம்.

(c) நம்முடைய மனதை பரிசுத்தமும், தூய்மையான சிந்தைகளினால் முழுமையாக நிரப்புவதின் வழியாக.

பிலி 4:8 "கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவை களெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்."

R2890 [col.2 p3 to subhead end] - சிந்தனையை கட்டுப்படுத்துவது.

மனிதர்களுடைய மூளை வித்தியாசப்படுவதினால் எல்லோருடைய சிந்தையும் நிச்சயமாக வித்தியாசப்படும் என்றும், ஒரு மனுஷன் தன்னுடைய மூளை அமைக்கப்பட்ட விதத்திற்கு இசைவாக மட்டுமே சிந்திக்க முடியும்

என்றும் சிலர் நம்புகிறார்கள். ஆனால் இது உண்மையல்ல. நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சிந்தையை ச் சீர்தூக்கிப் பார்த்து அதில் உள்ள தீமையானைவகளை களைந்து நன்மையான சிந்தனைகளை ஊக்குவிப்பதற்கு நாம் கற்றுக்கொள்ளலாம். ஆனால் ஒரு காரியத்தை செய்வதற்கு, நமக்கு ஒரு மாதிரி முன்னிருக்கவேண்டும். நம்முடைய வார்த்தைகளையும், கிரியைகளையும் கட்டுப்படுத்துவது போல நம்முடைய சிந்தனைகளையும் கட்டுப்படுத்தலாம். நம்முடைய விருப்பத்தை நமக்குமுன் தலையாக நிறுத்தி அதற்கு உள்ள சிந்தனைகளை சிந்திக்க வேண்டும் என்று முடிவு செய்து அவைகளை ஊக்குவிக்கும் சிந்தனைகளை வளரச் செய்து எதிரிடையான சிந்தனைகளை தவிர்க்க வேண்டும். ஆகவே முதலில் நம்முடைய சித்தம் சரியானதாகவும், நேர்மையானதாகவும் இருக்கவேண்டும். அடுத்ததாக அவைகளை மட்டும் சிந்திப்பதற்கு நாம் உறுதி கொள்ளவேண்டும். இதற்கு எதிராக காணப்படும் சிந்தனைகளைக் கட்டாயமாக தடை செய்யவேண்டும். உலக ஜனங்களின் மத்தியில் தன்னுடைய விசேஷித்த ஜனங்கள் ஆண்டவருக்கு முன்பாக தங்கள் இருதயத்தை தொடர்ந்து ஏறெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று வசனங்கள் கூறுகிறது. "என் மகனே உன் இருதயத்தை எனக்கு தா.." மனப்பூர்வமாக பாவம் செய்பவர்களை தேவன் இப்படியாக அழைப்பதில்லை. தேவனுடைய புத்திரர்களாக இருப்பவர்களை தேவன் அழைக்கிறார். ஏனெனில் தேவனுடைய புத்திரராய் இருப்பவர்கள் கிறிஸ்து இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தினால் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவனுடைய சிந்தைக்கு இசைவான சிந்தையைக் கொண்டு இருக்கிறார்கள். மேலும் நாளக்கு நாள் அவர்கள் பூரணப்பட்டு கொண்டு இருப்பதால் தங்களுடைய இருதயங்களையும் சித்தங்களையும், தேவனுக்கே அர்ப்பணித்து விடுகிறார்கள்.

இப்படியாக இருதயத்தையும் அதிலுள்ள சித்தத்தையும் தேவனிடம் கொடுத்தபின் தெய்வீக சித்தத்தை அறிந்துகொள்ளவும் தெய்வீக சிந்தனைகளை பெற்றுக்கொள்ளவும் வார்தததைகளினாலும், கிரியைகளினாலும் அவைகளுக்குக் கீழப்படிய முயற்சிக்க வேண்டும். இவைகளின் சரியான அளவில் வளர்ச்சியடைந்தால், புதிய சிந்தை சுலபமான முறையிலும், வெகு சீக்கிரத்தில் வளர்ச்சியடையும். அப்பொழுது நம்முடைய ஆவிக்குரிய விருப்பங்கள், நம்பிக்கைள், முயற்சிகள் அனைத்தும் புதிதாக்கப்படும். அல்லது புதிய துவக்கங்களை உருவாக்கும். ஆகவே தேவனுடைய தெய்வீக சித்தமும் திட்டமும் விசுவாசிகளுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. இப்படியாக அவர்கள் அறிவில் வளர்ச்சியடைந்து இவைகளை குறித்தே சிந்தித்து, தெய்வீக திட்டத்தினாலும் விருப்பத்தினாலும் இருதயத்தை நிரப்பும் போது வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டு நாம் மறுரூபமாக்கப்படுவோம்.

R3129 [col.2 p1:4]:

பிலி 4:9 "நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்." என்ற இந்த வசனத்தை எத்தனை பேரால் கூறமுடியும்? இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் வைக்கப்பட்ட அளவுகோலாகும். ஏனெனில், ஒவ்வொருவரும் ஆண்டவரின் பிரதிநிதியாய் இருப்பதினால் அவருக்குள் காணப்படும் சகலமும் ஒரு கிறிஸ்தவனுக்குள் காணப்படவேண்டும். அவர்களின் வார்த்தைகளினாலும் கிரியைகளினாலும் நடமாடும் நிரூபங்களாக இருந்து மற்ற சகோதரர்களின் நன்மைகளை நாட வேண்டும். இப்படியிருந்தால் சமாதானத்தின் தேவன் உங்களோடு இருப்பார் என்று அப்போஸ்தலர் சொல்லுகிறது ஆச்சரியமல்லவே. இப்படியாக தேவன் அந்த அப்போஸ்தலரோடிருந்தார். அவரோடு மட்டுமல்ல, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்ற கூடிய ஒவ்வொருவரோடும் இருப்பார்.

பிலி 4:10 "என்னை விசாரிப்பதற்கு நீங்கள் இப்பொழுது மறுபடியும் மனமலர்ந்தபடியினாலே கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்; இப்படிச் செய்ய எண்ணங்கொண்டிருந்தீர்கள், சமயம்மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை." அப்போஸ்தலரை குறித்து சிந்தித்தார்கள் என்பதை இநத வார்த்தைகள் காட்டுகிறது. மேலும் அவரை சேவிப்பதற்கான வாய்ப்பை அதிகரித்து கொண்டார்கள். அதற்குப் பின் அவர்களுடைய வார்த்தைகளை ஒருவரும் தவறாக புரிந்துக்கொள்ள கூடாதென்று "இப்படிச் செய்ய எண்ணங்கொண்டிருந்தீர்கள், சமயம்மாத்திரம் உங்களுக்கு நேரிடவில்லை." என்று உரைத்தார்.

மற்ற சகோதரர்களின் உணர்வுகளை தேவையில்லாமல் காயப்படுத்தி விடக்கூடாது என்று தேவனுடைய இந்த மனுஷன் எவ்வளவு கவனமாக இருந்தார் என்று சற்று சிந்தித்து பாருங்கள். தேவனுடைய அன்பை பிரதிபலிக்க வேண்டிய நாமும் எவ்வளவு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். நம்முடைய நாவினாலும், கிரியையினாலும் மற்றவர்களை காயப்படுத்தாமல் காயத்தை ஆற்றக்கூடியவர்களாய் இருக்க வேண்டும். தனக்கு குறைச்சலிருப்பதாக அப்போஸ்தலர் குறிப்பிடாமல் மகிழ்ச்சியாயிருப்பதற்கு அவர் கற்றுக் கொண்டார் என்பதை மையப்படுத்தி பேசுகிறார். கவலைக் கேதுவான சிந்தனைகளை நம்மை விட்டு அகற்றி, ஜெபத்தினால் தேவனிடம் பெற்ற அனைத்திற்கும் நன்றி செலுத்தினால் சமாதானத்தை பலனாக அடைவோம். நம்முடைய தேவைகள் எவ்வளவாய் இருப்பினும், இப்படிப்பட்ட மன நிலையில் பிதா கொடுக்கக்கூடிய காரியங்களில் நாம் நிச்சயமாக திருப்தி அடைவோம். நமக்கு தேவையான அனைத்தையும் பிதாவாகிய தேவன் பூரணமாக கொடுத்து கொண்டிருக்கிறார் என்று விசுவாசித்தோமானால் நிச்சயமாக நாம் பெற்ற அனைத்திலும் திருப்தியடைவோம் என்று பவுல் நமக்கு கற்றுத்தருகிறார். " எல்லாவற்றிலும் மனரம்மியமாய் இருக்க கற்றுக் கொண்டேன்" நாம் விசுவாசத்தினால் ஜீவிப்பவர்கள். ஆகையால் மற்றவர்களின் உழைப்பினாலும், வேலையினாலும் நாம் திருப்தி அடையக்கூடாது. நாம் பெறக்கூடிய ஆவிக்குரிய வாய்ப்புகளில் திருப்தி அடைந்துவிடக்கூடாது. நம்மால் முடிந்த வரைக்கும் இன்றும் அதிகமான வாய்ப்புகளில் நம்முடைய தாலந்துகளை பயன்படுத்தி முடிந்தவரை கர்த்தரின் பணிகளை செய்வதற்கு ஜெபத்தில் மன்றாட வேண்டும். இப்படிப்பட்ட முயற்சிகளின் பலன்களால் நாம் திருப்தியடையலாம்.

பறவைகளை பிழைப்பூட்டும் பரலோக பிதா, காட்டு புஷ்பங்களை அழகாக உடுத்தக்கூடிய பரலோக பிதா நம்முடைய தேவைகளை எந்த அளவுக்கு கவனித்து நம்மை பராமரிப்பார் என்பதை சிந்திக்கவேண்டும். ஆகவே தேவன் நமக்குக் கையளித்ததில் முழு திருப்தியடைந்து நம்முடைய பங்கை நம்மால் முடிந்த வரைக்கும், தேவனுடைய சித்தத்திற்குச் செயலாற்ற வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்த வாய்ப்புகளில் நம்முடைய தாலந்துகளையும், திறமைகளையும் பயன்படுத்தி கிடைக்கக்கூடிய பலன்கள் குறைவாயிருக்கும் பட்சத்தில் நாம் நிறைவான பலன் பெறும்வரை, திருப்தியடையக்கூடாது. "போதும் என்ற மனதோடுக்கூடிய தெய்வ பக்தியே மிகுந்த ஆதாயம்" என்ற வார்த்தைகள், நம்முடைய தாலந்துகளையும் வாய்ப்புகளையும் அசட்டை செய்துவிடக் கூடாது. ஏனெனில், நாம் நியாயம் தீர்க்கப்படாதபடிக்கு நாம் பெற்ற அனைத்தின்மேலும் நல்ல உக்கிரானக்காரனாக இருந்து அவைகளை நாம் விருத்தியாக்கிகொள்ளவேண்டும்.

R3596 [col.1 p2 through col.2 p2]: "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்"

[பிரமாணம்]VII சுத்தமுள்ளவர்களாயிருங்கள் : தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக திறந்த மனசாட்சியுடன் இருங்கள். முதலில் இதை உங்களின் சிந்தனைகளில் துவங்குங்கள். தீமையான எந்தக் காரியங்களையும் உங்கள் மனதில் நுழைத்து விடாதேயுங்கள். இதை உறுதிப்படுத்திக்கொள்ள கிறிஸ்து இயேசுவை கண் முன் மாதிரியாக வையுங்கள். எப்போதெல்லாம் தீமையான எண்ணங்கள் உங்கள் சிந்தனைக்குள் வந்தாலும் உடனடியாக தேவனிடத்தில் ஜெபத்தில் ஏறெடுங்கள். உங்கள் சிந்தையை ஜெபத்தோடு எப்போதும் இணைத்து வையுங்கள். "என்னுடைய வாயின் வார்த்தைகளும், இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாக இருப்பதாக."

[பிரமாணம்]VIII வசனங்களில் உள்ள வெவ்வேறு குறிப்பட்ட பிரமாணங்களை பின்பற்றுவதற்கு நாம் முயற்சிக்கும்போது, தெய்வீக பிரமாணத்தின் கீழ் மறைந்துள்ள, கோட்பாடுகளை ஆழமாக புரிந்துக் கொள்ள அதிகமாக முயற்சிக்க வேண்டும். இந்தக் காரியம் நம்முடைய வாயின் வார்த்தைகள் சரியானதா தவறானதா என்று சீர்தூக்கி பார்க்க உதவியாயிருக்கும். உண்மையில், தெய்வீக பிரமாணத்தின் கோட்பாடுகளை நாம் எந்தளவுக்கு புரிந்துக் கொள்ளுகிறோமோ அந்த அளவுக்கு தெய்வீக வார்த்தைகளில் உள்ள தேவனுடைய ஆவியை நாம் பெற முடிகிறது. - சங்110 : 97 -105

[பிரமாணம்] IX குற்றம் கண்டுபிடிக்கும் மனப்பான்மையும், சண்டைப்போடக்கூடிய குணமும் கிறிஸ்துவின் அன்பின் ஆவிக்கு எதிராய் செயல்படக்கூடியது.

இந்த உலகத்தில் மாம்சத்தையும், பிசாசையும், விதவிதமான கண்ணிகளையும் மேற்கொள்வதற்கு சிறிதளவு வாதம் செய்யக் கூடிய தைரியம் தேவைப்படுகிறது. நம்முடைய ஆண்டவரின் பார்வையில் நியாயமான காரியங்களுக்காகவும், ஞானமான காரியங்களுக்காகவும், நமக்குள் இருக்கும் பாவத்திற்கு எதிராக இந்தக் குணத்தை பயன்படுத்துவது நமக்கு பயனுள்ளதாக இருக்கும். சாத்தானுக்கும், அவனுடைய சகல இருள் மற்றும் மூடநம்பிக்கையான வல்லமைகளுக்கும் எதிராக, தேவனுடைய ஜனங்களை மீட்பதற்கு மேலும் இந்தக் குணத்தை பயன்படுத்தலாம். இதை நல்லப்போராட்டம் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. நன்மைக்காகவும், சத்தியத்துக்காகவும், அவருடைய ஜனங்களின் சுயாதீனத்திற்காகவும், இந்த யுத்தக் களத்தில் நல்ல போர்ச்சேவர்களாக நாம் போராடுகிறோம். நம்முடைய அதிபதியின் மகிமைக்காகவும், வாக்குவாதம் செய்யக்கூடிய இந்தக் குணம், நன்மையான நோக்கத்திற்கு பயன்படுத்தப்படுவதை இப்பிரபஞ்சத்தின் தேவன் விரும்புவதில்லை. சாத்தான் நேரடியாக ஒருவரை திசைதிருப்பாவிட்டாலும், மறைமுகமாக அந்த வேலையை செய்வான், நியாயமான காரணங்களுக்கு சண்டையிட த் துவங்கி, அதுவே அவர்களின் குணலட்சனங்களாக மாற்றிவிட அவன் ஊக்குவிப்பான். காலம் செல்ல செல்ல அவர்கள் இருளின் வல்லமைக்குள் தள்ளப்பட்டு, சகோதரர் மத்தியிலிருக்கும் சின்ன சின்ன குறைகளுக்கும், அறியாமைகளுக்கும் எதிராக சண்டைபோட்டு தேவனுடைய அன்புக்கு தங்களை குருடாக்கிகொள்கிறார்கள். இறுதியில் அந்த நபரை தேவனுக்கு எதிராக போராட செய்யும் சாத்தானின் இலக்கு வெற்றி பெறும். இதை குறித்து நாம் எச்சரிப்போடு இருக்கவேண்டும். முதலில் நம்மை நாம் சோதித்தறிந்தபின் மற்றவர்களுக்கு இடறல் உண்டாகாதபடிக்கு நம்முடைய நடைகளையும் வார்த்தைகளையும் காத்துக் கொண்டு நம்முடைய இருதயங்களுக்குள் இருக்கும் தவறான கருத்துக்களை வெளியேற்ற முயற்சிக்க வேண்டும். "ஒரு பட்டணத்தை அடக்குவதைக் காட்டிலும், தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்" சத்தியத்தை காத்துக் கொள்வதற்கு நமக்குள் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். சுயமகிமைக்காக அல்ல, சத்தியத்தின் மேல் உள்ள அன்பும், ஆண்டவரின் மேல் உள்ள அன்பும் அவருடைய ஜனமாகிய நம்முடைய சகோதரர்கள் மேல் வைக்கக்கூடிய அன்பும், நமக்குள் வளர்ச்சி அடைய நாம் பிரயாசைப்படவேண்டும். இதனிமித்தம், அனைவரிடமும் கனிவாயும், பொறுமையாயும் அன்பாகவும், மனத்தாழ்மையுடனும் நடப்பதற்கு வழிவகுக்கும். இப்படியாக தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயம் நமக்குள் வல்லமையாக செயல்பட்டு, தேவையில்லாத காரியங்களை வெட்டி களைய அனுமதிப்போம்.

[பிரமாணம்] X - ஆகவே சகல விதமான சிந்தனைகளுக்கும் உணர்வுகளுக்கும், பகை, பொறாமை, கோபம், மூர்க்கம், போன்ற குணங்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருக்கும் சகல காரியங்களுக்கும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஒரு நொடி பொழுதிலும் இப்படிப்பட்ட காரியங்களுக்கு உங்கள் இருதயத்தில் இடம் கொடுத்து விடாதீர்கள். ஏனெனில் இவைகள் நம்மை மிகப் பெரிய அழிவுக்கு கொண்டு செல்லும். நம்மை மட்டுமல்ல, நம்மை சேர்ந்தவர்களும் நஷ்டம் அடைவார்கள். உங்களுடைய இருதயங்களையும் உங்கள் விருப்பங்களையும், உங்கள் நோக்கங்களையும் தேவனுக்கும் அவருடைய சகல சிருஷ்டிகள் மேலுள்ள அன்பினால் நிரப்புங்கள் விஷேசமாக அவருடைய ஆவியை பெற்று, அவருடைய வழியில் நடப்பவர்களிடம் நாம் அதிகமான அன்பை காட்ட வேண்டும்.

R2588 [col.1 p4,5]:

உங்கள் இருதயத்தில் கற்றுக் கொண்ட நன்மையான காரியங்கள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த முயற்சித்து, அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை என்றும் தியானிக்கவேண்டும். "உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்..".(பிலி 4:8)

ஏனெனில், இவைகளையே சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள், மற்றவர்களிடம் இவைகளை குறித்தே பேசுவார்கள். ஆகவே நம்முடைய இருதயத்தை நல்ல விஷயங்களினால் நிரப்புவது மிக முக்கியமானதாகும். ஏனெனில் இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்பதை அறிந்திருக்கிறோம். (லூக் 6:45)

இப்படிப்பட்ட முயற்சிகளினால் அவர்கள் தேவனுடைய புத்திரர்களாக அழைக்கப்படுவார்கள் என்ற விலைமதிப்புள்ள வாக்குறுதியை பெறுவார்கள். இவர்கள் தேவனுடைய ஆவியைப் பெற்று, தேவகுமாரனின் சாயலை தங்களுக்குள் பதியவைத்து சத்தியத்தினால் சுத்திகரிக்கப்படடு, இறுதியில் ஒளியில் உள்ள பரிசுத்தவான்களின் பங்கை அடைவார்கள். இப்படிப்பட்ட இருதயங்களை பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரர்களாக, தன்னுடைய ஒரே பேறான குமாரனுடைய உடன் சுதந்தரர்களாகவும் அவருடைய இராஜ்யத்தில் அங்கீகரிக்கப்படுவோம். மேலும் நம்மை நாம் அறிந்துகொள்வதற்கு இந்தப் பரீட்சை பயனுள்ளதாயிருக்கும். ஓரளவுக்கு பிறரையும் பிறரின் ஆவிக்குரிய நிலையையும் நாம் புரிந்து கொள்ளலாம். ஆகவே தேவனுடைய பிள்ளைகளாக வளர்ச்சியடையக்கூடிய நாம் மிக ஜாக்கிரதையுள்ளவர்களாக இருந்து, நம்முடைய நோக்கங்களும் சிந்தனைகளும் சமாதானத்துக்குரியதாக இருக்கிறதா என்று நித்தமும் கவனிக்கவேண்டும்.

38. "தீமை" என்ற தலைப்பின் கீழ் பரலோக மன்னாவின் முன்னுரையில் காணப்படும் கூடுதலான குறிப்புகள் என்னென்ன?

39. தீமையான வதந்திகளை ஓரளவுக்கு நம்முடைய வாழ்க்கையில் மேற்கொள்வதற்கு எப்படிப்பட்ட விசேஷித்த அனுபவங்களும், பழக்கங்களும் உங்களுக்கு உதவியாக இருந்தது?

40. புதிய சிருஷ்டியின் எதிராளி வல்லமையுள்ளவனும், தந்திரம் உள்ளவன் என்பதை உணர்ந்து நம்முடைய அன்றாட ஜெபங்கள், எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

சங் 119:12-14 "கர்த்தாவே, நீர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; உம்முடைய பிரமாணங்களை எனக்குப் போதியும்.உம்முடைய வாக்கின் நியாயத்தீர்ப்புகளையெல்லாம் என் உதடுகளால் விவரித்திருக்கிறேன். திரளான செல்வத்தில் களிகூருவதுபோல, நான் உமது சாட்சிகளின் வழியில் களிகூருகிறேன்."

சில கேள்விகளுக்குண்டான நீண்ட குறிப்புகள் தொடருகிறது

R2443 [col.2 p3] through R2444 [col.2 p2] (5# வதுகேள்வியை பார்க்கவும்)

வெகு காலத்திற்கு முன்பு தீய பழக்கங்களை விரட்டிய பின்பும், பாவமென்று தெளிவாக அனைவரால் புரிந்துக் கொள்ளப்பட்ட பின்னும், சகோதரர் மத்தியில் இது பிரபலம் இல்லாத போதிலும் விழுந்து போன மனித நிலை அநேக உபாயதந்திரங்களை குறிப்பாக பயன்படுத்தி, மனசாட்சியின் குரலை அடக்க முயற்சித்து, தீமையான வழிகளை பயன்படுத்துவதை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்கிறது.

1. "நான் ஒருவருக்கும் தீங்கு செய்வதில்லை, ஆனால் என் நண்பர்களோடும், அயலகத்தாரோடும் அமர்ந்து சிறது நேரம் பேசுவது போல சுவாரஸ்யமான காரியம் ஒன்றும் இல்லை. இதை தவிர வேறு பொழுது போக்கு எனக்கொன்றுமில்லை." என்று நம்முடைய மனசாட்சி கூறலாம். ஆயினும் வெளிச்சத்தின் பிள்ளைகள் இப்படிப்பட்ட பேச்சுகளுக்கு நிச்சயமாக கணக்கு ஒப்பிக்க வேண்டும் அல்லவா ? "உங்கள் சம்பாஷனை பரிசுத்தவான்களுக்கு ஏற்றவிதமாக இருக்க கடவது" என்று வசனங்கள் நமக்கு கற்பிக்கிறதே"

"அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக." "கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்."(பிலிப் 1:27கொலோ 4:6, எபேசி 4:29) என்ற கட்டளைகளை வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட அவதூறு பேசும் நபர்கள் தங்களுடைய வார்த்தைகளையும், செயல்களையும் சுத்திகரித்த போதிலும், வெகு தூரத்தில் இப்படிப்படட பேச்சுக்கள் நடந்து கொண்டிருக்கையில், மீதியுள்ள அந்தக் காரியங்களை சொல்லுவதற்கு மிகத்துரிதமாய் சென்று விடுவார்கள். சரியோ தவறோ அல்லது அவர்களுக்கு தேவையான செய்தியோ தேவையில்லாத செய்தியோ, அவர்கள் இருதயத்தில் உள்ள எண்ணங்கள் அதிகதிகமாக தூண்டப்பட்டு, காட்டை கொளுத்திவிடும் நெருப்பாக அவர்களின்

நாவு துரிதமாக செயல்படுகிறது. இது போல் மற்ற பலவீனங்களிலும் தேவனுடைய ஜனங்கள் எளிதில் விழுந்து விடுகிறார்கள். விழுந்து போன நிலை இப்படிப்பட்ட காரியங்களில் மிகவும் மகிழ்ந்து, விருந்துண்கிறது. தாங்கள் செய்வது மிகச்சரியான காரியம் என்றும் பாவத்திற்கு எளிதாக போதித்து விட்டார்கள் என்று எண்ணியும் தங்களை நீதிமான்களாக காட்டிக் கொண்டோம் என்ற மகிழ்ச்சியிலும், அவர்கள் சந்தோஷம் அடைகிறார்கள். ஐயோ பாவம், விழுந்து போன மனிதனின் கிரியைகள் தேவனுடைய நீதிக்கு முன்பாக நிற்க முடியாமல் போய்விடுகிறது.

இதைக் குறிப்பாக கடைப் பிடிப்பதற்கு கிறிஸ்துவ சம்பாஷனைகளில், வெட்டிப் பேச்சுகளையும், குறை பேசுதலையும், முற்றிலும் அகற்றி விடுவது நலமாயிருக்கும். "அவதூறான பேச்சுக்களையும், தூஷணங்களும் உங்கள் வாயிலிருந்து புறப்படலாகாது." என்ற நம்முடைய அப்போஸ்தலரின் கட்டளைகளை கண்டிப்பாக நாம் கடைபிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். கிறிஸ்தவர்களின் மத்தியில் எல்லாக் காரியங்களையும் பேசுவதற்கு நாம் அனுமதிக்கப்படுவதில்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் உண்டான தேவனுடைய கிருபையின் ஐசுவரியங்கள் மற்றும் தேவனுடைய வார்த்தைகளில் உள்ள விலையேறப் பெற்ற வாக்குறுதிகளை மட்டுமே பேசுவதற்கு அனுமதி பெற்றிருக்கிறோம். மேலும், இவைகளை பேசும்போது கேட்போருக்கு மட்டும் அல்ல பேசக்கூடியவர்களும் உண்மையாக கிருபை பெறுகிறார்கள். இப்படிப்பட்ட சம்பாஷணைகள் அங்கு கூடியுள்ள அனைவர் மேலும் ஆசீர்வாதங்கனைப் பொழியும். அழிந்துக் கொண்டிருக்கும் பழைய மனுஷனின் கிரியைகளை புறம்பாக்கும். மேல் சொல்லப்பட்ட காரியங்களை அப்போஸ்தலர் மனதில் வைத்து - " அந்தகாரத்தினின்று ஆச்சரியமான ஒளிக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்பதற்காக நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறினார். மேலும் அன்பின் ஆவி தேவனுடைய ஆவி, சத்தியத்தின் ஆவி நிரம்பி வழியக்கூடிய இருதயங்களின் வாயிலாக எந்தத் தீமையான கரியங்களும் , மற்றவர்களை காய்ப் படுத்தும் வார்த்தைகளும் வெளிவராது. ஒரு வேளை தீமையான காரியங்கள் வந்தால் இருதயம் பரிசுத்தமாக காத்துக் கொள்ளவில்லையென்பது உறுதிப்படுகிறது. "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."மத் 5:8, 1பேது 2:9, மத் 12:14)

2. 27வது கேள்வியின் பதிலை காண்க

3. இப்படிப்பட்ட கேள்விகளை நல்ல கிறிஸ்துவ ஜனங்கள் வேறுவிதங்களில் தவிர்த்து விட்டு, தாங்கள் சத்தியத்தின் படி நடப்பதாக எண்ணி, மனிதனின் பொதுவான தவறுகளுக்கு நியாயம் கற்பிக்கிறார்கள். ஆனால் வழக்கமாக பேசும் அவதூறான காரியங்களையும், உண்மையில்லாத காரியங்களும் தங்களை நியாயத்தீர்ப்புக்கு உட்படுத்தும் என்று அறியாமல் பேசக்கூடிய காரியங்கள் மெய்யா, பொய்யா என்பதையும் அறியாமல் பேசுகிறார்கள். இப்படிப்பட்ட தவறான பேச்சை பேசி முடித்தபின், அவைகள் தவறாய் இருக்கும் பட்சத்தில் தேவனுக்கு முன்பாக அவர்களை பொய்சாட்சிகளாக நிறுத்திவிடும். அந்தத் தவறை கட்டாயமாக சரிசெய்ய வேண்டும் என்ற சூழ்நிலைக்குள் வந்தாலும், மாம்ச சிந்தைக்குள் வளர்ந்திருக்கும் பெருமை, சத்தியத்தை விசுவாசிப்பதற்கு மறுத்து, தங்களை திருத்திக் கொள்ளக்கூடிய சூழ்நிலைகளை தவிர்க்கும். இப்படியாக ஒரு பாவம் மற்றொன்றுக்கு வழி வகுக்கும். இப்படிப்பட்டவர்கள், "உண்மையை தவிர நான் எதையும் பேசுவதில்லை. என் கண்களினால் கண்டு, தனிப்பட்ட முறையில் அது உண்மை என்று உறுதிப் படுத்திக்கொண்டபின் மட்டுமே நான் பேசுவேன். உண்மை என்று நிரூபிக்கப்படாத காரியம் எதுவானாலும் சரி - நான் மிக ஜாக்கிரதையுடன் இவைகள் எனக்கு சொல்லப்பட்டது என்று சொல்லி முடித்து விடுவேன். இப்படிப்பட்ட பேச்சுகளுக்கு நான் உறுதியளிக்கமாட்டேன். இப்படியாக நாம் யாரைக்குறித்தும் தீமையான காரியங்களை பசுவதில்லை" என்று சிலர் கூறலாம். இப்படிப்பட்ட துன்மார்க்கமான காரியங்கள் மனசாட்சிக்குபின் ஒழிந்துக் கொண்டு உண்மையைப் பேசுவது மிகச்சரியானது என்று கூறிக்கொண்டு இருக்கிறது. ஏனெனில் உண்மை பேசுவது வதந்தி என்று தேவன் எங்கும் றிப்பிடவில்லையே. ஆனால் உண்மையில்லாத தவறான பேச்சுக்களைப் பேசுவது மட்டுமே, மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகளான தீய பேச்சுகள் என்று சொல்லப்படுகிறதே.

இது மிகப் பெரிய தவறாகும். தீமையான பேச்சுகள் உண்மையானாலும் சரி, பொய்யானாலும் சரி அது தீமையான பேச்சு தான். தேவனுடைய சட்டத்தில் மட்டுமல்ல நாகரீகமுள்ள எந்த மனுஷனின் சட்டத்திலும் இது நியாயமாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. உண்மையில் மனித சட்டத்தில் ஒருவருடைய தீமையான காரியங்களை பேசினதற்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்கு பதிவுசெய்யப்பட்டால், உண்மையாக நடந்த சம்பவமாக இருந்தாலும், அதைக்

குறித்து பேசினதற்காக அவர்கள் குற்றம் சாட்டப்படுவார்கள். ஏனெனில் அவரின் வார்த்தைகளினால் காயப்பட்டு அல்லது பாதிக்கப்பட்டவருக்கு இந்த உலக பிரகாரமான நீதிமன்றங்கள் நியாயம் செய்ய விரும்புகிறதே, ஆகவே உண்மையானாலும் சரி பொய்யானாலும் சரி, ஒருவரை காயப் படுத்தக்கூடிய நோக்கத்துடன் எந்தக் காரியங்களையும் நிச்சயமாக பேசக்கூடாது. மற்றவர்களை துன்புறுத்தக்கூடாது என்ற விஷயத்தில் தேவனுடைய சட்டமும் மனுஷருடைய சட்டமும் ஒன்றுக்கொன்று இசைவாக காணப்படுகிறது.

மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால் முதல் தவறை இரண்டாம் தவறு நியாயப்படுத்தாது என்ற பிரமாணத்தை, மனித நேயமும் தெய்வீக கற்பனையும் ஒத்துக்கொள்ளுகிறது. ஒரு தவறு நடந்து விட்டால், தவறு செய்பவர்களை தண்டிக்க நீதி மன்றங்கள் உள்ளது. ஆனால் பாதிக்கப்பட்டவர் அந்தத் தீமைக்கான தண்டனையை - ஆயுதங்களை பயன்படுத்தியோ, தங்கள் நாவினால் தீமையான முறையில் புறம் கூறியோ, அவரின் குணலட்சனங்களை கசப்பான வார்த்தைகளை பேசுவதினாலோ தங்களது சொந்த கரங்களினாலோ, கெடுப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்று மனித சட்டம் கூறுகிறது. உண்மையில் இப்படிப்பட்ட அநேகர் குற்றம் சாட்டப்படுவதில்லை, ஆயினும் அமெரிக்காவில் இப்படிப்பட்ட மானநஷ்ட வழக்குகள் நீதி மன்றங்களில் அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது.

R2517 [col.1P6 to end of article] (11ம் கேள்வியை காண்க)

சிந்தனைகளில் அசுத்தம் இருப்பதாக காணப்பட்டால் ஒருவர் என்ன செய்யவேண்டும் ? நன்மையை காட்டிலும் தீமையும், சுயநலமும், மன்னிக்க இயலாத மனநிலைகளும், பகையும், பொறாமையுள்ளவர்கள் தங்களை புகழக்கூடியவர்களை மட்டும் நேசிப்பவர்களை குறித்து ஏதாகிலும் நம்பிக்கைகள் உண்டா ? இப்படிப்பட்டவர்களை தேவன் முற்றிலுமாக நிராகரித்து விடுவார் அல்லவா ?

தேவன் மிகுந்த இரக்கமுள்ளவர், நாம் அனைவரும் துரோகிகளும் பாவிகளுமாய் இருக்கையில் நமக்கான ஈடுபலியை கொடுத்தாரே. ஆகவே இப்படிப்பட்ட மனநிலையை பெற்றவர்களும் தாங்கள் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால் நிச்சயமாக பரிசுத்தப்படுவார்கள். "என்னுடைய அழுக்கான பாவங்களை அவருடைய இரத்தம் சுத்திகரிக்கும்."

ஆனால் மனம்வருந்தி சீர்பொருந்த வேண்டும் என்பதே உண்மையான குற்றமுணர்ந்த நிலையாகும். குணமடைவதற்கு நம்முடைய பரம வைத்தியரின் உதவிகளை நாடவேண்டும். ஏனெனில் அவர் மட்டுமே சகல நோய்களையும் குணமாக்குகிறவர் என்று எழுதியிருக்கிறது. அவரால் பரிசுத்தமாக்கப்பட்ட ஒவ்வொருவரும் - "அவருடைய பணியை செய்வதற்கு நாங்கள் அபாத்திரர்" என்று கூறுவதைக்காணலாம். உண்மையில் ஒருதரம் சுத்திகரிக்கப்பட்டும் மீண்டும் பாவத்திற்குள் பிரவேசிப்பது மிகவும் மோசமான நிலைக்கு கொண்டுசெல்லும். ஆயினும் இவர்களைக் குறித்து இன்னும் கொஞ்சம் நம்பிக்கை உண்டு. பரம வைத்தியரின் மருந்துகளை அன்றாடம் உட்கொள்வதின் நிமித்தம் மீண்டும் சுத்திகரிக்கப்படலாம். ஆனால் மனசாட்சியே மனித சுபாவத்தில் இருக்கிறது. தித்திப்பை கசப்பென்றும், பகையையும் தீமையையும் நீதியென்றும் நியாயத்தீர்ப்பை திசைத்திருப்பும் அளவுக்கு அது கடினப்பட்டு இருப்பதினால் பாவத்தின் காரியங்களை பரிசுத்தமாக எடுத்துக்காட்டுகிறது. இந்நிலையில் அவர்களை சுத்திகரிப்பது நம்பிக்கையற்றதாகிவிடுகிறது.

நம்முடைய பரம வைத்தியர் இப்படிப்பட்ட விஷம் நிறைந்த இருதயகங்களுக்கேற்ற தடுப்பு மருந்தினை குறிப்பிட்டிருக்கிறார். இப்படிப்பட்ட மருந்துகளை சரியான முறையில் உட்கொள்வதின் மூலம் கடினமான இருதங்கள் இலகுவாக்கப்படும். குரோதமும் பகையும் உருவாக்குவதற்கு பதிலாக அன்பு நிறைந்த வழியும், சண்டைகளும் சச்சரவுகளும், எதிர்பேச்சுகளும் தீமையான பேச்சுகளும், பின்னாக பேசுவதும், புறம் கூறுதலும், கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து அன்பையும் அதற்கேற்ற வார்த்தைகளையும் பிறப்பிக்கும். ஒருவரை குறித்தும் தீங்கு நினையாது, எந்த அயலானை குறித்தும் அவதூறு கூறாமலும், நீடிய பொறுமையுடன் சகலகத்தையும் சகித்து, தன்னுடைய புகழ்ச்சியை நாடாமல் தேவனுடைய மகிமையைத் தேடும். இப்படிப்பட்ட ஆவியே கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும் அன்பின் பிரமாணமாகும். இந்த மருந்துகள் மிக மோசமாக வியாதிப்பட்டவர்களுக்கு

மட்டுமல்ல, கிறிஸ்துவ ஜீவியத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் நமக்கும் தேவைப்படுகிறது. கொடுக்கப்பட்ட மருந்துகள் சிலவற்றை காணலாம். -

"அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்." -1யோவா 3:3

நாம் தேவனுடைய புத்திரர்களாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறோம் என்ற நம்பிக்கை மேற்கூறப்பட்ட வசனத்தில் காண்பிக்கப்படுகிறது. அவரைப் போல் இருப்பவர்கள் அவர் மகிமையடைந்த நிலையில் தாங்களும் மகிமையடைந்து, அவரை காண்பார்கள் என்று வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய இருதயத்தின் சிந்தனைகள் இந்த ஒரே நம்பிக்கையில் விரிவடையும் பட்சத்தில் நாம் இதன் அகலத்தையும் நீளத்தையும், ஆழத்தையும் உயரத்தையும், அளவிடும்போது பரலோகப் பிதாவின் அன்பையும் நம்முடைய இரட்சகரின் அன்பையும் நாம் ஒப்பிட்டு பார்க்கவே முடியாது. ஏனெனில் நாம் அவர்களை நேசிப்பதற்கு முன்னதாகவே அவர்கள் நம்மை அதிகதிமாக நேசித்தார்கள். இப்படிப்பட்ட தெய்வீக அன்பின் முறையை நமக்கு மாதிரியையாக கொண்டு நாம் அதில் வளர்ந்தால் நிச்சயமாக நம்முடைய இருதயங்களில் சுத்திகரிக்கப்பட்டு பூரணமான அன்பையும், கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனத்தையும் பெறுவோம். முற்காலத்தில் நமக்குள் இருந்த அர்த்தமில்லாத சுயநலத்தைக் கண்டு அதிகதிகமாய் வெட்கப்படுவோம். நம்முடைய மாம்சத்தின் பலவீனங்களாகிய கோபம் மூர்க்கம் பகை, வஞ்சனை, தீமையான பேச்சுகள், வதந்திகள், புறம் கூறுதல், வெட்டிப் பேச்சுகள் போன்றவைகளை உண்மையான வெளிச்சத்தில் காணும்போது நாம் மிகவும் வருத்தமடைவோம். மேலும் இறுதியாக இப்படிப்பட்ட தீமையான குணங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு ஒருக்காலும் பொருந்தாது என்பதை நாம் எளிதில் உணர்ந்துகொள்ளலாம். இப்படிப்பட்ட தீமைகளையும் நம்முடைய ஆத்துமாக்களை நித்திய மரணத்துக்கு வழிநடத்தும் மாம்ச பலவீனங்களையும் விட்டு வேகமாக விரைந்தோடச் செய்யும். நம்முடைய இருதயங்கள் உடனடியாக சுத்திகரிக்கப்படும். நம்முடைய உதடுகளில் மட்டும் அல்ல நம்முடைய சிந்தனைகளின் மேலும் நாம் கவனம் வைக்கவேண்டும். அப்போது நம்முடைய வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானமும் தேவனுக்கு முன் எப்போதும் பிரியமாக இருக்கும்.

2 " **அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்."** தீத்து 2:14

எப்படியாகவோ,யார் மூலமாகவோ எப்போது நாம் மீட்கப்பட்டோம் என்ற பாடத்தை தெளிவாக நாம் புரிந்துகொண்டிருக்கலாம். ஆனால் நாம் எதற்காக இரட்சிக்கப்பட்டோம் என்ற காரணத்தை நாம் சற்று மறந்துவிட்டால் நாம் அறிந்துகொண்ட அனைத்தும் வீணாகிவிடும். மரணத்தின் வல்லமையிலிருந்து மட்டுமே நம்மை மீட்காமல், "சகல துர்குணங்களிலிருந்து நம்மை மீட்டார். ஒரு விசேஷித்த ஜாதியாக ஜனங்களைத் தேடாமல், விசேஷமாக சுத்திகரிக்கப்பட்ட தூய்மையானவர்களை அவர் தேடுகிறார். நம்முடைய அழைப்பையும், தெரிந்தகொள்ளுதலையும் உறுதிப்படுத்திகொள்வதற்கும், துர்குணங்களிலிருந்து நாம் வெளிவருவதற்கு மிக ஆர்வமுள்ளவர்களுக்கும் இந்த மருந்து நிச்சயமாக நமக்கு உதவிசெய்யும்.

3. **"அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு."** 11தீமோ 2:22

நாம் சரியாக துவங்கினால் மட்டும் போதாது, சரியான வழியை தேர்வு செய்பவர்களாக இருக்கவேண்டும். அநீதியான காரியங்களை ஒருபோதும் நாம் பின்பற்ற மாட்டோம். எப்படிப்பட்ட நஷ்டம் ஏற்பட்டாலும், நீதியையும், நியாயத்தையும் பின்பற்றவேண்டும். ஆனால் சில நேரங்களில் சிலருக்கு பிரச்சனைகள் எழும்பலாம் - சிலர் நியாயமாக தீர்ப்பளிப்பதற்கு அறியாமல் இருக்கிறார்கள். தாங்கள் காணக்கூடியவைகளையும், கேட்கக்கூடிய அனுமானங்களை வைத்தும் அல்லது பரிசேயர் சதுசேயரின் தீர்ப்பை பெற்றுக்கொண்ட ஜனங்களை போலவும், நியாயந்தீர்க்க முடிவெடுக்கிறார்கள். ஆனால் ஆண்டவரின் வாழ்க்கையில் காணப்பட்ட நன் நடக்கைகளையும், அற்புதமான

வார்த்தைகளையும் கவனித்திருந்தார்களானால் நீதியாக பாதையில் வழிநடக்க முடிந்திருக்கும். ஏனெனில் இயேசு பாவத்திற்கு விலகினவரும், "பரிசுத்தரும் கபடற்றவரும், மாசற்றவருமாக" இருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருப்பார்கள்.

"நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள்" என்ற ஆண்டவரின் கற்பனையை எந்நாளும் நாம் பின்பற்றவேண்டும். இந்தக் கற்பனையை தவிர்க்கும் பட்சத்தில் அந்த இரத்தப்பலியை தங்களுடைய தலையின்மேல் சுமந்து, குற்றம் சாட்டப்பட்டவர்களின் தண்டனைகளுக்கு பங்காளிகளாவார்கள். நம்முடைய ஆண்டவருக்கு நடந்தபடியே அவருடைய சகோதரருக்கும் நடத்தப்படும். ஆகவே, நம்முடைய இருதயங்கள் அதிகதிகமாக பரிசுத்தப்படும் போது நமக்கு எதிராக பேசப் படும் தீயப் பேச்சுகளுக்கும், புறம் கூறுதலுக்கும், நாம் பாதிக்கப்பட மாட்டோம். இருதயத்தில் கசப்பான நஞ்சையுடைவர் இப்படிப்பட்ட பேச்சுக்களை மட்டுமே பேசுபவர்கள் என்பதையும் உணர்ந்து கொள்வார்கள்.

அடுத்துவருவது உண்மை அதாவது விசுவாசம், நம்முடைய ஆண்டவர் தன்னுடைய விசுவாசத்தை குறித்து சொல்லி ஒரு சகோதரனைக் காட்டிலும் நெருங்கிய உறவான சிநேகிதர் என்று தம்முடைய சீஷர்களுக்கு தம்மை வெளிப்படுத்தினார். இப்படிப்பட்ட இரக்கத்தை இந்த உலகம் உண்மை என்று அங்கீகரித்துக்கொண்டு முதலிடம் கொடுக்கிறது. ஆனால் தேவனுடைய வார்த்தையில் நீதி முதலிடத்தை பெறுவதை கவனியுங்கள் விசுவாசம், அன்பு சமாதானமும், நீதிக்கு இசைவாக செயலாற்றப்படும். ஆனால் அநீதி ஒரு சகோதரனுக்கு விரோதமாக நிரூபிக்க இயலாது. அப்படிப்பட்டவரிடம் நம்முடைய அன்பு, பாசம், சமாதானத்தையும் தொடர்ந்து வெளிப்படுத்தவேண்டும். உண்மையில், அவருக்கு எதிராக "நியாயமில்லாமல்" பேசப்படும் வதந்திகள் புறம் கூறுதல் அனைத்தும் குறைத்துக்கொள்ளவேண்டும். இந்த மதிப்புள்ள ஆலோசனை நம்முடைய இருதயங்களை பரிசுத்தமாக காத்துக்கொண்டு சாத்தான் வெகு துரிதமாக விதைத்துக் கொண்டிருக்கும் விஷத்திலும், கசப்பிலிருந்தும் நாம் தப்பித்துக் கொள்ளமுடியும்.

நியாயம், இருதயத்தின் தூய்மையாகும் - அநியாயத்திலிருந்து விடுதலை

நீதி, இருதயத்தின் தூய்மையாகும் - அநீதியிலிருந்து விடுதலை.

அன்பு இருதயத்தின் தூய்மை - சுயநலத்திலிருந்து விடுதலை

4 **"ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்;"1பேது 1:22**

மற்ற மருந்துகளை பயன்படுத்தி சுத்திகரிக்கப்பட்டவர்கள் மட்டுமே இந்த மருந்தை பயன்படுத்தவேண்டும். இருதயம் சுத்திகரிக்கப்பட்டதன் முக்கிய காரணம் - சத்தியத்தை கேட்டதினால் மட்டும் அல்ல, அவைகளை விசுவாசித்ததினால் மட்டுமல்ல அவைகளுக்குக் கீழ்படிந்ததின் மூலமே என்பதை வசனம் குறிப்பிடுகிறது. மேலோட்டமான அனைவரும் காணும் படியாகவும், பழக்கவழக்கத்தின் அடிப்படையிலான கீழ்ப்படிதல் அல்ல. ஆனால் சத்தியத்தின் ஆவிக்கு முழுமையாக கீழ்ப்படிதலின் வழியாகவே - இந்தக் காரியங்களே உண்மையாக சுத்திகரிப்பை ஏற்படுத்தும். இவை அனைத்துமே போலியானதாக அல்ல உண்மையும் உத்தமமான கிறிஸ்துவக்குள்ளான "சகோதர" சிநேகத்தை நமக்குள் நிலைத்திருக்க செய்யும். துவக்கத்தில் அனைவரையும் நல்ல பண்புடன் நடத்தினோம். ஆனால் அநேகரை நமக்கு பிடிக்கவும் இல்லை, அவர்களை நாம் நேசிக்கவும் இல்லை. அவர்கள் ஏழைகளும், அழுக்கானவர்களும், விசித்தரமானவர்களும், அறியாமையிலும் இருந்திருக்கக்கூடும். ஆனால் சத்தியத்தின் ஆவிக்கு கீழ்ப்படியும்போது, விலையேறபெற்ற இரத்தத்தை விசுவாசித்து இரட்சகரிடம் தங்களை முழுமையாக அர்ப்பணித்தவர்களை புரிந்துகொள்ளும் பட்சத்தில் எந்த விதமான தடைகள் இருந்தாலும் அவர்களை நம்முடைய உண்மையான சகோதரர்களாக பாவிக்க வழிநடத்தும். உங்கள் ஆண்டவரின் ஆவி உங்கள் இருதயத்தில் பொங்கி வழிவதினால், சுயநலம், பெருமை, பகை, குரோதம் போன்ற காரியங்கள் காணாமல் போய்விட்டது. இந்தக் கட்டத்தை நீங்கள் எட்டினால், "நான் எல்லா சகோதரர்களையும் உண்மையாக நேசிக்கிறேன்" என்று தைரியமாகச் சொல்லலாம்.

நன்மையான பாதையில் இவ்வளவு தூரம் பிரயாணப்பட்டு வந்தபின், அடுத்து, நம்முடைய இருதயத்தை பரிசுத்தமாக காத்துக்கொள்வதற்கு நாம் செய்யவேண்டிய காரியத்தை அப்போஸ்தலர் கூறுகிறார். "நீங்கள் ஒருவரை ஒருவர் பரிசுத்தமான இருதயத்தோடு அன்பு செய்கிறீர்களா என்று சோதித்து அறியுங்கள்" ஆம், நாம் பரிசுத்தமான இருதயத்தை பெற்றிருக்கிறோம் என்பதை என்றுமே மறந்துவிடக்கூடாது. ஏனெனில் இந்த நிலையிலிருந்து ஒரு அடி வெளியே வைக்கும் போது சாத்தானின் அன்பின் மாய வலையில் அகப்பட்டுவிடுவோம். உண்மையான அன்பு குளிர்ச்சியாயிராது. அது அனல் உள்ளதாகவும் "சகோதரர்களுக்காக ஜீவனை இழக்ககூடிய அளவுக்கு அந்த அன்பு" உறுதியானதாயும் இருக்கிறது. - 1யோ 3:16

இப்படிப்பட்ட அன்பு நம்முடைய இருதயங்களாகிய பலிபீடத்தில் தேவனுக்கேற்ற சுகந்த வாசனையாக கொழுந்து விட்டு எரியும்போது தீமையான சிந்தனைகளுக்கும், சுயநலத்திற்கும், எந்தவிதமான இடமும் இருக்காது. கூடியிருக்கும் அனைத்து சகோதரர்களும் இப்படிப்பட்ட ஆவியை பெற்றிருந்தார்களானால், அனைவரும் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள்.

ஆண்டவரின் பணியை செய்வதற்கும், நம்மை சுத்திகரிப்பதற்கும் தேவையான அனைத்து மருந்துகளை இப்போதும், எப்போதும் சகோதரர்களாகிய நாம் அதிக அதிகமாய் உட்கொள்ளுவோம்.

R2734 [col.1 p5] through R2735 [col.1 p1](17#வது கேள்வியை பார்க்கவும்)

ஆனால் சுத்திகரிக்கப்பட்ட இருதயத்தின் நிலையை நாம் எப்படி பெறுவது ?

" உங்கள் இருதயங்களை சுத்திகரியுங்கள்" என்ற செய்தியை நாம் பாவிகளுக்கு அறிவிக்கிறோமா ? இல்லையே. பாவிகள் தங்களுடைய இருதயங்களை சுத்திகரிப்பதற்கு சுவிசேஷம் அழைக்கவில்லையே. ஏனெனில் பாவிகளுடைய இருதயங்கள் சுத்தகரிக்கப்படுவது இயலாத காரியம். தேவனோடு நல்லுறவு கொண்டு, பரிசுத்தமான அவருடைய சித்தத்தை அறிந்துக் கொள்ளக்கூடிய நோக்கமுடையவர்களே தேவனுடைய பார்வையில் பரிசுத்தவான்கள் என்று அங்கீகரிக்கப்படுகிறார்கள். இதற்கு எதிராக பாவிகள் மனந்திரும்பும் படியாக அழைக்கப்படுகிறார்கள். ஏனெனில் அவர்களின் இருதயம் கலகத்தினாலும், அசுத்தத்தினாலும், தீமையினாலும் நிறைந்திருக்கிறது. ஒரு பாவி பாவத்திற்காய் வருந்தின பின்பு தேவனோடும் அவருடைய நீதியோடும் இசைந்திருக்க விரும்பினால், தன்னுடைய பாவத்திற்கு ஏற்ற பலியை பெற்றுக் கொண்டு தேவனோடு ஒப்புரவாகுவதற்கு மிகப் பெரிய இரட்சகரிடத்திற்கு அவர் வரவேண்டும். ஒரு பாவி இந்த ஒரு படியை கடந்து, தன்னால் முடிந்தவரைக்கும் சீர்பொருந்தப்பட்டு, கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு அவர் கொடுக்கும் மன்னிப்பை பெற்று நீதியின் பாதையில் நடக்க முயற்சித்தால் அவர் நீதிமானாக்கப்படுகிறார். "கிறிஸ்துவின் இரத்தத்தின் மேல் உள்ள விசுவாசத்தினால் நீதி மானாக்கப்படுதல்" என்ற வசனத்திற்கு அவர் உட்படுவதினால், எல்லா காரியங்களிலும் அவர் விடுதலைப் பெற்று தேவனோடு நல்லுறவு கொண்டு, தேவனுடைய மன்னிக்கக்கூடிய அன்பினால் வரும் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் முழுமையாக உணர்ந்து கொள்ளலாம்.

ஒருவர் இவைகளை செய்து முடித்து விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட நிலையை அடைந்தபின் அந்தப் பாவி, தேவனுடைய பார்வையில் இனி ஒருபோதும் பாவியாக எண்ணப்படுவதில்லை. ஆகையால், தேவனோடு தொடர்பு கொள்ளும்போது " தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்து,"(ரோம 3-25) என்ற வசனத்தின் படி அவருடைய இருதயம் தூய்மையாகவும் பரிசுத்தமாகவும் இருக்கிறது. இப்படிச் சீர்திருந்தப்பட்டவரை பற்றி, ஒரு புதிய கேள்வி எழும்புகிறது. பழையபாவங்கள் கிருபையினால் மூடப்படுகையில் மாம்சத்தின் பலவீனங்கள் இந்நாளிலும் காணப்படுகிறதே, மேலும் சாத்தானின் சோதனைகள் நமக்கு எதிர்கொண்டு நிற்கிறதே. அந்த நீதிமான், தொடர்ந்து நீதியின் பாதையில் நடக்க துவங்குகையில், மாம்சம், உலகம், பிசாசால் சோதிக்கப்பட்டு அகப்படுகிறார். அவர் என்ன செய்யவேண்டும் ? அப்பொழுது அவர் தன்னுடைய இருதயத்தை தேடினால் தன்னைத்தான் வழிநடத்திக் கொள்வதற்கு அவர் திராணி இல்லாதவரும், அவர் பெற்ற நிலையை தக்க வைத்துக் கொள்ள இயலாதவருமாய் இருக்கிறார். அவர் சரியான பாதையில் செல்வதற்கு, மிகப்பெரிய இரட்சிப்பான இரண்டாவது படியில் அவர் கடக்க வேண்டியதாய் இருக்கும். மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால் மற்றொரு தெய்வீக கிருபையை ஏற்றுக்கொள்ளவேண்டும்

- "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.." (ரோம 12:1) என்று நம்முடைய ஆண்டவர், அப்போஸ்தலர் மூலம் சொல்லிய வார்த்தைகளுக்கு அவர் செவி கொடுக்க வேண்டும்.

நீதிமானாக்கப்பட்டவர் சரியான முறையில் சரியாக போதிக்கப்பட்டிருந்தால், தன்னுடைய சுய பலத்தில் கிறிஸ்துவுக்குள் நிற்பது கூடாத காரியம் என்பதை அவர் நன்கு உணர்ந்துக் கொள்வார். மேலும் இந்த நீதிமானாக்கப்பட்ட நிலையை தக்க வைத்துக் கொள்வதற்கு தேவனால் மட்டுமே கூடும் என்பதை அறிந்து கொள்வார். முதலில் தேவனோடு ஐக்கியப்படும்போது என்னுடைய விருப்பத்தின்படி, தேவனுடைய சித்தத்தின்படி செய்வேன் என்று சொல்லலாம். ஆனால் இது நம்முடைய ஆண்டவருக்கு திருப்தியளிக்காது. என்பதை சரியான போதனையைப் பெற்றப்பின் அவர் கண்டறிவார். தேவனுடைய சித்தத்தை, தேவன் விரும்பியபடி செய்தால் மட்டுமே, தேவன் அவரை பொறுப்பெடுத்துக் கொள்வாரென்றும், அவர் செய்யக்கூடிய காரியங்கள் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படும் என்பதையும் உணர்ந்துக் கொள்வார். இப்படிப்பட்டவர்களுக்கு, முழுமையாக தங்களுடைய விருப்பத்தை, தேவனுடைய சித்தத்திற்கு அர்ப்பணித்து தங்களுடைய முழு இருதயத்தில் அதை நோக்கமாக கொண்டிருப்பவர்களுக்கு, நித்தியமான கன மகிமையை வாக்களிக்கிறார்.

ஒரு பாவி இத்தனை நிலைகளை கடந்தப்பின் ஆண்டவரிடத்தில் தன்னுடைய இருதயத்தை முழுமையாக ஒப்புக் கொடுக்க முடியும். அன்பின் பிரமாணத்தின் கீழ் புதிய உடன்படிக்கையின் பிரமாணத்தின் கீழ் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களைப் பற்றி மட்டுமே, நம்முடைய பாடம் விவரிக்கிறது. ஆனால் இருதயத்தின் சுத்திகரிப்பும், நோக்கங்களும், இலக்குகளும், சித்தங்களும், ஆண்டவரின் கற்பனைகளை நிறைவேற்றுவதற்கு பாத்திரமாய் இல்லாவிடில் அவர் ஒரு யுத்தக் களத்தில் போராட வேண்டியதாயிருக்கும். இருதயத்தில் ஆழமாய் வேரூன்றி வளர்ந்திருக்கும் சுயநலம் தேவனுடைய அன்பின் புதிய பிரமாணத்திற்கு எதிராய் செயல்படும் ஆகையால் ஒவ்வொரு நிமிடத்திலும் குறிப்பாக இந்தக கற்பனையை முழுமையாக நாம் கடைபிடிக்க முடியாமல் போனாலும் நம்முடைய இந்தப் பாடத்தில் தெய்வீக அன்பின் பிரமாணத்தின் பொருளை நாம் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதை அப்போஸ்தலர் ஆலோசனை கூறுகிறார். ஆயினும் இந்தக் கற்பனையை முழுமையாக கடைபிடிக்க முடியாமல் போனாலும், இந்தக் கற்பனையை கடைபிடிப்பதற்கு, சுத்த இருதயம், நல்ல நோக்கங்களும் குறையாமல் இருக்கவேண்டும். மாம்சத்தின் பலவீனம், சாத்தானின் வஞ்சகம் மற்றும் சோதனைகள் வரும்போது நாம் தோல்வியடையும், ஒவ்வொரு நேரமும் நம்முடைய பரிசுத்தமான இருதயங்கள் அல்லது சித்தங்கள் அவைகளை தடுக்கவில்லையென்பது உறுதியாகிறது.

இவ்விடத்தில் ஆண்டவரின் வாக்குறுதிகள் நமக்கு உதவுகிறது. ஏனெனில், நம்முடைய பலவீனங்களும் அபூரண நிலையையும் அவர் நன்கு அறிந்திருக்கிறார். அன்பின் ஆவிக்கு எதிராக செயல்படக்கூடிய சாத்தானின் வலைகளையும், உலகத்தின் ஆவியும், அபூரண நிலையின் காரியங்கள் எவ்வளவு வல்லமை உள்ளது என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். ஆகவே நாம் தவறு செய்யும் போதெல்லாம் கிருபாசனத்தண்டைக்கு இலவசமாய் சென்று அவருடைய இரக்கங்களை இலவசமாய் பெற்று இந்தக் காரியங்களை மேற்கொள்வதற்கு நம்முடைய ஆண்டவர் நமக்கு வழிவகுத்து வைத்துள்ளார். ஆகவே பரிசுத்தமான நிலையை தக்கவைத்துக் கொள்வதற்கு தேவைப்பட்ட ஒவ்வொரு நேரங்களிலும் தேவையான கிருபைகளை உதவியாகப் பெறலாம். நம்முடைய மகா பெரிய பிரதான ஆசாரியர் வழியாக கிடைக்கப்பெற்ற இந்த வாய்ப்புகளையும் கிருபைகளையும் அன்றாடம் பயன்படுத்தினால் பாவங்களுக்கு எதிரான நல்லப் போராட்டத்தில் சிறப்பாக வெற்றி அடைய முடியும் அப்பொழுது நம்முடைய மாம்சத்தின் வழியாக நம்முடைய இருதயத்திற்கள் சென்றிருக்கும் தேவையற்ற சகல காரியங்களையும், வெளியேற்றிவிடலாம். இப்படிச் செய்வதின் வழியாக மட்டுமே கிறிஸ்தவர்கள் தங்களுடைய இருதயத்தை பரிசுத்தமாய் காத்துக்கொண்டு நல்ல போராட்டத்தை போராடி, இந்த உலகத்தையும் அதன் ஆவியையும், வெற்றிகரமாய் ஜெயிப்பார்கள். இந்த அன்பின் பிரமாணத்தை பொறுத்த வரையில் நம்முடைய மாம்சத்தின் சிந்தனையும், மாம்சமும் பல வழிகளில் நம்மை ஏமாற்றுவதற்கு எத்தனிக்கும் மாம்சத்தின் சிந்தை புதுசிந்தையோடு இணைந்து செயல்பட வகைத்தேடி சில விதிமுறைகளுக்குட்பட்டு அன்பின் பிரமாணத்தை வாழ்க்கையின்

பிரமாணமாக ஏற்றுக்கொள்ள ஆயத்தப்படும். மாம்சத்தின் சிந்தை வார்த்தைகளினாலும் தொழில் ரீதியாகவும், தெய்வீக வடிவத்திலும் அன்பை எதிர்பார்க்கும். இப்படிப்பட்ட அன்பு சுயநலமான இருதயங்களிலிருந்து புறப்பட்டு தங்களையும், மற்றவர்களையும் ஏமாற்ற முயற்சிக்கும். அவர்கள் உதடுகளில் புன்னகையும், வார்த்தைகளில் புகழ்ச்சியும் அன்பும், கனிவும் காணப்படும். ஆனால் இருதயத்திலோ, சுயநலமான உணர்வுகளும் கசப்புகளும், பகைகளும் மறைந்திருக்கும் சாதகமான சூழ்நிலைகளில் இருதயத்தில் மறைந்திருக்கும் இந்தத் தீய குணங்கள் அவதூறான பேச்சுகளாகவும், வதந்திகளாகவும், பின்னாக பேசுவதும், புறணியாகவும் வெளிப்படும். அல்லது இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து இருதயத்தில் நிலைத்திருந்தால், சாதகமான சூழ்நிலைகளில் சுத்தமான இருதயத்தில் காணப்படும் புதிய உடன் படிக்கையின் அன்பின் பிரமாணத்திற்கு முற்றிலும் எதிரிடையான மாம்சம் மற்றும் சாத்தானின் கிரியைகளான கோபத்தையும் பகையையும் வாக்குவாதத்தையும், துன்மார்க்கமான கிரியையும் வெளிப்படுத்தும்.

ஆகவே நமக்காக செய்யப்படும் சகலவிதமான தெய்வீக காரியங்களும், நமக்காக கொடுக்கப்பட்ட சகல தெய்வீக வாக்குத்தத்தங்களின் முக்கியத்துவங்களும் இறுதியில் நமக்குள் தெய்வீக குணமாகிய அன்பை வளர்ப்பதே மையக்கருத்தாக இருக்கிறது. இந்தத் தெளிவான உண்மையை நம்முடைய சிந்தைக்கு முன்பாக எப்போதும் வைத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், தேவன் அன்பாகவே இருக்கிறார். இப்படிப்பட்ட அன்பு நமக்குள் வளர்ச்சியடைய தேவனுடைய அன்பின் பிரமாணத்துக்கு இசைவாகவும் சாத்தானின் சுயநலமான பிரமாணத்திற்கு முற்றிலும் எதிரான பரிசுத்தமான இருதயம் மிகவும் அவசியமாயிருக்கிறது. மேலும் இதற்கு நல் மனசாட்சியும் தேவைப்படுகிறது. ஏனெனில் மனசாட்சியும் தீய காரியங்களை வலியுறுத்தும். விழுந்துபோன சுபாவத்தில் மனசாட்சியும் விழுந்துபோன நிலையில் உள்ளது. ஆகவே மனசாட்சியில் சரியான நேரத்தை காண்பிப்பதற்கு முதலில் மனசாட்சியை சீர்படுத்த வேண்டும். நேரம் காட்டும் கடிகாரத்தை ஒருவர் சாவி கொடுத்து இயக்குவதுபோல நம்முடைய மனசாட்சியை தினமும் சத்தியத்தின் காரியங்களை செயல்படுத்துவதற்கு நித்தமும் நாம் அதற்கு நீதியின் வரியை கற்பிக்க வேண்டும். அப்பொழுது நாம் தவறு செய்யும் ˙பொழுது அதை தவறு என்றும் சரியான காரியங்களை செய்யும் போது சரி என்றும் நமக்கு அறிவுறுத்தும். இந்த மனசாட்சி நீதியாக செயல்படுவதற்கும், இதனுடைய ஸ்பிரிங்கை (**spring**) புதிய சிந்தையுடனும், பரிசுத்தமான சித்தத்துடனும் இணைக்க வேண்டும். அப்பொழுது அந்த மனசாட்சி தேவனுடைய அன்பின் பிரமாணத்திற்கு முழு இசைவோடு செயல்படும்.

F474 through F417-"உன் சகோதரன் உனக்கு எதிராக குற்றம் செய்தால் ? " (29வது கேள்வியை பார்க்கவும்)

"நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு, மற்றவர்களை நியாயந்தீர்க்காதிருங்கள்" என்ற நம்முடைய ஆண்டவரின் கட்டளைக்கு இது முரண்பாடாக இல்லையா ? முதலில் நாம் பொல்லாங்கு செய்கின்றவனை தனிப்பட்ட விதத்தில் நியாயம் தீர்க்காதிருந்து விட்டு, அதன் பின்பு அவனது பொல்லாப்பைப் பற்றிப் பேசி அல்லது வீண் பேச்சு பேசி,அதன்படி அவனுடைய காரியங்கள் முழுவதும் சபைக்கு தெரியவரும்போது, அதன்பிறகு பொல்லாப்பு செய்தவனை விலக்கி வைக்கலாமா ?

அப்படி இல்லவே இல்லை. திவ்விய கட்டளையை, ஒழுங்கைசரியாகப் புரிந்து கொள்ளும்போது அதில் முரண்பாடு இல்லவே இல்லை. உதாரணமாக A என்பவருக்கும் B என்பவருக்கும் இடையில் ஒரு கருத்து வேற்றுமை இருக்கும் பட்சத்தில், B தனக்கு ஒரு தவறு செய்துவிட்டார் என்று A எண்ணுகிறார். அப்படியிருக்கும்போது, அவர் B குற்றவாளியாக நியாயந்தீர்க்கக்கூடாது. அவர் "நமக்கு இடையில் கருத்து வேறுபாடு உள்ளது, நான் செய்தது சரியானதுதான்" என்று மாத்திரம் சொல்லவேண்டும். அதே வேளையில் தன் பக்கத்தில் நியாயம் உள்ளதென்று B எண்ணலாம்.இதன் காரணமாக A, B உடன் ஐக்கியம் கொள்ளவதை விட்டு விடாதிருக்கவேண்டும். அப்படி ஐக்கியத்தை விட்டுவிடுவது, அவனை நியாயந்தீர்ப்பது அல்லது குற்றப்படுத்துவதாகும். ஆனால், "விஷயம் மிகச்சாதாரணமானது, இது சகேதரருக்கிடையில் இருக்கிறபடியினால் நான் அதை விட்டு விடுவேன், ஏனெனில் B ஆண்டவருக்குள் இருக்கிற ஒரு சகோதரனாக இருக்கிறார், ஆனபடியால் வேண்டுமென்று அவன் எனக்கு தவறு செய்யமாட்டான், தவறு என்னுடையதாக இருக்கக்கூடும் அவனுடையதல்ல" என்று அவன் தனக்குள் சொல்லிக் கொண்டு அந்த பிரச்சனையை விட்டுவிடலாம்.

இந்த முடிவை எடுக்க முடியாத பட்சத்திலும் A,B க்கு எதிராக தீர்ப்பிடக்கூடாது. அதற்குப் பதிலாக A, B யினிடத்தில் சென்று விஷயமானது தனக்கு எப்படி தோன்றுகிறது என்று விளக்கமாகக் கூறி முடிந்தால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து சகோதரத்துவத்துடன் ஒரு தீர்மானத்திற்கு வர வேண்டும். ஆனால் அவர்கள் ஒத்து வராவிட்டால் சபையில் உள்ள ஞானமான, சகோதரர்கள் C, D சகோதரர்களிடத்தில் (இவர்கள் A மற்றும் B க்கும் நம்பிக்கைக்கு பாத்திரவான்களாக இருக்கவேண்டும்) சென்று, பிரச்சனையைக்கூற வேண்டும். இவர்கள் B யை குற்றவாளி என்று தீர்ப்பிடாமல், முதலில் அவரின் காரியத்தையும் தெளிவாக கவனிக்கவேண்டும். இப்படியாக A மற்றும் B இருவர் முன்னிலையில் பிரச்சனைகளை தீர விசாரித்து, ஆலோசனை சொல்லவேண்டும். இது எல்லோருக்கும் திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கும் - விசேஷமாக எல்லோரும் அன்பின் ஆவியை உடையவர்களாகவும், அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தின் அங்கங்களாகவும் இருந்து ஒருவருக்கொருவர் நன்மை செய்யவேண்டும் என்ற வாஞ்சையுடன் காணப்படும் போது அப்படியிருக்கும். இன்னமும் அவர்கள் மத்தியில் சமாதானம் எற்படவில்லை என்றால், அப்பொழுதும் கூட தீர்ப்பு சொல்லாமல், அந்தப் பிரச்சனையை சபைக்குமுன் கொண்டுவர வேண்டும்.

ஆனால் C,D யினிடத்தில் A சென்ற போது அவர்கள் தங்களுடைய கருத்தை Aக்கு எதிராகவும் Bக்கு சாதகமாகவும் தெரிவித்தார்களானால் அந்த விஷயம் அங்கேயே முடிவு பெறும். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் A இந்த விஷயத்தை சபைக்கு எடுத்துச் சொல்ல முடியாது. இந்த விஷயத்தை இன்னும் தொடர வேண்டும் என்று எண்ணுவாரானால், அவர் மூர்க்க குணமுள்ளவராக இருக்கவேண்டும். அவருக்கு ஆண்டவருடைய போதனைகள் இதற்கு மேல் அதிகமாக சிலாக்கியங்களை கட்டளையிடவில்லை. (மத் 18:15) இன்னமும் அவன் திருப்தி அடையாவிட்டால், இன்னும் இரண்டு அல்லது மூன்று திறமையுள்ள எந்தப் பக்கமும் சாயாமல், நடு நிலை வகிக்கும் மனதுடடைய சகோதரர்களான E,F,G இன்னொரு முறை விஷயத்தைக் கூறி அவர்களுடைய கருத்தைப் பெறலாம்.

ஆனால், A,C யையும் D யையும் B யினிடத்தில் கொண்டு சென்று, அவர்கள் எல்லோருமே A சொல்லுகிறபடி B அவருக்கு தவறு இழைத்து விட்டார் என்று ஒருமுகமாக ஒத்துக் கொண்டாலும் தன்னுடைய நிலையை விட்டுக் கொடுக்க மறுத்தாலோ, அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் மறுத்தாலோ அல்லது தவற்றை சரி செய்யாமல் விட்டு விட்டாலோ, A,C மற்றும் D உடனும் இணைந்து சபையின் ஒரு கூட்டத்தைக் கூட்ட வேண்டும். A மற்றும் B முழு பிரச்சனையையும் சபைக்கு முன் சொல்லவேண்டும். அதே நேரத்தில் B இன்னமும் சபையில் இருக்கவும், சபையின் ஆலோசனையையும், அதிகாரத்தையும் ஏற்றுக் கொள்ளுபவராகவும், அதோடு கூட மனசாட்சி உள்ளவராகவும் இருப்பது அவசியம். சபை அந்த விஷயத்தை கேட்கும்போது, நீதிமான்களாக்கப்பட்டு, அர்ப்பணித்தவர்கள் மட்டுமே அங்கு சபையாக கூடி வர வேண்டும். ஏனெனில், அவர்கள், தீர்ப்பு அளிக்கும்படி அவர்களுடைய தலைவரும் ஆண்டவரின் நாமத்தில் அவருடைய நியாயத்தை வழங்க இருக்கிறார்கள். இது சபையில் பாகுபாடு உண்டாவதற்கான ஒரு விஷயமாக அல்ல, மாறாக சபையின் ஒற்றுமையையும் சமாதான கூட்டையும் காத்துக் கொள்ளுவதற்காகும். A மற்றும் B வழக்கு பதிவு செய்யக்கூடாது. மேலும், இந்தக் காரியத்தில் ஆண்டவருடைய தீர்ப்பை மட்டுமே வழங்க வேண்டும் என்று விருப்பமுள்ளவர்கள் வழக்கு பதிவு செய்யக்கூடாது. எடுக்கப்படுகிற தீர்மானம் ஒருமனப்பட்ட அனைவரின் தீர்மானமாக இருக்கவேண்டும், அப்படி இல்லாவிட்டால் நடைமுறைக்கு சாத்தியமானதாக இருக்கவேண்டும், அதிகமான உணர்ச்சிவசப்படுதல் கட்டுப்படுத்தப்பட வேண்டியதாக இருந்தாலும் கூட, தீர்மானம் ஒரே மனதாக இருக்கவேண்டும். "நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு" (கலா 6:1) என்பதின்படியாக நியாயம் எப்பொழுதும் இரக்கத்துடன் கலந்து இருக்கவேண்டும்.

சபையின் முடிவை அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இப்படி ஒழுக்கத்தைக் குறித்தான ஒரு விஷயத்தில் (மனசாட்சியைப் பற்றியதல்ல) யாராவது ஒருவர் அதன்படி கீழ்ப்படியாவிட்டால் அல்லது அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால், அவன் சபைக்கு எதிர்த்து நிற்பதை விடும் வரை மற்றவர்களுக்கு (அவன் அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் இருப்பான்." அவன் கீழ்ப்படியும் பட்சத்தில், மன்னிக்கப்பட்டு முன்பு இருந்த மாதிரியே ஐக்கியத்திற்குள்ளாக சேர்த்துக் கொள்ளப்படுவான். இதன் நோக்கம் என்னவெனில், சகோதரனை

முற்றிலுமாக ஒதுக்கிவைத்து விட வேண்டும் என்பதல்ல, ஆனால் அவருடைய தவறான வழியை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று காட்டுவதன் மூலம் அவன் திருந்துவதற்காக உதவி செய்வதாகும். இப்படியான ஒருவனை அஞ்ஞானியைப் போலவும் ஆயக்காரனைப் போலவும் நடத்துவது, அவன் ஒதுக்கி வைக்கப்பட்ட பின்னரும் அவனைப் பற்றி அவதூறாக பேசுவதற்கோ அல்லது அவமரியாதை செய்வதற்கோ அல்ல. ஆண்டவருடைய ஜனங்கள் எந்த வேளையிலும் அவதூறு பேசுகிறவர்களாகவோ அல்லது முதுகுக்குப்பின் பேசுகிறவர்களாகவோ இருக்கக்கூடாது. "பிறனைப் பற்றி பொல்லாப்பு பேசாதே" என்பதே இதற்கு மிக பொருத்தமாய் இருக்கிறது. நாம் பொல்லாங்கும் பேசக்கூடாது. அல்லது அஞ்ஞானிகளையும் பாவிகளையும் கடுப்பாக பார்க்கக்கூடாது, மேலும் அவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளாமலும் இருக்கக் கூடாது. ஆனால் பரிசுத்த ஆவியினாலும், அதன் அன்பினாலும் சமாதானத்திலும் நிறைந்து இருக்கின்ற புது சிருஷ்டியின் சகோதருக்கு உரித்தான மரியாதையும், விசேஷமான ஐக்கியத்தையும் அவர்களுக்கு கொடாதிருக்கவேண்டும்.

F583 [p1] through F586 - மனசாட்சியுடன் தலையிடுவது (33ம் கேள்வியை காண்க)

"அந்நிய காரியங்களில் தலையிடுவதினால்", புதுசிருஷ்டியின் புதிய மனங்கள் முற்றிலும் மாறுபடும். அப்போஸ்தலர் இதை கடுமையாகக் கண்டிக்கிறார். (1தீமோ 5:13, 1பேது 4:15) மற்றவர்களின் காரியங்களில் துணிகரமாக தலையிடுவது தேவையற்ற காரியமாக இருக்கிறது. சில நேரங்களில் அந்த காரியத்தைக் குறித்து அறியாத போதிலும் அதில் சம்பந்தம் இல்லாமல் தலையிடுவார்கள். ஆனால், இந்த உலகத்தின் பிள்ளைகள் கூட தற்போதைய வாழ்நாளில் போதுமான அளவு தெளிந்த புத்தியுள்ளவர்களாக, தன்னுடைய சொந்த அலுவல்களைச் சரியான முறையில் பார்க்கும்படிக்கு தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகிற அளவுக்கு, தங்களுடைய சந்ததியிலே ஞானமுள்ளவர்களாக நடந்துகொள்கிறார்கள். மேலும், அவர் மற்றவர்களுடைய விஷயங்களில் தலையிடுகிறவராகவும், மற்றவர்களுக்கு புத்திசொல்லும் அளவுக்கு திறமை உள்ளவராகவும் இருப்பதாக காண்பித்துக்கொண்டு, அதன் விளைவாக மற்றவர்களுடைய வியாபாரத்திற்கு போதுமான அளவு நேரம் ஒதுக்குவாராகில், அவர் நிச்சயமாகவே ஒரு குறிப்பிட்ட அளவுக்கு தன்னுடைய விஷயங்களை அலட்சியம் பண்ணுகிறவராக இருப்பார். தெளிந்த புத்தியின் ஆவியினால் கர்த்தருக்குள் பிறந்த புதுசிருஷ்டிகள் இந்த உண்மையை அறிந்து கொள்ளவேண்டும். மேலும், மற்றவர்களுடைய விஷயத்தில் தலையிடுவதற்கு உலகத்தாரைக் காட்டிலும் தனக்கு நேரம் இன்னும் குறைவாக இருக்கிறது என்பதை உணரவேண்டும். ஏனெனில், தங்களுடைய நேரம், தாலந்து, செல்வாக்கு அனைத்தையும் ஆண்டவருக்கும் அவருடைய ஊழியத்திற்கும் அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

இப்படிப்பட்டவர்கள் இயற்கையாகவே இந்த விஷயத்தில் தெளிந்த புத்தி இல்லாதவர்களாக இருந்தால், வேதாகமத்தில் உள்ள கட்டளைகளால், அவர்களுடைய உடன்படிக்கையின் பலியை நிறைவேற்றுவதற்கான காலம் குறுகியதாக இருக்கிறது என்ற உணர்வினால் சரியான வழியில் நடக்கும்படி பலவந்தப்படுத்தப் படுவார்கள். மேலும், புது சிருஷ்டிக்குரிய கட்டளையான, பொன்னான கட்டளை அடுத்தவர்களின் விஷயத்தில் தலையிடுவதை தடுக்கிறது என்பதையும் அவர்கள் உணர வேண்டும். நிச்சயமாகவே, மற்றவர்கள் தங்கள் விஷயங்களில் தலையிடுவதை யாரும் விரும்பமாட்டார்கள். ஆகவே, அவர்களும் செய்யாதபடி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். ஆனாலும் பொதுவாக உலகத்தின் ஆவி இதற்கு எதிர்மாறாக உள்ளது என்று அப்போஸ்தலர் உணர்ந்து, அதன்படி இதைக் குறித்து பரிசுத்தவான்கள் அறிந்து, அப்பியாசப்படுத்திக்கொண்டு, கற்கவேண்டும் என்று அவர்களை எச்சரிக்கிறார். "அமைதலுள்ளவர்களாய் இருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும்..... வேண்டுமென்று புத்திசொல்லுகிறோம்" (1தெச 4:12) என்று கூறுகிறார்.

மற்றவர்களுடைய அலுவல்களைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க முற்படுகிற இயற்கையான குணம், அவர்களை திருத்தும்படியாக ஒரு கரம் நீட்டுவதும், ஒருவன் தன் கண்ணிலுள்ள உத்திரத்தை அசட்டை பண்ணிவிட்டு, மற்ற சகோதரனின் கண்ணிலுள்ள துரும்பை எடுக்க முற்படுவதும், ஆண்டவர் விளக்கமாக கூறுகிறார். (மத் 7:3-5) சில சமயங்களில் புது சிருஷ்டியை ஒரு புதுமையான வழியில் தாக்குகிறது. அவன், புத்திமதி கூறுவதும், விசாரிப்பதும், கடிந்துகொள்ளுவதும், கண்டிப்பதும் தன்னுடைய கடமை என்று நினைக்கிறார். விஷயத்தை

தன்னுடைய மனதில் எடுத்துக் கொள்ளும்போது, அப்படிச் செய்யாவிடில் அது பாவமாக இருக்கும் என்று தன்னை திருப்திபடுத்திக் கொள்ளுகிறார். இப்படி, அவன் வீண் அலுவற்காரன் என்று நாம் சொல்லுகிற அளவுக்கு மற்றவர்களின் விஷயத்தில் தலையிடுகிறவனாகி விடுகிறார். இப்படித் தவறாக வழிநடத்தப்பட்ட மனசாட்சியினிமித்தம், எதிர்க்கக்கூடியதாகவும் ஆகிவிடுகிறது. அநேக தடவைகளில், பணிவுள்ள நல்ல ஜனங்கள் உண்மையான புதுசிருஷ்டிகள் ஆண்டவருடைய ஊழியத்தில் அவர்கள் செய்ய முற்படுகிறதெல்லாவற்றிலும், இந்தக் குறைபாட்டினால் தடை பண்ணப்படுகிறார்கள். ஒவ்வொருவரும் தன்னை கட்டுப்படுத்தி, நீதியின் கொள்கைகளை அப்பியாசப்படுத்தவும், கற்றுக்கொள்ளவும், ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவைகளை நேசிக்கவும் வேண்டும். அவன் சகோதர கடமைக்கும், மற்றவர்களின் அலுவல்களில் தலையிடுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தைக் காணும்படி, தன்னுடைய மனசாட்சிக்கு கற்பிக்க வேண்டும். நாம் பார்த்தபடி, பெரும்பாலான ஆண்டவரின் ஜனங்கள், மாத்திரமல்ல உலகத்தாரும்கூட, நீதி, மற்றும் அன்பின் கொள்கைகள் பொன்னான கற்பனையில் இணைக்கப்பட்டிருப்பதை விரும்பி வந்தபின்னரும், அதை வாழ்க்கையின் அலுவல்களிலும், மற்றவர்களோடு பழகும்போதும் நடைமுறைப்படுத்தும் வேளையில், கடிந்துகொள்ளுதலும், அதட்டுவதும், தவறு கண்டுபிடிப்பதும், எடுத்துப் போடுவதும் மிகக்குறைவாயிருக்கக்காண்பார்கள்.

இதேபோன்று, எந்த விஷயத்தையும் விசாரிப்பது நல்லது, அது என்னுடைய வேலையா ? நாம் உலகத்தாரோடு பழகும்போது, பொதுவாக கவனமாக ஆராய்ந்து பார்க்கும் வேளையில், அவர்களை கடிந்துகொள்ளுவதோ, அல்லது கண்டிப்பதோ, அல்லது அதட்டுவதோ நம்முடைய வேலையல்ல என்று காண்கிறோம். நாம் ஆண்டவரால் அழைக்கப்பட்டிருக்கிறோம். குறுகலான பாதையில் நடக்கும்படியாக உலகத்தின் பாதையிலிருந்து திரும்பியுள்ளோம். அதுவே நம்முடைய வேலை, நாம் ஆண்டவரை பின்பற்றும்படியாக உலகம் நம்மை தனியே விட்டுவிட வேண்டும் என்று வாஞ்சிக்க வேண்டும். அதேபோன்று உலகத்தின் கவலைகளை நாம் தனியே விட்டுவிட்டு, நம்மையும் நம்முடைய சுவிசேஷ செய்தியையும் "கேட்கிறதற்கு காதுள்ளவனிடத்தில்" கூறவேண்டும். உலகமானது, ஆண்டவரால் அழைக்கப்படவில்லை, "இடுக்கமான வாசலுக்குள்" வரவில்லை. ஆகவே அது தன் வழியைத் தெரிந்துகொள்வதற்கும், நாம் அதன் வழியில் குறுக்கிட மாட்டோம் என்று எதிர்பார்க்கவும் அதற்கு உரிமை உண்டு, ஏனெனில், நாமும் நம்மில் குறுக்கிடுவதை விருப்பப்படமாட்டோம். இது நம்முடைய வெளிச்சம் பிரகாசிப்பதை தடை பண்ணாது, இப்படியாக, நாம் மற்றவர்களின் விஷயத்தில் தலையிடாமலும், கண்டிக்காமலும் இருந்தாலும், நாம் மறைமுகமாக உலகத்தின்மேல் தொடர்ச்சியாக செல்வாக்கை அப்பியாசப்படுத்திக்கொண்டிருப்போம். விஷயம் வியாபாரத்தைப் பற்றி இருக்கும் போது, அதில் நாம் பணம் சம்பந்தமாக அக்கறையுள்ளவர்களாக இருக்கும்போது, அப்பொழுது அது மற்றவர்களுடைய விஷயத்தில் தலையிடுவதாகாது. அது நம்முடைய காரியத்தையே பார்ப்பதாகும். அதில் முறைப்படியான கவனம் செலுத்துவதாகும். குடும்பத்திலும் வீட்டிலும் நடைபெறுகின்ற எல்லா காரியங்களைக் குறித்தும் பெற்றோர்கள் ஓர் அறிவுள்ள வழியைக் காட்டுவது, தலையிடுதல் ஆகாது. இருந்தாலும், இங்கு கூட குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரின் தனிப்பட்ட உரிமைகள் கவனிக்கப்படவேண்டும், பாதுகாக்கப்படவேண்டும். புருஷனும் குடும்பத்தின் தகப்பனும் அதன் தலைவராகவும், முழு அதிகாரம் உள்ளவராகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கும்போது, அந்த அதிகாரத்தை அன்புடன்கூடிய நிதானத்துடனும், ஞானமுள்ள சிந்தனையோடும் பயன்படுத்த வேண்டும். மனைவியின் தனித்தன்மையும், அவளுக்கு பிடித்தமானவைகளும், அவனுடைய கவனத்தில் இருக்கவேண்டும். அவளும், அவனுடைய பிரதிநிதியாக அவனுக்கு உதவி செய்யும் துணையாக, வீட்டை பராமரிக்கிறவளாக, அவளுடைய விசேஷமான வரம்பிற்குட்பட்டு, முழு அதிகாரமும், ஆளுகையும் அவளுக்கு கொடுக்கப்படவேண்டும். மேலும் அவன் இல்லாத வேளையில், குடும்பத்தின் எல்லா காரியங்களைப் பொறுத்தவரையிலும் அவனுடைய அதிகாரத்தை, பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். பிள்ளைகளுக்கும் கூட, அவர்களுடைய வயதின்படி போதுமான அளவு தனிப்பட்ட முறையில் இடமும், அவர்களுடைய விஷயங்களில் தனித்தன்மையும் கொடுக்கப்பட வேண்டும். பெற்றோர்கள் வீட்டின் ஒழுங்கு, சௌகரியத்தைப் பொறுத்த விஷயங்களில், வீட்டில் உள்ளவர்கள் மனதில், ஒழுக்கத்தில், சரீர பிரகாரமான விஷயங்களில் வளர்ச்சி பெறுவதைக் குறித்து, அவனுடைய அதிகாரத்தையும் மேற்பார்வையையும் மாத்திரமே அப்பியாசப்படுத்த வேண்டும். பிள்ளைகள் சிறு வயதிலிருந்தே ஒரு குழந்தை மற்ற குழந்தையிடம் குற்றம்

கண்டுபிடிக்காமலிருக்கவும், ஆனால் மற்றவர்களுடைய உரிமையை மதிக்கவும், பொன்னான கற்பனையின்படி மற்றவர்களுக்கு தயாளத்துடனும், அன்புடனும், உதவவும் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

வீண் அலுவற்காரராய் இருப்பவர்களுக்கு எதிராக உள்ள எச்சரிக்கையை நினைப்பதற்கு சபையைத் தவிர வேறு இடம் கிடையாது. சகோதரர்கள் வசனத்திலிருந்தும், கட்டளையிலிருந்தும், மூப்பர்களின் உதாரணத்திலிருந்தும் சீக்கிரமாக கற்றுக்கொள்ள வேண்டியதென்னவெனில், மற்றவர்களின் விஷயத்தில் தலையிடுவதோ, மற்றவர்களைப் பற்றி விவாதிப்பதோ தேவனுடைய சித்தம் கிடையாது என்பதே யாகும். ஆனால் மற்ற இடத்தில் உள்ளது போலவே இங்கேயும் ஒருவரைக் குறித்தும் பொல்லாங்கு பேசாதே" என்கிற திவ்விய கட்டளை உரியதாக இருக்கிறது. நமக்கு நேரிடையாக அக்கறையில்லாத மற்றவர்களுடைய தனிப்பட்ட விஷயங்களில் தலையிடுதல், பொல்லாப்பு பேசுவதற்கும், புறங்கூறுவதற்கும், கோபம் அடைவதற்கும், பொறாமை அடைவதற்கும், வெறுப்பு அடைவதற்கும், சண்டையிடுவதற்கும், பல்வேறு மாம்சீகத்தின் காரியங்களிடத்திற்கும், பிசாசினிடத்திற்கு வழி நடத்தும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார். (கொலோ 3:5-10) இப்படியாக, அநேக வேளைகளில் அவதூறு பேசும் பழக்கத்தின் சிறிய விதைகள் விதைக்கப்படுகின்றன, கசப்பின் பெரிய வேர்கள் வளருகின்றன, அதன்மூலம் அநேகர் தீட்டுப்படுகிறார்கள். புதிய மனம் உள்ள அனைவரும் இந்தப் பொல்லாங்கின் விஷத்தன்மையை உணருகிறார்கள். அவர்கள் எல்லாரும் தங்களுடைய வீடுகளிலும் அயலகத்திலும் முன்மாதிரியாக இருக்கவேண்டும். மாம்சீக மனம், கொலை செய்வதும் கொள்ளையடித்தலும் தவறு என்று உணரலாம். ஆனால் திவ்விய பிரமாணத்தின் ஆவியை பெற்றவர்களுக்கு, இன்னும் ஓர் உயர்வான நீதியின் எண்ணம், அதாவது அவதூறு கூறுவது என்பது ஒருவருடைய குணாதிசயத்தை கொலை செய்வதாகும், மேலும் எந்த வழியிலாவது அயலானின் நல்ல பெயரைத் திருடுவது, கொள்ளையடிப் பதாகும் என்ற எண்ணம் தேவைப்படுகிறது. உலகப்பிரகாரமான எண்ணம் உடையவர்கள் இந்த விஷயத்தை ஓர் அளவுக்கு கிரகித்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய உணர்வுகள் புலவரின் வார்த்தையில் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது - "என்னுடைய பணப்பையைத் திருடுகிறவன் குப்பையைத் திருடுகிறான்..... ஆனால் என்னுடைய நல்ல பெயரைத் திருடுகிறவன் அவனை செழிப்பாக்காத ஒன்றைத் திருடுகிறான், ஆனால் என்னை உண்மையிலேயே தரித்திரமாக விட்டுவிடுகிறான்."

சங்கிலியாண்டபுரம் வேத மாணவர்கள்,

திருச்சி.

Cell : 9244611241, 9688975724

மனத்தாழ்மை மற்றும் சாந்தம்

1. இவ்விரு கிறிஸ்துவ குணங்களுக்கு தேவன் எவ்விதத்தில் முக்கியத்துவம் கொடுக்கிறார்?

1பேதுரு 5: 5-6 "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள், நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துக்கொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றக்காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்."

1பேதுரு 3:4 "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது, அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது."

சங் 147:6 " கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார், துன்மார்க்கரைத் தரைமட்டும் தாழ்த்துகிறார்."

சங் 149 :4 "கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார், சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார்."

F 90[P1]: -

புது சிருஷ்டியாக அழைப்பு கொடுக்கப்படும் யாவருக்கும் - "மனத்தாழ்மையை" ஒரு காப்பீட்டு கட்டணமாக தேவன் தெளிவாக குறிப்பிட்டிருப்பதை இந்த வசனங்கள் காட்டுகிறது. ஆகவே - "ஏற்றக்காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்."என்று பேதுரு குறிப்பிடுகிறார். கிறிஸ்து இயேசு தன்னைத் தாழ்த்தி, அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராக இருந்தது போல, நாமும் அவருடைய மாதிரியை பின்பற்றும்படி பவுல் நமக்கு எழுதுகிறார். ஆகையால் தேவன் அவரை எல்லாவற்றிருக்கும் மேலாக உயர்த்தினார். ஆகவே -" பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." என்று பேதுரு குறிப்பிடுகிறார். ஏனெனில், சகோதரரே நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள் மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. உலகத்தில் பலவீனமானவைகளையும், விசுவாசத்தில் ஐசுவரியவான்களையும், அடிப்படையில் மனத்தாழ்மையுள்ளவர்களையும் தேவன் தெரிந்து கொண்டிருக்கிறார். தேவனை முழு மனதோடு நம்புவதற்கு கற்றுக்கொண்ட புதுசிருஷ்டிகள், அவருடைய கிருபையை மட்டும் போதும் என்று எண்ணி, அதனால் பலப்பட்டு, தேவன் அழைப்பில் வெற்றிப்பெற்று உயர்த்தப்படுவார்கள்.

E 254 [P2]:

நாமும் முழு மனுக்குலமும் விரும்பும் காரியம் - ஆரோக்கியமான உள்ளம். ஆனால் பொதுவாக உலகத்தாரின் மனநிலைகளும், உடல் நிலைகளும் குணமடையும் காலம், குறிப்பாக ஆயிரவருட ஆட்சியில், பரம வைத்தியரின் கரங்களில் உள்ளது. அந்தக் காலமும், அந்தக காலத்தின் ஆசீர்வாதங்களும், விடுதலையும் தேவன் குறித்த காலம் வரும் வரையில் செயல்படாது. இதற்கு இடையில், சுவிசேஷ யுகத்தில் அழைக்கப்பட்ட சபை, அவருடைய ஆண்டவர் மூலமாகவும், அவருடைய வார்த்தைகளின் மூலமாகவும், அவருடைய பரிசுத்த ஆவியைப் பெறும். அதாவது குமாரன் பெற்றிருக்கும், அதே பிதாவின் சிந்தையை இவர்களும் பெறுவார்கள். இவ்வாறாக, தேவ ஆவியை பெற்ற ஒவ்வொரு அங்கத்தினர்களும், இந்த முழுமனுக்குலத்தின் பொதுவாக பிரச்சனைகளையும், உபத்திரவங்களையும், இயற்கையான மனச்சோர்வுகளையும் நீக்குவதற்கு தாங்கள் பெற்றச் சிறப்புரிமையை முழுமையாக பயன்படுத்துவார்கள். " அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது, உங்களில் எவனானாலும் தன்னைக் குறித்து எண்ணவேண்டியதற்கு (மாம்சத்திற்குறியவைகளை அல்ல, ஆவிக்குரியவைகளை) மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்" (ரோமர் 12:3) என்று அப்போஸ்தலன் மூலமாக தேவனுடைய வார்த்தைகள் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அநேகரை ஜெயித்து, தாங்கள் பெற்ற தாலந்துகளுக்கு ஏற்றவாறு, செயல்பட்டு,

நல்ல ஆவியை இருதயத்தில் வளர்த்து, தங்களுக்குள்ள பெருமையை கீழ்ப்படுத்தி, தங்களுடைய மேட்டிமையான எண்ணங்களைக் கட்டுப்படுத்தி, "ஆவியில் எளிமையானவர்கள் பாக்கியவான்கள், பரலோகராஜ்யம் அவர்களுடையது..." என்ற எஜமானனுடைய வார்த்தைகளின்படி முழுமையாக வாழ்வதற்கு, அநேக காரியங்களில் போராட வேண்டியதாக இருக்கிறது. அப்போஸ்தலர்களுடைய வார்த்தைகளையும் இதை வலியுறுத்துகிறது. "தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.." (யாக் 4:6) "...ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.... ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்." (1பேது 5:5,6)

A83 [P2] : -

மேலும், அநேக அடிகளையும், உபத்திரவங்களையும் பொறுமையோடு சகித்து, செப்பனிடப்பட்டு, நமக்காக நம்முடைய ஆண்டவர் தன்னுடைய ஜீவனை கொடுத்ததை மனதில் வைத்தவர்களாக, எந்தவிதமான சுயநலத்திற்கும் இடமில்லாமல், அவருடைய குணங்களை நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய ஆண்டவரை மாதிரியாகக் கொண்டு நாம் பிரதிபலித்து, அவரை போல் மறுரூபமாக வேண்டும். சுயநலமான எந்த நோக்கத்திற்காகவும் நாம் அவருடைய சித்தத்தை நமக்குள் நிறைவேற்றாதபடிக்கு , நாம் மிகவும் மனத்தாழ்மையுள்ளவர்களாக தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும். இப்படியாக, நாம் அவருடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியிருந்தால், நம்முடைய தலையாகிய கிறிஸ்துவை உயர்த்தினது போல நம்மையும் நிச்சயமாக உயர்த்துவார். (1பேது 5:5,6, பிலி 2:8,9)

R 1920[col. 2P2-4] :-

மிக குறைவான தாலந்துகளை பெற்றிருக்கும், வலுவற்ற கருவிகளையும் அவர் ஆண்டவரின் பணியில், பயன்படுத்துவதினால், அவர்களை மிகவும் உயர்ந்தநிலைக்கு உயர்த்தப்பட்டு, அதிகமான ஆசீர்வாதங்களை ப்பெறுகிறார்கள். ஆனால் சில நேரங்களில் அதே ஆசீர்வாதம் அவர்களுக்குள் பெருமையையும், வீண் புகழ்ச்சியையும் வளரக்கூடிய சாபமாக மாறிவிடுகிறது. இது ஒரு கேடான மாம்ச சிந்தைக்குரிய இயல்பாக இருக்கிறது. நம்முடைய எதிராளி மிகவும் தந்திரமாக இந்தக் காரியத்தை அவனுக்கு சாதகமாக பயன்படுத்திவிடுகிறான். அதற்குப்பின், பொருளாதாரத்தில் குறைவுள்ளவர்களுக்கு மட்டும் அல்ல, அறிவிலும், ஞானத்திலும் குறைவுள்ளவர்களுக்கு மட்டும் அல்ல, தேவனுடைய வார்த்தைகளில் குறைவுள்ளவர்களுக்கு, தேவன் கொடுத்த வசனங்களே அவர்களுக்கு தடுக்கலின் கல்லாக மாறிவிடுகிறது. "தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள், தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது..." (லூ 6:20) என்ற ஆண்டவரின் வார்த்தைகளை அவர்கள் மறந்துவிட்டிருக்கலாம் அல்லது "ஆவியில் எளிமையுள்ளவர்கள்" என்ற வசனத்தை மறந்திருக்கலாம். மேலும், அறியாமையில் உள்ளவர்கள், அறிவைப் பெற்றவர்கள், தரித்திரர்கள், ஐசுவரியவான்கள் மற்றும் அனைவருமே தங்களுடைய மாம்ச சிந்தையில் மேட்டிமையான எண்ணங்கள் கொண்டு விடுவார்கள் என்பதையும் மறந்துவிட்டார்கள். "ஒருவன், தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாவான்" (கலா 6:3) விசேஷமாக கிறிஸ்துவ குணலட்சனங்கள் குறைவுப்படும் இடங்களில், இப்படிப்பட்ட வஞ்சனைகள் நடைபெறலாம். சத்தியத்தின் அறிவினால் ஆசீர்வதிக்கப்பட்ட ஐசுவரியவான்களானாலும் சரி தரித்திரரானாலும் சரி "இவர்களுக்குள் "மனமேட்டிமையும்" வளருவதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதினால், தாழ்மையையும், சாந்தத்தையும் தங்களுக்குள் வளர்த்துக்கொள்ளவேண்டும். மேலும் "எதிர்பேசுபவர்களை சத்தியத்தை அறியும்படி" மனத்தாழ்மையுள்ளவர்களாகவும், சாந்தத்தோடும் மிக பொறுமையுடனும் நடந்துகொள்ளவேண்டும். (எபே 4:2, 11தீமோ 2:25)

ஆகவே எல்லாவற்றிற்கும் மேலாக நாம் நம்முடைய பணிவை காத்துக்கொள்ளவேண்டும். நாம் நம்முடைய பார்வையில் சிறியவர்களாக தோன்றினால் மட்டுமே தேவன் நம்மை பாதுகாப்போடு பயன்படுத்த முடியும், மேலும் நேர்மை மற்றும் விசுவாசத்திற்கான எல்லா சோதனைகளுக்கும் தேவன் நம்மை மறைத்து கொள்வதில்லை. ஆகவே இன்றைக்கு நீங்கள் செய்த கிரியைக்கு தேவன் உங்களை சற்று உயர்த்தினால் அல்லது உங்களது பணியில் பெற்ற வெற்றிக்கு கொஞ்சம் ஊக்கம் அளித்தால் - இதற்கு நீங்கள் அபாத்திரர் என்றும், தேவனால் அங்கீகரிப்பதற்கு

உங்கள் வேலை அபூரணமானது என்பதையும் முழுமையாக மனதில் கொண்டு அதை சந்தோஷத்துடனும், மனத்தாழ்மையுடனும் பெற்றுக்கொண்டு தடுமாறக்கூடிய உங்கள் மாம்ச பலவீனத்தை சீராக்கிக்கொள்ள, நாளைய தினத்திற்கு தேவைப்பட்ட மனத்தாழ்மையையும், தன்னடக்கத்தையும் பெற்றுக்கொள்ள ஆயத்தப்பட வேண்டும். நேற்றைய தினத்தில் பெற்ற வெற்றி, இன்றைய தினம் உங்களை கோபத்திற்குள்ளாக்காதபடி எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் நீங்கள் இந்நாள் வரைக்கும், ஆவிக்குரிய வகையில் முழுமையாக வளர்ச்சியடையவில்லை என்பதை மறந்துவிடக்கூடாது. சத்தியத்தின் எக்காளம் நமக்குள் எவ்வளவாக இருந்தாலும், மாயையின் மத்தியில் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆகவே அப்போஸ்தலனாகிய பவுலின் அனுபவங்களை நாமும் பொறுமையோடே பெற்றுக்கொள்ளுவோம். "என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை, ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்பதியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு." - பிலி 4:11-13

தம்முடைய ஜனங்கள் பெருமை கொள்ளாதபடியும், சுயநலமற்றவர்களாக இருக்கும்படி தேவன் மிகுந்த ஜாக்கிரதையோடு அவருடைய ஜனங்களை வழிநடத்துவதை நாம் காணலாம். தேவன் இஸ்ரயேலரை அவருடைய விசேஷித்த ஜனங்களாக தெரிந்துக்கொண்டபின் அவர்களை நானூறு வருடங்கள் அடிமையாக அனுமதித்தார். அதற்குப் பின் அவருடைய பலத்த கரத்தால் அவர்களை மீட்டு, வாக்குத்தத்தம் செய்த தேசத்திற்கு அழைத்து வந்தார். தேவனால் தேர்வு செய்யப்பட்ட இரட்சகராம் மோசே, பிறப்பினால் மிக எளியவராக இருந்தார். அவர் திக்கு வாயனாக இருந்தபடியால் ஆரோன் அவருக்கு உதவ வேண்டியதாக இருந்தது. அதே போல் பவுல் மூன்றுமுறை ஜெபித்த போதும் தேவன் அவருடைய பலவீனத்தை போக்காமல், மாம்சத்தில் அதை அனுமதித்து "என் கிருபை உனக்கு போதும், உன் பலவீனத்தில் என் பலம் பூரணமாக விளங்கும்" என்று தேவன் பதில் அளித்தார். (அதாவது, அவருடைய பலம், அபூரணமான மண்பாண்டத்தில் கிரியை செய்யும் போது, நிச்சயமாக இது தேவனுடைய செயல் என்று மனிதர்களால் உணரமுடியும். ஒரு வேளை பவுல் எல்லாவற்றிலும் திறமை வாய்ந்தவராக இருந்திருந்தால், நிச்சயமாக அனைவரும் பவுலின் திறமையைக் குறித்தே புகழ்ந்திருப்பார்கள். அதே நேரத்தில் தேவனுடைய வல்லமை - பவுலின் வழியாக செயல்படும் போது தேவனுடைய கிரியைகள் மகிமைப்படுத்தப்பட்டு, அவருடைய கிருபைக்கான சாட்சி அதிக கனம் பெறும். இப்படியாக, தேவன் தம்முடைய கிருபையையும், மகிமையையும் விளங்கச் செய்வதற்கு, பலவீனமும், மனத்தாழ்மையுமாக தங்களையே முழுமையாக அர்ப்பணிப்பவர்களை பயன்படுத்துகிறார்.)

R 2700 [col. 1 last P]: -

இது இயல்பான மனிதனுக்கு மட்டும் அல்ல, தேவனோடு நல்லுறவு கொள்ள விரும்பும் யாவருக்கும் பொருந்தும். மேலும் "புது சிருஷ்டிகளுக்கு" தங்களுடைய முழு வாழ்க்கை பயணத்திற்கும் இந்தப்பாடம் மிகவும் அவசியம். பெருமைக்காகவும், சுயநலத்திற்காகவும் அல்ல மாறாக மிகுந்த மனத்தாழ்மையினால் மட்டுமே தெய்வீக கிருபைகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். தேவன் பெருமையுள்ளவர்களுக்கும், தங்களைக் குறித்து மேன்மை பாராட்டுபவர்களுக்கும் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார். தேவனுடைய கிருபையை மனத்தாழ்மையுள்ளவர்கள் மட்டுமே பெற முடியும் என்ற முக்கியத்துவத்தை யாக்கோபு இங்கு வலியுறுத்துகிறார். தேவனிடத்தில் அனுகுவதற்கு இதை தவிர வேறு வழி இல்லை என்பதையும் உறுதிப்படுத்துகிறார். தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் பெறுவதற்காக மட்டும் அல்ல அவர் ஏற்றக் காலத்தில் நம்மை உயர்த்துவதற்கும் அவருடைய பலத்த கரத்திற்குள் அடங்கி இருக்கவேண்டும் என்று பேதுரு குறிப்பிடுகிறார் -1பேது 5:5,6

2. மனத்தாழ்மை, சாந்தம் என்ற வார்த்தைகள் வசனங்களில் பரஸ்பரமாக மாற்றி பயன்படுத்தப்பட்டாலும், இவைகளுக்குள் உண்டான சரியான வித்தியாசம் என்ன?

R 2585 [col. 293] :-

ஆவியில் எளிமை என்பதற்கும் பொருளாதாரத்தில் எளிமை என்பதற்கும் குறிப்பான வித்தியாசம் உண்டு. பூமிக்குரிய காரியத்தில் எளிமையாக இருப்போர் ஆவிக்குரிய விஷயத்தில் பெருமையாக இருக்கும் அநேகரை கண்டிருக்கலாம். ஆனால் நம்முடைய பொருளாதாரமோ, நம்முடைய அறிவை சார்ந்த தாலந்துகளோ அல்லது மற்ற எந்தக் காரியமோ, தெய்வீக பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படும் காரியங்கள் அல்லது அங்கிகரிப்பை பெறும் காரியங்கள் மட்டுமே மனத்தாழ்மையில் நடப்பிக்கும் காரியங்களாகும். பரத்திலிருந்து ஞானத்தை பெறும் ஒவ்வொருவருக்கும் இப்படிப்பட்ட மனநிலை அவசியம் தேவைப்படுகிறது. இவர்கள் ஒவ்வொரு நொடியிலும், தங்களுக்குண்டான எல்லா குறைவுகளையும், மனத்தாழ்மையோடு உணரவேண்டும். இல்லா விட்டால் இக்காலத்தில், தேவன் கிருபையாக அளிக்க விரும்பும் ஞானத்தையும், ஆசீர்வாதங்களையும் இலவசமாக பெறமுடியாது. மேலும், ஆரோக்கியமான இருதயத்தைப் பெறுவதற்கு, மனத்தாழ்மையுள்ள மனதே அடிப்படையாக தேவைப்படுகிறது. ஆகவே ஒருவர் நீதியாக சிந்திக்கும் மனநிலையில் இருந்தால், அவர் நிச்சயமாக மனத்தாழ்மையுள்ளவராக இருப்பார். எனவே நாம் கிறிஸ்துவின் சிந்தயைப் பெறுவதற்கு முதலில் மனத்தாழ்மையாக இருக்கவேண்டும்.

R2586 [col. 1P2]: -

மூன்றாவதாக சாந்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று ஆண்டவர் உரைக்கிறார். அல்லது தன்னடக்கம் என்றும் கூறலாம். "தெய்வீக சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுத்து, பொறுமையாகவும், சாந்தத்தோடும் ஆன்மீக நோக்கங்களை கொண்டிருக்கிறது" என்று இதை குறித்து வெப்ஸ்ட்டர் அகராதி விளக்கம் அளிக்கிறது. பொறுமையோடும், சாந்தத்தோடும் தன்னை தெய்வீக சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பதற்கும், தங்களுடைய சுயநலத்திற்காக பொறுமையோடு இருப்பதற்கும் அநேக வித்தியாசங்கள் உண்டு. பட்டியலிலிருக்கும் முதல் குணமாகிய மனத்தாழ்மையைப் பெறாவிட்டால், பொறுமையோடு தெய்வீக சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பது கூடாத காரியமாகும். பெறுமையுள்ளவர்களும், சுயநலமானவர்களும் தெய்வீக சட்டத்திற்கு தங்களை கீழ்படுத்துவது இயலாத காரியம். அவர்கள் தங்களை உயர்த்தி, தங்களுடைய நியாயத்தீர்ப்பை (தேவன் அவர்களின் பாவங்களை கிருபையாக மன்னித்ததை) தவறாக பயன்படுத்தி, தெய்வீக பாதுகாப்பின் மேல் உள்ள நம்பிக்கை முற்றிலுமாக அற்றுப்போக தக்கதாக தங்களுடைய நல்மனசாட்சி தவறாக வழிநடத்திவிடுகிறது. ஆனாலும் அவர்கள் மிக சரியான பாதையில் நடப்பதாக எண்ணுகிறார்கள்.

R1962[col. 1 P 1]: -

மற்ற வார்த்தைகளுக்கு ஆண்டவர் தாமே திறவுகோலை தருகிறார். "என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். நான் சாந்தமும் மனத்தாழ்மையுள்ளவருமாக இருக்கிறேன்.." உண்மையில், இளைபாறுதலுக்குரிய ஆவி - சாந்தமும், அமைதியான இருதயத்திலே தங்கும். நீடிய பொறுமையை க்காத்துக்கொண்டு, தேவனுடைய சித்தத்தை பிரியத்தோடு செய்து, அவருடைய நம்பிக்கைக்கும் அன்பிற்கும் பாத்திரமாகி, அவருடைய ஞானத்தின் ஆலோசனைகளில் நடந்து, எல்லா தீமைகளையும் மேற்கொண்டு,சாதகமான சூழ்நிலையிலும், சாதகமற்ற சூழ்நிலையிலும் நல்ல சாட்சிகளுடன் வெளிப்படும் பட்சத்தில் நமக்குள்ளிருக்கும் சாந்தம் வளர்ச்சியடையும்.

3. சாந்தத்திற்கும், அறிவுக்கும் உள்ள தொடர்பு அல்லது சம்பந்தம் என்ன?

சங் 25 :9 "சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்."

F97[P2]: -

பரத்திலிருந்து வரும் ஞானத்தை பெற்றுக்கொள்வதற்கு, கேட்கிற காதுகள் மிக அவசியம், ஆனால் அப்படிப்பட்ட காதுகளை பெறுவதற்கு, இருதயத்தில் தகுதி பெற வேண்டும். தேவையான சாந்த குணம் மிக அவசியம். ஒருவேளை நாம் மிகவும் மேன்மையுள்ளவர்கள் என்று எண்ணினால், தெய்வீக பார்வையிலிருந்து நம்முடைய பலவீனங்களையும் அபாத்திரமான நிலையையும் உணருவதற்கு தவறிவிடுவோம். நாம் உண்மையில் யார் ? என்பதை

மனத்தாழ்மையோடு ஒப்புக்கொள்ள, நேர்மையான இருதயம் தேவைப்படுகிறது. இந்தக் கோணத்திலிருந்து நாம் பார்க்கும்போது நீதியின் மேல் வாஞ்சையுள்ளவர்களாக தேவனோடு ஐக்கியப்பட விரும்புவோருக்கு, ஆண்டவராம் இயேசு இரட்சகராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆயினும், துவக்கத்தில் இதை அநேகர் புரிந்துக்கொள்வதில்லை. முதலில் நாம் அனைவரும் கோபாக்கினையின் பிள்ளைகளாக இருந்தோம் என்பதை அறிந்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் நீதியான பலியை தேவன் நமக்காக ஏற்றுக்கொண்டார். இப்படியாக, அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம், அவருடைய கீழ்படிதலினால் பிதாவாகிய தேவன் நம்மை ஏற்றுக்கொண்டார், நம்முடைய பாவங்களை அவர் சுமந்ததினால், நாம் நீதியின் வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டோம். இவ்வாறாக, இயேசு நமக்காக ஞானமும், நீதியும் மீட்புமானார். நாம் இந்த அறிவை பயன்படுத்துவதற்குமுன், தேவனுக்கு முன்பாக மனதார கிறிஸ்துவின் ஈடுபலியினால் நாம் நீதிமானாக்கப்பட்டு, அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சுத்திகரிக்கப்படவேண்டும். தொடர்ந்து நாம் வளர்ச்சியடையும்போது, நாம் முழுமையாக மீட்கப்பட்டு மகிமையடைவோம். இப்படியாக, நாம் வளர்ச்சியடையும் பட்சத்தில் எந்த நிலையிலும் இயேசுவின் ஞானம் நம்மைவிட்டு விலக முடியாது. நம்முடைய ஓட்டத்தின் இறுதி வரைக்கும் அவர் நம்முடைய ஆலோசனை கர்த்தராக இருக்கவேண்டும். அவருடைய வழிநடத்துதலின் கீழ் நாம் நம்மை முழுமையாக தத்தம் செய்வதற்கும், அதற்குப்பின் அந்த ஞானத்தின் மூலம் நாம் முழுமையாக சுத்திகரிப்பட்டு தேவனுடைய சித்தத்தைச் செய்யவேண்டும். பரலோக பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் முக்கியமாக பரத்திலிருந்து வரும் ஞானத்தை நாம் பயன்படுத்துகிறோம். "பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது " என்று யாக்கோபு அந்த ஞானத்தை குறித்து விவரிக்கிறார். (யாக் 3:17) உலக ஞானம் சுயநலத்திற்காகவும், சுயசித்தத்திற்காகவும், சுயநீதிக்காகவும், சுயமேன்மைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. இவைகள் கசப்பான பொறாமையையும், பகையையும் வருவிக்கும் என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். ஏனெனில் இது உலகத்திலிருக்கும் சாத்தானால் உண்டானவைகள். ஆனால் பரத்திலிருந்து வரும் ஞானமோ இதற்கு எதிரிடையானது. தெய்வீக அன்பை கொண்டதும், சுயநலமற்றதும், பெருமைக்கொள்ளாததும், அநீதியில் மகிழாமல், சத்தியத்தில் மகிழக்கூடியதாகவும் இருக்கிறது.

R 2250 [col. 2 P 2]: -

"நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள்" ஆசீர்வதிக்கப்பட்ட இந்த வசனம் யாருக்கு பொருந்தக்கூடியதாக இருக்கிறது? நிச்சயமாக தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை வகுப்பாரை தவிர வேறு யாருக்கும் இது குறிப்பிடப்படவில்லை. சபை மட்டுமே இக்காலத்தில் "ஆவியில் எளிமையுள்ளவர்களாகவும்", "சாந்த குணமுடையவர்களாகவும்" இருக்கிறார்கள். இக்காலத்தில் இவர்கள் மட்டுமே நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்களும், ஒவ்வொரு பாடத்திலும் உள்ள தெய்வீக வெளிப்படுத்துதலை ஆர்வத்துடன் தேடுபவர்களாகவும் இருக்கிறார்கள். மற்றவர்களுக்கு ஏதோ நீதியின் மேல் கொஞ்சம் தாகம் இருக்கலாம். ஆனால் இவர்கள் வெகு சீக்கிரத்தில் திருப்தியடைகிறார்கள். விசேஷமாக, பிரபலமில்லாத சத்தியங்கள் மிகவும் சுவையுள்ளதாக இருந்தாலும், அதற்குப் பின் வரும் உபத்திரவங்களும், சாதகமற்ற உலக நிலைகளும் அவர்களால் மேற்கொள்ள முடிவதில்லை. துவக்கத்தில் இவைகளை பெற்றுக்கொள்ள போதுமான அளவு நேர்மையும் உண்மையும் இருந்தால் போதும். அதே சமயத்தில் இதனிமித்தமாக வரும் உபத்திரவங்களையும் துன்பங்களையும் இவர்களால் சகிக்கமுடியாத பட்சத்தில் அவர்கள் இருக்கும் நிலையில் இருந்துவிடுவார்கள். ஆனால் சிறு மந்தை மட்டுமே இவைகளை ஜெயித்து, முடிவு பரியந்தமும் நிலைத்து நிற்பவர்களாக இருப்பார்கள். இவர்கள் மட்டுமே முழுமையாக திருப்தியடைவார்கள். வெகு சீக்கிரத்தில் முதலாம் உயிர்த்தெழுதலில் அழிவுள்ள மனுஷன் அழியாமையை த்தரித்துக்கொள்ளும் போது அதாவது மாம்ச சரீரம் ஆவிக்குரிய சரீரமாக மாற்றப்படும் போது இவர்கள் முழுமையாக திருப்தியடைவார்கள். அதுவரையில் குறைவாக பெற்றிருந்த ஞானமும், நீதியும், பரிபூரணப்படும். ஆனால் இக்காலத்திலும் இந்த வகுப்பார் அபிரிவிதமான சத்திய ஞானத்திலும், அதிகபட்சமான ஆசீர்வாதங்களையும் அனுபவித்து மகிழ்கிறார்கள். மற்ற எந்த வகுப்பாருக்கும் இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்கவில்லை.

R2860 [col. 2 P 1]: -

சாந்தத்தை பொறுத்தவரையில், ஆண்டவரோடு உடன்படிக்கை செய்த ஜனங்களுக்கு ஒரு பாடம் அமைந்துள்ளது. நாம் சாந்தமான மனநிலையில் இருந்தால் மட்டுமே தெய்வீகத் திட்டத்தின் ஆழத்தையும், அகலத்தையும், நீளத்தையும் உயரத்தையும் அறிந்துக்கொள்ளமுடியும். ஆகவே பெருமையுள்ளவர்களை தேவன் எதிர்க்கிறார் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கிறார். எனவே, நாம் தராசில் ஒட்டியிருக்கும் தூசி என்பதை மறந்துவிடக்கூடாது. "என்னுடைய மேன்மையான இடம், என்னுடைய இரட்சகரின் பாதமே, அவருடைய பணியை தவிர வேறு எந்தக் காரியமும் என் வாழ்க்கையில் சந்தோஷத்தை தருவதில்லை." என்ற சிந்தை நமக்குள் இருக்கவேண்டும்.

R 3511[col.1P6]: -

மனத்தாழ்மையுள்ளவர்களும், சாந்தகுணமுடையவர்களும், தன்னடக்கமுள்ளவர்களும் பாக்கியவான்கள். இவர்கள் இராஜ்யத்தைக் குறித்த நன்மையான காரியங்களை பெறுவதற்கு மட்டும் தகுதி பெறாமல், ஆண்டவரின் அடிச்சுவடுகளை பின்பற்றி இராஜ்யத்தில் நல்ல பங்கை பெறுவதற்கும் ஆயத்தப்படுகிறார்கள். பொதுவாக பெருமை தவறானதாக இருந்துகொண்டு, சத்தியத்தோடு அடிக்கடி மோதுகிறது. "சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்ற ஆண்டவரின் வார்த்தைகளில் எந்தக் குற்றமும் இல்லை. இந்த வார்த்தைகளில் உள்ள சத்தியத்தின் வல்லமையே விடுதலையை அளிக்கும் மாறாக, கடுமையான வார்த்தைகளோ, கேட்ப்போரை நடுங்க வைக்கும் பிரசங்கங்களோ என்றுமே விடுதலை கொடுக்காது.

4. தெய்வீக அரசாங்கத்திற்கு அஸ்திபார கோட்பாடாக சாந்தம் அமைந்துள்ளது என்று நாம் எவ்வாறு அறிந்துக்கொள்வது?

மத் 23:12 - "தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்."

யாக் 4:6,10 - "அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே, ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது. கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்."

பிலி 2:7 -10 - "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழுங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும்அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்.

E 151[P2]: -

இந்த நாமத்தை பயன்படுத்துவதில் ஒரு முக்கிய காரணம் உண்டு. ஏனெனில் இந்த நாமம் அவருடைய வெற்றியை ஓயாமல் நினைவுப்படுத்துமளவுக்கு மகத்துவமானது. அவருடைய தாழ்மையான கீழ்ப்படிதலினாலும், விசுவாசத்தினாலும், சிலுவையின் மரணபரியந்தம் எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்ததினால் இப்படிப்பட்ட மகத்துவமான நாமம் கொடுக்கப்பட்டது . மேலும், மகிமையும், கனமும், வல்லமையும், தெய்வீக சுபாவமும் கொடுக்கப்பட்டது. "மனுஷ குமாரன்" என்ற நாமத்தினால் தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் தன்னுடைய பிதாவின் முன்னிலையில் சாந்தத்தின் மாதிரியாக காட்சியளித்தார். அந்தக் குணத்தையே தெய்வீக அரசாங்கத்தின் அஸ்திபாரமாக்கினார். தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னை தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். ஆகவே தேவனால் போதிக்கப்பட்டவர்களுக்கும், அவரை மகிமைப்படுத்த விரும்புவோர்களுக்கும், அவருடைய பார்வையில் நன்மையானவைகளை செய்பவர்களுக்கும், இந்த நாமத்தை பயன்படுத்தி விலையேறப்பெற்ற கட்டளைகளின் தொகுப்பு கொடுக்கப்படுகிறது.

E 423[P1]: -

பிதாவின் சித்தம் நிறைவேற்ற, மனுக்குலத்திற்கு தேவையான மீட்கும் பொருளை கொடுப்பதற்கு, தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, தங்களுடைய ஆதி மேன்மையைக் காத்துக்கொண்ட தூதர்களில் பலர் மனம் உவந்து மகிழ்ச்சியோடு முன் வந்திருக்கலாம். ஆனால் இது மிக கொடூரமான சோதனையாக இருந்திருக்கும். தேவன்மேல் வைத்திருக்கும் விசுவாசத்தை முழுமையாக வெளிப்படுத்த வேண்டிய அவசியம் நேரிடும். ஆகவே இந்நிலையில் தேவன் மேல் உள்ள விசுவாசத்தையும், நம்பிக்கையையும், பக்தி வைராக்கியத்தையும் வெளிப்படுத்தும், இயேசு - தேவ புத்திரர்களுக்கும் கர்த்தத்துவங்களுக்கும், அதிகாரங்களுக்கும் மற்ற நாமங்களை காட்டிலும் மேலான நாமத்தை பெற்றுக்கொள்ள தகுதி அடைந்தார். மேலும், இப்படிப்பட்ட வாய்ப்பை தன்னுடைய சுயநலத்திற்காகவும், சுய விருப்பத்திற்காகவும் செயல்படுத்த விரும்புவோர் , நிர்மூலமாக்கப்பட்டு, அழிக்கப்படுவார்கள். (சாத்தானை போல) இதற்கு எதிர் மாறாக பரலோக பிதாவின் சித்தத்திற்கும், திட்டத்திற்கும் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையாக இருப்போரை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்துவார் என்பதை எடுத்துகாட்டுவதற்கு இந்தத் தெய்வீக நோக்கம் பயன்படுத்தப்பட்டது. உலகத்தின் மேல் வைத்திருந்த அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படுத்த சித்தமானார் என்ற அவருடைய சிறப்பம்சங்கள் முக்கியமான பங்கை பெறும்படிக்கு அவருடைய திட்டத்தை வடிவமைத்தார். மேலும், தன்னுடைய ஒரே பேறான குமாரனை மகிமைப்படுத்த விரும்பிய பரலோக தந்தை அவர் மேல் வைத்திருந்த அன்பை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது.

R 2655[col . 1 P2-4] :-

விசேஷித்தவிதமாக சாந்த குணம் மற்றும் தன்னடக்கம் உள்ள சிறு மந்தையோடு ஐக்கியப்பட்டபின், ஆட்சியாளர் அல்லது எஜமானனாக இருக்க விரும்பும் ஆண்டவரின் ஒவ்வொரு ஆடும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, பணிந்து இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலன் தன்னுடைய பாணியில் வலியுறுத்துகிறார். அவருடைய நியாயத்தீர்ப்பு மற்றும் நல்மனசாட்சியை பொறுத்த வரையில் தம்முடைய மந்தையிடமிருந்து இப்படிப்பட்ட குணத்தையே மகிழ்ச்சியோடு எதிர்ப்பார்க்கிறார். இவ்வகையான குணங்களைச் செயலாற்றும் சபை வாக்குவாதங்களுக்கோ, தர்க்கங்களுக்கோ என்றுமே இடங்கொடாமல், மற்றவர்களின் ஆவிக்குரிய நலனுக்காக என்றுமே மனமிரங்கி, கனிவோடும், ஆர்வத்தோடும் செயலாற்றவேண்டியவர்களாக இருக்கவேண்டும். அப்போது கூடுமான அளவிற்கு பெரும்பான்மையுள்ளவர்களின் எதிர்ப்பார்ப்புகள் திருப்தியடையலாம். இப்படிப்பட்ட ஒருமனப்பாட்டின் நிலையை அடைவது அனைவரின் ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான அங்கீகாரமாகும்.

மூப்பராக இருக்கும் ஒவ்வொருவருக்கும் மற்றும் சபை ஜனங்கள் அனைவருக்கும் அத்தியாவசியமாக தேவைப்படும் குணம் - சாந்தமே என்று அப்போஸ்தலன் குறிப்பாக எடுத்துக்காட்டுகிறார். "மனத்தாழ்மையை அணிந்துக்கொள்ளுங்கள்" என்ற வாக்கியம் எவ்வளவு அழகாயிருக்கிறது. அதாவது ஒவ்வொரு குணங்களையும் அலங்கரிப்போடு காட்டுவதும் மற்ற எல்லா குணங்களை மூடுவதற்கான வஸ்திரமும் மற்றும் இது பெருமைக்கு எதிராக இருக்கும் மனத்தாழ்மை என்னும் சால்வையாகவும் இருக்கிறது.

அப்போஸ்தலன் தன்னுடைய வாக்குவாதத்தை உறுதிப்படுத்தும் வகையில், நம்முடைய ஆண்டவர் தன்னுடைய மந்தையோடும் மற்றவர்களோடும் தொடர்பு கொள்ளக்கூடிய அடிப்படையான கோட்பாட்டை நமக்கு நினைப்பூட்டுகிறார். பெருமை கொண்டவர்களை அவர் நிராகரிக்கிறார். இந்நாள் வரைக்கும் அவர்களோடு தொடர்புக் கொண்டு, அவர்களை ஆசீர்வதித்திருந்தாலும் அவர்கள் கொண்டுள்ள பெருமை, தேவனிடத்திலிருந்து வரும் காரியங்களை தடுத்து, அவர்களை தேவனிடமிருந்து விலக்கிவிடும். ஏனெனில், பெருமை மற்றும் போராசையின் ஆவியை பெற்றவர்கள் - சத்தியத்தையும், ஆவியின் கனிகளையும், மற்ற ஆவியின் கனிகளை வளர்ப்பதற்காகவும் முயற்சிக்காமல் இவைகைள விட்டு நாளுக்கு நாள் விலகி ஓடுவார்கள். "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." ஆகவே நாம் தேவனிடத்தில் நெருங்குவதற்கும் அவருடைய கிருபைகளை பெறுவதற்கும் தேவன், மிகவும் விரும்புகிறார். ஆகவே நம்மை அவர் பாராட்டி, வாக்குத்தத்தம் செய்திருக்கும் பரிசை கொடுப்பதற்கு ஆவலாக இருக்கிறார். இவைகளை சுதந்தரிப்பதற்கு சாந்த குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலன் நம்மை எச்சரிக்கிறார். ஆகவே தேவன் நம்மை ஏற்ற காலத்தில் உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கரங்களில் அடங்கியிருப்போம்.

5. மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுதல் என்பதன் பொருள் என்ன?

1பேதுரு 5:5 "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களக்கத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்."

R2655 [col. 1P3]:-

விசேஷமாக மூப்பர்கள் மற்றும் சபையோர் அனைவரும் "மனத்தாழ்மையை அணிந்து கொள்ளவேண்டும்" என்று அப்போஸ்தலர் மிக தெளிவாக எச்சரிக்கிறார். நாம் எவ்வளவு நன்மையான குணலட்சனங்களை உடையவர்களாக இருந்தாலும், அவைகளை நாம் பெருமைக்கு எதிராக இருக்கும் மனத்தாழ்மை என்னும் போர்வையினால் முழுமையாக மூடவேண்டும் என்பதை இது மிக அருமையாக காட்டுகிறது.

6. மிக அதிகமான அளவில் மனத்தாழ்மையை பெற்றுக்கொள்ள முடியுமா?

E255 [93] :-

அதிகமான தன்னம்பிக்கை, சுயசிந்தை, மன உறுதி, ஆணவம் கொண்டவர்களை சீர்ப்படுத்துவதற்கு

தேவனுடைய சத்தியத்தின் ஆவி பயன்படுத்தப்படுகிறது. வாழ்க்கையில், எந்தக்காரியங்களையும் செய்ய முடியாத அளவுக்கு தன்னம்பிக்கையற்றவர்களை, ஊக்குவிப்பதற்கும், அதே சத்தியத்தின் ஆவி பயன்படுத்தப்படுகிறது. மனத்தாழ்மையுள்ளவர்களை தேவனுடைய வாக்குறுதிகள் உற்சாகப்படுத்துகிறது. அதிகமான தன்னம்பிக்கை கொண்டவர்களுக்கு கீழ்ப்படிதலையும், தன்னடக்கத்தையும், தேவனை பிரியப்படுத்தும் காரியங்களையும் கற்றுக்கொண்டு, ஏற்றகாலத்தில் பயனளிக்கும் படியாகவும் இருக்கிறது. ஆகவே, "ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறியவேண்டிய பிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை." (1கொரி 8:2) என்று அப்போஸ்தலர் கூறுகிறார். ஆகவே, நாம் வேதாகமத்தை வைத்திருப்பதினாலோ, சபைகள் என்று அழைக்கப்படும் உலக அமைப்புகளில் அங்கத்தினர்களாக இருப்பதினாலோ, மறுரூபமாக்கப்படாமல், கிறிஸ்துவோடு இணைந்து, அவருடைய வார்த்தைகளினால் வரும் தேவனுடைய பரிசுத்த ஆவியாகிய, சத்தியத்தின் ஆவியையும், பரிசுத்தத்தின் ஆவியையும், நல்ல சிந்தையையுடைய ஆவியையும், பெற்றால் மட்டுமே நாம் மறுரூபமாக்கப்படுவோம்.

7. மனத்தாழ்மை அல்லது சாந்தத்திற்கும் உள்ள எதிரிடையான குணங்கள் என்ன?

1பேதுரு 5:5 "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்கத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்."

நீதி 3:34 "இகழ்வோரை அவர் இகழுகிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்."

நீதி 6 :16-19 "ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன - மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே."

R2204[col.1,P5,6] :-

பரீபூரணமான அன்பு சாந்தமுள்ளது - "அது தன்னை புகழாது." தனக்குமுன் எக்காளம் ஊதுவியாது. எந்த நற்கிரியைகளையும் மனுஷரின் பார்வையில் நடத்தப்படாமல் தேவனுக்கு மட்டுமே வெளிப்படுத்தப்படும். மேலும் தான் பெற்ற ஞானத்தைக் குறித்து பெருமை பாராட்டாது. ஆனால் மனத்தாழ்மையில் பெற்ற ஒவ்வொரு நல்ல குணங்களும், பூரணமான ஈவுகளும் பரலோக பிதாவினிடத்தில் வருகிறதாக இருக்கிறது.

பூரண அன்பு அடக்கமுள்ள நற்பண்புள்ளது - பெருமை என்னும் வேரிலிருந்து வளர்ச்சி அடையும் அநேக முரட்டு குணங்களை உடையவர்கள், தங்களை அதிக ஞானமுள்ளவர்கள் என்றும், அல்லது மிகுந்த ஐசுவரியவான்கள் என்றும் எண்ணுகிறார்கள். அதேநேரத்தில் அன்பு அடக்கமான பண்போடு, சாந்தத்தையும் சேர்த்து வளர்த்துக்கொள்கிறது. சின்ன சின்ன காரியங்களை அன்போடு செயல்படுத்துவதே சாந்தம் என்று ஒருவர் கூறுகிறார். அதேபோல சின்ன சின்ன காரியங்களில் அன்பாக இருப்பதே பணிவு என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே பண்புள்ள ஒருவர் சகல காரியங்களையும் அன்போடு நடப்பிப்பார்.

R2060[col. 2, point # 7] :-

இறுமாப்புள்ளவர்கள், தேவனுடைய பிள்ளையாக ஜீவிப்பது என்பது மிக கடினம். தங்களுடைய இருதயத்தின் எண்ணங்களின் சுத்திகரிப்பை தடுத்துவிடும். மேலும், தேவனுடைய காரியங்களில் மற்றவர்களுக்கு உதவி செய்வதையும் தடைசெய்யும். ஏனெனில் - " பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார்." என்று தேவன் தம்முடைய வார்த்தைகளை எச்சரிப்பாக கொடுத்திருக்கிறார்.

தன்னம்பிக்கைக்குப் பதிலாக, தன்னம்பிக்கையற்ற நிலையை ஞானம் நமக்குள் வளர்த்துவிடுகிறது. அது நமக்குள் இருக்கும் பலவீனத்தையும், அபூரணத்தையும் சீர்த்தூக்கி காண்பித்து, ஒவ்வொரு முறையும் தேவனுடைய கிருபை, செயலாற்றும் விதத்தையும் நமக்கு சுட்டிக்காட்டி, நாம் அவர் மேல் வைக்கவேண்டிய நம்பிக்கையையும், விசுவாசத்தையும் அளவிட்டு காண்பிக்கிறது. ஏனெனில் விழுந்துபோன நிலையில் நம்முடைய தீய வழியிலிருந்து நம்மை காத்துக்கொள்ள இதை தவிர வேறு வழியில்லை.

R2450 [col. 2P3] :-

அநேக தாலந்துப் பெற்ற தேவனுடைய ஜனங்களுக்கு, விசேஷமாக சபைகளில் முக்கிய பொறுப்பில் இருக்கக்கூடியவர்களுக்கு - நிறைவை அடைந்து விட்டோம் என்ற உணர்வுகள், தேவையற்ற மனப்போராட்டம் மற்றும் வீணான மகிமை, அனைத்தும் அவர்களை சூழ்ந்து நெருக்கக்கூடிய தீய குணங்களாக இருக்கிறது. ஆகவே மாம்சமான இக்குணங்களுக்கு நாம் மிகவும் எச்சரிப்போடிருக்க வேண்டும். "ஒரு பெருமையுண்டு, அது மற்றவர்களுடைய வெற்றியை மிக எரிச்சலோடு பார்க்கும், தன்னைவிட தாழ்ந்தோரை மிக ஏளனமாகவும் இகழும். " என்ற சொற்களை நாம் என்றுமே மறந்துவிடக்கூடாது. எந்த விதத்திலும், வகையிலும், அல்லது கோணத்திலும் தேவனுடைய ஜனங்களுக்குள் இருக்கும் பெருமை தேவனுடைய பார்வையில் வெறுப்பும் கோபமும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. ஆகவே தேவனுடைய கிருபையையும், இரக்கத்தையும் பெறவிரும்புவோர், இதைகுறித்து மிக எச்சரிப்பாக இருக்கவேண்டும். அவரை பிரியப்படுத்தும்படி தாழ்மையையும், எளிமையான சிந்தையையும், நமக்குள் எப்போதும் காத்துக்கொள்ளவேண்டும் - யாக் 4:6, 1பேது 5:5

R3114 [col.2P2]:-

"தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும்..." (சங் 24:4) நம்முடைய ஆண்டவருக்கும், அவருடைய ஆவியைப் பெற்ற அனைவருக்கும் பெருமை அருவருக்கக்கூடியதாக இருக்கிறது. இது ஒரு பொல்லாத களையாக இருக்கிறது. இந்தக் களையை நம்முடைய இருதயத்தில் வேரூன்ற விட்டால், நாம் பெற்றுள்ள அனைத்து கிருபைகளையும், வெகு சீக்கிரத்தில் இழந்துவிடுவோம். "நான் மாயையான சிந்தையை வெறுக்கிறேன்" என்று சங்கீதக்காரன் சொன்னதுபோல நம்முடைய மனநிலையும் அப்படியே இருக்கவேண்டும். மனத்தாழ்மை, தன்னடக்கம் மற்றும் சாந்தமுள்ள குணமே நமக்கு அலங்காரமாக காணப்படவேண்டும். ஒருவருடைய தனிப்பட்ட தகுதியை நிதானமாக சீர்த்தூக்கி பார்த்து, பெருமைக்கொள்ளாமல், தன்னுடைய தாலந்துகளை வீண் பெருமைக்காகவும் மகிமைக்காகவும் பயன்படுத்தாமல், நன்மைகளை நடப்பிக்கும் போது கிடைக்கும் சந்தோஷங்களுக்காகவே பயன்படுத்தவேண்டும். தங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் மற்றவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியைணப் பொறுத்தவரையில், அடக்கம், நேர்மை மற்றும் உண்மையுமாக இருப்பார்கள். இந்தச் சமூதாயத்தில், இப்படிப்பட்ட ஆவியைப் பெற்றவர்கள் எவ்வளவு ஆறுதலோடும், மகிழ்ச்சியோடும் வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள் !

R3231 [col. 1P1]: -

உலகத்தை முழுமையாக சார்ந்து வாழ்ந்த கோலியாத், பெருமைக்கு மிக சரியான மாதிரியாக இருக்கிறான். பெருமையின் தலைமையில் செயல்படும் உலகத்தின் ஆவியின் மேல், வைத்திருக்கும் அன்பை ஜெயிப்பதே புது சிருஷ்டிக்கு உண்டான கடுமையான சோதனையாகும். உலக பெருமை தேவனுடைய விசுவாசத்திற்கும் கீழ்ப்படிதலுக்கும் சவாலாக நிற்கிறது. மிக தைரியத்தோடு, ஆண்டவர் மேல் முழு நம்பிக்கை கொண்டவர்கள் இந்த இராட்சதனை ஜெயிக்கலாம். மேலும், இந்த வெற்றி முழுமைப் பெறவேண்டும் என்பது ஒரு முக்கியமான காரியம். அது மீண்டும் எழும்பிவந்து நம்மை கொன்றுப்போடாதபடிக்கு அந்தப் பெருமையை முற்றிலுமாக அழிக்க வேண்டும். ஆற்றின் அண்டையிலிருந்து எடுக்கப்பட்ட கல்லை சரியாக குறிப்பார்த்து அடித்தால் மட்டுமே அந்த இரட்சதன் மரிப்பான். அதாவது தேவனுடைய பார்வையில் பிரியமானதும், ஏற்றுக்கொள்ளப்படும் சத்தியங்களையும், "தேவனிடத்தில் தாழ்மைப்படுகிறவன் உயர்த்தப்படுவான், தன்னை உயர்த்திக்கொள்கிறவன் தாழ்த்தப்படுவான்" என்ற வாக்குறுதிகளும் மிக சரியாக நம்முடைய வாழ்க்கையில் பயன்படுத்தவேண்டும். "தற்புகழ்ச்சி முடிவடையும் இடத்தில், உண்மையான மனத்தாழ்மைத் துவங்கும்" என்று ஒரு பாடகர்கூறியுள்ளார்.

8. சாந்தத்திற்கு இயேசுவை மாதிரியாக கொண்டு நாம் என்னென்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?

பிலி 2:8 "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்."

E111 [P1]-E112 : -

2. மக்களின் நன்மதிப்பைப்பெற்றுக்கொள் வதற்கு மட்டகரமான ஆலோசனைகளை சாத்தான் நம்முடைய ஆண்டவராம் இயேசுவிடம் கூறுனான் - ஆலயத்தின் உச்சியிலிருந்து ஜனங்கள் காணும்படி குதித்து, எந்த விதமான சேதமும் இன்றி தப்பித்தால், நிச்சயமாக இவர் ஒரு அதிசயப்பிறவி என்று ஜனங்கள் நம்பி, அவரை மேசியாவாக ஏற்றுக்கொள்வார் என்று கூறினான். ஆனால் இப்படிப்பட்ட யோசனைகள் அனைத்தும், தேவனுடைய தெய்வீக திட்டத்திற்கு முற்றிலும் முரண்பாடானது என்று அறிந்து, நீதியின் கோட்பாடுகளை இயேசு கடைப்பிடித்தார். சாத்தான் தவறாக வசனங்களை பயன்படுத்தினாலும், அவர் கொஞ்சமும் தயங்காமல், தேவனுடைய கிருபைகளை சோதிக்காதபடிக்கு தேவனுடைய வசனங்களைக் கொண்டு சாத்தானை முறியடித்தார். தன்னுடைய நிலையைக் குறித்து அவர் எண்ணாமல், சடுதியில் பதில் அளித்தார். ஏனெனில், அவருடைய தந்தையின் வல்லமையை பற்றி அவர் முழுமையாக அறிந்திருந்தார். தேவன் மேல் வைத்திருக்கும் உண்மையான நம்பிக்கை, தெய்வீக கட்டளையின்றி, எந்த அபாயத்தையும் வருவிக்காது. வீணாக பிதற்றுவதோ, அல்லது மற்றவர்களின் முன்னிலையில் தாங்கள் மெச்சிக்கொள்வதற்காகவோ இவைகள் செய்யப்படவில்லை.

ஆண்டவரின் சகோதரர்களுக்கு இப்படியான சோதனைகள் நிச்சயமாக வரும், அப்பொழுது நம்முடைய இரட்சிப்பின் அதிபதி நமக்கு முன் வைத்து போன பாடங்களை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அதற்காக நாம் தேவையற்ற ஆபத்துகளில் சிக்கிக்கொண்டு, கிறிஸ்துவின் தைரியமான போர்வீரர்கள் என்று நம்மை நாம் மேன்மையாக எண்ணிக்கொள்ளக்கூடாது. "துணிகரமான தீச்செயல்கள்" உலகத்தின் மத்தியில் மட்டும் அல்ல ஆங்காங்கே தேவனுடைய பிள்ளைகள் மத்தியிலும் காணப்படுகிறது. இவைகளை தவிர்க்க தேவனுடைய ஜனங்கள் அதிக தைரியத்தோடே போர்களை நடப்பிக்கவேண்டியதாக இருக்கிறது. உலகம் பாராட்டுவதற்காக வேலை செய்வதல்ல, மாறாக உலகம் பகைப்பதற்காகவும், உபத்திரவப்படுத்துவதற்கான வேலைகளை செய்வதற்கு அழைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அவமானத்தை சகிக்கவும், இகழ்ச்சிகளை தாங்கவும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில் இரட்சிப்பின் அதிபதியை பின்பற்றுபவர்கள் அவருடைய அடிச்சுவடுகளின் படியே நடக்கவேண்டும். இயல்பான மனிதன் ஆச்சரியப்பட்டு, வியப்படையவும் அளவிற்கு மிக பெரிய அற்புதங்களை நடத்தி, மகத்துவமான காரியங்களை செய்வதை காட்டிலும், தேவனுடைய பணிகளின் நிமித்தமாக, வரும் உலகபிரகாரமான அவமானங்களையும், இகழ்ச்சிகளை உதறித் தள்ள நமக்குள் விசேஷித்த தைரியம் தேவைப்படுகிறது.

இடுக்கமான பாதையின் வழியாக செல்பவர்கள் சுயசித்தத்தை எதிர்ப்பதற்கு நடப்பிக்கும் யுத்தமே மிக முக்கியமானதாகும். தங்களுடைய சித்தங்களை பரலோக தந்தையின் விருப்பத்திற்கு முழுமையாக சமர்பித்து, அவைகளை காத்து, தங்களுடைய இருதயத்தை அவைகளை ஆளச்செய்து, கூடுமானால்,பூரணமான மனிதனுடைய நியாயமான விருப்பங்களையும், குறிக்கோள்களையும் நசுக்கி, தங்களுடைய சரீரங்களை ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்து, தங்களுடைய பூமிக்குரிய சகலவிதமான விருப்பங்களையும் தேவனுக்காகவும் அவருடைய பணிக்காகவும் முற்றிலுமாக பலிசெலுத்தவேண்டும். நம்முடைய இரட்சிப்பின் அதிபதி இப்படிப்பட்ட சோதனைகளை ஜெயித்து வெற்றி அடைந்தார். அவருடைய சகோதரர்களும் இப்படிப்பட்ட பாடுகளை அனுபவிக்கவேண்டும். "தன் ஆவியை அடக்காத மனுஷன் (தன்னுடைய சித்தங்களை தேவனுடைய விருப்பத்திற்கு முழுமையாக அர்ப்பணிக்காதவர்கள்) மதிலிடிந்த பாழான பட்டணம்போலிருக்கிறான்." அதேபோல, தவறான விசுவாசம் கொண்டு ஆலயத்தின் உச்சியிலிருந்து குதிப்பவர்களும், தேவனுக்காக என்று சொல்லிக்கொண்டு, அவருடைய திட்டத்திற்கு மாறான காரியங்களை நடப்பிப்பவர்களும் இப்படியாகவே இருப்பார்கள். தேவன் மேல் வைக்கும் விசுவாசம், குருட்டுதனமாக எதையும் நம்பி ஏமாறாது. மேலும், தேவனுடைய பாதுகாப்பையும், பராமரிப்பையும் குறித்து, வரம்புமீறிய காரியங்களை கற்பனை செய்யாது. மாறாக, இந்த உலகத்தின் காரியங்கள், பிசாசின் தந்திரங்கள் மற்றும் மாம்சத்தை மேற்க்கொண்டு ஜெயிக்க, தேவனுடைய அற்புதமான விலையேறப்பெற்ற வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்து, விசுவாசத்தின் சரியான பாதையில் ஓடி தெய்வீக வார்த்தைகளுக்கு முழுமையாக கீழ்ப்படியச்செய்யும்.

E423[P 1] :-

தங்களுடைய ஆதிமேன்மையை காத்துக்கொண்ட தூதர்கள் தேவனுடைய சித்தத்தை விசுவாசத்தோடு நடப்பித்து, மனுஷனுக்கு ஈடுபலியாக தங்களை சந்தோஷமாக செலுத்துவதற்கு தங்களை ஒப்புக்கொடுத்திருப்பார்கள் என்பதற்கு சந்தேகமே இல்லை. ஆனால் இப்படிப்பட்ட காரியத்தை செய்வதற்கு சோதனைகளில் உச்சகட்டத்தை எட்டி தேவன் மேல் வைத்த விசுவாசத்தை நிரூபிக்கவேண்டியதாக இருந்தது. மேலும், தங்களுடைய சொந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு தேடக்கூடியவருக்கு (சாத்தான்) வீழ்ச்சியையும், தங்களையே தாழ்த்தி, பரலோக பிதாவின் சித்தத்திற்கு கீழ்ப்படிந்து அவருடைய திட்டத்தை நிறைவேற்றக்கூடியவர்களை அவர் மிக மேன்மையான நிலைக்கு உயர்த்தக்கூடிய ஒரு தெய்வீக நோக்கம் இதில் அடங்கியிருந்தது. எனவே, இந்தத் தெய்வீக திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவும், தேவன் இந்த உலகத்தின் மேல் வைத்த அன்பிற்காகவும், இந்தத் தெய்வீக வாய்ப்பை பயன்படுத்தி, தன்னுடைய குமாரனின் கீழ்ப்படிதலையும், அன்பையும், மனத்தாழ்மையையும், இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தி, தன்னுடைய ஒரே பேறான குமாரனை மகிமைப்படுத்தினார்.

R2201[col. 2 P3,4] :-

"நான் உன்னை கழுவாவிட்டால், என்னிடத்தில் உனக்கு பங்கில்லை" என்ற நம்முடைய ஆண்டவராம் இயேசு கூறினார். இங்கு "கழுவுதல்" என்ற வார்த்தை மனத்தாழ்மையை வெளிப்படுத்துகிறது. ஒவ்வொரு இடங்களிலும், நேரங்களிலும் இந்தக் கோட்பாட்டை, நன்மைக்கு ஏதுவாக கடைப்பிடிக்க வேண்டும். கூடுமானால், சரீர அங்கங்களுக்கு முடிந்த வரைக்கும் தாழ்மையோடு எல்லா வகையான ஊழியங்களையும் செய்யவேண்டும். அவைகளை ஆண்டவருக்கு செய்வதைபோல் செய்யவேண்டும்.

ஆண்டவரின் பணி முடிந்தபின் அவர் அதனுடைய முக்கியத்துவதை விவரித்தார். முதலாவது மனத்தாழ்மைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அவர் அங்கு செயலாற்றினார். அவருடைய உண்மையான அங்கத்தினர்களுக்கு எவ்வளவு இழிவான தொண்டுகளைச் செய்ய வாய்ப்புகள் கிடைத்தாலும் அதை செய்யவேண்டும் என்று காட்டினார். அடுத்து, கால்களை கழுவுவதில் ஒரு மிக பெரிய சத்தியம் அடங்கியிருந்தது. சொல்லப்போனால், ஆண்டவரால் முன்னமே சுத்தகரிக்கப்பட்டவர்கள் அதாவது விசுவாசத்தின் மூலமாக சகலத்திலும் நீதிமானின் நிலையை பெற்றவர்களாக இருந்தாலும், இந்த உலகத்தில் இருக்கும் வரையில் சில மாம்சமான அசுத்தங்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். பொதுவாக ஞானஸ்நானம் பெற்று, நீதிமானாக்கப்படும் நிலைமை நீடித்த நாட்களுக்கு தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளப்படவேண்டும். அதாவது ஒவ்வொருவருடைய கால்களும்

(நடைகள்) ஜலத்தை அடையாளப்படுத்தும் வசனத்தினால் அடிக்கடி சுத்தகரிக்கப்படவேண்டும். (எபே 5:26) சபையின் ஒவ்வொரு அங்கத்தினர்களும், ஒருவர் மேல் ஒருவர் கவனமுள்ளவர்களாக தங்களை பரிசுத்தத்திலும், நீதியிலும், காத்துக்கொண்டு, உலகம், சாத்தான் மற்றும் மாம்சத்தினால் வரும் சோதனைகளினால் விழாதபடிக்கு ஒருவருக்கொருவர் தாங்கி, ஜெயிக்க முயற்சிக்க வேண்டும்.

R2450[col.1P3 and col2P2] : -

சடங்காக நடத்தப்பட்ட ஞாபகார்த்தமான இராபோஜனமும், சடங்காக அனுசரிக்கப்பட்ட ஞானஸ்நானமும் ஒரே விதமான முக்கியத்துவம் பெற்றது என்று சில விளக்கம் சொல்லுவதை தவறு என்று நாம் யோசித்தோம். இவைகளுக்குள் எந்த விதமான ஒற்றுமையும் இல்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திற்கும் தாழ்மை மற்றும் சாந்தத்தின் கோட்பாடுகள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகளுக்கு சுத்திகரிப்பு, அல்லது எந்தவித உதவிகள் மற்றும் ஆலோசனைகள் தேவைப்பட்டால், அவர்களின் சகோதரர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு அந்த வேலைகளை செய்யகடமைப்பட்டிருக்கிறார்கள். நிச்சயமாக ஆண்டவரின் ஆவியை பெற்றவர்கள் அவரைப் போலவே மகிழ்ச்சியோடு இக்காரியங்களை நடப்பிப்பார்கள். ஆனால் இப்பணிகளை செய்யும் தேவ ஜனங்கள் முதலாவது தங்களுடைய கால்களை கழுவி சுத்திகரித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதற்குபின் மற்றவர்களை சுத்திகரிக்க முயற்சிக்கவேண்டும். ஆகவே இயேசு நமக்கொரு மாதிரியின் மூலம் நமக்கு கட்டளைகளை விட்டு சென்றார்.

ஆகவே உண்மையில் இயேசுவை பின்பற்ற விரும்புவோர், அவருக்குள் இருந்த சாந்தம், அமைதல், மனத்தாழ்மை மற்றும் சரீர அங்கத்தினர்களுக்கு ஊழியம் செய்யக்கூடிய மனநிலை - அனைத்தையும் மிக தெளிவாக உணர்ந்து, துல்லியமாகவும் பின்பற்றவேண்டும். இந்த முழு சிந்தனை அவருடைய வார்த்தைகளில் அடங்கியுள்ளது - "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், (இந்த கோட்பாடுகளை வாழ்க்கையின் அனைத்திலும் பொறுத்திக்கொள்ள அறிந்திருந்தால்) இவைளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்." (யோவான் 13:17)

R3495[col.2 last P] : -

கிணற்றண்டையில் இயேசு அமர்ந்திருக்கையில், தண்ணீர் மொண்டுக் கொள்ள வந்த சமாரிய பெண்ணிடம் இயேசு பேசின காரியங்கள் - சுவிசேஷ யுகத்தின் தெய்வீக சத்தியத்தின் மிக முக்கியமான ஒரு காரியத்தை சுட்டிக்காட்டுகிறது. அநேக சந்தர்பங்களில் நம்முடைய ஆண்டவர் குறிப்பிட்ட காரியங்களை, குறிப்பிட்ட ஜனங்களுக்கு சாதாரணமாக கூறியுள்ளார். அவரை பின்பற்றுபவர்களை இது அதிகமாக ஈர்த்தது. உண்மையில், சுவிசேஷ யுகம் முழுவதிலும் நம்முடைய ஆண்டவரின் கோட்பாடுகள் மிக எளியோரிடத்தில் சொல்லப்பட்டு வந்தது. ".... மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை." ஆனால் தேவன் உலகத்தில் இழிவானவர்களையும், விசுவாசத்தின் ஐசுவரியவான்களையும் தெரிந்துக்கொண்டார். ஆகவே தேவனுடைய கிருபையால், இயேசுவின் மூலம் தெய்வீக சமாதானத்தை அறிந்திருக்கிறோம். எனவே, இந்த உலகத்தின் இழிவான காரியங்களைக் கொண்டு மேன்மையான காரியங்களை சிருஷ்டிக்க நோக்கமாகி, அதன் வழியாக தம்முடைய மகிமையை பிரதிபலிக்கவும், அவரை துதிக்கும் துதி, நித்தய நித்தயமாக கிருபையின் அடையாளமாக இருக்கும் என்பதை நாம் நினைவில் கொண்டவர்களாக மகிழ்ந்து களிக்கூறுவோம், நம்மை நாம் தாழ்மைப்படுத்துவோம்.

9. அப்போஸ்தலர்கள் தாழ்மையான குணத்தைக் கொண்டிருந்தார்களா?

எபே 3:8 "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது."

R1885 [col. 1 P5] :-

அப்போஸ்தலனாகிய பவுல் மிகவும் தன்னடக்கத்தோடு தன்னுடைய ஆவிக்குரிய நிலையையும், பலத்தையும் மதிப்பிடுகிறார். புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படி தெரிந்துக்கொள்ளப்பட்ட பாத்திரமாக அவர்

இருந்தபோதிலும் தன்னைதான் அவர் மேன்மையாக எண்ணவில்லை. அவர் தன்னை மிகப் பெரிய அப்போஸ்தலன் என்று நினைக்கவும் இல்லை, தனக்குள் வீண் பெருமையும் கொள்ளவில்லை. மாறாக, மற்ற சபை ஜனங்களுக்கு முன்பாக தன்னை மிகவும் தாழ்த்தி, மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணினார். அவர் ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, அவருடைய சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்தினார். (1கொரி 9:27) மேலும், அவர் மற்றவர்கள் முன் நிலையில், கிறிஸ்துவை தேவனுடைய வல்லமை என்றும், தேவனுடைய ஞானம் என்றும் எடுத்துரைத்தார். அவருடைய மீறுதல்களை போக்க, 'கிறிஸ்துவின் ஈடுபலி மட்டுமே' என்று அறிக்கையிட்டு, அவருடைய மாதிரியை பின்பற்றுவதற்கு நான் அதிகமாக பிரயாசைப்படுகிறேன் என்றும் அவர் தாழ்மையாக அறிவித்தார். இப்படியாக, ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிக பெரிய தடையான "சுய -திருப்தியை (நம்பிக்கை)" அவருடைய வாழ்க்கையிலிருந்து அகற்றிவிட்டார். ஒருவர் ஆவிக்குரிய இலக்கை அடைந்துவிட்டோம் என்று எண்ணி திருப்தியடைந்தால், அந்த நொடிப்பொழுதிலிருந்து அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சி குறையத் துவங்கும். கிறிஸ்துவைப் பின்பற்றி அவருடைய மாதிரியை பூரணமாக பிரதிபலிக்க விரும்பும் உண்மையுள்ளோர் அனைவரும், தங்களுடைய இக்காலத்து முயற்சிகளில் என்றுமே திருப்தியடையமாட்டார்கள். ஆனால் நாம் கிறிஸ்துவை விட்டு நம்முடைய கண்களை எடுத்துவிட்டால் உடனடியாக இந்த க்குணம் நம்மை பற்றிக்கொள்ளும். அப்படிப்பட்ட எண்ணங்கள் நமக்குள் வளரும் பட்சத்தில் நம்முடைய குறைகள் அனைத்தும் மறைந்துவிடும் அல்லது நமக்குள் ஒளிந்துவிடும். மேலும் இருதயத்தில் இருக்கும் பெருமையினால் நம்மை நாமே (புது சிருஷ்டி) தொலைத்து விடுவோம். ஏனெனில், நம்முடைய நன்மையான காரியங்கள் மட்டுமே வெளிப்படுத்த இந்த மாம்சம் முயற்சிக்கும். நாளுக்கு நாள் கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சி அடைவதை குறித்தே நாம் சிந்திக்கவேண்டும். அப்போஸ்தலரை போல், அவர் புரண நிலையை அடைந்திருந்தாலும், அதை அடைந்துவிட்டோம் என்று எண்ணாமல், பின்னானவைகளை விட்டுவிட்டு முன்னானவைகளை நாடி இலக்கை நோக்கி தொடருகிறேன் என்று சொல்லியபடி நாமும் அவருடைய மாதிரியை பின்பற்ற வேண்டும். இப்படிப்பட்ட மனநிலை - தேவனுடைய கிருபையை அதிகமாக பெறுவதற்கும், மனத்தாழ்மையுள்ள சிந்தையில் இருப்பதற்கும் வழிவகுத்தது. மேலும் மற்ற சகோதரர்களின் சோர்வுகளிலும், குறைச்சல்களிலும் உதவிச் செய்யும்படி பவுலை தூண்டியது. ஆனால் மேட்டிமையான சிந்தையுள்ளவர்களும், சுய - திருப்தியுள்ளவர்களும், தங்களுடைய கண்களில் இருக்கும் உத்தரத்தை மறந்துவிட்டு, மற்றவர்கள் கண்ணிலிருக்கும் தூசியை எடுக்க வகைத்தேடுவார்கள்.

R2826[col. 1P3-5]: -

வேதாகமத்தில் உள்ள மிக அற்புதமான புத்தகத்தை குறிப்பாக எவ்வளவு எளிய முறையில் அப்போஸ்தலன் அறிமுகப்படுத்துகிறார் என்று சற்று கவனியுங்கள். நம்முடைய வேதாகமத்தில் காணப்படுகிறபடி -"திவ்ய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம்" என்று யோவான் எழுதவில்லை. சொல்லப்போனால், இது பரிசுத்தவானும், வேத சாஸ்திரியுமான யோவானுக்கு வெளிப்படுத்தினதாகும். இதன் அடிப்படையில் யோவான் தனக்காக எந்த நற்பெயரையும் எதிர்பார்க்கவில்லை. இந்த வெளிப்பாடு அவருடையதல்ல என்றும் பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததுமான விசேஷம் என்று மிக தெளிவாக குறிப்பிடுகிறார். தன்னை விசேஷித்த வகையில் குறிப்பிடாமல், ஒரு ஊழியக்காரனாக அறிமுகப்படுத்துகிறார். இந்த ஒரு மனநிலை எல்லா அப்போஸ்தலர்களிடமும் காணப்பட்டது. இப்படிப்பட்ட ஜனங்களை மட்டுமே நம்முடைய ஆண்டவர் விசேஷித்த ஊழியக்காரர்களாக அனுப்புகிறார். ஆனால் இன்று இந்த க்கோட்ப்பாடுகளுக்கு முரண்பாடாக, பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள், தங்களுக்கு மிக உயர்வான பட்டப் பெயர்களை (ரெவெரெண்டு) சூட்டிக்கொள்கிறார்கள். அதவாது கிறிஸ்துவின் ஆவியை இந்த உலக ஆவி வெகு எளிதில் அவித்துப் போடுகிறது. ஆனால் இதற்கு எதிராக தேவனுடைய ஜனங்கள் பூர்வ பாதையை (எரே 6:16) பக்தி வைராக்கியத்தோடுத் தேடுகிறார்கள். அதேநேரத்தில் இந்த உலக பிரகாரமான உயர்ந்த பட்டப் பெயர்கள் மிக மேன்மையாக தோன்றுகிறது. அவைகள் அனைத்தும் மாயையும், வீண் பெருமைக்குரியதும், வஞ்சிக்கக்கூடியதுமாக இருக்கிறது.

ஆசியா நாடுகளுக்கு கண்காணியாக இருந்த யோவான் தன்னுடைய பெயரோடு மிக பெரிய பட்டப் பெயர்களை இணைத்துக்கொள்வதற்கு பதிலாக, உபத்திரவப்படும் சகல சகோதரர்களோடும், கிறிஸ்துவின் பாடுகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு "உங்கள் சகோதரன்" என்று தன்னை அறிமுகப்படுத்தினார். அவர் கிறிஸ்துவின் பங்காளியும், பாடுகளில் அவருடைய சரீரத்தின் ஐக்கியமும், அவருடைய இராஜ்யத்தில் உடன்

வேலையாளுமானார். எல்லாவற்றிற்கும் மேலாக மகிமையை அடையும்படிக்கு அவருடைய சீஷர்களின் உபத்திரவங்களில் பங்கெடுத்துக்கொள்ளும் உடன் சகோதரரானார். பொதுவாக யோவான் மிகவும் உபத்திரவப்பட்டவர் என்று அனைவரும் அறிந்ததே. வெளிப்படுத்தலின் இந்தக் காட்சிகளை காண்கையில் அவர் மத்தியத் தரைக்கடலில் உள்ள பத்மு என்ற சிறிய தீவில் நாடு கடத்தப்பட்டிருந்தார். அங்கு சலவைகல் சுரங்கத்தில் பணிச்செய்வதற்கு குற்றவாளிகள் இழுத்துச் செல்லப்பட்டார்கள். இவர் மிக கஷ்டப்பட்டு வேலைசெய்தார். ஆனால், தேவன் மேல் உள்ள விசுவாசத்தினாலும், இயேசு தான் கிறிஸ்து என்று சாட்சியினாலும், இப்படிப்பட்ட கொடூரமான உபத்திரவத்தையும், வெளிக்காட்டாமல், மிகவும், தன்னடக்கத்தோடு அந்த நாட்களை எளிமையாக கடத்தினார்.

அவர்களுடைய வார்த்தைகளினால் நம்முடைய கவனத்தை திருப்பி, இந்த ஊழியத்தை பெருமைக்காகவும், பூமிக்குரிய நன்மைகளை அல்லது பரிசுகளை பெறவும், வீண் புகழ்ச்சிகாகவும் நடப்பிக்காமல், தேவனுடைய ஊழியக்காரர்களாக அவருடைய சித்தத்தின்படி நடக்க விரும்பி, தங்களை தாங்களே எந்த விதத்திலும் பொருட்படுத்தாமல், சபைக்கு தேவைப்பட்ட காரியங்களில் மட்டுமே தங்களைக் குறித்து சொல்லும் அளவுக்கு எல்லா அப்போஸ்தலர்களின் எழுத்துக்களில், எளிமையையும், தன்னடக்கத்தையும் நாம் காணலாம். ஆண்டவரின் அனைத்து சீஷர்களும் இந்த விசேஷித்த குணத்தை குறிப்பாக நோக்கவேண்டும். மேலும் இப்படிப்பட்ட குணத்தை உடையவர்களை மட்டுமே அவர் அப்போஸ்தலர்களும், நமக்கு மாதிரிகளுமாக தேர்வுசெய்திருக்கிறார். நாமும் இதற்கு இசைவாக ஆண்டவரின் ஆவியை பெற்றால், இப்படிப்பட்ட குணங்களை நாமும் வெளிப்படுத்துவோம்.

F210 [P2] through F212 [P1] : -

மற்ற எந்தச் சீஷர்களும் அப்போஸ்தலர்களாக தேர்வு செய்யப்படாமலிருந்தாலும், அனைவரும் ஆண்டவரால் நேசிக்கப்பட்டார்கள். அந்தப் பன்னிருவரும் பொதுவான வேலைகளுக்காக நியாமிக்கப்பட்டதினால், சந்தேகத்திற்கு இடமின்றி, அவர்கள் அனைவரும் முழுமையாக இரக்கம் பெற்றார்கள். நம்முடைய ஆண்டவர் எதன் அடிப்படையில் இந்தத் தேர்வுகளை செய்தார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றாலும், அவர் செய்த ஜெபத்தின் குறிப்பு நமக்கு ஒரு காரியத்தை தெளிவாக்குகிறது - "நீ தெரிந்தெடுத்து எனக்கு கொடுத்த உம்முடையவர்கள்..." மீண்டுமாக "... நீர் எனக்கு கொடுத்தவர்கள்.." என்று இயேசு ஜெபித்தார். பிதாவாகிய தேவன் எந்த அடிப்படையில் இந்தப் பன்னிரெண்டு பேர்களையும் தேர்வு செய்தார் என்பது நமக்கு அவசியமில்லை. ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி மனத்தாழ்மை என்ற ஒரு குணத்தை அவர்கள் அடிப்படையாக பெற்றிருக்கவேண்டும். மேலும், அவர்கள் செய்த தொழில் மற்றும் அவர்கள் அந்நாள் வரைக்கும் பெற்ற அனுபவங்கள் அவர்களை தாழ்மைப்படுத்தினதுமின்றி, அவர்களுக்கு தேவையான நம்பிக்கையும், உறுதியும், விடாமுயற்சியுள்ள தன்மையையும் உருவாக்கியிருக்கவேண்டும். நிச்சமாக, இயேசுவை பின்பற்றின மற்றவர்கள் இந்த அளவுக்கு சிறப்பாக செயலாற்றிருக்க முடியாது. பெந்தேகோஸ்தே நாள் வரைக்கும் காத்திராதபடிக்கு, முன்னதாகவே அந்த பன்னிருவரும் இயேசுவோடு கூட இருந்து அவருடைய செய்திகளைக் கேட்டு, ஏற்றகாலத்தில் நமக்கு தேவனுடைய சகல ஜனங்களுக்கும் தேவனுடைய அற்புதமான வேலைகளை குறித்து சாட்சி கொடுப்பதற்கும், இயேசுவின் மூலம் ஜீவனுள்ள வார்த்தை வெளிப்பட்டதைக் குறித்து அறிவிப்பதற்கும் தேவன் ஆயத்தப்படுத்தினார் - லூக் 24:44-48, அப் 10 :39-42

அப்போஸ்தலர்களை பொறுத்தவரையில் தேவனுடைய சொத்துக்களின் மேல் உக்கிராணக்காரர்களாக இருந்தார்கள். மற்றபடி மற்ற விசுவாசிகளைக் காட்டிலும் இவர்கள் மேன்மையுள்ளவர்கள் அல்ல. மேலும் இந்**தப் ப**ன்னிருவரும் தேவனுடைய தெய்வீக பிரமாணத்தை செயல்படுத்த முழு அதிகாரம் பெற்றிருந்தார்கள். "அனைவரும் சகோதர சகோதரிகளாக இருக்கிறீர்கள்,...கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகரும் குருவுமாக இருக்கிறார்" என்பதை இவர்கள் நினைவில் கொள்ளவேண்டியதாக இருந்தது. அவர்களின் அழைப்பையும், தெரிந்துக்கொள்ளுதலையும் உறுதிப்படுத்திக் கொள்ள - அன்பின் பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து, சிறுப்பிள்ளைகளை போல மனத்தாழ்மைப்பட்டால் மட்டுமே தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கமுடியும். இவர்களுக்கு எந்தவிதமான துணை ப்பெயர்களும் கொடுக்கப்படவில்லை. ஆனால், இவர்களின் கிரியைகளைக் கண்டு பிதாவை கனப்படுத்தும்படியாக இவர்கள் மந்தைக்கு மாதிரியாக இருக்கவேண்டும். படுத்தவேண்டிய

சூழ்நிலையில் இருந்தார்கள். இவர்களின் அடிச்சுவடுகளை பின்பற்றுபவர்களுக்கு நல்ல மாதிரிகளாக இருக்கவேண்டும். புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாக, திவ்விய சுபாவத்தை தேடுபவர்கள், அழியாமையையும், கனத்தையும் மகிமையையும் அடைவார்கள்.

ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவும், தேவனுக்கு ஊழியம் செய்யவும், சகோதர்களுக்காக ஜீவனை கொடுப்பதற்கும் கடமை பெற்றிருந்தார்கள். சுவிசேஷத்தை பிரஸ்தாபப்படுத்துவதே இவர்களின் விசேஷித்த பணியாக இருந்தது. (ஏசா 61:1,2, லூக்க 4:17 -21, மத் 10 :5-8, மாற் 3-14,15, லூக் 10-1-17) என்று தீர்க்கதரிசி சொல்லியபடி நம்முடைய போதகருக்கு க்கொடுக்கப்பட்ட அபிஷேகத்திற்கு இவர்கள் பங்காளிகளானார்கள். இவர்களுக்கு மட்டும் அல்ல இவர்களுக்குபின் வந்த சகல புது சிருஷ்டிகளுக்கும் இதே அபிஷேகம் கொடுக்கப்படுகிறது.

10. ஒரு மூப்பருக்கு மனத்தாழ்மை மிக அவசியமாக இருப்பதற்கான காரணம் என்ன?

1தீமோ 3:6"அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது"

F246[P2] : -

வேலை செய்ய தகுதிப் பெறாதவர், தேவனுடைய வேலையை செய்ய இயலாதவர்கள் அல்லது தகுதி பெறாதவர்கள் என்று வசனங்கள் ஏதும் கூறுவதில்லை. அதே நேரத்தில் கிறிஸ்துவின் ஒவ்வொரு சரீர அங்கத்தினர்களுக்கு உதவி செய்ய கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் மனத்தாழ்மையோடு தங்களை தான் மேன்மையாக எண்ணாமல், சோம்பேறியாகவும் இராமல், தேவன் கொடுத்த தாலந்துகளின்படி செயல்படவேண்டும். சபைகளில் இப்படிப்பட்டவர்கள் மனத்தாழ்மையோடு மூப்பர்களாகவோ அல்லது முக்கிய பொறுப்புகளையோ செயலாற்றவேண்டும். இரண்டு சகோதரர்கள் சமமான தாலந்துகளை பெற்றிருந்தால், அதில் ஒருவர் ஆர்வத்தோடு முன்னிலை விரும்புவோரும், மற்றவர் தாழ்மையோடு பின்தங்குபவராக இருந்தால், நல்ல சிந்தையில் உள்ள ஞானத்தின் ஆவி, மனத்தாழ்மையுள்ளவரை பாராட்டும். ஆகையால் இப்படிப்பட்டவர் தேவனால் விசேஷித்த விதமாக அவருடைய பணிக்கு அனுமதிக்கப்படவேண்டும்.

F251 [P2]: -

"நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்.போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறதே" (1தீமோ 5 :17,18) என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தின் அடிப்படையில் பெயர் சபைகள் -மற்றவர்களை கட்டுக்குள் வைத்து அதிகாரம் செலுத்தக்கூடிய மூப்பர்களை உருவாக்கி விட்டார்கள், சகோதரர்களுக்கு மத்தியில் ஓர் உயர்வான நிலையை பெறுகிறார்கள். இப்படிப்பட்ட "அதிகாரத்திற்கு உட்படும் காரியங்கள்" வசனங்களுக்கு என்றும் முரண்பாடாக உள்ளது. மூப்பராக நியமிக்கப்பட்ட தீமோத்தேயு அப்போஸ்தலனால் அறிவுறுத்தப்பட்டர் -"முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப்போலவும்,

நடத்தவேண்டும் மேலும் "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்." இங்கு சொல்லப்பட்ட காரியங்களில் சர்வாதிகாரமானவைகள் ஏதும் சொல்லப்படவில்லை. மூப்பர்கள் என்று சொல்லப்படுபவர்களிடம் ஆவியின் கனிகள் வெளிப்படவேண்டும். எல்லா விதத்திலும் மந்தைக்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும். மூப்பர் அதிகார தோரனையில் இருந்தால் மந்தையும் அப்படியே வளர்ச்சி அடையும். அதே நேரத்தில் மூப்பர் மனத்தாழ்மையுள்ளவராக இருந்தால், மந்தையும் அதே குணத்தில் வளர்ச்சி அடையும். மூப்பர்கள் எந்த ஆவியை பெற்றிருக்கிறார்களோ, மந்தையும் அந்த ஆவியை பெறுவார்கள். ஆகவே போதிப்பதிலும், கற்பிப்பதிலும் முதலில் தங்களை மிகவும், தாழ்த்தக்கூடிய மூப்பர்கள் இரட்டிப்பான கனத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள்.

F278 [P4] :

பொய் மத குருக்களின் போதனையானது, கிறிஸ்தவர்களை இரண்டாக பிரித்தது. குருக்கள் மற்றும் பாமர ஜனங்கள். அறியாமையில் செயல்படும் அமைப்புகளில் தேவனுடைய சத்தியமாகிய பொக்கிஷங்களின் மேல் இப்படிப்பட்டவர்களின் ஆவியும், அந்திக்கிறிஸ்துவின் ஆவியும், அதிகாரம் செலுத்துவதற்கு சகல விதங்களிலும் முயற்சிக்கும். நம்முடைய தேவன் தனிப்பட்ட முறையில் மூப்பர்களை கவனியாமல், கிறிஸ்துவின் சரீரத்தின் மேல் நோக்கமாக இருக்கிறார். கனத்திற்குரிய விசுவாசமுள்ள மூப்பகள் ஆண்டவருக்கும் சபைக்கும் நல்ல ஊழிக்காரர்களாக இருக்க வேண்டும். அவர்களை தேர்வு செய்யும் சபையோர் அவர்களை பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும். தேவனுடைய வார்த்தைகளின் வெளிச்சத்தில் இவர்களின் திறமைகளைப் பற்றியும், கனிகளைப் பற்றியும் நன்கு அறிந்திருக்கவேண்டும். இல்லாவிடில் ஒருவரும் இப்படிப்பட்ட ஸ்தானத்திற்கு நியமிக்கப்படக் கூடாது. எந்த மூப்பருக்கும் தன்னை தான் நியமித்து கொள்ள அதிகாரம் கொடுக்கப்படுவதில்லை. உண்மையில் ஒருவர் சபையையும் கிறிஸ்துவின் சரீரத்தையும் புறக்கணித்து, தன்னையே எல்லா வற்றிக்கும் மேலாக உயர்த்தி, அனைவரையும் நியாயந்தீர்க்கும் அளவுக்கு தன்னை நினைத்து கொள்பவரை ஒருகாலமும் மூப்பராக நியமிக்கக்கூடாது. மனத்தாழ்மையும், நம்முடைய ஆண்டவரின் சரீரமாகிய சபையின் ஒற்றுமையுமே, ஆராதனைக்கு தேவைப்படும் அடிப்படையான காரியமாகும்.

F296 [P1,2]: -

"தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" (லூ 14:11) என்ற வசனம் தேவனுடைய பிரமாணத்தை மிக தெளிவாக காட்டுகிறது. இந்தக் கற்பனையை சபைகள் கட்டாயமாக கடைப்பிடிக்கவேண்டும். இவர்கள் ஒரே சிந்தையாக இருந்து, தேவனுக்கேற்ற கீழ்ப்படிதலை நாடவேண்டும். தேவன் மேல் வைராக்கியம் கொண்டு, விசுவாசமுள்ளவர்களை மட்டுமே தேவன் ஊக்குவிப்பவராக இருக்கிறார். "அவர்களெல்லாரையும் சுற்றிப்பார்த்து, அந்த மனுஷனை நோக்கி: உன் கையை நீட்டு என்றார். அப்படியே அவன் தன் கையை நீட்டினான், உடனே அவன் கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று "

(லூ 6 :10) "அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்" (மத் 25 :21,23) கனம் என்ற ஏணியின் கீழ், பல வழிகள் உண்டு. யார் விரும்பினாலும், தேவனுக்கும், சகோதரர்களுக்கும், சத்தியத்திற்கும் மனமேட்டிமையோடு அல்ல, மனத்தாழ்மையோடு, ஊழியம் செய்யலாம். எந்தவிதமான ஊழியத்திலும், விசுவாசமுள்ளவர்கள் மகிழுவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் அதிகதிகமான வாய்ப்புகளைத் திறப்பார். இப்படியாக, அவருடைய ஞானத்தை எடுத்துக்காட்டும். அவருடைய சித்தத்தை மிக கவனத்தோடு, ஒவ்வொரு புது சிருஷ்டியும் நிறைவேற்ற வேண்டும். விசேஷமாக மூப்பர்களை தேர்வு செய்யும் விஷயத்தில், கிறிஸ்துவின் சரீர அங்கமாக இருக்கக்கூடியவர் தலையாகிய கிறிஸ்துவின் சித்தத்திற்கேற்ப தன் கைகளை உயர்த்தவேண்டும்.

எவ்வளவு திறமை வாய்ந்தவராக இருந்தாலும் சரி சுயத்தை தேடுபவரை விட்டுவிட்டு, மனத்தாழ்மையுள்ளவரை மட்டுமே நாம் தேர்வு செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். அனைவரின் நலனுக்காக கொடுக்கப்படும் கடிந்துக்கொள்ளுதல், மற்றவர்களை அடக்கும் நோக்கத்துடன் இராமல், மிக மிருதுவாக இருக்கவேண்டும். தகுதிப் பெற்ற ஒரு மூப்பர் சபையின் தலைமையாக தன்னை உயர்த்திக்கொள்பவர் - போதிப்பதற்கு தெய்வீக உரிமையை பெற்றுக்கொள்ளவில்லை என்று நாம் அறிந்துகொள்ளலாம். இப்படிப்பட்டவர்கள் சாத்தானின் கண்ணியிலிருந்து தப்பித்து, சீர்ப்பொருந்தும் வரைக்கும் அந்த நிலையிலிருந்து நிராகரிப்பதே, அன்பின் வெளிப்பாடாகும்.

R3278 [col. P3] :-

இராஜா தன்னுடைய மனத்தாழ்மையை மிக நேர்த்தியாக தன்னுடைய அறிக்கையில் குறிப்பிடுகிறார். "... நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுப்பிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்துக்கொண்டதும் ஏராளத்தினால்

எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன்.." அவர் தேவனுடைய ஜனங்களுக்கு இராஜாவாக இருந்தபோதிலும், அந்நிலைக்கு தன்னை தகுதியற்றவராக கருதினார். இவ்வளவு பெரிய பொறுப்புகளையும், நிர்வாகத்தையும் நிறைவேற்றுவதற்கு தன்னுடைய திறமை போதாது என்று எண்ணினார். தான் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட பின்னும், தன்னுடைய பிரஜையகளை "உமது ஜனங்கள்" என்று குறிப்பிடுகிறார். சபையின் மூப்பர்களுக்கு நாம் இங்கு ஒரு சிறிய பாடத்தைச் சொல்ல ஆசிக்கிறோம். பாபிலோன் அமைப்பின் பழக்கத்தின்படி "என் ஜனங்கள்", "என் சபை" என்று அழைப்போர், உண்மையான மேய்ப்பர்களாக இருக்க வாய்ப்பில்லை. இப்படிப்பட்ட வார்த்தைகள் தேவனுக்கு எவ்வளவு எதிரானது என்பதை அவர்கள் உணராதிருக்கிறார்கள். தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட மாம்சீக இஸ்ரயேலர்கள் இவ்வளவாக தங்களை தாழ்த்தும்போது, ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் எவ்வளவு தாழ்மையில் இருக்கவேண்டும். தேவனுடைய சபை ஜனங்களை என்னுடையவர்கள் என்று கூறுபவர்கள், உண்மையில் மிக ஆபத்தான நிலையில் உள்ளார்கள் என்பதை நாம் புரிந்துக்கொள்ளலாம். மேலும் தலைமையாக இருக்கவிரும்புவர்கள், தங்களை தாங்களே மேன்மையாக எண்ணிக்கொள்பவர்கள் மிகுந்த ஆபத்திற்குள் இருக்கிறார்கள் என்பதை காட்டுகிறது. இப்படிப்பட்ட மனநிலையில் உள்ளவர்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபித்து, திருத்திக்கொள்ளவேண்டும். இதனிமித்தம் தேவன் அவர்களுடைய தவறுகளை மன்னித்து, மேலும் வரக்கூடிய இடறுதல்களிலிருந்து விடுவிப்பார். மேலும் எந்த விதமான சூழ்நிலைகளிலும் தேவனுடைய மந்தையில் தலைமை வகிக்கக்கூடிய பொறுப்புகளுக்கு எளிதில் இணங்கிவிடக்கூடாது. இப்படிப்பட்ட கட்டுப்பாட்டை செலுத்தக்கூடிய மூப்பர்கள் தங்களை கெடுத்துக் கொள்வதோடு மட்டும் அல்ல, தேவன் மந்தைக்கு கொடுத்த சுயாதீனத்தை அனுபவிக்காதபடி, தடுப்பவர்களாக இருப்பார்கள்.

11. புருஷர்கள் மனத்தாழ்மை ஏன் செயலாற்ற வேண்டும்?

எபே 5:25"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து"

F497[P1] : -

குடும்பத்தில் தலைமை வகிக்கக்கூடிய நபர் குடும்பத்தின் மேல் ஆதீக்கம் செலுத்த அல்ல, மாறாக தன்னுடைய பராமரிப்பின் கீழ் இருக்கும் ஒவ்வொருவருடைய தேவைகளையும் பூர்த்தி செய்து, வழிநடத்தி, அவர்களை வழிநடத்த தக்க ஆலோசனை கூறவேண்டும். இப்படிப்பட்ட புருஷர்களுக்குள் இருக்கும் அன்பின் ஆவி, மனைவியின் விருப்பு, வெறுப்புகளையும், அவளுடைய நல்ல ஆலோசனையையும் என்றுமே ஒதுக்கிவிடக் கூடாது. ஆதாம் சகல விதமான பரீப்பூரணத்தில் சிருஷ்டிக்கப்பட்டபோதும், ஏவாளின் பிரிவினால், சில முக்கிய குணங்களை இழந்துவிடுவோமோ என்ற ஆதாமின் தவிப்பை இவர்களும் நிச்சயமாக உணருவார்கள். தெய்வீக ஏற்பாட்டின் முக்கியத்துவம் குடும்பத்தின் தலைவரிடமிருந்தாலும், நிச்சயமாக சில விசேஷித்த குணங்களை தன் மனைவியிடம் கண்டுணரச் செய்யும். தன்னுடைய சொந்த சிந்தையும் யோசனைகளும், மனைவியினிடத்திலிருக்கும் இசைவான ஆதரவையும் நன்கு உணருவார்கள். ஆகையால், நல்ல சிந்தையுள்ள மனுஷன் தன்னுடைய மனைவியின் உதவியை நாடி, அவளுடைய ஆதரவை அங்கிகரித்து, அவளுடைய நோக்கங்களுக்கு செவிக் கொடுத்து அவளுடைய அன்பை உணர்ந்து அவளை உயர்வாக புரிந்துக்கொள்வார்.

12. மனைவிகள் எவ்வாறாக மனத்தாழ்மையை காண்பிக்க முடியும்?

எபே 5:22 - 24"மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்.கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்"

F 500[P2]: -

இப்படிப்பட்ட சுழ்நிலைகளில் - "நான் தேவனுடைய தெய்வீக பிரமாணங்களை மீறினேன், நான் என் புருஷனை மதிக்காததின் நிமித்தம் வெட்கப்படுகிறேன். சகலத்திற்கும் பொறுப்பாளியாக இருக்கவேண்டிய நான் என்னுடைய

பங்கை உணர்ந்துவிட்டேன். இனி நான் விசுவாசத்தோடு என் கடமைகளை செய்வேன், என் புருஷன் குறைவுப்படக்கூடிய விஷயத்தில், அவரை ஒரு சிறந்த மனிதானாக நிறுத்தவும், அவருடைய தாலந்துகளைச் சிறப்பாக பயன்படுத்தவும், கர்த்தரிடத்தில் ஜெபிப்பேன். அவரிடத்தில் நான் அதிகமாக அன்பு கூரவும் மரியாதை கொடுக்கவும் முயற்சிப்பேன். என்னுடைய திருமண உடன்படிக்கையின் கீழ், நான் என் கடமையைச் செய்து, விசுவாசத்தோடு தேவனுக்குள் செயல்படுவேன். அவருடைய பலவீனங்களினாலும் குறைவான நியாயத்தீர்ப்பினாலும், இவைகளை நான் மற்றவர்களிடமிருந்து, மறைத்துக்கொள்வேன். இவைகளை என் கணவரிடம் எடுத்துரைக்கையில் என்னுடைய மேன்மையான திறமைகளைக் குறிப்பிடமாட்டேன். குறித்த காலத்தில் அவர் அடையும் தோல்விகளே அவரை சீர்ப்படுத்தும் என்று எதிர்பார்க்கிறேன். ஆயினும் நான் எந்த காரியத்தையும் கட்டாயப்படுத்தாமல், முடிந்த வரைக்கும் ஒரு நல்ல துணைாக காரியங்களை எடுத்துச் சொல்லுவேன். கால போக்கில் அவர் என்னுடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, வாழ்க்கையின் எல்லா காரியங்களிலும் தேவனுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிறிஸ்துவும் சபையும் ஐக்கியப்பட்டிருப்பதைபோல நாங்களும் இசைந்து வாழ்வோம் என்று எதிர்பார்க்கிறேன். தெய்வீக ஏற்பாட்டில் மனத்தாழ்மையையும், சாந்தத்தையும் எனக்குள் வளர்த்துக்கொள்வதில் நான் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட மனைவியாக இருப்பேன். என்னுடைய முயற்சினால் என்னுடைய கணவர் ஆசீர்வதிக்கப்பட்ட உயர்ந்த நிலையை பெறுவார். இப்படியாக தேவனுடைய கிருபையினால் அவருடைய வார்த்தைகளில் உள்ள கட்டளைகளைப் பின்பற்றி, அப்போஸ்தலர்கள் முன் வைத்த தெய்வீக நிலைக்கு எங்களை வளர்த்துக் கொள்ளும் முயற்சிகளில் நாங்கள் நெருங்குகிறோம்" என்று ஒரு மனைவி தனக்குள்ளே சொல்லவேண்டும்.

13. நம்முடைய பிள்ளைகளுக்கு சாந்தத்தையும் மனத்தாழ்மையையும் கற்றுக் கொடுப்பதன் முக்கியத்துவம் என்ன?

செப் 2:3"தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்"

F555[P1]: -

உபத்திரவ காலத்தில் இந்த ஒரே ஒரு வாக்குத்தத்தை உறுதியாக பற்றிக்கொள்ளவேண்டும். இது பொதுவானதாக காணப்படுகிறது. சாந்தமும், அமைதலும், நீதியையும் விரும்பும் அனைவருக்கும் இது பொருந்தும். உடன்படிக்கை செய்தவர்களின் பிள்ளைகளும் இந்த வகுப்பில் உள்ளனர். இவர்கள் தேவனுடைய வார்த்தையின்படி சகல கட்டளைகளையும் மிக சரியாக கற்பிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். "தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்" செப் 2:3 என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது.

R1963[col. 2P 2-5]: -

புயல் வரும்போது, அனைவரும் பாதுகாப்பைத் தேடுவார்கள். (வெளி 6:15-17) அநேகர் பட்டணங்களுக்கு ஓடிப்போவார்கள். இந்த உலகத்தின் மேல் வரக்கூடிய சகல காரியத்தையும் மேற்கொண்டவர்கள் (லூா 21:36) உண்மையில் மலைக்கு (தேவனுடைய இராஜ்யம்) ஓடிப்போவார்கள். அங்கு அவர்கள் பாதுகாப்பாக இருப்பார்கள். இவர்களை தவிர ஒருவரும் இந்தப் பாதுகாப்பைப் பெற முடியாது. "யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான்?கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து, தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே.அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும், தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான்.இதுவே அவரைத் தேடி விசாரித்து, அவருடைய சமுகத்தை நாடுகிற யாக்கோபு என்னும் சந்ததி.." (சங் 24:3-6)

ஆனால் தங்களை தான் மறைத்துக் கொள்வதற்கு மனுஷர் எடுக்கும் முயற்சி விருதாவாக இருக்கும். தங்களுடைய பிள்ளைகளை உபத்திரவத்தின் போது மறைத்துக் கொள்வதற்கு பரிசுத்தவான்கள் எந்த முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளமாட்டார்கள். சகல பாவங்களைப் போக்கவும், ஒவ்வொரு பொய்யான அமைப்புகளை அழிக்கவும், பொதுவாக முழு மனுக்குலத்திற்கு நன்மையான பாடங்களை கற்பிக்கவும் அவர்களின் இருதயங்களை நொறுக்கவும், இந்த உபத்திரவக் காலம் வருகிறது. நம்முடைய பிள்ளைகளுக்கும், நண்பர்களுக்கும் இந்தப்பாடங்கள் தேவைப்பட்டால் அதிலிருந்து அவர்கள் தப்புவிப்பதற்கு நாம் முயற்சிக்கக்கூடாது. இந்த உபத்திரவம் அவர்களுக்கு தேவையில்லை என்றால், தங்களுடைய பிள்ளைகளையும், நண்பர்களையும் பாதுகாக்க தேவன் மகிமை அடைந்த சபையை அனுமதிப்பார். மாம்சத்தில் இருக்கும் சபையின் பாதுகாப்பைக் காட்டிலும் மகிமை அடைந்த சபை அதிக வல்லமையாக செயல்படும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான சகல கட்டளைகளையும் எடுத்துக்காட்டுகளின் மூலம் போதித்து, நீதியின் உபதேசங்களை விசுவாசத்தோடு கற்பிக்கவேண்டும். "கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" என்று அவர்களுக்கு ஞாபகப்படுத்தவேண்டும். இரட்சிப்பின் திட்டத்தைப் பற்றியும், யுகங்களைப் பற்றிய தெய்வீக ஏற்பாட்டையும் அவர்களுக்கு கற்றுக் கொடுக்கவேண்டும். இதனிமித்தம் தேவனுடைய ஞானத்தையும், அன்பையும், நீதியையும் மிக தெளிவாக புரிந்துக்கொள்வார்கள். மேலும் மற்றவர்கள் முன்னிலையில் இப்படிப்பட்ட அன்பிலும் நீதியிலும் நடந்துக்கொள்வார்கள். சாந்தம், அமைதல், பொறுமை போன்ற குணங்களைப் பற்றி அவர்களுக்கு போதிக்கவேண்டும். இறுமாப்பின் பின்விளைவுகளை அறிவிக்கவேண்டும். கொஞ்சத்தில் சந்தோஷமாக இருப்பதற்கு கற்றுக் கொடுக்க வேண்டும். போதும் என்ற மனதோடுக்கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் என்று அவர்களுக்கு கற்பிக்கவேண்டும்.

"தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்" (செப் 2:3)என்ற வார்த்தைகளை நாம் அவர்களின் நினைவுக்கு கொண்டுவரவேண்டும். உலகத்தின் பொருட்கள் அநித்தியமானவைகள். ஐசுவரியமுள்ளவர்களும் சரி, தரித்தரர்களும் சரி, அனைவரும் துன்மார்க்கமாக நடக்கிறார்கள். (மல் 4:1, யாக் 5:1-6)

உபத்திரவக் காலத்தில் உலக வரலாற்றில் முதல் முறையாக சாந்தம், பொறுமை, அன்பு, கனிவு, இன்னும் மற்ற குணங்களை காண்பது அரிதாக இருக்கும். (உபத்திரவக் காலத்திற்கு முன்னும் பாபிலோனின் வீழ்ச்சிக்கு முன்பாக, திரள் கூட்டத்தார் மேல் வித்தியாசமான உபத்திவரம் வரும். பாபிலோனின் வல்லமை மிகவும் அதிகரித்ததினால் இவர்கள் மிகவும் உபத்திரவப்படுவார்கள். சரீரத்திலும், சிந்தையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊழியம் செய்வது மிகுந்த பாக்கியமாக இருப்பதினால், இப்படிப்பட்ட உபத்திரவ நாட்களில் இப்படிப்பட்ட ஊழியங்களை மனப்பூர்வமாக செய்வதற்கு நாம் பிள்ளைகளை பயிற்றுவிக்க வேண்டும். எப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் நல்ல குணங்களில் உறுதியாக இருந்து தேவனோடு விசுவாசத்தில் ஐக்கியப்பட்டு, தங்களுடைய மேன்மையான குணங்களை பிரதிபலிப்பதற்கு நாம் பயிற்சி கொடுக்கவேண்டும்)

R2021[col. 1P1,2]: -

"தேசத்திலுள்ள எல்லா சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள்; நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள்" (செப் 2:3) இதுவே பாதுகாப்பான ஒரே வழி. இந்தக் காலத்தில் தங்களுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு தெரிந்துக்கொள்ளப்படுதலை உறுதிப்படுத்திக் கொள்பவர்கள் உலகத்தின் மேல் வரும் உபத்திரவங்களுக்குத் தப்பித்துக் கொள்வார்கள். தப்பித்துக் கொள்ளாதவர்களுக்கு இதை தவிர வேறு எந்த வழியும் இல்லை. இவ்வாறு செய்வதினால் ஏதோ ஒரு சூழ்நிலையில் காக்கப்படுவார்கள். ஆகவே நமக்காகவும், நம்முடைய பிள்ளைகளுக்காகவும், ஒரு பாதுகாப்பான இடத்தை (அப்படி ஒன்றும் இல்லை) தேடுவதைக் காட்டிலும், இன்று நமக்கு முன் வைக்கப்பட்டுள்ள நியாயமான கற்பனைகளுக்கு முழு இருதயத்தோடு கீழ்ப்படிந்து நித்திய பாதுகாப்பைப் பெறுவோம்.

14. சாந்த குணமுள்ளவர்களுக்கும், மனத்தாழ்மையுள்ளவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வாக்குத்தத்தங்கள் என்ன?

15. சாந்தம் மற்றும் தாழ்மைக்கு வேதாகமம் கொடுக்கக்கூடிய குறிப்பான எடுத்துக் காட்டுகள் யாவை?

மத்தேயு 11:28-30"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்",

எண்ணா 12:3"மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்", மத் 8:8"நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்",

யோவான் 13:1-17"பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்.சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில்;தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து;போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு,பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இன்மேல் அறிவாய் என்றார்.பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றான்.அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என்கைகளையும் என் தலையையும்கூடக் கழுவவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்.அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர் தான்.ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்"

R 2903 [col.2 P2,3]: -

குழந்தையாக இருந்த மோசே கவர்ச்சியாகவும், அழகாகவும் இருந்தபடியினால் "அக்காலத்திலே மோசே பிறந்து, திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்து, மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான்" என்று ஸ்தேவான் கூறுகிறார். (அப் 7:20) யூத வரலாற்று ஆசிரியரான ஜோசபஸ் இவரைக் குறித்து எழுதும் போது

-"அவரை வீதியில் துரக்கி சென்றபோது ஜனங்கள் தங்களுடைய வேலைகளை விட்டுவிட்டு, அவரை கண்சிமிட்டாமல் பார்ப்பார்கள்....." என்கிறார். ஆதிகாலத்தில் அவர் தன்னுடைய சாந்தமான பெற்றோரிடம் பெற்ற பயிற்சிகளையும் நாம் கவனிக்கவேண்டும். வருங்கால அரசராக எகிப்தில் சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்ற மோசே, எவ்வளவு மேன்மையாக இருந்திருக்கவேண்டும். ஆயினும் "பூமியில் உள்ளவர்களில் மிக சாந்தமான மனுஷன்" என்று அவர் பேர் பெற்றார். மோசே ஜெனிப்பிக்கப்பட்டது முதல் அடிமை தனத்தில் இருக்கும் தன்னுடைய பெற்றோர்களை எண்ணி இப்படிப்பட்ட சாந்தத்தை பெற்றிருக்கக்கூடும். ஏனெனில் அரசர்களின் பிள்ளைகளிடமும், ஆட்சியாளர்களிடமும் இப்படிப்பட்ட குணத்தை காண்பது அரிது. ஆயினும் தேவனுடைய ஜனங்களை வழிநடத்துவதற்காக, மோசே பெற்றிருந்த சாந்த குணம் மிக அவசியமானதாக இருந்தது. நடந்திட்டபடி, மோசே இஸ்ரயேல் ஜனங்களோடு வனாந்தரத்தில் பிரயாணம் பண்ணுகையில், தேவனோடு அவர்கள் செய்த உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய அவர் கானானுக்குள் பிரவேசியாதபடிக்கு தடைசெய்யப்பட்டார். தேவனுடைய நாமத்திற்கு மகிமையை சேர்க்காமல், அந்த அற்புதத்தை தான் செய்வதாக சொல்லி - "கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ"என்று சொல்லி, கன்மலையை அடித்தார்.

நீண்டகாலம் சாந்தமாக இருப்பதற்கு பயிற்சி பெற்று, மிக உன்னதமான நிலையில் இருந்த அவர், சோதனையை ஜெயித்திருக்கவேண்டும். ஏனெனில் அவர் தன்னுடைய வருங்காலத்தை வீணடித்துவிட்டார். இஸ்ரயேலுக்காக தேவன் தேர்வு செய்யப்பட்ட மூப்பர், உண்மையில் பெருமையுள்ளவரும், மனமேட்டிமையுள்ளவருமாக இருந்திருந்தால் எவ்வளவு பயங்கரமாக இருந்திருக்கும் ! மோசேயைத் தவிர ஒருவராலும் இப்படிப்பட்ட சூழ்நிலைகளை நீடிய பொறுமையோடு சகித்திருக்க முடியாது. இதை அடிப்படையாகக் கொண்டு தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு முக்கிய பாடம் வைக்கப்பட்டுள்ளது. புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு மிக சாந்தமும், தாழ்மையுள்ளவர். மேலும் இயேசுவோடுக்கூட உடன்பங்காளிகளாக ஆகும்படிக்கு இந்த உலகத்திலிருந்து அழைப்பு பெற்று, கிறிஸ்துவின் சரீர அங்கங்களாக இருப்பவர்கள், தங்களுடைய தலையாகிய இயேசுவின் தாழ்மையையும், சாந்தத்தையும் பெற்றிருக்கவேண்டும். அப்போது இராஜ்யத்தில் உயர்த்தப்படுவோம் என்ற அப்போஸ்தலரின் எச்சரிப்பை நாம் தொடர்ந்து நினைவில் கொள்ளவேண்டும்.

16. இந்த குணங்களை நமக்குள் வளர்த்துக் கொள்ள, தேவையான முறைகளை, ஆலோசனையாக கொடுக்கவும்

R1962 [col. 11]: -

"என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள், நான் சாந்தமும், மனத்தாழ்மையும் உள்ளவன்..." சாந்தமும் அமைதலுமான ஆவிக்குள் இவைகள் அடங்கியிருக்கிறது. சாந்தமாக இருக்கவேண்டும் என்றால், பொறுமையையும், தேவனுடைய சித்தத்தை அன்போடு நிறைவேற்ற தேவையான அர்ப்பணிப்பும் நமக்குள் வளர்த்துக் கொள்ளவேண்டும். சாதகமான சூழ்நிலைகளிலும், பாதகமான சூழ்நிலைகளிலும், தேவனுடைய அன்பில் நம்பிக்கையாக இருந்தால், அவருடைய ஞானத்தினால் வழிநடத்தப்படுவோம்.

(A) ஜெபத்தினாலும்

சங்கீதம் 19:12-14"தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்.துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதிரும்; அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலாயிருப்பேன்.என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக"

(B) தேவனுடைய வார்த்தைகளில் உள்ள தெய்வீக ஞானத்தையும், அறிவையும், வல்லமையையும் கற்றுகொள்வதினாலும்

சங்கீதம் 8:3,4"உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது,மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்"

1கொரி 4:7 "அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?"

(C) பரிப்பூரண மாதிரியாக இருக்கும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவோடு நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பதினாலும்..

ரோம 8:29 "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்"

11கொரி 3:18"நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்"

17. இந்தத் தலைப்புக்கு கூடுதலான மற்ற யோசனைகள் என்ன என்ன? (பரலோக மன்னா மற்றும் புதிய வேதாகமம்)

R 1920 : -

"கர்த்தருக்குள் மேன்மைபாராட்டுங்கள்" (3ம் கேள்வி காண்க)

இந்தப் பாக்கியங்களை நாம் பயன்படுத்தும் பட்சத்தில், நமக்காக குவித்து வைக்கப்பட்டிருக்கும் சகல தெய்வீக கிருபைகளையும் நாம் பெற்றுக்கொள்ளலாம். அப்போது உண்மையில் நாம் கர்த்தருக்கு மகிமைப்பாராட்டலாம். இப்படிப்பட்ட ஒரு மேன்மைப் பாராட்டலைக் குறித்துப் பார்ப்போம். "அவரை புரிந்துக்கொண்டு அவரை அறிந்திருப்பதினால் நாம் மேன்மை பாராட்டலாம். "அவரை அறிந்துகொள்வது" என்பதன் பொருள் என்ன ? அவருடைய வார்த்தைகளின் சாட்சிகளின் மேல் நம்முடைய இருதயத்தை வைத்து, ஆண்டவரை நம்முடைய தனிப்பட்ட நண்பராகவும் ஆலோசகராகவும், வழிகாட்டியாகவும், உதவியாளருமாக இருப்பதை உணர்வதே தேவனை அறிந்துக்கொள்வதாகும். இப்படியாக நாம் அவருடைய ஆவியோடும், ஐக்கியப்பட்டு, அவருடைய கோட்ப்பாடுகளுக்கும், கிரியைகளுக்கும் பரிட்ச்சையமாகி விடுவோம். - அப்போது நாம் அவரை நன்கு புரிந்துக்கொள்ளலாம். அவருடைய வழிநடத்துதலையும், உதவிகளையும் உணர்ந்துக் கொண்டு நித்தமும் அவரோடுக்கூட அவரோடு நடைப்பயிலலாம். இப்படியாக குறித்த காலத்தில் இந்த உலகத்தில் தேவனுடைய நீதி ஸ்தாபிக்கப்படும் முன் நாம் தேவனுடைய நீதியையும், அன்பின் குணங்களையும் முழுமையாக உணர்ந்துக் கொள்ளலாம். ஆகையால், உண்மையில், தனிப்பட்ட முறையில் நாம் அவரை நன்கு அறிந்து கொண்டவர்களாக இப்போது அவரை மகிமைப்படுத்தலாம்.

இப்படிப்பட்ட தெய்வீக அன்பையும் பராமரிப்பையும் பெற்று, ஆசீர்வதிக்கப்பட்ட நிலையில் "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்; சிறுமைப்பட்டவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள். என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்.அவர்கள் அவரை நோக்கிப்பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை.இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்.கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை" என்று சங்கீதக்காரன் சொன்ன வசனங்களை நாமும் கூறலாம். (சங் 34 :1-9)

தேவனுடைய பிள்ளைகளுக்கு எவ்வளவு விலையேறப்பெற்ற அனுபவங்கள் ! நிச்சயமாக பெருமையுள்ள இருதயங்கள் இந்நிலையை அடைய முடியாது. ஏனெனில் "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து,

மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1பேது 5:5,6) ஐசுவரியத்திலும், வல்லமையிலும், ஞானத்திலும் வல்லவர்களாக இருப்போருக்கு இந்தக் கட்டளையைக் கடைப்பிடிப்பதற்கு மிக கடினம். (மத் 19:24-26) பதவிகளிலும், மேன்மையிலும், மனுஷருடைய புகழ்ச்சியிலும் இருந்த பரிசேயர்களுக்கும் சதுசேயர்களுக்கும் இவைகளை பின்பற்றுவதற்கு மிக கடினமாக இருந்தது. ஆபிரகாமின் சந்ததியின் வழிவந்தவர்கள் என்று யூதர்கள் பெருமை கொண்டதினால், முழு இஸ்ரயேல் ஜனங்களும் இதை கடைப்பிடிக்க முடியாமல் போனது. உலக ஞானத்திலும் அறிவிலும் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்த கிரேக்கர்கள் பெருமை கொண்டதினால், இதை கடைப்பிடிக்க முடியவில்லை. ஜாதிகள் மத்தியில் மிகுதியான வல்லமையை பெற்றிருந்த ரோமர்கள் அதில் பெருமை பாராட்டினதினால் இதை கடைப்பிடிக்க முடியவில்லை. அதேபோல இன்றை நாட்களிலும், பெருமையுள்ளவர்கள் இந்த க்கற்பனையை கடைப்பிடிக்க முடியாது. தங்களுடைய மதங்களைப் பற்றிய பெருமையில் இருப்போரும், விஞ்ஞானத்திலும், தத்துவ ஞானத்தில் அதிக ஞானத்தை பெற்றோர், புதிதான காரியங்களை கண்டுப்பிடிப்போர், அவர்களை மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்று விரும்புவோர்களுக்கும் தேவனுடைய வார்த்தைகளில் உள்ள சத்தியங்களைக் காட்டிலும், மனுஷரையும் அவர்களின் மேன்மைகளை மதிப்பவர்கள் தேவனுடைய இந்தக் கட்டளைகளை கடைப்பிடிப்பது கூடாத காரியமாகும். இக்கால வாழ்க்கையில் ஐசுவரியவான்களாக இருப்பவர்களும், ஐசுவரியவான்களாக இருப்பதற்கு விருப்பமுள்ளவர்களும் விசேஷமாக தங்கள் பேரில் நல்ல அபிப்பிராயம் உள்ளவர்கள், தேவனுடைய பலத்த கரங்களுக்குள் அடங்கியிருக்க முடியாது. உண்மையில், ஒவ்வொருவரும் சத்தியத்தின் அறிவை பெறுவதற்கு எதிர்நோக்கும் மிக கடுமையான யுத்தத்தை பற்றி அப்போஸ்தலர் வலியுறுத்துகிறார். "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்.ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" (பிலி 2:12,13)

தேவனுடைய கிருபையே போதுமானது என்று அறிந்துக்கொள்ள கடுமையாக முயற்சித்தவர்கள் மிக சிலராக இருக்கிறார்கள். ஏனெனில் சிலுவையைப் பற்றிய சத்தியம் உலகத்தாருக்கு பயித்தியமாக இருக்கிறது. தங்களுடைய சிலுவையை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கு அவர்கள் மனதை செலுத்துவதில்லை.

இதன் காரணத்தினால், "ஞானிகள் அல்லாதவர்களும், வல்லவர்களாக இராதவர்களும், மேன்மையுள்ளவர் இல்லாதவர்களும், தேவனுடைய இராஜ்யத்தில் ஆண்டவருடைய மகிமையில் பங்கெடுப்பதற்காக அழைப்பு பெற்றிருக்கிறோம். இக்காலத்து வாழ்க்கையில் அமிழ்ந்திருப்பவர்கள் ஆண்டவரின் அழைப்பை அசட்டை செய்கிறார்கள். அந்த அழைப்பிற்கு செவிச்சாய்த்து கீழ்ப்படிந்து இடுக்கமான பாதையில் பிரவேசித்து, தேவனுடைய வழிநடத்துதலினால் பலிசெலுத்தும் அளவுக்கு அவர்களால் தங்களை தாழ்த்தி கொள்ள முடியவில்லை.

"எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை.ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்.உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்.மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்" (1கொரி 1:26-29) மனத்தாழ்மையுள்ள தேவ ஜனங்களின் கரங்களில் உள்ள வல்லமையான சத்தியங்களைப் பார்த்து ஞானவான்களும் குழப்பமடைகிறார்கள். நூற்றாண்டுகளாக வளர்ச்சி அடைந்த அமைப்புகளில் இப்படிப்பட்டவர்களுக்கு முன்பாக தடுமாறுகிறார்கள். மேலும், "ஆதலால் இதோ, நான் அற்புதமும் ஆச்சரியமுமான பிரகாரமாக இந்த ஜனங்களுக்குள்ளே ஒரு அதிசயத்தைச் செய்வேன்; அவர்களுடைய ஞானிகளின் ஞானம் கெட்டு, அவர்களுடைய விவேகிகளின் விவேகம் மறைந்துபோகும்

என்று ஆண்டவர் சொல்லுகிறார்" (ஏசா 29:14) என்று அனைவருக்கும் அதிகதிகமாக தெளிவாக நிரூபிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அவருடைய பிரமாண்டமான வேலைகளை செய்வதற்கு தேவன் பலவீனமுள்ளவர்களை ஏன் தெரிந்துக்கொண்டார் ? திறமையுள்ள நாவைகளையும், ஆயத்தமாக இருக்கக்கூடியவர்களின் பேனாக்களையும், மிக சிறப்பானவர்களையும் தேவன் ஏன் பயன்படுத்தவில்லை என்பதன் சரியான காரணத்தை பவுல் கூறுகிறார் - "மாம்சமான யாவரும் தேவனுக்குமுன் பெருமை பாராட்டதபடிக்கு இப்படிசெய்தார்." பூமியில் பாவத்தை போக்கி, நீதியை ஸ்தாபிப்பதற்கான மிக சிறப்பான தேவனுடைய வேலையை செய்ய, மனித வல்லமை என்றுமே உதவாது. ஆயினும், அவருடைய விருப்பத்தின்படி செயல்படக்கூடியவர்களின் வழியாக தம்முடைய வல்லமையைச் செயல்படுத்த தேவன் பிரியமுள்ளவராக இருக்கிறார். மனமேட்டிமையும், பெருமையுள்ளவர்களின் வழியாக நம்முடைய ஆவியை கொண்டு தேவன் அற்புதமான காரியங்களை நடப்பித்தால், அவர்களின் பெருமையும், மேட்டிமையும் இன்னும் அதிகரித்து, தேவனுக்கு சேரவேண்டிய மகிமையை அவர்கள் சொந்தமாக்கிகொள்வார்கள்.

மிக எளிமையான கருவியையும் தேவன் பயன்படுத்துவார் அதாவது மிக குறைவான தாலந்து உள்ளவர்களையும், அவருடைய பணியைச் சிறப்பாக செய்ய தேவன் உயர்த்துவார். அதே நேரத்தில் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மை நாம் உயர்த்தும் பட்சத்தில், வீண் மகிமையும் பெருமையும் நமக்கு சாபத்தை வருவிக்கும். இதுவே மனித இயல்பு இந்த்ப பலவீனத்தை எதிராளியாகிய சாத்தான் மிக தந்திரமாக பயன்படுத்துகிறான். வசதியில் எளிமையானோர், அறிவிலும் படிப்பிலும் குறைவுள்ளோர், இன்னும் தெய்வீக வார்த்தைகளில் உள்ள கட்டளைகளைப் பெறுவதில் குறைவுப்படுவோரும், இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தடுமாறி விழுவதற்கு வாய்ப்புண்டு. "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்" என்ற ஆண்டவரின் வார்த்தைகளை மறந்து விடுகிறார்கள். (லூா 6:20, மத் 5:3) அறியாமையில் உள்ளவர்களும், நன்கு படித்தவர்களும், வசதியுள்ளவர்களும், எளிமையானவர்களும் "தங்களுடைய மாம்ச சிந்தையில் மேன்மை பாராட்டலாம். தான் ஒன்றும் இல்லாதவனாக இருந்து தன்னை ஒரு பொருட்டாக எண்ணிக் கொண்டு தன்னை தான் வஞ்சித்து கொள்பவனை பார்ப்பதற்கு பரிதாபமாக உள்ளது. (கலா 6:3) மொத்தத்தில் கிறிஸ்துவின் சாயல் இல்லாத எளியோரும் சரி, வசதியானவர்களும் சரி, இருவருமே தாழ்மையிலும், சாந்தத்திலும் வளர்ச்சி அடையவேண்டும். அதே போல சத்தியத்தின் அறிவை அதிகமாக பெற்றிருந்தாலும் அந்த சத்தியத்தினால் நம்மை சுத்திகரித்து தாழ்மைப்படவேண்டும். (எபே 4:2, 11தீமோ 2:25)

எல்லாவற்றிற்கும் மேலாக, நம்முடைய சாந்தத்தையும் அமைதலையும் காத்து கொள்ளவேண்டும். நம்முடைய கண்களுக்கு நாம் மிக சிறியவர்களாக தோன்றினால் மட்டுமே நமக்கு எந்த விதமான பாதிப்புகளும் ஏற்படாதபடிக்கு தேவன் நம்மை பயன்படுத்த முடியும். விசுவாசத்தின் ஒவ்வொரு சோதனைகளுக்கும் தேவன் பாதுகாப்பளிப்பதில்லை. ஆகவே இன்று தேவன் உங்களை சற்று உயர்த்தி, அவருடைய ஊழியத்தில் ஒரு சின்ன வெற்றியைக் கொடுத்தால், உங்களுடைய தகுதியற்ற நிலையை உணர்ந்து மனத்தாழ்மையோட அந்த வெற்றியைப் பெற்று கொள்ளுங்கள். நம்மை ஊக்குவிப்பதற்காக தேவன் நமக்கு வெற்றி அளித்தார் என்று எண்ணிக்கொண்டு நாளைய தினம் நீங்கள் பெறப்போகிற வெற்றிக்காக இன்றைய தினத்திலிருந்து, கர்த்தருக்கு முன் தாழ்மைப்படுங்கள். அப்போது உங்கள் குணங்கள் சரியாக வளர்ச்சி அடையும். நேற்றைய தினத்தில் நீங்கள் பெற்ற வெற்றியினால், இன்று நீங்கள் பெருமை கொள்ளாதபடிக்கு எச்சரிப்பாக இருங்கள். நீங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் சரியாக வளர்ச்சிக் காட்டவில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். நாம் எவ்வளவு சத்தியத்தை பெற்றிருந்தாலும் சரி, நம்மில் தாழ்மை இல்லாவிட்டால் எந்தப் பிரயோஜனமும் இல்லை. ஆகவே அப்போதலனாகிய பவுலின் அனுபவங்களை நாமும் பெற்றுக்கொள்வோம். "என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்.தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்பதியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்.என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலி 4:11-13)

தேவன் தம்முடைய ஜனங்களை வழிநடத்துகையில் பெருமை மற்றும் தன்னம்பிக்கை, சுய திருப்தி போன்ற குணங்களுக்கு எதிராக எந்நேரமும் பாதுகாத்திருக்கிறார். இஸ்ரயேலரை தம்முடைய சொந்த ஜனமாக தேர்வு செய்த பின் 400 வருடங்கள் அவர்களை அடிமைகளாக அனுமதித்தார். அதற்குப்பின் அவருடைய பலத்த

கரத்தினால் அவர்கள் அனைவரையும் வாக்குத்தத்தம் செய்த தேசத்திற்கு அழைத்து சென்றார். தேர்வு செய்யப்பட்ட இரட்சகராகிய மோசேயும், மிக தாழ்மையுள்ளவராக இருந்தார். அவர் திக்கு வாயனாக இருந்தபடியால் அவருக்கு உதவியாக ஆரோன் அனுப்பட்டார். மேலும் மாம்சத்தில் கொடுக்கப்பட்ட முள்ளிலிருந்து "பவுலை விடுவிக்க தேவனுக்கு மனதில்லாதிருந்தது. மூன்று முறை தேவனை நோக்கி ஜெபித்தாலும் -"என் கிருபை உனக்கு போதும் "என்று தேவன் பதில் அளித்தார்.(அபூரணமான பாத்திரத்தின் வழியாக தேவனுடைய வல்லமை செயல்பட்டால், மனுஷருக்கு முன்பாக தேவனுடைய பலம் வெளிப்படுத்தப்படும். அதே நேரத்தில் பூரணமானவர்களின் வழியாக தேவனுடைய வல்லமை செயல்பட்டால் அவருடைய வல்லமை முழுமையாக வெளிப்பட வாய்ப்புகள் இராது.

R2228[col. 1P3]: -

(8ம் கேள்வியை காண்க)

ஆவியில் மனத்தாழ்மையுள்ள காரியத்தை நம்முடைய ஆண்டவராகிய இயேசு எவ்வாறு நடைமுறைப்படுத்தினார் என்பதையும் இதனிமித்தம் அவர் எவ்வளவாக உயர்த்தப்பட்டார் என்பதையும் அப்போஸ்தலர் சில வார்த்தைகளில் சுருக்கமாக கூறுகிறார். நம்முடைய பாவங்களை அவர் சுமப்பதற்காக அவர் தன்னை தாழ்த்துவதற்கு முன் "தேவனாக, அல்லது தேவனைப் போல் இருந்தார்." மகிமையுள்ள ஆவிக்குரிய நிலையில் இருந்தார் இன்னும் அதிக மேன்மையை அடைந்து, சாத்தானைப் போல தனியான ஒரு இராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பாமல், தேவனுக்கு சமமாக இருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தேவனுடைய முதல் சிருஷ்டியாக இருந்த அவர் தேவனுடையத் திட்டத்திற்கு இசைவாக, தன்னை தாழ்த்த மனப்பூர்வமாக ஒப்புக்கொடுத்தார். இப்படிப்பட்ட மனத்தாழ்மையோடும், மனவேதனையோடும் அவமானங்களை சகிக்க தன்னை ஒப்புக்கொடுத்தார். அவர் மனுஷ ரூபம் எடுத்தபின்னும் அதே மனத்தாழ்மையில் தொடர்ந்து வாழ்ந்து, தன்னுடைய மனப்பூர்வமான அர்ப்பணிப்பைத் தெரிவித்தார். வாழும்போது மட்டும் அல்ல, மனுஷனுக்காக அவர் ஈடுபலியை செலுத்தி, தேவ திட்டத்தில் ஒவ்வொரு எழுத்தையும் நிறைவேற்றும் அளவுக்கு அவர் தன்னை தாழ்த்தினார். எல்லா விதத்திலும் அந்த மரணம் மிக கொடுமையாகவும், மிகுதியான அவமானங்கள் நிறைந்ததாகவும் இருக்கவேண்டும் என்று பிதா பிரியப்பட்டார் என்று அவர் அறிந்தபின் - " ஆண்டவரே என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தைபடியே ஆகக்கடவது" என்று தன்னைத் தாழ்த்தி ஒப்புக்கொடுத்தார்.

இது வரைக்கும் நடந்த சம்பவங்களில் மனத்தாழ்மைக்கும் சாந்தத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும் இதுவே சிறந்த எடுத்துக்காட்டு என்று பவுல் குறிப்பிடுகிறார். இந்த மாதிரியை நம்முடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பவுல் கூறுகிறார். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது."

தாழ்மையின் அடிப்படையில் காட்டப்பட்ட பூரணமான கீழ்ப்படிதலினால் பரலோக பிதா அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, தூதர்களுக்கும் மேலாக உள்ள தெய்வீக சுபாவத்தை கொடுத்தார். "ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி," (9) தேவன் அவரை எல்லாவற்றிருக்கும் மேலாக உயர்த்தினார்.

நம்முடைய ஆண்டவரின் பரீப்பூரண தாழ்மையும், கீழ்ப்படிதலும், அவருடைய விசுவாசத்தை மட்டும் வெளிப்படுத்தாமல், அவர் வழியாக பிதாவின் அளவற்ற அன்பும் காணப்பட்டது. ஏனெனில் இந்த மனுக்குலத்தை மீட்கும் பணியில், அவர் பிதாவின் அன்பை பகிர்ந்துக் கொண்டார். இதனால் பூமியில் உள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய தெய்வீக அதிகாரத்தைப் பெற தகுதியுள்ளவரானார். இப்படியாக இவர் ஆபிரகாமின் சந்ததிக்குத் தலையானார். ஆகவே, ஏற்ற காலத்தில் தேவன் தம்முடைய தெய்வீக ஆசீர்வாதங்களை இந்த உலகத்தின் மேல் பொழியும் போது அவர்கள் அனைவரும் சத்தியத்தில் அறிவினால் நிரப்பப்பட்டு, மனப்பூர்வமாக தேவனுடைய சித்தத்திற்கு இசைந்து, நித்திய ஜீவனை பெறுவார்கள்.

மனத்தாழ்மைக்கும், சுயக் கட்டுபாட்டிற்கும், மற்றவர்களின் நன்மைக்காக நடப்பிக்கப்படும் கீழ்ப்படிதலுக்கும் மட்டுமே அப்போஸ்தலர் இயேசுவை நமக்கு முன் மாதிரியாக வைக்காமல், அவர் பெற்ற உயர்ந்த நிலையையும் நமக்கு முன் வைக்கிறார். ஆகவே கீழ்ப்படிதலோடு இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றினால், அவரோடு கூட மகிமையும் அடைவோம். இக்காலத்து உரிமைகளை தேவனுக்கு பிரியமுண்டாக மனப்பூர்வமாக பலி செலுத்தினால், ஏற்ற காலத்தில் அவருடைய நாமத்தை பெற்றுக்கொண்டு சிங்காசனத்திலும், கிரியைகளிலும்

பங்கடைந்து அபிஷேகம் பண்ணப்பட்ட சரீர அங்கத்தினர்களாகவும், முழு சபையாகவும் இயேசுவுக்கு பங்காளிகளாவோம்.

(12-16) வசனங்களில் பிலிப்பு பட்டணத்தில் உள்ள சபையைப் புகழ்கிறார். அவர்கள் முன்னதாக துவங்கின ஓட்டத்தில், மனத்தாழ்மையையும், கீழ்ப்படிதலையும், தங்களுக்குள் தக்கவைத்துக் கொண்டு, தொடர்ந்து ஓடி பயத்தோடும் நடுக்கத்தோடும் தங்கள் மகிமையான இரட்சிப்பையும், கனத்தையும் அழியாமையையும் கிறிஸ்துவுக்குள் பெற்றுக்கொள்ள அவர்களை துரிதப்படுத்துகிறார். நாம் நம்மை நீதிமானாக்குவது இயலாத காரியம். ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் நீதிமான்களாக மாற்றப்பட்டு, பரலோக அழைப்பிற்கு அழைக்கப்பட்டு நம்முடைய தெரிந்துக் கொள்ளுதலை உறுதிப்படுத்திக்கொண்டவர்களாக கிறிஸ்துவுக்குள் அழைக்கப்பட்ட பெரிதான இரட்சிப்பை நிறைவேற்ற வேண்டும். ஆண்டவரின் கட்டளைகளை கைக் கொண்டு, நமக்கு முன் அவர் வைத்திருக்கும் மாதிரியை பின்பற்றவேண்டும். நாம் இந்த மாம்சத்தில் அல்ல, ஆவியிலும், சிந்தையிலும், நோக்கத்திலும் இருதயத்திலும் பூரணப்படுவோம். நம்மால் முடிந்த வரைக்கும் நம்முடைய மாம்சத்தை நம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைக்கும் போது அதனுடைய பலவீனங்கள் மற்றும் அபூரண தன்மைகள் பரிசுத்தமான நம்முடைய ஆண்டவரின் நீதியினால் மறைக்கப்படும்.

பாவத்திற்கும், பலவீனங்களுக்கும் எதிரான இந்தப் போராட்டங்கள் நம்முடைய சொந்த போராட்டம் அல்லது, இதற்குத் தேவனே நம்மை அழைத்தினால் அவர் நமக்கு உதவி செய்வார். அவர் நமக்களித்த வாக்குத்தத்தங்களினால் அவருடைய சித்தத்தைச் செய்வதற்கு நம்மை வழிநடத்தும்போதே அவர் நமக்குள் கிரியை செய்துகொண்டிருக்கிறார். அவருடைய கட்டளைகளுக்கு க்கீழ்ப்படியும்போது அவருடைய வார்த்தையின்படி நமக்குள் கிரியை நடப்பித்து தொடர்ந்து வழிநடத்துவார். "சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்.." "தேவனுடைய வல்லமையே நம்மை இரட்சிக்கும்" என்ற சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (11பேது 1:4)

மேலும், நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, சுவிசேஷத்தில் நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் மிக பெரிய பரிசை பெற்றுக்கொள்ள பயணிக்கும்போது, நெருக்கமான பாதையைக் கண்டு நாம் முறுமுறுக்கவும், பிரச்சனைகளை பெரிதாகிக்கொண்டும் இருக்கக்கூடாது. அதேபோல் சோதனைகளிலிருந்து தப்பித்துகொள்ள தெய்வீக வழிகளை விட்டு விட்டு உலகப்பிரகாரமான வழிகளைத் தேடக் கூடாது. ஏனெனில் கிறிஸ்துவின் பள்ளியில் நாம் சிறப்பாக வளர்ச்சி அடைவதற்கு நாம் எப்படிப்பட்ட பரிட்சைகளுக்கும் உட்படவேண்டும் என்பதை தேவன் அறிந்திருக்கிறார். இதை உணர்ந்துக் கொண்டு நாம் முடிந்த வரைக்கும் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அதை விட்டு விட்டு, நம்முடைய இருதயத்தில் அதிருப்தியையும், வாய் நிறைய தேவனைப் பற்றி குறைகளையும் கொண்டிருந்தால், நாம் நிச்சயமாக அனுதாபத்தை பெறலாமே தவிற, பரிசை பெற முடியாது. ஆகவே, "நான் வீணாக ஓடினதும் வீணாகப் பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு, உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்." என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

.....